தமிழ்நாடு
சட்டமன்ற மேலவை நடவடிக்கைகள்

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

அதிகாரபூர்வமான வெளியீடு

# OFFICIAL REPORT

திங்கட்கிழமை, பிப்ரவரி 20, 1984—தொகுதி 204-எண் 1

Monday, 20th February, 1984—Volume 204 - No. 1

சட்டமன்ற மேலவைச் செயலகம்,
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை - 600 009.

LEGISLATIVE COUNCIL SECRETARIAT,
Fort St. George, Madras - 600 009.

## பொருளடக்கம்.


| | பக்கங்கள் |
| --- | --- |
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும் | i—viii |
| தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள் | ix |
| தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல் | xi—xiv |
| 1. வினாக்கள்—விடைகள் .. .. .. | 1—14 |
| 2. ஆளுநர் உரையின் மீது விவாதம் | 14—103 |
| 3. அறிவிப்புகள்— | |
| (1) சட்டமன்ற மேலவைத் துறை, இனி சட்டமன்ற மேலவைச் செயலகமாக, மாண்புமிகு மேலவைத் தலைவரின் ஆளுகையின் கீழ் இயங்க விருப்பது குறித்து | 66—67 |
| (2) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு குறித்து | 70 |
| 5. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. | 103 |

143887

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

## GOVERNOR OF TAMIL NADU.

Thiru SUNDAR LAL KHURANA.

*Members of the Council of Ministers.*

1. The Honourable Dr. M. G. RAMACHANDRAN, Chief Minister, in charge of Public, General Administration, Indian Administrative Service and other All India Services, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Planning, Molasses, Archaeology and Excise.

2. The Honourable Dr. V. R. NEDUNCHEZHIYAN, Minister for Finance, in charge of Finance, Legislature, Elections, Food, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. The Honourable Thiru S. RAMACHANDRAN, Minister for Electricity, in charge of Electricity, Iron and Steel Control.

4. The Honourable Thiru K. A. KRISHNASWAMY, Minister for Dairy Development, in charge of Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. The Honourable Thiru S. D. SOMASUNDARAM, Minister for Revenue, in charge of Revenue, Commercial Taxes and Census. cial Taxes and Census.

6. The Honourable Thiru R. M. VEERAPPAN, Minister for Information and Religious Endowments, in charge of Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forests, Cinchona and Grant of Liquor Permits.

7. The Honourable Thiru C. ARANGANAYAGAM, Minister for Education, in charge of Education including Technical Education and Official Language.

8. The Honourable Dr. K. KALIMUTHU, Minister for Agriculture, in charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. The Honourable Thiru C. PONNAIYAN, Minister for Law and Industries, in charge of Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits, Large Scale Industries and Mines and Minerals.

10. The Honourable Thiru P. KOLANDAIVELU, Minister for Local Administration, in charge of Municipal Administration Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. The Honourable Thiru S. RAGHAVANANDHAM, Minister for Labour, in charge of Labour, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board Town Planning and Accommodation Control.

12. The Honourable Dr. H. V. HANDE, Minister for Health, in charge of Health.

13. The Honourable Thiru S. MUTHUSAMY, Minister for Transport, in charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

14. The Honourable Thiru S. THIRUNAVUKKARASU, Minister for Handlooms and Co-operation, in charge of Textiles, Handlooms and Co-operation.

15. The Honourable Thiru S. N. RAJENDRAN, Minister for Public Works, in charge of Prohibition excluding grant of Liquor Permits, Passports, Public Works Department and Establishment matters relating to Public Works Department.

16. The Honourable Thiru M. VIJAYASARATHI, Minister for Adi Dravidar Welfare, in charge of Adi-Dravidar Welfare, Stationery and Printing, Government Press, Newsprint Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

17. The Honourable Thiru R. SOUNDARARAJAN, Minister for Nutritious Meals, in charge of Nutritious Meals.

18. The Honourable Thiru S. R. E. RADHA, Minister for Environmental Pollution Control, in charge of Environmental Pollution Control, Housing and Slum Clearance Board.

19. The Honourable Thiru M. R. KOVENDHAN, Minister for Backward Classes, in charge of Backward Classes.



20. The Honourable Thirumathi GOMATHI SRINIVASAN, Minister for Social Welfare, in charge of Social Welfare including Women and Children and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indian Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

21. The Honourable Thirumathi VIJAYALAKSHMI PALANISAMY, Minister for Khadi, in charge of Khadi.

22. The Honourable Thiru Y. S. M. YUSUF, Minister for Irrigation and Wawf, in charge of Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

23. The Honourable Thiru R. ARUNACHALAM, Minister for Rural Industries, in charge of Rural Industries, including Village and Cottage and Small Industries.

24. The Honourable Thiru K. KALAIMANI, Minister for Fisheries, in charge of Fisheries.

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்

### திரு. சுந்தர்லால் குரானா.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர் மற்றும் இதர அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள், காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரைப்பாகு கழிவு, தொல்பொருள் இயல் மற்றும் ஆயத்துறை.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

நிதி, சட்ட மன்றம், தேர்தல்கள், உணவு, இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மின்சாரம் மற்றும் இரும்பு, எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (பால்வளத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பால், பால்பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத்துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. எஸ். ஆர். சோமசுந்தரம் (வருவாய்த்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வருவாய், வணிக வரிகள் மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி-அறநிலைய அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், இந்து அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா மற்றும் மது அருந்த அனுமதி வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சிமொழி.

8. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வேளாண்மை, வேளாண்மை [illegible], வேளாண்மைப் பொறியியல் பிரிவு மற்றும் வேளாண் பொருளியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றிய சட்டம், குழுமங்கள் பதிவு, கடன் கொடுத்தல், சீட்டு நிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் [illegible] பெருந் தொழில்கள் மற்றும் சுரங்கமும், கனிமமும்.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நகராட்சி நிர்வாகம், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புறக் கடன் சம்பந்தப்பட்டவை, பூமிதானம், கிராம தானம் மற்றும் நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நல அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

தொழிலாளர் நலம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம், நகர அமைப்பு மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மக்கள் நல்வாழ்வுத் துறை.

13. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.



(265)

14. மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு (கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கைத்தறி மற்றும் கூட்டுறவு நெசவாலைகள்.

15. மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் (பொதுப்பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக), கடவுச் சீட்டு, பொதுப்பணித்துறை மற்றும் பொதுப்பணித்துறை அலுவல்கள் சம்பந்தமாக.

16. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

ஆதி திராவிடர் நலம், எழுதுபொருள் அச்சகத்துறை, அரசு அச்சகம், செய்திக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

17. மாண்புமிகு திரு. இரா. சௌந்திரராஜன் (சத்துணவுத் திட்ட அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—

சத்துணவுத் திட்டம்.

18. மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா (சுற்றுப்புறச் சூழல் தடுப்பு அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—

சுற்றுப்புறச் சூழல் தூய்மைக்கேடு தடுப்புத் துறை, வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்று வாரியம்.

19. மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் (பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பிற்பட்டோர் நலன்.

20. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடைப் பராமரிப்பு, இரவலர் இல்லம், அனாதை இல்லம், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம் மற்றும் சீர்திருத்த நிர்வாகம்.

21. மாண்புமிகு திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி (கதர்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கதர்.

22. மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வேளாண் பணி கூட்டுறவுச் சங்கங்கள், சிறு பாசனம் உள்ளிட்ட நீர்ப் பாசனம் மற்றும் வக்ஃப்.

23. மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் (ஊரகத் தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கிராம, குடிசை மற்றும் சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள்.

24. மாண்புமிகு திரு. க. கலைமணி (மீனளத் துறை அமைச்சர்) கீழ்க் கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மீனளம்.

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்.

---

மாண்புமிகு மேலவைத் தலைவர் :

டாக்டர் ம. பொ. சிவஞானம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :

திரு. ஜி. சுவாமிநாதன்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல் :

1. திரு. சி. இராமலிங்கம்.
2. திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா.
3. திரு. ஏ. ஜே. தாஸ்.
4. திரு. க. அருணாசலம்.

மேலவைச் செயலாளர் :

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

சார்புச் செயலாளர் :

திரு. த. ப. டில்லிதுரை, பி.எஸ்சி., பி.எல்.

விவாதப் பதிப்பாளர் :

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல்., பி.எல்.

தலைமை நிருபர் :

திரு. ச. சுவாமிநாதன் எம்.ஏ.

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின்
(தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும்.

(1)

| | |
|---|---|
| 1. அங்கமுத்து, திரு. பா. | நியமனம் |
| 2. அருணாசலம், திரு. க. | நியமனம் |
| 3. ஆறுமுகம், திரு. சோ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 4. ஆனந்தம், திரு. வி. வி. வி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 5. இராகவானந்தம், திரு. எஸ். (தொழிலாளர் நல அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 6. இராதா, திரு. எஸ். ஆர். (சுற்றுப்புறச் சூழல் தூய்மைக்கேடு தடுப்புத்துறை அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 7. இராமமூர்த்தி, திரு. க. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 8. இராமலிங்கம், திரு. சி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 9. கண்ணப்பன், திரு. காடுவெட்டி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 10. கலைமணி, திரு. க. (மீனளத் துறை அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 11. கோலப்பா, திரு. சி. ஆர். | நியமனம் |
| 12. சங்கரலிங்கம், திரு. ம. | திருநெல்வேலி-கன்னியாகுமரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 13. சந்தோஷம், திரு. த. | தமிழ்நாடு தெற்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 14. சனார்த்தனம், டாக்டர் இரா. | தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 15. சாதிக் பாட்சா, திரு. எஸ். ஜே. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 16. சிவஞானம், டாக்டர் ம. பொ. (மாண்புமிகு மேலவைத் தலைவர்) | நியமனம் |

## தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும்.

(1)

| | |
|---|---|
| 17. சித்தாபதி, திரு. ஆர். டி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 18. சீதாதேவி திருஞானசாமி, திருமதி. | நியமனம் |
| 19. சுப்பிரமணியம், திரு. எம். பி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 30. சுவாமிநாதன், திரு. ஜி. (மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்) | தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 21. தாமஸ், திரு. பா. ரா. | மதுரை-இராமநாதபுரம் ஆசிரியர்கள் தொகுதி. |
| 22. தாமோதரன், திரு. ஏ. ஆர். | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 23. தாரா செரியன், திருமதி. | நியமனம் |
| 24. தாஸ், திரு. ஏ. ஜே. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 25. நல்லசிவன், திரு. ஆ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 26. மாசிலாமணி, திரு. மு. | நியமனம் |
| 27. மாணிக்கம், திரு. ப. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 28. மியாகான், திரு. ஜே. எம். | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 29. மீனாட்சிசுந்தரம், திரு. மு. | தஞ்சாவூர்-திருச்சிராப்பள்ளி-புதுக்கோட்டை ஆசிரியர்கள் தொகுதி. |
| 30. முத்து, திரு. எஸ். | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 31. முத்துசாமி, திரு. செ. | சேலம்-தர்மபுரி-கோயம்புத்தூர்-நீலகிரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 32. முனுசாமி. திரு. பி. | நியமனம் |



## தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும்.

(1)

| | |
|---|---|
| 33. யூசுப், திரு. யா. சை. மு. (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 34. லீலாவதி, செல்வி ஆ. | சென்னை-செங்கற்பட்டு ஆசிரியர்கள் தொகுதி. |
| 35. லெட்சுமிகாந்தன், திரு. சி. ரா. | வட ஆற்காடு-தென் ஆற்காடு ஆசிரியர்கள் தொகுதி. |
| 36. வசந்த பை, திரு. ஜி. | சென்னை மாவட்டப் பட்டதாரிகள் தொகுதி. |
| 37. வலம்புரி ஜான், திரு. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 38. வள்ளிமுத்து, திரு. ஈ.வெ.ஆ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 39. வீரப்பன், திரு. இராம. (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 40. வெங்கடேசன், திரு. ஈ. எஸ். | நியமனம் |
| 41. ஜேப்பியார், திரு. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 42. ஹண்டே, டாக்டர் எச். வி. (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) | சென்னை மாவட்டப் பட்டதாரிகள் தொகுதி. |
| 43. வெற்றிடம் | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 44. வெற்றிடம் | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 45. வெற்றிடம் | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 46. வெற்றிடம் | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 47. வெற்றிடம் | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 48. வெற்றிடம் | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

### தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும்.

(1)

| | |
|---|---|
| 49. வெற்றிடம் | சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 50. வெற்றிடம் | செங்கற்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 51. வெற்றிடம் | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 52. வெற்றிடம் | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 53. வெற்றிடம் | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 54. வெற்றிடம் | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 55. வெற்றிடம் | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 56. வெற்றிடம் | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 57. வெற்றிடம் | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 58. வெற்றிடம் | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 59. வெற்றிடம் | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60. வெற்றிடம் | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 61. வெற்றிடம் | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 62. வெற்றிடம் | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 63. வெற்றிடம் | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

# தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

திங்கட்கிழமை, 1984, பிப்ரவரி 20.

மாசி 8, ருத்ரோத்காரி, திருவள்ளுவராண்டு—2015.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9.30 மணியளவில், மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

*Sri Krishna Iyer Higher Secondary School, Chinnamanur.*

*31. Q.—Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that the Teaching and Non-Teaching Staff of Sri Krishna Iyer Higher Secondary School, Chinnamanur, Madurai District, have not been paid their salaries;

(b) whether the Teaching Staff have not been awarded Selection Grade;

(c) whether it is also a fact that they could not avail themselves of Medical and Earned Leave and Loans from Provident Fund accumulations; and

(d) if so, the action proposed to be taken thereon?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இல்லை.

(இ) 6—11—1979 வரையில் அப்பள்ளியின் ஆசிரியர்களுக்கு தேர்வு நிலைப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. 6—11—1979-ல் பள்ளிக் குழு கலைக்கப்பட்டதனால் ஆசிரியர்கட்கு தேர்வுநிலைப் பதவிகள் 6—11—1979-க்குப் பிறகு வழங்கப்படவில்லை.

(இ) மற்றும் (ஈ) பள்ளியில் செயலாளர் பதவி சம்பந்தமாக எழுந்த சிக்கல் காரணமாக ஆயுட்காலத் தலைவர் மற்றவர்கள் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடர்ந்தமையால் மருத்துவ மற்றும் ஈட்டிய விடுப்பு, தவிரவும் சேமநல வைப்பு நிதி, ஊதிய உயர்வு மற்றும் தற்காலிக நியமனம் போன்ற

வற்றில் கல்வித் துறை தலையிட முடியவில்லை. அதற்கு மேல், ஆயுட்காலத் தலைவருக்குச் சில அதிகாரங்கள் வழங்குதல் சார்ந்த வழக்கில் 15—1—1983 ஆம் நாள் வழங்கப்பட்ட தீர்ப்பின்படி பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாதவர்களுக்கு விடுப்பு வழங்குதல், முன்பணம் வழங்குதல் போன்ற சில குறிப்பிட்ட பணிகளைக் கவனித்து வருவதற்கு ஆயுட்காலத் தலைவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டு, அதன்படி பள்ளிச் செயலரின் பணிகளை ஆயுட்காலத் தலைவர் செய்து வருகிறார்.

**திரு. பா. ரா. தாமஸ்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டபடி, அந்தப் பள்ளியின் ஆயுட்காலத் தலைவர் நீதிமன்றத்திற்குச் சென்று, இடைக்கால உத்தரவைப் பெற்றிருக்கிறார்கள். அதுவும் சென்ற டிசம்பர் முடிய இருந்ததால், அதுவரை அந்தப் பள்ளியின் ஆசிரியர்களுக்குக் கொடுக்க வேண்டிய சலுகைகளைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இந்த இடைக்கால ஆணை டிசம்பர் 1983-ல் முடிந்துவிட்டது. ஆகவே மீண்டும் அந்த ஆயுட்காலத் தலைவரால் அந்தப் பள்ளியின் ஆசிரியர்களுக்குக் கொடுக்க வேண்டிய சலுகைகளையும், முன்பணம் போன்றவைகளையும் கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அரசு இதை மறுபரிசீலனை செய்து, அந்த அதிகாரத்தை மாவட்டக் கல்வி அதிகாரிக்கே கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த ஆயுட்காலத் தலைவர் நீதிமன்றத்திற்குச் சென்றுதான், தனக்கு இந்த அதிகாரம் வேண்டுமென்று பெற்றிருக்கிறார். ஆனால் மீண்டும் கொடுக்க முடியாத நிலை உருவாகியிருக்கிறது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்யுமாறு வேண்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே. எனக்குத் தரப்பட்டிருக்கிற விவரப்படி, அந்த வழக்கு இன்னும் முடியவில்லை. இடைக்கால உத்தரவுதான் போட்டிருக்கிறார்கள். இந்த உத்தரவு 15—1—1983-ல் போடப்பட்டது. அதன்படி விடுப்பு வழங்குதல், முன் பணம் வழங்குதல் போன்ற சில அதிகாரங்கள் ஆயுட்காலத் தலைவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அரசு சார்பில் எடுத்துள்ள முயற்சிகளை எதிர்த்துத்தான் இந்த வழக்கே போடப்பட்டிருக்கிறது.

**திரு. பா. ரா. தாமஸ்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல், இடைக்கால அதிகாரம் அந்த ஆயுட்காலத் தலைவருக்கு நீதிமன்றத்தால் 1983 டிசம்பர் வரைதான் கொடுக்கப்பட்டிருந்தது. அந்தக் காலம் முடிந்துவிட்டது. மீண்டும் அங்கே அந்தச்



சிக்கல் உருவாகியிருக்கிறது. எனவே இந்த அதிகாரத்தை மாவட்டக் கல்வி அலுவலருக்குக் கொடுத்து மீண்டும் அந்தப் பணியைச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, நீதிமன்றம் தான் அதற்கு எதுவும் சொல்ல முடியும்.

## வணிகத் துறை போதகர்களுக்கு சிறப்பூதியம்.

*32 வினா—திரு. பா. ரா. தாமஸ் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்), மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதில் அளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசு அலுவலகங்களில் பணியாற்றும் சுருக்கெழுத்தாளர்கட்குச் சிறப்பூதியம் அளிக்கப்படுவதைப்போல, பள்ளிகளில் பணியாற்றும் வணிகத் துறைப் போதகர்களுக்கு, சுருக்கெழுத்தைப் போதிப்பதற்கு, சிறப்பூதியம் அளிக்கும் கொள்கைக்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்போது எந்நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கிடமில்லை.

## ஆவணக் காப்பகம்.

*33 வினா.—திரு. ஈ. எஸ். வெங்கடேசன் (திரு. ம. சங்கரலிங்கம் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை எழும்பூரில் இருக்கும் "ஆவணக் காப்பகம்" (Archives) சரிவர இயங்கவில்லை என்பது அரசின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதுபற்றி அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) தமிழ்நாடு ஆவணக் காப்பகம் சரிவர இயங்கவில்லை என்று பத்திரிகைகளில் செய்தி வெளிவந்துள்ளது.

(இ) அரசு அதன் மீது தக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

திரு. எ. எஸ். வெங்கடேசன்: தலைவர் அவர்களே, ஆவணக் காப்பகத்தின் பணி என்ன? அது எந்த ஆண்டிலிருந்து இயங்கி வருகிறது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இதையே ஒரு தனிக் கேள்வியாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டால், நான் முழுமையான விவரத்தையும் தந்துவிடலாம்.

## *Account Test for Headmasters.*

*34. Q.—Thiru P. R. THOMAS (on behalf of Thiru D. Santosham): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether, for promotion of Post-Graduae Assistants in Government Higher Secondary Schools as Headmasters in those Schools, a pass in the Account Test for Executive Officers is a necessary and indispensable qualification, as per Service Rules issued in April, 1981;

(b) whether contrary to the said Rules, several Headmasters were appointed on a temporary basis, without the said qualification on the ground that Post-Graduate Assistants with the requisite qualifications were not available;

(c) whether the affected Post-Graduate Assistants who had passed the Account Test prior to April 1981, had preferred appeals, and when they did not get favourable orders, they have prayed for permission to file writ petitions; and

(d) if so, the action taken by the Government on these petitions praying for permission to file writ petitions?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் பணியிடங்கள், முதுகலைப் பட்டம் பெற்ற அரசு உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களில் 50 சதவிகிதமும், முழுத் தகுதி பெற்ற முதுகலைப்பட்டதாரி ஆசிரியர்களில் 50 சதவிகிதமும் என்ற விகிதப்படி பதவியுயர்வு மூலம் நிரப்பப்பட்டுள்ளன. தலைமை ஆசிரியர் பதவி உயர்வுக்கு கணக்குத் தேர்வு பாகம் I மற்றும் II-ல் தேர்ச்சி பெற வேண்டும் என்று விதிகள் நிர்ணயம் செய்யப்பட்டு இருந்தன. தலைமை ஆசிரியர்களைப் பொறுத்தவரை கணக்குத் தேர்வுகளில் முன்பே தேர்ச்சி பெற்று இருத்தல் வேண்டும் என்ற விதியைத் தளர்த்தி, அதனை தகுதிகாண் பருவ நிலையில் பூர்த்தி செய்யலாம் என்ற அடிப்படையில் விதிகளுக்கு 1—7—1978 முதல் தக்க திருத்தங்கள் அரசுக்கு அனுப்பப்பட்டு,



அரசின் ஒப்புதலை எதிர்நோக்கி, கணக்குத் தேர்வு நிபந்தனையை வலியுறுத்தாமல் நியமனங்கள் செய்யப்பட்டுள்ளன. கணக்குத் தேர்வு பாகம் I-ல் மட்டும் தேர்ச்சி பெற்றிருந்தால் போதுமென விதியைத் திருத்தி 19—9—1983-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(உ) ஆம். கணக்குத் தேர்வு பாகம் I மற்றும் II-ல் தேர்ச்சி பெற்றுள்ள ஒருசில முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் பதவி உயர்வுக்குரிய பணி மூப்படையாதிருந்தும் தலைமையாசிரியர் பதவி உயர்வு வேண்டும் என கோரி விண்ணப்பித்துள்ளனர்.

(ஊ) உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்ய இலாகாவின் முன் அனுமதி பெற வேண்டிய அவசியமில்லை. எனவே அனுமதி வழங்கும் பிரச்சினை எழவில்லை.

திரு. பா. ரா. தாமஸ்: தலைவர் அவர்களே, கணக்குத் தேர்வுடன், முதுகலைப் பட்டம் பெற்று போதித்துக் கொண்டிருந்த ஆசிரியர்கள் தாங்கள் 10 ஆண்டுக்காலம் பிடி, பணியை முடித்த பின்னரும், பணி விதிகளின் அடிப்படையில் அவர்கள் தகுதி பெற்றிருந்தும், புறக்கணிக்கப்பட்டார்கள் என்ற காரணத்திற்காகத்தான் நீதிமன்றம் செல்வதற்கான அனுமதி வேண்டினார்கள். ஆகவே, ஏற்கெனவே பணி விதிகளின்படி சரியான முறையில் முறையாக அவர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்காமல் கல்வித் துறை உதாசீனம் செய்து விட்டது. எனவே வருங்காலத்திலாவது அவ்வாறு கணக்குத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்கும் ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வில் முன்னுரிமை வழங்கி முதலில் அவர்களுக்குப் பதவி உயர்வை அளிப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இங்கே எனக்குத் தரப்பட்ட விவரப்படி, ஒரு சில முதுகலைப் பட்டம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள் தலைமை ஆசிரியராகப் பதவி உயர்வு பெறுவதற்கான கணக்குத் தேர்வில் தேர்ச்சியில்லாமல் பதவி உயர்வு தங்களுக்குத் தரப்பட வேண்டும் என்று கோருகிறார்கள். என்வேதான் அது தரமுடியாமல் இருக்கிறது.

திரு. பா. ரா. தாமஸ்: தலைவர் அவர்களே, பணி விதிகள் அறிவிக்கப்பட்ட காலத்தில் பல தலைமை ஆசிரியர்கள் அந்தக் கணக்குத் தேர்வில் தேறாமல் இருந்தார்கள். அப்போது முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் அதிலும் குறிப்பாகக் கணக்குத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். எனவேதான் அவர்கள் நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டும்

என்ற நிலை ஏற்பட்டது. பணி விதிகள் முறையாகப் பின்பற்றப்படவில்லை என்பதுதான் குற்றச்சாட்டு. ஆனாலும் அதைச் சரியாகப் பின்பற்றத் தவறிவிட்டது என்று கேட்டிருக்கிறார்கள். அந்த முறையில்தான் அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுமா என்று கேட்டேன். மேலும் 45 வயதைத் தாண்டிய ஆசிரியர்களுக்கு—அதாவது உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் துறைக்குத் தேர்வில் தேர்ச்சி பெறாவிட்டாலும் பரவாயில்லை என்று விதிமுறை இருப்பதாகத் தெரிகிறது. எனவே 50 விழுக்காடு பணியிடங்களில் பதவி உயர்வு பெறும் அந்தத் தகுதியை முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், அவர்கள் 45 வயதைக் கடந்திருந்தால், அவர்களுக்கும் அந்தத் துறைத் தேர்விலிருந்து விதிவிலக்குக் கொடுப்பதற்கான ஆணையை அரசு வழங்கிட முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது விதிவிலக்கு கொடுக்கப்படுவதால் பதவி உயர்வை அளித்தும் வருகிறோம். மேற்கொண்டும் விதிவிலக்கைக் கொடுக்கும் முயற்சியை மேற்கொண்டு வருவதால், [illegible], இதையும் தலைமை ஆசிரியர்கள் நிலை ... என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மதுரையில் அரசு பல் மருத்துவக் கல்லூரி.

*35 வினா—திரு. பா. ரா. தாமஸ் (திரு. சி. ர. லெட்சுமிகாந்தன் சார்பில்): மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரையில் அரசினர் பல் மருத்துவக் கல்லூரி ஒன்றைத் துவக்க செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) மற்றும் (இ) இது பற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பா. ரா. தாமஸ்: தலைவர் அவர்களே, பல் கோளாறுதான் பல நோய்களுக்குக் காரணம் என்று பொதுவாகச் சொல்லப்படுகிறது. சில சமயங்களில் பற்களைப் பிடுங்கிவிட்டால்கூட வியாதி குணமாகி விடுகிறது





என்றும் சொல்லப்படுகிறது. எனவே எவ்வளவு விரைவில் மதுரையில் பல் மருத்துவக் கல்லூரி ஒன்றை நிறுவுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சிகளை மேற்கொள்வார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, மதுரையில் ஏற்கெனவே டென்டல் டிபார்ட்மெண்ட் இருக்கிறது. இங்கே கேட்கப்பட்ட வினா, அங்கே பல் மருத்துவக் கல்லூரி ஒன்றை ஆரம்பிப்பது பற்றியதாகும். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே இப்படிப்பட்ட கல்லூரி ஒன்றை ஆரம்பித்தால் நன்றாக இருக்கும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டு, டைரெக்டர் ஆப் மெடிகல் எஜுகேஷன் அவர்கள் இதைப் பரிசீலனை செய்து அரசுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறோம். அவர்களும் இதைப்பற்றிப் பரிசீலனை செய்து அரசுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். நிதிநிலைக்கு ஏற்பவே இதை நாம் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், இன்னொரு பல் மருத்துவக் கல்லூரி துவங்கப்படுவது மிகவும் அவசியம் என்றுதான் கருதுகிறது. எனவே அதற்கான பூர்வாங்க வேலை முடிந்துவிட்டது. நிதிநிலைபற்றி தற்போது பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். அதைப்பற்றிச் சிந்தித்த பிறகே மற்றவற்றைப் பற்றித் தெரிவிக்க முடியும்.

சென்னை அரசுப் பொது மருத்துவமனையில் இரசாயனப் பொருட்கள்.

*36 வினா—திரு. ஏ. ஜே. தாஸ் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்): மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை அரசுப் பொது மருத்துவமனையில், 'சில்வர் சயனைட்', 'சோடியம்', 'நோர்தலின் சல்பேட்' போன்ற உயர்ந்த இரசாயனப் பொருட்கள் அண்மையில் கையாடல் செய்யப்பட்டன என்பது உண்மையா?

(இ) இது தொடர்பாக அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) மற்றும் (இ) இது அரசின் ஆய்வில் உள்ளது.

(முற்பகல் 9-40)

திரு. ஏ. ஜே. தாஸ்: சமீபத்திலே நடந்த கையாடல் மட்டுமல்லாமல், ஏற்கெனவே இதற்கு முன்னால் ஒரு பெரும் மருந்து கையாடல் நடந்திருக்கிறது. அதைப்பற்றி சுமார் இரண்டு வருடங்களாக விசாரணை நடந்து வருகிறது. அந்த விசாரணையின் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** அரசாங்கத்திற்கு இதிலே சந்தேகம் ஏற்பட்டு உடனடியாக நடவடிக்கை எடுத்தது. இதிலே நான் சி. ஐ. டி. மாதிரி வேலை செய்தது மாண்புமிகு உறுப்பினருக்கும் தெரியும். இதற்காக ஒரு ஆடிட் பார்ட்டியை ஏற்பாடு செய்தோம்.

That Audit Party has found that the chemicals were purchased in excess of the actual requirements.

தேவைக்கு மேலே ரூபாய் 45,86,435 மதிப்புள்ள கெமிக்கல்ஸ் வாங்கியிருப்பதைக் கண்டுபிடித்தோம். அதற்குப் பிறகு நாம் உடனடியாகத் தலையிட்டு நான்கு பேரை சஸ்பென்ட் செய்திருக்கிறோம். ஈ. பி. ஜாபர், லே-செக்ரட்டரி அண்டு ட்ரஷரர் வி. கே. கல்யாணராமன், அசிஸ்டெண்ட் திரு. கே. என். ராஜவேலு, அசிஸ்டெண்ட் திரு. சாமுவேல்பால், மெடிக்கல் ஸ்டோர்-கீப்பர் என்ற நான்கு பேரையும் தற்காலிக வேலை நீக்கம் செய்திருக்கிறோம். அதற்குப் பிறகு திரு. விஜயராகவன், ஐ. ஏ. எஸ். அவர்கள் தலைமையில் ஒரு நபர் குழு நியமித்து பிறகு "business dealing with the following firms and their branches or new firms that will be formed by them in future were suspended".

அந்த மூன்று கம்பெனிகளை சஸ்பெண்ட் செய்திருக்கிறோம். அவர்களிடமிருந்து எதையும் வாங்கக்கூடாது என்று உத்தரவு போட்டிருக்கிறோம். துரிதமாக நடவடிக்கை எடுத்து வருகிறோம். அதற்குப் பிறகு டாக்டர் கண்ணன் என்பவரைத் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்திருக்கிறோம். மேலும் சி. ஐ. டி. (கிரைம் பிராஞ்ச்) மூலமாக மற்ற விஷயங்களைக் கண்டுபிடித்து உரிய நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்காக ஏற்பாடு செய்திருக்கிறோம்.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன்:** இது போன்ற தவறுகள் இனிமேல் நடக்காமலிருக்க முன்னெச்சரிக்கை ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றனவா? ஏற் செய்யப்பட்டிருக்கின்றன என்றால் அவை யாவை?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** அடிக்கடி இன்ஸ்பெக்ஷன் செய்ததன் மூலமாகக் கிடைத்த தகவலைத் தெரிவித்தேன். எல்லா மட்டத்திலும் அமைச்சர், செயலாளர் ஆகிய அதிகாரிகளிலிருந்து எல்லோரும் அப்போதைக்கப்போது இன்ஸ்பெக்ஷன் செய்து கண்டுபிடித்து உரிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவதுதான் இதற்கான பரிகாரம். தொடர்ந்து அரசாங்கம் அதைச் செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**திரு. ம. சங்கரலிங்கம்:** இந்தக் குற்றம் எப்போது கண்டுபிடிக்கப்பட்டது? அவர்கள் மீது குற்றம் சுமத்தி பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? இது இரண்டாண்டுகளாக நிலுவையில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. குற்றம் செய்தவர்கள் மீது கடந்த இரண்டு வருடங்களாக ஏன் கிரிமினல் வழக்கு பதிவு செய்யப்படவில்லை?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** அவர்களை சஸ்பென்ட் செய்துவிட்டு the C.I.D., Crime Branch, has been asked to complete the investigation and send its report quickly. Only then, we can take action.
அரைகுறையாக நடவடிக்கை எடுத்துவிட்டால், பிறகு அவர்கள் கோர்ட்டில் ஸ்டே வாங்கினால் கஷ்டமாக இருக்கும் என்பது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும். அப்படி வராமல், 'பெர்ஃபெக்ட் கேஸ்' ஏற்படுத்தி அதற்குப் பிறகு நடவடிக்கை எடுத்தால் நன்றாக இருக்கும்.

**திரு. ஏ. ஜே. தாஸ்:** அந்த ஊழியர்களை இரண்டு வருஷங்களாக தற்காலிக வேலை நீக்கம் செய்திருக்கிறார்கள். பொதுவாக, ஆறு மாதங்களுக்கு மேல் விசாரணையில் இருப்பவர்களை மீண்டும் வேலைக்கு அமர்த்திக் கொள்ளுவதுதான் சட்டரீதியாக வழக்கம். ஆனால் இவர்கள் மட்டும் இரண்டு வருஷங்களாக ஏன் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள்? அவர்கள் மீண்டும் வேலையில் அமர்த்தப்படுவார்களா?

**THE HON. DR H. V. HANDE:** It is an inexusable crime. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் சொல்லக்கூடிய யோசனையை ஏற்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**THIRU A. R. DAMODARAN:** Sir, apart from the question of mishandling and pilferage, may I know from the Hon. Minister whether at least in the bigger hospitals like the Government General Hospital, Madras with over 1,500 beds, stock inventory methods could be evolved with proper data processing equipment so that this type of pilferage can be detected at a much earlier stage? In the bigger hospitals in the United States, this type of processing equipment has been adopted. I am not talking of computerisation. I am only talking of a minimum equipment. May I know whether the Hon. Minister will think on these lines at least in half-a-dozen major hospitals in our State?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** தலைவர் அவர்களே, இதற்கு நாம் ஒரு எக்ஸ்பர்ட் கமிட்டியின் ரிப்போர்ட்டை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

[1984 பிப்ரவரி 20

This particular committee has gone into the various aspects of delay in adminisration. The old-fashioned methods of inventory, the old fashioned methods of communication and all such things have been gone into by this committee and they have submitted a report. It will involve only a small amount of expenditure and we hope we will be able to implement the suggestions made by this committee. Practically on the same lines which the hon. Member has mentioned, this committee has given us a report.

**திருத்துறைப்பூண்டியிலிருந்து வண்டலுக்கு பேருந்து விடுதல்.**

* 37 வினா.—திரு. பா. ரா. தாமஸ் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்): மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியிலிருந்து தலைஞாயிறு வழியாக வண்டலுக்கு பேருந்து விடும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது எப்போது முதல் அமல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திருத்துறைப்பூண்டியிலிருந்து ஏகாசபுரத்திற்கு பேருந்து விடுதல்.**

* 38 வினா.—திரு. பா. ரா. தாமஸ் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்): மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியிலிருந்து ஏகாசபுரத்திற்கு தலைஞாயிறு வழியாக பேருந்து விடும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது எப்போது முதல் அமல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.



1984 பிப்ரவரி 20]

**தலைமை ஆசிரியர் பதவி நிரப்பப்படாத பள்ளிகள்.**

* 39 வினா.—திரு. ம. சங்கரலிங்கம் (திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் சார்பில்) : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆதிதிராவிடர்/பழங்குடி மக்கள் நலத்துறை நடத்தும் மேல் நிலைப் பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் 1—12—1981 நிலவரப்படி தலைமை ஆசிரியர் பதவி நிரப்பப்படாத பள்ளிகள் எத்தனை?

(இ) இவற்றை நிரப்ப எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) 1—12—1981 நிலவரப்படி சென்னை கன்னிகாபுரத்தில் உள்ள ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளியில் மட்டும் தலைமையாசிரியர் பதவி நிரப்பப்படவில்லை.

(இ) இந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியர் பணியிடத்தை உடனடியாக நிரப்ப அரசு உத்தரவிட்டு 9—5—1982 முதல் திரு. ஜி. சுப்பிரமணியம் அங்கு தலைமையாசிரியராகச் சேர்ந்து பணியாற்றி வருகிறார்.

திரு. ம. சங்கரலிங்கம் : இந்த வினா 1981-ல் போடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. 1—12—1981 நிலவரப்படி அந்த நிலை. இன்றைய நிலவரப்படி எத்தனை தலைமை ஆசிரியர்கள் பதவி நிரப்பப்படாமல் இருக்கிறது?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: இன்றைய நிலவரப்படி எல்லாப் பள்ளிகளிலும் தலைமை ஆசிரியர் பதவி நிரப்பப்பட்டுள்ளது.

**இடைநிலை ஆசிரியர்களாகத் தேர்ச்சி பெற்ற இளநிலை ஆசிரியர்கள்.**

* 40 வினா.—திரு. ம. சங்கரலிங்கம் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்): மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 1 ஆம் தேதி முதல் அவ்வாண்டில் இடைநிலை ஆசிரியாராகத் தேர்ச்சி பெற்ற இளநிலை ஆசிரியர்கட்கு, இடைநிலை ஊதியமே வழங்கவேண்டும் என்ற அரசாணை, எந்தெந்த மாவட்டங்களில் ஆதி திராவிடர் நலத்துறைப் பள்ளிகளில், 1979 ஆம் ஆண்டிலிருந்து 1982 ஆம் ஆண்டு ஜனவரி முடிய மஅல்படுத்தப்படவில்லை?

(இ) அப்பள்ளி இடைநிலை ஆசிரியர்கட்கு அந்த நிலுவைத் தொகையினை வழங்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** (ஆ) மற்றும் (இ) இடைநிலைத் தேர்ச்சி பெற்ற இளநிலை ஆசிரியர்களுக்கு இடைநிலை ஊதியம் வழங்கப்பட்ட விவரங்கள் மாவட்ட வாரியாக இணைப்பில் @ தரப்பட்டுள்ளது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** வினா எண் 21 மற்றும் 22 சேர்த்தே எடுத்துக்கொள்ளப்படும்.

பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு.

† * 21 வினா.—திரு. ம. சங்கரலிங்கம் (டாக்டர் இரா. சனார்த்தனம் சார்பில்): மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் 1982 ஆம் ஆண்டில் மட்டும் எத்தனை பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கேட்டு மனுக்கள் வந்துள்ளன?

(இ) அவற்றில் 1—4—1983 அன்றுள்ளவாறு எத்தனை பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் 1982 ஆம் ஆண்டில் மட்டும் விவசாய பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக் கேட்டு வந்த மனுக்களின் எண்ணிக்கை 1,523.

(இ) இவற்றில் 1—4—1983 வரை மின் இணைப்புக் கொடுக்கப்பட்ட பம்பு செட்டுகளின் எண்ணிக்கை 90.

† * 22 வினா.—திரு. ம. சங்கரலிங்கம் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்): மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் 1982 ஆம் ஆண்டில், எத்தனை பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கேட்டு மனுக்கள் வந்துள்ளன?

(இ) அவற்றில் 1—4—1983 அன்று வரை, எத்தனை பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் 1982 ஆம் ஆண்டில் விவசாயத்திற்கான விசையேற்றங்களுக்கு மின் இணைப்புக் கோரி 1,479 விண்ணப்பங்கள் வந்தன.

@ 104 ஆம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.
* 16—2—1984-ம் நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திவைக்கப்பட்டது.



(இ) அவற்றில் 1—4—1983 வரை 588 விவசாய விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளன.

**திரு. ம. சங்கரலிங்கம்:** தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டத்தில் 1982 ஆம் ஆண்டில் 1,523 மனுக்கள் வந்தும் 90 மனுக்களின்பேரில் 1983-ல் மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. எஞ்சிய மனுக்களின் பரிசீலனை என்ன நிலையில் இருக்கிறது? இப்போது எவ்வளவு மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, தஞ்சாவூர் தவிர தமிழகத்தின் இதர மாவட்டங்களில் 31—3—1976-க்கு முன்பு போடப்பட்ட மனுக்களே ஏராளம் நிலுவையில் உள்ளன. ஆகவே சட்டமன்றப் பேரவை, மேலவைகளில் வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்போது அறிவிக்கப்பட்டுள்ளதற்கு ஏற்ப அந்தப் பழைய மனுக்களை, முதலில் கொடுத்துவிட்டு அதற்கு பிறகு புதிய மனுக்களை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று அரசு மின் வாரியத்தைக் கேட்டுக்கொண்டிருக்கிறது. ஆகவே, தஞ்சாவூர் தவிர மற்ற மாவட்டங்களில் தரப்படுகின்ற மனுக்கள் மீது தற்போது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது. தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், காவிரி நதியிலே நீர் பற்றாக்குறை ஏற்பட்டதன் காரணமாகவும், அங்கு உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்ற அடிப்படையிலேயும் தஞ்சாவூர் விவசாயிகளுக்கு மட்டும் பம்பு செட்டுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு அந்த மனுக்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டு மின்சாரம் வழங்கப்படுகிறது.

(முற்பகல் 9-50)

**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தஞ்சை தவிர பிற மாவட்டங்களிலும் 1976 ஆம் ஆண்டுக்கு முன்னால் கொடுத்த மனுக்கள் ஏராளமாக இருப்பதால் 'ஆர்டர் ஆஃப் பிரையாரிட்டி' முறையில் எஞ்சியிருக்கின்ற மனுக்களைப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 1976 ஆம் ஆண்டுக்கு முன்னால் கொடுத்துள்ள மனுக்களுக்கு மின் இணைப்பு கொடுத்து முடிய இன்னும் தோராயமாக எவ்வளவு காலமாகும் என்று வாரியம் பரிசீலனை செய்யுமா? மின்சார வாரியம் தனியாகவே இதற்கு என்று ஒரு திட்டம் வகுத்து அவைகள் முடிவதற்கான முறையில் தக்க நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, வரும் ஆண்டின் இறுதிக்குள் அவை அத்தனையும் நிறைவேற்றப்பட வேண்டும், மின் இணைப்பு வழங்கப்பட வேண்டும் என்று அரசு விரும்புகிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

2. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நல்லசிவன் அவர்கள் ஆளுநர் அவர்கள் உரையின் மீதான தீர்மானத்திற்குத் திருத்தம் கொடுத்திருக்கின்றார்கள். அவர்கள் அதை முன்மொழியலாம்.

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் உரை மீதான தீர்மானத்துக்கு நான் கொடுத்துள்ள கீழ்க் கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன் :

"கீழ்க்கண்டதை தீர்மானத்தின் கடைசியில் சேர்த்துக்கொள்ளவும் :

1. மத்திய-மாநில உறவுகளில் மேலும் அதிக அதிகாரங்கள் மாநிலங்களுக்கு கிடைப்பதற்கான எந்த நடவடிக்கைகளைக் குறித்தும் குறிப்பிடாதது பற்றியும் ;

2. மக்களின் உரிமைகளை மதிக்காத போலீஸ் கொள்கைகளின் விளைவாக 3—2—1984 தேதியன்று மதுரை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் மீது போலீஸின் கொடுமையான தடியடி தாக்குதல் நடத்தினது போன்ற பல்வேறு போலீஸ் அடக்கு முறைகளைப் பற்றியும் ;





3. அரசியல் கட்சிகள் தொண்டர் அணிகளை வைத்துக் கொள்வதையும், சுவர்களில் அரசியல் கோஷங்கள் எழுதுவதையும் அரசு நிர்வாகத்தில் நடைபெறும் ஊழல்களை பத்திரிகைகள் அம்பலப்படுத்துவதையும் தண்டிக்கும் வகையில் சட்ட நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதைப் பற்றியும்;

4. தங்களது அத்தியாவசியமான நலன்களை பாதுகாப்பதற்காக, சிம்சன், பின்னி, நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலை, கரூர் மில்ஸ், குமரி மாவட்டத் தோட்டத் தொழிலாளர்கள் ஆகியோர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தும், அரசு அதில் தலையிட்டு, அவர்களின் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வு காண்பதற்குப் பதிலாக, அவர்களின் வேலை நிறுத்தங்களை உடைக்க கடுமையான போலீஸ் அடக்குமுறையையும் மற்றும் கையாண்டுவரும் நடவடிக்கைகளையும் பற்றியும் ;

5. அரசின் அடக்குமுறையை எதிர்த்து 14—2—1984 அன்று சென்னை-செங்கை மாவட்ட அனைத்து தொழிலாளர்களும் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது என்பதைப் பற்றியும் ;

6. வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் பல பகுதியினருக்கு வெள்ள நிவாரண உதவி இன்னும் கிடைக்கவில்லை என்ற நிலை இருக்கும் போது, முன்பு வறட்சியினாலும், இப்பொழுது வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளிடம் கடன் பாக்கிக்காக மோசமான அபராத வட்டியை விதித்தும், சொத்துக்களை ஜப்தி செய்வோம் என்றும் அரசு நடவடிக்கை எடுப்பது வெந்த புண்ணில் வேல் கொண்டு குத்துவதாக உள்ளது என்பதைப் பற்றியும் ;

7. நியாயவிலைக் கடைகளில் குறைந்தபட்ச அளவில்கூட அரிசியும் மற்ற அத்தியாவசிய உணவுப் பண்டங்களும் கிடைக்கவில்லை என்பதுடன், குடும்பக் கார்டுகளை வழங்குவதில் பல முறைகேடுகள் நடைபெற்று வருகின்றது என்பதைப் பற்றியும் ;

8. அரசு நிர்வாகத்தில் எல்லா மட்டங்களிலும் மேலும் மேலும் அதிகரித்து வரும் லஞ்ச ஊழல்களினால் ஏழை மக்களுக்கு எவ்வித நியாயமும் கிடைக்காது என்ற மோசமான நிலைமை வளர்ந்து வருகின்றது என்பதைப் பற்றியும் ;

9. தமிழகத்திற்கு குறைந்தபட்சமாக தேவைப்படும் அளவு அரிசியைக் கூட கொடுப்பதற்கு மத்திய அரசு மறுத்து வருவது, நிலக்கரி விலையை உயர்த்தியதன் மூலம் மாநில மின் வாரியத்தின் நிதி நிலைமை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது, நியாயவிலைக் கடைகளில் இம்மாத 1 ஆம் தேதி முதல் சர்க்கரை விலையை கிலோ 1-க்கு 25 காசுகள் கூடுதலாக மத்திய அரசு உயர்த்தி உள்ளது, தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு மிகவும் அவசியமான கரூர்-தூத்துக்குடி அகல ரயில்பாதை திட்டத்தை மத்திய அரசு கிடப்பில் போட்டுவிட்டது ஆகியவை பற்றியும் ;

10. மத்திய அரசின் தவறான பொருளாதார சமூகக் கொள்கைகளுக்கும், விஷம்போல் ஏறிவரும் விலைவாசி உயர்வுக்கு பிரதான காரணமாக இருக்கும் கொள்கைகளுக்கும் எதிராக முற்போக்கான மாற்று பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்கும் நோக்குடன், நம் நாட்டில் உள்ள 18 எதிர்க்கட்சிகள் 13—2—1984 அன்று நடத்திய கோரிக்கை தின இயக்கத்திற்கு காங்கிரஸ் அல்லாத மற்ற மாநில அரசுகள் அனைத்தும் ஆதரவு கொடுத்த நேரத்தில் தமிழக அரசு மட்டும் மத்திய அரசின் தவறான கொள்கைகளை விமர்சிப்பதற்குக் கூட அஞ்சுவது பற்றியும் ;

11. தமிழகத்தின் கோரிக்கைகளை மத்திய அரசிடம் வற்புறுத்துவதற்கு மக்களைத் திரட்டுவதற்கு, தமிழக அரசு தயாராக இல்லை என்பது பற்றியும் ;

ஆளுநர் அவர்களின் உரையில் ஏதும் குறிப்பிடாததற்கு இந்த அவை தன் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.".

திரு. ப. மாணிக்கம் : தலைவர் அவர்களே, நான் அதை வழி மொழிகிறேன்.

Thiru A. R. DAMODARAN : Hon. Chairman, Sir, ever since we built the cyclone-shelters in Tamil Nadu in 1980, we have not had a serious cyclone for the past four years. Over the past three years, our State has passed through very difficult times in that we have had continued periods of drought, unseasonal rains and late rains and the year 1984 has been rather unkind to Tamil Nadu in this respect. The recent rains in December and February have caused a lot of damage to crops besides hampering agricultural operations in general. I am glad that the Government of Tamil Nadu have been taking steps not only to relieve the situation to some extent but also in passing urgent orders regarding the provision of seeds, pesticides and fertilisers to farmers at subsidised rates.





Sir, the problem of heavy rains has highlighted one of the major difficulties in our State and this is sought to be covered in the Governor's Address where in Paragraph 15, the Governor has been pleased to mention that an Irrigation Management and Training Institute is to be set up by the State Government with U. S. Aid and that a sum of Rs. 25 crores has also been provided by the European Economic Community for modernising the minor irrigation system in this State. Sir, our minor irrigation systems are suffering because of the various encroachments that have been carried out both on the foreshores of all our irrigation lakes as well as in the feeder channels which take the water into the irrigation tanks. In fact, I would say that there is a steady deterioration in the administration. I do not know whether it is due to the lacunae in the Revenue Department or whether the defect is in the Public Works Department. But, there can be little doubt that, in spite of the massive works programme carried out not only by the Irrigation Department but also under the Self-sufficiency Programme, there has been a serious neglect of the maintenance of our irrigation tanks. While I welcome the establishment of the Irrigation Management and Training Institute, may I point out that mere training and management, centralised at Madras, is not going to solve the problem without sufficient supplementary help being provided by the various authorities connected with the maintenance of our irrigation tanks? I would request the Government to review in each district, the various systems that exist and the difficulties that are being experienced in water reaching these minor irrigation systems. Even though the Institute may suggest plans, my only doubt is whether the administration will have the courage to remove the various encroachments that have come up on the foreshores as well as in feeder channels. All these are community assets and it is essential that the Government should take early steps to ensure that these channels are kept free of all encroachments.

I am sorry to note that no mention has been made in the Governor's Address of one issue that is troubling the State of Tamil Nadu, not only in the recent past, but over the past 14 years, and that is, Sir, an amicable solution to the Cauvery Waters dispute. For the past 14 years we have been negotiating across the table with the Government of Karnataka as well as with the Government of India. Day after day, in every Governor's Address and in every Budget document, mention was made that attempts were being made to solve this dispute, the only result being that while the Government of Karnataka says that the 1924 agreement is dead, the Government of Tamil Nadu says that it is very

[Thiru A. R. Damodaran] [1984 பிப்ரவரி 20

much alive and the Government of India which should act as the arbiter has decided not to give a decision whether it is dead or alive. My plea today is this. While negotiations have been tried, I think the time has come for us to inform the Government of India that negotiations are not likely to succeed on this very sensitive issue because it is a matter concerning the sharing of waters of an Inter-State river. I would plead that reference should be made to a tribunal and a time-limit fixed for the settlement of this problem. We always tend to become laconical when we have heavy rains and we forget the hardships caused to the farmers in the Cauvery Delta. In my opinion, unless we stick to the flow agreement which was contemplated in 1924 and unless we insist that Krishna Raja Sagar dam should fill up before the other dams are allowed to impound water, Tamil Nadu and particularly the farmers in Thanjavur Delta area will be in serious trouble. Changing political affiliations have led to various attitudes and I will not refer to that now. But I think this is a splendid opportunity for the Government of Tamil Nadu which seems to have established a very cordial relationship with the Government of India in the recent past to progress negotiations further in this regard and ensure that the matter is referred to a Tribunal under the Inter-State Water Disputes Act and a time-limit is fixed, if possible, so that within two years we may be able to have an amicable settlement of this problem.

Sir, mention has been made of one job for each family scheme the Governor's Address. I believe various statistical data are being collected and while I welcome this scheme, I would also like to point out that restricting the availability of jobs to families where nobody is employed would result only in very low paid jobs being given to such persons. I do not think we will be able to identify the families properly ensure that no member of such families is working. In that case, I do not know what number of families would be thrown up by statistical data. But I would like to mention that side by side with this problem, there is the problem of the educated unemployed and this problem is assuming immense proportions in our State. Under the 20-Point Programme institutional finance is being provided to unemployed graduates for self-employment schemes. Recently some difficulties have been experienced by the nationalised banks in that they have not been able to disburse according to the targets that have been fixed by either the State Government or the Central Government. The State Government have not fixed targets but under the authority of the Central Government, the State Government are trying to provide institutional finance.



1984 பிப்ரவரி 20] [Thiru A. R. Damodaran]

I have discussed this question with many Bank staff and as you know, they have recently protested against certain authoritarian directives that have been issued by the Central Ministers in this regard.

(முற்பகல் 10-00)

I think they have a very real problem. In our districts, we find that either the Collectors or the Sub-Collectors call the Bank officials and tell them that within a period of 20 days, a sum of Rs. 2 crores or Rs. 3 crores will have to be disbursed to 10,000 or 15,000 people. All these Bank officials have to accept full responsibility for the collection of these loans over a period of 5 years, 6 years or 7 years. In fact, at a recent conference of Bank officials, when this problem was raised, I suggested that one easy way out would be for the Sub-Collector or whoever was in charge of such proposals to sign the proposals for giving of loans to the weaker sections so that the responsibility could be shared between the State Government officials and the Bank officials concerned. Although the scheme is very good, it is, in my opinion, unfair to consider the Bank officials solely responsible for the grant of Rs. 3 crores or Rs. 4 crores of loans to about 10,000 people because, if after five years the loan is not collected, either the Bank official's pension is attached or his salary is cut. It is in this context—because vast amounts of money are going to be spent in 1984-85 in giving loans to these weaker sections of society for self-employment schemes—that I would request the State Government to discuss this problem in depth with the Central Government and evolve a proper solution so that the scheme may not be hampered due to the difficulties experienced by the Bank employees.

Sir, another subject to which I cannot but refer is 'Education'. With the Budget looming large, may I also plead with the Hon. the Finance Minister on four or five important points which have been thrown up in the recent past? One decision that has been taken by the Government of Tamil Nadu is the abolition of the incentive scheme of salary payments for those who have qualified themselves with additional Degrees in all classes of Government Departments like the Education Department, the Veterinary Department, the Research Departments and the Engineering Departments. I am referring to the lump sum provision that has been made and to a particular order—I think it is G.O. No. 843—that has been passed on the 5th September 1983 wherein it has been stated, rather curiously, that, if due to administrative reasons these incentive increments have not been given to those who are qualified to receive these

incentive increments, they will not be given incentive increments but will be given only a lump sum. In my opinion, this order is not only unfair but is also discriminatory. It is likely to be struck down in the High Court if anybody goes to Court. My first plea to the Education Minister and to the Government of Tamil Nadu is this. If, due to administrative failure, the Government have not been able to pass orders sanctioning incentive increments to those who have qualified themselves with higher Degrees, why do they wish to penalise such persons from receiving the advance increments to which they are entitled? My request is that G.O. Ms. No. 843 be withdrawn and cancelled and incentive increments granted to all those who have qualified themselves with additional Degrees or diplomas or whatever qualification which they obtained prior to the 5th September 1983. My next request is that, even after the 5th September 1983, in certain Departments like the Education Department, the Veterinary Department and Research Departments where the promotional opportunities are limited, the incentive scheme be re-introduced because this is the only avenue by which they can hope to increase their emoluments. I hope that the Government will review this and that we will have a very pleasant announcement when the Hon. the Finance Minister introduces his Budget for 1984-85.

Sir, I am coming to the next point and I am sure that my hon. Friends from the Teachers Constituencies would have mentioned this. It is about the long-standing demand of Primary and Secondary School teachers who have qualified themselves with the B.T. qualification that they should be put on the B.T. scale of pay because many of them have already reached the maximum in the Secondary Grade scale and nothing will be due to them immediately. I would plead that this may also be considered in the Budget which is to be brought shortly by the Hon. Minister.

Sir, the third thing is this and I have to mention this, because people feel that members from Graduates Constituencies are not taking sufficient interest in Teachers' problems.. It is an entirely wrong concept. I do not want to be repetitive but I would like to assure the Members that we are as anxious as others in trying to ensure that the problems of teachers are also solved. I cannot speak about all the thousand and one grievances which they have. But I would certainly plead that in many areas that we have visited . . .

Thiru G. SWAMINATHAN: Sir, it is not correct to say that members elected from Graduates' Constituencies are not taking interest in the teachers, problems. We have been taking a lot of interest in the teachers' problems and I know my hon. Friend Thiru Damodaran has also been taking a lot of interest in the problems of teachers.





Thiru A. R. DAMODARAN: My thanks to the Hon. Deputy Chairman.

The Hon. Dr. H. V. HANDE: Since the point has been raised, I would like to share the feelings of the hon. Members and say that we are very much conscious of the problems of teachers and often the accusation is that we are over-zealous in the matter of the problems of teachers. Still we do not mind such accusations.

The Hon. Thiru S. RAMACHANDRAN: Sir, this sounds like an election manifesto from the candidates who are contesting the elections from those constituencies.

Thiru A. R. DAMODARAN: Sir, we are now in a lame duck session and we cannot but make a mention about these things. Even in filling up vacancies in posts of teachers in schools, the time taken is so much that only in the month of February, recruitment is made and a great deal of suffering is caused to the students. This sort of comment from the Hon. Minister and Members may go against us and we are not able to mention many things which may be very dangerous as far as our elections are concerned. I can refer only to broad problems. One such problem to which I would like to draw the attention of the Hon. Minister is this. I would like him to have a Review Committee to evolve the procedure and guidelines in regard to transfer of teachers from one school to another. There is a lot of heart-burning on this issue and I am sorry to state that in many cases, transfers are made on recommendations which lead to victimisation of teachers. Normally we do not have an I.A S Officers' Association which recommends to the Chief Minster that a particular I.A.S. Officer should be posted in a particular area. We do not have N.G.G.Os. Association which indicates to the Hon. Minister that a particular N.G.G.O. should be posted to a particular place. We do not have a Commercial Tax Officers' Associatiin to recommend any transfers. But in this area there is such a lot of hear-burning and vidictive transfers that I wiuld plead with the Hon. the Education Minister that we must have a Review Committee consisting of elected representatives of Graduates and Teachers as well as members of other Associations to evolve a fair policy which would result in the teachers not feeling any resentment on being transferred from Kanyakumari to somewhere near Tiruthani in Chengalpattu District. I realise that many of them belong

[Thiru A. R. Damodaran] [1984 பிப்ரவரி 20

to State-wide service but as far as possible, we must try to minimise the hardship because today the problem which the teachers face is the housing problem and they are put to extraordinary expenditure for them and their families.

(முற்பகல் 10-10)

One important announcement has been made in the Governor's Address and that relates to the reform that is suggested in the field of education regarding vocationalisation of education and the introduction of job-oriented educational courses. The idea is very good and in 1978 we have done it as far as Plus Two course is concerned. But my concern is that if it is proposed to vocationalise from I Standard or III Standard, this experiment with the best of intentions! in the context of society's conception of education, is not likely to succeed. I would like to sound a note of warning. today We contemplate drawing up a Rs. 1,000 crore plan for the introduction of job-oriented courses in schools. I do not mind if they do it in colleges. We have got a number of colleges where we can open courses in as my hon. Friend Thiru Manickam mentioned—microbiology, oil exploration, geology, etc. These are all job-oriented courses. But, in so far as school education is concerned, I am firmly of the opinion that, till Standard VIII at least, we should avoid vocationalisation and give only general education. Any type of vocationalisation should start only from Standard IX or a later Standard. The reason is very obvious. Wherever we have gone, we have found lack of equipments, lack of teachers, etc. It is an enormous task to equip 27,000 or 28,000 Elementary Schools with the equipment required for this type of vocational education. If the Government are going to make a hasty commitment in the Plan document that a sum of Rs. 1000 crores would be required for introducing vocational education in this manner, then, we would have lost the funds necessary for the establishment of many Post-Graduate Institutes and other institutions which are required in our State. I would, therefore, plead that due caution be taken and that experts be consulted. We have many experts in the field of vocational education in our State. Dr. Kulandaisami himself has given a report recently. I would plead that experts be consulted before any decision is taken regarding vocationalisation at so early a stage as in the school career. If we try to teach carpentry in a village school, the son of a carpenter, unfortunately, today does not want to become a carpenter although he may earn Rs. 35 to Rs. 40 a day which is much better salary than that of a clerk. A brick-layer's son does not want to become a mason



[1984 பிப்ரவரி 20 [Thiru A. R. Damodaran]

although he may earn Rs. 35 a day. All of them want to become doctors or engineers or Commerce Graduates or Bank Clerks. How to break this system requires expert advice and expert management of resources and materials. I would, thereof, request the Government to exercise caution before rushing through this policy.

Sir, on matters concerning health I have a representation to make to the Hon. the Minister for Health and that is about the outbreak of jaundice in Cuddalore town. In my street alone, in Beach Road, Cuddalore N. T., there have been 345 cases of jaundice reported. Many representations have been made to the health authorities that there is contamination of water-supply with drainage water. The sewage carts are being drained in the storm-water channel and somehow the drinking water supply has been contaminated and hepatitis—jaundice—has become a recurring feature in Cuddalore town. There must be other areas in South Arcot district where reports may have been received. But I would request the Hon. the Minister for Health to ask the public health authorities to carry out an investigation and find out why this is recurring on such a massive scale, particularly in this area. It seems to be an endemic area.

Sir, I am very happy that a Department of Environmental Control is being established. If at all there is anything that is lacking in our country today, it is the lack of management of the environment. We are not bothered about encroachments causing traffic accidents. In fact, if the Hon. Minister passes through Tambaram, he will realise that he must have a Casualty Department one mile away because everyday there are bound to be accidents. We do not care about encroachments in our Municipalities and Panchayats. Nobody bothers to remove them. In fact, many of them have put up huts in the middle of the road. The roads and other things are all community assets and I would plead with the Government to take stern measures, at least after the Municipal Elections, to ensure that our streets and roads are free and that people are able to enjoy the environments in which they live. There are a lot of experts on pollution control in Kalpakkam. They are experts who have acquired very high Degrees. I would request the Hon. Minister to associate some of them from Kalpakkam with the Board of Pollution Control or the Department of Enviornment or whatever it is. Many of them have qualified themselves with very high Degrees from other Universities in the United States, United Kingdom and Germany. It would profit the Government of Tamil Nadu if they could be associated in any planning that the Hon. the Minister for Health proposes in this regard.

Housing is one of the most neglected factors in Tamil Nadu and in India. While we have been talking about population explosion, no attempt has been made to solve the problem of housing. This is no reflection on the Hon. Minister Thiru S. R. Eradha who has recently taken over the particular portfolio. I can tell him that as far as Urban Housing Societies are concerned, the loans that have been given have come to them in driblets. They have come once in six months or seven months and there are many persons who have had to borrow from private money-lenders paying high rates of interest to complete the buildings. I hope the Hon. Minister Thiru Eradha who has taken charge of Housing will be able to have an Advisory Committee which will help him not only to devote more attention to rural housing but also to allocate some more financial assistance to urban housing schemes which are also important because more than 32 per cent of the population of the State is in urban areas.

I welcome the extension of the Liberalised Pension Scheme, which is a long-standing demand. The Hon. the Finance Minister has, fortunately after the High Court judgment and the Supreme Court judgment, decided to give liberalised persion to all the pensioners. Those who have already died will not enjoy the benefit but at least those who are living would welcome this announcement. I must express my happiness that this has been announced.

Last but not the least is the announcement by the Hon. the Minister for Local Administration that elections would be held to Municipalities and Panchayat Unions on the 18th of April or some such date. Sir, this Council has lost much of its importance because for the past four years we are not having 21 representatives from the Madras Corporation and from the other local bodies. We are only 42 Members and I have always felt that quite apart from the big gap and vacum that has been found in our local administratiove bodies, this Council itself has become a moth-eaten and very much denuded body because without the representatives from the Municipalities and Panchayat Unions, we cannot say that we have a full picture of what is happening in the rural areas either in regard to development or in regard to the vast sums that are being spent. I hope this auspicious date which, I think, the Local Administration Minister has selected in consultation with his party astrologers will mature) and that we will have election to all the local bodies as planned, because this has been a good season and there is no reason at all to postpone it. I hope and definitely hope that these dates





will be stuck to and elections will be held and soon thereafter elections will be held to elect 21 Members to the Legislative Council also, which will then function as a full body of 63 Members. Thank you very much.

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டுக்கான ஆளுநர் உரையின் மீது என்னுடைய கட்சியின் சார்பில் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

ஆளுநர் அவர்களின் உரையை முழுமையாகப் படித்தால், நம்முடைய நாட்டில் இந்திய யூனியன் என்று வழங்கப்படும் ஒரு மத்திய அரசு இருப்பதாகவோ, அதன் கையிலே அதிகாரக் குவியல் இருப்பதாகவோ, அதிலும் குறிப்பாக நிதியாதாரக் குவியல் இருப்பதாகவோ, அப்படி அதன் கையிலே நிதியாதாரக் குவியல் இருப்பதன் காரணமாக மாநில அரசுகளுக்குப் போதிய நிதியாதாரம் இல்லாமல் தங்களை நியாயமாக எதிர்நோக்குகிற பொதுமக்களுக்கு, போதிய வசதிகளைச் செய்ய முடியாமல் இருப்பதாகவோ தெரியவில்லை. அதற்கு மாறாக, தமிழ்நாடு ஏதோ ஒரு சுயாதிகாரம் கொண்ட ஒரு நாட்டைப் போலவும், அதன் காரணமாக இங்கே ஒரு சுபிட்சமான வாழ்வு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியின் கீழ் கிடைத்திருப்பதைப் போலவும் அடுத்து வரும் ஆண்டுகளில் மேலும் சுபிட்சமான வாழ்க்கைக்கான திட்டங்களைப் போட்டிருப்பதைப் போலவும்தான் இந்த உரையைப் படிக்கும்போது ஒரு உணர்வு ஏற்படுகிறது. இது ஏதோ நானாக எடுத்துச் சொல்லுகிற சமாச்சாரம் அல்ல. ஆளுநர் உரையின் கடைசி பாராவைப் படித்தால் இது புலனாகும்.

"அடுத்தடுத்து இயற்கை இடர்ப்பாடுகள் வந்த போதிலும், மாநிலம் பொருளாதாரம் மற்றும் பிற துறைகளில் அடைந்த நிலையான முன்னேற்றத்தைக் கோடிட்டுக் காட்டியுள்ளேன். வறுமையை ஒழிக்கவும், வேலை வாய்ப்புகளை உருவாக்கவும், வருங்காலத்தில் அரசு மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகளையும் எடுத்துக் கூறியுள்ளேன். மாநிலம் ஏற்றிருக்கும் இந்த மிகப் பெரிய பொறுப்பை நிறைவேற்ற உங்கள் அனைவரின் ஒத்துழைப்பையும் அளிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்."

(முற்பகல் 10-20)

எனவே நம்முடைய மாநில அரசு இந்த நாட்டிலுள்ள மக்கள் படுகின்ற கஷ்டங்கள் இல்லாமல் சுபிட்சமான வாழ்க்கைக்கு ஏற்பாடு செய்திருப்பது போன்ற, அடுத்த ஆண்டு சுபிட்சத்தினைத் தேட அஸ்திவாரம் போட்டிருப்பது போன்ற பிரமையோடு இந்த ஆளுநர் உரையைத் தயாரித்திருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், இங்கே ஆளும் கட்சி உறுப்பினர்கள் பேசிய முறைப்

அப்படித்தான் இருந்தது. ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. வலம்புரி ஜான் உட்பட அனைவரும் அப்படித்தான் பேசினார்கள். அவர் முன்மொழிந்ததன் காரணமாக அப்படிப் பேசினார் என்று நினைக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. வள்ளிமுத்து அவர்கள் பேசும்போது, "சர்க்கார் செய்த நல்ல காரியங்களைச் சொல்லாமல் எதற்காக எதிர்க்கிறீர்கள்?" என்று கேட்டார்கள். சர்க்காரைப் பாராட்டுவதற்காகத்தான் ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் இருக்கிறார்கள். பாராட்ட வேண்டியவைகளைப் பாராட்டி, விமர்சனம் செய்ய வேண்டியவைகளை விமர்சனம் செய்வதற்காகத்தான் எதிர்க் கட்சியினராகிய நாங்கள் இருக்கிறோம். விமர்சனம் செய்ததுபோக பாராட்டுவதற்கு நேரம் இருந்தால் இரண்டையும் செய்யலாம். அப்படி நேரம் இல்லாததால்தான், விமர்சனம் மட்டும் செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே பாராட்டவில்லை என்று அதற்கு அர்த்தமில்லை. ஆனால் ஆளுநர் உரையில் இருக்கக்கூடிய "காம்ப்ளசென்சி" யும், ஆளும் கட்சி தரப்பிலே இருக்கின்றவர்கள் பேசுகின்ற பேச்சில் உள்ள "காம்ப்ளசென்சி"-யும்தான் எங்களுக்குக் கவலை அளிக்கிறது. அந்த அடிப்படையில் நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, பாராட்டுவதற்குப் போதுமான கால அவகாசம் இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிறார். கால அவகாசம் இருந்தால் பாராட்டுவேன் என்று சொல்லுகிறார். ஆரம்பத்தில் பாராட்டைத் துவக்கினால், அதற்குப் பிறகு தலைவர் அவர்கள் நிச்சயமாக அவகாசம் கொடுப்பார்கள் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அதற்குள் தலைவர் மணி அடிப்பார் என்று மாண்புமிகு உறுப்பினர் நினைக்கிறார்.

**திரு. ஆ. நல்லசிவன்:** அப்படிப்பட்ட ஆபத்து இருப்பதால்தான், விமர்சனம் செய்ய வேண்டியதைச் செய்துவிட்டு, பிறகு நேரம் இருந்தால், பாராட்டலாம் என்று இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, முதலிலே இனிப்பைச் சாப்பிடுவதுதான் நம்முடைய வழக்கம். அதற்குப் பிறகுதான் காரம் சாப்பிடுவது வழக்கம். மாண்புமிகு உறுப்பினர் காரத்திலிருந்து இனிப்பிற்கு வரக்கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இனிப்பு கூடாதா, காரம் கூடாதா என்பது அவரவர் நாவினைப் பொறுத்தது.





**திரு. ஆ. நல்லசிவன் :** போகிற பாதையிலே போகாமல் புதுப் பாதையிலே போக நான் விரும்புகிறேன். இந்த அறிக்கையில் அரிசிப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், நம்முடைய அரசு 1984-85 ஆம் ஆண்டு 95 இலட்சம் டன் உணவு தானிய உற்பத்தி செய்ய திட்டமிட்டிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதைப் படிக்கும்போது, எனக்கு ஒரு ஆங்கிலப் பழமொழி ஞாபகத்திற்கு வருகிறது. ஆங்கிலத்தில் "Carrot before the donkey என்று சொல்லுவார்கள். ஒரு முள்ளங்கியைக் கழுதை கழுத்தில் கட்டினால் அது அதைப் பார்த்துக்கொண்டே செல்லும். அதைப் போலத்தான் இதுவும் இருக்கிறது. இந்த ஆண்டு தமிழ் நாட்டிலுள்ள 59 இலட்சம் ஏக்கரிலுள்ள உணவு தானியத்திற்கு, இப்போது பெய்துள்ள பெரு மழையின் காரணமாக, ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்று மாநில அரசே ஒத்துக்கொண்டிருக்கிறது. தமிழ் நாட்டில் இன்றைக்குள்ள அரசியின் நிலைமை என்னவென்று தெரிவிக்காமல் 1984-85-ம் ஆண்டு உணவு தானியம் 95 இலட்சம் டன் அளவில் இருக்கும் என்று சொல்லுவதில் பிரயோஜனம் இல்லை. அடுத்த 9 மாதங்களுக்கு வேறு பயிர் இடையாது. இப்போது வருகிற சம்பாவிற்குப் பிறகு கோடை காலத்திலே தண்ணீர் வந்து, பிறகு செப்டம்பர், அக்டோபர் மாதங்களில்தான் பயிர் விளையும். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் 1983 ஏப்ரலில் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். அதாவது அதற்கு முன் ஆண்டு அக்டோபர், டிசம்பர் மாதங்களில் ஏற்பட்ட வறட்சியின் காரணமாக, மத்திய அரசு தமிழ் நாட்டிற்கு மாதம் ஒன்றுக்கு ஒரு லட்சம் டன் அரிசியைத் தர வேண்டும் என்று தெரிவித்தார்கள். அப்படி 1983 ஏப்ரலிலும், அக்டோபரிலும் கேட்டார்கள். ஆனால் இப்போது ஏற்பட்ட வெள்ளத்திற்குப் பிறகு நிலைமை மோசமாகியுள்ளது. அக்டோபரில் பேசுகின்றபோது, சம்பா பயிர் வந்தால் ஓரளவிற்கு நிலைமையைச் சரிக்கட்ட முடியும் என்ற நிலைமை இருந்தது. ஆனால் இந்த வெள்ளத்திற்குப் பிறகு 53 இலட்சம் ஏக்கரிலுள்ள சம்பா பயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. ஆகவே நிலைமை மோசமாக இருப்பதால் அடுத்த 9 மாதங்களுக்கு எப்படி காலத்தைத் தள்ளப் போகிறோம் என்பதைப்பற்றித் தெரிவித்திருப்பார்கள் என்று இந்த ஆளுநர் உரையைத் திரும்பத் திரும்ப படித்துப் பார்த்தேன். எப்படி சமாளிக்கப் போகிறோம் என்று எந்த இடத்திலும் விவரம் இல்லை. தமிழ் நாட்டில் இன்றைக்கு இருக்கும் நிலைமை என்ன? அடுத்த 9 மாதங்களுக்கு அரசு என்ன செய்யப் போகிறது என்று சொல்லாமல் 1984-85-ல் 95 லட்சம் டன் அரிசி உற்பத்தி செய்யப் போகிறது என்று சொல்வதனால் ஒரு பிரயோஜனமும் இல்லை. அடுத்த 9 மாத

காலத்தில் இனி தமிழ் நாட்டில் வேறு எந்த கிராப்பும் கிடையாது. இப்போது இருக்கிற சம்பா கிராப்புக்குப் பிறகு, இனி கோடை காலத்திற்குப் பிறகு தண்ணீர் வந்து, செப்டம்பர், அக்டோபர் மாதத்தில்தான் 95 லட்சம் டன் விளையும். இதற்கு முந்தைய கால வறட்சியின் காரணமாகவும், இப்போது ஏற்பட்டிருக்கிற நிலைமையின் காரணமாகவும் தமிழ் நாட்டுக்கு மாதம் ஒன்றுக்கு 1 லட்சம் டன் அரிசி மத்தியத் தொகுப்பிலிருந்து தரவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். 1983 ஏப்ரலிலேயும் கேட்டார்கள்; அக்டோபர் செஷன் போதும் கேட்டார்கள். ஆனால் இப்போது வெள்ளத்திற்குப் பிறகு நிலைமை மோசமாக இருக்கிறது. இந்த சம்பா பயிர் சரியாக விளைந்து ஓரளவுக்கு இந்த வறட்சியிலே குறுவைப் பயிர்களைக் கொண்டுவந்து, சரிக் கட்டிப் போகிற நிலைமைகள் இருந்தும்கூட, வெள்ளம் மிக மோசமாக இருக்கிற சூழ்நிலையிலே அடுத்த 9 மாத காலத்தை எப்படி தள்ளப் போகிறோம்? எந்த ஒரு இடத்திலும், இந்த 8, 9 மாத காலத்திற்கு எப்படி அரிசி அளிக்கப் போகிறோம் என்பதைப்பற்றி ஒரு விவரமும் இல்லை. அதற்கு மாறாக ஆளுநர் உரையில் 3-ஆம் பக்கத்திலே இந்த அரிசிப் பிரச்சினையைப் பற்றி "மத்திய அரசிடமிருந்து 1983 ஏப்ரலில் மாநில அரசு பெற்ற 15 ஆயிரம் டன் படிப்படியாக உயர்ந்து தற்போது 35 ஆயிரம் டன் அரிசி பெறுகின்ற போதிலும், வெளி அங்காடிகளிலிருந்து அதிகமான விலையில் அரிசி வாங்குவதன் மூலமே, பொதுப் பங்கீட்டின் ஏற்பாட்டின் கீழ் பொது மக்களுக்கு முழு அளவில் உணவுப் பொருட்களை வழங்க முடிந்தது" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது எதார்த்தமா? தமிழ் நாட்டில் உள்ள 12 ஆயிரம் ஃபேர் பிரைஸ் ஷாப்களில் உள்ள ஒரு கோடி பதினெட்டு லட்சம் கார்டுகளுக்கும் 1 கார்டுக்கு 20 கிலோ அரிசி என்று வாக்குறுதி கொடுத்துவிட்டு, "முழு அளவில் உணவுப் பொருட்களை வழங்க முடிந்தது" என்று எழுதலாமா, இது நியாயமா என்று கேட்க விரும்புகிறேன். கடந்த 9 மாத காலமாக தமிழ் நாட்டில் முனிசிபாலிட்டிகளில் 5 கிலோ, கிராமப்புறங்களில் 2 கிலோ, சென்னை மாநகரத்திலே 8, 12 கிலோ அரிசி கொடுத்துக்கொண்டு, அரசு 20 கிலோ அரிசி தருவதாக வாக்குறுதி அளித்ததோடு, அரசு இந்தமாதிரி போடலாமா? எதிர்க்கட்சித் தலைவர்கள் கிராமப்புறத்தில் இருக்கும்போது யாராவது 2 கிலோ அரிசி வாங்கி இருக்கிறார்களா? நகர்ப்புறத்தில் 5 கிலோவுக்கு மேல் வாங்கியிருக்கிறோமா? அப்படி இருக்கும்போது இப்படி அப்பட்டமாகச் சொன்னால் எப்படி இங்கே இருக்க முடியும்? ஆகவே அரசிடம் அப்போது அரிசி இல்லை. மத்திய அரசிடமிருந்து 1 லட்சம் டன் அரிசி கேட்டும் அவர்கள் தரவில்லை. தரவில்லை என்று சொல்வதை விட நம்முடைய அரசுக்கு கேட்டு வாங்க மனசு வரவில்லை. 15 ஆயிரத்திலிருந்து படிப்படியாக





உயர்ந்து 35 ஆயிரத்துக்குப் போனோம். இந்த அரசு கேட்ட 1 லட்சம் டன் தரப்படவில்லை என்று ஒரு வார்த்தை சொல்லக் கூடாதா? மத்திய அரசு 1 லட்சம் டன் தராததினால், 20 கிலோ தரமுடியாமல், 2 கிலோவும், 5 கிலோவும் கொடுத்துக் கொண்டிருக்கிறோமே என்று கவலைப்பட வேண்டாமா? அதற்கு மாறாக முழு அளவிலே தந்தோம் என்று சொல்வது எப்படி உண்மையாக இருக்க முடியும்? இந்த அவையில் "பொய்" என்று சொல்வதை unparliamentary என்று சொல்வார்களாதலால், நான், அந்த வார்த்தையை விட்டுவிடுகிறேன். ஆனால் முழுமையாக 20 கிலோ அரிசி தரப்படுகிறது என்று சொல்வது உண்மையா? அதற்கு மாறாக, "அங்கே தரவில்லை; இங்கே நாங்கள் கொடுக்க இயலவில்லை. இதை எதிர்பார்த்து இருக்கிற மக்கள் வயிற்றில் நாங்கள் அடிக்கிறோம். மத்திய அரசு கொடுக்காததால்தான் நாங்கள் கொடுக்க முடியவில்லை" என்று கூறுவதை நான் நம்பத் தயாராக இல்லை. நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், நம்முடைய மாநிலத்திற்கு இந்த "கிரெய்ன் பூலி"லிருந்து தமிழகத்திற்கு அரிசி தரவேண்டுமென்று கோரி உண்ணாவிரதம் இருந்த முதலமைச்சர் அவர்களுடைய கொள்கை என்ன? இங்கே பூசி மொழுகுகிற கொள்கை எங்கே? இது எங்கே இருந்து வந்தது? போடுவதற்கு அரிசி இல்லை என்று சொல்வதற்குக்கூட முடியாத அளவிற்கு நீங்கள் இதைப் பூசி மொழுகுகிறீர்களே. இப்படிப் பூசி மொழுகுகிற தேவை எங்கே இருந்து வந்தது என்பதைத்தான் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அது என்ன பூசி மொழுகுகிறது?

**திரு. ஆ. நல்லசிவன் :** அப்படிப் பூசி மொழுகுகிறார்களே, ஏன்? இந்த நிலைமையை ஏன் சொல்ல மறுக்கிறார்கள்?

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** பூசி மொழுகுகிறது என்பது சுகாதாரம் தானே?

**திரு. ஆ. நல்லசிவன் :** இல்லை, பூசி மொழுகுகிறது என்பது வேறு; வீட்டை சாணம் போட்டு பூசி மொழுகுகிறோம் என்பது வேறு. பிரச்சினைகளையே தெரியாமல் பூசி மொழுகுவதற்காகத்தான் நான் உபயோகப்படுத்துகிறேன். இந்தத் தமிழ்நாடு முழுவதற்கும் மத்திய அரசு சப்ளையே பண்ணாமல் இருப்பதற்குக் காரணம் என்ன என்பதைச் சொல்லாமலிருப்பதற்கு இங்கே பயன்படுத்துகிறார்கள் என்பதற்காகத்தான் நான் இதைச் சொல்ல விரும்புகிறேன். ஆனால் இன்றைக்கு சாப்பாட்டுக்கு அரிசி தரவில்லை; ரேஷன் கடைகளில் 2 கிலோவும், 5 கிலோவும் போடுகிறார்கள். அப்படிப் போட்டுக் கொண்டிருக்கும் மக்கள் முன்னாலேயே 1984-85-லே 95 லட்சம் டன்

அரிசி வரப் போகிறது என்று Carrot before the donkey மாதிரி ஆட்சியை ஓட்டப் போகிறார்களே? இந்த அரிசிப் பிரச்சினையில் சர்க்காருடைய கவனமும், கருத்தும் எப்படி இருக்கிறது என்பதை நான் காட்ட விரும்புகிறேன்.

வறட்சி நிவாரணப் பணியைப்பற்றி இரண்டு இடத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் 4 ஆம் பக்கத்திலே வறட்சிப் பணியைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது ஏற்கெனவே மத்திய அரசு வறட்சிப் பணிகளுக்காக ரூ. 114.25 கோடி செலவழித்தது. ஆனால் மத்திய அரசு ரூ. 65.36 கோடி தந்தது. பாக்கியைத் தரவேண்டுமென்று கேட்கிறோம். இந்தப் பாக்கியைத் தரவேண்டுமென்று மத்திய அரசிடம் எவ்வளவு அப்பாலஜெடிக்காகக் கேட்கிறார்கள்? "வறட்சித் துயர் துடைப்புப் பணிகளுக்காக மேற்கொண்டும் உதவி கேட்டு மத்திய அரசுக்கு மற்றுமொரு வேண்டுகோள் விடுக்கும்படியான அவசியம் நமக்கு ஏற்பட்டது. அவ்வளவு வளைந்து சுழிந்து சொல்கிறார்கள். அடுத்த பாராவில், இப்பொழுது வைத்திருக்கும் வேண்டுகோள் ஏற்கெனவே துயர் தணிப்புப் பணிகளுக்காகச் செலவிட்ட தொகையை ஈடு செய்யத்தானே தவிர, புதிய பணிகளுக்காக அல்ல. நாம் பயந்துவிடக் கூடாது. இந்திய அரசு கணிசமான நிதி அளிக்குமென மாநில அரசு நம்புகிறது. வறட்சி நிதி பற்றி உதவி கேட்கிற லட்சணம் இப்படி இருந்தால் எப்படி இருக்கும்? அப்புறம் வெள்ளத்திற்குக் கேட்கிறார்கள். வெள்ளத்திற்கு மாநில அரசு ரூ. 37 கோடி 54 லட்சம் வழங்கியுள்ளது. வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொள்ள ரூ. 128 கோடி உதவி கேட்டு மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. மத்தியக் குழுவும் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டுள்ளது. மத்தியிலிருந்து கணிசமான அளவுக்கு உதவி கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

நம்முடைய முதலமைச்சர், பெங்களூரில் முதலமைச்சர்கள் கூட்டத்தில் என்ன தீர்மானம் போட்டிருக்கிறார்கள்? "இயற்கைச் சீற்றம் ஏற்படுகிறபோது மாநில அரசுகளால் பொறுக்க முடியாது. மாநிலத்திற்கு ஏற்கெனவே இருக்கிற நிதி ஆதாரங்களே போதுமானதாக இல்லை. ஆகவே வெள்ளம், வறட்சி போன்ற இயற்கைச் சேதங்கள் ஏற்படும்போது, பூராவற்றுக்கும் மத்திய அரசு பொறுப்பு ஏற்க வேண்டும்" என்று தீர்மானம் போட்டுவிட்டு "கணிசமான அளவுக்கு உதவி கிடைக்கும்" என்று ஏன் சொல்கிறார்கள்! இப்போது கல்கத்தாவில் கூடிய எதிர்க்கட்சிகள், வெள்ள நிவாரணப் பணியைப்பற்றித் தீர்மானம் போட்டிருக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள், தென்னக முதலமைச்சர்கள் கூட்டத்தில் என்ன தீர்மானம் போட்





டார்களோ அந்தத் தீர்மானத்தை ஊர்ஜிதம் செய்து தான் தீர்மானம் போட்டிருக்கிறார்கள். அதைப் படிக்கிறேன். "தற்போதுள்ள நடைமுறையானது எல்லா மாநிலங்களையும் இரண்டு முறை தண்டிக்கிறது. மாநிலம் இயற்கைச் சீற்றத்தின் விளைவாக பாதிக்கப்படுகிறது; நிவாரணம் என்ற பெயரால் திட்ட உதவியைத் துண்டாடுவதன் மூலம் அது மேலும் தண்டிக்கப்படுகிறது. வருடாந்திரத் திட்டத்தில் 5 சதவீதம் என்ற உச்ச வரம்புக்கு எந்த அடிப்படையும் இல்லை" இது ஆர்பிடரி தீர்மானம் வறட்சி ஏற்பட்டால், வெள்ளம் ஏற்பட்டால், நிவாரணம் கொடுக்க மாநிலம் முயற்சி எடுக்கின்றபோது, அந்த ஆண்டுக்கு அந்த மாநிலத்திற்கு எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கின்றதோ அதிலே 5 சதவீதத்திற்கு மேல் போகக் கூடாது. நீங்கள் செலவழித்தாலும், நாங்கள் செலவழித்தாலும் போகக் கூடாது என்று சொல்கிறது. மத்திய அரசு "அந்த ஐந்து சதவிகிதத்திற்கு மேலே போகிற போது, அதிலே நாங்கள் பங்கு பெறுவோம். அந்தப் பங்கிலே பாதி கடன், பாதிதான் மான்யம்" என்று இன்றைக்கு மத்திய அரசு கூறுகிறது. தென்னக முதலமைச்சர்கள் பெங்களூர் மாநாட்டில் தீர்மானம் போட்டனர். அந்தத் தீர்மானத்தை கல்கத்தா மாநாடு ஊர்ஜிதம் செய்கிறது. அந்தப் பக்கமே நம்முடைய முதலமைச்சர் தலை வைத்துப் படுக்க மாட்டேனென்கிறார்.

(முற்பகல் 10-30)

இதையெல்லாம் நாம் பார்க்கின்றபோது, இந்த வறட்சிக்கு, வெள்ளத்திற்கு என்று நிவாரணம் கேட்கின்றபோது எப்படி இருக்கிறது? இந்த அரசு வெள்ள நிவாரணத்திற்கு என்று உதவி கேட்கிறது. "மாநில அரசு ஏற்கெனவே ரூ. 37.54 கோடி வழங்கியுள்ளது. வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொள்ள ரூ. 128 கோடி உதவி கேட்டு மத்திய அரசிற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. மத்திய குழுவும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களைப் பார்வையிட்டுள்ளது. மத்திய அரசிடமிருந்து கணிசமான அளவிற்கு உதவி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது".

நான் இப்போது என்ன கேட்க விரும்புகிறேன். கர்நாடக முதலமைச்சர் அவர்கள் கூட்டிய தென்னக முதலமைச்சர்கள் பெங்களூர் மாநாட்டில், என்ன தீர்மானம் போடப்பட்டிருக்கின்றது, "இயற்கைச் சேதம் ஏற்படுகின்றபோது,' அதை மாநில அரசு பொறுத்துக்கொள்ள முடியாது. மாநில அரசுக்கு ஏற்கெனவே இருக்கின்ற நிதி ஆதாரம் போதுமானதல்ல. இயற்கைச் சேதம் ஏற்பட்டால், அதற்குப் பூராவும் மத்திய அரசுதான் பொறுப்பேற்க வேண்டும்" இப்படித் தான் தீர்மானம். இப்படித் தீர்மானம் போட்டுவிட்டு, இங்கே 'கணிசமான அளவுக்கு' என்று ஏன் சொல்லியிருக்கின்றார்கள்?

[திரு. ஆ. நல்லசிவன்] [1984 பிப்ரவரி 20

இதில் நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், தீர்மானம் போட்டதற்கு மாறாக இங்கே போட்டிருக்கின்றார்கள். அன்றைக்கு மகாநாட்டில் அந்தத் தீர்மானம் போட்டார்கள். அதே பிரச்சினை மீது, இப்போது கல்கத்தாவிலே தீர்மானம் போட்டார்கள். கல்கத்தாவிலே எதிர்க் கட்சி ஆட்சியினர், வெள்ள நிவாரணப் பணியைப் பொறுத்து ஒரு தீர்மானம் போட்டார்கள். இங்கே தென்னக முதலமைச்சர்கள் மகாநாட்டில், என்ன தீர்மானம் போட்டார்களோ அதே தீர்மானத்தைத்தான் ஊர்ஜிதம் பண்ணியிருக்கின்றார்கள். அவர்கள் அந்தத் தீர்மானத்தில் என்ன எழுதியிருக்கின்றார்கள் என்பதைப் படித்துக் காட்டுகிறேன் :—

"தற்போதுள்ள நடைமுறையானது ஒரு மாநிலத்தை இரண்டு முறை தண்டிக்கிறது. மாநிலம் இயற்கைச் சீற்றத்தின் விளைவாக பாதிக்கப்படுகின்றது. நிவாரணம் என்ற பெயரால் திட்ட உதவியைத் துண்டாடுவதன் மூலம் அது மேலும் தண்டிக்கப்படுகிறது. வருடாந்திர திட்டத்தில் 5 சதவிகிதம் என்று உச்ச வரம்புக்கு எந்த அடிப்படையும் இல்லை. அது ஆர்பிட்ரரி தீர்மானம். வெள்ளம் ஏற்பட்டால், வறட்சி ஏற்பட்டால், நிவாரணம் கொடுக்க மாநிலம் முயற்சி எடுக்கின்றபோது, அந்த ஆண்டுக்கு அந்த மாநிலத்திற்கு எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கின்றதோ, அதிலே 5 சதவிகிதத்திற்கு மேல் போகக்கூடாது, நீங்கள் செலவழித்தாலும் நாங்கள் செலவழித்தாலும் போகக்கூடாது" யார் சொல்கின்றார்கள்? மத்திய அரசில் சொல்கின்றார்கள் "ஐந்து சதவிகிதத்திற்கு மேலே போகின்றபோது அதிலே பங்கு பெறுவோம். அந்தப் பங்கிலே பாதி கடன், பாதிதான் மான்யம்" என்று இன்றைக்கு மத்திய அரசு கூறுகிறது. இது தவறு என்று மாண்புமிகு முதலமைச்சர்கள் பெங்களூரில் ஒரு தீர்மானம் போட்டார்கள். அந்தத் தீர்மானத்தை கல்கத்தா மகாநாட்டில்கூட ஊர்ஜிதம் செய்திருக்கின்றார்கள். ஆனால் அந்தப் பக்கமே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தலை வைத்துப் படுக்க மாட்டேன் என்கின்றார்கள். இதை ஏன் சொல்கின்றேன் என்றால், அரசு எடுத்த நிலை என்ன? வறட்சி ஏற்பட்டால், வெள்ளம் ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும் என்று தீர்மானம் போட்டிருக்கின்றார்கள். காங்கிரஸ் அல்லாத மாநில முதலமைச்சர்கள் மகாநாடு தீர்மானம் போடுகிறது. அப்படிப்பட்ட ஒரு கொள்கை இருந்தால், மாநில அரசு இந்த ஸ்பீச்-லே அதை 'அப்ளை' பண்ண வேண்டாமா? கணிசமான தொகை என்று தான் எழுதியிருக்கின்றார்கள். பெங்களூர் மகாநாட்டில் எடுத்த தீர்மானத்திற்கும் இப்போதுள்ள நிலைமைக்கும் இடையில் என்ன ஏற்பட்டிருக்கிறது. "கணிசமான தொகை" என்று மாற்றிக்கொள்வதற்கு என்ன காரணம். ஆகவே 'கணிசமான' என்ற வார்த்தை வறட்சி நிவாரணத்தில் வருகின்றது. அது ஏன்?



1984 பிப்ரவரி 20]

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 'கணிசமான' என்றால் 'சப்ஸ்டான்ஷியல்' என்றுதான் அர்த்தம். அது தவறு என்று அவர்கள் எப்படி எடுத்துக் கூறுகிறார்கள் என்று தெரியவில்லை. அது மட்டுமல்ல. நாம் ஏற்கெனவே செலவழித்துவிட்டோம். அந்த நிதியைப் பெற்றுத்தான் செலவழிக்கவேண்டுமென்ற நிலையில்லை. மூளவுக்கு நம்முடைய வரவுசெலவுத் திட்டத்தில் பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதேகூட நாம் ஏற்கெனவே செலவழித்து விட்டதைத்தான் காட்டுகிறது. அது திட்டத்திட்ட நமக்கு உதவியை அளித்தது போல. அந்தப் பற்றாக்குறையைச் சரிக் கட்டுவதற்குத்தான் கூடுதல் நிதியைக் கேட்கிறோம்.

**திரு. ஆ. நல்லசிவன் :** அரசில் ஏற்கெனவே சில கொள்கைப் பிரகடனம் செய்திருக்கின்றார்கள். நிதி ஆதாரம் மாநில அரசுக்குப் போதுமானதாக இல்லை. மாநிலங்களில் வெள்ளச் சேதம், வறட்சிச் சேதம் என்று ஏற்படுகின்றபோது, முழுவதற்கும் மத்திய அரசு பொறுப்பு ஏற்க வேண்டும் என்று கேட்கின்றபோது, அப்படி ஒரு தீர்மானத்தை அறிவித்திருக்கின்ற நிலைமையிலே, அதைக் கொள்கை ரீதியாக இந்த உரையிலே சொல்லாமல் இருக்கின்றார்கள். அதைத்தான் நான் சொல்கின்றேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அந்தக் கொள்கையில் மாற்றம் இல்லை. இன்னும் அதே கொள்கையைத்தான் அரசு கடைப்பிடிக்கிறது. இயற்கையினால் ஏற்படுகின்ற விளைவுகளுக்கு மத்திய அரசு நிதி உதவி செய்ய வேண்டும் என்ற கொள்கையிலே மாற்றமில்லை. ஆனால் அவர்கள் நிதி உதவியைச் செய்த பிறகுதான் செலவழிக்க வேண்டுமென்ற நிலையை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. நாம் ஏற்கெனவே செலவழித்தாகிவிட்டது. நாம் ஏற்கெனவே செய்த செலவினால் நமக்குப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கின்றது. அதனால் 'ஓவர்டிராப்ட்' ஏற்பட்டிருக்கிறது. அதையும் நாங்கள் எடுத்துச்சொல்லியிருக்கிறோம். ஆகவே எங்களுக்கு மத்திய அரசு அந்தப் பணத்தைக் கொடுத்தால்தான், அந்தப் பணத்தைக்கொண்டு பற்றாக்குறையைச் சரிக்கட்ட முடியும் என்று சொல்லியிருக்கிறோம். அந்தப் பற்றாக்குறையை மத்திய அரசு வற்புறுத்தாமல் இருப்பதிலிருந்தே நாம் கேட்கின்ற நியாயத்தை அவர்கள் புரிந்து கொண்டிருக்கின்றார்கள் என்று தெரிகிறது.

[1984 பிப்ரவரி 20

**திரு. ஆ. நல்லசிவன் :** இந்தக் காரணங்களைக் கொண்டு [illegible] அடைந்துகொள்ளலாம். அதில் எனக்கு ஆட்சேபனை இல்லை. நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், அரசு சொல்லும்போது, அவர்கள் தருவார்களா, மாட்டார்களா என்பது எப்படித் தெரியும்? ஆனால் அரசு இந்த உரையிலே எழுதுவதற்கு என் கருத்தைச் செய்ய வேண்டும்? மத்திய அரசால் பொருளுக்க முடியாது. இதில் மத்திய அரசு பொறுப்பு ஏற்க வேண்டும் என்று எழுத வேண்டும். அதைத் தள்ளிக் கட்டவேண்டும் என்று சொல்லிக் கூட வற்புறுத்த வேண்டும். அது 'இல்லை' ஆக இருக்கக்கூடாது. விளக்கமாகத் தாவில்லையோ என்பதுதான் என்னுடைய கேள்வி. அந்தக் கொள்கை உள்ளடங்கி இருக்கிறது என்று சொல்ல முடியாது. [illegible] அப்படிப்பட்ட நிலைமைக்குப் போகிறார்கள் என்பதுதான் கேள்வி.

விலைவாசி ஒரு முக்கியப் பிரச்சினை. விலைவாசி மத்திய அரசு உயர்த்துகிறது. ஆனால் மக்களுக்கு நேரடியாகப் பதில் சொல்லுகிறவர்கள் மாநில அரசினர்தான். இந்த அரசு விலைவாசி உயர்வைப்பற்றி என்ன நினைக்கிறது என்பதைப்பற்றி ஆளுநர் உரையில் சரியாகச் சொல்லவேண்டாமா? இந்த அரசே நிலக்கரி விலை உயர்வு 25 சதவீதம் என்பதும், ரெயில் அரிசி 25 சதவீதம் கூடுதல் என்பதும் மசகு விலை உயர்வு என்பதும் குறிப்பிட்டிருக்கிறது. இவையெல்லாம் அறிவிக்கை செய்யப்பட்ட விலைகள் Notified Prices ஆக இருக்கிறதா இல்லையா? இதைப்பற்றி இந்த அரசு என்ன சொல்கிறது? இதைப்பற்றியெல்லாம் இந்த அரசு சொல்லாமலே கவர்னருக்குத் தெரியுமா? இதைச் சரி என்று இந்த அரசு சொல்கிறதா? மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். விலைவாசி உயரும்போது மாநில அரசுதான் பதில் கொடுக்க வேண்டியிருக்கிறது. இது சரியல்ல என்று இந்தியாவின் உள்ள எல்லா எதிர்க்கட்சிகளும் கூறுகின்றன. ஆனால் இந்த அரசு மட்டும் என்ன சொல்கிறது?

(கவர்னர் உரையில், போக்குவரத்தில் (டிரான்ஸ்போர்ட்டில்) எப்படி நஷ்டம் ஏற்படுகிறது என்று இந்த அரசு அழகாகச் சொல்லியிருக்கிறது.

"1980 முதல் இப்பொழுது வரையிலான கால அளவில் டீசலின் விலை 100 சதவீதத்திற்கும் மேல் உயர்ந்துள்ளது. இதன் காரணமாக கடந்த 3½ ஆண்டுகளில் அரசு போக்குவரத்து நிறுவனங்களுக்கு ரூ. 115 கோடி அளவிற்கு கூடுதல் செலவு ஏற்பட்டுள்ளது",



1984 பிப்ரவரி 20] [திரு. ஆ. நல்லசிவன்]

இந்த மாதிரி கூடுதல் செலவு ஏற்பட்டுள்ளதால், ஜனங்கள்மீது பஸ் கட்டணத்தை உயர்த்த வேண்டியிருக்கிறது. டீசல் விலையை உயர்த்தியுள்ளதற்குக் காரணம், வெளிநாட்டிலிருந்து இறக்குமதியான காஸ்ட் பிரைஸ் (Cost Price)] அல்லது இவர்கள் அதிகப்படியான விலையை ஒவ்வொரு ஆண்டும் நோட்டிபை (Notify) செய்து உயர்த்துகின்றனர். இந்தமாதிரி 'நோட்டிபை' செய்து விலையை உயர்த்தியிருப்பதைக் குறித்து எல்லா அரசாங்கங்களும்—காங்கிரஸ் அரசாங்கங்கள் உள்பட—முணுமுணுக்கின்றன. ஆனால் இந்த அரசு என்ன சொல்கிறது, சரி என்று சொல்கிறதா? தவறு என்று சொல்கிறதா? இந்த அரசாங்கத்தின் கொள்கை என்ன? கட்சியின் கொள்கை என்ன? இந்தியாவில் இப்படி . . . .

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றியெல்லாம் ஆளுநர் உரையிலே நாம் சேர்ப்பதென்றால், மிகப்பெரிய ஒரு நூலாக ஆகிவிடும். இதற்கே வெளிநடப்பு செய்கிறவர்கள், அதை எங்கே பொறுமையாகக் கேட்கப்போகிறார்கள் என்ற வகையில்தான் சுருக்கிக் காட்டியிருக்கிறோம்.

**திரு. ஆ. நல்லசிவன் :** நாங்கள் ஒன்றும் இந்த அரசை பொருளாதார ஆராய்ச்சிக்கட்டுரை ( Economic Thesis ) எல்லாம் எழுதச் சொல்லவில்லை. அதற்கு மாறாக இந்த அரசு சொல்கிற 3 விஷயங்களில். . . . "மத்திய அரசாங்கம் இப்படியெல்லாம் விலையை உயர்த்திக்கொண்டு செல்வதன் காரணமாக மக்களுடைய வாழ்க்கைச் செலவு அதிகரிப்பதால், இன்றியமையாப் பண்டங்களின் விலைகள் உயர்வதால், மக்கள் பிரச்சினைகள் அதிகமாகின்றன. பொதுமக்களை நாங்கள்தான் எதிர்நோக்க ( Face-பண்ண ) வேண்டியிருக்கிறது" என்று இரண்டே வரிதான் எழுதச் சொல்கிறேன். அதை ஏன் எழுத மாட்டேன் என்கிறது இந்த அரசு என்றுதான் கேட்கிறேன். அதற்குக் காரணம். . .

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் சார்பில் இத்தகைய விலை உயர்வை மேற்கொள்கிற போது, மாநிலங்களைக் கலந்து ஆலோசிக்கவேண்டுமென்று கொள்கை நிலை எடுத்து அந்தக் கருத்தைப் பல்வேறு நிலைகளில் மத்திய அரசிடம் வலியுறுத்தி இருக்கின்றோம். அண்மையில் நிதி ஆணைக்குழுவிற்கு அளித்த அறிக்கையிலும் அது தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு அறிக்கையிலும் ஒவ்வொன்றையும் எடுத்து எழுதிக்கொண்டே வருவதென்றால், அது இயலாது.

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆளுநர் உரையிலே அரசின் அடிப்படைக் கொள்கை பிரதிபலிக்க வேண்டுமா வேண்டாமா என்பதுதான் என் கேள்வி. ஆளுநர் உரையிலே இந்த அரசாங்கத்தின் அடிப்படைக் கொள்கை (பேசிக் பாலிசி) பிரதிபலிக்க Reflect ஆக வேண்டாமா என்றுதான் கேட்கிறேன். நான் கேட்பது, இப்படியெல்லாம் மத்திய அரசு செய்யும்போது, அதனால் இப்படி மாநிலம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லாதது தவறு என்பதுதான்.

(முற்பகல் 10-40)

அடுத்து, வேலையின்மைப் பிரச்சினை. ரெஜிஸ்டர்ட் அன்எம்ப்ளாய்ட் 2 கோடி 40 லட்சம் என்று அரசுக் கணக்கு இருக்கிறது. தமிழ்நாட்டில் 12 லட்சம் என்று கணக்கு இருக்கிறது. அப்படி இருக்கும்போது, அரசு அதற்கு என்ன காரணம் சொல்லுகிறது? "தொழில் தெரிந்தவர்கள் இல்லாததால் வேலை கொடுக்க முடியவில்லை, எனவே கல்வியில் புதிதாக ஒன்றைப் புகுத்தப் போகிறோம்" என்று சொல்கிறது. கல்வியில் தொழிற் பயிற்சியைப் புகுத்தப் போகிறோமென்று சொல்கிறது. இன்றைக்கு நாட்டில் 2 கோடியே 40 லட்சம் ரெஜிஸ்டர்ட் எஜுகேடட் அன்எம்ப்ளாய்ட் இருக்கிறார்கள். ஆனால் அரசு இப்படிச் சொல்கிறது. வேலையின்மையைப் பற்றி 18 கட்சி கூட்டணியினர் என்ன சொல்லுகிறார்கள்? வேலை வாய்ப்பு இன்மை போக்கிலும் படுமோசமாக இருக்கிறது. தொழில் துறையிலும் இதர துறைகளிலும் அரசாங்கம் கடைப்பிடிக்கும் உற்பத்திக் கொள்கையால் இது தீவிரமாகிவிட்டது, அதனால் புதிய உழைப்பாளிகளுக்கு வேலையில்லாமல் போகிறது என்று சொல்லுகிறார்கள். இந்த ஸ்டேட்மெண்டை இந்த அரசினர் கன்டெஸ்ட் பண்ணப் போகிறார்களா இல்லையா? ஆளுங்கட்சி என்ற முறையில் இந்த ஸ்டேட்மெண்டை கன்டெஸ்ட் பண்ணாமல், மத்திய அரசு கொள்கையால் தான் தொழில் வாய்ப்பு ஏற்படவில்லை என்று சொல்வதற்குப் பதிலாக, தமிழ் நாட்டில் தொழில்களுக்கு எல்லா ஏற்பாடுகளும் பண்ணுகிறோமென்று சொல்லியிருக்கிறார்கள். "இவர்களிடையே வளர்ந்து வரும் அதிருப்தி சமுதாயத்தில் அமைதியின்மையையும், பதட்ட நிலையையும் அதிகமாக்குகின்றன" என்று ஆளுநர் அவர்கள் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வேலையின்மைக்குக் காரணம் மத்திய அரசுதான் என்று பகிரங்கமாக அறிவிக்க வில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : 18 கட்சிகள் சேர்ந்து, எந்தவிதமான உற்பத்திக் கொள்கை இந்தியாவில் இருக்க வேண்டுமென்று முடிவு எடுத்திருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன். அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவார்களா?





திரு. ஆ. நல்லசிவன் : அவர்கள் ஆட்சி நடத்தும்போதுதான் சொல்லுவார்கள். . . . .

திரு. ஜி. சுவாமிநாதன் : அந்தப் 18 கட்சிகளில், ஒவ்வொரு கட்சிக்கும் ஒரு அபிப்பிராயம் இருக்கிறது. எனவே ஏதாவது ஒருமித்த முடிவெடுத்து, இப்படித்தான் உற்பத்தித் துறை இருக்க வேண்டுமென்று முடிவெடுத்திருக்கிறார்களா? அந்த முடிவை உறுப்பினரவர்கள் சொல்லுவார்களா?

திரு. ஆ. நல்லசிவன் : இன்றைக்கு ஒரு கட்சிக்குள்ளேயே பல அபிப்பிராயங்களைப் பார்க்கிறோம். எனவே பல கட்சிக் கூட்டணியில் அப்படித்தான் இருக்கும். நான் சொல்லும் அடிப்படையான பிரச்சினை என்னவென்றால் . . . .

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கட்சிகள் இதனால் உற்பத்தியாகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள் இதோடு திருப்தி அடைய வேண்டும்.

திரு. ஆ. நல்லசிவன் : இன்றைக்கு நீங்கள் பெரிய கட்சியாக இருப்பதால் சொல்லலாம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாராட்டுகிற பக்கத்துக்கு வந்துவிட்டார்கள் என்று நினைக்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : வேலையின்மைப் பிரச்சினை பற்றி நான் சொல்ல விரும்புவது, இந்த அரசு இதற்குக் காரணமாக அடிப்படைப் பிரச்சினையை 'அவாய்ட்' செய்கிறது என்பதுதான். டெக்னிகல் நாலட்ஜ் இல்லாததால் வேலை கொடுக்க முடியாமல் போய்விட்டது என்று சொல்லுவது யதார்த்தமாக இல்லை.

அடுத்து, தொழில் வளர்ச்சி, பத்தி 27ல் தொழில் வளர்ச்சிபற்றி கூறும்போது, "தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் இம்மாநில அரசு அளித்துள்ள பல்வேறு சலுகைகள், வசதிகளைத் தவிர பெரும் செலவில் பொதுத் துறைத் தொழில்களை ஏற்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதன்மூலம் நம் மாநில அரசு தொழில் வளர்ச்சிக்கு ஏராளமாகப் பணம் செலவிடுகிறது, எல்லா கன்செஷன்களும் கொடுக்கிறது என்று தெரியும். ஆனால் அது உண்மையா, யதார்த்தமா என்பதைப் பார்க்க வேண்டும். 1967லே திராவிட முன்னேற்றக்

[திரு. ஆ. நல்லசிவன்] [1984 பிப்ரவரி 20

கழகம் ஆட்சிக்கு வந்ததிலிருந்து, இன்றைய வரையில், இவர்கள் சொல்லி, அதற்குப் பிறகு இவர்கள் தொடர்ந்து சொல்லி, 10 ஆண்டுகளாகச் சொல்லி வருகிறார்கள். 'மத்திய அரசிலிருந்து நிதி கிடைக்கவில்லை' என்று. ஆனால் இன்றைக்கு என்ன சொல்கிறார்கள்? தொழில் வளர்ச்சிக்கு எல்லா ஏற்பாடும் பண்ணியிருக்கிறோம். பணம் சேமித்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். இது யதார்த்தமா? மத்திய அரசு போதிய பணம் தரவில்லை என்று சொல்வதற்குப் பதிலாக, "எல்லா ஏற்பாடுகளும் பண்ணியிருக்கிறோம்" என்று சொல்லியிருக்கிறார்கள். 10 கோடி ரூபாய்க்கு சர்க்கரை ஆலை தவிர வேறு என்ன இருக்கிறது? 195 கோடி ரூபாய் செலவில் காகித ஆலைத் திட்டம் பற்றி பல வருடங்களாகச் சொல்கிறார்கள். அதைப்பற்றித் திரும்பத் திரும்பச் சொல்லுகிறார்கள். வேறு என்ன பொதுத் துறைத் தொழில்கள் உருவாகியிருக்கின்றன? தொழில் வளர்ச்சி ஏற்படுத்த மத்திய அரசு பணம் கொடுக்கத் தயாராக இல்லை என்பதைச் சொல்வதற்குப் பதிலாக திரும்பத் திரும்ப எல்லா ஏற்பாடும் செய்துவிட்டோம் என்று சொல்லுகிறார்கள்.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். நிதி ஆதாரங்கள் என்று வருகிறபோது இங்கே ஒன்றைப் பேசுகிறார்கள், வெளியிலே இன்னொன்றைப் பேசுகிறார்கள். மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களைத் தராமல் அடக்கி நிற்கிறவர்களுக்கு எதிராக தேர்தலின்போது வாக்களியுங்கள் என்று மக்களைப் பார்த்து வெளியிலே பொதுக்கூட்டங்களில் பேசுகிறார்கள். அதை இங்கே ஏன் சொல்லவில்லை என்பதுதான் என்னுடைய கேள்வி. மத்திய அரசு நம்முடைய மாநிலத்திற்குத் தருகின்ற நிதி ஆதாரம் போதுமானதாக இல்லை என்று திட்டவட்டமாகச் சொல்ல ஏன் மறுக்கிறார்கள்? அதுபோல் 5 பொருள்களுக்கு விற்பனை வரி போடுவது பற்றி ஏன் சுட்டிக்காட்டவில்லை. நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், மத்திய அரசு நமக்குப் போதுமான நிதி உதவியைத் தராத காரணத்தால் தான் நம்முடைய மாநிலத்தில் போதுமான தொழில் வளர்ச்சி ஏற்படவில்லை. இதை ஏன் நம்முடைய அரசே ஒத்துக்கொண்டு அதைத் திட்டவட்டமாகச் சொல்லவில்லை? தமிழக அரசுக்கு ஏதோ 'இன்டிபெண்டென்ட்' ஆக அனைத்து அதிகாரங்களும் இருப்பது மாதிரி ஒரு தோற்றத்தை ஏன் ஏற்படுத்த வேண்டும்? அனைத்து ஏற்பாடுகளையும் இந்த அரசு செய்திருப்பதாகச் சொல்லியிருக்கிறது. ஆனால் உண்மையிலே தமிழகத்திற்கு அடிப்படையாக இருக்கிற முக்கியமான பிரச்சினைகள் பற்றி திட்டவட்டமாகச் சொல்லவில்லை. அவற்றை எப்படி இந்த அரசு தீர்க்கப் போகிறது என்பது பற்றிச் சொல்ல முயற்சி செய்யவில்லை. ... நமக்குப் பாதகம் வருகிறது என்று தெரிகிறபோது, ஏன் மத்திய



1984 பிப்ரவரி 20] [திரு. ஆ. நல்லசிவன்]

அரசை எதிர்த்துப் பேசக்கூடாது? இன்றைக்கு மத்திய அரசுக்கு எதிராக ஒரு இயக்கம் உருவாகிக் கொண்டு வருவது தெரியாதா? அந்த இயக்கத்தை பிரதமர் அவர்கள் "செபரேட்டிஸ்ட் மூவ்மென்ட்" என்று சொல்லியிருக்கிறார்கள். கல்கத்தாவில் கூடிய எதிர்க் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் 16 அம்சங்கள் கொண்ட உருப்படியான ஒரு மாற்றுத் திட்டத்தைத் தந்திருக்கிறார்கள். 10 இலட்சம் மக்கள் கூடியிருந்த கூட்டத்தில் அந்தப் பிரகடனம் அந்த மக்களால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. அந்தக் கொள்கைகளுக்கு மாறாக நம்முடைய அரசு ஏன் நடக்க வேண்டும்? இவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதையும் நான் சொல்ல வேண்டும். நீங்கள் ஏன் அதில் கலந்துகொள்ளவில்லையென்று கேட்டால் "எல்லா மாநில முதலமைச்சர்களையும் கூப்பிடவில்லை, ஆகவே கலந்து கொள்ளவில்லை" என்று சொல்லுகிறார்கள். கல்கத்தாவுக்கு வாருங்கள் என்று சொன்னால், இப்படிச் சொன்னால் என்ன அர்த்தம்? காங்கிரஸை எதிர்த்து நடைபெறும் ஒரு கூட்டத்திற்கு காங்கிரஸ் முதலமைச்சர்களை ஏன் கூப்பிடவில்லை என்று கேட்டால், என்ன அர்த்தம்? எதிர்க் கட்சிகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து ஆளும் கட்சிக்கு எதிராக ஒருமித்த மாற்றுக் கருத்துக்களை உருவாக்க கூடினால், அதில் கலந்துகொள்ள வேண்டாமா? இன்றைக்கு நாட்டிலேயுள்ள எதிர்க் கட்சி அரசுகளையெல்லாம் கவிழ்க்கின்ற முயற்சியில் மத்திய அரசு ஈடுபட்டிருப்பது நம்முடைய அரசுக்குத் தெரியாதா? ஏற்கனவே பிப்ரவரி 1980-ல் இந்த அரசை ஒருமுறை மத்திய அரசு கவிழ்த்தது நினைவில்லையா? இன்றைக்கு திரு. பரூக் அரசையும், திரு. ஹெக்டே அரசையும் கவிழ்க்கின்ற முயற்சியில் மத்திய அரசு ஈடுபட்டுக்கொண்டிருக்கும்போது, நம்முடைய அரசும் யாருக்கோ நடக்கப் போகிறது என்கிற எண்ணத்தில் இருப்பது சரிதானா? அந்தக் கூட்டத்திற்கு கூப்பிடவில்லை. இன்றைக்கு நாட்டிலே ஏற்பட்டிருக்கிற அனைத்து கஷ்டங்களுக்கும் காரணம் மத்திய அரசின் கொள்கைதான். ஜனங்களுக்கு எதிராக இருக்கின்ற மத்திய அரசின் கொள்கைகளை எதிர்த்து ஏன் அரசு பேசவில்லை? ஜனங்களிடம் இதைப்பற்றிச் சொல்ல வேண்டாமா? ஏதோ சத்துணவுத் திட்டம், சேலை, வேஷ்டி போன்றவைகளை வழங்கியிருக்கிறோம் என்று சொல்லிவிட்டு, மக்களுடைய முக்கியமான அடிப்படைப் பிரச்சினைகளைப் பற்றித் தெளிவுபடுத்தாமல் விட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** உண்ண உணவு, உடுக்க உடை இவை இரண்டும் தான் அடிப்படைப் பிரச்சினைகள். மாண்புமிகு உறுப்பினர் சத்துணவையும், வேஷ்டி சேலையையும் அடிப்படைப் பிரச்சினைகள் அல்ல என்று சொல்வது சரிதானா?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இதில் தீர்ப்பை எல்லிடத்திலிருந்து எதிர்பார்க்கிறார்களா? (சிரிப்பு).

**திரு. ஆ. நல்லசிவன் :** 5 கோடி தமிழ் மக்கள் உள்ள இந்த நாட்டிலே ஏதோ 69 லட்சம் குழந்தைகளுக்கு உணவு கொடுத்துவிட்டால் மாத்திரம், நாட்டிலுள்ள அனைத்துப் பிரச்சினைகளும் தீர்ந்துவிடும் என்று இந்த அரசு கருதுகிறதா? முக்கியமான அடிப்படைப் பிரச்சினைகள்பற்றிக் குறிப்பிடாமல் இருப்பதால்தான், நான் என்னுடைய கருத்துக்களைக் குறிப்பிடுகிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** 69 லட்சம் குழந்தைகளுக்கும் உணவு கொடுக்க வேண்டாம், கூடாது என்று உறுப்பினர் விரும்புகிறாரா?

**திரு. ஆ. நல்லசிவன் :** நான் அதை ஆதரிக்கிறேன். ஏற்கெனவே நாங்கள் அதற்கு ஆதரவு தெரிவித்திருக்கிறோம்.

(முற்பகல் 10-50)

ஆக மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்க எந்தவித முயற்சியும் எடுக்கவில்லை. அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாததால்தான் இலவச வேட்டி, சேலை, சத்துணவு அளிப்பது என்று செய்துகொண்டிருக்கிறார்கள். பேரவையில் திரு. ஆரைமுருகன் சொன்னதுபோல், இந்த ஆளுநர் உரை என்பது ஒரு சரிகைத் துப்பட்டி போல் தான் இருக்கிறது. உண்மைகளை மறைக்கும் சரிகைத் துப்பட்டியாக இருக்கிறது. மத்திய அரசின் குறைகளையும் மறைக்கிறார்கள், மாநில அரசின் குறைகளையும் மறைக்கிறார்கள். இந்த அறிக்கையில் என்ன சொல்கிறது என்றால், "நாடு பூராவும் சுபிட்சமாக இருக்கிறது, மேலும் சுபிட்சம் ஏற்படப் போகிறது" என்று சொல்லி, மக்கள் படும் கஷ்டங்களை மறைக்கிறார்கள் என்று சொல்லிக் கொள்கிறேன். மத்திய சர்க்காரின் கொள்கைகளை எதிர்த்துப் போராடாமல் இருப்பதன் தேவை இவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, வெள்ள நிவாரணம் நடப்பதைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். மூன்று நாட்களாகத் தொடர்ந்து மழை பெய்யும்போது, தஞ்சை மாவட்டத்தில் ஆறுகளில் நிறையத் தண்ணீர் ஓடியது. அதே நேரத்தில் மேலே தண்ணீரையும் திறந்து விட்டார்கள். மேலும் புதுக்கோட்டை மாவட்டம் தஞ்சை மாவட்டத்தைவிட மேடான பகுதி. அங்கே பெய்த மழைத்





தண்ணீரையும் தஞ்சை மாவட்டத்தை நோக்கி வெட்டி விட்டுவிட்டார்கள். ஏற்கெனவே வறட்சி நிவாரணப் பணி என்று ரோடு ஓரத்தில் இருந்த மண்ணை வெட்டி இலேசாகப் போட்டுவிட்டார்கள். அது இந்த மழையில் உடைத்துக் கொண்டு தஞ்சை மாவட்டம் பூராவும் வெள்ளம் வந்தது. அதைப்பற்றி ஒரு வார்த்தைகூட வெள்ள நிவாரணம் குறித்து வைக்கப்பட்ட அறிக்கையில் சொல்லவில்லை.

இப்படி ஒரு வெள்ளம் வரும்போது, 'மாஸ்டர் பிளான்' போட்டு, இதைச் சரியாகக் கவனிக்க வேண்டாமா? இதனால் தமிழ் நாட்டு மக்கள் பெரிய அளவில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. வெள்ள நிவாரணத்திற்காக குடிசை போட ரூபாய் 210 கொடுக்கப்படுவதாகச் சொல்கிறார்கள். 100 தென்னங்கீற்று 15 ரூபாய் விற்றுக் கொண்டிருந்த காலத்தில் நிவாரணம் 210 ரூபாய் என்று இருந்தது. இப்போது 100 கீற்று 60 ரூபாய்க்கு விற்கிறது. ஆகவே, இந்தத் தொகையை ரூபாய் 500 என்று உயர்த்த வேண்டுமென்று எதிர்க் கட்சிகள் கோரிக்கை வைத்திருக்கின்றன. அதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

(மணியடிக்கப்பட்டது).

இந்த வெள்ள நிவாரணப் பணிகள் சரியாக நடக்கவில்லையென்று யார் சொல்கிறார்கள் தெரியுமா? இந்த ஆட்சிக் கட்சியினர் உறவு வைத்துக் கொள்ளத் துடிக்கும். இந்திரா காங்கிரசார்தான் இப்படி வெள்ள நிவாரண வேலைகள் சரியாக நடக்கவில்லையென்று அறிக்கை விடுகிறார்கள்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அதிலிருந்தே அவர்கள் எதிர்க் கட்சியாகச் செயல்படுகிறார்கள் என்று தெரிகிறது.

**திரு. ஆ. நல்லசிவன் :** காழ்ப்புணர்ச்சியால் சொல்கிறார்கள். பொறுப்பான எதிர்க் கட்சியாக இருந்து சொல்லவில்லை. அதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நிறைய உறுப்பினர்கள் பேச வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். உறுப்பினர் பேசும்போது இந்த அரசைப் பாராட்ட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு வேறு நேரம் அதிகமாகும். அதுதான் என் 'பாயிண்ட்'. (சிரிப்பு).

**திரு. ஆ. நல்லசிவன்:** இந்தக் குற்றச்சாட்டிற்கு இடமில்லாமல் இருந்திருக்க முடியும். எப்படியென்றால், இந்த வெள்ள நிவாரணக் கமிட்டியில் மக்கள் பிரதிநிதிகள், இங்கே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாக இருப்பவர்களை உறுப்பினர்களாகப் போட்டிருந்தால், வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் என்ற பிரச்சினை வந்திருக்காது. The Government are very shy of elected representatives.
ஆக, இந்த சட்டமன்றத்தைத் தவிர வேறு எந்த இடத்திலும் பொதுமக்களின் பிரதிநிதிகளுக்கு இடம் கொடுக்க மாட்டோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். கூட்டுறவு அமைப்புகளானாலும் சரி, பஞ்சாயத்துக்களானாலும் சரி, முனிசிபாலிடிகளானாலும் சரி, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு இடமே இல்லாதபடி செய்து வைத்திருக்கிறார்கள். சட்டசபையைப் பொறுத்த வரையில் இது கட்டாயமாகச் செய்யப்பட வேண்டியிருக்கிறது என்பதால் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இல்லை என்றால் அதையும் செய்யமாட்டார்கள். அப்படித்தான் இருக்க வேண்டுமென்று அரசு விரும்புகிறது. எதற்காக இதையெல்லாம் சொல்லுகிறேன் என்றால், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டு இத்தகைய விநியோகங்களைச் செய்ய வேண்டும். அப்படி ஏன் விநியோகம் செய்யக்கூடாது என்றுதான் கேட்கிறேன்.

அடுத்து, தொழிலாளர் பிரச்சினைபற்றி சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இங்கே மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் இல்லை என்பதால் சிலவற்றை மட்டுமே குறிப்பிட விரும்புகிறேன். அதிகமாக அந்தப் பிரச்சினைக்குள் போக விரும்பவில்லை. உங்களையெல்லாம் ஒரு 'டிஸ்அட்வான்டேஜஸ் பொசிஷனில்' வைக்க விரும்பவில்லை. ஆனால் நான் சொல்வதை நீங்கள் மறுக்க முடியாது. கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசாங்கத்திற்குச் சொந்தமான ரப்பர் தோட்டத்தில் கடந்த 4 மாத காலமாக வேலைநிறுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 3,000 தொழிலாளர்கள் அங்கே வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் கோரிக்கை என்ன? சட்டபூர்வமாக அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பஞ்சப்படி வழங்கப்பட வேண்டும் என்பதுதான். மாண்புமிகு அமைச்சர்களுக்கெல்லாம் இது தெரியும். காரணம் இது அமைச்சரவையின் முடிவுக்கே வந்தது. தனிப்பட்ட அமைச்சகத்தோடு நிற்கவில்லை. சட்டப்படி, அக்ரிமெண்ட்படி அவர்களுக்குத் தரப்பட வேண்டிய பஞ்சப்படி வழங்கப்படவில்லை என்று கோரி அங்கே 3,000 தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் கடந்த 4 மாதகாலமாக ஈடுபட்டிருக்கிறார்கள். இங்கே அரசு 'கன்சர்வேட்டர் ஆப் பாரஸ்ட்'க்கு ஒரு உத்தரவு போட்டிருப்பதன் காரணமாக அவர் சட்டப்படி தரவேண்டிய பஞ்சப்படியைத் தொழிலாளர்களுக்குத் தர மறுத்து வருகிறார். வனத்துறை அமைச்சகமே அப்படி ஒரு உத்தரவைப் போட்டு கன்சர்வேட்டர் ஆப்



பாரஸ்ட்டை பஞ்சப்படி உயர்வைத் தரவேண்டாம் என்று சொல்லியிருக்கிறது. தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் சொல்லிச் சொல்லிப் பார்த்துவிட்டார். ஒன்றும் நடக்கவில்லை. லேபர் கமிஷனர் மூலமாக கன்சர்வேட்டர் ஆப் பாரஸ்ட்டை அவரும் நெருக்கி நெருக்கிப் பார்க்கிறார். வனத்துறை அமைச்சகம் கன்சர்வேட்டர் ஆப் பாரஸ்ட்டுக்கு ஒரு உத்தரவு போடுகிறது. தனிப்பட்ட முதலாளிகள் பஞ்சப்படி உயர்வைக் கொடுக்கவில்லை, ஆகவே நீங்களும் கொடுக்க வேண்டாம் என்று வனத்துறை அமைச்சகம் உத்தரவே போட்டிருக்கிறது. இப்படிப் பேசுவது எவ்வாறு நியாயமாகும் என்றுதான் நான் கேட்கிறேன். இதெல்லாம் இந்த மந்திரி சபைக்குத் தெரியாதா என்றுதான் கேட்கிறேன். இது ஏதோ சாதாரணமான விஷயமல்ல. இந்த மாநிலத்தின் கன்சர்வேட்டர் ஆப் பாரஸ்ட்டுக்கும், லேபர் கமிஷனருக்கும் தகராறை உண்டு பண்ணியிருக்கும் ஒரு விஷயம். சர்க்காருக்கு இதுபற்றி கண்டிப்பாக ரிப்போர்ட்டு வந்திருக்கும். எனவேதான் அரசினுடைய கொள்கை என்ன என்று நான் கேட்கிறேன். தொழிலாளர் நல அரசு என்று இந்த அரசைச் சொல்லிக் கொள்கிறார்களே அதற்கு என்ன அர்த்தம்? அந்தத் தொழிலாளர்கள் ஏதோ புதிதாக எதையும் கேட்கவில்லை. ஏற்கெனவே ஒப்புக்கொண்டிருக்கிற ஒன்றின் அடிப்படையில் அவர்கள் பஞ்சப்படி உயர்வு கேட்கிறார்கள். நான் இங்கே பொறுப்போடு பேசுகிறேன். நான் சொல்லுவதெல்லாம் ரெக்கார்டு செய்யப்படுகிறது. நான் சொல்வது உண்மைக்கு மாறானது என்று சொன்னால் அரசு மறுக்கலாம். அரசுக்கு இன்கன்வீனியன்ட் பேக்ட்களை முழுமையாக விட்டுவிடப் பார்க்கக் கூடாது. ஒரு அரசு இலாகா, தனியார் துறையை மேற்கோள் காட்டி 'நீயும் தொழிலாளர்களுக்குப் பஞ்சப்படி உயர்வு கொடுக்க வேண்டாம்' என்று சொல்லலாமா? தனியார்களைப் பார்த்து நீங்களும் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்த வேண்டிய அரசு இப்படிப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபடலாமா என்றுதான் கேட்கிறேன்.

அடுத்து, பாண்டியராஜபுரத்தில் 300 பேர் வேலை செய்யும் சர்க்கரை ஆலையை அரசு எடுத்துக் கொண்டது. கேட்டால் 300 தொழிலாளர்களுக்கு வேலை போய்விடுமே என்று அதை எடுத்துக் கொண்டோம் என்று சொல்கிறார்களே, 1,100 பேர் வேலை செய்கிற நெல்லிக்குப்பத்தில் அரசு யார் பக்கம் நிற்கிறது? கேட்டால் சட்டப்படிதான் நடந்து கொண்டிருக்கிறோம் என்கிறார்கள். நான் கேட்கிறேன், "நீங்கள் சட்டப்படிதான் நடந்து கொண்டிருக்கிறீர்களா?" பேக்டரிக்குள் சர்க்கரை எடுத்துச் செல்வதற்கான ரெயில்வே வேகனை போலீசைக் கொண்டு தள்ளச் சொல்லியிருக்கிறார்களே, அது நியாயமா? நான் தெளிவாகச் சொல்லுகிறேன். நெல்லிக்குப்பம் பேக்டரிக்

தன் ஒரு டி.எஸ்.பி. தலைமையில் 40 போலீஸ்காரர்களைக் கொண்டு, ரயில்வே வேகனைத் தள்ளிக்கொண்டு போகச் செய்திருக்கிறார்களே, இல்லை என்று சொல்ல முடியுமா? போலீஸ்காரர்களின் வேலை ரயில்வே வேகனைத் தள்ளிக் கொண்டு போவதா? ஒரு டி.எஸ்.பி.யை இதற்காகப் போட்டிருக்கிறார்களே இது நியாயந்தானா? நான் அந்த டி.எஸ்.பி.யின் பெயரைச் சொல்லவும் தயாராக இருக்கிறேன். வில்சன் என்கிற டி.எஸ்.பி. நெல்லிக்குப்பம் ஆலைக்குள் 40 போலீசாரைக் கொண்டு ரயில்வே வேகனைத் தள்ளிக் கொண்டு போகிறார் என்றால், இப்படி வேலை நிறுத்தத்தை உடைக்கும் நடவடிக்கைகளில் போலீசை ஈடுபடுத்துவது நியாயம்தானா என்று கேட்க விரும்புகிறேன். இது தான் போலீசுக்கு வேலையா? இது தேவைதானா? இது ஊர் பூராவும் தெரியும். இங்கே சட்டசபையில் மெஜாரிட்டியை வைத்துக்கொண்டு 'இல்லை' என்று பேசிவிட்டுப் போய் விடலாம். ஆனால் அங்கே இந்தக் காட்சியைப் பார்த்தவர்களுக்கு உண்மை தெரியும்.

அடுத்து, கரூர் டெக்ஸ்டைல் மில்லைப் பொறுத்தவரையில்,

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அதாவது கடைசியாக கரூர் டெக்ஸ்டைல் மில்லைப் பொறுத்தவரையில் . . . .

**திரு. ஆ. நல்லசிவன் :** ஆமாம், தொழிலாளர் பிரச்சினையைப் பொறுத்தவரையில் கடைசியாக, அருப்புக்கோட்டை ஜெயவிலாஸ் முதலாளி கரூர் மில்லை வாங்கியிருக்கிறார். ஏற்கெனவே இருக்கிற கண்டிஷன்களை அமுல் படுத்த மறுக்கிறார் என்று தொழிலாளர்கள் அங்கே போராடினால், அவர் மில்லுக்குள் தன்னுடைய ஆட்களைக் கொண்டு வந்து தொழிலாளர்களை அடிக்கிறார். இதெல்லாம் அரசாங்கத்திற்குத் தெரியாததல்ல. ரிப்போர்ட் வந்திருக்கும். அதன்மீது ஒரு நடவடிக்கையும் இந்த அரசாங்கத்தால் எடுக்கப்படவில்லை. அங்கே இப்போது மறியல் நடக்கிறது. கேட்டால் இல்லை என்று சொல்கிறார்கள். 'ஆர்கனைஸ்டு லேபர்' முழுவதையும் அவர்கள் பல தொழிற்சங்கங்களைச் சார்ந்திருப்பதால் இந்த அரசாலே ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆனால் இப்படிப்பட்ட இடங்களில் போலீசை வைத்து அடிக்கிறார்களே, இது முறையா என்றுதான் கேட்கிறேன். வெளியே வரும்போது அன்ஆர்கனைஸ்டு லேபரைப் பார்த்து, "அவர்களெல்லாம் நிறையச் சம்பளம் வாங்குகிறார்கள், நீங்கள் இப்படிக் கஷ்டப்படுகிறீர்களே" என்று கேட்கிறார்கள். இது நியாயம்தானா? உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்பு





(முற்பகல் 11-00)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் தான் கேட்ட முக்கால் மணி நேரத்தையும் தாண்டிவிட்ட பிறகு மேலும் நேரம் கேட்டால் பிரயோஜனம் இல்லை.

**திரு. ஆ. நல்லசிவன் :** கடைசியாக, மாவட்டங்களைப் பிரிப்பதுபற்றி. மாவட்டங்களைப் பிரிப்பது என்பது நிர்வாகச் சூழலுக்குத் தேவைதான். நாங்கள் இதை முன்பே வரவேற்றிருக்கிறோம். எங்கெங்கே தலைநகரம் அமைய வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். அது மட்டும் போதாது. எவ்வளவு ஜனத்தொகை இருக்க வேண்டும், எவ்வளவு விஸ்தீரணம் இருக்க வேண்டும், எக்கனாமிக் வையபிளிட்டி (economic viability) இருக்குமா என்பதையெல்லாம் தெரிவித்திருக்க வேண்டும். இதற்காக எக்ஸ்பர்ட் பாடியைப் போட்டிருக்கிறார்கள். "அவர்களிடமே தலைநகர் வைப்பது பற்றியும் விட்டுவிடுங்கள்" என்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு பிரச்சினையை மட்டும் அவர்களிடம் விட்டுவிட்டு தலைநகரைப் பற்றி இவர்களே அறிவித்திருப்பதால், ஊர் ஊராக அர்த்தால் நடக்கிறது. தலைநகரம் தங்கள் ஊரிலே வேண்டுமென்று ஒவ்வொருவரும் கேட்கிறார்கள். தலைநகருக்கான 'இன்ஃபிராஸ்ட்ரக்சர்' ஏற்படுத்த வேண்டும். இதற்காக ஏற்கெனவே உள்ள இன்ஃபிராஸ்ட்ரக்சர்களைப் பயன்படுத்த வேண்டும். ஆகவே அரசு பெயரைச் சொல்லி வம்பை விலை கொடுத்து வாங்கிய மாதிரி தெரிகிறது. இது குறித்த எல்லாப் பிரச்சினைகளையும் எக்ஸ்பர்ட் பாடியிடம் விட்டிருந்தால் இந்தப் பிரச்சினையே வராது. தமிழ்நாட்டில் இதனால் ஒவ்வொரு நாளைக்கும் அர்த்தால் நடக்கிறது. ஒரே கட்சியைச் சேர்ந்த இரண்டு எம்.எல்.ஏ.க்களில் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு சாரார் தலைமை தாங்க அழைத்துச் செல்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை இருப்பதால் இதையும் ஏன் எக்ஸ்பர்ட் பாடியிடம் விட்டிருக்கக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன். 'இன்ஃப்ராஸ்ட்ரக்சர்' உட்பட அவர்கள் பார்த்துக்கொள்ளமாட்டார்களா? இவர்கள் ஏன் இதை அறிவித்து வம்பில் ஈடுபடுகிறார்கள்? இப்படி தமிழ்நாட்டில் சாதியின் பெயரால், மதத்தின் பெயரால் கலவரம் செலுத்திக்கொண்டு வந்தால், நாட்டை எப்படி முன்னேற்றுவது? இதையெல்லாம் சரிக்கட்டுவதற்கு "சத்துணவு" என்ற பாப்புலிஸ்ட் சுலோகனைப் பயன்படுத்தலாம் என்று நினைக்கிறார்கள். இது ரொம்ப நாளைக்குக் காப்பாற்றாது. தமிழ்நாட்டில் நல்ல நிலைமை ஏற்பட அரசு தன்னுடைய போக்கை மாற்றிக்கொள்ள வேண்டும். மத்திய அரசினுடைய கொள்கை மாநில அரசுக்குப் பாதகமாக இருக்கிறது என்று போராட பகிரங்கமாக எங்களோடு வர வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன்.

[1984 பிப்ரவரி 20

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எனது கருத்துக்களை எடுத்து வைக்க விழைகின்றேன்.

ஒவ்வொரு வருடமும் ஆளுநர் உரையின் மூலம், ஆளுகின்ற கட்சி அந்த ஆண்டு மேற்கொள்ளவிருக்கின்ற அரிய திட்டங்கள், ஒவ்வொரு பிரச்சினையில் அணுகுகிற முறை ஆகியவற்றை நாட்டிற்கு அறிவிப்பது இயல்பு. அதில் பாராட்ட வேண்டியதைப் பாராட்டி, எடுத்து வைக்க வேண்டிய கருத்துக்களை எடுத்து வைத்து, அவர்களை எந்தத் திசையில் எடுத்துச் செல்ல வேண்டுமோ அந்த அளவிற்குச் செய்வதுதான் இந்த இரண்டு அவையிலும் இருக்கக் கூடிய கட்சிப் பிரதிநிதிகளுடைய கடமை.

ஆளும் கட்சியின் கொறடா திரு. ஜேப்பியார் அவர்கள் "எங்களையெல்லாம் பாராட்ட மனம் இல்லையா?" என்று பரிதாபத்தோடு கேட்டார்கள். நானும் பாராட்ட வேண்டுமென்ற எண்ணத்தோடு நுணுகி ஆராய்ந்து படித்துப் பார்த்தேன். அந்த நிலையிலே நான் பாராட்ட முற்படுகிறேன். பாராட்டுவது என்பது, ஆதாரத்தில் உண்மையான குறைகளை எடுத்துச் சொல்லி அந்தக் குறைகளை நிவர்த்தி செய்து நிறைவாக இந்த நாட்டு மக்கள் பயன் அடையக் கூடிய நிலைக்கு வழிகாட்டுவதுதான் உண்மையான பாராட்டு. அரசு அறிவிக்கக்கூடிய எல்லாவற்றையும் "உயர்ந்தது" "உயர்ந்தது" என்று சொல்லிக் கொண்டிருப்பது என்பது அந்தத் திட்டங்களைத் தோல்வி அடையச் செய்கிற முயற்சியாகும். அந்த நிலையில் எனக்கு முன்னால் மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். அந்தப் பாதையில் நானும் பாராட்டுவது அரசுக்கு உதவி செய்வதாக அமையும் என்று கருதுகிறேன். "நீங்கள் எதிர்பார்க்கிற முறையில் ஒரு திட்டத்தை அறிவித்த உடனே அது உயர்ந்த திட்டம், உத்தமமான திட்டம் என்று சொல்லிவிட்டு அதில் வருகிற குறைகள், நிறைகள் பற்றிச் சொல்லாமல் நாங்கள் விட்டுவிடுவோம் என்றால், உங்களுக்கு தவறுவதற்கு நிறைய வாய்ப்புக்களை வைத்து விடுவோம்" என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

வீட்டிலே இருந்து வெளியே செல்கிற அருமை மகன், இதுவரை சென்னை நகர் செல்லாதவன், ஏதோ கல்லூரியில் சேரவோ, அல்லது தொழிலையோ தேடிச் செல்கிறவனுக்கு அன்புள்ள தாய், தந்தையர்கள், உறவினர்கள் இருந்தால், இப்படிப் போ, இந்த இடத்தில் உணவு சாப்பிட்டுக் கொள், இந்த



1984 பிப்ரவரி 20] [திரு. ம. சங்கரலிங்கம்]

ரயில்வே ஸ்டேஷனில் கொஞ்ச நேரம் நிற்கும், ரொம்ப நேரம் நிற்காது, எந்த நேரமும் உலாவி விடப் போய்விடாதே—இந்த இடத்திலே தண்ணீரைப் போடுவார்கள் ரயிலில் (நான் சொல்வது வாட்டர்) என்று எல்லாம் சொல்வார்கள். ஆகவே அந்த நிலையிலே சொல்வதைப் போல் கருதிக் கொள்ள வேண்டுமென்று நான் நினைக்கிறேன்.

நான் இதிலுள்ள சிக்கல்களை ஒவ்வொன்றாகச் சொல்லுவதற்கு முன்னால் அரசு ஊழியர்கள் சார்பில் இதுவரை கேட்டுக்கொண்டிருந்த கோரிக்கை, ஓய்வு பெறுகிறபோது ரூ. 10 ஆயிரம் தரவேண்டுமென்ற கோரிக்கை. அதை ஆளுநர் உரையிலே எடுத்துச் சுட்டிக்காட்டி, அந்தக் கோரிக்கையை நாங்கள் நிறைவேற்றி இருக்கிறோமென்று சொன்னார்கள். அதை உண்மையிலேயே நிறைவேற்றி இருந்தால் பாராட்டப்பட வேண்டியது தான். அது எப்படி என்று ஆராய்ந்து பார்த்தபோது, ஓய்வு பெறுகிறபோது ஒருவருக்கு ரூபாய் 5 ஆயிரம் கொடுக்கிறார்கள். ஆகவே 5 ஆயிரம் ரூபாய் திட்டம் என்று நாங்கள் சொல்லலாம். "இல்லை, 10 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறோமே, 10 ஆயிரம் ரூபாய் திட்டம் என்று சொன்னால் என்ன, மன வளத்தைக் காட்டுகிறதல்லவா" என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு ஆராய்ச்சி செய்து பார்த்தேன். ஒரு வேளை அரசு 10 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறதா என்று. அரசே என்ன சொல்லியிருக்கிறதென்றால், "இப்பொழுது மாதம் 20 ரூபாய் கட்ட வேண்டும். 7 லட்சம் அரசு ஊழியர்கள் இருக்கிறார்கள். அவர்கள் வட்டியோடு சேர்ந்து 5 ஆயிரம் ரூபாய் வரை சேர்ந்த பிறகு நிறுத்திக்கொள்ள வேண்டும். அப்படி 12 ஆண்டுகள் அவர்கள் 20 ரூபாய் வீதம் கட்டினால், நின்றுவிடும். அதற்குப் பிறகு ஓய்வு பெறுகிறபோது அவர்கள் கட்டிய 5 ஆயிரம் ரூபாயும், அரசு சார்பில் 5 ஆயிரம் ரூபாயும் சேர்த்து 10 ஆயிரம் ரூபாய் தருவார்கள். அதனால் தான் 5 ஆயிரம் ரூபாய் திட்டம் என்று சொன்னோமே தவிர, 10 ஆயிரம் ரூபாய் திட்டத்தைக் குறைத்து மதிப்பிட வேண்டும் என்பது எங்கள் எண்ணம் அல்ல. ஆனால் அதற்குப் பிறகு பார்த்தால், ஒருவேளை இப்போது ஓய்வு பெறுகிறவர்கள், அவர்கள் கட்டியது போக அவர்கள் 5 ஆயிரம் ரூபாய் தருகிறார்கள். ஏப்ரலில் ஓய்வு பெறுகிறவர் ஒரு மாதம் கட்டியிருப்பார். அந்த 20 ரூபாயும், 5 ஆயிரம் ரூபாயும் கொடுப்பார்கள். ஒருவர் ஒரு வருஷத்திற்குப் பிறகு ஓய்வு பெறுகிறார் என்றால், அவர் ரூபாய் 240 கட்டி இருப்பார். அதற்குள்ள வட்டியும், 5 ஆயிரம் ரூபாயும் கொடுப்பார்கள். ஆகவே இன்னொரு 5 ஆண்டுகளில் அல்லது 7 ஆண்டுகள் அல்லது ஒரு 10 ஆண்டுகள் பணியில் இருக்கிறவர்கள் ஓய்வு பெறுகிறபோது, நீங்கள் கொடுக்கிற திட்டத்திற்கு '5 ஆயிரம் ரூபாய் திட்டம்' என்று கூறுகிறோம். இப்போது ஒருவர் பணியிலே சேர்ந்து 5 ஆண்டு ஆகிறது என்று

வைத்துக் கொள்வோம். அவர்கள் 58 வயது வரையில் வேலை பார்க்கலாம். 24 வயதில் அவர் வேலையில் சேர்ந்து இருக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அவர் 58 வயதில் 34 வருடம் வேலை பார்க்கலாம். இப்போது அவர் 4 வருடம் வேலை பார்த்திருக்கிறார். இப்போது 20 ரூபாய் திட்டத்தில் சேருகிறார். 12 ஆண்டுகளில் இந்தத் திட்டத்தில் பணம் கட்டி முடித்து விடுவார். அதற்குப் பிறகு 5 ஆயிரம் ரூபாய்க்கு 10 ஆண்டு கழித்து—பாங்கே 10 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறது. ஸ்டேட் கோவாபரேட்டிவ் பாங்கு உள்பட, மதுரா பாங்கிலிருந்து, சாதாரண ஷெட்யூல்டு பாங்குகள் உள்பட இந்தத் தொகையை அளிக்கிறது. இந்தத் திட்டங்களை பெரிய பாங்குகள் வரை அறிவிக்கிறது.

மாதந்தோறும் ஒரு 500 ரூபாய் கட்டு. மாதந்தோறும் ஒரு குலுக்கல் அதிலே ஒரு துண்டு கிடைத்தது என்றால் ரூபாயே கட்ட வேண்டாம். ஒன்றுமே துண்டு கிடைக்காவிட்டாலும், 10 வருடம் கழித்து 500 ரூபாய்க்கு ஆயிரம் ரூபாய் தருகிறோம். ஆயிரம் ரூபாய்க்கு 2 ஆயிரம் ரூபாய் தருகிறோம். குழந்தை பிறந்த உடனே ஒரு ஆயிரம் ரூபாய் கட்டு. 20 வருஷம் கழித்து 20 ஆயிரம் ரூபாய் தருகிறோம்". இப்படி திட்டங்கள் இருக்கின்றன. ஒருவர் தன்னுடைய குழந்தை படிப்பதற்கு ஒரு திட்டத்தைப் போடலாம். இந்தத் திட்டத்தை எல்லாம் வைத்து ஒப்பிடுகிறபோது 12 வருஷம் கழித்து 5 ஆயிரம் ரூபாய்க்கு அவன் பணியிலே இருக்கிறபோது, 10 ஆயிரம் ரூபாய் தன்னாலே ஆகிவிடும். அந்த 10 ஆயிரம் ரூபாய் இன்னொரு 10 வருஷம் ஆகிற போது இன்னொரு 10 ஆயிரம் ஆகிவிடும். ஆக 30 வருஷம் பணியில் அவனுக்கான 20 ஆயிரம் ரூபாயிலிருந்து 15 ஆயிரம் ரூபாயை பிடுங்கிவிட்டு, அரசாங்கம் சொன்னதை வைத்து வெளியிலே—பாங்கு கொடுக்கிற திட்டத்தையெல்லாம் வைத்து நாங்கள் ஆராய்ச்சி செய்த பிறகு, எங்களுக்கு விஷயம் புரிந்துவிட்டது, என்பதைச் சொல்கிறோம்.

(முற்பகல் 11-10)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

நாங்கள் எங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்கின்றபோது, நாங்கள் அரசை பாராட்டவில்லை, குறைகள் சொல்கிறோம் என்றுதான் நினைக்கிறார்கள். அது எங்களுடைய குறையல்ல. அது அரசினுடைய திட்டத்தில் இருக்கின்ற குறைதான். திட்டங்களைத் தெளிவாகச் சொல்லுங்கள். பிராவிடண்ட் பண்ட் போல் பார்க்க வேண்டும். ஏழு லட்சம் அரசு ஊழியர்கள், மாதம் ஒன்றுக்கு ஒருவர் ரூபாய் 20 வீதம் கட்டுகின்றார்கள் என்றால், முதல் மாதத்தில் ரூபாய் 14 லட்சம் வந்துவிடும். அதாவது 7 லட்சம் பேர்கள் கட்டினால்,





ரூபாய் 14 லட்சம் முதல் மாதமே வந்துவிடும். அதற்கு வட்டியாக ரூபாய் 1,40,000 கிடைக்கின்றது, முதல் வருடம், இதில் ஓய்வு பெறுகின்றவர்கள் 10 ஆயிரம் பேர்கள். அதே நேரத்தில், 3 ஆண்டு, 5 ஆண்டு 10 ஆண்டுகள் கழித்து இந்த முறையில் அரசுக்கு வந்து சேர்கின்ற ரூபாய்க்கு கணக்கு வழக்கு கிடையாது. இதை நாம் கொண்டு வரலாம். ஒரு பிராவிடண்ட் பண்ட் போன்று வைத்துக்கொள்ளலாம். முதல் ஒரு ஆண்டு ஓய்வு பெறுகின்றவர்கள் எண்ணிக்கை 10 ஆயிரம் பேர்கள். இரண்டாம் ஆண்டு ஓய்வு பெறுகின்றவர்கள் எண்ணிக்கை 10 ஆயிரம் பேர்கள், மூன்றாம் ஆண்டு ஓய்வு பெறுகின்றவர்கள் எண்ணிக்கை 10 ஆயிரம் பேர்கள் இருக்கும். பிராவிடண்ட் பண்ட் போல இந்த திட்டத்தைக் கொண்டு வரவேண்டும். இதிலே நான் இன்னொன்று சொல்கின்றேன். இதை பிராவிடண்ட் பண்ட் மாதிரி செய்யும்போது, அரசு ஊழியர்கள் ரூபாய் 20 வீதம், 12 வருடம் கட்டி முடித்த பிறகு, அவர்கள் அக்கவுண்டிலே பணம் போட்டால் போதும். அது ரூபாய் 20 ஆயிரம் ஆகட்டும், ரூபாய் 30 ஆயிரம் ஆகட்டும், அதிலே உள்ள பணத்தை அவனுக்கே கொடுத்துவிட வேண்டும். அதன் பிறகு அரசு கொடுக்கின்ற ரூபாய் 2 ஆயிரத்தைக் கொடுக்கட்டும். அரசு ஊழியர்கள் சார்பிலே, இந்த அரசினுடைய நேர்மையான உள்ளத்திற்கு நான் வேண்டுகோள் விடுக்கிறேன். அரசு ஊழியர்களுடைய பணத்திலே இருந்து கொடுப்பதாக அறிவிக்க வேண்டும். அரசு ஊழியர்கள் 5 ஆண்டு அல்லது 12 ஆண்டுகள் இந்தப் பணத்தைக் கட்டிய பிறகு, அதிலே இருந்து வரக்கூடிய திட்டத்தையெல்லாம் அரசு ஊழியர்கள் வளர்ச்சித் திட்டம் என்று சொல்லி, அந்தத் தொகை எவ்வளவு என்று என்பதை இந்த நாட்டிற்கு அறிவித்து, அவர்கள் சார்பிலே அந்த வளர்ச்சித் திட்டத்திலே கொண்டுபோய் சேர்க்கிறோம் என்று சொல்லலாம். நாணயம் இருந்தால், நேர்மை இருந்தால், இந்த நாட்டு மக்கள் மீது நம்பிக்கை இருந்தால், அதைத் தெளிவாக அறிவிக்க வேண்டும். இல்லாவிட்டால் அவர்களுடைய பணத்தை அவர்களுக்கே கொடுக்க வேண்டும். அவர்களுடைய பணம் ரூபாய் 5 ஆயிரம் கட்டிய பிறகு, அதிலேயிருந்து வரக்கூடிய ரூபாய் 25 ஆயிரம், ரூபாய் 30 ஆயிரம் என்று இருப்பதில் அரசு கொஞ்சம் எடுத்துக்கொண்டு கடைசியிலே கொடுக்கப் போகிறோம் என்று சொல்வது சரியாகத் தெரியவில்லை, இப்போது ஓய்வு பெறப் போகின்றவர்களுக்கு, 5 வருடத்திலே, 10 வருடத்திலே அதற்கு இடையிலே ஓய்வு பெறப் போகின்றவர்களுக்கு அது வேண்டுமானால் நல்ல திட்டமாக இருக்கும். மற்ற ஆட்களுடைய பணத்தை எல்லாம் * * * என்று சொன்னால், அது ரொம்பத் தாக் குறைவாக இருக்கும். அப்படி நான் சொல்லவில்லை. அது இந்த அவையின் குறிப்பிலே இருக்க வேண்டாம்.

D 2 C 117—7

பிராவிடண்ட் பண்ட் மாதிரி தெளிவாகச் சொல்லவில்லை. அந்தந்த நபர்களுடைய அக்கவுண்ட்டிலே கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டும். அந்தப் பணம் அங்கே இருக்குமானால், அதிலிருந்து வட்டியாக வந்த பணம். அதனால் பிறகு ஆகின்ற பணம் எல்லாம் அரசு ஊழியர்களுக்கே சொந்தம் என்று ஆக வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் * * * என்று இந்த அவையிலே சொன்னது அவைக்குறிப்பிலே இருக்கவேண்டாம் என்று சொன்ன காரணத்தினாலே, அந்த வார்த்தைகள் குறிப்பில் இருந்து நீக்கப்படுகின்றன.

**திரு. ம. சங்கரலிங்கம் :** துணைத் தலைவர் அவர்களே, நான் இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், அரசு அந்தத் திட்டத்தை அறிவித்திருக்கின்றது. அதற்கு என்ற ஒரு ஜி. ஓ. போட வேண்டும். அப்படி ஜி. ஓ. போடும்போது, அது ஒரு பிராவிடண்ட் பண்ட் ஸ்கீம் மாதிரி இருக்க வேண்டுமே தவிர, அந்தப் பணம் அவர்களுக்குச் சொந்தமானது. அதிலே வரக்கூடிய லாபம், அதிலே வரக்கூடிய வருமானம் அதிலே வரக்கூடிய பெருக்கம் சேர்த்து அவர்கள் ஓய்வு பெறும்போது கொடுக்க வேண்டும். அதற்கு மேல் வேண்டுமானால் ரூபாய் 5,000 கொடுங்கள். அரசு கொடுப்பதைக் கொடுக்காவிட்டாலும், அவர்கள் பணத்தையாவது கொடுத்தால் போதுமானது என்று சொல்கின்றேன். முதல் பத்து வருடத்திற்குள் ஓய்வு பெறுபவர்களுக்குக் கொடுக்கலாம். அதற்குப் பிறகு ஒன்றுமே அரசிலிருந்து கொடுக்க வேண்டாம். அவர்கள் பணத்தையே அவர்களிடம் கொடுத்தால் போதும் என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் ஒரு நல்ல திட்டத்தைக் கொண்டு வந்திருக்கின்றபோது, அதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதிலே இது இன்னொரு திட்டம். இதிலே உள்ள குறையை எடுத்துச் சொல்லிவிட்டேன். திருத்தி விடுவார்கள் என்று கருதுகிறேன். அதிலே எனக்கு நம்பிக்கை இருக்கிறது. யாரோ சொன்ன கணக்கிலே சொல்கின்றார்கள். அவர்கள் தப்பாகச் சொல்லியிருக்கின்றார்கள் என்று நினைக்கிறேன். இப்போது நான் தெளிவுபடுத்திய பிறகு உறுப்பினர்களுக்கும் தெளிவு பிறந்திருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



இன்னொன்று. வீட்டிற்கு ஒருவருக்கு வேலை கொடுக்கும் திட்டம். முதலில் ஒருவருக்கு. பிறகு இரண்டு பேர்களுக்கு. பிறகு அவ்வளவு பேர்களுக்கும் கொடுக்க வேண்டும். இந்த நாட்டிலே பிறந்த அவ்வளவு பேர்களுக்கும் வேலை கொடுக்க வேண்டும். அதிலே வேலையே இல்லாத குடும்பத்திலே இருக்கக்கூடியவருக்கு, வீட்டிற்கு ஒரு ஆளுக்கு வேலை கொடுக்கின்ற திட்டம். எங்களுக்கு இந்த வீட்டைப் பற்றியோ, நாட்டைப் பற்றியோ கவலையில்லை என்பதில்லை. இதை அரசு இரண்டு மூன்று ஆண்டுகளாகவே சொல்லிக்கொண்டிருக்கிறது. வேலை கொடுக்கிறோம், வேலை கொடுக்கிறோம் என்று சொல்கின்றார்கள். எங்கே கொடுக்கிறார்கள், எவ்வளவு பேர்களுக்குக் கொடுத்திருக்கின்றார்கள் என்று எங்களால் கண்டு பிடிக்க முடியவில்லை. வேலை கொடுத்திருக்கின்றார்களா என்று நான் தேடித் தேடிப் பார்க்கிறேன். இப்போது 118 லட்சம் குடும்பக் கார்டுகள் கொடுத்திருக்கின்றார்கள். 118 லட்சம் வீடுகள் என்று வைத்துக்கொண்டால், அதிலே நம்முடைய அரசு புள்ளிவிவரப்படி, 56 சதவிகிதம் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்றார்கள். அப்படி என்றால், சுமார் 60 லட்சம் பேர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும். அப்படியானால், இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் எத்தனை பேர்களுக்குக் கொடுத்தார்கள் ? முந்தைய ஆண்டில் எத்தனை பேர்களுக்குக் கொடுத்தார்கள் ? இந்த ஆண்டில் எத்தனை பேர்களுக்குக் கொடுத்தார்கள் ? எத்தனை ஆண்டுகளுக்குள்ளே இந்த 60 லட்சம் பேர்களுக்கும் கொடுத்து முடிப்பார்கள் ? இதற்கெல்லாம் வரையறை வேண்டாமா? அதை எங்கே சொல்லியிருக்கின்றார்கள் ? அதைப்பற்றிச் சொல்வதென்றால், மாநில சர்க்கார் வெளியிட்ட திட்டங்கள் ரிப்போர்ட்டைப் பார்த்தால், 11 வது பிரிவில் மிகத் தெளிவாகவே சொல்லியிருக்கின்றார்கள். அகில இந்திய அளவிலே வேலையில்லாத் திண்டாட்டம், தமிழ் நாட்டைப் பொறுத்த வரையிலும் அதிகமாக இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் புள்ளி விவரங்களை அரசு வெளியிடுகிறது. அந்த அறிக்கை எல்லாம் கொடுத்த பிறகு, ஏதாவது வேலை கொடுத்திருக்கிறதா என்று பார்த்தால், யாருக்கும் கொடுத்ததாகத் தெரியவில்லை.

[திரு. ம. சங்காலிங்கம்] [1984 பிப்ரவரி 20

பத்தாயிரம் போலீஸ்காரர்களைத் தேர்வு செய்தார்கள். வேலை கொடுக்க வில்லை. அதிலாவது கொடுத்திருந்தால், பத்தாயிரம் குடும்பங்களுக்கு வேலை கொடுத்ததாக ஆகும். அவர்கள் அலைந்தது சென்னை வந்தது, எம்.எல்.ஏ. பின்னால் வந்தது, கடைசியில் ஏமாந்தது இன்னும் என்னவெல்லாமோ செய்தது எல்லாம் அடங்கியிருக்கிறது. இப்போது மறுதேர்வு ஆரம்பமாகியிருக்கிறது.

1,500 பட்டதாரிகளுக்கு புள்ளிவிவர இலாகாவில் வேலை கொடுக்கப் போகிறோம் என்று அறிவித்து, தேர்வெல்லாம் நடந்து, அதில் பல பேருக்குப் பல வழிபாடுகள் எல்லாம் முடிந்ததற்குப் பின்னாலே, இன்று வரையில் வேலை கிடைக்கவில்லை.

தமிழ் நாட்டிலிருந்த கிராம அதிகாரிகளை எல்லாம் ஒரே நாளில் ஒழித்துவிட்டார்கள். அதை நிறைவு செய்வதற்காக மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் கொடுத்து, அவர் ஒரு 'லிஸ்ட்' வாங்கினார். அவர் தேர்வு செய்தவுடனேயே அவர்கள் தேர்வு செய்த பட்டியல் எல்லாம் அகற்றப் பட்டு விட்டது. ஏனென்றால் நம்முடைய அமைச்சரவைக்கு, வழிபாடு கூடிப் போயிற்று, எனவே தவறு வந்துவிடும் என்று நம்பியது. எனவே தேர்வாணைக் குழு மூலம்தான் தேர்வு நடக்கும் என்று அறிவித்தார்கள். மாவட்டந்தோறும் ஒவ்வொரு ஆளை அனுப்பி, அந்தந்த மாவட்டத்தில் 'இன்டர்வியூ' நடந்து இரண்டு மூன்று ஆண்டுகள் ஆயிற்று. அதுவும் என்ன ஆயிற்று என்று தெரிய வில்லை. அவர்கள் அலைந்ததுதான் மிச்சம். தேர்வாணைக் குழு அது உலகத்தில்தான் இருக்கிறது. 'லிஸ்ட்' என்று நாங்கள் எல்லாம் சொன்னால், நாட்டு மக்கள் நம்பத் தயாராக இல்லை. 'லிஸ்ட்' அமைச்சர்களிடம் இருக்கிறது என்று சொல்கிறார்கள். இவ்வாறு இவர்களுக்கும் வேலை கொடுக்க வில்லை. வேலை கொடுக்கிற வாய்ப்பு இருக்கிற இடங்களில் எல்லாம் தேர்வு நடத்தி, நேர்முகத் தேர்வுகளையெல்லாம் நடத்திவிட்டு, இன்னும் யாருக்கும் வேலை தரவில்லை. நாட்டு மக்கள் எல்லாம் பணத்தைச் செலவழித்ததுதான் மிச்சம். இந்நிலையில் திரும்ப வேலை கொடுக்கப் போகிறோம் என்று சொன்னால், அதை நம்ப வேண்டுமென்று சொன்னால், நாங்கள் நம்புகிறோம். ஆனால் பாராட்ட முடியாது. ஆகவே, நீங்கள் முதலிலே சொன்ன மாதிரி இவையெல்லாம் கொடுத்திருந்தால், பரவாயில்லை.



1984 பிப்ரவரி 20] [திரு. ம. சங்கரலிங்கம்]

நேற்று (19—2—1984) கூட பதவி இழந்த கிராம அதிகாரிகளுடைய கூட்டமைப்பின் சார்பில் ஒரு அவசரக் கூட்டம் போட்டு, "ஒவ்வொருவரும் 350 ரூபாய் உடன் அவசியம் எடுத்து வரவும், நடராசன், செயலாளர்" என்று கடிதம் எழுதியிருக்கிறார். 350 ரூபாய் கொண்டு வந்து அவர்களைப் பார்த்ததும் அங்கே * * * சமூக விரோத சக்திகள் எல்லாம் இந்த இடத்தில் புகுந்து விளையாடுவதற்கு ஏன் வாய்ப்புக் கொடுக்க வேண்டும்?

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: 350 ரூபாய் என்று சொன்னார்களே, அது என்னவென்று விளக்க முடியுமா?

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, பதவியிழந்த தமிழ்நாடு கிராம அதிகாரிகளுடைய கூட்டமைப்பின் சார்பில் ஒரு அவசரக் கூட்டம் போட்டு "ரூபாய் 350-ம் உடன் அவசியமாக எடுத்து வரவும் —இங்கனம் க. நடராசன், செயலாளர்" என்ற கடிதம். அதில் 19—2—1984 அன்று காலை 10 மணி அளவில் கள்ளக் குறிச்சியில் அந்தக் கூட்டம் கூடும் என்று போட்டிருக்கிறார். அதில் "எஸ்.எஸ்.எல்.சி. புத்தக முதல் பக்கம், எத்தனை தடவை எழுதியிருந்தாலும் அதனுடைய மதிப்பெண் பட்டியலின் உண்மை நகல், சங்க நலநிதி ரூபாய் 300-00ம் உடன் அவசியமாக எடுத்து வரவும்" என்று அச்சிடப்பட்டிருக்கிறது. * * *

ஆக இப்படி நம் பெயரை எல்லாம் சொல்லி, துஷ்பிரயோகம் பண்ணுவதற்கு ஓர் அரிய வாய்ப்பை ஏன் கொடுக்க வேண்டும்?

இப்படி எல்லாம் இருக்கிறபோது வீட்டுக்கு ஒருவருக்கு வேலை வாய்ப்புத் திட்டம் என்று சொல்லியிருப்பதைப் பாராட்ட முடியவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

அடுத்து, அரசு சத்துணவுத் திட்டத்தை அமுல்படுத்துகிறது. அதைப் பாராட்டுகிறோம். சத்துணவுத் திட்டம் வேண்டாமென்று யாராவது சொல்லுவார்களா? சத்துணவு கொடுக்கும்போது, அதை நன்றாகக் கொடுக்க வேண்டுமென்றுதான் நாங்களும் கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். இது அற்புதமான திட்டம், நாங்கள்தான் கண்டுபிடித்தோம் என்று சொல்லும்போது "இது முந்தியே இருந்தது, நண்பகல் உணவுத் திட்டமாக இருந்தது, இப்போது சத்துணவுத் திட்டமாக ஆக்கியிருக்கிறீர்கள்" என்று சொல்லுகிறோம்.

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இப்போது பேசுவது பற்றி நான் குறிப்பிட வில்லை. கொஞ்ச நேரத்திற்கு முன்பு ஒரு சங்கத்தின் சார்பாகப் பணம் வசூலிக்க ஏற்பாடு ஆகியிருக்கிறது. அந்த வாய்ப்பைத் தாவேண்டாமென்று அவர்கள் பேசுகிறபோது, அதிலே உள்ள ஒருவர் * * *

சொன்னதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். வெளியே உள்ள ஒருவர் மீது குற்றச்சாட்டு சுமத்துவது நம்முடைய அவைக்கு மரபல்ல. இங்கேயே இருந்தால் பதில் சொல்ல முடியும். * * *

என்று சொன்னதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அது நம்முடைய அவைக் குறிப்பிலே இருப்பது முறையாகாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** நான் யாரைப் பற்றியும் தனிப்பட்ட முறையில் பேசவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலை நாட்டிலே நிலவுகிறது என்றுதான் சொன்னேன். இதையெல்லாம் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்றுதான் சொன்னேனே தவிர, வேறு ஒன்றுமில்லை. யாரையும் குறிப்பிட்டு மாசுக் குறை சொல்ல வேண்டுமென்ற எண்ணமில்லை அவர்கள் எல்லாம் நம்மைக் களங்கப்படுத்த வாய்ப்பு தரக்கூடாதென்றுதான் சொன்னேன். இதில் தாங்கள் எந்த முடிவு சொன்னாலும், அதை ஏற்றுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது சொன்னது சரி. அந்த வாய்ப்பைத் தரக்கூடாது என்பது வேறு. * * * என்று ஒரு வாக்கியம் சொன்னார்கள். அது அவைக் குறிப்பிலே இருப்பது முறையாகாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவைக் குறிப்பைப் பார்த்து இதுபற்றி முடிவு செய்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** அரசு, இப்போது சத்துணவுத் திட்டத்தை அமுல் நடத்துகிறது. 68 லட்சம் குழந்தைகள் அதனால் பலன் பெறுகிறார்கள். உண்மையிலேயே அதை நான் பாராட்டுகிறேன். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் அனுமதியோடு திருநெல்வேலி மாவட்டம் பற்றி 1961-லே அரசு வெளியிட்ட குறிப்பு ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். 1961லே அன்று இருந்த அரசு அதை வெளியிட்டிருக்கிறது. அப்போது தமிழ் நாட்டில் 12 மாவட்டங்கள் இருந்தன. ஒவ்வொரு மாவட்டத்திலும் என்ன என்ன ஆக்கபூர்வமான

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.





செய்திருக்கிறோமென்று போட்டிருக்கிறார்கள். அதிலே, 'திருநெல்வேலி— அரசு சாதனை' என்று போட்டு, பக்கம் 97-ல் வெளியிட்டிருக்கிறார்கள். அதிலே திருநெல்வேலி மாவட்டம் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்லும்போது, நண்பகல் உணவுத் திட்டம் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் அமலாக்கப் பட்டது; மாவட்டத்தில் தற்போது 2,826 பள்ளிகளில் இலவச நண்பகல் உணவு அளிக்கப்படுகிறது; 1.19 லட்சம் குழந்தைகள் இந்தத் திட்டத்தால் பயன் பெறுகிறார்கள். அரசாங்கம் மானிய உதவி என்ற அடிப்படையிலே இந்தத் திட்டத்திற்கு 38 லட்சம் ரூபாய்க்கு மேல் உதவி அளிக்கப்பட்டிருக்கிறது; தனியார் கொடுத்தது 18 லட்சம் ரூபாய் என்று சொல்லியிருக்கிறார்கள். 1961-லே, சுமார் 23 ஆண்டுகளுக்கு முன்னால் அந்த மாவட்டத்தில் 1.19 லட்சம் குழந்தைகள் பயனடைந்திருக்கிறார்கள். அப்படியென்றால் 12 மாவட்டங்களில் கிட்டத்தட்ட 15 லட்சம் குழந்தைகள் நண்பகல் உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். அன்று 6 கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறார்கள். அதை இப்போது விரிவாக்கியிருக்கிறார்கள். அது 100 கோடியாக, 112 கோடி ரூபாயாகியிருக்கிறது. குழந்தைகள் தொகை 68 லட்சமாக உயர்ந்திருக்கிறது. இப்போது ஜனத்தொகை 4 மடங்காகியிருக்கிறது. அதைப்போல அதுவும் உயர்ந்திருக்கிறது. எனவே இதை, புதிய திட்டம், ஒருவரும் கண்டுபிடிக்காத திட்டம் என்று சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம். எந்தத் திட்டத்தை யார் தொடங்கினாலும் அது முழு உரு பெறுவதற்கு, முழு வடிவம் பெறுவதற்கு, நன்மை அளிப்பதற்கு நாம் உதவி செய்ய வேண்டும். அந்த வகையில் அதை உருவாக்கியிருக்கிறார்கள் என்பதற்காக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இது அற்புதமான திட்டம், இதனால் குழந்தைகள் எடை கூடிவிட்டது என்கிறார்கள். சாப்பிடாமலே வளரும் குழந்தைகள் எடை கூடத்தான் செய்யும். ஒரு நேரம் சாப்பிடும் குழந்தையும் அப்படித்தான் இருக்கும்; 3 வேளை சாப்பிடும் குழந்தையும் அப்படித்தான் இருக்கும். இது கொஞ்சம் வேகமாக வளரும். எனவே இவைகளையெல்லாம் சொல்லி, திசை திருப்பி, நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளும் நிலைக்கு நாம் ஆளாகக் கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன். இதனால் அரசு செய்யும் திட்டத்தை நான் குறைத்து மதிப்பிடுகிறேன் என்று தவறாக நினைக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அரசு போக்குவரத்து நிறுவனங்கள் பற்றி ஆளுநர் அவர்கள் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் பேசுகிறபோது இந்தியாவிலே இருக்கிற எல்லா மாநிலங்களிலும் நமது மாநிலப் போக்குவரத்துத் துறைதான் மிகச் சிறப்பாக நடத்தி வருகிறதென்று சொன்னார்கள்.

ரும் கலந்து கொண்ட ஒரு கூட்டத்தில் தமிழ்நாடு போக்குவரத்துத் துறை, குறிப்பாக திருவள்ளுவர் லாங் சர்வீஸ் மிகச் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது, ஒரு தடவை அதில் பயணம் செய்ய வேண்டுமென்பதற்காகவே சிலர் அதில் ஏறுகிறார்கள் என்று நான் மிகவும் சிறப்பாகப் பாராட்டியிருக்கிறேன். ஆக, இதில் யாருக்கும் கருத்துமாறுபாடு இல்லை. ஆளுநர் உரையில்கூட மத்திய திட்டக் குழு இதனைப் பாராட்டியிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்படி எல்லாம் பாராட்டக் காரணம் அது தேசியமயமாக்கப்பட்டதன் விளைவுதான். இந்தியாவிலேயே இவ்வளவு சிறப்பாக வேறு எந்த பஸ் சர்வீசும் நடைபெறவில்லை என்று எல்லோருடைய பாராட்டுக்களையும் பெற்றிருக்கிறோம். தேசியமயமாக்கப்பட்டு அது நல்ல முறையில் இப்போது செயல்படுவதால்தானே எல்லோரும் பாராட்டுகிறார்கள். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் இங்கே இதைப்பற்றிக் குறிப்பிடும்போது, சில இடங்களில் தவறாக டிக்கெட்டுகளை அச்சடித்து பயணிகளுக்கு வழங்கி தவறுகள் செய்வதாகவும் குறிப்பிட்டார்கள். அப்படியெல்லாம் தவறுகள் செய்தும்கூட, நல்ல முறையில் இது செயல்படுகிறது என்று சொன்னால், அது தேசியமயமாக்கப்பட்ட பிறகு, நல்லவர்களால், நல்ல முறையில் நிர்வகிக்கப்படுகிறது, எல்லோருடைய பாராட்டையும் பெறுகிறது என்பது தானே உண்மை. இப்படி வெற்றி பெற்ற ஒன்றை ஏன் தனியார் துறைக்குக் கொடுக்க வேண்டும் என் தனியாரிடம் விட்டுவைக்க வேண்டும்? பேரறிஞர் அண்ணா அவர்கள் பஸ்களை எல்லாம் தேசியமயமாக்க வேண்டுமென்று திட்டம் கொண்டு வந்தார்கள். கம்யூனிஸ்ட் கட்சியைப்போல் புரட்சிகரமான திட்டங்களை நாம் அறிவித்தோம் என்கிற பாராட்டைப் பெற்ற பெருமையும் நமக்கு உண்டு. தொழிலாளர் நலன் கருதி, நாட்டின் நலன் கருதி பல பொதுத் துறைகள் தோல்வி கண்டாலும்கூட, பஸ் துறையைப் பொறுத்த வரையில், தமிழ் நாட்டில் அந்தத் திட்டம் வெற்றி பெற்று எல்லோராலும் பாராட்டப் பெற்றிருக்கிறது. அதை ஏன் இன்னும் தனியாரிடம் விட்டு வைக்க வேண்டும்? ஏன் அதைச் சீர்கேடு அடைய வைக்க வேண்டும்? அப்படியானால் பிறர் சொல்வதெல்லாம் இந்த ஆட்சியாளர்களிடத்தில் தென்படாதா?

அதுபோல் இந்த ஆளுநர் உரையில் ஒன்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது பல ஆண்டுகளாக ஆளுநர் உரையில் காணப்படும் ஒன்றுதான். "ஒரு ஊழலற்ற ஆட்சியை, நிர்வாகத் திறனுடைய ஆட்சியைக் கொண்டு வருவோம்" என்று ஆளுநர் உரையில் இந்த ஆண்டும் குறிப்பிட்டிருக்கிறார்கள். உண்மையில் அப்படிச் செய்கிறார்களா என்பதுதான் என்னுடைய கேள்வி. ஆட்சியாளர்கள் நேரடியாக ஊழல் செய்கிறார்கள் என்று நான் சொல்ல



வில்லை. அப்படி ஊழலற்ற, எல்லா இடத்திலும் நிர்வாகத் திறமையுள்ள ஒரு ஆட்சி நடைபெறவும், வேகமாக அது செயல்படவும் இந்த அரசு இது வரை என்ன முறையை மேற்கொண்டிருக்கிறது என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். உதாரணத்திற்கு தன்னிறைவுத் திட்டங்களை அமுல்படுத்தினார்கள். முதலிலே 63 பஞ்சாயத்து யூனியன்களை இதன்கீழ் எடுத்தார்கள். அதைப்பற்றி ஆடிட் செய்த அக்கவுன்டென்ட் ஜெனரல் 24 கோடி ரூபாய்க்கு மேல் பல தவறுகள் பல இடங்களில் நடைபெற்றிருக்கின்றன என்று சொல்லி, ஆடிட் ரிப்போர்ட் கேட்டிருக்கிறார்கள். இந்த அரசு அது குறித்து ரிப்போர்ட் கொடுக்க வேண்டும். பல இடங்களில் டென்டர் மூலம் கான்டிராக்ட் கொடுக்காமல் வேறு முறையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. வேகமாக, விரைவுபடுத்துவதற்காக அப்படிக் கொடுத்தோம் என்று அதற்கு விளக்கம் கொடுக்கலாம். இதனை பி.டபிள்யூ.டி. அமைச்சர் பல இடங்களில் கண்டு பிடித்திருக்கிறார். அதுபோல் நாகர்கோவிலில் கலைவாணர் அரங்கம் என்று இருந்ததை இப்போது நாகர்கோவில் நகர் மன்ற கலை மண்டபம் என்று மாற்றியிருக்கிறார்கள். இதற்கு 10 ஆயிரம் ரூபாய் விதம் பல முறை செலவு செய்யப்பட்டதைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். நகர மன்றங்கள், ஊராட்சிகள் போன்றவைகளுக்கெல்லாம் தேர்தலை நடத்தாமலிருப்பதற்குக் காரணம் அதிகாரிகள் இதுபோன்ற தவறுகளைத் தொடர்ந்து செய்வதற்கு அனுமதிக்க வேண்டும் என்பதுதானே. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு இருந்தால், அவர்கள் கவுன்சில் கூட்டி தவறுகளைச் சுட்டிக்காட்டிக் கேட்பார்கள். ஊராட்சிகள், ஒன்றியங்கள், நகராட்சிகள் போன்றவைகளுக்கு இந்த அரசு வந்ததற்குப் பிறகு 7 ஆண்டுகளாகத் தேர்தலை நடத்தவில்லை என்று சொன்னால், அதிகாரிகள் தொடர்ந்து தவறுகளைச் செய்ய வழிவகை செய்கிறது என்று தானே அர்த்தம். மக்கள் சக்தி ஒன்று சேர்ந்து தேர்தல் மூலம் ஓர் அமைப்பை தேர்ந்தெடுத்து, அந்த அமைப்பின் மூலம் தங்கள் குறைகளைத் தீர்ப்பதற்கான வழிமுறையை, ஜனநாயக சக்தியை இந்த அரசு தடை செய்திருக்கிறது. இதைச் செய்யாமல் விட்டுவிட்டு, "நாங்கள் நிர்வாகத் திறமையுள்ள, ஊழலற்ற ஆட்சியை நடத்தப் போகிறோம் என்று சொன்னால், அது என்ன திறமையுள்ள ஆட்சி என்று எனக்குப் புரியவில்லை. அதுபோல் கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவில்—திருநெல்வேலி நெடுஞ்சாலையிலிருந்து வீரநாராயணபுரம் வழி தாழகுடிக்குச் செல்கிற ஒரு சாலையைத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் எடுத்து அந்தப் பணியைச் செய்வதாகச் சொல்லப்பட்டது.

[திரு. ம. சங்கரலிங்கம்] [1984 பிப்ரவரி 20

(முற்பகல் 11-30)

ஆனால் அதில் எந்த வேலையும் நடக்கவில்லை. அதில் ஒரு கார்கூட போக முடியாத நிலை இருக்கிறது. முடிந்தால் அமைச்சரே அங்கே வந்து பார்க்கட்டும் என்று சொன்னேன். பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும் நான் அங்கே வருகிற போது அதைப் பார்க்கிறேன் என்று சொன்னார்கள். அமைச்சரும் அங்கே வருகிறபோது, நானும் அங்கே நாகர்கோயிலில் நிற்கிறேன் என்றுகூடச் சொல்லியிருந்தேன். அமைச்சரும் அங்கே வந்திருக்கிறார்கள் என்று அறிந்து, கெஸ்ட் ஹவுசுக்கு என் வீட்டிலிருந்து போன் செய்து, "அந்த ரோட்டுக்குக் கொஞ்சம் வந்து போங்கள், ஏற்கெனவே கூட வருகிறேன் என்று சொன்னீர்களே' என்று கேட்டுக் கொண்டேன். அவரும் இப்போது புறப்படுகிறேன் என்று சொன்னார்கள். ஆனால் அவரை அழைத்துக்கொண்டு வந்த அதிகாரிகள் அந்த ரோட்டுக்கு வராமல் வேறு ரோட்டுக்கு அழைத்துச் சென்று விட்டிருக்கிறார்கள். அதிகாரிகளுக்குத் தெரியும், அந்த ரோட்டுக்குப் போனால் தங்களுக்கு ஆபத்து என்று. ஆகவே அமைச்சரை மாற்றி அழைத்துக்கொண்டு போய்விட்டார்கள். நானும் அமைச்சர் வருவார் என்று அந்த ஊரில் உள்ளவர்களை அழைத்துக்கொண்டு போய், ரோட்டிலேயே நின்றேன். ரொம்ப நேரமாகியும் வரவில்லையென்பதால், என்ன ஆயிற்று என்று மறுபடியும் போன் செய்து கேட்டதற்கு, அமைச்சர் அந்த ரோட்டுக்குப் போய்விட்டார் என்றார்கள். நானும், 'அதிகாரிகள் மாற்றி அழைத்துக் கொண்டு போய் விட்டார்கள், நீங்களும் சைக்கிளை எடுத்துக்கொண்டு வேகமாகப் போங்கள்" என்று என்னுடன் வந்தவர்களிடம் கூறி, அவர்களும் போய் அமைச்சரைப் பார்த்து உண்மையைத் தெரிவித்தார்கள். இதில் எதிர்க் கட்சி, ஆளும் கட்சி என்று பார்க்க வேண்டாம், உண்மையில் ஆளும் கட்சியின் மீது எனக்கு எந்தவித வெறுப்பும் கிடையாது. இந்த அதிகாரிகள் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அவர்களை ஏமாற்றிக் கொண்டிருப்பதைத்தான் நான் எடுத்துச் சொல்கிறேன். தமிழ் நாட்டில் உள்ள 69 பஞ்சாயத்து யூனியன்களிலும் நடந்துள்ள தன்னிறைவுத் திட்டத்தைப் பரிசீலனை செய்து, இதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எவ்வளவு சம்பாதித்திருப்பார்கள் என்று பார்த்தால், நான் சொல்வதன் அர்த்தம் புரியும். அதிகாரிகளிடத்தில் கேட்டால், மேலேயிருந்து போன் வருவதாகச் சொல்கிறார்கள். மந்திரிகள் யாராவது போன் செய்து அப்படிச் செய்யச் சொல்வதாகத் தெரியவில்லை. அமைச்சர்களின் அறையில் இருந்து யாராவது 'போன்' செய்கிறார்களா? தன்னிறைவுத் திட்ட வேலையை காண்டிராக்ட் எடுத்தவர்கள் எல்லாக் கட்சியிலும் இருப்பதாக



1984 பிப்ரவரி 20] [திரு. ம. சங்கரலிங்கம்]

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவையில் சொன்னார்கள். ஆனால் அதில் அதிகமாக இருப்பது ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான். அந்த காண்ட்டிராக்டை எடுத்தவர்கள் என்னிடத்தில் வந்து சொல்கிறார்கள். (வேறு ஆளும் கட்சிக்காரர்களிடத்தில் சொல்ல முடியாது என்பதால்) "மேலே உள்ளவர்கள் 10 பர்சண்ட் கமிஷன் கேட்கிறார்கள், நீங்கள் எப்படியாவது கலெக்டரிடம் சொல்லி சிமென்ட் ரிலீஸ் செய்து தாருங்கள்" என்று கேட்கிறார்கள். பிறகு நான் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் சொல்லி, சிமெண்ட் போன்றவைகள் கிடைக்க ஏற்பாடு செய்தேன். இந்த மாதிரி தன்னிறைவுத் திட்ட வேலைகளில் இவர்கள் தலையிட்டு, கட்சிக்கே கேடு விளைவிக்கிறார்கள். அது உங்களுக்குத் தெரியும். தன்னிறைவுத் திட்ட வேலைகள் திறம்பட நடந்தது என்று ஆளுநர் உரையில் சொல்கிற அளவுக்கு நாட்டிலே ஒன்றும் நடக்கவில்லை. எங்கும் மக்கள் வருந்துகிற நிலைதான் நாட்டிலிருக்கிறது என்பதை மறந்து விடக்கூடாது. ஆகவே அந்தக் கண்ணோட்டத்தில் அணுகுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, வேலை தாமதத்திற்கு ஒரு காரணம். கன்னியாகுமரி மாவட்டத்தில், தோவாளை வட்டத்தில் எட்டாமலை கிராமத்தில் ஒரு ஆதி திராவிட காலனி அமைக்க திட்டமிடப்பட்டது. இதற்கான நில ஆர்ஜிதம் எல்லாம் நடந்தது. இதுகுறித்த கோப்பின் எண் ஏ3/131755/82 ஆகும். கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் இதற்கான சிபாரிசைச் செய்திருக்கிறார். ஆனால் இதுவரை எந்த வேலையும் நடக்கவில்லை. என்ன ஆயிற்று என்று கேட்டால், "தலைமைச் செயலகத்திற்கு அனுப்பியிருக்கிறோம்" என்கிறார்கள். இங்கே கேட்டால் அமைச்சருக்குப் போயிருப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே பைல்கள் எங்கே இருக்கின்றன என்று தெரியவில்லை. அந்த ஆதி திராவிட காலனியை உடனடியாக அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாகர்கோயில் நகரை அடுத்துள்ள இடலாக்குடியில் ஒரு ஆதி திராவிடர் காலனிக்காக என்று 3 ஆண்டுகளுக்கு முன்பாகவே இடம் கையகப்படுத்தப்பட்டு விட்டது. அதற்கான ஆட்களையும் செலக்ட் பண்ணிவிட்டார்கள். ஆனால் அந்த இடம் இன்னும் அலாட் பண்ணப்படவில்லை, 3 ஆண்டுகளாக இந்த நிலைமை. இப்படி பல இடங்கள்.

மருத்துவக் கல்லூரி அட்மிஷன்கள் குறித்து எவ்வளவு வழக்குகள் நீதிமன்றத்திற்குப் போயிருக்கின்றன என்பதையெல்லாம் பார்த்தால், இது நல்ல திறமையான நிர்வாகத்தைத்தான் காட்டுகிறதா அல்லது திறமை இன்மையை காட்டுகிறதா, அல்லது மந்தப் போக்கினைக் காட்டுகிறதா என்பதை உணர முடியும்.

[திரு. ம. சங்கரலிங்கம்] [1984 பிப்ரவரி 20

நமது மாநிலத்தில் அண்மையில் மழையின் காரணமாக அதிகமான அளவுக்
குச் சேதமேற்பட்டிருக்கிறது. அதை எல்லோருமாக உணர்ந்திருக்கிறோம்.
இங்குள்ள அனைத்துக் கட்சியினரும், அரசும் மிகுந்த அனுதாபத்தோடு பாதிக்
கப்பட்ட மக்களுக்கு என்னென்ன செய்ய வேண்டும் என்று ஆராய்ந்து அதற்
கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் இதற்குச் சில மாதங்
களுக்கு முன்னால்வரை நமது மாநிலம் முழுவதிலும் தொடர்ந்து கடந்த
இரண்டு ஆண்டுகளாக வறட்சியின் காரணமாக விவசாயமே பாதிக்கப்பட்டிருந்
தது. பயிர் வைத்த விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். விவ
சாயிகள் தங்கள் சொந்தப் பணத்தையும், மனைவி மக்களுடைய நகையையும்
அடகு வைத்து அதனால் கடனைப் பெற்று விவசாயத்தை மேற்கொண்டாலும்
அறுவடை செய்ய முடியாதபடி வறட்சியினால் பாதிக்கப்பட்டார்கள். இந்த
முறை சென்ற ஆண்டுகளில் ஏற்பட்ட கடன் சுமையோடு புதிதாகக் கடனை
வாங்கி விவசாயத்தை மேற்கொண்டார்கள். ஆனால் இந்த ஆண்டோ
அவர்கள் மழை மிகுதியாலே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தஞ்சை மாவட்
டத்தைப் பொறுத்தவரையில், நெல் முளைத்து நாற்றாகிவிட்டது என்று சொல்
கிறார்கள். பல இடங்களில் விவசாயிகள் அறுவடை செய்ய முடியாமல்
பயிர் நீரில் மூழ்கிப் போய்விட்டது. தென்னாற்காடு மாவட்டத்தில் மணிலாப்
பயிர் பெரும் அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது. கடந்த 3 ஆண்டுகளாக
தமிழ் நாட்டு விவசாயிகள் பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்
என்பதை எல்லோரும் ஒப்புக்கொண்டாக வேண்டும். எனவே மாநிலம் முழு
வதும் விவசாயக் கடனை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ள
விரும்புகிறேன். கடனை ரத்து செய்வதோடு அவர்களுக்கு நிவாரண உதவி
களையும் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதாவது மீண்டும்
விவசாயிகளை 3 ஆண்டுகளுக்கு முன்னாலே இருந்த நிலைமைக்குக் கொண்டு
போக என்னென்ன திட்டங்களுக்கு மேற்கொண்டு உதவி செய்ய வேண்டுமோ
அவற்றையெல்லாம் அரசு விரைவில் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்து, நேற்றைக்கு முன்தினம் மாண்புமிகு அவையின் முனைத்
தலைவர் அவர்கள் பேசுகிறபோது, கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களி
லிருந்து கோயில்களுக்கு குத்தகை நெல் உத்தரவாதமாகக் கிடைக்க வழிவகை
செய்ய வேண்டும் என்றும், அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்
என்றும், அப்போதுதான் கோயில்கள் நன்கு நடக்கும் என்றும் தெரிவித்தார்
கள். அது உண்மைதான். ஆனால் கோயில்களைப் பொறுத்தவரையில்,
விவசாயிகளிடமிருந்து கிடைக்க வேண்டிய விவசாய குத்தகைப் பணத்தைத்
தவிர, மற்ற வருவாய் இனங்களும் இருக்கின்றன. அவற்றையெல்லாம் ஒழுங்



1984 பிப்ரவரி 20] [திரு. ம. சங்கரலிங்கம்]

காக வசூலித்துக்கொண்டு வந்தால், கோயில்கள் அவைகளின் விவசாயக் குத்தகைதாரர்களைக்கூட ஓரளவுக்கு விட்டுவிடலாம். காரணம் மாநிலம் முழுவதும் இருக்கிற அனைத்து விவசாயிகளுக்கும் அரசு உதவி செய்ய வேண்டிய நிலையில், நிவாரணம் அளிக்க வேண்டிய நிலையில் இருக்கிறது. காரணம் கடந்த 3 ஆண்டுகளாக அவர்கள் விவசாயத்தில் தங்களின் பணத்தைப் போட்டு நட்டப்பட்டிருக்கிறார்கள். 3 ஆண்டுகளாக எதையும் அவர்கள் தங்கள் வீட்டிற்குக் கொண்டு வரவில்லை. இன்னும் 3 ஆண்டுக் காலத்திற்கு நிலத்தில் வேலை செய்து பயிரிட்டு விளைவித்தால்தான், வாழ முடியும் என்ற நிலையில் இருக்கிறார்கள். கோயில் நிலத்தை வைத்திருக்கும் விவசாயிகளானாலும் சரி, தனியார் நிலங்களை குத்தகைக்கு வைத்திருக்கும் விவசாயிகளானாலும் சரி, நிலைமை இதுதான். இதன் காரணமாக சிறு நிலச்சுவான்தார்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதும் உண்மைதான். அவர்களுக்கும் அரசு நிவாரணம் தேட வேண்டும். அவர்களை எப்படி கவனிக்க வேண்டுமோ அப்படி கவனித்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். ஆனால் கோயில் நிலங்களைப் பொறுத்தவரையில், அந்தக் கோயில்களுக்கு வேறு வகையில் வருமானம் இருக்கிறது. அவற்றையெல்லாம் ஒழுங்காக வசூலிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று எடுத்துச் சொல்லிக் கொள்வதோடு, உதாரணத்திற்கு ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் நாகப்பட்டினத்தில் நீலாயதாட்சியம்மன் திருக்கோயில் இருக்கிறது. அகில இந்தியாவிலும் 5 பெரிய கோயில்கள் அம்மனுக்கு இருக்கின்றன. அந்த 5 இடங்களில்தான் அம்மன் ஆட்சி பீடங்கள் அமைந்திருக்கின்றன. அதாவது மதுரை மீனாட்சி, காஞ்சி காமாட்சி, காசி விசாலாட்சி, நாகை நீலாயதாட்சி, திருவாரூர் கமலாட்சி என்று இந்த 5 இடங்களில்தான் அம்மனுக்கு ஆட்சி பீடங்கள் இருக்கின்றன. இந்த 5 ஆட்சி பீடங்களில் 4 ஆட்சி பீடங்கள் தமிழ் நாட்டில் இருக்கின்றன. அவ்வாறு உள்ள நான்கு ஆட்சி பீடங்களில் ஒன்றுதான் நாகையில் உள்ள நீலாயதாட்சியம்மன் கோயில். அந்தக் கோயிலுக்குச் சொந்தமாக, அந்த ஊர் பஸ் ஸ்டாண்டுக்குப் பக்கத்தில் வெளிப்பாளையத்தில் சுமார் 2½ லட்சம் சதுர அடி பரப்புள்ள ரூபாய் 25 லட்சம் மதிப்புள்ள இடம் ஒன்று இருக்கிறது. அதிலிருந்து அந்தக் கோயிலுக்கு ஒரு அணாக்கூட வருவாய் இல்லை. அதை வைர வியாபாரி ஒருவரும், அட்வகேட் ஒருவரும், பேங்க் ஏஜென்ட் ஒருவரும் தங்கள் கையிலே வைத்திருக்கிறார்கள். அவர்கள் கோயிலுக்குக் குத்தகைப் பணம் எதுவும் கட்டுவதில்லை. எனவே அந்த இடத்தை எடுத்து முறையாக சட்ட ரீதியாக குத்தகைக்கு விட்டால், அதிலிருந்து கிடைக்கும் வருவாய் பல லட்சம் ரூபாய் அளவில் கோயிலுக்கு உதவியாக இருக்கும். அதன் காரணமாக விவசாயிகளைத் தொல்லைப்படுத்த வேண்டியிருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. ம. சங்கரலிங்கம்] [1984 பிப்ரவரி 20

(முற்பகல் 11-40)

அது மாதிரித்தான் எல்லாக் கோயில்களும் இருக்கின்றன. உதாரணத்திற்காக ஒன்றை மட்டும் சொன்னேன். இரண்டு தினங்களுக்கு முன்பு பத்திரிகையில் கூட வெளிவந்தது. நாகப்பட்டிணம் வெள்ளிப்பாளையம் பெருமாள் கோவிலில் நாலரை இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள 14 சிலைகள் காணாமல் போயிற்று. மற்ற சிலைகள் எல்லாம் வெளியே போனபோது இந்த 14 சிலைகள் மட்டும் கப்பல் ஏறிவிட்டது போலும். யார் ஏற்றிவிட்டார்கள் என்பது தெரியவில்லை. இக்கோயிலுக்குரிய, அதிக வருவாய் ஈட்டக்கூடிய பல கட்டிடங்கள் நகரங்களில் எல்லாம் இருக்கின்றன. குறிப்பிட்ட கோயிலில் அரசாங்கத்தினர் என்ன செய்தனர் என்றால், இப்படியெல்லாம் நடக்கக் கூடாது என்று நடவடிக்கை எடுக்க ஆரம்பித்த அவரை பல சூழ்நிலைகளில் கஷ்டப்படுத்தினார்கள். அதன் காரணமாக இரண்டு வருஷங்களுக்கு முன்பு அங்கிருந்த எக்சிகியூடிவ் ஆபீசர் திரு. நரசிம்மன் தற்கொலை செய்துகொண்டார். கோவில்களில் பணி புரியக்கூடிய அலுவலர்களை, அதிகாரிகளை ஆண்டவன் விரைவிலேயே கூப்பிட்டுக் கொள்வார் போலும். ஆகவே கோவில்களில் இருக்கக்கூடிய வருமானத்தைப் பெருக்குவதற்குரிய முயற்சி எடுத்தால், ஏழை விவசாயிகள் தலைமேல் கைவைக்க வேண்டிய அவசியம் ஏற்படாது. மேலும் விவசாயிகளுக்கு உதவி செய்யலாம் என்பதை இந்த அமைச்சரவைக்கும், அவை முன்னவர் அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

1983 ஆம் ஆண்டு நவம்பர் ஆடிட் ரிப்போர்ட்டில் நான் சொன்ன நாகப்பட்டினம் சம்பவங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அதிலேயிருந்துதான் நான் எடுத்துச் சொல்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன். நாகப்பட்டினம் கோவிலுக்குச் சொந்தமான 100 ஏக்கர் நிலத்திற்கான லீஸ் முடிந்துவிட்டது. அந்த நிலத்தில் நகர் மன்றம் பல கட்டிடங்களைக் கட்டி வருமானத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் அதிலிருந்து ஒரு அணா கூட கொடுப்பதில்லை. கோவிலுக்கு வரவேண்டிய நிலைக் கடன்கள் அடைபட்டிருக்கின்றன. ஆகவே ஏழை விவசாயிகள்மீது கைவைப்பதை விட தங்கச் சுரங்கங்களாக இருக்கும் ஆட்சி பீடங்களில் கைவைக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஐந்து ஆட்சி பீடங்களில் நாகப்பட்டினமும் ஒன்று. அதிலே கைவைக்க முனைய வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்.

நமது பாநிலத்தில் உள்ள மாவட்டங்களைப் பிரிப்பது பற்றியும் எட்டு புதிய மாவட்டங்களுக்குரிய பெயர் பற்றியும் அறிவித்திருக்கிறார்கள். ஆளும் கட்சிக் கொறடா அவர்கள் பேசும்போது, "உங்களால் இதைக்கூட வரவேற்க முடியவில்லையா?" என்று கேட்டார்கள். நாங்கள் இதை எதிர்க்கவில்லை.



1984 பிப்ரவரி 20] [திரு. ம. சங்கரலிங்கம்]

நிர்வாகச் சீர்திருத்தத்தின் காரணமாக இப்படி மாவட்டங்களைப் பிரிப்பதை நாங்கள் வரவேற்றிருக்கிறோம். ஆனால் பெயர் வைக்க சில முறைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே கருத்துக்களைச் சொல்லுகிறேன். இன்னின்ன பெயரை வைப்பது நல்லது என்ற கருத்தைச் சொல்லுகிறோம். அதை ஏற்றுக் கொள்ளுவதும், ஏற்றுக்கொள்ளாததும் அரசைப் பொறுத்தது. நிர்வாகம் சிறப்பாக அமைய, மாவட்டங்களை பல சிறு மாவட்டங்களாகப் பிரிக்கிறோம் என்று சொன்னால் நாங்கள் கருத்து சொல்லவேண்டிய அவசியம் வராது. ஆனால் தலைநகரைச் சொல்லி, பெயரை அறிவித்த பிறகு, நாங்கள் அதன் மீது கருத்துச் சொல்லுவதுதான் ஜனநாயக மரபாகும், சிறந்த விவாதமாக அமையும். மாவட்டங்களைப் பிரிக்கக் கூடாது என்று யாரும் சொல்லவில்லை. தலைநகரத்தை மாற்ற வேண்டுமென்று சொல்லும் போது எங்கள் கட்சித் தலைவர், "இதெல்லாம் இப்போது வராது. ஆகவே வாதங்களைக் கிளப்பாதீர்கள், மற்ற பிரச்சினைகளைப் பாருங்கள்" என்று சொல்லியிருக்கிறார். அதை ஊக்குவிக்கும் நிலையில் இல்லை. இராமநாதபுரத்தின் தலைநகரம் இன்னும் மதுரையிலேயே இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். முக்கியமான ஒன்று தலைநகரை எந்த இடத்திலே வைப்பது என்பதுதான். ஆனால் பெயர் வைப்பதிலே நாம் எல்லாம் ஒரே பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்கள், தமிழ் நாட்டின் சிறப்பு, தொன்மை விளங்க வேண்டும் என்று நினைக்கிறவர்கள். ஆகவே தமிழ் பெரியார் பெயர்களை, தொண்டர்களின் பெயர்களை வைத்திருக்கிறோம். இப்படி வைக்கக் கூடாது என்று எண்ணுகிறவர்கள் அதைச் சொல்லுகிற அளவிற்கு வலிவு இல்லாமல் இருக்கிறார்கள். தமிழ் உணர்வாலும், பாரம்பரிய உணர்வாலும் நாம் இருவரும் வளர்க்கப்பட்டிருப்பதால், வாய் திறக்க முடியவில்லை. இல்லையென்றால் வாய் திறந்திருப்பார்கள். நமக்குள் என்ன பெயர் வைப்பது என்ற நல்ல கருத்தை நாங்கள் எடுத்துச் சொல்வதைக் குறைவாக நினைக்க வேண்டாம். நல்ல எண்ணத்தோடு சொல்லுகிறார்கள் என்று நினைத்து எடுத்துக்கொள்ள வேண்டும். அதோடு ஆட்சிக் கட்சியிடம் எங்களுக்கு நல்ல எண்ணம் இருக்கிறது என்று தெரிவித்து, "நீங்கள் நல்ல பெயர்களை வைக்க முனைய வேண்டும்" என்று சொல்லுவதோடு இதை ஆய்ந்து கவனிக்க ஒரு கமிட்டியை நியமித்தால்கூட நல்லது என்ற கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். மிகவும் வேக வேகமாகச் செயல்படும்போது பல சிக்கல்கள் உருவாகும். அதிலும் தலைநகர் எது, அதற்கு இடம் செலக்ட் பண்ணுவது என்று வரும்போது பல சிக்கல்கள் வரத்தான் செய்யும். அறிவித்தவகையில் அரசு கூடுதல் மாவட்டங்களைப் பிரிக்க இருக்கிறது என்ற வகையில் இவைகளையெல்லாம் முறையாக கவனிக்க ஒரு கமிட்டியைப் போடுவது மிகவும் சாலச் சிறந்ததாக இருக்கும் என்று

தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மாவட்டங்களுக்கு நீங்கள் ஒரு பெயரைச் சொல்லி, நாங்கள் ஒரு பெயரைச் சொல்லி மாற்ற வேண்டும் என்று சொல்லுகிறபோது, இதையே ஒரு 'பிரிஸ்டிஜ் இஷ்யூ'வாக எடுத்துச் சொல்லுகிற நிலை உங்களுக்கோ அல்லது எங்களுக்கோ வராத நிலையை உருவாக்கி, தமிழகத்தின் மொத்த நலனைக் கருத்தில் கொண்டு, இந்தப் பிரச்சினையை அணுக வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

இறுதியாக, நமது தலைநகருக்கு ஆந்திர மாநிலத்திலிருந்து தண்ணீர் கொண்டு வருவதற்காக ஒரு திட்டத்தை அமுல்படுத்த இருப்பதாக அறிவிக்கப்பட்டு, அந்தத் திட்டமும் தொடங்கப்பட்ட நிலையில் நம்முடைய மாநிலத்திலிருந்து ஆந்திர அரசுக்கு ரூபாய் 30 கோடிக்கு மேல் கொடுக்கப்பட்டு, வேலை நடைபெற்று வருகிறது. இந்த நேரத்தில் மத்திய அரசைச் சார்ந்த நீர்வளக் குழுவிலிருந்து, சென்ட்ரல் வாட்டர் கமிஷனிலிருந்து வருகிற ஒரு செய்தி நமக்கு ஒரு அச்சத்தைத் தருவதாக இருக்கிறது என்பதை மாத்திரம் நான் இங்கே நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அண்மையில் அவர்கள் இந்தத் திட்டத்தைப்பற்றிக் குறிப்பிட்டு, "நாங்கள் இந்தத் திட்டத்தைப் பரிசிலனை செய்து கொண்டிருக்கிறோம். இதுவரை சென்ட்ரல் வாட்டர் கமிஷன் சுமார் 250 திட்டங்களைப் பரிசிலனை செய்து கொண்டிருக்கிறோம்; ஆனால் ஒரு மாநிலத்தின் தலைநகருக்குத் தண்ணீர் தருகிற திட்டமான இதற்கு ஒரு பிரையாரிட்டி கொடுத்து கவனிக்கிறோம். இதைக் குறித்து பல விளக்கங்களை நாங்கள் கேட்டிருக்கிறோம். அவைகளெல்லாம் ஆந்திர அரசிடமிருந்து வரவேண்டும். சில பிரிலிமினரி விளக்கங்கள் மட்டும்தான் இப்போது வந்திருக்கின்றன. சில முக்கியமான க்ருசியல் பாயின்ட்ஸ்பற்றி விளக்கங்கள் வந்த பிறகுதான் இதைப்பற்றி ஆராய்வோம்' என்று சொல்லியிருக்கிறார்கள். அதாவது ரூபாய் 637 கோடியில் இந்தத் திட்டத்தை முடிக்க முடியுமா, இது குறித்த டெக்னிக்கல் சிஸ்டம் எல்லாம் "சவுன்டாக" இருக்கிறதா என்று எல்லாவற்றையும் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பதால், தமிழக அரசு இது குறித்து மிகவும் உன்னிப்பாக கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். காரணம் இந்த அரசாங்கம் இந்தத் திட்டத்தைத் தொடங்கி அமுல் நடத்துகிற நிலையில், அவர்கள் இப்படிப்பட்ட கருத்தைத் தெரிவித்திருப்பதன் காரணமாக, 'சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அனுப்பியாவது இதைக் குறித்து விளக்கங்கள் அளித்து திட்டத்தை நிறைவேற்றுவதற்கா





முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தில் தவறு இருக்கிறது என்று அவர்கள் பின்னால் சொல்வார்களே யானால், இப்போது நீங்கள் செலவழிக்கிற அல்லது ஆந்திர அரசுக்கு நீங்கள் கொடுக்கிற ரூபாய்பற்றிக் கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று இப்போதே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இந்தத் திட்டம் மட்டும் தான் இப்படி என்றில்லை. வறட்சிக்காக நாம் செலவு செய்கிறோம் என்றால் கூட, அவர்கள் ஒரு டீம் அனுப்பித்தான் பார்க்கிறார்கள். மாநிலம் இவ்வளவு செலவு செய்கிறோம் என்று சொன்னாலும், மத்திய அரசிலிருந்து வந்து பார்க்கிறார்கள். அதுமாதிரிதான் இந்தத் தண்ணீர் கொண்டு வரும் திட்டம் குறித்தும் சொல்லியிருக்கிறார்களே தவிர, வேறு எந்த வகையிலும் இல்லை. எனவே தவறான முடிவெடுக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: அதைப்பற்றி மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் சொல்லுவதைப் போல், அவ்வளவு சுலபமாகவும் நாங்கள் கருதவில்லை, தாங்கள் நினைப்பதைப்போல் அந்தச் சூழ்நிலையிலும் சொல்லவில்லை. இதனால்தான் அரசாங்கம் இதில் உன்னிப்பாக கண்காணித்துச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். அவர்கள் சொல்லுவதைப் போல் அவ்வளவு சாதாரணமான பிரச்சினையாகவும் இதைக் கருதாமல், மற்ற சிலர் எண்ணுகிற அளவுக்கு மிகவும் பெரிய பிரச்சினையாகவும் எண்ணாமல், அரசு எந்த முறையில் இந்தப் பிரச்சினையில் அணுக வேண்டுமோ அந்த முறையில் அணுக வேண்டும் என்று இந்த அரசுக்கு அறிவுறுத்திக் கொண்டு அடுத்த பிரச்சினைக்குச் செல்ல விரும்புகிறேன்.

இன்றைய பத்திரிக்கையில்கூட மீஞ்சூர் சிறையில் ஒருவர் இறந்தார் என்ற செய்தி வெளியிடப்பட்டு அங்கே ஒரு பெரிய போராட்ட நிலை உருவாகியிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி சிறையில் இறப்பவர்களைப் பற்றி பாராளுமன்றத்தில் குறிப்பிடும்போதுகூட, தமிழ் நாட்டில்தான் அதிகமான பேர்கள் சிறைச்சாலைகளில் இறந்திருக்கிறார்கள் என்ற புள்ளி விவரத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதாவது 52 பேர் தமிழகத்தில் ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் தமிழ் நாட்டு சிறைச்சாலைகளில் இறந்திருக்கிறார்கள் என்று பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதைக் குறித்து நம்முடைய சிறைச்சாலைகளுக்கான ஐ.ஜி. என்ன சொல்லுகிறார் என்றால், சென்ட்ரல் ஜெயிலில் செத்தவர்கள் 8 பேர்கள்தான், மற்றவர்கள் எல்லாம் சப் ஜெயில்களில் இறந்தவர்கள் என்று சொல்லி தட்டிக் கழிக்கிற நிலைமைதான்

[திரு. ம. சங்கரலிங்கம்] [1984 பிப்ரவரி 20

இருக்கிறது. ஏதோ தமிழ் நாட்டிலுள்ள சென்ட்ரல் ஜெயிலுக்கு மட்டும்தான் இவர் அதிகாரி போலவும், மற்றவற்றுக்கும் இவருக்கும் சம்பந்தம் இல்லை என்பதைப் போலவும் அவர் பேசுகிறார். இப்படி அரசாங்கத்தின் நிர்வாகத்திலும், போலீஸ் கண்காணிப்பிலும் பல்வேறு தவறுகள் பல்வேறு இடங்களில் நடைபெற்றிருக்கின்றன. இவ்வாறு தமிழகத்தில் உள்ள அந்தச் சிறைச்சாலைகளில் இறப்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே போகிறது என்று அச்சத்தோடு சொல்ல வேண்டிய நிலைமை இனிமேலும் உருவாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லி, இந்த ஆளுநர் உரையைப் பொறுத்த வரையில் இந்தச் சமுதாயம் எதிர்பார்க்கிற நல்ல எதிர்காலத்திற்குரிய வழிவகைகள் எதுவும் காணப்படவில்லையே என்ற வருத்தத்தைத் தெரிவித்து, அமைகிறேன்.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை.)

(முற்பகல் 11-50)

### 3. அறிவிப்புகள்.

**(1) சட்டமன்ற மேலவைத் துறை, இனி சட்டமன்ற மேலவைச் செயலகமாக, மாண்புமிகு மேலவைத் தலைவரின் ஆளுகையின் கீழ் இயங்கவிருப்பது குறித்து.**

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** சட்டமன்ற மேலவைத் துறை அரசின் தலையீடின்றி எனது முழு ஆளுகையின் கீழ், இதற்கென அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் இயற்றப்பட்டுள்ள மேலவைச் செயலக தனிப் பணி விதிகளின் படி இயங்கினாலும், அது அரசுத் துறை என்று அழைக்கப்படுவதனால் சில தவறான கருத்துக்கள் நிலவுவதைப் போக்குவதற்காக நானும், அரசும், ஆளுநரும் கலந்து ஆலோசித்து தற்போது இத்துறை செயலகத் துறை என்று இருப்பதை, 'மேலவைச் செயலகமாக' எனது முழு ஆளுகையின் கீழ் தனித்து இயங்குவதற்கான முடிவுகள் எடுக்கப்பட்டு, அரசியல் அமைப்புச் சட்டத்தின் 187-வது பிரிவின் கீழ் என்னைக் கலந்தாலோசித்து ஆளுநர் ஆணை ஒன்றைப் பிறப்பித்துள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் இம்மேலவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1984 பிப்ரவரி 20] [மாண்புமிகு மேலவைத் தலைவர்]

16—2—1984 முதல் இத்துறை, சட்டமன்ற மேலவைச் செயலகம் **(Legislative Council Secretariat)** என்னும் பெயரில் இயங்கும். செயலாளர், அமைச்சுச் செயலாளர் என்றும், செயலகத்திற்கு ஆணையர்-செயலாளர் என்றும் அழைக்கப்படுவார். ஆணையர்-செயலர்களுக்கு சமமானவர் என்பதற்காகவே இது என்பதையும் மேலவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### 2. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

*** திரு. ஈ. எஸ். வெங்கடேசன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின் மீது எனக்கு முன்னர் பலர் பேசியிருக்கின்றார்கள். அவர்கள் பல கோணங்களிலிருந்து பேசினார்கள். அவரவர்கள் அரசியல் கோட்பாடுகளுக்கும் கொள்கைகளுக்கும் ஏற்ப தங்கள் கருத்துக்களை எடுத்து வைத்தார்கள். நான் ஒரு சாதாரணக் குடிமகன். அரசாங்க அலுவலகத்திலே வேலை செய்து பின் ஓய்வு பெற்ற ஒரு அரசாங்க அலுவலர் என்ற முறையிலே, ஒருசில கருத்துக்களை மிகச் சுருக்கமாகச் சொல்லிச் செல்ல விரும்புகிறேன்.

ஆளுநர் உரையில் மக்கள் நலம் நாடைப்புப் பணி, குடும்பத்தில் ஒருவருக்கு வேலை, குடிசை நகர் திட்டம், சத்துணவுத் திட்டம், ஸ்ரீலங்கா தமிழர்களுக்கு உதவி, மக்களின் மனதில் இடம் பெற்றுள்ள தலைவர்கள் பெயரில் மாவட்டங்கள், ஓய்வுபெற்ற பணியாளர்களுக்குப் பாதுகாப்பு. அரசுப் பணியாளர்களுக்கு ஓய்வு பெற்றவர்களுக்கு உதவி போன்ற திட்டங்களையெல்லாம் குறிப்பிட்டிருக்கின்றன. அவைகள் எல்லாம் வரவேற்கத் தக்க அம்சங்கள். அதனால் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். நல்ல திட்டங்களை அரசு தீட்டினால் மட்டும் போதாது. அவற்றையெல்லாம் செயலாற்ற நல்ல முறையிலே, நேர்மையான முறையிலே கண்காணிக்க வேண்டும்.

நான் கடந்த வருடம், ஆளுநர் அவர்கள் உரையின் மீது பேசும்போது ஒரு கருத்தைச் சொன்னேன். அரசுத் துறையினர் பொதுவாக இப்போதெல்லாம் மெத்தனமாகவும் அலட்சியப் போக்குடனும் இருக்கின்றார்கள் என்று சொன்னேன். அப்படிப் பேசிய பிறகு இப்போதுகூட அதிலே எந்தவிதமான மாற்றமும் காணப்படவில்லை. நான் 11—6—1980 ஆம் தேதியில் ஒரு கேள்வி கொடுத்தேன். அது அனுமதிக்கப்பட்டது. அது வெகு சாதாரணமான கேள்வி. பதில் சொல்வது, தகவல் சேகரிப்பது ஆகியவற்றில் எந்தக் கஷ்டமும் இருக்காது. ஆனால் நாளது வரையிலே அதற்கு எந்தப் பதிலும் வரவில்லை. கேள்வி மிகச் சாதாரணமானதுதான். அந்தக் கேள்வி என்ன என்று இப்போது ஒரு முறை சொல்லி விடுகின்றேன்.

[திரு. ஈ. எஸ். வெங்கடேசன்] [1984 பிப்ரவரி 20

"தமிழக உயர்நீதிமன்றத்திலே 15—6—1980 ஆம் தேதியில் காலியாக இருக்கும் உயர்நீதி மன்ற நீதிபதிகள் பதவிகள் எத்தனை?

அவற்றை நிரப்புவதில் காலதாமதமாவதற்குக் காரணம் என்ன?" இதுதான் நான் கேட்ட கேள்வி. மிகச் சாதாரணமான கேள்வி. இந்தக் கேள்வி கேட்டு கிட்டத்தட்ட நான்கு வருடங்கள் ஆகின்றன. ஆனால் அதற்கு பதில் கிடைக்கவில்லை. இந்தச் சட்ட மன்றத்திலே போன வருடம் கூட இதைப்பற்றிச் சொல்லியிருக்கின்றேன். அப்படிச் சொல்லியும்கூட அதற்கு பதில் கிடைக்காதது மிகவும் வருந்தத்தக்கதாக இருக்கிறது. சட்டமன்றத்திலே பேசியும்கூட அதற்கு மதிப்பில்லை. உதாசீனம் செய்யப்படுகிறது. சாதாரணமாக ஒரு சின்ன கேள்விக்கு 4 வருடங்கள் ஆகியும் பதில் கொடுக்காமல் இருப்பது, இந்த அரசு எவ்வளவு மெத்தனமாகவும் அலட்சியப்போக்கிலும் நடக்கிறது என்பதற்கு ஒரு உதாரணம் என்று நினைக்கிறேன். இது போன்று இருப்பதை ஒரு சாதனை என்றுகூட சொல்லலாம் என்று நினைக்கிறேன். நான்கு வருடங்களாக, சட்டமன்றத்திலே போன வருடம் குறிப்பிட்டிருந்தாலும், அதற்கு பதில் சொல்லாமல் இருப்பது ஒரு வகையில் மாபெரும் சாதனை என்றே சொல்ல வேண்டும். 'கின்னஸ்' புத்தகத்திலே இடம் பெறக்கூடிய சாதனை. இதுபோன்ற சாதனைகளை இந்த அரசு விரும்புகின்றதா? யோசனை செய்து பார்க்க வேண்டும். அதற்கு ஆட்சியாளர்கள் தான் முடிவு கட்ட வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். அதைப்பற்றி நான் இன்னும் அதிகமாகச் சொல்ல விரும்பவில்லை. இனியாவது இந்த அரசு அதன் துறைகளை முடுக்கிவிட்டு சரியான முறையிலே இயங்க அவைகளுக்கு உத்தரவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை.)

அரசு அலுவலர்கள் ஓய்வு பெறும்போது, பத்தாயிரம் ரூபாய் கொடுப்பதற்கு வகை செய்திருப்பது நல்ல ஏற்பாடு. மற்ற மாநிலங்களுக்கு இது நல்ல முன்னோடியாக அமைகிறது. ஆனால் அலுவலர்கள் அவர்கள் பங்காக ஒவ்வொரு மாதமும் ரூபாய் 20 கொடுத்தால், கிட்டத்தட்ட, 12 வருடங்களில் அவர்கள் பங்கான ஐயாயிரம் ரூபாய் முடிந்து போகிறது. பின்னர் அவர்கள் ஓய்வு பெறுகிறவரையில் அவர்கள் பணம் லாக்கப்-ஆகி அவர்களுக்கு உதவாமல், பிரயோஜனமின்றி, இருக்கிறது. அதைக் கவனித்து அரசு வட்டியை அவர்களுக்குக் கொடுத்திட ஏற்பாடு செய்யவேண்டும், அல்லது அரசு தான் கொடுக்க வேண்டிய 5,000 ரூபாயை, பத்தாயிரம் ரூபாயாக உயர்த்தி அரசு அலுவலர்



1984 பிப்ரவரி 20] [திரு. ஈ. எஸ். வெங்கடேசன்]

களுக்கு மொத்தத்தில் 15,000, 20,000 ரூபாய் கொடுத்தால், அவர்கள் நிச்சயமாகப் பயன் அடைந்து ஆறுதல் அடைவார்கள். இது 1—4—1984 முதல் அமுலுக்கு வர இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அப்படி என்றால், இந்த மாதமும் அடுத்த மாதமும் ஓய்வு பெறுகிறவர்களுக்கு இந்தத் திட்டம் பயன் அளிக்காது. எனவே அவர்களுக்கும் இந்தத் திட்டம் பயனளிக்கும் வகையில் தேதியை மாற்றி உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் மத்திய அரசு ஊழியர்களுக்கு போனஸ் அளித்திருப்பதைப்போல, இந்த அரசும், அரசு ஊழியர்களுக்கு போனஸ் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசு எப்படி கொடுத்ததோ அதைப் போலவே மாநில அரசு ஊழியர்களுக்கும் சீக்கிரத்திலே கிடைக்க வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தாராள ஓய்வூதிய விதிகளை 1979 அக்டோபர் மாதத்திற்கு முன்னர் பணியிலிருந்து ஓய்வு பெற்ற அரசுப் பணியாளர்கள் அனைவருக்கும் பொருந்துகிற வகையில் அரசு நீட்டித்திருப்பதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அறிவிப்பை அரசே பிறப்பித்திருந்தால், மிகவும் மகிழ்ச்சியாக இருந்திருக்கும். போய் உச்ச நீதிமன்றம் கொடுத்த தீர்ப்பின் அடிப்படையில்தான் இந்தச் சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டே நான் இது குறித்து ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தேன். அப்போது அதற்குப் பதில் அளித்த அமைச்சரவர்கள் மத்திய அரசோடு தொடர்பு கொண்டு ஆவன செய்வதாகச் சொன்னார்கள். ஆனால் பிறகு இது, மாநில அரசு ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு பொருந்தாது, அப்ளிகபிள் இல்லை என்று பதில் வந்தது. அதன்பின்னர் இங்குள்ள சென்னை உயர்நீதிமன்றத்திலே ரிட் போட்டார்கள். மத்திய அரசும் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில் ஒரு உத்தரவைப் போட்டு மத்திய அரசு பென்ஷனர் அனைவருக்கும் கிடைக்கும்படியான உத்தரவை அமுல்படுத்தியது. அதைப்போல சில மாநில உயர்நீதிமன்றங்கள் உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் தீர்ப்பு கொடுத்திருக்கின்றனர். கர்நாடக மாநில அரசும் கூட உத்தரவைப் போட்டிருக்கிறது. ஆனால் நம்முடைய அரசு இன்னமும் போடவில்லை. கொள்கை அளவிலேதான் ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதாவது உச்ச நீதிமன்றம், உயர்நீதிமன்றம், வேறு சில அரசுகள் எல்லாம் ஏற்றுக் கொண்ட பிறகுதான் கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டிருக்கிறது. எனவே இனியும் காலதாமதம் செய்யாமல் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தாராள ஓய்வூதிய விதிகள் திட்டம் குறித்து இந்த அரசு

[திரு. ஈ. எஸ். வெங்கடேசன்] [1984 பிப்ரவரி 20

நிதித் துறை ஆணை 57-ல் 1980-ஆம் பிப்ரவரி மாதம் பிறப்பித்திருக்கிறது. அந்த ஆணைப்படி 1979 அக்டோபர் 1 ஆம் தேதி பணியில் இருப்பவர்களுக்குத்தான் அது பொருந்தும். அது கூடாது. எல்லோருக்கும் பொருந்தும் என்பதுதான் நீதிமன்றத் தீர்ப்பு. ஆகவே ஓய்வு பெற்ற எல்லோருக்கும் பயனைக் கொடுக்க வேண்டும்; சீக்கிரத்தில் கொடுக்க வேண்டும்; எந்தவிதமான பாக்கியும் இல்லாமல் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை தங்களிடம் உறுதியளித்ததுபோல் சீக்கிரமாக இத்தோடு முடித்துக்கொண்டு, அமர்கிறேன்.

(நண்பகல் 12-00)

## 3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (2) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு குறித்து.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு செய்தபடி, மேலவைக் கூட்டம் இன்றுடன் முடிவடைந்து, மீண்டும் 23—2—1984 அன்று காலை 9.30 மணிக்குக் கூடும். அப்போது ஆளுநர் உரையின் மீதான விவாதம் தொடர்ந்து நடைபெறும். 21—2—1984, 22—2—1984ல் கூட்டமில்லை. மேற்கொண்டு நிகழ்ச்சி விபரம் பின்னால் முடிவு செய்யப்படும்.

## 2. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

**திரு. செ. முத்துசாமி:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் உரையின் மீது பேசுவதற்கு வாய்ப்பு கிடைத்தது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். ஆளுநர் உரையில் பல்வேறு பிரச்சினைகள் குறித்து, அரசு அறிவிப்பு வழங்கியிருக்கிறது. அவற்றிலே வரவேற்கத்தக்க அம்சமாக அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் ஓய்வு பெறும்போது 10,000 ரூபாய் தர வேண்டுமென்பதற்காக 5,000 ரூபாயை அரசுப் பணத்திலிருந்து தருவோம் என்று அறிவித்திருக்கிறார்கள். இதனால் அரசுக்கு ஆண்டுக்கு சராசரி 5 கோடி ரூபாய் செலவாகும். நான் அரசிடம் மிகப் பெரு மனத்தோடு ஒன்றை வேண்டிக்கொள்வேன். 10,000 ரூபாய் ஓய்வு பெறும்போது வழங்கும் திட்டம்பற்றி நீண்ட காலமாக அறிவித்து வந்தோம். 5 கோடி ரூபாய் அந்தத் திட்டத்திற்காகத் தர முன் வரக்கூடிய அரசு, இன்னும் கொஞ்சம் பெரு மனதோடு, மாதாமாதம் 20 ரூபாய் கட்ட வேண்டுமென்று



1984 பிப்ரவரி 20] [திரு. செ. முத்துசாமி]

சொல்லாமல், எல்லோருக்கும்—ஆசிரியர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும்—10,000 ரூபாய் அளிக்கப்படுமென்று தாராளமாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தது, 5,000 ரூபாய்வரை ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் பணத்தைக் கட்டிய பிறகு, மீதியை ஆகும்வரை, அந்தப் பணத்தின் நிலை என்ன என்று சொல்லவில்லை. அதுபற்றி அரசு விரைவாகப் பரிசீலித்து, அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதனால் ஊழியர்களுக்குப் பெருத்த பாதகம் ஏற்படுமே தவிர, நன்மை ஏற்படாது.

அடுத்து, நான்காம் ஊதியக் குழு இந்த ஆண்டுக்குள் அறிவிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதை நான் வரவேற்கிறேன். இது, இந்த ஆண்டுக்குள் பொதுத் தேர்தல் வரும் என்பதைத்தான் காட்டுகிறது. ஆகவே இதை வரவேற்கிறேன். பொதுத் தேர்தலுக்கு முன்னால் நான்காம் ஊதியக் குழு அமைக்கப்படலாமென்று யூகிக்கிறேன். இந்த அரசு நான்காம் ஊதியக் குழுவை நியமிக்க முன் வந்த பிறகு, காலம் தாழ்த்தாது, உடனடியாக அதை நியமிக்க வேண்டுமென்று நான் பணிவோடு வேண்டிக்கொள்கிறேன்.

அடுத்து, மாவட்டங்களைப் பிரித்திருக்கிறார்கள். நான் சென்ற முறை பேசும்போதுகூட, சேலம் மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட வேண்டும்; நாமக்கல் மாவட்டம் என்று ஏற்படுத்த வேண்டுமென்று பல்வேறு வசதிகளையும், நிலைமைகளையும் வைத்துச் சொன்னேன். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்கள், மாவட்டங்கள் பிரிக்கப்படும்போது, கவனிக்கப்படுமென்று வாக்குறுதி தந்தார்கள். சேலம் மாவட்டம், இப்போது இருப்பதிலே மிகப் பெரிய மாவட்டம். அதைவிட சிறிய மாவட்டங்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு சேலம் மாவட்டம் பிரிக்கப்படாமல் இருப்பதை உடனடியாகப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு சேலத்தை இரண்டாகப் பிரித்து, நாமக்கல் மாவட்டம் என்று தனி மாவட்டத்தை ஏற்படுத்த வேண்டும். இதை அரசின் மேலான கவனத்திற்கு, அவை முன்னவர் அவர்களின் மூலமாக, வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தது, இன்றைக்கு தமிழாசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாக்கப்பட வேண்டுமென்பதற்கு உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு வந்த பின்னரும், கல்வித் துறை அதுபற்றி ஊறுகாய் போட்டுக் கொண்டிருக்கக் காரணம் என்ன? தமிழாசிரியர்கள்மேல் கல்வித் துறைக்கு என்னதான் கோபம்? அவர்கள்மேல் என்னதான் வேகம்? தனி மனிதர்களுக்கு இருக்கக்கூடிய விருப்பு வெறுப்பின் அடிப்படையில் இலாக்கா இருக்கிறதா? நீதிமன்றத்தில் மிகத்

[திரு. செ. முத்துசாமி] [1984 பிப்ரவரி 20

தெளிவாகத் தீர்ப்பு அளிக்கப்பட்ட பின்னர், தீர்ப்பை அமல்படுத்தாமல்,
கல்வித் துறை நத்தைப் போக்கில் இருக்கிறதே. எந்தத் துறையிலும் இல்லாத
அளவுக்கு மெதுவாக, மெத்தனமாக இருக்கக் காரணம் என்ன? தமிழை
ஆட்சிமொழியாகக் கொண்டு, தமிழுக்கு மாநாடு நடத்தி, உலகத் தமிழ்
மாநாடு நடத்திய தமிழ் நாட்டில், தமிழ் அறிந்தவர்கள், தமிழ் ஆய்ந்தவர்கள்
அமைச்சர்களாக உட்கார்ந்து கொண்டிருக்கும்போது, தமிழாசிரியர்கள்
நிர்வாகத்திற்கு வரத் தகுதியுண்டு என்று உயர்நீதி மன்றம் தீர்ப்பு அளித்த
பின்னரும், அதை இன்னும் அமலுக்குக் கொண்டு வாராமலிருக்க என்ன
காரணம்? கல்வித் துறையில் இருப்பவர்களின் கோபம்தான் என்ன? தமி
ழாசிரியர்களுக்கு நிர்வாகம் செய்யத் தெரியாது என்று சொல்கிறார்களா?
தமிழ் படித்த நீங்கள் எல்லாம் திறமையாக நிர்வாகம் செய்யும்போது, தமிழா
சிரியர்கள் செய்ய முடியாதா? * * *
ஆசிரியர் தொகுதி தேர்தல்கள் நடக்கும் நேரம் இது. இந்த நேரத்தில் இதை
யிதை இப்படிச் செய்ய வேண்டுமென்று கூறுவது என்ன நியாயம்? கல்வித்
துறையின் ஒருவிதமான போக்கை நான் எண்ணிப் பார்க்கிறேன். திரு.
அவினாசிலிங்கம் செட்டியார் அவர்கள் பெருமைக்குரியவர்கள்; திரு. சி.
சுப்பிரமணியம் அவர்கள் பெருமைக்குரியவர்கள்; திரு. பக்தவத்சலம்
அவர்கள் பெருமைக்குரியவர்கள்; டாக்டர் நாவலர் அவர்கள் பெருமைக்குரிய
வர்கள்—இவர்களெல்லாம் பணியாற்றி வந்த இந்தக் கல்வித் துறையிலே, திரு.
அவினாசிலிங்கம் செட்டியார் அவர்கள் காலத்திலேயே தமிழுக்கு முன்னுரிமை
வழங்க வேண்டுமென்று தெரிவித்த கால கட்டத்தில், இன்றைக்குத் தமிழாசிரி
யர்களுக்குப் பதவி தராமல் தடுத்து நிறுத்த கல்வித் துறைக்கும், கல்வி
அமைச்சரவர்களுக்கும் என்ன வந்தது? அவை முன்னவர் அவர்கள்
மூலமாக பணிவோடு வேண்டுகோளாகக் கேட்கிறேன். தயவுசெய்து இதை
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்ல
வேண்டும். தமிழ் ஆசிரியர்களுக்கு தயவுசெய்து தலைமை ஆசிரியர் பதவி
தாருங்கள். தேர்தலுடன் இதை ஏன் சம்பந்தப்படுத்த வேண்டும்? அவ்வளவு
பெரிய பொறுப்பில் இருப்பவர்கள் இப்படிச் செய்வது நியாயம்தானா? தர்மம்
தானா?

அடுத்து, தலைமை ஆசிரியர் பதவி தந்து விட்டு, பின்னால் சம்பள உயர்வு
வரும் என்று சொல்லி, 50 ரூபாய் இடைக்கால நிவாரணம் தந்தார்கள்.
சம்பள உயர்வு இடைக்கால நிவாரணத்தை விட அதிகம் வரும் என்பதுதானே
இடைக்கால நிவாரணம் தருவதன் நோக்கம். ஆனால் இன்றைக்கு அப்படி

*** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



1984 பிப்ரவரி 20] [திரு. செ. முத்துசாமி]

50 ரூபாய் விதம் கொடுத்த இடைக்கால நிவாரணத்தை 2,000 ரூபாய், 2,500 ரூபாய் என்று பிடித்தம் செய்கிறார்கள். என்ன வேடிக்கை? இதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. அக்கவுண்ட் டெஸ்டில் பாஸ் செய்யாமல் இருந்தால், அவர்கள் 50 ரூபாயை இடைக்கால நிவாரணமாக 1986 ஆம் ஆண்டு வரை வாங்கிக் கொள்ளலாம். ஆனால் பாஸ் செய்ததற்குப் பின்னால் சம்பளம் குறையும் என்றால், என்ன வேடிக்கை இது? ஏற்கெனவே பாஸ் செய்த தலைமை ஆசிரியர்கள் இருக்கிறார்களே. அவர்களிடத்திலிருந்து எந்தப் பிடித்தமும் இல்லை. ஆனால் இப்போது பாஸ் பண்ணியிருக்கிறார்களே, அவர்களிடமிருந்து பிடித்தம் செய்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் தேர்வில் தேர்ச்சி பெறாமல் இருக்கிறார்களே, அவர்களுக்கு லாபம். இப்படி பாஸ் பண்ணியிருப்பவர்களிடத்திலிருந்து பிடித்தம் செய்வது என்ன நியாயம்? இப்படி ஒரு தவறு இழைக்கலாமா? தலைமையாசிரியராகப் பணியாற்றியவர் கல்வி அமைச்சராக வந்திருக்கிறார். இத்தகைய தீங்கு அவர்களுக்கு வரலாமா? இதை தயவுசெய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த விதத்திலாவது உடனடியாக இதனைப் பரிசீலனை செய்து நீதி வழங்க வேண்டும். ஒருவேளை இது தெரியாமல் வந்திருக்கிறதா, இல்லை ஆசிரியர்கள் மீது கோபமா? மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் தானே பிளஸ் 2 கல்வியை முன்னுக்குக் கொண்டு வர வேண்டியவர்கள். அவர்கள் இப்படி கேவலப்படுத்துவது, சஞ்சலப்படுத்துவது என்ன நியாயம்? இப்படிச் செய்தால் எப்படி கல்வித் துறை வாழும், வளரும்?

அடுத்து, முற்படுத்தப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களை உயர்த்துவோம் என்று அறிவிப்பு தந்தார்கள். 250 ரூபாய் அவர்கள் கட்ட வேண்டும், பயிற்சி அளிக்கிறோம் என்று சொன்னார்கள். இதுவரை அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படவில்லை. இப்படி அறிவிப்பு வழங்குவதற்கும், விளம்பரத்திற்கும், நிர்வாக இயந்திரத்திற்கும் சம்பந்தமே இல்லையென்று சொன்னால், விவரம் அறிந்த ஆசிரியர்கள் என்ன எண்ணுவார்கள்? இதுவரை அவர்களுக்குப் பயிற்சிக்கான வழிவகை ஏற்படுத்தப்படவில்லை. 1985 ஆம் ஆண்டு ரிட்டையர் ஆகிற உட்படுத்தப்பட்ட ஆசிரியர்களுடைய நிலைமை என்ன? இப்படி முடிவு எடுக்கப்படாமல் இருப்பதற்கு பெயர்தான் கல்வித் துறையா? அதுபோல் ஒரு பிரிவிற்கும் இன்னொரு பிரிவிற்கும் பாரபட்சம் காட்டப்படுகிறது. ஒரு பிரிவினருக்குச் சலுகை அளிக்கப்படுகிறது. இன்னொரு பிரிவினர் கேவலப்படுத்தப்படுகிறார்கள்.

அடுத்து, முதுகலை பட்டதாரி ஆசிரியர்களுடைய பிரச்சினைபற்றிக் குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

**திரு. சி. இராமலிங்கம் :** எதிர்க் கட்சித் தரப்பிலே சீட்டுகள் எல்லாம் காலியாக இருக்கின்றன. சபை முடிந்துவிட்டது என்று கருதி எல்லோரும் வீட்டுக்குப் போய்விட்டார்களா ?

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** வெளியே போயிருக்கும் எதிர்க் கட்சி வரிசையிலே இருப்பவர்கள் வருவார்கள் என்று கருதுகிறேன். காலியாக இருப்பதற்கு என்ன காரணம் என்று எனக்குத் தெரியவில்லை.

**திரு. செ. முத்துசாமி :** முதுகலை பட்டதாரி ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், அவர்களுக்கான சர்வீஸ் ரூல்ஸ் எல்லாம் போடப்பட்டு விட்டது. அப்படியும் இதுவரை அவர்கள் வரன்முறை செய்யப்படவில்லை. அதுபோல் பட்டதாரி ஆசிரியர்கள், தமிழ் ஆசிரியர்கள், பிசிக்கல் டைரக்டர்ஸ் இவர்கள் எல்லாம் இதுவரை 10 (ஏ) (1) ன் கீழ்தான் பணியாற்றுகிறார்கள். ஆந்திராவில் இப்படி தற்காலிகமாக இருப்பவர்கள் எல்லாம், அமைச்சரவையின் முடிவின் அடிப்படையில், சர்வீஸ் கமிஷனுக்குச் சென்று ஒப்புதல் பெற வேண்டிய அவசியமில்லை என்று முடிவெடுத்து, அதன் அடிப்படையில் பணி வரன்முறை செய்திருக்கிறார்கள். நான்கு மாதங்களுக்கு முன் நடந்த கன்சல்டேட்டிவ் கமிட்டி கூட்டத்திலும் இதுபற்றி முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதை உடனடியாக அமுலுக்குக் கொண்டு வந்து தற்காலிகமாகப் பணியாற்றும் அத்தனை ஆசிரியர்களையும் பணி வரன்முறைப்படுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஊக்க ஊதிய உயர்வுபற்றி. பேரறிஞர் அண்ணா அவர்கள் நல்ல உணர்வோடு, நல்ல எண்ணத்தோடு இதனை அமுலுக்குக் கொண்டு வந்தார்கள். உயர் கல்வி படித்துவிட்டு புரமோஷன் இல்லாமல் பணியாற்றுபவர்களுக்கு, அவர்களை ஊக்குவிக்க ஊக்க ஊதியம் தரப்பட்டது. இன்றைக்கு எம்.இடி. பட்டம் பெற்ற பி.டி. ஆசிரியர்களுக்கெல்லாம் இது வேண்டுமென்று கேட்கப்பட்டபோது, "உயர் நிலைப் பள்ளியில் அண்ணா காலத்தில் இல்லை. ஆகவே இல்லை" என்று சொல்கிறார்கள். இன்றைக்கு வந்திருக்கிற கால கட்டத்தில் அவர்களுக்கு அதை வழங்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்.





(பிற்பகல் 12-10)

இப்போது இருக்கக்கூடிய திட்டத்தையும் எடுத்துவிட்டார்கள். இது அண்ணா கொண்டுவந்த திட்டம். இப்போது அண்ணா தி.மு.க. ஆட்சி நடக்கிறது. அண்ணா கொண்டுவந்த திட்டத்தை அண்ணா தி.மு.க. ஆட்சியில் நீக்கலாமா ? இது என்ன நியாயம் ? மொத்தமாகப் பணம் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் புத்தகம் வாங்கக்கூட இது போதாது என்று ஆசிரியர்கள் சொல்கிறார்கள்.

அதைவிட இன்னொரு வேடிக்கை. 5—9—1983-க்கு முன்னால் தேர்வு எழுதியிருந்து, பாஸ் செய்திருந்து, இரண்டாண்டுகள் நிர்வாக நடைமுறைத் தாமதம் காரணமாக, யுனிவர்சிட்டியின் தவறு காரணமாக, சான்று வராமல் இருந்தால், அவர்களுக்கு இனிமேல் சாங்ஷன் செய்யக்கூடாது என்று சொன்னால். அது என்ன நியாயம்? 5—9—1983-ல் உத்தரவு வருகிறது. அதற்கு முன்பு பாஸ் செய்தவர்களுக்குக் கிடையாது என்றால், அது என்ன நியாயம்? இது அரசியல் சட்டத்திற்கு விரோதம், முரண்பாடு இல்லையா ? டிஸ்கிரிமினேஷன் என்று வாராதா? ஒருவருக்குத் தந்துவிட்டு, இன்னொருவருக்குக் கொடுக்கவில்லையென்றால், அது என்ன நியாயம் ? ஆனால் என்ன நடக்கிறது அந்தத் துறையில்? காசு கொடுத்தால் காரியம் நடக்கிறது, காசு கொடுக்காவிட்டால் சாங்ஷன் கிடையாது. இதை சிலமுறை நானே எடுத்துச் சொல்லியிருந்தும், எந்தவித நடவடிக்கையையும் எடுக்க கல்வித் துறைக்கு தைரியம் இல்லையா? தெரிந்தும் தெரியாததைப் போல பெரிய பொறுப்பில் இருப்பவர்கள் இருந்தால், நிர்வாகம் நாட்டிலே எப்படி நடக்கும்? விவரம் தெரிந்த ஆசிரியப் பெருமக்களுக்கு இப்படி ஒரு பாதகம் ஏற்படுகிறபோது, எவ்வளவு பெரிய பிரச்சினையாக இது நாடு பூராவும் பரவும்? அமைச்சரவை இதைப்பற்றிச் சிந்திக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தது 200 வேலை நாட்கள். அண்ணா காலத்தில் 200 நாட்கள் என்று இருந்ததை மீண்டும் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கோத்தாரி கமிஷனில் சிபாரிசு செய்யப்பட்டு, ஐந்தாவது திட்டத்தில் சிபாரிசாக வந்து, இதை அண்ணா அவர்கள் கொண்டு வந்தார்கள். இப்போது அதை நீக்கியிருக்கிறார்கள். இப்படி நீக்கியது, ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், தவறு. மற்றவர்களைப்பற்றிக் கவலையில்லை. ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், அதை ரிவைஸ் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 200 நாட்கள் 220 நாட்களாக்கப்பட்டிருக்கிறது. காரணம் சொல்லவில்லை. அப்படி ஆக்கப்பட்டிருப்பதற்கு கல்வித் துறைக்குக் காரணம்

சொல்லத் தெரியவில்லை. அப்படிச் சொல்லக்கூடிய ஞானம் கல்வித் துறைக்கு இல்லாமல் போய்விட்டதா? கேள்வி கேட்பதற்குத்தான் நாங்கள் இருக்கிறோம், பதில் சொல்ல நாங்கள் தயாரில்லை என்று சொன்னால், நீங்கள் சிந்திக்க வேண்டும். வேலை நாட்களை 200 நாட்களாக ஆக்க வேண்டும், அல்லது 220 நாட்களுக்குரிய சலுகைகளைத் தர வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் பட்டதாரிகளாக, தமிழாசிரியர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஒரு மாநாட்டில் கல்வியமைச்சர் கலந்துகொண்டு, அதை விரைவாகச் செய்வேன் என்று சொன்னார்கள். அந்த மாநாட்டுக்கு, அது சேலத்தில் நடந்தபோது, யார் யாரை அழைக்கலாம், யார் யாரை அழைக்கக்கூடாது என்று விதிமுறைகள் வகுத்தார்கள். என்னை அழைக்கக்கூடாது என்று சொன்னார்கள். பிறகு மாநாடு நடக்கும்போது, ஆசிரியர் மத்தியில் குழப்பம் ஏற்படும் என்று சொல்லி, என்னைப் பேச அழைக்க வேண்டுமென்று சொல்ல, என்னைப் பேச அழைத்தார்கள். நான் அங்கேயே சொன்னேன், "அமைச்சராக வந்தவர்கள், துதி பாடுபவர்களை நம்பக்கூடாது. இடித்துரைக்கும் நண்பர்களைப் பெறவேண்டுமென்று அண்ணா சொன்னார்கள். நான் உங்களுக்கு அண்ணா சொன்னதுபோல் இடித்துரைக்கும் நண்பனாக இருப்பேன், இந்தக் கோரிக்கையை நீங்கள் நிறைவேற்ற வேண்டும்" என்று சொன்னேன். ஆந்திர மாநிலத்தில் செகண்டரி கிரேடு ஆசிரியர்கள், பட்டதாரியாக இருந்தால், தெலுங்கு பண்டிதர்களாக இருந்தால், பி.டி. சம்பளம் தருகிறார்கள், அதைப்போல் இங்கும் பி.டி. சம்பளம் தர வேண்டுமென்று கேட்டபோது, அது பரிசீலனையில் இருக்கிறது, விரைவில் செய்வோம் என்று சொல்லி ஒரு ஆண்டு ஆகிறது. இதுவரையில் செய்யவில்லை. என்ன நியாயம்? ஒவ்வொரு சங்கத்தையும் அழைத்து, இன்னின்ன சங்கங்கள் இன்னின்ன செய்ய வேண்டுமென்று சொல்லி, * * * அமைச்சரவைக்கு சில தனியான நாகரீகம் இருக்கிறது, பண்பாடு இருக்கிறது. * * *

திரு. சி. இராமலிங்கம்: மாண்புமிகு உறுப்பினர் இந்தக் குற்றச்சாட்டுக்களைச் சொல்லும்போது, சம்பந்தப்பட்ட அமைச்சர் இந்த அவையில் இல்லை. ஆனால் அவர் மீது குற்றச்சாட்டைச் சுமத்தி, * * * அவர் சொன்னதாக இங்கே சொல்கிறார். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



மாண்புமிகு துணைத் தலைவர்: ஒரு உறுப்பினரோ அமைச்சரோ இல்லாதபோது, கூடுமான வரையில் அவர் தனிப்பட்ட முறையில் என்ன செய்தார், என்ன செய்யவில்லையென்று சொல்வதைத் தவிர்ப்பது நல்லது.

திரு. செ. முத்துசாமி: துணைத் தலைவர் அவர்களே, மீண்டும் அமைச்சர் இங்கே வரும்போது நானும் அதைச் சொல்ல வரவேண்டுமென்று சொல்வது கஷ்டம். நடந்ததைச் சொல்ல வேண்டிய ஒரு நெருக்கடிக்கு ஆளாகியிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: எப்படியிருந்தாலும் அவர் இருக்கிறாரா, இல்லையா என்பதல்ல. ஆனால் ஒரு சாராரை * * * என்ற உத்தேசத்தில் பேசக்கூடாது. அதற்கான ஆதாரம் இருந்தால், இங்கே தர வேண்டும். அவர் செய்வார், செய்திருப்பார் என்று பேசக்கூடாது. இன்னாரை ஆதரிக்கக்கூடாது என்று சட்டம் எங்கும் கிடையாது. அவர் வாக்காளராக இருக்கும் அந்த உரிமையில் வேலை செய்யலாம். ஆனால் அதற்காக குற்றச்சாட்டாகச் சொல்ல வேண்டிய அவசியமில்லை.

(பிற்பகல் 12-20)

திரு. பா. ரா. தாமஸ்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, பல இயக்கங்கள் தேர்தலில் ஈடுபட்டிருக்கின்றன. இந்த நிலையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பெயரை இங்கே இழுப்பது என்பது அவ்வளவு நல்லதல்ல என்றுதான் நான் கருதுகிறேன். இயக்கங்களின் மூலமாக வேட்பாளர்கள் தேர்தலுக்காக என்று நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு தங்களுக்கு ஆதரவு கோரி பலரை அணுகலாம், அரசியல் கட்சிகளைக்கூட சந்தித்து ஆதரவு கோரலாம். எனவே இப்படிப்பட்ட நிலையில் அமைச்சர் அவர்கள் இல்லாத நேரத்தில் அவர் திட்டவட்டமாக எந்த ஒரு வேட்பாளரையும் ஆதரித்தார் என்று சொல்லுவது அவ்வளவு முறைதானா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் பேசுகிறபோது, நான் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தேன். கடைசியாக, இப்போது பேசி, விவாதத்திற்குட்படுத்தப்பட்ட பகுதி கல்வியமைச்சர் என்கிற பெயரைச் சொல்லாமல், குறிப்பிடாமல் பேசிக்கொண்டு வந்த பகுதியாகும். அதுதான் குறிப்பில் இருக்கும் என்று கருதுகிறேன். அவர் எப்படி அதை முடிக்கப் போகிறார் என்று பார்த்து அதைக் கடைசியாக எழுப்ப வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் குறிக்கிட்டிருக்கிறார்கள். அவர்கள் இப்போது விவாதத்திற்குக் கொண்டு வந்துவிட்ட காரணத்தால், மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களைப் பற்றி அப்படி ஒரு குற்றச்சாட்டை அவர்கள் இங்கே குறிப்பிடும்போது, அவர்கள் இங்கே அவையில் இருந்தால் அவர் பதில் அளிப்பார். அவர் இல்லையென்றால் அவருடைய சார்பில் நாங்கள் பதில் அளிக்கிறோம். ஆனால் ஆதாரம் இல்லாமல், நமக்கு சான்று கிடைக்காத ஒரு செய்தியை, தேர்தலுக்கு யார் யார், யார் யாருக்கு ஆதரவு அளிக்கிறார்கள் என்பதுபோன்ற கருத்துக்களைக் குற்றச்சாட்டாகச் சொல்லுவது அவ்வளவு முறையல்ல. ஆகவே இந்த விவாதங்களை—அந்தப் பகுதிகளை—நம் அவையின் குறிப்பேட்டிலிருந்து நீக்குவதுதான் பொருத்தமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் தனிப்பட்ட முறையில் ஒருவர் இதைச் செய்தார் அல்லது அதைச் செய்தார் என்று பேசுவதைத் தவிர்ப்பது நல்லது. மற்றபடி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட விஷயத்தைப் பொறுத்தவரையில், நான் அவைக் குறிப்பேடுகளைப் பார்த்து முடிவு செய்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, துணைத் தலைவர் அவர்கள் கூறியதற்கு இணங்க அவர்கள் குறிப்பிட்ட யோசனையைத்தான் நானும் கையாளுவதாக இருந்தேன். இப்படியெல்லாம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அடுத்ததற்குப் போகலாம் என்று இருந்தேன். ஆனால் அதற்குள்ளாக உணர்ச்சி வேகம் வந்துவிட்டது. நான் பொதுவாக இருக்கிற நிலைமையைத்தான் சொல்லிக்கொண்டு வந்தேன் . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** தேர்தல் சமயத்தில் உறுப்பினர் அவர்கள் உணர்ச்சி வயப்படாமல் பேசுவதுதான் நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி:** துணைத் தலைவர் அவர்களே, நான் உணர்ச்சி வயப்பட வேண்டும் என்று விரும்பவில்லை. பொதுவாக உணர்ச்சி வயப்படுகின்றவனுமல்ல. இந்த விஷயத்தில் நான் பொதுவாக இருக்கிற நிலவரத்தை எடுத்துச் சொல்ல வேண்டும், இது அமைச்சரவைக்குத் தெரிய வேண்டும் என்ற உணர்வில்மட்டும்தான் சொன்னேன். வேகப்பட வேண்டுமென்பதற்காக அல்ல. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புரிந்து கொண்டிருக்கி



றார்கள். அதுபோதும் எனக்கு. ஆதாரம் வேண்டுமா, அது வேண்டுமா, இது வேண்டுமா என்ற நிலைக்கு நான் போக விரும்பவில்லை. ஆனால் அமைச்சர் அவர்களின் பெயரை யார் யார் பயன்படுத்துகிறார்கள் என்ற விவரம் அவர்களுக்குத் தெரிந்தால் மட்டும் போதும். அதற்காகத்தான் நான் இதைக் குறிப்பிட்டேன்.

அடுத்து, அங்கீகரிக்கப்பட்ட சங்கம் ஒன்று ஒரு தமிழாசிரியர்மீது ஒரு புகார் கொடுக்கிறது. அந்தப் புகாரையே ஒரு ரெபரன்ஸ் ஆகக் கொடுத்து உடனே அந்தத் தமிழ் ஆசிரியர் மாற்றப்படுகிறார். இது எந்த விதத்தில் நியாயம் என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன். ஒரு அங்கீகரிக்கப்பட்ட சங்கம் ஒரு ஆசிரியர் மீது ஒரு புகாரைச் சொன்னால் உடனே அவர் மாற்றப்பட வேண்டுமா? இது முறைதானா? தேர்தல் நேரமாக இருக்கிற காரணத்தால்தான், மாறுதல் நடக்கிறது. ஆசிரியரை மாற்றுவோம் என்று சொல்லச் செய்கிறார்கள். கீழே இருப்பவர் பேசுகிறார், “என்னாலே உங்களை மாற்ற முடியும் என்று”. ஒரு ஆசிரியர் இன்னொரு ஆசிரியரைப் பார்த்து மிரட்டுகிறார். எங்களுக்கு மேலே தொடர்பிருக்கிறது, உன்னை உடனே மாற்ற முடியும் என்று மிரட்டுகிறார். இது நல்லதுதானா? ஒரு ஜனநாயக நாட்டில், அரசுப் பள்ளிகளில் பணியாற்றுகிறவர்களை மிரட்டுகிற போக்கு வளர்ந்து வருவது நியாயம்தானா? மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இதையெல்லாம் கொண்டு வர வேண்டுமென்றுதான் நான் இங்கே இதைக் குறிப்பிடுகிறேன். வேண்டுமானால் அரசு சி.ஐ.டி.க்களைப் போட்டு இப்போக்கு குறித்து விசாரணை செய்யட்டும், வாட்ச் செய்யட்டும். உண்மையைக் கண்டு பிடிக்கட்டும். இதெல்லாம் ஜனநாயகத்திற்கு உகந்தது தானா என்று பார்க்கட்டும். இப்படிப்பட்ட ஜனநாயகத்திற்கு விரோதமான செயல்களை யார் செய்தாலும், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கட்டும். அரசின் காவல் துறையின் மூலம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையின் கீழ் செயல்படும் காவல் துறையின் மூலம், சி.ஐ.டி.. இலாக்காவின் மூலமாக இப்படியெல்லாம் நடப்பது சரிதானா என்று பரிசீலனை செய்து பார்க்கட்டும் என்றுதான் கேட்டுக்கொள்கிறேன். இதையெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கே விட்டு விடுகிறேன். அவருடைய முடிவிற்கே விட்டுவிடுகிறேன். காரணம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கான சக்தி படைத்தவர்கள். இதுதான் என்னுடைய எண்ணமே தவிர, யார்மீதும் குற்றம் சாட்ட வேண்டும் என்பதல்ல, அமைச்சரவை மீது குற்றம் சாட்ட வேண்டும் என்பதல்ல. நடக்கிற நடைமுறைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர

வேண்டும் என்பதற்காக மட்டுமே இவற்றையெல்லாம் இங்கே குறிப்பிட்டேனே தவிர, வேறொன்றுமல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன், அது உண்மையா இல்லையா என்பதை நீங்களே முடிவு செய்யுங்கள் என்று சொல்லிக்கொள்கிறேன். அதிலே பெருந்தன்மையோடு செய்வார்கள் என்று நம்புகிறேன். அந்த நம்பிக்கையிலே அந்த முடிவைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்கள் மாறுதலைப்பற்றி, தமிழாசிரியரை மாற்றுவதுபற்றி சென்ற முறைகூட பேசினேன். ஆனால் அதற்குப் பிறகும் கல்வித் துறையில் எந்த விதமான நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. ஓர் ஆசிரியரை மாற்ற வேண்டும் என்று ஒரு சங்கம் எழுதியிருக்கிறது. அச்சங்கத்தின் கடிதத்தை மேற்கோள் காட்டி ஓர் ஆசிரியர் மாற்றப்பட்டிருக்கிறார். அப்படி மாற்றுவதற்கு அந்தச் சங்கத்திற்கு எந்தவிதத்திலே அதிகாரம் இருக்கிறது? இதைப்பற்றி கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன். இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை. எனக்குக்கூட பதில் கொடுக்கவில்லை. இது எப்படி நியாயமாகும்? இது தான் தெரிந்தும் தெரியாதது போல இருக்கக்கூடிய போக்கு. நான் காரண காரியங்களைத் தெரிந்துதான் சொல்லுகிறேன். இதனால் தமிழாசிரியர் பாதிக்கப்பட்டிருக்கிறார். பட்டதாரி ஆசிரியர்கள் சங்கத்திடமிருந்து புகார் வந்திருக்கிறது என்று அதிகாரி ரெபரன்ஸ் தந்திருக்கிறார். இந்தச் சங்கத்தின் புகார் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்றால், இதற்குத் தீர்ப்பு இல்லையா? நீதி இல்லையா? அதைப்பற்றி நீங்கள்தான் முடிவு செய்ய வேண்டும் என்று முதலமைச்சருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நீதிக்குச் சோதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் இருக்கலாமா? ஏனென்றால் கல்வியமைச்சரிடம் கேட்டுக் கேட்டுப் பார்த்து விட்டேன். நீதி கிடைக்கவில்லை. கண்ணகி நெடுஞ்செழியனிடம் நீதி கேட்டதைப்போல கேட்டேன், ஆனால் கிடைக்கவில்லை. ஆகவே நீதி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இத்தகைய அதர்மம் நடக்கலாமா? அதிகாரபூர்வமாக கொடுத்தது பற்றிக் கவலையில்லாமல் இருக்கலாமா? ஆகவே இது குறித்து முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலத்தில் இருப்பவர்கள், கோயம்புத்தூரில் இருப்பவர்கள், நீலகிரியில் இருப்பவர்கள், பெரியார் மாவட்டத்தில் இருப்பவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மாற்றப்படுகிறார்கள். தேர்தல் சமயத்தில் அவர்கள் மிரட்டப்படுகிறார்கள். மாற்றலுக்குத் தயாராக இருங்கள் என்று மிரட்டல் நடக்கிறது. இதைக் காவல் துறை மூலமாக விசாரணை செய்து முடிவு எடுங்கள் என்று





சொல்லிக்கொள்கிறேன். இது குறித்து நீதி வழங்கும் உரிமையை அரசுக்கே விட்டுவிடுகிறேன். இது குறித்து இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், நியாயம் கிடைக்கும் என்று நம்பி இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்கிறேன்.

இடைநிலை ஆசிரியர்கள், பி.டி. ஆசிரியர்கள், தலைமையாசிரியர்களானால். அவர்களுக்குத் தனி ஊதிய விகிதம் தர வேண்டுமென்று சொன்னேன். இன்னும் எந்தவிதமான முடிவும் எடுக்கப்படவில்லை. இதுவரையில் செய்யப் படாமலிருப்பது நியாயமில்லை. இதையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்வித் துறையில் பல பதவிகள் காலியாக இருக்கின்றன. ஒரு பக்கத் திலே இயக்குநருக்கு எக்ஸ்டென்ஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. எக்ஸ்டென் ஷன் அவருக்குக் கொடுத்ததிலே நான் குறுக்கே நிற்கவில்லை. அவர் நல்லவர். தவறு ஒன்றும் செய்யாதவர். மிக மிக நல்லவர் என்பதை ஏற்றுக் கொள்கிறேன். தனி மனிதர் நிர்வாகம் என்ற அடிப்படையிலே அவர் உயர்ந்தவர் என்பது என்னுடைய கருத்து. எக்ஸ்டென்ஷன் கொடுப்பது அர சாங்கத்தின் கொள்கை. அதிலே நான் தலையிட விரும்பவில்லை. ஆனால் இன்றைக்கு இருக்கக்கூடிய பதவிகளில் யாரையும் நியமிக்காமல் இருக்கிறார் களே, அது ஏன் என்று கேட்கிறேன். அடிஷனல் டைரக்டர் பதவி, டெபுடி டைரக்டர் பதவி, சி.ஈ.ஓக்கள் பதவி ஆகியவைகள் இருக்கின்றன. இதிலே ஆட்களைப் போட தமிழகத்திலே ஆட்களே இல்லையா? பதவி உயர்வு கொடுக்க பட்டியலில் ஆட்கள் இல்லையா? எப்போது போடப் போகி றார்கள்? மாதக் கணக்கில் புரமோஷன் கொடுக்காத காரணம் என்ன? ஃபைலை வாங்கி வைத்துக்கொண்டு இண்டர்வியூ நடத்துகிறார்களா? வேறு ஏதாவது நடக்கிறதா என்பது எனக்குப் புரியவில்லை. சென்ற கூட்டத்தில் சொல்லப்பட்டு இரண்டு மூன்று பதவிகள் நிரப்பப்பட்டன. மற்றவை காலி யாக வைக்கப்பட்டிருப்பதன் காரணம் தெரியவில்லை. யாருக்காக அப்படியே வைத்திருக்கிறார்கள்? கல்வித் துறையிலே இருக்கக்கூடியவர்கள் இன்சார்ஜாக இருக்க வேண்டுமென்று ஏன் ஆசைப்படுகிறார்கள்? அவர் களுக்குப் புரமோஷன் கொடுக்க வேண்டியதுதானே. கல்வியமைச்சர் அவர்கள் வெளிநாடு சென்றுவிட்டாரா? இல்லையே இங்கேதானே இருக்கிறார். அப்படி யிருந்தும் ஏன் செய்யவில்லை? வெவ்வேறு காரியங்கள் நடக்கின்றனவே, இது ஏன் நடக்கவில்லை? ஆகவே இதை உடனடியாகச் செய்ய வேண்டு மென்று மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்கு அவை முன்னவர் அவர்கள் மூலமாக வைக்க விரும்புகிறேன்.

## ஆளுநர் உரையின் மீது விவாதம்

[திரு. செ. முத்துசாமி] [1984 பிப்ரவரி 20

ஆசிரியர்களுக்கென்று தனியாக வீட்டு வசதி வாரியம் செயல்பட்டு சாதித்து விட்டதாக கல்வித் துறை சாதனைப் பட்டியலில் வந்தது. அது சரியல்ல. அதை யார் தந்தார்கள் என்பதை அறிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இதே சபையிலேயே வலியுறுத்தினேன். இதுவரை விசாரணை செய்யப் பட்டதா? இதுவரை செய்யாத ஒன்றை சாதனைப் பட்டியலில் வெளியிட்டு மூன்று ஆண்டுகள் ஆகின்றன. சென்ற முறை கூட இது குறித்துக் கடுமை யான குற்றச்சாட்டைச் சாட்டினேன். இதற்கு அமைச்சர்கள் பொறுப்பு என்று சொல்லமாட்டேன். அதிகாரிகள் எழுதித் தந்தார்கள் என்பதற்காக அவர்கள் மீது சரியான நடவடிக்கை மேற்கொள்ளுங்கள் என்று சொன்னேன். ஆனால் இதுவரை வீட்டு வசதி வாரியம் இல்லை. இதை மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லுங்கள் என்று மாண்புமிகு அவை முன்னவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அன்றைக்கு நான் பேசும்போது முதலமைச்சர் அவர்கள் இல்லை. வீட்டு வசதி அமைச் சரும் கல்வி அமைச்சரும் இருந்தார்கள். "விரைவில் பரிசீலிக்கப்படும், இனிமேல் நாங்கள் ஆலோசிப்போம், பேசுவோம்" என்றார்கள். சாதனைப் பட்டியல் வெளிவந்த பிறகு, இனிமேல் பேசுவதில் என்ன நியாயம் என்று கேட்டேன். இதுவரை வரவில்லை. இது எந்தவிதத்தில் நியாயம், சரியாக இருக்க முடியும்? ஒரு ஆட்சியினுடைய, அரசாங்க இயந்திரத்தினுடைய தன்மையை மதித்து இனிமேல் சாதனைப் பட்டியல் வெளியிட்டால் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுமா? உங்கள் மீது இருக்கிற அக்கறையால் சொல்கிறேன். ஒரு சாதனைப் பட்டியல் என்றால், செய்து முடித்துவிட்டு சாதனைப் பட்டியலில் கொண்டு வாருங்கள். இத்தகைய பெரிய தவறு நடைபெறா வண்ணம் கல்வித் துறை பொறுப்பேற்க வேண்டாமா? இந்தப் பெரிய தவறுக்கு யார் காரணம் என்பதை உணர வேண்டாமா? காரணமாய் இருக்கிறவர்கள் ராஜிநாமா செய்துவிட்டு, அரசாங்க இயந்திரத்தை விட்டு, வெளியே செல்ல வேண்டாமா? பிறகு என்ன நியாயம் இருக்கிறது? சாதனைப் பட்டியல் வெளியிட்டுவிட்டு, சம்பந்தப்பட்டவர்கள் கையெழுத்திட்டு கொடுக்கிறார்கள் என்றால், அத்தகைய அதிகாரிகள், பொறுப்பானவர்கள் யார் என்று தெரிய வேண்டாமா? அந்தப் பொறுப்புக்குக் காரணமாக இருக்கின்றவர் களை வெளியேற்ற வேண்டும். இப்படி ஒரு நல்ல நிர்வாகத்திற்குக் கெட்ட பெயரை வாங்கிக் கொடுக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மத்திய அரசு "Good Administrator" என்கிற அருமையான ஒரு பட்டத்தை வழங்கியிருக்கிறது. அத்தகைய ஒரு அட்மினிஸ்ட்டி ரேஷனில் இப்படி மிகப் பெரிய ஒரு தவறு நடைபெறலாமா? இதுபற்றி சுட்டிக்காட்டிய பிறகும் கல்வித் துறை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க



1984 பிப்ரவரி 20] [திரு. செ. முத்துசாமி]

வில்லை. ஆகவேதான் நான் இதை அவை முன்னவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரு கிறேன். தயவுசெய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வளவு பெரிய தவறு நடைபெறலாமா? இப்படி ஒரு கல்வித் துறை இருக்கலாமா? இதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். கல்வித் துறை இருக்க வேண்டுமென் றால், கல்வித் துறையில் இருப்பவர்களும் நியாயமாக இருக்க வேண்டாமா? அதை அவசியம் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் எவ்வளவு நேரம் பேசுவதாக உத்தேசம்? சீக்கிரம் முடிக்க வேண்டும்.

**திரு. செ. முத்துசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் எனக்கு நேரம் தந்ததற்கு நன்றி. 1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் பஞ்சாயத்து யூனியன்களில் இருந்தவர்களையெல்லாம் அரசு ஊழியர்களாக ஆக்கினார்கள். அதன் பிறகு உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்ட மிடில் ஸ்கூல்களில் இருந்த ஆசிரியர்களுடைய பணி வரன்முறை செய்யப் பட்டது. 1978-க்கு முன்னாலும் பஞ்சாயத்து யூனியன்களிலிருந்து அப் கிரேட் ஆன அந்தப் பள்ளிகளில் பணியாற்றிக் கொண்டிருந்த செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கும் மற்ற ஆசிரியர்களுக்கும் பணி வரன்முறை செய்யப் பட்டது. இடையில் இருக்கக்கூடிய நூற்றுக்கணக்கான ஆசிரியர்களின் பணி வரன்முறை தேங்கிக் கிடக்கிறது. நான் கேட்டேன். 1978-க்கு முன்னாலே இருந்தவர்களை இவ்வாறு செய்வது என்றால், 1979-லும் செய்ய வேண்டியது தானே. 1978 ஆம் ஆண்டு தந்த அரசு 1979-லும், 1980-லும், 1981-லும் செய்ய வேண்டியதுதானே. சென்ற முறை கவனஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வரப்பட்டபோது, "விரைவாகச் செய்வோம்" என்று சொன் னார்கள். இதுவரை அவ்வாறு செய்யவில்லை. "விரைவாக" என்று சொன்னால் அதற்கு என்ன கால அவகாசம்? மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, விரைவு என்பதற்கு சட்டமன்றத் துறை அகராதியிலே தனியாக ஒரு பொருள் இருக்க வேண்டும். விரைவு என்றால் எத்தனை நாள், எத்தனை மாதம், அதுபோல் மிக விரைவு என்றால் எத்தனை நாள், எத்தனை மாதம் என்பது குறித்து சட்டமன்றத் துறை அகராதியிலே திட்ட வட்டமாக எழுதுங்கள். அதுபோல் அமைச்சர்கள் பரிசீலனை செய்கி றோம் என்று எழுதுகிறார்கள் என்றால் அதற்கு எத்தனை நாள், எத்தனை மாதம், எத்தனை ஆண்டு என்று தயவுசெய்து கால நிர்ணயம் செய்யுங்கள்.

[திரு. செ. முத்துசாமி] [1984 பிப்ரவரி 20

அதுபோல் கடுமையான விரைவு என்றால், அதற்கும் கால அவகாசம் நிர்ணயித்துக்கொள்ளுங்கள். அப்படியானால்தான் அமைச்சர்களுடைய பதிலிலிருந்து நாங்கள் எவ்வளவு நாட்களில் பதில் பெறுவோம் என்பதைத் தெரிந்துகொள்வதற்கு வாய்ப்பாக இருக்கும்.

அடுத்து, செகண்டரி கிரேட் ஆசிரியர்களைப் பொறுத்தவரை, இன்னும் கொடுக்காமல் இருக்கின்ற சலுகைகளை அவர்களுக்கு உடனடியாகக் கொடுக்க வேண்டும். அதுபோல் மாறுதல் நிலைமை போன்று இன்னும் இருக்கக் கூடிய அநியாயங்களை உடனடியாக மாற்றியமைக்க வேண்டும். தமிழ் ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாக வருவதற்குத் தகுதி உண்டா இல்லையா என்பதை அவை முன்னவர் அவர்களே, நீங்கள் அறிவித்தே தீர வேண்டும். ஒரு நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை அமுல்படுத்த வேண்டாமா? நீதிக்குத் தலைவணங்குவேன் என்று நாட்டுக்கு உயர்ந்த எண்ணத்தோடு அடித்துச் சொன்னார் நம்முடைய முதல்வர். அப்படிப்பட்ட முதலமைச்சர் அவர்களுடைய திறமையால் நாட்டில் நிர்வாகம் மிகச் சரியாக, சீராக நடைபெறுகிறது என்று பல்கலைக்கழகம் பாராட்டியுள்ளது. தமிழ் ஆசிரியர்களுக்குத் தலைமை ஆசிரியர் பதவியை வழங்காமல், இன்னும் காலதாமதம் செய்து கொண்டே போவதற்கு என்ன காரணம்? சென்ற முறை உடனே கையெழுத்து போடலாம் என்று கல்வி அமைச்சர் சொன்னார். சென்ற தடவை சட்டசபை நடந்ததற்கும் இப்போது நடப்பதற்கும் இடையே எவ்வளவு கால இடைவெளி இருந்திருக்கிறது. எத்தனை தமிழ் ஆசிரியர்கள் சங்கங்களினுடைய தலைவர்கள் எல்லாம் சென்று சந்தித்திருக்கிறார்கள்? இதுவரை பைல் வருகிறது, வருகிறது, வருகிறது, வருகிறது என்று தான் பதில் வருகிறது. வந்தபாடில்லை. மார்ச் 18-க்குப் பிறகு தான் வருமா? அதற்கு முன்னாலே வராதா? சென்ற தடவை சொன்னதை இதுவரை செய்யவில்லை என்றால், அது என்ன நியாயம்? சென்ற தடவை சொல்லியும் இதுவரை உத்தரவு போடாததற்கு என்ன காரணம்? மார்ச் 18 வரை என்ன செய்யப் போகிறீர்கள் என்று தமிழ் ஆசிரியர்கள் கேட்பதற்கு ஜனநாயகத்தில் உரிமை இல்லையா? தமிழ் ஆசிரியர்கள் சுதந்திரமாக வாக்களிக்க வேண்டாமா? இந்த அடிப்படையில் ஏன் பைல் நிற்கிறது? ஏன் அதற்கு 'கண்டிஷன்' போடுகிறார்கள்? தமிழ் ஆசிரியர்களுடைய சங்கத்தினுடைய தலைவர்கள் தேடுகிறார்கள். அவர்கள் உங்கள் அறத்தை இன்றுவரை புகழ்பாடியிருக்கின்றார்கள். ஆதலால் தயவு செய்து . . .



1984 பிப்ரவரி 20]

(பிற்பகல் 12-30)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மேலவையின் அனுமதியுடன் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. செ. முத்துசாமி:** துணைத் தலவர் அவர்களே, இங்கு எல்லாம் தமிழ் கற்றவர்கள். அவை முன்னவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழை அழகான முறையிலே கற்று நீங்கள் எல்லாம் நல்ல முறையிலே தமிழிலே ஆற்றலோடு பிரச்சினைகளைப்பற்றிப் பேசுகின்றீர்கள், நிர்வாகம் செய்கின்றீர்கள். தமிழ் கற்று, இந்த நாட்டிலே ஆசிரியர்களாக வந்திருக்கின்றார்கள். அவர்களுக்காக வந்த நீதிமன்றத் தீர்ப்புக்குப் பின்னரும் இன்னொரு தீர்ப்பு எழுத கல்வித் துறைக்கு அதிகாரம் உண்டா? அதிகாரத்தைப்பற்றி நான் இங்கே 'சேலன்ஜ்' செய்கின்றேன். ஒரு நீதிமன்றமே தீர்ப்பளித்த பிறகு, கல்வித் துறை அதற்குமேல் மாறி செயல்படுமா? இங்கே துணைத் தலைவராக இருந்துகொண்டிருக்கின்றார்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** நான் துணைத் தலைவராக இங்கே அமர்ந்திருக்கின்றபோது, உறுப்பினர் சொல்லுகின்ற கருத்துக்கு ஆதரவாகவோ, எதிர்த்தோ பதில் சொல்ல இயலாது என்ற நிலையிலே இருக்கிறேன். உறுப்பினர் அவர்கள் நான் என்ன சொன்னேன் என்பதைத் தவிர்த்துப் பாக்கியைப் பேச வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி:** துணைத் தலைவர் அவர்கள் சட்டப் பிரச்சினையை மிக அழகாக எடுத்துச் சொன்னார்கள் என்று சொல்லத்தான் நான் வந்தேன். நான் உங்களை சிக்கலில் இழுக்கவில்லை. ஒரு நீதிமன்றத்தின் தீர்ப்புக்குப் பின்னால் பரிசீலனை என்பதே கிடையாது. அது திட்டவட்டமான தீர்ப்பு. ஒரு ஆண்டு இரண்டு ஆண்டுகள் எடுத்துக்கொண்டுதான் தீர்ப்பு வழங்குகின்றார்கள். இந்தத் தீர்ப்பை அமுல்படுத்துவதற்கு என்ன? இவர் கோபமெல்லாம் தமிழ் ஆசிரியர்கள் மீது இருக்கிறது. நம் கல்வி அமைச்சர் அவர்கள் பட்டதாரி ஆசிரியாராக இருந்து தலைமையாசிரியராக ஆனதன் காரணத்தினால், அந்தப் பட்டதாரி ஆசிரியர்களுக்கும் தமிழ் ஆசிரியர்களுக்கும் ஆரம்பத்திலேயிருந்து ஒரு மாதிரியான உணர்ச்சி இருக்கின்றது. டாக்டர் சிதம்பரநாதன் செட்டியார் அவர்கள் தலைவராக இருந்த பாரம்பர்யம் மிக்க சங்கம் தமிழாசிரியர்கள் சங்கம். அன்றிலிருந்தே ஒரு கோபம் அவருக்கு இருந்த காரணத்தினால், அமைச்சராக வந்த பிறகும் கோபம் தீரவில்லையா என்பது எனக்கு ஒரு சந்தேகம். தயவுசெய்து தாங்கள் தலையிட்டு தமிழ் கற்ற தாங்கள், நல்ல ஒரு அட்மினிஸ்ட்ரேஷன் செய்யும்போது, இந்த தமிழ் ஆசிரியர்களுக்கு இதைச் செய்யக் கூடாதா?

**திரு. பா. ரா. தாமஸ் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஒரு வேளை இந்தப் பிரச்சினையைப் பொறுத்த அளவிலே, பட்டதாரி ஆசிரியர்கள், முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் இதுவரையில் அனுபவித்து வருகின்ற உரிமைகள் மாற்றியமைக்கப்படும் என்றால், இன்றுள்ள சட்ட ரீதியாக தடங்கல் ஏற்பட்டிருக்கலாம். என்னுடைய கருத்து என்னவென்றால் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியராக வர விரும்புகின்றவர்கள், பி.டி. முடித்து குறைந்தது ஐந்து ஆண்டுகள் பணியாற்றியிருக்க வேண்டும். மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியாக வருகின்ற ஒருவர் நம்முடைய தமிழ் நாடு கல்வி சட்ட விதிகளின்படி பி.டி. முடித்தாகி, பத்து ஆண்டு பணியாற்றியிருக்க வேண்டும். இதிலே உள்ள இந்தச் சிக்கல் காரணமாக ஒருவேளை தடங்கலும், தேக்கமும் ஏற்பட்டிருக்கலாமே தவிர வேறல்ல. இரண்டு வேறுபட்ட சங்கங்களுடைய உறவுகள் அவர்களுடைய கோரிக்கைகளைக் கலந்து ஆலோசிக்கும்போது, பார்த்துச் செய்ய வேண்டும். நாங்கள் கூட பல கோரிக்கைகளைக் கொடுக்கிறோம். ஆட்சியிலே சற்று தேக்கம் ஏற்படுகிறது. அப்படி தனிப்பட்ட முறையிலே குற்றமோ குறையோ சொல்லாது கூடுமான வரையிலே மேலே முயன்று பெறுவது நல்ல முறையாக இருக்கும் என்ற கருத்தைக் கூறிக்கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி : துறையினுடைய . . .**

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏதோ ஒரு காரணத்தை வைத்துக்கொண்டு அரசோ வேறு உறுப்பினரோ செய்கின்றபோது, அவர் இந்தக் காரணத்திற்காகத் தான் செய்திருக்க வேண்டும் என்று உள்காரணம் காட்டி பேசக்கூடாது என்பதுதான் நியதி. அவர் உறுப்பினராக இருக்கலாம் அல்லது அமைச்சராக இருக்கலாம். ஆகவே, ஏதோ ஒரு காரணத்தை மனதில் வைத்துக்கொண்டு, "நான் கருதுகிறேன், அதனுடைய காரணமாகத்தான் இந்த மாதிரி செய்திருக்கக்கூடும்" என்று உறுப்பினர் அவர்கள் சொல்வதைத் தவிர்ப்பது நல்லது. அது சட்ட சபையினுடைய சம்பிரதாயத்திற்கு உகந்தது அல்ல.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்களின் நல்ல வாதத்தை நான் அப்படியே ஏற்றுக் கொள்கிறேன். இங்கே பட்டதாரி ஆசிரியர்கள் குழு சார்பாக வந்திருக்கக்கூடிய சகோதரர் எழுந்து கல்வி அமைச்சர் அவர்களே, விரைவில் செய்ய வேண்டும்





என்று வாக்குறுதி அளித்த பின்னால், இவர் வேறு சிக்கல்களை எல்லாம் எடுத்துப் பேசுகின்றார்கள். அட்மினிஸ்ட்ரேஷனில் எவ்வளவு தூரம் அவர்களுடைய பங்கு இருக்கிறது என்று எனக்குத் தெரியாது. கல்வி அமைச்சர் அவர்களுடைய பங்கு மகத்தானது.

**திரு. பா. ரா. தாமஸ் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் உள்நோக்கம் கற்பித்துப் பேசக் கூடாது என்று சொன்ன பிறகும்கூட, என்னுடைய ஒரு கருத்துக்கு உள்நோக்கம் கற்பிப்பது முறையாகாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு மாறாக இங்கே அவர் பேசும்போது நோக்கம் கற்பிப்பதாகச் சொல்வது தவறு. கல்வி அமைச்சர் அவர்கள் தெளிவாகவே கூறியிருக்கிறார்கள். அப்படி இருக்குமோ என்று எப்படி இவர் அவருக்கு உள்நோக்கம் கற்பித்தார்? கல்வி அமைச்சருக்கு இவர் உள்நோக்கம் கற்பித்தால் நான் பதில் கூறுவேன்.

**திரு. பா. ரா. தாமஸ் :** நான் சார்ந்திருக்கின்ற சங்கத்தினுடைய கருத்து என்னவென்றால் இந்த மாநிலத்திலே தலைமையாசிரியராக தமிழாசிரியர்களுக்கு மட்டும் உரிமை இருக்கின்றதாகச் சொல்கின்றார்களா?

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** நான் ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். உறுப்பினர் திரு. தாமஸ் அவர்கள் அடுத்த பேசவிருக்கின்றார்கள். இந்த விவரங்களையெல்லாம் அவர் பேசும்போது எடுத்துச் சொன்னால், உறுப்பினர் அவர்கள் விரைவாகப் பேசி முடிப்பார்கள். நமக்கும் நேரம் கிடைக்கும்.

திரு. சி. இராமலிங்கம் அவர்கள் ஏதோ கேட்க விரும்புகின்றார்கள். அவர் அடுத்து பேசப்போவதில்லை. அந்தக் காரணத்தினாலே அவர் என்ன கேள்வி கேட்க வேண்டுமென்று நினைக்கின்றாரோ, அதைக் கேட்கலாம்.

**திரு. சி. இராமலிங்கம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, பட்டதாரி பிரதிநிதிகளும், ஆசிரியர் பிரதிநிதிகளும் அதிகம் படித்தவர்கள். இவர்கள் அரசியல் பற்றியெல்லாம் இங்கே பேசுவார்கள் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். அவர்கள் ஏதோ சம்பள உயர்வு, அது குற்றம், இது குற்றம் என்று மாறி மாறி யாருக்காகவோ வக்காலத்து

வாங்குவது மாதிரி பேசுகிறார்கள். அதைத் தவிர்த்து எங்களைப் போன்றவர்களுக்கு ஆலோசனையும், மேலும் அறிவாளிகளாவதற்கு . உலக அரங்குகளில் உள்ள அரசியல் செய்திகளையும் இங்கே எடுத்துச் சொல்லி பேச வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** திரு. இராமலிங்கம் கருத்துக்கு ஏற்ப நடப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இது சான்றோர் அவை என்று பெயர். வந்திருக்கக்கூடிய ஒவ்வொரு உறுப்பினரும் சான்றோர். அனைவரும் பல்வேறு கருத்துக்களைச் சொல்வதற்கான தெளிவுடையவர்கள் என்ற நம்பிக்கையில்தான் மேலவைக்கு வந்திருக்கிறார்கள். என்னிடமிருந்து தெளிவான கருத்தைப் படிக்கக்கூடிய அளவுக்கு இந்தச் சான்றோரவை இல்லை. ஆதலால் சான்றோரவையில் சான்றோர்கள் வந்து பிரச்சினையை, சங்கடங்களை, ஆசிரிய சமுதாயப் பிரச்சினைகளை, நாங்கள் சார்ந்திருக்கக்கூடிய ஒரு சமுதாயத்தின் பிரச்சினைகளைப் பேசுகிறோம். சில நேரங்களில் மிகச் சரியாகச் சொல்லியிருக்கிறேன், கருத்துக்களைக் கூறியிருக்கிறேன், உலக வரலாற்றில் நடக்கின்ற நடவடிக்கைகளை, நன்மைகளைச் சொல்லியிருக்கிறேன். சோவியத் நாட்டைப் பற்றிச் சென்ற கூட்டத்திலே சொன்னேன். உன்னதமாக உயர்ந்த ஒரு பூமியைப்பற்றி நான் சொன்னேன். நான் அதையெல்லாம் பற்றி மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள. . .

**திரு. சி. இராமலிங்கம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, அன்றைக்கும் அவரைப் பாராட்டினேன். உலக அரங்கில் நடக்கும் விவரங்களைக் குறித்துப் பேசட்டும், வரவேற்கிறோம். இன்றைய சூழ்நிலையில் நாங்கள் எல்லாம் சான்றோரில்லை. ஒரே கட்சியைச் சார்ந்தவர்கள்தான். ஆனாலும் அவர் ஆசிரியர் பிரதிநிதியாக ஒவ்வொருவர் மீதும் குற்றச்சாட்டுகள் சாட்டுவதைத் தவிர்த்து, ஆளுநர் உரைக்கு நன்றி கூறுவதுதான் சாலச் சிறந்தது என்று கேட்டுக்கொண்டு, அந்த முறையில் விவாதத்திற்குப் பதிலளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் எனக்கு மூத்த சகோதரர். அவர் என்னிடம் மிகவும் அன்புள்ளவர். நான் மீண்டும் இந்த அவைக்கு வந்து என் குரல் ஒலிக்க வேண்டுமென்பதிலே அக்கறை உள்ளவர். ஆதலால் அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்கிறேன். அவருடைய ஆலோசனை அத்தனை



யும் உயர்ந்ததே என்று கூறிக்கொள்கிறேன். இந்த ஆட்சிப் பொறுப்பிலே இன்னார் இருக்க வேண்டுமென்றோ, இன்னார் இருக்கக் கூடாதென்றோ நினைப்பவன் அல்ல நான். என்னைப் பொறுத்தவரையில், எனக்குச் சில கொள்கைகள் உண்டு. யார் ஆட்சிக்கு வந்தாலும், ஆசிரியர் சமுதாயத்தில் உள்ள பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும்; அதற்காகச் சண்டையிட வேண்டும் என்பதுதான். பேரறிஞர் அண்ணா அவர்கள், இடித்துரைக்க வேண்டுமென்று சொல்லியிருப்பது போலத்தான், இடித்துரைக்கிறேன். நல்லதையும் பாராட்டியிருக்கிறேன். பாராட்டாமல் இல்லை என்று தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கனார் அவர்கள் . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** கிட்டத்தட்ட 40 நிமிடங்களாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மிக விரைவாக முடிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கனார் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்வேன். இந்தப் பிரச்சினைகளைப் பற்றி எல்லாம் இவ்வளவு தூரமும் ஒவ்வொரு தடவையும் வாதாடுகிறார்களே, வாதாடிய பிறகும், இந்தக் கல்வித் துறையில் ஃபைல்கள் நகர மறுக்கிறதே, அதற்கு என்ன காரணம் என்று அவர்கள் அங்கே சென்று பார்த்து எங்களுக்கு உதவவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏன் அப்படிச் செய்ய முடியாமல் இருக்கிறது? என்ன காரணம்? எத்தனை ஆண்டுகளாக அவை கிடக்கின்றன? இரண்டு முறை எம். எல். சி. யாக வந்த பிறகும் சொல்கிறார்களே என்று சொன்னால், இவ்வளவு காலமும் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் கிடக்கின்றன என்றால், கல்வித் துறை மெதுவாக நகர்ந்து கொண்டிருக்கிறது என்று பொருள். அதை அவர்கள் எண்ணிப் பார்த்து எனக்காக அல்லாவிட்டாலும், ஆசிரிய சமுதாயத்திற்காகவாவது சிபாரிசு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சற்று அதிகமாகச் சொல்லியிருந்தால், உணர்வுபூர்வமாகச் சொல்லியிருந்தால், என் குடும்ப வளர்ப்பு அவ்வளவுதான். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் இடித்துச் சொல்லும்போதுகூட மிகவும் நாசுக்காகக் கூறுகிற வகையில் அவர் மொழி இருக்கிறது. நான் சாதாரண குடும்பத்தில் பிறந்தவன், வளர்ந்தவன். எனவே சில குறைகள் இருக்கலாம். அதைக் குறையாக எடுத்துக் கொள்ளலாம். ஆனால் ஆசிரிய சமுதாயத்திற்கு நான் சொன்ன விஷயங்களை ஏற்றுக்கொண்டு, அதைச் செயல்படுத்த முன்வாருங்கள் என்று அமைச்சரவையைப் பணிவன்போடு

வேண்டி, முதலமைச்சரவர்கள், தமிழாசிரியர் விஷயத்தில் ஒரு நல்ல முடிவை ஆளுநர் உரையிலே பதில் சொல்லும்போது சொல்வார்கள் என்று கருதி, தயவுசெய்து இதை முதல்வரின் கவனத்திற்குக் கொண்டு சென்று உடனடியாக அதற்குத் தீர்வு காணவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

யார் என்ன எதிர்க்கிறார்கள் என்பதல்ல, எதிர்ப்பவர்கள் நலன்கள் போகும்போது எதிர்ப்பார்கள். சுதந்திரம் அடைந்த நாட்களிலிருந்தே தமிழுக்கு மரியாதை இல்லாமல் இருக்கிறது. தமிழாசிரியர் தலைமை ஆசிரியர் பொறுப்புக்கு வரமுடியாமல் தவித்துக் கொண்டு நீண்ட காலம் சபிக்கப்பட்ட ஒரு சமுதாயத்திற்கு, அழுத்தப்பட்ட ஒரு சமுதாயத்திற்கு நீங்கள் வாழ்வு தருகிறீர்கள் என்பதை நீங்கள் மறந்து விடக்கூடாது. ஆகையால் அவர்கள் சார்பாக அவர்களது உணர்வுகளைப் பிரதிபலிக்கிறேன். தயவு செய்து சீக்கிரம் முடிவு செய்யுங்கள், சீக்கிரம் முடிவு செய்யுங்கள் என்று அரசைக் கேட்டு இந்த அளவிற்கு வாய்ப்புத் தந்த மாண்புமிகு துணைத் தலைவரவர்களுக்கு என் பணிவன்பான நன்றியைத் தெரிவித்து விடை பெறுகிறேன். வணக்கம்.

(பிற்பகல் 12-40)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு செ. முத்துசாமி அவர்கள் இங்கே பேசுகிறபோது சில வார்த்தைகளைச் சொன்னார்கள். அவை பார்லிமெண்டரி சம்பிரதாயத்திற்கு உகந்தவையல்ல. எனவே மேற்கண்ட வார்த்தைகளை அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். *

என்ற வார்த்தைகளையும், *

என்ற வார்த்தைகளையும் நீக்குகிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திலே கலந்து கொண்டு, சில கருத்துக்கள் கூற வாய்ப்பு கொடுத்தமைக்கு தங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆசிரியர்கள்-பட்டதாரிகள் முற்போக்கு முன்னணியின் சார்பிலே, புதிதாக, நியமனம் பெற்று, இந்த அவைக்கு வந்துள்ள மூன்று மாண்புமிகு உறுப்பினர்களையும் வாழ்த்தி, நான் பாராட்டுகிறேன். அடுத்தததாக, இந்த அவையிலே ஏற்கெனவே ஒருமுறை துணைத் தலைவராக செயலாற்றி, திறமையும் ஆற்றலும் மிக்க சிறந்த பாராளுமன்றப் பாரம்பரியம் பெற்று, உயர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒி. சுவாமிநாதன் அவர்கள் மீண்டும் துணைத் தலைவராகப் பதவி ஏற்றதற்காக எங்களுடைய முற்போக்கு முன்னணியின் சார்பிலே, ஏற்கெனவே திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் வாழ்த்தி

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.





யிருந்தாலும், பாராட்டியிருந்தாலும், நானும் அவர்களைப் பாராட்டுகிறேன்.

நம்முடைய மாநிலத்திலே கடந்த இரண்டு ஆண்டுகளாகக் கடும் வறட்சியும், பஞ்சமும், உணவு உற்பத்தியிலே பாதிப்பும், பொருளாதாரச் சீர்கேடும் ஏற்பட்ட நிலையில், அதை முறையாகத் தீர்ப்பதற்கு நமது அரசு எடுத்த எல்லா நடவடிக்கைகளையும் நான் பாராட்டுகிறேன், அதற்காக அரசை வாழ்த்துகிறேன். மத்திய அரசானது 68.36 கோடி ரூபாய் அனுமதித்திருக்க, அதற்கு மேலாக 114.28 கோடி ரூபாய் அளவிற்கு முழுமையாக ஒதுக்கீடு செய்து, செலவுசெய்து வறட்சி நிவாரணப் பணிகளை அரசு திறமையாக மேற்கொண்டு, செயலாற்றியமைக்காக நானும் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். முழுமையாகக் குடிநீர் பஞ்சம் தீர்வதற்கு துளைக் கிணறுகள், குழாய்க் கிணறுகள் போன்றவற்றை மாநிலம் முழுவதும் அமைத்ததற்காகவும், சென்னை நகரைப் பொறுத்த வரையில் லாரிகளில் குடிநீர் கொண்டு வந்து, தொட்டிகள் மூலம் வழங்கியதற்காகவும் நான் எனது பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன். வறட்சி நிவாரணப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்திலேயே, கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தை அறிமுகப்படுத்தியதோடு ,அதன் துவக்கப் பணிகளுக்கு 30.15 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ததையும் நான் வரவேற்கிறேன்.

கடுமையான வறட்சியை அடுத்து, பெரு மழையினால் வெள்ளமும், பாதிப்புகளும் மாநிலத்திலே ஏற்பட்டிருக்கின்றன. முன்னும் கெடுத்து, பின்னும் கெடுத்து என்ற நிலையிலே வறட்சியாலும், வெள்ளத்தாலும் ஏற்பட்ட பாதிப்பு குறித்து மத்திய அரசுக்கு மாநில அரசு தெரியப் படுத்தி, அதன் அடிப்படையிலே இரண்டு குழுக்கள் மாநிலத்திற்கு வருகை தந்திருக்கின்றன. மாண்புமிகு துணைத் தலைவரவர்களே பேசும்போது சொன்னார்கள். மத்திய அரசு, மாநில அரசு ரிவால்விங் பண்ட் என்று ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். இவ்வாறு மாநிலங்களில் பாதிப்பு ஏற்படும்போது, அது உதவும் என்பதால், அதற்காக நிதிநிலை அறிக்கையில் ஓரளவுக்கு ஒதுக்கீடு செய்வது நலமாக இருக்கும், சிறப்பாக இருக்கும் என்றும் சொன்னார்கள். ஒரு மாநிலத்திலே ஒரு பாதிப்பு ஏற்பட்டால், அதற்கு உதவ முடியும். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள்கூட, முதலமைச்சர்கள் மாநாட்டிலே அத்தகைய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்று சொன்னார்கள். பாதிக்கப்பட்ட மாநிலத்தின் பொருளாதார இன்னல்களைத் துடைக்க வேண்டுமென்று மத்திய அரசு உறுதி கொண்டிருந்தால், மத்திய அரசின் நிதி ஆதாரம் கொண்டும், பிற மாநில அரசுகள் சேர்ந்து உதவி செய்தும், பாதிக்கப்பட்ட மாநிலத்தின் வளர்ச்சித் திட்டங்களுக்கு உதவுவதோடு, பொருளாதார சீர்கேடு ஏற்படுவதைத் தவிர்க்க வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

[திரு. பா. ரா. தாமஸ்] [1984 பிப்ரவரி 20

முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தைப்பற்றி இங்கே பல கருத்துக்களைக் கூறினார்கள். நான் கூட சற்று யோசித்தேன். முழுமை யாக இந்தத் திட்டத்தை நம்முடைய மாநிலத்திலே எத்தனை களுக்கு அல்லது எத்தனை மாதங்களுக்கு அமுல்படுத்தப்போகிறார்கள் ஆண்டு என்று யோசித்துப் பார்த்தேன். தொடர்ந்து நடைமுறைப்படுத்த முடியுமா என்ற சந்தேகம் இருந்தது. நிர்வாகச் சிக்கல்கள் தோன்றும் என்று கருதினேன். ஆனால் இன்றைக்கு அந்தச் சந்தேகம் போய் முறையாக, சீராக, சிறப்பாக அதனை அமுல்படுத்திக்கொண்டிருப்பதை நாம் பார்க் கிறோம். அந்த வகையில் இந்தத் திட்டத்தை நான் முழுமனதோடு வரவேற்கிறேன்.

(திரு. ஜேப்பியார் எதிர்க் கட்சி வரிசையில் போய் அமர்ந்திருந்தார்)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : ஓர் உறுப்பினர் ஓரிடத் திலிருந்து இன்னோர் இடத்தில் போய் அமரலாமா என்றால், சில காலம் அமரலாம். தொடர்ந்து அமர மாட்டார்கள் என்று கருதுகிறேன். (சிரிப்பு).

**திரு. பா. ரா. தாமஸ்** : சத்துணவு சாப்பிடும் குழந்தைகள்பற்றி கோவை அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியில் ஆராய்ச்சி செய்து பார்த்ததில் குழந்தைகளுடைய எடையும் உயரமும் அதிகரித்திருப்பதுடன் மன வளமும், உடல் வளமும் அதிகரித்திருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். 1975ஆம் ஆண்டு உலகத்திலே கண் பார்வையிழந்தவர்கள் எண்ணிக்கையைப்பற்றிப் புள்ளிவிவரம் தயாரித்தார்கள். உலகம் பூராவும் இன்றையதினம் 40 மில்லியன் கண்பார்வை இழந்தவர்கள் இருக்கிறார்கள் என்று கண்டுபிடித்தார்கள். இந்தியாவில் மட்டும் ஒன்பது மில்லியன் பேர் கண்பார்வை இழந்திருக் கிறார்கள். அதுமட்டுமல்லாமல், ஒவ்வொரு ஆண்டும் 2.5 மில்லியன் பேர், கண்பார்வையற்றவர்கள் அதிகரித்துக்கொண்டே போகிறார்கள் என்றும் கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்தியாவைப் பொறுத்தவரை 30 ஆயிரம் பேர் ஒவ்வொரு ஆண்டும் கண்பார்வை இழப்பதன் மூலம் அதிகரித்துக்கொண்டு வருகிறார்கள் என்றும் கூறியிருக்கிறார்கள். அந்தக் குறிப்பிலே மற்றொன் றையும் சொல்லியிருக்கிறார்கள். பள்ளிக்கு வருவதற்கு முன்பே இவர்கள் பார்வையை இழக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய சத்துணவுத் திட்டத்தைப்பற்றி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.



1984 பிப்ரவரி 20]

**திரு. ஆர். டி. சீத்தாபதி** : எதிர் வரிசையிலே இருந்து எல்லோரும் பேசி விட்டு பேசிய உடனேயே சென்று விடுகிறார்கள். அவர்கள் எல்லோரும் 'வாக்-அவுட்' செய்து விட்டார்களா? அப்படி இல்லையென்றால், நம்முடைய மாபை இழக்காமல் பார்ப்பதற்கு தாங்கள் இதிலே உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(திரு. செ. முத்துசாமி இருக்கையில் வந்து அமர்ந்தார்).

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : ஓர் உறுப்பினர் பாக்கியம் செய்திருக்கிறார். (சிரிப்பு).

**திரு. செ. முத்துசாமி** : நான் பேசி முடிந்ததும் எழுந்து சென்றேன். எதற்காகச் செல்கிறேன் என்று நான் சொல்லவில்லை. பேசி முடிந்தவுடன் கஷ்டமாக இருந்திருக்கலாம். தண்ணீர், டி போன்றவை குடிப்பதற்காகப் போயிருக்கலாம். அதை நான் 'வாக் அவுட்' செய்ததாக யாரும் தயவு செய்து கருதிவிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா** : ஓர் ஆசிரியர் பிரதிநிதி பேசிக் கொண்டிருக்கிறார். அவர் பல்வேறு யோசனைகளைக் கூறிக் கொண்டிருக் கிறார், அப்படி இருக்கும் சமயத்தில் யாராவது ஒருவராவது அவருக்குத் துணை இருக்க வேண்டாமா என்பதுதான் என்னுடைய கவலை. (சிரிப்பு).

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : இந்த அவையிலே போது மான அளவு கோரம் இருக்கிறதா இல்லையா என்பதைக் கவனத்துடன் பார்க்க வேண்டியது தலைவர் பொறுப்பு. கூடுமானவரை எதிர்க் கட்சி உறுப்பினர்கள் பேசும்போது, ஒருவராவது அவருக்குத் துணையாக இருப்பது அவருக்குத் துணை புரிவதாக இருக்கும்.

**திரு. செ. முத்துசாமி** : நான் துணை செய்து வந்திருக்கிறேன். இப் போதுகூட துணை செய்யத்தான் இங்கே இருக்கிறேன். ஆனால் நான் கேட்பதெல்லாம் தண்ணீர் குடிக்கக்கூட எனக்கு அவகாசம் இல்லையா? ஆகவே அதற்குள் அவசரப்பட்டுவிட வேண்டாம். நான் பேசுகின்ற உறுப் பினருக்குத் துணையாகத்தான் இருக்கிறேன்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி** : நான் சொன்னதை மாண்புமிகு உறுப்பினர் தவறாகக் கருத வேண்டாம். பொதுவாக எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் நல்லமுறையில் பணியாற்றவில்லை என்பதைத்தான் நான் குறிப்பிடுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : எதிர் வரிசையில் இருப்ப வர்கள் இனிமேல் இதுகுறித்து ஆவன செய்வார்கள் என்று கருதுகிறேன்.

[1984 பிப்ரவரி 20

**திரு. பா. ரா. தாமஸ்** : மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி எனக்குத் துணை இருப்பதாகச் சொன்னதற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : உறுப்பினர் அவ்வாறு துணை இருக்க வேண்டாமென்று கருதுகிறார் என்று நான் நினைக்கிறேன். (சிரிப்பு).

**திரு. செ. முத்துசாமி** : நான் துணை இருப்பதற்கு நன்றி தெரிவித்ததாலே, எனக்கும் அவர் துணை இருப்பார் என்று நம்பி மகிழ்ச்சியடைகிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ்** : இந்த அவையிலே ஒருவருக்கொருவர் துணையாகத்தான் இருந்துகொண்டிருக்கிறோம். (சிரிப்பு)

அடுத்து, பள்ளிக்கு வருவதற்கு முன்பே கண்ணொளி இழக்கப்படுகின்ற நிலை இருக்கிறது என்று புள்ளிவிவரம் கூறுவதால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய சத்துணவுத் திட்டம் கண்ணொளி காக்கும் திட்டம் என்று நான் பெருமையோடு கூறுகிறேன். ஒருவேளை சில ஆண்டுகள் கழித்து இரண்டு வயதிலிருந்து குழந்தைகளின் வளர்ச்சி குறித்து நாம புள்ளிவிவரம் எடுத்தோமானால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய சத்துணவுத் திட்டம் நிச்சயமாக "கண்ணொளி காக்கும் திட்டம்" என்கிற முடிவுக்குக் கட்டாயம் நாம் வர வேண்டியிருக்கும் என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12-50)

புதிய மாவட்டங்களை உருவாக்குவதைப் பொறுத்தவரையில், பல கருத்துக்கள் சொல்லப்பட்டன. மக்களுடைய அபிலாஷையை எப்படி மதிக்கப் போகிறார்கள் என்று நினைத்திருந்தேன். இராமநாதபுரம் மாவட்டத்தைப் பிரிக்கும்போது, முதுகுளத்தூர் மாவட்டமா, சிவகங்கை மாவட்டமா என்று தகராறு வருமே என்று நினைத்தேன். ஆனால் இன்றைக்கு வெகு சாமர்த்தியமாக மூன்று மாவட்டங்களாகப் பிரித்ததன் மூலம் அந்தப் பிரச்சினை ஓய்ந்துவிட்டது. தேவகோட்டையில் ஓர் ஊர்வலம், சிவகங்கையில் ஓர் ஊர்வலம், என்று இருந்தார்கள். இதுமாதிரி பிரித்ததற்காக நான் இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் மாவட்டங்களைப் பிரிப்பதற்காக அமைக்கப்படவிருக்கும் நிபுணர் குழுவினர் திட்டமிட்டுப் பிரிக்கும்போது, மாவட்டத் தலைநகர் மையப் பகுதியில் இருக்கும்படியும்,



1984 பிப்ரவரி 20] [திரு. பா. ரா. தாமஸ்]

வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தும் இடங்களாகவும், மக்கள் போக்குவரத்துக்கு வசதி ஏற்படும்படியும் செய்யுமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். எட்டு புதிய மாவட்டங்கள் ஏற்படுத்தியதற்காக மிகுந்த மகிழ்ச்சியையும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்வதுடன், இதன் காரணமாக நிறைய வேலை வாய்ப்பு ஏற்படும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசு ஊழியர் ஓய்வு பெற்றால், ரூபாய் பத்தாயிரம் என்ற அருமையான திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். தட்டுகள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும் என்பதற்கு மாறாக, கேட்காமலேயே தரப்பட்டது என்று கொறடா அவர்கள் தெரிவித்தார்கள். அப்படி அல்ல. நாங்கள் கேட்டுக் கொண்டே இருந்தோம். அதற்காக நான் இதை வரவேற்கிறேன், அதே நேரத்தில் ரூபாய் ஐயாயிரம் கட்டிய பிறகு, ஒரு இளைஞன் என்ன பயன் அடைய முடியும் என்று கேட்கிறார்கள். ரூ. 5,000 முழுமையாகக் கட்டி விட்டால், அவர் விரும்பினால் அந்தத் தொகையை (ரூ. 5,000-ஐயும்) திரும்ப எடுத்துக்கொள்ள வாய்ப்பு கொடுக்க வேண்டும். அதன் காரணமாக அந்தப் பணத்தை வேறொரு வகையில் முதலீடு செய்ய வாய்ப்பு ஏற்படும். இந்த ரூ. 5,000த்துடன் அரசாங்கப் பணமான ரூ. 5,000மும் சேர்த்து, எடுத்துக் கொள்ள வாய்ப்பு கொடுக்கப்பட வேண்டும்.

திரு. ம. சங்கரலிங்கம் அவர்கள் சொன்னதைப்போல், ரூ. 5,000தான் கொடுக்கிறார்கள், ரூ. 10 ஆயிரம் அல்ல என்று சொன்னார்கள். இதற்கான அரசாணையைப் போடும்போது, தெளிவாக இருக்க வேண்டும். ஐந்தாண்டுக் காலம் பணியாற்றியவருக்கு ரூ. 10 ஆயிரம் கிடைக்க வாய்ப்பு இருக்கிறதா என்று தெரியவில்லை. தாமாக ஓய்வு பெறுபவர்களுக்கு இந்தத் திட்டம் பலனளிக்குமா என்று அரசு ஆணை போட வேண்டும். அதையும் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே ஒரு ரூபாய் கொடுத்து, இறக்கும்போது 10 ஆயிரம் கிடைக்கிற திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டம் தனியாக இருக்கிறது. அரசு ஊழியர் இறந்துவிட்டால், இந்தப் புதிய திட்டத்தின் மூலம் தனியாகப் பத்தாயிரம் ரூபாய் கிடைக்குமா என்று விளக்கமாக ஆணையிட வேண்டும். ஓய்வு பெற்றால்தானே ரூ. 5,000, இறந்தால் உண்டா? திரு. முத்துசாமி அவர்கள் சொன்னதுபோல இந்த ஆணை வெளியிட காலதாமதம் ஏற்படலாம். விரைவில் அதற்கான ஆணை பிறப்பித்து வழி காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, இந்த ஆண்டிற்குள் ஊழியர்களுக்கு ஊதியக் குழு அறிவிப்பு இருக்கும் என்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். விடுமுறை பயணச் சலுகை அறிவிக்கப்பட்டதில், அரசு ஊழியர்கள் அனைவரும் நன்மை பெற்றிருக்கிறார்கள். ஆனால், தனியார் பள்ளி ஆசிரியர்கள், நகராட்சி ஆசிரியர்கள், நகராட்சி அலுவலர்களுக்கும் இது கிடைக்கவில்லை. அவர்கள் நன்மை பெற முடியவில்லை. காரணம், 'கவர்ன்மெண்ட் எம்ப்ளாயிஸ்' என்று இருக்கிறது. இதற்குக் காரணம் என்னவென்றால் "கவர்ன்மெண்ட் எம்ப்ளாயிஸ்" என்ற பதம் இருப்பதன் காரணமாக, தனியார் பள்ளிகளில் பணியாற்றுகிறவர்களும், உள்ளாட்சிமன்றங்களின் பள்ளிகளில் பணியாற்றுகிறவர்களும் அரசு ஊழியர்களாகக் கருதப்படுவதில்லை. அந்த நிலை ரூ. 10,000 வழங்குவதிலும் வந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் நான் இதை வலியுறுத்திச் சொல்கிறேன்.

அடுத்து, ஓய்வு ஊதியத்தைப் பொறுத்தவரை நாங்கள் எதிர்பார்த்தது வந்திருக்கிறது.

ஊதியக் குழுவைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் பேசும்போது உடனடியாக அரசு ஊழியர்களுக்கும் மற்றவர்களுக்கும் இடைக்கால நிவாரணம் அளிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். முதலாவது ஊதியக் குழு 1960 ஆம் ஆண்டிலும் 2-வது ஊதியக் குழு 1972 ஆம் ஆண்டிலும், 3-வது ஊதியக் குழு 1978 ஆம் ஆண்டிலும் அமைந்து, 4-வது ஊதியக் குழு 1984 ஆம் ஆண்டிலும் அமைய இருக்கின்றது. 2-வது ஊதியக் குழுவை மத்திய அரசு நியமித்தபோது, ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதாவது 'ஒவ்வொரு ஐந்தாண்டுக்குப் பிறகும் ஒரு ஊதியக் குழு நியமிக்கப்பட வேண்டும் என்பதாகும் அது. அந்த அடிப்படையில் தற்போது 4-வது ஊதியக் குழுவை அமைத்துள்ள அரசுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். 1—10—1978 ஆம் நாளில்தான் 3-வது ஊதியக் குழுவின் பயனை ஊழியர்கள் அனுபவித்தார்கள். இப்போது 5 ஆண்டுகள் 5 மாதங்கள் கழித்து அடுத்த ஊதியக் குழு அமைந்திருக்கிறது . . . . . .

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு தவறான தகவல் பதிவாகிவிடக் கூடாது என்பதற்காகக் குறுக்கிட விரும்புகிறேன். 2-வது ஊதியக் குழு அமைக்கப்பட்டது 1970 ஆம் ஆண்டில். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறுதலாக 1972 ஆம் ஆண்டில் என்று சொல்லிவிட்டார்கள். எனவே அதை 1970 ஆம் ஆண்டாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



திரு. பா. ரா. தாமஸ்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்ளே, என்னுடைய நினைவில் இருந்து நான் சொன்னேன். அது தவறான கவலாக இருந்தால், திருத்திக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். எனவே, வது ஊதியக் குழுவின் பரிந்துரைகள் வருவதற்குக் காலதாமதம் ஆகலாம் ன்ற காரணத்திற்காகத்தான், மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள்கூட இடைக்கால நிவாரணம் அளிக்கப்பட வேண்டும் என்று வேண்டினார்கள். இது நிதிநிலை அறிக்கையில் இடம் பெற வேண்டும் என்று வலியுறுத்திக் கொள்வதோடு, மற்றொரு கருத்தையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அவ்வாறு 4-வது ஊதியக் குழுவினால் அளிக்கப்படும் பரிந்துரைகள் 1—1—1984 முதல் அமுல்படுத்தப்பட வேண்டும். அதாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகள் பின்னாலே வந்தாலும் இடைக்கால நிவாரணம் தற்போது அளிக்கப்பட வேண்டுமென்பதோடு, 1—4—1984 முதலே அவற்றை அமுல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையையும் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன்.

அடுத்து, 8-வது நிதிக் குழுவை மத்திய அரசு நியமித்தபோது, தமிழகம் உள்ளிட்ட அநேக மாநிலங்கள் அந்தக் குழுவிற்கு தங்கள் தங்களின் அறிக்கையை அளித்தார்கள். அதில் நம்முடைய மாநிலத்தின் சார்பில் அறிக்கை அளித்தபோது, தேசிய ஊதியக் கொள்கை ஒன்றை வகுக்க வேண்டும் என்றும், மத்திய அரசு ஊழியர்களுக்குச் சமமாக மாநில அரசு ஊழியர்களுக்கு ஊதியம் அளிக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது. அப்போது அவர்களேகூட, "எங்களை ஊதியக் குழுவாக மாற்றி விடாதீர்கள்" என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நிதிக் குழுவைச் சார்ந்தவர்களே ஒன்றை ஒப்புக்கொள்கிறார்கள். அதாவது மத்திய அரசு ஊழியர்களுக்குச் சமமாக மாநில அரசு ஊழியர்களுக்கும் ஊதியம் வழங்கப்படவேண்டும் என்று ஒப்புக்கொள்கிறார்கள். அதைத்தான் இப்போதும் நான் வலியுறுத்துகிறேன். அதோடு நமது மாநில அரசு மற்றொரு கருத்தையும் வலியுறுத்தியிருக்கிறது. அதாவது மத்திய அரசு மற்றும் மாநில அரசு ஊழியர்களின் ஊதியம் சமப்படுத்தப்பட வேண்டும் என்பதோடு, இதனைச் சமப்படுத்த நிரந்தர அமைப்பு ஒன்றும் தேவை என்று நமது மாநில அரசு 8-வது நிதிக் குழுவிடம் கருத்து தெரிவித்திருக்கிறது. அந்த அடிப்படையில் நிதிக் குழுவும் பரிந்துரை செய்யும் என்று நம்புகிறேன். மத்திய அரசு ஊழியர்களின் ஊதியத்திற்குச் சமமாக மாநில அரசு ஊழியர்களின் ஊதியம் அமைக்கப்பட வேண்டும் என்றும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் வலியுறுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

[திரு. பா. ரா. தாமஸ்] [1984 பிப்ரவரி 20

அடுத்து, கல்விக் கூடங்களில் உள்ள ஆசிரியர்களையும் பணியாளர்களையும் பொறுத்தவரையில், தனியானதோர் ஊதியக் குழு அமைக்கப்பட வேண்டும். சென்ற முறை காவல் துறையைச் சார்ந்தவர்களுக்காக என்றே தனியான ஊதியக் குழு நியமிக்கப்பட்டது. அதன் காரணமாக அவர்கள் தங்களின் கோரிக்கைகளை எளிதாகவும் அதே நேரத்தில் வலிவாகவும் எடுத்துச் சொல்ல முடிந்தது. எங்களைப் பொறுத்தவரையில், நாங்கள் பல பிரிவினராகப் பிரிக்கப்பட்டிருப்பதால், பிரச்சினைகள் அதிகமாக ஆகின்றன. எனவே எல்லோரும் ஒரே ஆசிரியர் என்ற வகையில் வளர் ஊதியமாக வைத்துவிட்டால் கூட போதும்; இளநிலை, இடைநிலை, தமிழாசிரியர், பி.டி. மற்றும் முது கலைப் பட்டதாரி ஆசிரியர்கள் என்று எல்லோருக்குமாக ஒரு வளர் ஊதியத்தை வைத்து விட்டால், நாங்கள் அனைத்து சங்கங்களும் ஒன்றாக இணைந்து ஒருமித்து செயல்பட முடியும். அந்த அடிப்படையிலே ஊதியக் குழுவை அறிவிக்கும்போது, ஆசிரியர்களுக்காகத் தனியாக ஒரு ஊதியக் குழுவை அமைத்தால்தான், நியாயமாக எங்களுக்கு நீதி கிடைக்கும் என்ற கருத்தையும் சென்ற முறையே வலியுறுத்தியிருந்தாலும்கூட, இந்த முறையும் எடுத்துச் சொல்லி வலியுறுத்த விரும்புகிறேன். ஆசிரியர்களுக்கும், கல்விக் கூடங்களில் உள்ள அலுவலாளர்களுக்கும் தனியானதொரு ஊதியக் குழுவை அமைக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஓய்வூதியத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. எஸ். வெங்கடேசன் அவர்கள் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளார்கள் என்பதால்தான் நான் அதைப் பற்றி அதிகமாகப் பேச விரும்பவில்லை.

ஸ்ரீலங்காவாழ் தமிழர்களைப் பொறுத்தவரையில், ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. சனார்த்தனம் அவர்கள் சென்னை விமான நிலையத்தின் முன்னால் போராட்டம் நடத்த இருப்பதாகக் கேள்விப்பட்டேன். 11 மணிக்கு போராட்டம் நடத்தி மறியல் செய்வதாகக் கேள்விப்பட்டேன். என்ன காரணம் என்றால், திருச்சியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு ஏர் இந்தியாவின் விமானம் போக வேண்டும் என்று. அங்கே உள்ள அரசு நமது விமானம் அங்கே வரக்கூடாது என்று மறுக்கிறது என்று நான் பத்திரிகையில் பார்த்தேன்.



1984 பிப்ரவரி 20] [திரு. பா. ரா. தாமஸ்]

(பிற்பகல் 1-00)

ஏர்-இந்தியா பல முறை கேட்டும் அவர்கள் வசதியில்லை என்று சொல்லி மறுக்கிறார்கள். அங்கே ஏராளமான ஜெட் விமானங்கள் இறங்குகின்றன. மாண்புமிகு உறுப்பினர் கைது செய்யப்பட்டிருக்கிறாரா என்பது எனக்குத் தெரியாது. மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, செய்தி ஏதாவது வந்திருக்கிறதா?

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இதுவரை செய்தி ஏதும் வரவில்லை. கைது செய்யப்பட்டிருந்தால் செய்தி வந்திருக்கும்.

**திரு. பா. ரா. தாமஸ்:** நன்றி. இது குறித்து ஒரு கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன். பாம்பன் பாலம் கட்டவிருக்கிறோம். இராமேஸ்வரம் கரைக்கும், பாம்பன் பகுதிக்கும் இடையிலே 2,345 மீட்டர் பாலம் கட்டி இணைக்கவிருக்கிறோம். இதிலே ஏற்கெனவே ஒரு பகுதி பூர்த்தியாகி விட்டது. அங்கேயுள்ள ஆசிரியர்களுக்குப் போதுமான அகவிலைப்படி கொடுக்கப்படவில்லை. "ஐசொலேட்டட் லொக்காலிட்டி" என்ற அளவிற்கு ஊதியம் கொடுக்கிறோம். பாலம் கட்டி முடிக்க எவ்வளவு காலம் ஆகும் என்று குறிப்பிடப்படவில்லை. ஆனால் நிதி ஒதுக்கீடு ரூபாய் 16.65 கோடி செய்திருக்கிறோம். இதைத் துரிதப்படுத்தி முடிக்க வேண்டும். இது முடிக்கும் வரையில் உள்ள இடைக்காலத்தில் அங்குள்ள ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டுமென்ற கருத்தைக் கூற விரும்புகிறேன். மெயின் லேண்டிலிருந்து அந்தப் பகுதிக்குச் செல்ல அதிகச் சிரமம் இருப்பதால் இராமேஸ்வரம், தனுஷ்கோடியில் உள்ள ஊழியர்களுக்கு அதிக ஊதியம் கொடுக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறேன்.

இந்திய அரசு கூட அதிக அக்கறை கொண்டிருப்பதைப் பார்த்தேன். ஸ்ரீலங்கா தமிழர்கள் பிரச்சினை வந்த பிறகு நம்முடைய தென் பகுதி கடற் கரையை வலுப்படுத்த வேண்டியது, வாய்ப்பு வசதிகளை அதிகப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. பாதுகாப்புக் காரணங்களைப் பார்த்தாலும் சில திட்டங்களைத் தீவிரமாக மேற்கொள்ள வேண்டிய நிலை இருக்கிறது. சேதுசமுத்திரத் திட்டத்தை பல ஆண்டுக் காலமாக வலியுறுத்திக்கொண்டு வருகிறோம். மாநில அரசு மத்திய அரசை இது குறித்து மீண்டும் வலியுறுத்த வேண்டும். சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரையில் 779 கிலோ மீட்டர் பாதை போட மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்த வேண்டும்.

[திரு. பா. ரா. தாமஸ்] [1984 பிப்ரவரி 20

சென்னைக்கு தூத்துக்குடியிலிருந்து 715 மைல் ஆகிறது என்று கணக்கிடு
கிறார்கள். சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்தை அமுல்படுத்தினால் 316
மைல் தொலைவிலேயே தூத்துக்குடியிலிருந்து சென்னைக்கு வந்துவிடு
கிறோம். கிட்டத்தட்ட பாதி தூரம் குறைகிறது. கிழக்கு ஆசிய நாடு
களுக்குச் செல்லக்கூடிய கப்பல்கள்கூட ஸ்ரீலங்காவைச் சுற்றிச் செல்லாமல்
இவ்வழியாகச் செல்வதால் நமக்கும் அதிகமான வருவாய் கிடைக்கும்.
ஓராண்டில் குறைந்தது இரண்டாயிரம் முதல் மூவாயிரம் கப்பல்கள் வரை
இந்தப் பாதையில் வந்தால், இரண்டு மூன்று கோடி ரூபாய்க்கு மேல்
வருமானம் வரும். இத்திட்டத்தை 1955 ஆம் ஆண்டும், 1965 ஆம் ஆண்டும்
வலியுறுத்தியிருக்கிறோம். ஆகவே இன்றுள்ள சர்வதேச சூழ்நிலையில்,
ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினை இருக்கக்கூடிய நேரத்தில், சேது சாலைத்
திட்டம், சேதுசமுத்திரக் கால்வாய்த் திட்டம் ஆகியவற்றை அமுல்படுத்த
மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

அநேக உறுப்பினர்கள் ஊக்க ஊதியம் பற்றிப் பேசினார்கள். நான்கூட
23—11—1983 அன்று இந்த அவையில் ஊக்க ஊதியம் பற்றிப் பேசியபோது
மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள்.
"அண்ணா கொடுத்ததை ஒருகாலும் நிறுத்தமாட்டோம். கூடுதல் சலுகை
யைக் கொடுப்போம்" என்று சொன்னார்கள். அரசாணை எண் 42-ல் ஆசிரி
யர்களுக்கும், அலுவலர்களுக்கும், அதிகமாகப் படித்தால், ஊக்க ஊதியம்
வழங்கியிருக்கிறார்கள். அதுதான் அரசின் கொள்கை. "A teacher
must be a learner throughout his life". என்ற கொள்கையை பேரறிஞர்
அண்ணா அவர்கள் கருதி அதைச் செய்தார்கள். ஆசிரியர்களுக்கும் அதிக
மாகப் பதவி உயர்வுகள் இல்லை. அது மட்டுமல்லாமல், ஓர் ஆசிரியர் தன்
வாழ்க்கையில் மாணவனாக இருந்தால்தான், கல்வியின் தரம் உயரும் என்று
கருதி, கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காக அண்ணா அவர்கள் அதைக்
கொடுத்தார்கள். அதை நினைவுபடுத்தி நான் 23—11—1983 அன்று கேட்ட
போது, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் உறுதிமொழி கொடுத்தார்கள்.
ஆனால் இன்று வரை ஆணை வரவில்லை.

டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள், "Constant pouring out needs
constant intake". என்று சொன்னார்கள். ஓர் ஆசிரியர்
முழுமையாக, சிறப்பான ஆசிரியராக இருக்க வேண்டுமென்றால், தொடர்ந்து
கற்றுக் கொண்டிருக்க வேண்டும். திரு. ரவீந்திரநாத் தாகூர் அவர்கள் "No
lamp can light another unless it continues to burn its own flame".
என்றார். ஆசிரியர் சுடர் விட்டுக்கொண்டிருந்தால்தான், மாணவர்
களில் ஒளியை ஏற்ற முடியும் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு



1984 பிப்ரவரி 20] [திரு. பா. ரா. தாமஸ்]

பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்தத் திட்டத்தைக் கொடுத்தார்கள். ஆனால் இந்த அரசு அதை நீக்கியிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் உரை கொடுக்கும்போது, இந்த ஊக்க ஊதியத்தை விரைந்து வழங்க ஆணையை அறிவிக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். பல உறுப்பி னர்கள் அதைப்பற்றிப் பேசியிருக்கிறார்கள்.

பணிப் பாதுகாப்பைப் பொறுத்தவரையில் ஏராளம் பேசிக்கொண்டிருக்க லாம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** விரைவில் பேசி முடிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ் :** துணைத் தலைவர் அவர்களே, விரைவில் முடித்து விடுகிறேன். ஒரே ஒரு சம்பவத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இராம நாதபுரம் மாவட்டத்தில் கோட்டையூர் பக்கத்தில் சிதம்பரம் செட்டியார் மேல் நிலைப் பள்ளி இருக்கிறது. அங்கு கலைச்செல்வி என்ற ஒரு ஆசிரியை சென்ற ஆண்டு பணி நீக்கம் செய்யப்பட்டார். அந்தப் பகுதியிலே ஆசிரியர் களும், அலுவலர்களும் கூடி ஒரு பெரிய பேரணியை நடத்தினார்கள். அந்தப் பேரணி 10—3—1983 அன்று நடந்தது. அந்தப் பேரணிக்கு அந்தப் பள்ளியி லுள்ள 12 ஆசிரியைகள் சிறு விடுப்பு எடுத்தார்கள், அதாவது They submitted casual leave letter ஆனால் தங்களோடு பணியாற்றிய ஒரு சகோதரிக்கு ஏற்பட்ட பாதிப்பை உணர்ந்து போராட்டத்தில் கலந்து கொள்வதற்காக சிறு விடுப்பு எடுத்தார்கள். ஆனால் இதுகாறும், முதல மைச்சர் அவர்கள் முதலமைச்சராக வருவதற்கு முன்னால் 15 நாட்கள்தான் சிறு விடுப்பு எங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. இவர்கள் ஆட்சிப் பொறுப்பை எடுத்த பிறகு அந்த 15 நாட்களை 20 நாட்களாக உயர்த்தியிருக்கிறார்கள். அதை நாங்கள் பெரிதும் மதித்து வாழ்த்துகிறோம். ஆனால் அந்த இருபது நாட்கள் உயர்த்தப்பட்ட பிறகு, அந்த 12 ஆசிரியர்களுக்கு அந்தச் சிறு விடுப்பு மறுக்கப்பட்டிருக்கிறதே, அது ஏன்? ஆட்சியிலே இப்படிப்பட்ட ஒரு ஆணையை மதிக்காமல் இருக்கிற ஒரு நிர்வாகத்தை இந்தக் கல்வித் துறை தாங்கிக்கொண்டிருக்கிறதா? மேல் முறையீடு செய்திருக்கிறோம்; பதில் இல்லை. அந்த 12 ஆசிரியர்களுடைய சிறு விடுப்புக் கணக்கை எடுத்துப் பார்க்கிறோம். காரணம் என்னவென்றால், சிறு விடுப்பு என்பது உரிமை யல்ல, அதற்கு அனுமதி கொடுக்கலாம், கொடுக்காமலும் இருக்கலாம் என்று

[திரு. பா. ரா. தாமஸ்] [1984 பிப்ரவரி 20

விளக்கம் சொல்லுகிறார்கள். அந்த 12 ஆசிரியர்களும் 20 நாள் மார்ச் மாதம்—ஆண்டு முடிகிற சமயம்—ஒருவர் 2 நாள், ஒருவர் 3 நாள், 4 நாள் என்று 20 நாள் எடுத்திருக்கிறார்கள். ஆகவே அந்தச் சிறு விடுப்பைப் பெறுவதற்கு உரிய முறையிலே அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முடிவாக, நேரம் அதிகமாக ஆகிற காரணத்தால், விரைவாக நான் சொல்ல
வேண்டிய கோரிக்கைகளையெல்லாம் சொல்லி முடித்து விடுகிறேன்.
ஆனால் எனக்கு இப்போது தேர்தல் இல்லை. பட்டதாரித் தொகுதியில்
இருக்கக்கூடிய அருமை மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் ஆசிரியர்களுக்
காக கோரிக்கையை வைத்தார்கள். அவர்களுக்கும் நான் நன்றி தெரிவித்துக்
கொள்கிறேன். உயர் படிப்புக்கு ஏற்ப பதவி உயர்வு வேண்டுமென்றும்,
அதாவது பி.ஜி. பி.எட்., இடைநிலை ஆசிரியர்கள் பி.டி. முடித்தால் அந்தப்
பதவி உயர்வு கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். வேலை
நாட்களை 220-லிருந்து 200 ஆக ஆக்க கேட்டிருக்கிறார்கள். இதில்கூட
வேதனையான ஒரு சம்பவத்தை நான் சொல்ல வேண்டும். பரவலாக மாநிலங்
களில் தேர்தல் வரும் காலங்களிலே பல பொய்ப் புகார்களை மக்கள் பரப்பு
கிறார்கள். நாம் சார்ந்திருக்கிற இயக்கத்தின் தலைவர் ஒருவர் போட்டியிடு
கிறார். அவரைப்பற்றி என்ன சொல்கிறார்கள்? இவன் போய் அரசாங்
கத்துடன் பேசி, 200 நாட்களை 220 நாட்களாக ஆக்கக் கையெழுத்துப்
போட்டு விட்டான். அதற்காக வந்தான் என்கிறார்கள். நாங்கள் இந்தக்
குற்றச்சாட்டுக்களையெல்லாம் கண்டிக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம்.
ஆகவே 220-ஐ 200 ஆக ஆக்கவேண்டுமென்றும், சட்டிய விடுப்பை 11 வேலை
நாட்களுக்கு ஒரு வேலை நாளாகக் கொடுக்க வேண்டுமென்றும், 200 ஆக்கப்
பட்ட பாடத் திட்டத்திலே பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கு சிறப்பு ஊதிய
நிலை வழங்க வேண்டும் என்றும், சிறப்புப் படியைத் தொடர்ந்து வழங்க
வேண்டுமென்றும், பகுதி நேர ஆசிரியர்களை முழு நேர ஆசிரியர்களாக
உயர்த்த வேண்டுமென்றும், எம்.எட். தகுதி பெற்றவர்கள், ரூ. 600 அடிப்படை
ஊதியத்தை 675 ஆக உயர்த்த வேண்டுமென்றும் அவர்களை தலைமை ஆசிரி
யர்களாக ஆக்க வேண்டுமென்ற கோரிக்கையைப் பரிசிலனை செய்து அரசு
ஆவன செய்ய வேண்டுமென்றும், நிரந்தரமாக்கப்படாத உடற் பயிற்சி இயக்கு
நர்கள் பி.டி. ஆசிரியர்கள், புலவர்கள், பி.ஜி. ஆசிரியர்கள் அனைவரும் நிரந்
தரப்படுத்தப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். நேற்றுக்கூட முது
நிலைப் பட்டதாரி ஆசிரியர்கள் தம்முடைய உழைப்பாளர் சிலை முன்னாலே
உண்ணாவிரதம் இருந்ததை நான் வாழ்த்திவிட்டு வந்தேன். 28—4—1982



1984 பிப்ரவரி 20] [திரு. பா. ரா. தாமஸ்]

வரையிலும் நியமிக்கப்பட்ட முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்கள் முழுத் தகுதி இருந்தால், வரன்முறைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். அந்தத் தேதியிலே வரன்முறைப்படுத்தப்பட்டது போல, பிறகு நியமிக்கப்பட்டுள்ள, 400, அல்லது 500 முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்கள் அதே முறையில், தேர்வாணைக் குழு இல்லாமலே வரன்முறைப்படுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விடுமுறைப் பயணச் சலுகைகள் தனியார் துறையில் இருந்தவர்களுக்கும், நகராட்சியிலுள்ளவர்களுக்கும், மாநகராட்சியிலுள்ளவர்களுக்கும் விரிவு படுத்தப்பட வேண்டும். எப்படி ஒரு இடை நிலை ஆசிரியருக்கு பயிற்சிக்கு ஒரு ஊதிய உயர்வு வழங்கப்படுகிறதோ, அதுபோல் அனைத்துப் பிரிவு ஆசிரியர்களுக்கும் பயிற்சிக்கு ஒரு ஊதிய உயர்வு வழங்க வேண்டுமெனவும், கூடுதல் அலுவலகப் பணியாளர்களை மேல்நிலைப் பள்ளிகளில் நியமிக்க வேண்டுமென்றும், கேட்டு இவ்வளவு வாய்ப்பு கொடுத்தமைக்காக துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி. முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் 23—2—1984 வியாழக் கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும்.

(பிற்பகல் 1-10)

## 4. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

77. தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் 1983 ஆம் ஆண்டுக் கான எட்டாம் ஆண்டு அறிக்கை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்). [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (A) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்பட்டது.]

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

இல்லை.

(267)
Vrl204 No.2

## இணைப்பு

(12 ஆம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா 40-க்கான விடையைக் காண்க)

| மாவட்டம் | 1979 முதல் 1982 வரை பயனடைந்த ஆசிரியர் எண்ணிக்கை | எத்தனை ஆசிரியர்களுக்கு இடைநிலை ஆசிரியப் பணி இன்னும் வழங்கப்பட இல்லை | இடைநிலை பயிற்சி பெற்று இடைநிலை பணியிடத்தில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு இடைநிலை ஊதியம் வழங்கப்பட்ட காரணம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. சேலம் | 9 | இல்லை | — |
| 2. கன்னியாகுமரி | இல்லை | இல்லை | — |
| 3. தென்னாற்காடு | 47 | இல்லை | — |
| 4. கோவை | 3 | இல்லை | — |
| 5. இராமநாதபுரம் | 4 | — | — |
| 6. வட ஆற்காடு | 13 | 51 | — |
| 7. தர்மபுரி | 8 | இல்லை | — |
| 8. திருச்சி | 104 | இல்லை | — |
| 9. சென்னை | — | இல்லை | — |
| 10. புதுக்கோட்டை | இல்லை | 2 | — |
| 11. தஞ்சாவூர் | 55 | 2 | — |
| 12. திருநெல்வேலி | 4 | 2 | — |
| 13. செங்கற்பட்டு | 34 | 34 | இல்லை |
| 14. மதுரை | 5 | 5 | — |
| 15. பெரியார் | 2 | 2 | இல்லை |
| 16. நீலகிரி | 1 | 1 | — |

## பொருளடக்கம்

பக்கங்கள்

வினாக்கள் — விடைகள் 105—114

அறிவிப்புகள் —

(1) அலுவல் ஆய்வுக் குழுவின் அறிக்கை 114—115

(2) உரிமைக் குழுவின் தலைவராக நியமனம் 116

கவன ஈர்ப்பு—

ஈர்க்கப்பட்ட ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பது குறித்து 115—117

ஆளுநர் உரை மீதான விவாதம் 117—195

அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் 196—198

143887

# தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை

---

**வியாழக்கிழமை, 1984 பிப்ரவரி 23.**

*மாசி 11, ருத்ரோத்காரி, திருவள்ளுவராண்டு—2015.*

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில் மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### *Construction of Dam across Shanmuga River.*

41 *Q.*—Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Electricity be pleased to state:

(*a*) whether it is a fact that the proposal for the construction of a Dam across the Shanmuga River at Palani Hills has not been cleared by the Central Government; and

(*b*) if so, the steps taken by the Government thereon?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) மற்றும் (இ) காவிரி நீர் பிரச்சினை முடிவுக்கு வந்த பிறகுதான் இத் திட்டத்திற்கு அனுமதி வழங்க இயலும் என்று மத்திய அரசு கூறியுள்ளது. காவிரி நீர் பிரச்சினைக்கு தீர்வு காண இந்த அரசு எல்லாவிதமான முயற்சிகளையும் எடுத்து வருகிறது.

**திரு. பா. ரா. தாமஸ்:** தலைவர் அவர்களே, பழனியிலுள்ள இந்த ஆற்றிலே மின் உற்பத்தி செய்வது குறித்து நான் கேள்வி கேட்டிருக்கின்றேன். ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காவிரி நீர்ப் பிரச்சினையைக் கூறுகிறார்கள். அதோடு இது தொடர்பு கொண்டிருக்கின்றதா என்பதைப் பற்றி அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, இது காவிரியினுடைய கிளை நதிகளில் ஒன்று. ஆகவே அந்த வகையிலே தொடர்புடையது.

**திரு. பா. ரா. தாமஸ்:** தலைவர் அவர்களே, தமிழகத்திலே மினி ஹைடல் எலக்ட்ரிக் ஸ்கீம்ஸ் என்று ஏராளமாகத் திட்டமிட்டிருக்கிறோம். அந்த அடிப்படையிலே இதற்கு என்று மாநில அரசு தனித் திட்டம் வைத்திருக்கின்றதா? நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஐ.நா. சபைக்குச் சென்றபோது, அமெரிக்க நாட்டிலே மின் உற்பத்தி நிலையங்களைப் பார்த்திருப்பார்கள். அங்கே செய்திருப்பதைப்போல இங்கும் செய்வதற்கு வேண்டிய முன்னேற்றமான திட்டங்களை வகுத்திருக்கின்றார்களா?

[1984 பிப்ரவரி 23

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோருகின்ற விவரங்களையெல்லாம் மின் வாரிய நிதிநிலை அறிக்கை விவாதத்தின்போது விரிவாக எடுத்துக்கொள்ளலாம். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், மின் வாரியம் தமிழக அரசின் மூலமாக மத்திய மின் அதிகார மன்றத்திற்கு எழுதிய கடிதத்தில், இத்திட்டம் முற்றிலும் தமிழக எல்லைக்குள் அமைந்திருப்பதாலும், 'நீர் இழப்பு இல்லாமல்' பயன்படுத்தப்படுவதாலும், மேலும், உபயோகித்த நீர் பொதுப் பணித் துறையினரால் பராமரிக்கப்படுகின்ற பாலாறு, பொருந்தலாறு நீர்த்தேக்கத்தில் சேர்ந்து விடுவதாலும், கேரளா, கர்நாடக மாநிலங்களின் ஒப்புதல் தேவை இல்லை என தெரிவிக்கப்பட்டது. இருப்பினும் இந்தத் திட்டங்களில் ஆரம்ப வேலைகளைச் செய்வதற்கு, அதாவது, சண்முகா நதித் திட்டம் மற்றும் மேல் அமராவதி திட்டம் ஆகிய இரு திட்டங்களின் ஆரம்ப வேலைகளைச் செய்வதற்கு ரூபாய் 410 லட்சம் அளவுக்கு 1981 ஆம் ஆண்டு டிசம்பரில் அங்கீகாரம் அளித்துள்ளது.

### பள்ளிகட்கு மின்கட்டண வீதத்தை மாற்றியமைத்தல்

***42 வினா.—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்):** மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வணிக நிறுவனங்களைப் போன்றே பள்ளிகட்கு வழங்கப்படும் மின்சாரத்திற்குக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அக்கட்டணத்தைக் குறைந்த பட்சம் வீடுகளுக்கு வசூலிக்கப்படும் கட்டண வீதத்திலாவது மாற்றியமைக்கும் செயற்குறிப்பு ஏதும் ஆய்வில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) மற்றும் (இ) இல்லை.

### காஜாமியான் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் மரணம்

***43 வினா.—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. ம. சங்கரலிங்கம் சார்பில்):** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1980 பிப்ரவரியில், திருச்சிராப்பள்ளியிலுள்ள காஜாமியான் உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த மாணவர்கள், மேல் அணைக்கட்டிலுள்ள முக்கொம்புக்கு மேற்கொண்ட சுற்றுலாப் பயணத்தின்போது, காவிரியில் குளிக்கப் போன இரு மாணவர்கள் சுழலில் சிக்கி மாண்டது அரசின் கவனத்திற்கு வந்திள்ளதா?



1984 பிப்ரவரி 23]

(இ) ஆம் எனில், அவ்விரு மாணவர்களுடைய குடும்பத்திற்கு அரசு என்ன உதவி செய்தது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) ஆம்.

(இ) இறந்துபோன இரு மாணவர்களில் ஒருவனின் தகப்பனாருக்கு அவரது வறுமை நிலையைக் கருதி முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 1,000 அளிக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மற்றொரு மாணவனின் தகப்பனார் நிதி உதவி எதும் கேட்கவில்லை. தவிரவும் அவர் வறுமை நிலையில் இல்லை.

### ஆம்பூரில் தோல் தொழில் நுட்பக் கல்லூரி

***44 வினா.—திரு. பா. ரா. தாமஸ் (திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் சார்பில்):** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வட ஆற்காடு மாவட்டம், ஆம்பூரில், தோல் தொழில் தொடர்பான தொழில் நுட்பக் கல்லூரி அமைக்கும் கருத்து ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது எப்பொழுது செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) மற்றும் (இ) ஆம்பூர் பகுதியில் ஒரு தோல் தொழில் நுட்பக் கல்லூரி ஒன்றைத் தொடங்குவது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர், தொழில் நுட்பக் கல்வி இயக்குநருக்கு செயற்குறிப்பு அனுப்பி உள்ளார். இக்கருத்துரு மாநில தொழில் நுட்பக் கல்வி மற்றும் பயிற்சிக் குழுவின் முன் வைக்கப்படும். அதன் பரிந்துரைகளின் மேல் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. பா. ரா. தாமஸ் :** தலைவர் அவர்களே, நான் பத்திரிகையில் பார்த்தேன். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அதிகமான தொழில் நுட்ப நிறுவனங்களை, கல்லூரிகளை, கல்விக் கூடங்களை ஆரம்பிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கின்றார்கள். வருகின்ற ஆண்டில்கூட கலைக் கல்லூரிகளுக்கு அனுமதி வழங்கக் கூடாது என்று சொல்லியிருக்கின்றார்கள். இந்த அடிப்படையைக் கருத்தில்கொண்டு பல மாவட்டங்களிலே ஆங்காங்குள்ள தொழில்களுக்கு ஏற்ப கல்லூரிகளை ஏற்படுத்தி, வேலை வாய்ப்பின்மையைப் போக்கக்கூடிய நல்ல திட்டத்தை வகுத்து வைத்திருக்கின்றார்களா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, இதிலே நமக்குத் தடையாக இருப்பது பணம் ஒன்று தான். ஆக நிதி வசதி போதுமான அளவுக்கு இல்லாத காரணத்தினாலேதான், அரசு இந்த

முயற்சியிலே ஈடுபடுவதில் ஓரளவுக்குத் தேக்க நிலை ஏற்பட்டிருக்கின்றது. மற்றபடி தனிப்பட்டவர்கள் வருகின்றபோது, அவர்கள் அரசினுடைய கட்டுப்பாட்டுக்கு, விதிகளுக்கு உட்பட்டு வருகின்ற நிலையிலே, ஆரம்பிக்க முன் வருகின்றார்கள் என்றால், அவர்களுக்கு அனுமதியைக் கொடுக்கிறோம். அரசைப் பொறுத்த மட்டில், நிதி ஆதாரம் அபிவிருத்தி அடைகின்ற நோக்கில் அல்லது போதுமான நிதி நமக்குக் கிடைக்குமானால், அந்த சமயத்திலேதான் அரசு அதைப் பற்றிப் பார்க்க முடியும். இப்போது அந்த நிலைமை இல்லை.

**மாண்புமிகு திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, தோல் தொழில் தொடர்பான தொழில் நுட்பக் கல்லூரி நம்முடைய மாநிலத்தில் வேறெங்காவது அமைந்திருக்கிறதா? அல்லது இந்தியாவினுடைய மற்ற மாநிலங்களில் எந்த மாநிலத்தில் இதுபோன்ற கல்லூரி அமைந்திருக்கிறது? இதிலே பயிற்சி பெற்று வெளியே வருபவர்களுக்கு எத்தகைய வாய்ப்புகள் வெளியே இருக்கின்றன? அதைப்பற்றி 'சிலபஸ்' ஏதாவது இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, தோல் தொழில் தொடர்பான தொழில் நுட்பக் கல்லூரி, இதுபோன்ற பயிற்சிக் கல்லூரி சென்னையிலே மட்டும்தான் இருக்கிறது. அதில் 30 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் இருக்கின்றன என்ற காரணத்தால்தான், நிறைய பேர் வர விரும்புகிறார்கள். ஆனால் தோல் தொழில் என்பது அதிகமான அளவிற்கு வட ஆர்க்காடு மாவட்டம், ஆம்பூர், வாணியம்பாடி பகுதிகளில்தான் இருக்கின்றது. ஆகவே அந்த இடங்களிலே இதுபோன்ற பாலிடெக்னிக், இன்ஸ்டிட்யூட் இருக்குமானால், அங்கே நடைபெறுகிற தொழில்களுக்கு அங்கேயே தேவையான எக்ஸ்பெர்டைஸ் (expertise) அறிவு, ஆற்றல், அனுபவம் மிக்க பயிற்சி பெற்றவர்கள் உருவாகக் கூடிய வாய்ப்பு ஏற்படும். அதன் வளர்ச்சிக்கும் பெரிதும் உதவிகரமாக இருக்கும்.

### தமிழ்த்தாய் சிலை.

*45. **வினா.—திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரையில் நடந்த ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டில் திறந்து வைக்கப்பட்ட தமிழ்த்தாய் சிலைக்கு மண்டபம் கட்டும் செயத் குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது எப்பொழுது கட்டி முடிக்கப்படும்?



(உ) தற்போது அச்சிலை எங்கு வைக்கப்பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) ஆம். தமிழ்த்தாய் சிலையை மதுரை தமுக்கம் மைதானத்தில் தனியே ஒரு மண்டபம் அமைத்து தக்க பீடத்தில் நிறுவுவதற்கான அரசாணை அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது.

(இ) இவ்வருடம் இறுதிக்குள் இப்பணி நிறைவுறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

(உ) தற்போது இச்சிலை திருமலை நாயக்கர் மஹாலில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** தலைவரவர்களே, சிலையை மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுள் உள்ள சங்கப் புலவர் மண்டபத்திலே வைத்து மண்டபத்தைப் பழுதுபார்த்து புதுப்பித்துச் சிறப்பாகக் கட்ட அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே, மதுரை மீனாட்சியம்மன் கோவில் என்பது ஒரு மதத்தைச் சேர்ந்தவர்களுடைய ஒரு கோவில். நாம் இந்தத் தமிழ்த்தாய் சிலையை, பொதுவான ஒன்றாகக் கருதி, பொதுவான ஓரிடத்திலேதான் வைக்க விரும்புகிறோம்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு நடந்த போது. விரைவாக முடித்து வைப்பதற்காக, சிலைகள் சின்னதாக உருவாக்கப்பட்டன. அவற்றை தற்சமயம் பெரிய அளவில் வைக்கும் நோக்கம் அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் ;** தனியாகக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ் :** ஏற்கெனவே, தமுக்கம் மைதானத்திலே ஒரு கலையரங்கம் இருக்கிறது. கால் பந்து மைதானம்கூட இருந்தது. அது இப்போது பயன்படாமல் இருக்கிறது. அகில இந்திய அளவில் கால் பந்து பந்தயங்கள் அந்த மைதானத்திலே நடந்திருக்கின்றன. ஆனால் இப்போது நின்று விட்டன. ஆண்டுக்காண்டு அங்கே சித்திரைப் பொருட்காட்சி கூட நடத்துகிறார்கள். எனவே வேறொரு இடத்தைத் தேர்ந்தெடுத்து நமது தமிழ்த்தாய் சிலையை ஏற்படுத்தி, புதிதாக மண்டபம் கட்டலாம் அல்லவா? இடநெருக்கடி இருப்பதால், இதுகுறித்து அரசின் கருத்தை அறிய விரும்புகிறேன்.

[1984 பிப்ரவரி 23

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மதுரை மாநகரத்தில் இருக்கின்ற மற்ற இடங்களையெல்லாம் ஒப்பிட்டுப்பார்த்து, மக்களுடைய பார்வையில் இருக்க வேண்டுமென்ற இந்தக் கருத்தின் அடிப்படையிலே தான் இருக்கின்ற முக்கியமான இடமான தமுக்கம் மைதானத்தில் வைப்பதுதான் மற்ற இடங்களைவிட சிறப்பாக இருக்கும் என்று தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** இந்தக் கட்டிடம் கட்ட ஆரம்பித்து விட்டார்களா, எப்போது முடிவுறும்? எவ்வளவு செலவாகும்?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** என்னிடமுள்ள தகவலின்படி ஆரம்ப வேலைகளைத் துவக்கி விட்டார்கள்.

*Open School System .*

* 46. *Q.*—Thiru P.R. THOMAS (on behalf of Thiru D. Santosham): Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether there is any proposal with the Government, to introduce "Open School System" in Tamil Nadu;

(*b*) whether this is likely to lead to lowering of the standards of education; and

(*c*) the steps taken to prevent such danger?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ), (இ) மற்றும் (உ) கல்வியை எட்டாம் வகுப்பிற்குப் பிறகு விட்டுவிட்டவர்கள், முதியோர் மற்றும் இல்லக் கிழத்திகளுக்கு கல்வியின் தரம் குறையாவண்ணம் அவர்கள் கல்வியை இடைநிலைக் கல்வி வரை தொடரும் "திறந்த வெளிப் பள்ளி" முறையைப் புகுத்த, இத்துறையில் அனுபவமும் ஆற்றலும் மிக்க வல்லுநரைக் கொண்ட உயர்மட்டக் குழு ஒன்றினை அரசு அமைத்தது. இக்குழுவின் பரிந்துரைகள் அரசின் ஆய்வில் உள்ளன.

**திருத்துறைப்பூண்டியை நகராட்சியாக உயர்த்துதல்.**

* 47 **வினா.—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. க. மீனாட்சி சுந்தரம் சார்பில்) :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியை நகராட்சியாக உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா?

**(இ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?**



1984 பிப்ரவரி 23]

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) ஆம். [illegible]

(இ) திருத்துறைப்பூண்டி பேரூராட்சியை நகராட்சியாக மாற்றுவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

*Non-inclusion of Interest on Provident Fund Accounts.*

* 48. *Q.*—Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Local Administration be pleased to state:

(*a*) whether it is a fact that all categories of employees serving under Dindigul Municipality have been subjected to much hardship, due to non-inclusion of the interest on Provident Fund contributions in their respective accounts for the past ten years;

(*b*) if so, the reasons therefor; and

(*c*) the steps taken to prevent such danger?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ), (இ) மற்றும் (உ) நிதிப் பற்றாக்குறை காரணத்தால் இதுவரை சேர்க்கப்படாத பணியாளர்களின் சேம நல நிதி சந்தாக்களுக்கு 1982-83 வரை வட்டி சேர்த்து அந்தப் பணியாளர்களின் சேம நல நிதி கணக்குக்கு நடப்பு ஆண்டில் வரவு வைக்கப்பட்டு விட்டது.

**திரு. பா. ரா. தாமஸ் :** மாண்புமிகு தலைவரவர்களே, இந்த நகராட்சியில் பணியாற்றிய பணியாளர்கள் பல ஆண்டுகளாகக் கேட்டு வந்தும், இந்தக் கோரிக்கையை ஓரளவிற்கு அமைச்சரவர்கள் பூர்த்தி செய்ததற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அந்தந்த ஆண்டுகளிலேயே பணத்தை வருங்கால வைப்பு நிதியிலே போட்டு அந்தந்த ஆண்டுக்குரிய வட்டியைச் சேர்ப்பதுதானே முறை. அந்த முறையிலே என் நகராட்சி மன்ற பொறுப்பாளர்கள் இப்பணியை நிறைவேற்றவில்லை? அத்தகைய முறையிலே ஆணையைப் பிறப்பித்து அந்தந்த ஆண்டு, நிதி ஆண்டு முடிந்தவுடனேயே அவர்கள் போட்ட பணத்தையும், வட்டியையும் சேர்த்து அந்த உறுப்பினர்களுக்கு அந்த விபரத்தைக் கொடுப்பதற்கு முன்வருவார்களா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு தலைவரவர்களே, கடந்த ஆண்டிலே இருந்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. பல ஆண்டுக் காலமாக சரியாகக் கணக்கு வைக்காமல் நகராட்சிகளினுடைய நிதிநிலை எப்படி இருக்கிறது என்பது தெரியாமல் இருந்தது. அந்தக் காலத்தில் யார் யார் ஆணையாளர்களாக இருந்தார்களோ அவர்கள் மீது நடவடிக்கை

எடுக்கப்பட்டுள்ளது. இந்த நிதி ஆண்டிலிருந்து வட்டியும் சேர்த்து, அந்தக் கணக்கின் பிரதி அவர்களுக்குப் போய்ச் சேரும் வகையில், கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

## *Sri Ramakrishna Mission Vidhyalaya Industrial School, Perianaickenpalayam.*

* 49.*Q*— Thiru P.R. THOMAS : Will the Hon. the Minister for Adi-Dravidar Welfare be pleased to state :

(*a*) whether it is a fact that the Teaching and Non-Teaching Staff of Sri Ramakrishna Mission Vidhyalaya Industrial School, Perianaickenpalayam, Coimbatore District, have made an appeal to Government on 16—10—1981 for (i) cent per cent staff grant, (ii) implementation of Family Benefit Fund Scheme, and (iii) Pensionary benefits to the Teaching and Non-Teaching Staff; and

(*b*) if so, the action taken thereon ?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, (அ) ஆம்.

(இ) அரசு நிலை ஆணை எண் 62, தொ.வே.ப. துறை நாள் 13—10—1983-ல் ஆசிரியர்களின் சம்பளத்தின் பேரில் பயிற்சி மானியத்தை 50 விழுக்காட்டிலிருந்து 100 விழுக்காடாக உயர்த்துவது பற்றிய கருத்துருவினை அடுத்த கல்வி ஆண்டில் பரிசீலிக்குமாறு வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். ஏனைய இரண்டு கோரிக்கைகளும் அரசின் பரிசீலனையில் உள்ளன.

**திரு. பா. ரா. தாமஸ் :** தலைவரவர்களே, கடந்த பல ஆண்டுகளாக தொழிற் பிரிவை நடத்துகிற பள்ளிகள் இத்தகைய கோரிக்கைகளைக் கொடுத்து வருகிறார்கள். நம்முடைய மாநிலத்தில் அப்படிப்பட்ட தனியார் நிறுவனங்கள் ஏறத்தாழ 80 லிருந்து 90 வரை இருக்கின்றன. 50 விழுக்காடு மானியம் கொடுத்து வருகிறார்கள். அவர்களுக்கு அதை 100 விழுக்காடாக உயர்த்துவோம் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் ஓர் உறுதிமொழி கொடுத்தார்கள். அதே குடும்ப நலத் திட்டத்திற்காக 1 ரூபாய் சேர்த்துக் கொடுப்பதற்குக்கூட உறுதி அளித்தார்கள். அந்த உறுதிமொழிகளை எவ்வளவு காலத்தில் நிறைவேற்ற இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். இந்தக் கோரிக்கைகளை கடந்த 5 ஆண்டுகளாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே நடப்பு ஆண்டிலிருந்தாவது அவற்றை அமல்படுத்த அமைச்சரவர்கள் விரைவாக நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா?



**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** தமிழகத்தைப் பொறுத்தவரையில் 92 தனியார் அரசு உதவி பெறும் தொழிற் பள்ளிகள் அங்கீகரிக்கப்பட்டு, செயல்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினரவர்கள் எடுத்துச் சொன்னதுபோல, பல ஆண்டுகளாக அத்தகைய கோரிக்கைகளை அவர்கள் அரசுக்கு வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவைகள் நியாயமான கோரிக்கைகளாக இருக்கின்றன. அவர்கள் வைத்திருக்கக்கூடிய கோரிக்கையான குடும்பப் பாதுகாப்புத் திட்டத்தைப் பொறுத்தவரையில், மற்றும் ஆசிரியர்கள் அல்லாத பணியாளர்களுக்கு ஓய்வூதியம் போன்ற கோரிக்கையையும், மற்ற அரசுப் பணியாளர்கள் அத்தகைய சலுகைகளைப் பெறும்போது, இவர்களுக்குக் கிடைக்கவில்லையே என்பதை நியாயமான உணர்வோடு ஏற்றுக்கொள்கிறோம். அந்த வகையில் தற்போதுள்ள நிதி நிலையைக் கருத்திற்கொண்டுதான், ஏற்கெனவே நான் பதில் சொன்னதுபோல், உடனடியாகச் செய்ய வேண்டுமென்ற கருத்தைக் கொண்டிருக்கிறோம். வருகின்ற கல்வி ஆண்டில், உறுப்பினரவர்கள் சொன்ன கருத்துக்களை பரிசீலித்து அவர்கள் எடுத்துச் சொன்ன 3 கோரிக்கைகளையும் எவ்வளவு விரைவாக நடைமுறைக்குக் கொண்டுவர முடியுமோ, அந்த அளவில் நிறைவேற்றுவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ் :** அமைச்சரவர்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். அங்கே பணியிலிருந்து ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. ஆனால் ஆசிரியர்கள் அல்லாத பணியாளர்களுக்கு வழங்கப்படவில்லை. அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க, நல்ல முடிவுகளை எடுக்க அமைச்சரவர்கள் முன் வருவார்களா?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** ஆசிரியர்கள் அல்லாத பணியாளர்களுடைய ஓய்வூதியத்தைப் பொறுத்தவரையில், உறுப்பினரவர்கள் எடுத்துச் சொன்னதைப் போன்று, 24—11—1973 நாளிட்ட அரசாணையின்படி அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்கள் அந்தச் சலுகைகளைப் பெற்று வருகிறார்கள். ஆசிரியர்கள் அல்லாதவர்களுக்கு இந்தச் சலுகையை நீட்டிக்க வேண்டுமென்று நினைத்தபோது, நிதித் துறை கீழ்க்கண்ட விளக்கங்களை அளிக்குமாறு கேட்டிருக்கிறது. ஆசிரியரல்லாத ஊழியர்களை வேலைக்கு நீட்டிப்பதில் ஏதாவது வயது வரம்பு உள்ளதா; கடந்த 10 ஆண்டுகளில் ஏதேனும் ஊழியர்களுக்கு ஓய்வளிக்கப்பட்டதா, அளிக்கப்பட்டதெனின் அவர்களுக்கு ஓய்வு அளிக்கும்போது அளிக்கப்பட்ட சலுகைகள் யாவை என்று கேட்டு, அவற்றுக்கு விளக்கம் அளிக்குமாறு நிதித் துறை கேட்டுள்ளது. இது குறித்து வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநரிடமிருந்து பதில் பெறப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட கோப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. எனவே இதையும் விரைவாக அமல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

[1984 பிப்ரவரி 23

## ஆதிதிராவிடர் நலத்துறையில் பணியாற்றும் ஆசிரியர்கட்கு உயர் பதவிகள்

*50 வினா.—திரு. பா. ரா. தாமஸ் (திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் சார்பில்): மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பள்ளித் துணை ஆய்வாளர்கள், துணைக் கல்வி அதிகாரிகள், மாவட்டக் கல்வி அலுவலர்கள் போன்ற பதவிகள், ஆதிதிராவிட நலத் துறையில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று தமிழ்நாடு பள்ளி ஆசிரியர்—அலுவலர் கூட்டமைப்பின் சார்பில் 1982 ஆம் ஆண்டு செப்டம்பரில் அரசுக்கு முறையீடு ஏதும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) ஆம்.

(இ) தென்னாற்காடு மாவட்டத்தில் ஆதிதிராவிட நலப் பள்ளிகளை மேற்பார்வையிடும் முகத்தான் பரிட்சார்த்த முறையில் 3 பள்ளித் துணை ஆய்வாளர்கள் பதவிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் கல்வி சம்பந்தமான அலுவல்களைக் கண்காணிக்கும் பொருட்டும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரகத்தில் ஒரு மாவட்டக் கல்வி அலுவலர் பதவியை ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பு 1984-85 பகுதி—II திட்டத்தின் கீழ் அரசின் பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்புகள்.

(1.) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் கீழ்க்கண்ட நிகழ்ச்சி விபரம் முடிவு செய்யப்பட்டது.

23—2—1984—ஆளுநர் உரையின் மீதான விவாதம்.

24—2—1984—அரசின் சட்டமுன்வடிவுகளை ஆய்வு செய்தல்.

மற்றும்

25—2—1984.

தேவைப்படின் மேலவை 25—2—1984 அன்று மாலை 4-30 மணிக்குக் கூடும். மேலவை வழக்கம்போல் காலை 9-30 மணிக்குக் கூடும்.



1984 பிப்ரவரி 23]

(2) உரிமைக் குழுவின் தலைவராக நியமனம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு புலவர் புலமைப் பித்தன், துணைத் தலைவர் அவர்களின் பதவிக் காலம் மேலவையில் முடிவடைந்ததால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு மேலவை விதி 156 (4) ன் கீழ் மாண்புமிகு திரு. ஜி. சுவாமிநாதன், மேலவைத் துணைத் தலைவர் அவர்களை உரிமைக் குழுவின் தலைவராக நான் நியமித்துள்ளேன்.

(3) கவன ஈர்ப்பு.

ஈர்க்கப்பட்ட ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பது குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் தாமஸ், லெட்சுமிகாந்தன் ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். திரு. தாமஸ் பேசலாம்.

திரு. பா. ரா. தாமஸ்: தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:—

"ஈர்க்கப்பட்ட ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பதில் ஏற்பட்டுள்ள வீணான காலதாமதம் குறித்தும், அதன் காரணமாக ஏனைய வகை ஆசிரியர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல் குறித்தும்".

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. பா. ரா. தாமஸ்: தலைவரவர்களே, அறிக்கையின்படி ஏற்கெனவே செப்டம்பர் மாதத்திலே பயிற்சி ஆரம்பிக்கப்பட வேண்டுமென்றும் இந்த ஆண்டு மே மாதத்திலும், ஜூன் மாதத்திலும் அனைத்து ஆசிரியர்களுக்கும் உறுதுணையாக நேரிடைப் பயிற்சி கொடுக்க வேண்டுமென்றும் ஆணை இருந்தது. ஹோம் சயின்ஸ், ஹிஸ்டரி, எக்கனாமிக்ஸ் போன்றவைகளைப் பற்றி இந்த அறிக்கையிலே குறிப்பிடப்படவில்லை. இந்த நிலையிலே இப் பயிற்சி எப்போது ஆரம்பிக்கப்படும், எப்போது முடிக்கப்படும் என்பது குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் திட்டவட்டமாக அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இரண்டு தவணைகளில் நடத்துவதாக இருந்த பயிற்சி இப்போது நிர்வாக நலன் கருதி ஒரே தவணையில் நடத்தி முடிக்கப்பட வேண்டுமென்று பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்திருக்கிறார்.

---

@ 198 ஆம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

அதை விரைவிலே நடத்த இருக்கிறார்கள். பாடங்கள் அச்சிடப்பட்ட உடன் பயிற்சி வகுப்புகள் தொடங்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. வரலாறு, பொருளாதாரம் போன்றவற்றுக்கும் இப்படி ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்பது சரியல்ல. ஆசிரியர்களிடம் நாங்கள் பேசியபோது, "விஞ்ஞானப் பாடங்களைப் படிப்பிப்பதற்குக் கொஞ்சம் கஷ்டமாக இருக்கிறது, தனிப்பட்ட முறையிலே படிக்க முடியாது, பரிசோதனைகள் எல்லாம் இருக்கின்றன, அதற்கு மட்டும் சொல்லித் தாருங்கள்" என்று கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் இது ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆக, ஆசிரியர்களின் தகுதியை எல்லா இடத்திலும் உயர்த்தும் வகையில், எல்லாப் பாடங்களையும் சொல்லிக் கொடுக்கும் நிலையில் நாம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ் :** இண்டக்டட் ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், வருகைப் பட்டியலில் இடம் கொடுக்கப்பட்டிருந்தது. இப்போது அந்த முன்னுரிமைப் பட்டியலை மாற்றியிருக்கிறார்கள். அரசாணை எண் 954, நாள் 23—5—1983ன்படியும், அரசாணை எண் 1877, நாள் 29—9—1979ன் படியும் எந்தெந்த ஆசிரியர்களுடைய பெயர்களை வருகைப் பட்டியலில் எழுத வேண்டுமென்று ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது. இன்றைக்கு அரசாணை எண் 1, நாள் 20—1—1984ன்படி முதல் இடத்தைப் பெறுவது யார் என்றால், 675 ரூபாய் சம்பளம் பெறும் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். பட்டதாரி ஆசிரியர்களுக்கு முதலிடம் அளிப்பதை வரவேற்கிறேன். அவர்கள் பெயர் முதலில் வர வேண்டியது தான். அதே நேரத்தில் டெம்பரரி ஆசிரியர்களுக்கு இடம் இல்லை என்பதுபோல் அதிலே சொல்லியிருக்கிறார்கள். அதே நேரத்தில் உதவித் தலைமையாசிரியர்கள், அடிஷனல் அசிஸ்டெண்ட், ஹெட்மாஸ்டர்ஸ் இவர்களுடைய பெயர்கள் எல்லாம் எங்கே இடம் பெற வேண்டுமென்று சொல்லப்படவில்லை. அதுபோல் இருக்கிறார்கள், ரூபாய் 525 சம்பளம் வாங்கும் ஆசிரியர்களுக்கு இடம் எங்கே? இப்படிப்பட்டவர்கள்பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாதான் எழுப்பலாம்.

**திரு. பா. ரா. தாமஸ் :** விளக்கமாகச் சொன்னால்தான் விளக்கமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து பதில் பெற முடியும் என்பதால் தான் அவ்வாறு பேசினேன். அதோடு கூட முதலிடம் பட்டதாரி ஆசிரியர்களுக்கு தான் என்று சொல்வதை ஏற்றுக்கொள்ளும் அதேநேரத்தில் இப்படிப்பட்ட முரண்பாடுள்ள அரசாணை இப்போது தேவையா?

(முற்பகல் 9-50)

இப்படி ஈர்க்கப்பட்ட ஆசிரியர்களுக்குப் பயிற்சி கொடுத்து அவர்கள் சமமாக்கப்பட்டு, அவர்களுக்கு முன்னுரிமைகள் எல்லாம் தீர்மானிக்கப்படும்





என்று சொல்லக்கூடிய இந்த நேரத்தில், இப்போது வெளிவந்திருக்கும் ஆணை அந்த ஆசிரியர்கள் மத்தியில் குழப்பத்தையும், குரோதத்தையும் ஏற்படுத்துவதாக அமைந்திருக்கிறது. ஆகவே இவைகளை சீர்செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே, அரசு ஆணை அந்தப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களிடையே குழப்பத்தையும் குரோதத்தையும் ஏற்படுத்தவேண்டுமென்பது நோக்கமல்ல. இதற்கு முன்பிருந்த நிலையினால் சிலருக்கு மன அதிருப்தி இருந்ததன் அடிப்படையில், அவர்கள் சில கோரிக்கைகளை வைத்தார்கள். அந்தக் கோரிக்கைகளின் அடிப்படையில் இப்போது ஒரு ஆணை வெளியிடப்பட்டது. இந்த ஆணையினால் குழப்பம் ஏற்பட்டால், இதற்கு முன்பிருந்த நிலையையும், இப்போதிருக்கிற நிலையை ஒப்பிட்டுப் பார்த்துத்தான், அதை ஆராய்ந்து மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்க முடியும்.

### 4. ஆளுநர் உரை மீதான விவாதம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. சனார்த்தனம் அவர்கள் ஒரு திருத்தம் கொடுத்துள்ளார். அதை அவர் முன்மொழிவார்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட திருத்தத்தை நான் முன்மொழிகிறேன் :

"கீழ்க்கண்டதை, தீர்மானத்தின் கடைசியில் சேர்த்துக்கொள்ளவும் :

1. ஆளுநரின் தமிழ் உரையில் இலங்கை என்ற வார்த்தை பயன்படுத்தப்படாதது குறித்து ;

2. வெள்ள நிவாரணப் பணிகளில் உதவி செய்த பல கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் அமைப்புகளின் பணிகள் குறிப்பிடாதது குறித்து ;

3. இலங்கையிலுள்ள பூர்வீக தமிழர்கள் தாக்கப்பட்டது குறித்து ;

4. நீலகிரி மாவட்டத்தில் அந்நிய செலவாணியை பெரும் அளவு பெற்றுத் தரும் தேயிலை உற்பத்திக்கு பின்வெட்டு நிலையான விலக்கு குறித்து ;

5. படித்த பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு பற்றி எதும் குறிப்பிடாதது குறித்து ;

6. பாம்பன் பணி எப்பொழுது முடிவடையும் என்று திட்டவட்டமாக குறிப்பிடாதது குறித்து ;

7. கட்டிட தொழிலாளர் தகுதி பற்றி குறிப்பிடாததுபற்றி ;

[டாக்டர் இரா. சனார்த்தனம்] [1984 பிப்ரவரி 23

8. எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்பது அரசின் கொள்கையாக இருந்தும் எப்பொழுது என்னென்ன வெற்றிகள் பெற்றுள்ளது என்று குறிப்பிடாதது;

ஆகியவை ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

திரு எ. எஸ். வெங்கடேசன்: நான் அதை வழிமொழிகிறேன்.

Thiru J. M. MIAKHAN: Hon. Chairman, Sir, I thank you for giving me this honour of speaking on the last day of the discussion on the Governor's Address. Though it is unusual for a person other than the Leader of the Opposition to speak on the last day, I have been given special permission to speak on this day. I really thank you for this gesture.

Every year, at the commencement of the Budget Session, the Governor addresses a Joint Session of both the Houses of the Legislature and very many assurances are given in that Address. But, we are not sure whether all those assurances have been carried out. Formerly also, very many assurances have been given and there is no way to know whether all those assurances have been carried out. If an assurance has been given by a Minister, there is an Assurance Committee which can pull up the Department concerned and ask the Department to state whether the assurance has been implemented or what the reason is for not having implemented the assurance. But, as far as the Governor's Address is concerned, the Governor can say anything under the sky and can still go unchecked and nobody can question him. Therefore, I think that we can at least have a convention whereby before the Governor delivers his Address, the Members of the Legislature are given a resume showing the action taken on the announcements made in the previous Address. By that, we can know the actual progress that has been made, the percentage of assurances that have been fulfilled and the reasons for not fulfilling the other assurances.

Thiru G. SWAMINATHAN: The hon. Member can say specifically what are the assurances given by the Governor and what has not been carried out. Then, it would be proper for the Hon. Minister to reply.

Thiru J. M. MIAKHAN: For example, it was mentioned in one of the previous Addresses that a separate Corporation had been set up, with an initial capital of Rs. 1 lakh, for monitoring the sending of persons from Tamil Nadu who sought employment in foreign countries. But, nothing has been heard about the working of that Corporation. Then there was mention about building



1984 பிப்ரவரி 23] [Thiru J. M. Miakhan]

houses for Adi-Dravidars, persons belonging to the Backward communities, etc. But, we do not know whether those houses have been built or, if they have not been built, the reasons therefor. Of course, there may be a valid reason for not implementing some assurances. But, in such cases, we must have at least an explanation giving the reasons. If an assurance given by a Minister on the floor of the House is not implemented, the Assurance Committee asks for an explanation from the Minister. But, so far as the Governor is concerned, nobody can ask him. If matters go unchecked like this, what is the use of having such an Address and of spending the public Exchequer's money on having a discussion on that Address for so many days? I do not understand the rationale behind this process. Therefore, at least in the future, before the Governor delivers his Address, the Government may give us a brief note showing the assurances in the previous Address that have been implemented and also the reasons for not implementing the other assurances. This will go a long way in assuaging the feelings of the Members of this House.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

As far as the Governor's Address is concerned, more than 40 per cent of the Address—in relation to the number of pages in the Address—has been devoted to drought and drought relief works and allied matters. Of course, it is a very important matter and it is naturally given such importance. I feel that the Government have done a wonderful job in the matter of drought relief and we should congratulate the Government on that. There are a few lapses as far as the distribution of the benefits to the people is concerned. It is not done in an impartial manner. People for whom it is intended have not been benefited in many places. There have been some discrepancies in the quantum of benefits or doles given. There is distinct discrepancy and the local people also have raised a hue and cry and have protested against such an attitude. I think the Government are also fully aware of such lapses in some places. Therefore, I request the Government to set it right and see that there is no complaint on this score. Whatever is available from the Central Government and whatever is given by the State Government should be spent uniformly for the welfare of the people. It should not be allowed to go to one section, so that the other section would feel neglected. Such a feeling of being neglected should not arise and it is not good for the Government. The Government should see that all the ameliorative measures taken in connection with drought benefit the affected people uniformly and every section of the people are benefited properly.

[Thiru J. M. Miakhan] 

Regarding drinking water to the people of Madras City, several things have been stated about bringing water from the Ganga-Cauvery project and about the possibility of giving more amount of drinking water per head of population in Madras City. The actual work on the project has not yet started though we have allocated a sum of Rs. one crore. I think there is some snag . .

The Hon. Thiru S. RAMACHANDRAN : Mr. Deputy Chairman, the hon. Member wants water from the Ganga. I think we have no such scheme to bring water from the Ganga. Probably the hon. Member means the River Krishna.

Thiru J. M. MIAKHAN : Sir, I am sorry. It is a slip of the tongue. I stand corrected and I thank the Hon. Minister for his timely correction. There seems to be some difficulty. The Central Government are not ready to include the scheme in the Sixth Plan. Even if they do not do it, our State should take it up independently and see that the scheme is implemented as early as possible. Definitely there will be escalation of cost and the cost of about Rs. 600 crores will go to Rs. 3,000 crores in due course of time, if the scheme is not carried out in proper time. We have seen it happening in the case of maney other schemes where the estimated cost of about Rs. 100 crores has gone up to 700 or 800 crores of rupees now. If there is delay, there will be escalation of prices and ultimately we will be the sufferers and the accural of benefits to the people will also be delayed.

There are other small schemes of drinking water supply which have not been properly implemented. For example, the Hon. Minister concerned had promised that the scheme for water supply from Palar to Alandur and Tambaram and other areas will be implemented before 15th March 1983. But, at present, water is coming in small quantities in one or two taps. The supply is equal to not even half a per cent of the need of the people. There are one or two taps and not even all the streets are provided with such taps. Water is not supplied in sufficient quantities. There is some difficulty somewhere and I do not know what it is. We are not able to get sufficient water even for drinking purposes. Even if we walk half a mile, water is not available. I would request the Hon. Minister to see that the promise given is property implemented and not implemented for more name-sake. Now it is not properly implemented and, as a matter of fact, the quantum of water given is not even one per cent of what was envisaged. There must be some mistake somewhere, presumably some repair somewhere. I request the Minister concerned to look into the matter and see that drinking water is given to every village because it is of primary importance like education. If the Government could not provide the basic needs of



 [Thiru J. M. Miakhan]

the people like housing, drinking water and other amenities and if these things are not available, there is no use for a Government to function at all.

Then, about electrictty, somehow or other I am also a little intimately associated with the Electricity Board in one sense. I know the difficulties or the Electricity Board. For some reason or other, our Government seems to be reluctant to raise the rates for

(முற்பகல் 10-00)

the agricultural sector. As a result, the Electricity Board is in the red. The cost of production per unit is much more than the tariff for the agricultural sector. The Electricity Board must be allowed to function at least like any other Government enterprise and they must be given some freedom of action. Then, they will try to balance the cost of production and the income and they will levy the appropriate rates. But, somehow or other, they have not been given much independence. As a result, we now find that certain classes of consumers are charged less and the Electricity Board finds itself in the red, being unable to make both ends meet. Therefore, the Government must see that the rates for the distribution of electricity are raised. They should not raise the rates only for the industries and other classes of consumers who, in the eyes of the Government, appear to be rich. Even those in the agricultural sector can afford to pay a little more. They are now charged at a ridiculously low rate of 15 paise or 13 paise per unit. The rates may be increased and the rates have to be rationalised. Since we have practically exhausted our hydel-power resources, we have to depend entirely on other resources and mainly on thermal power. But, the availability of coal is the main bottleneck in the generation of thermal electricity. Now the cost of coal has gone up by 25 per cent and this has caused more difficulties to the State Government and to the Electricity Board. The Hon the Minister for Electrictty is moving heaven and earth to see that we build up a buffer stock of coal at least by importing coal from abroad, especially from Australia. He is doing this not because he is enamoured of having large stocks of coal but only for the purpose of building up a buffer stock so that it could be used in times of scarcity. Even now, we are having difficulty in getting coal from Haldia, Singareni and other places. The coal does not reach us in time and the quality also is bad. There is pilferage on the way, there is short-weighment and very often the coal does not reach us in time and the quality also is bad. There places cannot be readily used and it has to be purified first. But the coal imported from abroad can be readily used and its capacity to generate heat is also more. Therefore, we can resort to import of coal at least to some extent and build a buffer stock. At the

same time, we should also think of other sources of energy. Off and on, I have spoken about this many times. Once the Hon. the Minister for Electricity mentioned that the electricity generated from these alternative sources may not meet our requirements. But, I would like to say that besides implementing many mini-hydel schemes, we may also harness wave-power to a large extent and generate electricity. If we have four or five sources of generating electricity, the generation of electricity in our State will go up considerably. At the same time, Tamil Nadu will become the forerunner in the field of generating electricity through alternative sources. Such a step will, besides saving foreign exchange, give an impetus and be a morale booster for the people who use electricity. They will know how costly the generation of electricity is. If the Government of Tamil Nadu trys to augment the generation of electricity, even in small driblets by having recourse to various alternative sources of energy, then, the people will understand the usefulness of electricity and they will try to use it more prudently. By that, we will be able to save electricity and there will be good progress all round. Therefore, I request the Government to bestow some more attention on the implementation of the mini-hydel schemes and also on the generation of electricity through alternative sources of energy. Now, the generation of electricity making use of the solar power is not so costly as it appeared to be a year back. It seems that TVL Mettur Chemicals have made a breakthrough in this field. They claim that they can now generate electricity from solar energy at a cost which is one-fourth the cost which they incurred for this purpose previously. They hope to reduce the cost still further. Therefore, I request the Government to pay some more attention to this. Recently, I saw a news item that a particular variety of bacteria is capable of producing hydrogen from saline water continuously throughout the year without any break. It seems that this bacteria is capable of producing a large quantity of hydrogen from one litre of water. Their efficiency in producing hydrogen from saline water is rated at 30 per cent. Therefore, this can also be made use of in the generation of electricity. This may be now in an experimental stage but it can be developed. The bacteria can be cultivated in saline areas, salty areas and in marshes and this can be developed as an alternative source of power. A Research and Development Wing should be attached to the Electricity Department and we can spend certain amount for that purpose. It is not a wasteful expenditure. By such research, our students will be encouraged to learn more and this will be a challenge to them and they will definitely get a breakthrough. It will benefit not only Tamil Nadu and India but the whole world. I request the Government to bestow some attention on these things.



Coming to Education, I think every now and then we are trying to tinker with it and change the pattern. Without indulging in tinkering with the system, we should leave the question of pattern of education, etc. to persons who are experienced and who are authorities on educational subjects. I think it will be better for us to do so. Any pattern of education should be allowed to be in force for some time, so that we may watch the results, instead of changing it every now and then. Such frequent changes put the pupils in trouble. When we spend one-third of our Budget on education, we should see that it is properly spent and we get proper results.

Regarding Free Trade Zone, there was a mention about it in the past. Here also there is a mention about it and I do not know what is going to happen and what will be the result. Several things were mentioned in the Governor's Addresses and the Budget speeches in previous years. It was stated that there would be an agency to look after the welfare of those who wished to go abroad seeking employment and those who had already gone abroad for employment. In some other States such agencies are doing very good work. Why should we not have such a department? My son who is working in Jeddah told me that our people were being rounded up in Saudi Arabia, that they were mostly Indians and that most of them were from Tamil Nadu. They will be repatriated to India through our Embassy there as early as possible. There are some hitches because they have no passports. Their passports have been confiscated and they are in difficulties. Some voluntary organisations have collected money and have been feeding them. There must be an organisation in our State to monitor these activities and see that these people who go there do not suffer. Such an organisation can help them to get employment in a proper manner and can also see that our people are treated properly. There must be some agency here to look after their welfare. This is a very important matter and this should be looked into.

The Governor's Address fails to mention several things. There is no mention about law and order and about the position of minority communities and their protection. We have been talking about the minority communities and about the fact that their position is very insecure. There are Police excesses against them. Certain things are brought to the notice of the Hon. the Chief Minister and the Hon. the Chief Minister has been magnanimous to take prompt action. There are many more things which go unrepresented. There are some organisations which go about threatening other community people. In one meeting one person has said that women

(Thiru J.M. Miakhan) 

of a particular community are wearing so much jewellery on their hands, that if one woman's hand is chopped off and taken away, the jewellery will be sufficient for one's livelihood for lifetime. They do not even speak of the entire person. They say that just one hand chopped off from that person will give a lot of money. It seems that the person is so rich. Such propaganda is being carried on. They say several very nasty and unprintable things also which I do not want to repeat here in this House. We have to bear all these things. If such things are only stray incidents and if some irresponsible persons blabber something in the street-corner, then, it is all right. But, even some responsible persons do this. Even one of our Hon. Ministers seems to give respect to these institutions and to these 'Sangams'. He attends their meetings, giving them respectability. Therefore, the other people feel that their views also have to be heard. People in Government should not do such things. This is a secular State. The other Ministers are, by and large, very correct in their behaviour and we are very much thankful to them. There are one or two Ministers who do not . . . .

Mr. DEPUTY CHAIRMAN: What the hon. Member is saying is something very unbelievable. It has got a communal angle. Of course, he has got every right to bring it to the knowledge of the House. But, I would request him not to elaborate it too much because it may be published.

Thiru J. M. MIAKHAN: I am not mentioning the names, I am sure that the Hon. the Chief Minister will know what I am mentioning about and that he will take appropriate action. As a matter of fact, in certain matters which I brought to his attention he has already taken very prompt action. I am very much obliged to him for that. Similarly I am bringing this also to his notice so that he may take note of it and take prompt action so as to assuage the feelings of the minority community. Sir, as suggested by you, I am not going to dwell more on this subject.

Mr. DEPUTY CHAIRMAN: I would like to remind the hon. Member that two or three hon. Members are to speak after him.

Thiru J. M. MIAKHAN: I will take only two more minutes. If I am allowed to speak uninterrupted, I will finish in two minutes. Otherwise, I may need some more time.

I congratulate the Government on the performance of their Transport Department. I am not for mentioning only those things which I want to criticise. There are certain aspects in which the Government have done very well and I want to mention



 (Thiru J.M. Miakhan)

them also. For example, the Transport Department has done very well. Our Transport Corporations have done their very best to provide amenities to the travelling public. They are among the best in the country and their performance has been acclaimed by many people.

Similarly, in the matter of flood relief, by and large, good work has been done, except in the field of distribution of loans. Several roads have been repaired; but, still, only the fringe of the problem has been touched. I think that funds have been diverted from other heads for undertaking this work. Even then, all the roads have not been completely repaired. It is mentioned that roads to a length of more than 4,000 km. have been damaged. But, not even a small portion of it has been repaired. In some of the roads which I saw, I found that the repair work had been done only by spreading some earth. Vehicles plying on such roads are prone to accidents because one wheel of the vehicle will be on good road and the other will be on the mud portion of the road. Such roads will definitely cause accidents and also cause havoc to the road-users. Therefore, I request the Government to see that repairs are carried out properly and completed as early as possible. Thank you, Sir.

டாக்டர் இரா. சனார்த்தனம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது சில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தமிழ் அறியாதவர்கள் 'வணக்கம்' என்கின்ற சொல்லைச் சொன்னாலேயே, நம்முடைய உள்ளம் எல்லாம் மகிழ்கின்றபோது, ஆளுநர் அவர்கள் சில வரிகளை தமிழிலே படித்து, சுவையூட்டினார்கள். அதிலே என்னுடைய மகிழ்வைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது எனக்கு ஒரு புதிய அனுபவம். ஆளும் கட்சி வரிசையிலே இருந்து பல ஆளுநர் உரைகளிலே உரையாற்றி இப்போது நான் பேசி, இன்றைய பேச்சுக்கு என்னுடைய நேற்றைய பேச்சு பதிலாக வந்துவிடக்கூடாது என்பதையும், முதல் பக்கத்திலே வந்த பேச்சு 3-வது பக்கத்திலே மறுப்பு ஆகிவிடக்கூடாது என்பதையும், அதைவிட பேரறிஞர் அண்ணா அவர்கள் 'மாணவர்கள் தலைவன்' ஆக இருந்த என்னை, 'உனக்கு அரசியல் ஆர்வம் இருக்கின்றது, முழுநேர அரசியல் வாதியாக வா' என்று சொன்ன அழைப்பையும் இன்று நினைத்தேன். இன்றைக்கு 'இதற்காக அழைத்தேன்' என்று அவர் சொல்லக்கூடிய அளவுக்கு முன்னுக்குப் பின் முரணான பேச்சை நான் பேச விரும்பவில்லை.

ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அருமை நண்பர் திரு. வலம்புரி ஜான் அவர்கள் 'அரிஸ்டாட்டில் ஆள வந்தாலும், கன்பூசியஸ் வந்தாலும், வர்த்தமானரே வந்தாலும் குறை சொல்லத்தான் செய்வார்கள்' என்று சொன்னார்கள். மகான்கள் அந்தப் பக்கம் மட்டுமில்லை, இங்கேயும் இருக்கிறார்கள்.

மூர்த்திகளிலேயே கீர்த்தி மிக்க இராமமூர்த்தி எதிர்க் கட்சித் தலைவராக இருக்கிறார். கல்யாணியானால் அன்று 'ஆனைக்கூற்றினால் பொதுவும், அகாயத்தைச் சுற்றத் தேவையில்லை' என்று கர்ணனிடம் ஏமாந்த நிலை கூடாது. கல்யாணியையும் கர்ணனையும் சேர்ந்து சுற்றி இருந்தால், ஆளுக்கு அமைப்பு பாராட்டு கிடைக்கும் என்ற நிலை இருந்திருக்கும். அதோடு மதிப் பிற்குரிய உறுப்பினர் கிடைக்கப் பாராட்ட அவர்கள், ஆண்டவன் பொயைத் தாங்கவில்லை என்றாலும், அவர்களும் அரசி ஆகாயத்திலே இருந்து கொண்டும், காங்கிரஸ் கண்ணிமைக்கும் நேரத்திலே வரும், பால் இங்கு ஞானியாலே கிடைக்கும் என்று நினைத்த மாப்பாக்கள் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எம் ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்களே, இதுபோன்ற சிறு பதிலை, விளக்கம்தான், சொல் லாம் என்று கருதுகிறேன். மும்மூர்த்திகள் என்றாலே பிரமன், விஷ்ணு, சிவன் என்றுதான் சொல்வார்கள். இவர் இந்து, முஸ்லீம் இரண்டையும் ஒன்றுபடுத்தி, மருந்தை மூன்று சேர்த்திருக்கிறார்கள். அதற்காக நான் உறுப் பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** அதோடு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களிடம்,

"நாராய் நாராய் செங்கால் நாராய்
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன—பவளக் கூர்வாய்
செங்கால் நாராய் நீயும் நின் மனைவியும் தென்திசைக்குமரியாடி
வடதிசைக்கு ஏகுவீராயின்."

என்று கூறியதைப்போல, "மத்திய அரசுக் குழு வந்திருக்கிறது, தருவார்கள் என்று நம்புகிறோம்" என்ற வரிகளை, நம்பிக்கை வரிகளை ஆளுநர் உரையிலே நாம் பார்க்கிறபோது, 'அவை நம்பிக்கை வரிகள் என்று நம்பினோம், ஏமாந்தோம், தட்டினோம், திறக்கவில்லை, சொன்னோம் கேட்கவில்லை" என்று அந்த வரிகள், வரிகளாக வந்துவிடக்கூடாது என்று மட்டும் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் :** அதோடு 'கேட்டால் கொடுக்கப்படும்' என்பதையும் 'சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு அவைத் தலைவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் எதிர்பார்ப்பைப்போல நிச்சயம் அவர் களுடைய ஆற்றலிலே பெறுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு



வெள்ள பாதிப்பின்போது தஞ்சைத் தரணியிலே உதவிய இராணுவத்தைப் பாராட்டியிருக்கிறார்கள். அந்த பாராட்டை தஞ்சைத் தரணியிலே மட்டு மல்ல, தமிழகத்திலும் அவர்கள் பெற வேண்டுமென்று தெரிவித்துக்கொள் கிறேன்.

நீலகிரி தொகுதியில் வெலிங்டன்னிலே பொதுமக்கள் அந்த நகரியத்திலே வாழ்கிறார்கள், அவர்களுக்கும் அவர்கள் உதவியாக இருக்க வேண்டுமென்ப தோடு, இதே சென்னை நகரிலே நம்முடைய கோட்டையைச் சுற்றி போதிய கட்டிடங்களை எழுப்பியவர்கள், அதைக் காட்டிலும் மீனம்பாக்கத்திலிருந்து வருகிறபோது வழியிலே பல பாழடைந்த கட்டிடங்கள் இருக்கின்றன, அங்கே அவர்கள் கட்டியிருக்கலாம். அல்லது நம்முடைய சுற்றுலாத்துறை விமான நிலையத்தினருகே ஒரு நட்சத்திர ஹோட்டலைக் கட்டுவதற்கு அவர்கள் உதவி செய்யலாம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயத் துறையைப் பொறுத்தமட்டில், நம்முடைய நாட்டிலே பெய்தும் கெடுத்தது, பெய்யாமலும் கெடுத்தது என்று பார்க்கிற போது, பெய்கிறபோது நீரைத் தேக்கி, பெய்யாத காலத்திலே சிக்கனமாக நீரைப் பயன்படுத்தும் வகை யில் பயனை முழுமையும் பெறவேண்டும். அரிசி ஆலைகள் அனைத்தையும் நூதனப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பால் வளத் துறையைப் பொறுத்தமட்டில், வெண்மைப் புரட்சி வெற்றி கரமாக நடந்துவருகிற இந்த நாட்டில் குறிப்பாக சென்னையிலே பசுமாடுகள், குடியிருக்கிற வீடுகளிலே ஒரு அறையை ஆக்கிரமித்துக்கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம். பம்பாய் போல ஊருக்கு வெளியே கொண்டு செல்லுங்கள் என்று இந்தத் தேர்தல் வருகிற நேரத்திலே நான் ஆலோசனை சொல்லமாட் டேன். சொன்னாலும் அதை அரசு கேட்கவும் கேட்காது. ஆனாலும் மாநகராட்சியிடத்தில் குடிசை போடாத இடங்கள் ஏதேனுமிருக்குமானால், அந்த இடங்களில் மாட்டுத் தொழுவம் அமைத்து, இந்த மாடுகளை நாம் வைத்து பராமரிக்கிற காரியத்திற்கு அரசு உதவலாம் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக நீரை வீணாக்குவது கூடாது, மின்சாரத்தை வீணாக்குவது கூடாது போன்ற விளம்பரங்களை எல்லாம், அறிவுடைய மக்கள் உள்ள சிங்கப்பூரிலே செய்வதுபோல, நம் தமிழகத்திலும் செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அண்மையில் தமிழ் வளர்ச்சித் துறை சார்பாக ஒரு விளம்பரம் வெளியிட் டிருப்பதைப் பார்த்தேன். தமிழிலே மட்டும் தரலாம், ஆங்கிலத்தில் எழுதித் தரத் தேவையில்லை என்று விளம்பரப்படுத்தியிருந்ததைப் பார்த்து உள்ளபடியே நான் மகிழ்ந்தேன். அந்த அளவு மக்களை நாம் அறிவுபடுத்த விளம்பரங்களை மேற்கொள்வது நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு மின்வெட்டு வருகிற காலங்களிலே நான் குறிப்பாக வேண்டிக் கொள்வது, நீலகிரி தேயிலைப் பயிரைப் பொறுத்த மட்டில், அதைத் தொழிற் சாலைகளுக்குக் கொண்டு சென்று தழைகளை வெட்டி அது அரைக்கப் பட்டால் தான், முழு விவசாயம் முடிவு பெறுகிறது. இது ஏதோ தொழில் என்று கருதி மின் வெட்டு வருகிறபோது, இந்தியாவிலேயே அந்நியச் செலாவணியை தேயிலைத் தொழில் மூலம் வழங்குவதில் இரண்டாவது மாநிலமாக உள்ள தமிழகம் பாதிக்கப்படுகிறது. எனவே எந்தக் காலத்திலும் மின் வெட்டு வராமல், மற்ற விவசாயிகள் பெறுகிற பலனை இவர்களும் பெறுகிற நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறுவர்களை வேலையிலே அமர்த்துவது சிவகாசியில் மட்டுமல்ல, பல இடங்களில் நடக்கின்றது. நாம் இன்றைக்கு எந்தப் பேருந்து நிலையங் களுக்குப் போனாலும், "இன்றே கடைசி இன்றே கடைசி" என்று சிறுவர்கள் குரல் கொடுக்கிறார்கள். பல ஆண்டுகள் வாழ வேண்டும், முடிந்தவரை இந்தத் தமிழகத்திற்கு ஏதாவது செய்ய வேண்டுமென்று ஆசைப்படுபவர்களிடம், 'இன்றே கடைசி' என்று அவர்கள் குரல் கொடுப்பது மட்டுமல்ல, 'யோசிக்கா தீர்கள். அதிர்ஷ்டம் அழைக்கிறது' என்கிறார்கள். சிந்தித்தால்தான் வாழலாம் என்று உலக அறிஞர்கள் எல்லாம் சொல்லியிருக்கிறபோது 'யோசிக்காதீர்கள்' என்ற குரலும், அதிர்ஷ்டத்திலே நம்பிக்கை கொண்டு நடக்கும் வாட்டுகிற அந்தப் பணியிலே இருக்கிற சிறுவர்கள். ஸ்கூட்டர், கார் ஒர்க்ஷாப்புகளிலே பணியாற்றுகிற சிறுவர்கள், மண்டி, மளிகைக் கடையிலே வேலை செய்கிற சிறுவர்கள்—இவர்கள் பள்ளிக் கூடங்களில் கொடுக்கும் மதிய உணவை உண்டு, மாலை வகுப்புகளிலே கலந்துகொள்ளும் அளவிலே செய்ய வேண்டும். இன்றைக்கு கல்வித் துறையில், மாணவர்கள் பல்வேறு தேர்வுகள் நேரடியாக எழுத வாய்ப்பு இருக்கிறது. அஞ்சல் கல்வி முறை இருக்கிறது. அந்த முறையில் இந்தச் சிறுவர்கள் தேர்வு எழுதுவதற்கு ஓய்வு பெற்ற ஆசிரியர் களைப் பயன்படுத்தலாம். இன்றைய தினம் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பை அதிகரித்திருக்கிறார்கள். அவர்கள் பல தொழிற்சாலைகளில் மதுரை பயிற்சி பெற வழி வகை காணவேண்டும். மெட்ராஸ் ஸ்டீகிரீன்ஸ் அரசு எடுத்திருப்பதற்கு மகிழ்ச்சியடைகிறேன். தொழிற்சாலைகளில் இப்படிப்பட்ட விளைவுகள் வருகின்றன என்றால், அதற்குக் காரணம் என்ன; அதை தொழிலதிபர்கள் செய்கிறார்களா அல்லது தொழிற் சங்க வாதிகள் அந்த நிலை ஏற்பட தொழிலாளர்களை அழைத்துச் செல்லுகிறார்களா என்று ஆராய வேண்டும்.

(முற்பகல் 10-20)

தமிழ் நாட்டில் தொழில்கள் வேண்டுமென்று அண்ணா, காமராசர் போன்ற வர்கள் முயற்சி எடுத்து, அதில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். சர். ஏ. இராமசாமி முதலியார் முயற்சியால் இந்தியா சிமெண்ட்ஸ் தொழிற்சாலை



ஏற்பட்டது. இப்போது அது கைமாறும் நிலையில் இருக்கிறது. சவுத் இந்தியா விஸ்கோஸ் காமராஜ் அவர்கள் முயற்சியால் வந்தது. குடும்பச் சண்டையால், அதுவும் கைமாறி இருக்கிறது. பின்னி கம்பெனியை பிர்லா எடுப்பாரா என்ற பேச்சு வருகிறது. பிற மாநிலங்களில் இருக்கிறவர்கள் இங்கே வந்து தொழில்களை வாங்குகிறார்கள். அவர்கள் சமையல்காரர் களாகத்தான் வர வேண்டும். சாப்பிட வரக்கூடாது. பல ஆண்டுகளாக உள்ள தொழில்களை யாராவது கவர வந்தால், அதற்கு இடம் கொடுக்காமல் அரசே அதை எடுக்க வேண்டும் அல்லது இங்கே இருக்கிறவர்கள் அதை வாங்க வேண்டும். சிம்சன், மதுரா கோட்ஸ் போன்றவற்றை வெள்ளைக்காரர்களிட மிருந்து வாங்கியிருக்கிறோம். இன்றைய தினம் இந்திய முதலாளிகள் ஒரு முழக்கம் இடுகிறார்கள். சுராஜ் பால் இந்தியாவில் பரத்ராமுக்குச் சொந்த மான கெமிக்கல்ஸ், டெக்ஸ்டைல்ஸ் தொழிற்சாலைகளையும், எச். பி. நந்தாவின் வாகனங்கள் தொழிற்சாலையின் மூலதனத்தையும் கைப்பற்றும்போது, அவர் கள் குரல் கொடுக்கிறார்கள் இந்தியாவில் உள்ள தொழிற்சாலைகளை அமெரிக்கா, இங்கிலாந்தில் உள்ளவர்கள் கைப்பற்ற நினைக்கும்போது தடை செய்ய வேண்டுமென்று குரல் கொடுக்கும்போது. இங்கே உள்ள நல்ல தொழிற் சாலைகள் 'சிக் இண்டஸ்ட்ரீஸ்' ஆக்கப்படும்போது, அவற்றை அரசே எடுத்துக் கொள்ள வேண்டும்

**திரு. ஆ. நல்லசிவன்:** தமிழ் நாட்டில் உள்ள தொழில்களை மற்ற மாநிலங் களில் உள்ளவர்கள் வாங்குகிறார்கள் என்றால், தமிழ் நாட்டு முதலாளிகள் மற்ற மாநிலங்களில் தொழில்களை வாங்கலாமென்று மாண்புமிகு உறுப்பினர் வர்கள் கூறுகிறார்களா? பிரிட்டன், அமெரிக்கா என்பவை வேறு நாடுகள். ஆனால் தமிழ் நாடு இந்தியாவில் ஒரு மாநிலம்தானே.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** ஒரு தொழிலைத் துவக்க நாம் எடுக்கும் முயற்சிகள், அரசு எடுக்கும் முயற்சிகள் அத்தனையும் வீணடிக்கும்போது, இதிலே கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கூறுகிறேன், என்னைவிட முதிய அரசியல்வாதிகள், நான் சொல்வதில் தவறு இருக்கிறதென்று எடுத்துச் சொன்னால், நான் திருத்திக்கொள்கிறேன். இது ஒரு சிந்தனை. நாட்டிலே பேசப்படுகிறது என்பதால் சொல்கிறேன்.

நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் நல்ல பணியாற்ற வேண்டுமென்பது நான் என்னுடைய கருத்து. அவர்களிடம் சென்று கடன் கேட்கும்போது, அவர்கள் வேறு ஒருவருக்கு ஏஜண்டாக இருந்துகொண்டு 'அங்கே போனால் இவ்வளவு சிரமங்கள் பட வேண்டியதில்லை' என்று சொல்கிறார்கள். அந்த நிலை மாறி, வங்கிகளில் நல்ல பணிகள் ஆற்ற வேண்டும். பாமரர் பாவத்

வேகமாக முடிக்கப்பட வேண்டும். மாண்புமிகு அமைச்சர் திரு. குழந்தை வேலு அவர்கள் அங்கே சென்றிருந்தபோதுகூட, ரயில் பாதையில் சென்று, ஆபத்திலிருந்து தப்பியிருக்கிறார்கள். ரயில் போகவில்லை என்றால், இராமேஸ்வரத்தில் காய்கறி எல்லாம் விலை ஏறிவிடுகிறது. அதை உடனடியாகச் செய்ய வேண்டும். வட சென்னையிலும், சாந்தோம் பகுதியிலும் கடல் அரிப்பினால் ஆபத்து ஏற்படுகிறது. ரிசர்வ் வங்கிக்குப் பக்கத்தில் உள்ள பாலம் என்று விழுமோ என்ற நிலையில் இருக்கிறது. அதிலும் கவனம் செலுத்த வேண்டும்.

காற்றுத் தூய்மைக் கட்டுப்பாடுபற்றி நம்முடைய பிரதமர் அவர்கள் அந்த மானில் பேசியிருக்கிறார்கள். மசல் புகை, தோல் பதனிடும் தொழிற்சாலைகளின் கசிவு ஆகியவற்றால் குடிநீர் பாதிக்கப்படுகிறது. அதையும் கவனிக்க வேண்டும்.

கோவை அவிநாசிலிங்கம் மனையியல் கல்லூரியில் ஆராய்ச்சி நடத்தி, சத்துணவு சாப்பிடும் குழந்தைகள் வளமை பெற்றிருக்கிறார்கள் என்று சொல்லியிருப்பதை அறியும்போது, மகிழ்ச்சியடைகிறேன். இப்போது உயர்நிலை பள்ளி மாணவர்களுக்கு உடல் நலம் குறித்து குறிப்பு எழுதப்படுகிறது அதைப்போல அனைத்துப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கும் கேல் உறிஸ்டரி வைக்கப்பட வேண்டும். எப்படி படிப்புச் சான்றிதழ் வழங்கப் படுகிறதோ, அதைப்போல குழந்தைகள் உடல்நலம் பற்றி குறிப்பு வைக்கப்பட வேண்டும்.

மாவட்டங்களைப் பிரிப்பதுபற்றி நான் இந்த அவையிலே பேசினேன். அப்போது தொழில் அமைச்சரவர்கள் பதில் தந்தார்கள். மத்திய அரசு தொழில் உதவி வழங்க, தாலுக்கா அடிப்படையில் பின் தங்கியவை என்பதை மாற்றி மாவட்ட அடிப்படையில் பின் தங்கியவை என்று ஆக்கியுள்ளதால், பல மாவட்டங்களாகப் பிரிக்கலாமென்று நான் சொன்னபோது, மாண்புமிகு தொழிலமைச்சரவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். இப்போது அப்படிச் செய்வார்கள், அதை மாற்றினால் அவர்கள் வேறு ஒன்றைச் செய்வார்கள் என்று வேடிக்கையாகச் சொன்னார்கள். எனினும் அதுதான் காரணமாக இல்லையென்றாலும், பிரிக்கப்படுவதிலே நான் மகிழ்ச்சியடைகிறேன். அண்ணா பெயரில் ஒரு மாவட்டம் வந்தது குறித்து மகிழ்ச்சி. இப்படி புதிய மாவட்டங்கள் துவக்கப்படும்போது, புதிய இராமநாதபுரம் முதலிலே துவக்கப் படவேண்டும். காரணம் இராமேஸ்வரத்தில் மீனவர் பிரச்சினை ஏற்கெனவே இருந்து வருகிறது. இராமநாதபுரத்திலே அமைகிற மாவட்டத் தலைநகர் பிரச்சினைகளை விரைவாகத் தீர்க்க துணையாக அமையும். இப்படி நிர்வாக வசதிக்காக வேண்டி மாவட்டங்களைப் பிரிப்பதற்காக பல கோடிக்கணக்கில்





ஏற்படுகிறது என்பதால் இது ரூபாய் செலவானாலும் கூட மக்களுக்கு வசதி நல்ல முயற்சிதான். மாவட்ட அதிகாரிகளை மக்கள் எளிதில் சந்தித்து தங்கள் பிரச்சினைகளைச் சொல்லும் அளவில் மாவட்டத் தலைநகரங்கள் அமைய வேண்டும். இன்றைக்கு மதுரையை எடுத்துக் கொண்டால், மதுரை மாநகராட்சி சிறப்பு அதிகாரி இருக்கிறார், மாவட்ட ஆட்சித் தலைவர் இருக்கிறார், இராமநாதபும் மாவட்ட ஆட்சித் தலைவர் இருக்கிறார். இந்நிலையில் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் காமராஜர் மாவட்ட ஆட்சித் தலைவர் போன்றவர்களும் சேர்ந்து * * * மதுரையிலே தங்கிவிடக் கூடாது. அந்த வகையிலே மாவட்டத் தலைநகரங்கள் மக்களின் வசதியை அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : தயவுசெய்து குறிப் பேட்டிலிருந்து * * * என்ற வார்த்தையை நீக்கிவிட வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: * * * என்ற வார்த்தையை அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : சம்புவராயர் மாவட்டம் என்று ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. சம்புவராயரைப் பொறுத்தவரையில், நான் கண்ட சிறப்பு என்னவென்றால், மூன்று சம்புவராயர்கள் தென்னார்க்காடு மற்றும் வட ஆர்க்காடு மாவட்டத்தை ஆண்டிருக்கிறார்கள். சோழ மன்னன் காலத்தில் அவர்கள் பாண்டியனுக்கு எதிராக ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள். அந்த வகையிலே இப்போதும் நம்முடைய தென் மாநிலங்களிலுள்ள மூன்று முதலமைச்சர்களும் ஆற்றுநீர் சம்பந்தமாக ஒற்றுமையாக ஒப்பந்தம் செய்ய வேண்டும். மேலும் இப்போதும் கூட கிருஷ்ணா ஆற்று நீர் நமக்குக் கிடைப்பதற்காக ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இதுபோல் ஒற்றுமையுடன் இன்னும் நல்ல பல ஒப்பந்தங்கள் ஏற்பட வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : என்னுடைய பேச்சு கண்டியாக இருக்க வேண்டுமென்று விரும்பினேன். சோழ மன்னன், பாண்டியனுக்கு எதிராக ஒப்பந்தம் என்றெல்லாம் இங்கே மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார். ஆனால் அப்படிப்பட்ட எண்ணம் இன்றைக்கு இந்தியாவில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது

டாக்டர் இரா. சனார்த்தனம்: அடுத்து, தாராள ஓய்வூதிய திட்டத்தை 1979 அக்டோபர் மாதத்திற்கு முன்னர் பணியிலிருந்து ஓய்வு பெற்ற அரசுப் பணியாளர்கள் அனைவருக்கும் பொருந்துகிற வகையில் அரசு நீட்டித்துள்ளது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். ஏழு ஆயிரம் ரூபாய் வருமானத்தில் குடும்பம் நடத்தி வந்த நான் இப்போது 750 ரூபாய் வருமானத்தில் குடும்பம் நடத்துகிறேன். இந்த தாராள ஓய்வூதியத்தின் வாயிலாக என்னுடைய தந்தையின் ஓய்வூதியம் அதிகமாகும். அந்த வகையில் எனக்கும் அது உதவி புரிவதாக அமையும்.

அடுத்து, கட்டிடத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், பெயரை ஐந்து ரூபாய் கட்டி பதிவு செய்ய வேண்டும். இன்றைக்கு கட்டிடப் பணியாளர்களாக இருக்கிறவர்கள் நாளைக்கு காண்டிராக்டர்களாக மாறிவிடக் கூடும். இத்திட்டம் அனைத்து சங்கங்களைச் சார்ந்தவர்களுக்கும், என்ஜினியரிங் அசோசியேஷனைச் சார்ந்தவர்களுக்கும் உதவிகரமாக இருக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சேலம் நகராட்சி மாநகராட்சி ஆவது குறித்து மகிழ்ச்சி. அங்கு அவசியம் ஒரு மருத்துவமனை ஏற்படுத்தப்பட வேண்டும். ரெயில்வே செல் பண்டில் நிறைய பணம் இருக்கிறது. அந்தப் பணத்தைப் பயன்படுத்தி உடனே அதைச் செய்ய வேண்டும்.

அடுத்து, தமிழ் நாட்டுப் பெண்கள் பம்பாயில் விபச்சாரத்தில் ஈடுபடுத்தப் படுகிறார்கள் என்று நாம் பத்திரிகைகளில் பார்க்கிறோம். இதில் ஈடுபடுபவர்களை தனி பெண் காவலர் பிரிவு அமைத்து, கண்டுபிடிக்க வேண்டும். ஆசை வார்த்தைகளைக் கூறி ஏமாற்றும் குற்றவாளிகளை அவசியம் கண்டு பிடித்து தண்டனை வழங்கியாக வேண்டும். இப்படி ஆசை வார்த்தைகளைக் கண்டு ஏமாறும் பெண்கள் தந்தை பெரியார் அவர்களுடைய கருத்துக்களை ஏற்றுக் கொண்டால், தவறுக்கு ஆளாக மாட்டார்கள்.

அடுத்து, ஸ்ரீலங்காவிலுள்ள சிங்கள மருத்துவக் கல்லூரிகளில் படித்துக் கொண்டிருந்த 61 தமிழ் மாணவர்களுக்கும், மற்றும் பொறியியல் கல்லூரிகளில் படித்துக்கொண்டிருந்த மாணவர்களுக்கும் அவர்களுடைய சான்றிதழ்களைப் பற்றிக் கவலைப்படாமல் கேட்ட உடனேயே தமிழகக் கல்லூரிகளில் இடம் கொடுத்ததற்கு நான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குப் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நேரத்தில் நம்முடைய மாநிலத்திலேயே ஏன் வெளிநாட்டு மாணவர்களுக்காக ஒரு மருத்துவக் கல்லூரியை, ஒரு பல்கலைக் கழகத்தை நடத்தக்கூடாது என்று நான் கேட்க



விரும்புகிறேன். அந்நியச் செலாவணியை ஈட்டுவதற்காக வெளிநாட்டு மாணவர்களுக்கு நம்முடைய கல்லூரிகளில் இடம் கொடுக்கலாம் என்று மத்திய அரசு சொல்லும்போது, நாம் ஏன் இதுகுறித்து சிந்திக்கக் கூடாது?

அடுத்து, இந்தோனேசியாவில் 40 ஆயிரம் தமிழர்கள் வாழ்கிறார்கள். மேடான் 20 ஆயிரம் பேர், பிஞ்சை 2 ஆயிரம் பேர், லகுபாகா 1,500 பேர். ஜகர்த்தா 1,000 பேர். இப்படி மொத்தம் 40 ஆயிரம் பேர் வாழ்கிறார்கள். அவர்களுக்கு என்று ஒரு பூர்வீகம் இருக்கிறது. இப்படி இப்படி வாழ்ந்தார்கள் என்பதற்கான கல்வெட்டும் இருக்கிறது. இப்படி பூர்வீகம் இருந்தும் எப்படிப் பட்ட நிலைமையில் வாழ்கிறார்கள் என்றால், 3 பேர் டாக்டர்கள், 10 பேர் என்ஜினியர்கள், மற்ற வேலைகளில் 10 பேர், ஆசிரியர்கள் 50 பேர் மீதி யுள்ளவர்கள் கூலி வேலை செய்பவர்கள், டிரைவர்கள் மற்றும் தார் ரோடு போடுகின்ற வேலை செய்பவர்களாக இருக்கிறார்கள். அந்த நாடுகளில் தமிழ்

(முற்பகல் 10-30)

பேசுபவர்கள் தோட்டக்காரர்களாக வாழ்கிறார்கள். அவர்கள் எல்லாம் "தமிழ் நாட்டில் 100 மாணவர்களுக்காவது தொழில் கல்விக்கு இடம் அளிக்க வேண்டும். அதன் மூலம் அவர்கள் நல்வாழ்வு பெறுவார்கள்" என்று தெரிவித்தார்கள். 13 நாடுகளிலே இன்றைக்கு தமிழ் பேசுகிறவர்கள் இருக்கிறார்கள். அண்ணா அவர்கள் மாநில சுயாட்சிபற்றி விரிவாகப் பேசுகிற போது, மத்தியில் ஒரு கல்வியமைச்சர், மாநிலத்தில் ஒரு கல்வியமைச்சர், மத்தியில் ஒரு நல்வாழ்வு அமைச்சர், மாநிலத்தில் ஒரு நல்வாழ்வு அமைச்சர் என்று இருக்கிறார்கள். நாமென்ன இரண்டு வித கல்வியா கற்கிறோம் என்று அண்ணா அவர்கள் ஒருமுறை கூறினார்கள். அதெல்லாம் நியாயம் என்று சொன்னால், 13 நாடுகளிலே தமிழர்கள் வாழ்கிறார்கள் என்று சொல்லும்போது, நமக்கென்ன ஒரு வெளிவிவகார அமைச்சரைக் கூட நியமிக்கலாம். ஆனால் அதற்கு வேறு பொருள் வந்துவிடும் என்ற காரணத்தால், வெளிநாட்டுத் தமிழர்களின் மொழி, பண்பாட்டைக் காக்க, அறிய, உதவ அப்படி ஒரு சிந்தனை தேவையென்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அகதிகளைப் பொறுத்தவரையில், நாம் ஒரு பெருஞ்சுமையைச் சுமந்து கொண்டிருக்கிறோம். அந்த அகதிகளுடைய கணக்கைப் பார்க்கிற போது, *

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அண்மையில் கூட ஒரு செய்தி அடிபட்டது. நாடற்றவர் களுக்கு எல்லாம் வாக்குரிமை அளிப்பது என்ற நிலைமை அங்கே ஏற்பட்டிருப்பதாகப் பேசப்படுகிறது. அதைப்பற்றி ஏதாவது குறிப்பு சொன்னார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

[1984 பிப்ரவரி 23

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** அது ஒரு நல்ல முயற்சி. அங்கே இருக்கிற இந்தியத் தமிழர்கள் ஐந்து பிரிவினராக இருக்கிறார்கள். ஸ்ரீலங்காவிற்கு மனு செய்தவர்கள், இந்தியாவுக்கு மனு செய்தவர்கள், இரண்டுக்கும் மனு செய்யாமல் இருப்பவர்கள், நாடற்றவர்கள் என்று இருக்கிற நிலையில், இப்போது குடியுரிமை பெற்றாலும்கூட, *

**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அந்த ஒப்பந்தம் காலாவதியாகிவிட்டது என்று முன்பே பேசப்பட்டது. அந்த அடிப்படையில், இங்கே கூட நடவடிக்கை எடுக்கப் பட்டது.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** நான் சொல்வது புதிய ஒப்பந்தம் தான். 1981-க்குப் பிறகு தாங்கள் வற்புறுத்தியதால், புதிய ஒப்பந்தம் செய்யப் படவில்லை. *

**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் :** முன்பு செய்த ஒப்பந்தத்தை உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். ஆனால் திருமதி பண்டாரநாயகா செய்த ஒப்பந்தப்படி, அது காலாவதியாகிவிட்டது என்பது தான் நம்முடைய முடிவு.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** ஆனால், அங்கே என்ன கேட்கிறார்கள் என்றால், இந்தியாவுக்குப் போகப்போவது யார், ஸ்ரீலங்காவில் இருப்பது யார், என்று கேட்டு புதிதாக ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்த வேண்டுமென்றுதான் அதைத் தடை செய்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் :** உறுப்பினர் அவர்கள் விபரம் தெரிந்தவர்கள். "நான் நினைக்கிறேன்" என்று பேசுவது அங்கே யுள்ள தமிழர்களுக்கு உதவி செய்வதாக ஆகாது.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** துணைத் தலைவர் அவர்களே, நான் தவறாகச் சொல்லியிருந்தால், அதைத் திருத்திக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். *

**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் :** "வர இருக்கிறார்கள்" என்று உறுப்பினர் அவர்கள் நினைக்கிறார்களா என்று மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் அந்தக் கருத்தைக் கேட்டுச் சொல்வது நல்லது. அங்கே பிரச்சினைகள் தீர்க்கப்படும்போது, இங்கே பிரச்சினைகளை உருவாக்குவது நல்லதல்ல.

---

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** * என்று சொல்வது எவ்வளவு நியாயமானது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அது வேண்டாம். அது குறிப்பிலேயும் வேண்டாம், பத்திரிகையிலும் வரவேண்டாம். தாங்கள் சொல்வது சரி. அந்த ஒப்பந்தப்படி இதுவரை வந்தார்கள். அதற்குப் பின் ஒப்பந்தமே இல்லையென்பதுதான் நமது நிலை.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** *

**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மீண்டும் குறுக்கிடுவதற்காக வருந்துகிறேன். * தாங்கள் சொல்லிவிட்ட கருத்துக்காக காரணங்களைத் தேடி அலைய வேண்டாம். இதை விட்டுக் கொடுத்து, குறிப்பேட்டிலிருந்து அதை எடுப்பது, தமிழ் நாட்டுக்கும், தமிழர்களுக்கும் நல்லது.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** இங்கே மண்டபத்தில் அகதி முகாம் ஒன்று இருக்கிறது. அந்த முகாமுக்குச் சென்று அங்கேயுள்ள பிரச்சினைகளை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அங்கே ஒரு மக்கள் தொடர்பு அலுவலகம் ஏற்படுத்த வேண்டும். "சிட்கோ" மூலம் அங்கே இருப்பவர்களுக்கு வாழ்வு தர வேண்டும். அதோடு உதவிப் பணம் என்று இருப்பது, மாதச் செலவுக்குப் பணம் தந்தார்கள். மேலும் கட்டிடம் கட்ட, தொழில் தொடங்க என்று கொடுக்கவிருக்கிற பணத்தை உடனடியாக அவர்களுக்குத் தரவேண்டும். இதில் வேடிக்கை என்னவென்றால், இத்தனை ஆண்டு காலமாக அந்த முகாமில் இருப்பவர்களுக்கு, முகாமில் வெளியே இருக்கிற . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** * என்று உறுப்பினர் சொன்ன பகுதியும் அது தொடர்பான பகுதிகளும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அடுத்து மண்டபம் முகாமில் வெளியே சுமார் 20 கடைகள் இருந்தால், அவைகளில் அகதிகளுக்கு என்று ஒரு விலையிலும், உள்ளூர்க்காரர்களுக்கு ஒரு விலையிலும் பொருள்கள் விற்கப்படுகின்றன. சர்க்கரை கிலோ இரண்டு ரூபாய்க்கு உள்ளூர்க்காரர்களுக்கு விற்கப்பட்டால், அகதிகளுக்கு கிலோ, நான்கு

---

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

ரூபாய்க்கு விற்கிறார்கள். எனவே, அகதிகளுக்காகவென்றே அங்கே கூட்டுறவுக் கடைகளை உருவாக்கி பொருள்களை விற்பனை செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். தற்போது விற்கப்படும் விலை கட்டுப்படியாகக்கூடியதாக இல்லை. குறிப்பாக விறகு விலை கட்டுப்படியாகக் கூடியதாக இல்லை. அரசே வனத் துறையின் சார்பாக சவுக்கு மரங்களை ஏலத்தில் எடுத்து, அகதிகளுக்கு நியாயமான விலையில் விற்பதற்கான நிலையை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அந்தமான் தீவுகளில் ஸ்ரீலங்கா தமிழர்களைக் குடியேற்ற வேண்டும். அங்கே 10,000 பேரைக் குடியேற்றலாம். அதற்காக அவர்களுக் கென்றே அந்தமான் தீவுகளில் ரப்பர் தோட்டங்களை உருவாக்கலாம் என்பது நாம் அறிந்த உண்மையாகும். அங்கேயிருந்து வருகிற ஏடுகளில்கூட ஸ்ரீலங்கா தமிழர்களுக்காக ரப்பர் தோட்டங்களை உருவாக்கி குடியேற்றலாம் என்ற குறிப்புகள் வந்திருக்கின்றன. எனவே ஸ்ரீலங்காவிலிருந்து வாழ்விழந்து வருகிறவர்களில் ஒரு 10,000 பேருக்கு ரப்பர் தோட்டங்களை அந்தமானில் உருவாக்கி அவர்களை அங்கே குடியேற்றலாம். அந்தமான் நண்பர்கள்கூட ஒரு அறிக்கையை இதுகுறித்துத் தயாரித்துத் தந்திருக்கிறார்கள். அதை மத்திய அரசு பரிவோடு கவனிக்கும் என்று நம்புகிறேன்.

அடுத்து, லாட்டரி சீட்டுக்களைப் பொறுத்தவரையில், அதில் சுமார் ஏறத்தாழ லட்சம் பேர்கள் ஈடுபட்டிருந்தாலும், அரசு அதில் அக்கறை காட்ட வேண்டியது நியாயம் என்றாலும்கூட, அவர்கள் அரசை எச்சரிக்கிற வகையில் நடக்கக் கூடாது என்பதுதான் என்னுடைய வேண்டுகோளாகும். இங்கே வரி போட்டால் இனி எங்கள் அலுவலகத்தை பாலக்காட்டில் வைக்குவோம், பெங்களூரில் வைக்குவோம், சீட்டு வேண்டுவோர் மணியார்டரில் பெற்றுக் கொள்ளுங்கள் என்று விளம்பரப்படுத்துவதும், நம்மைப் பார்த்து அண்ணா வழியில் செயலாற்றுங்கள் என்று கூறுவதும், ஏழை மக்களும், குருடர்களும் பரிசுச் சீட்டு விற்பனையில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று சொல்லி, தமிழ்க் தானை ஏழைமாக, குருடாக ஆக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தியாவிலேயே இங்கேதான் அதிகமான லாட்டரி சீட்டுக்கள் விற்பனை யாகின்றன என்பதாலே அரசு இதில் சரியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அடுத்து, ஆளுநர் உரையில் "ஸ்ரீலங்கா" என்ற சொல்லையே குறிப்பி டிருக்கிறார்கள். உள்ளபடியே இலங்கை அரசாங்கம் ஸ்ரீலங்கா என்கிற சொல்லை ஆங்கிலத்திலும், சிங்கள மொழியிலும் மட்டுமே பயன்படுத்துகிறது



தமிழ் மொழியைப் பொறுத்தவரையில் இன்னும் இலங்கை என்ற சொல்லைத் தான் பயன்படுத்திக் கொண்டிருக்கிறது. அங்கே உள்ள வானொலியின் கடிதத்தில்கூட 'இலங்கை' என்ற சொல்லையே பயன்படுத்தி வருகிறார்கள். எனவே நமது அரசும் இந்த வகையில் திருத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு சொல் பிரச்சினையானதால் நான் குறுக்கிட விரும்புகிறேன். அதிகார பூர்வமாக ஒரு நாடு தன்னுடைய பெயரை எப்படி வைத்துக் கொள்கிறதோ அப்படித்தான் இன்னொரு நாடு அதனைக் குறிப்பிட வேண்டும், அழைக்க வேண்டும்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் மட்டுமே ஸ்ரீலங்கா என்ற சொல்லை இலங்கை அரசு பயன்படுத்துகிறது, தமிழைப் பொறுத்தவரையில் இன்னமும் இலங்கை என்றே அது குறிப்பிடுகிறது. அந்த உரிமையைத் தமிழுக்குக் கொடுத்திருக்கிறது. மேலும் வானொலியின் கடிதத்தில்கூட 'இலங்கை' என்ற சொல்லே பயன்படுத்தப்பட்டிருக்கிறது தமிழ் நாட்டின் பல ஏடுகளும் அந்தத் தவறைத்தான் செய்து கொண்டிருக் கின்றன. எனவே. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, அனைவரும் 'இலங்கை' என்ற சொல்லை, அதுவும் அந்த அரசே அனுமதித்துள்ள அந்தச் சொல்லைப் பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சேது சமுத்திரம் திட்டத்தை விரைவுபடுத்த வேண்டும். அங்கே இப்போது வட்டமேஜை மாநாடு நடக்கிறது. அமெரிக்காவின் டெபுடி அசிஸ்டெண்ட் செக்காட்டரி ஆப் ஸ்டேட் மிஸ்டர் ஷெஃபர் அவர்கள் "நாங்கள் இங்கே தலையிடுகிற நோக்கம் இல்லை" என்று சொல்லியிருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது என்றாலும், "எங்களுக்கு இந்தப் பகுதியில் ஆசை யில்லை" என்று சொல்லியிருப்பது ஆனந்தத்தைத் தருகிறது என்றாலும், அவர் ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார் ; அதாவது

"The U.S. has not supported the Conference on Indian Ocean Peace Z one at this stage because the Ocean should also be viewed in the context of Hinterland."

அது ஒரு பிரச்சினைக்குரிய பகுதியாக இருப்பதால், இந்துமகா சமுத்திரம் ஒரு அணு ஆயுத அமைதி மண்டலம் என்று ஏற்றுக் கொள்ளவில்லை என்று குறிப்பிட்டிருப்பது நமக்கு வருத்தத்தைத் தருகிறது.

ரூபாய்க்கு விற்கிறார்கள். எனவே, அகதிகளுக்காகவென்றே அங்கே கூட்டுறவுக் கடைகளை உருவாக்கி பொருள்களை விற்பனை செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். தற்போது விற்கப்படும் விலை கட்டுப்படியாகக்கூடியதாக இல்லை. குறிப்பாக விறகு விலை கட்டுப்படியாகக் கூடியதாக இல்லை. அரசே வனத் துறையின் சார்பாக சவுக்கு மரங்களை ஏலத்தில் எடுத்து, அகதிகளுக்கு நியாயமான விலையில் விற்பதற்கான நிலையை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அந்தமான் தீவுகளில் ஸ்ரீலங்கா தமிழர்களைக் குடியேற்ற வேண்டும். அங்கே 10,000 பேரைக் குடியேற்றலாம். அதற்காக அவர்களுக்கென்றே அந்தமான் தீவுகளில் ரப்பர் தோட்டங்களை உருவாக்கலாம் என்பது நாம் அறிந்த உண்மையாகும். அங்கேயிருந்து வருகிற ஏடுகளில்கூட ஸ்ரீலங்கா தமிழர்களுக்காக ரப்பர் தோட்டங்களை உருவாக்கி குடியேற்றலாம் என்ற குறிப்புகள் வந்திருக்கின்றன. எனவே ஸ்ரீலங்காவிலிருந்து வாழ்விழந்து வருகிறவர்களில் ஒரு 10,000 பேருக்கு ரப்பர் தோட்டங்களை அந்தமானில் உருவாக்கி அவர்களை அங்கே குடியேற்றலாம். அந்தமான் நண்பர்கள்கூட ஒரு அறிக்கையை இதுகுறித்துத் தயாரித்துத் தந்திருக்கிறார்கள். அதை மத்திய அரசு பரிவோடு கவனிக்கும் என்று நம்புகிறேன்.

அடுத்து, லாட்டரி சீட்டுக்களைப் பொறுத்தவரையில், அதில் சுமார் மூன்று லட்சம் பேர்கள் ஈடுபட்டிருந்தாலும், அரசு அதில் அக்கறை காட்ட வேண்டியது நியாயம் என்றாலும்கூட, அவர்கள் அரசை எச்சரிக்கிற வகையில் நடக்கக் கூடாது என்பதுதான் என்னுடைய வேண்டுகோளாகும். இங்கே வரி போட்டால் இனி எங்கள் அலுவலகத்தை பாலக்காட்டில் துவக்குவோம், பெங்களூரில் துவக்குவோம், சீட்டு வேண்டுவோர் பணியாரிடம் பெற்றுக் கொள்ளுங்கள் என்று விளம்பரப்படுத்துவதும், நம்மைப் பார்த்து அண்ணா வழியில் செயலாற்றுங்கள் என்று கூறுவதும், மற்றவர்களும், குருடர்களும் பரிசுச் சீட்டு விற்பனையில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று சொல்லி, தமிழ்த் தாயை முடமாக, குருடாக ஆக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தியாவிலேயே இங்கேதான் அதிகமான லாட்டரி சீட்டுக்கள் விற்பனை யாகின்றன என்பதாலே அரசு இதில் சரியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அடுத்து, ஆளுநர் உரையில் "ஸ்ரீலங்கா" என்ற சொல்லையே குறிப்பிட்டிருக்கிறார்கள். உள்ளபடியே இலங்கை அரசாங்கம் ஸ்ரீலங்கா என்கிற சொல்லை ஆங்கிலத்திலும், சிங்கள மொழியிலும் மட்டுமே பயன்படுத்தி



தமிழ் மொழியைப் பொறுத்தவரையில் இன்னும் இலங்கை என்ற சொல்லைத் தான் பயன்படுத்திக் கொண்டிருக்கிறது. அங்கே உள்ள வானொலியின் கடிதத்தில்கூட 'இலங்கை' என்ற சொல்லையே பயன்படுத்தி வருகிறார்கள். எனவே நமது அரசும் இந்த வகையில் திருத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு சொல் பிரச்சினையானதால் நான் குறுக்கிட விரும்புகிறேன். அதிகார பூர்வமாக ஒரு நாடு தன்னுடைய பெயரை எப்படி வைத்துக் கொள்கிறதோ அப்படித்தான் இன்னொரு நாடு அதனைக் குறிப்பிட வேண்டும், அழைக்க வேண்டும்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் மட்டுமே ஸ்ரீலங்கா என்ற சொல்லை இலங்கை அரசு பயன்படுத்துகிறது, தமிழைப் பொறுத்தவரையில் இன்னமும் இலங்கை என்றே அது குறிப்பிடுகிறது. அந்த உரிமையைத் தமிழுக்குக் கொடுத்திருக்கிறது. மேலும் வானொலியின் கடிதத்தில்கூட 'இலங்கை' என்ற சொல்லே பயன்படுத்தப்பட்டிருக்கிறது தமிழ் நாட்டின் பல ஏடுகளும் அந்தத் தவறைத்தான் செய்து கொண்டிருக்கின்றன. எனவே. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, அனைவரும் 'இலங்கை' என்ற சொல்லை, அதுவும் அந்த அரசே அனுமதித்துள்ள அந்தச் சொல்லைப் பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சேது சமுத்திரம் திட்டத்தை விரைவுபடுத்த வேண்டும். அங்கே இப்போது வட்டமேஜை மாநாடு நடக்கிறது. அமெரிக்காவின் டெபுடி அசிஸ்டெண்ட் செக்கரட்டரி ஆப் ஸ்டேட் மிஸ்டர் ஷெஃபர் அவர்கள் "நாங்கள் இங்கே தலையிடுகிற நோக்கம் இல்லை" என்று சொல்லியிருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது என்றாலும், "எங்களுக்கு இந்தப் பகுதியில் ஆசை யில்லை" என்று சொல்லியிருப்பது ஆனந்தத்தைத் தருகிறது என்றாலும், அவர் ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார் ; அதாவது

"The U.S. has not supported the Conference on Indian Ocean Peace Z one at this stage because the Ocean should also be viewed in the context of Hinterland."

அது ஒரு பிரச்சினைக்குரிய பகுதியாக இருப்பதால், இந்துமகா சமுத்திரம் ஒரு அணு ஆயுத அமைதி மண்டலம் என்று ஏற்றுக் கொள்ளவில்லை என்று குறிப்பிட்டிருப்பது நமக்கு வருத்தத்தைத் தருகிறது.

அடுத்து, இலங்கையிலிருந்து இன்னல்பட்டு தமிழகம் திரும்பியுள்ளவர்களுக்கு இந்த அரசு அன்பைக் காட்டியிருக்கிறது, ஆறுதல் தந்திருக்கிறது. இலங்கையிலிருந்து வந்திருக்கும் திரு. சிவசிதம்பரம் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் வீடு அளித்திருக்கிறது. திரு. டி. சிவா அவர்கள் இலங்கை வவுனி தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர். கடந்த கலவர காலத்தில் தமிழ் மக்கள் தாக்கப்படுகிறார்கள் என்று தெரிந்த உடனே கையிலே துப்பாக்கியை ஏந்திக் கொண்டு வெளியே வந்த முதல் நபர். ஆனால் அப்படிப்பட்ட வீரர் மறுநாளே பிடிக்கப்பட்டு அவருடைய விரல் நசுக்கப்பட்டது என்பது மட்டுமல்லாமல், அவருடைய கண் முன்னாலேயே அவருடைய மாவேஜர் சாகடிக்கப்பட்டார். மிகப் பெரிய குடும்பத்தைச் சேர்ந்த அவருக்கு இங்கே தமிழகத்தில் அரசின் சார்பில் வீடு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு நினைவு கூர விரும்புகிறேன்.

அடுத்து, திரிகோணமலையில் திரு. சம்பந்தம் அவர்கள் ஒரு பெரிய குடும்பத்தைச் சார்ந்தவர். அங்கே உள்ள அரசு சிங்களவர்களுக்கு அங்காடிகளைக் கொடுத்து தமிழர்களின் வாணிபத்தை நசுக்க வேண்டும் என்று முனைந்தபோது, தமிழர்களுக்கு நகரின் வெளியே கடைகளை அமைத்துக் கொண்டு இங்கே வந்து வியாபாரம் செய்யுங்கள், அதிலே வெற்றியும் பெறுங்கள் என்று சொல்லி அந்த முயற்சியிலே வெற்றி பெற்றார் என்ற காரணத்திற்காக அவரைத் தண்டிக்க வேண்டும் என்று நினைத்து, அங்குள்ள அரசு அவருடைய தலைக்கு 50,000 ரூபாய் விலை என்று விளம்பரப்படுத்தியது. அப்படிப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவர் இங்கே வாழ்வதற்காக வீடு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கும்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிப்பது என்னுடைய கடமையாக இருக்கிறது.

தலைவர் சிவசிதம்பரம் அவர்கள் கடந்த ஜூலை மாத கலவரத்தின்போது தாக்கப்பட்ட முதல் குடும்பத்திற்குச் சொந்தக்காரர். அவருடைய வீடுதான் முதலில் தாக்கப்பட்டது. அப்போது அவருடைய மனைவியும் மகளும் தப்பிப் பிழைத்தால்போதும் என்று வீட்டை விட்டு வெளியே ஓடி வந்தார்கள். அந்தப் பெண்ணைத்தான் என்னுடைய தொகுதியான நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் மணம் முடித்திருக்கிறார். அப்படிப்பட்ட குடும்பத்தைச் சார்ந்தவருக்கு வீடு தந்து மகத்தான உதவியை இந்த அரசு செய்திருக்கிறது என்பதில் மகிழ்ச்சியடைகிறேன் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர் என்றாலும், தமிழ் நாட்டு மகன்தான் மணம் முடித்திருக்கிறான் என்பதில் பெருமைப்படுவோம்.





(முற்பகல் 10-40)

உலகத் தமிழர்களுக்கு இன்னல் வருகிறபோது அவர்களுக்கு அபயம் அளிக்க இடம் இருக்கிறது, உலகத் தமிழர்கள் துன்பப்படுகிறபோது அவற்றைத் தாங்குகிற அளவிற்கு நெஞ்சம் இருக்கிறது. இது எதற்காக என்றால், அங்கே உள்ளவர்கள் இங்கே வந்துவிடுவார்களேயானால், அவர்களை ஏற்றுக்கொள்கிறோம் என்பதற்காக அல்ல. அவர்கள் அவதிக்குள்ளாகிறபோது, கண்ணீர் விட ஆட்கள், கை கொடுக்க மக்கள், அரசாங்கம், அனைத்துக் கட்சியினர், இந்திய அரசு ஆகியவர்கள் இருக்கிறார்கள் என்ற அந்த உணர்வை ஏற்படுத்தித் தந்தமைக்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று இலங்கையில் வட்ட மேசை மாநாடு நடக்கிறது. அதிலே நல்ல முடிவு வர வேண்டுமென்று ஆவலோடு எதிர்பார்க்கிறோம். அங்கேயுள்ள இளைஞர்கள் எல்லாம் பல நாடுகளுக்குச் சென்றுவிட்டார்கள். இளைஞர்கள் இல்லாமல் இருக்கக்கூடிய பெற்றோர்கள்-தமிழர்கள் வீடுகளுக்குச் சென்று நாளும் அங்கேயுள்ள காவலர்கள் கதவைத் தட்டி, "எங்கே உங்கள் மகன்?" என்று கேட்டு பெற்றோர்களை துன்புறுத்துகிற காட்சியைக் காண்கிறோம். இந்த நிலையில் முன்பு அந்த 35 இலட்சம் தமிழர்களுக்காக நாம் எந்த உணர்வைக் காட்டினோமோ அதே உணர்வை இன்றும் காட்டுவது ஒன்றுதான் அந்த 35 இலட்சம் தமிழர்களுக்கு நாம் செய்கிற மிக மகத்தான பணியாகும். அந்த வகையிலே உலக அரங்கிலே ஒரு கருத்து உருவாகிறது. ஜெனிவாவில் அனைத்து நாடுகளும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது. இலங்கையில் நடந்த நிகழ்ச்சிகள் தவறு என்றும் அதைத் திருத்திக் கொள்ளுங்கள் என்றும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

தமிழகத்தில் இருக்கின்ற மக்களும், தமிழக அரசும் எடுத்து வருகின்ற நடவடிக்கைகளும், கொடுத்து வருகின்ற ஆதரவும், தந்திருக்கின்ற அபயமும் மகத்தான செயல்கள் என்பதால், அவற்றையெல்லாம் வரவேற்று அமைகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த ஆண்டினுடைய ஆளுநர் உரை வழக்கத்திற்கு மாறாக துவக்கத்திலேயே கடந்த இரண்டரை ஆண்டுக்கால ஆட்சிக்கான விமர்சனமாக அமைந்திருக்கிறது. தமிழகம் கடந்த இரண்டாண்டுக் காலத்திலே புதிய நெருக்கடியை அனுபவித்தது. கடந்த இரண்டாண்டுக் காலமாக கடுமையான வறட்சியையும், கடந்த ஆறு மாத காலமாக வறட்சிக்கு நேர் எதிராக கடும் மழையினுடைய விளைவுகளையும் அனுபவித்துக்கொண்டிருக்கிறது. ஆகவே ஆளுநர் உரைகூட தமிழகத்தினுடைய இந்த நிலைமைகளையெல்லாம் எடுத்துச் சொல்லுகிற ஒன்றாக அமைந்தது. இரண்டாண்டுக் கால வறட்சியைப்பற்றி அதற்குத்

...த்தமையான நடவடிக்கைகளைப்பற்றி. அதில் உள்ள குறைகளைப்பற்றி இந்தச் சட்டமன்றங்கள்கூட அவ்வப்போது எடுத்துச் சொல்லி வந்திருக் கின்றன. ஆளுநர் உரை மொத்தமாக அரசினுடைய மதிப்பீட்டைத் தருகிற அளவில் அமைந்திருக்கிறது. நாம் உண்மையிலேயே ஆளுநர் உரையில் உள்ள மதிப்பீட்டைப் பொறுத்தவரையில், ஏற்றுக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறோம். அதற்காக நம்முடைய பாராட்டுதலைத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். வறட்சிக் காலத்திலே மிகக் கடுமையான நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்தது என்பதை இன்றைக்கு மட்டுமல்லாமல் கடந்த இரண்டாண்டுக் காலமாக தெரிவித்து வந்திருக்கிறோம். வறட்சிப் பணிகளைப் பொறுத்தவரையில், ஓரளவிற்கு அதிகப்படியாகச் சென்று அத்தனை அரசியல் கட்சிகளும், அதைத் தாண்டி நிற்பவர்களும் கூட கலந்துகொள்கிற அளவிலே தான் ஒவ்வொரு மாவட்டத்திலும் அனைத்துக் கட்சிக் கமிட்டிகள் அமைக்கப் பட்டன. மாவட்டத் தலைவரோடு அந்தந்தப் பகுதியிலே, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் கமிஷனர் அளவிலே, ரெவின்யூ போர்ட் மெம்பர் அளவிலே ஒருவர் பங்கேற்று கலந்துகொள்கிற வாய்ப்பு இருந்தது. அதுபற்றிய விமர்சனங்கள் நடைபெற்றபோது, ஒவ்வொரு மாவட்டத்திலும் அதற்கென்று அமைச்சர்கள் நேரிடையாகக் கலந்துகொள்கிற வாய்ப்பும் இருந்தது அமைச்சர்களோடு கலந்து அதில் உள்ள குறைகளைப்பற்றி விமர்சனம் செய்கின்ற வாய்ப்பு ஏற்பட்டது. இவற்றையெல்லாம் ஒட்டுமொத்தமாக இன்றைக்கு ஆளுநர் உரையில் கோடிட்டுக் காட்டி, கடந்த இரண்டாண்டுக் கால சோதனைக் கட்டத்திலே இந்த ஆட்சி மிகத் தெளிவாக நின்று வென்று வந்திருக்கிறது என்று சொல்லுகிறபோது, இதுகுறித்து நாம் அதிகமாக மாறுபட்ட கருத்தைத் தெரிவிப்பதற்கில்லை. ஆகவே அதிகமான குற்றச் சாட்டுக்களை வைக்க ஏதுமில்லை என்றாலும், அந்த அனுபவம், சில குறைகள் இருந்திருக்கின்றன என்பதை வெளிப்படையாகக் காட்டியிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையில், கடந்த கால அனுபவம் ஒன்றை உறுதிப் படுத்த வேண்டும். வறட்சியும், வெள்ளமும் தமிழகத்தைத் தொடர்ந்து சில காலத்திற்கு ஒரு முறை என்று அவ்வப்போது வருகின்றன. அவைகளை நாம் சந்தித்துக்கொண்டிருக்கிறோம். அந்தக் காரணத்தினாலே கடந்த கால அனுபவங்கள் நமக்குத் துணையாக இருக்க வேண்டுமென்ற அளவிலே சொல்ல விரும்புகிறேன். வறட்சிக்காக பல நடவடிக்கைகளை நாம் தெரிந்தே எடுத்தோம். இதுபோன்ற வறட்சியைச் சந்திப்பதற்கு வேகமாக மிகப் பெரிய அளவிலே செலவு செய்து நடவடிக்கை எடுக்கின்றபோது, அதிலே ஓரளவு வீணாகப் போவதும் உண்டு. தவறான செலவுகள் ஏற்பட்டுவிடுவதும் உண்டு என்கிற பெருந்தன்மையோடு, தெரிந்தே சிலவற்றை நாம் அனுமதித் திருக்கிறோம் என்றாலும் கூட, சில நடவடிக்கைகள் இவற்றையெல்லாம் கடந்து



வந்திருக்கின்றன. உள்ளாட்சித் தேர்தல்கள் இல்லாத காரணத்தினாலே, சரியான கன்ட்ரோல் இல்லாத காரணத்தினாலே, சரியான அளவிற்கு அவற்றை சூப்பர்விஷன் செய்கின்ற அளவிலே முறையாக இல்லாத காரணத்தினாலே, வெறும் அதிகாரிகள் மட்டும் அதைச் செய்துவிட முடியாது என்ற காரணத்தினாலே, பல இடங்களிலே இந்தத் துளைக் கிணறுகள் பெருமளவிலே ஒரு மோசடியாகவே நடந்து வந்துள்ளது. பல இடங்களிலே துளைக் கிணறுகள் என்ற பெயரிலே பெரிய அளவிற்கு பணம் பெற்றுச் சென்றார்களே தவிர, தண்ணீர் கிடைக்கவில்லை. ஆனால் தண்ணீர் கிடைக்கவில்லை என்பது தெளிவாக ஆகிவிட்டபோதிலும்கூட, அதுபற்றி பல பேர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்தபோதும்கூட, அதைத் தாண்டி வந்து இது எடுத்தது எடுத்ததுதான் என்று சொல்லிவருகிறார்கள். சிமின்ட் மேடை போட்டுவிட்டோம்; இதோடு வேலை முடிந்தது, எனக்கு பில் வரவேண்டு மென்று கேட்கிற அளவிலே பல இடங்களிலே நடவடிக்கைகள் இருந்தன. இது கட்சி அடிப்படையிலே என்பதல்ல; கட்சியையும் தாண்டி, பலரும், பல கட்சிக்காரர்களும் சுட்டிக்காட்டுகின்ற அவசியம் ஏற்பட்டது. தொடர்ந்து இன்னொரு முறை வருகின்றபோது, இந்த நிலைமை இல்லாது பார்த்துக் கொள்ளவேண்டியது நம்முடைய கடமை என்கிற அளவிலே இந்த வறட்சி நிவாரணப் பணிகளை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். குறிப்பாக குடிநீருக்கும் பஞ்சம் என்ற நிலைமை இப்போதுதான் வந்திருக் கிறது. குடிநீருக்குப் பஞ்சம் என்று வந்தபோது, சென்னை நகரமே வேறு இடத்திற்கு இடம் பெயரவேண்டுமோ என்ற நிலைமை ஏற்பட்டபோது, அதை வெற்றிகரமாகச் சமாளித்திருக்கின்றோம். ஆகவே மிகப் பெரிய சோதனையை நாம் சமாளித்திருக்கின்றோம் என்னும்போது உண்மையிலேயே மற்ற எல்லா நிலைமைகளையும் கடந்து, கட்சிகளையும் கடந்து இந்த ஆட்சி யினுடைய நடவடிக்கைகளைச் சிந்தித்துப் பாராட்ட வேண்டியது கடமை என்று கருதுகிறேன். அதைப் போலவே, வெள்ளச் சேதத்தைப் பொறுத்த வரையிலும், எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் அதிகமாக எடுக்கப்பட்டுள்ளன. திடீரென்று வந்த வெள்ளம், காலம் தவிர்த்து வந்த வெள்ளம், காலம் தவிர்த்து வந்த கடும் மழை, இதனாலே ஏற்பட்ட இன்னல்கள் பெருமளவுக்கு மிகத் தீர்க்கமாக அனுபவிக்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அப்படி ஏற்பட்டபோது உடனடி நிவாரண வேலைகள் மிகத் தீவிரமாக நடந்தன என்பதைத் தெரிவித்துக்கொள்ள மகிழ்ச்சி அடைகிறேன். இதற்கு பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் உடனடியாக இராணுவத் துறை அமைச்சரவர்களை தமிழகத்திற்கு அனுப்பி வைத்ததோடு, தமிழக அரசோடு கலந்து பேசி, அதற்கான உரிய நடவடிக்கைகளை வெகு வேகமாக எடுக்க வேண்டுமென்று சொல்லியதோடு, உடனடி நிவாரணமாக ஐந்து கோடி ரூபாய் தந்தார்கள்.

யார் கேட்டார்கள் என்பதல்ல; இந்த இடத்திலே கேட்டிருக்கிறோம்; இதற்கு முன்னதாகவே நாங்கள் கேட்டிருக்கிறோம். இதிலே மத்திய அரசு வேகமாக இருக்கிறது; ஆர்வத்தைக் காட்டுகிறது என்கிற அளவிலே தாங்கள் வந்து அந்த நடவடிக்கைகளைக் காட்டுகின்றனர். ஒரு நேரத்தில், ஆளுநர் அவர்களுடைய உரையில் பல வார்த்தைகளைச் சொல்லி மத்திய அரசினுடைய முயற்சிக்கு நன்றி தெரிவிக்கின்ற அந்த நேரத்திலே மத்திய அரசுக்கும் ஒரு வார்த்தை நன்றி தெரிவித்திருக்கலாம்; பிரதமர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்திருக்கலாம்; இதிலே இல்லை என்ற காரணத்தினாலே அங்கே இல்லை என்பதல்ல. ஆனாலும் கூட, சில வார்த்தைகள் வந்துவிடுவது இன்னும் சிறப்பாக இருந்திருக்க முடியும். ஒருவேளை பிரதமர் அவர்களுக்கு இன்னொரு இடத்திலே பாராட்ட வேண்டுமென்ற காரணத்தினாலே திரும்பத் திரும்ப பிரதமர் அவர்களுக்குப் பாராட்டா, திரும்பத் திரும்ப ஒருவரையே பாராட்டிக்கொண்டிருக்கிறோமே என்ற நிலைமை வந்துவிடுமோ என்ற உணர்வு இருந்திருக்குமோ என்பது எனக்குத் தெரியவில்லை. அவ்வாறாயினும்கூட, இதையெல்லாம் தாண்டி நின்று செய்கின்ற இந்தப் பணிகளுக்கு, மத்திய அரசு காட்டுகின்ற நடவடிக்கைகளுக்கு, நாம் எப்படி அதைப் பிரதிபலிக்கிறோம் என்ற நிலைமையை விட தெளிவாக நல்லது என்ற அளவிலே இந்த நிவாரணப் பணிகளுக்கெல்லாம் என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதிலே ஒன்று வறட்சி நிவாரணப் பணியின்போது பெரிய அளவிலே நாம் பாதைகளுக்காக, சாலைகளுக்காகச் செலவு செய்திருக்கின்றோம். ஆனால் இந்த வேலைகள் நிரந்தரமாகப் பலன் தரவேண்டுமென்ற உணர்வு அத்தனை பேருக்கும் இருக்கிறது; அத்தனை கோடியையும் செலவிட்டோம். ஆனால் என்ன ஆயிற்று? மழை வருகின்றபோது இவைகள் எல்லாம் அதிலே கரைந்து போயிற்று; கணக்கேகூட இதிலே கரைந்து போயிற்று. பல இடங்களிலே இது நடைபெற்றிருக்கிறது.

(முற்பகல் 10-50)

இதிலே நமக்கிருந்த மிகப் பெரிய சிக்கல், சங்கடம் எல்லாம் உள்ளாட்சித் துறை இயங்காததுதான். அது இல்லாத காரணத்தினாலே காரியங்கள் 'அபிசியல்ஸ்' என்ற அளவிலேதான் சென்றதே தவிர, 'அபிசியல்ஸ்' இல்லாமலே போயிற்று.

**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நான் குறுக்கிடுவது நியாயம் இல்லை என்றாலும், மேலும் அவர் அதைப்பற்றிப் பேசுவதற்கு முன்னால், விளக்கம் கூறுவது என்னுடைய கடமை என்பதற்காகச் சொல்கிறேன். அவசர நேரத்தில் நான் ஒரு உத்தரவை தொலைபேசி மூலமாகவும், நேரிலும் அதிகாரிகளுக்கு,



மாவட்ட அதிகாரிகளுக்கு அறிவித்தேன். அந்த வேலைகளைச் செய்வது யாரைக் கொண்டு என்று பார்க்காமல், தேவையான வேலைகளை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்றும், பணத்தைப்பற்றிக் கவலைப் படாதீர்கள் என்றும் சொன்னேன். 'புரோசிஜர்' என்ற வழக்குமுறையைக் கையாண்டு காலதாமதம் ஆகிவிடக் கூடாது. இந்த வேலைகளைச் செய்து உடனடியாக நிவாரணங்களை அளித்து ஆதரவு தர வேண்டும் என்று சொன்னேன். அதன் விளைவாக புள்ளி விவரங்கள் கிடைக்கவில்லை என்கிறார்கள். அது இன்னும் சில மாதங்களில் வரட்டும். அதற்கும் கணக்குக் கிடைக்கும் என்பதையும், அதனால்தான் அந்த நிலைமை என்றும், அந்த பொறுப் பேற்றுக்கொண்டவன் என்ற முறையிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெள்ள நிவாரண வேலைகள் நடைபெற்ற போது எவ்வளவு அக்கறை காட்டினார்கள் என்பதை நான் அறிய முடிகிறது. அதற்கு என்னுடைய மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்கிறேன் அந்த நேரத்தில் இந்த நடவடிக்கைகள் நடந்தபோதுகூட அதிலே ஒரு சங்கடம் வந்தது. அந்த நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உணர்வு எந்த அளவுக்கு பிரதிபலிக்கப்பட்டது என்பதைப் பற்றி நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் சில இடங்களிலே அந்த உணர்வு தவறாகப் பயன்படுத்தப்பட்டது. அவசர வேலைகள் காரணமாக அவசர நியமனங்களைக்கூட நாம் அனுமதித்தோம். நியமனங்களை எந்தக் கட்சியினர், யார் என்று பார்க்காமலே செய்யுங்கள் என்று சொன்னோம். சில இடங்களிலே, கட்சியைத் தாண்டிக்கூட கட்சிகளுக்குள் பங்கு போடுகின்ற நிலைமைகூட வந்தது. வேலை நடைபெற பணத்தைப் பங்கு போடுகின்ற நிலைமைகள் சில இடங்களிலே ஏற்பட்டது. இதுபோன்ற நிலைமைகளிலே தப்பு நடைபெறுவதும் உண்டு. இதிலேகூட நம்முடைய கண்காணிப்பு இருக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். தவறுகள் அதிகமாக நடைபெற்றது என்று நான் சொல்லத் தயாராக இல்லை. நம் நாட்டைப் பொறுத்தவரையில் இனிமேல் இதுபோன்ற சிறு தவறுகள்கூட நடக்காமல் இருக்கச் செய்ய வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கின்றேன். அது போலவே இன்னொன்று. வறட்சி நிவாரணத்திற்கும் சரி வெள்ள நிவாரணத்திற்கும் சரி, நாம் எந்த அளவுக்குச் செலவிட்டிருக்கிறோம், எந்த அளவுக்கு மத்திய அரசிடமிருந்து நாம் எதிர்பார்க்கிறோம் என்ற உணர்வினைத் தெரிவிக்கும் போது நாம் தெளிவாக இருக்க வேண்டும். ரூபாய் 68 கோடி வறட்சி நிவாரணத்திற்கு என்று மத்திய அரசு அனுமதித்திருக்கிறது. தேவையின் காரணமாக நாம் ரூபாய் 114 கோடி வரை செலவிட்டிருக்கிறோம். இதற்கு மேலும் மத்திய அரசிடமிருந்து கேட்டுக்கொண்டிருக்கிறோம். இந்த அரசு கேட்டுக்

கொண்டிருக்கிறது. ஆயபோதிலே வெள்ள நிவாரணத்திற்குச் செலவு செய்திருக்கிறோம் மேலும் எதிர்பார்க்கிறோம் என்று பார்க்கின்றபோது, குற்றச்சாட்டுகள் அல்ல, குறைகள் பெரிதாக வருகின்றன. இந்தப் பணம் சரியாகச் செலவிடப்படவில்லை. தவறாகச் செலவிடப்பட்டது என்ற குற்றச் சாட்டு வருமென்றால், அது வேறு. ஆனால் 'இங்கே நூறு பேர்களுக்குப் பணம் கொடுக்கவில்லை. கொடுத்ததிலே தகுதியானவர்களுக்கு ஆயிரம் பேர்களுக்குக் கொடுத்திருக்கின்றார்கள். தகுதியற்றவர்களுக்கு 10 பேர்களுக்குக் கொடுத்திருக்கின்றார்கள் என்ற அந்தக் குறைகளே குற்றச்சாட்டு போல மற்றவர்களாலே சொல்லப்படுமானால் மாநில அரசு மத்திய அரசிடமிருந்து கேட்கின்ற 'அத்தாரிட்டி.' (Authority) குறைந்துபோகும். இந்தக் குறை. . .

**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, என்னுடைய பேச்சு நீண்ட நேரமாக இருந்துகொண்டு போகக்கூடாது என்பதற்காக இரண்டொரு வார்த்தைகள் சொல்லி விடுகிறேன். நான் நேரிலே போய்ப் பார்த்தபோது, தண்ணீர் நிறைந்த பகுதியிலே போகும் போது, காரிலே போக முடியாமல், ஜீப்பில் ஏறிப்போகும்போது, ஒரு தாய் குறுக்கிட்டு சில கேள்விகளைக் கேட்டார்கள். 'எல்லோருக்கும் சேலை துணி கொடுக்கிறார்கள். நாங்களும் இழந்திருக்கிறோம், எங்களுக்குக் கொடுக்கவில்லையே" என்றார்கள். அதற்கு என் அருகிலே இருந்த அதிகாரி 'இவர்கள் எல்லாம் சொயில்லே வாழியார்கள். அவர்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். ஆகவே அந்த அமைப்புதான் கொடுக்க வேண்டும்" என்று சொன்னார்கள். அதிகாரிகளுக்கு உடனே நான் பதில் சொன்னேன். வாக்கு அளிப்பவர்கள் நமக்கும் இவர்கள்தான், மத்திய அரசுக்கும் இவர்கள்தான். ஆகவே அவர்களைப் பிரித்துப் பார்க்கக்கூடாது என்று சொல்லவேண்டிய நிலை ஏற்பட்டது. இப்படி நான் சொன்ன பிறகு உள்ள நிலைமை வேறு, அதற்கு முன்னால் இருந்த நிலைமை வேறு என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** ஆகவே முதலமைச்சர் அவர்கள் சொல்கின்றது போல, இந்த நடவடிக்கைகள் வேகமாக நடக்கின்றபோது, மனிதாபிமான முறையிலே நடக்கின்றபோது, சில குறைகளைச் சொல்கின்றார்கள். தமிழகத்திலே இருக்கின்ற எல்லா அரசியல் கட்சிகளுக்கும் அந்தப் பொறுப்பு இருக்கிறது. அப்படி இருக்கின்ற அரசியல் கட்சிகள் சில குறைகளை மிகைப்படுத்துமானால், மாநில அரசு அதிகமாக மத்திய அரசிடமிருந்து பெறுகின்ற உதவிகளுக்குக் குறுக்கே நிற்கின்ற நிலைமைதான் ஏற்படும். அதுபோன்ற உணர்வு ஏற்பட்டுவிடும். கொடுக்கின்ற பணமே சரியாகச் செலவு ஆகவில்லையோ என்ற உணர்வு அதிகமாக மக்கள் மத்தியிலே ஏற்படுமானால், அதனுடைய விளைவு என்ன ஆகும்? நாங்கள் அதில் விளக்கியிருக்கின்றோம்.





**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிக்கு நேரடியாகச் சென்று மத்தியக் குழுவின் பிரதிநிதிகள், அங்கத்தினர்கள் சிறப்பாக, செம்மையாக, சீரான முறையிலே செயல்பட்டிருக்கிறோம் என்பதற்கு நற்சான்றிதழ் தந்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள்.

**திரு க. இராமமூர்த்தி:** முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, இந்தக் குற்றச்சாட்டுகளுக்கும், குறைகளுக்கும் வெளியிலே இருந்து மத்திய அரசின் பிரதிநிதிகளாக வந்தவர்கள் செய்திருக்கின்ற காரியங்களுக்கு நற்சான்றிதழ் கொடுத்திருக்கின்றார்கள் என்பதன் மூலமாக செய்திருக்கின்ற பணிகள், நிறைவாக அமைந்திருக்கின்றன என்பதாலே காங்கிரஸ் கட்சி எதிர்க் கட்சி வரிசையிலே இருந்தாலும், தயங்காமல் இந்த அரசைப் பாராட்டுகிறது என்பதைத் தெளிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு இன்னொன்றையும் சொல்வது என்னுடைய கடமை என்று கருது கிறேன். தஞ்சை, தென் ஆற்காடு, இராமநாதபுரம், திருச்சி மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ள பாழ் விளைவாக மிகப் பெரிய அளவிலே விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல. வளர்ந்த பயிரை, விளைந்த பயிரை, வீட்டிற்கு கொண்டு போக முடியவில்லை. அந்த அளவிற்கு கண்ணுக்கு எதிரே பாழாகிப் போயிருக்கிறது. வீட்டுக்கும் களத்திற்கும் இடையிலே இருக்கின்ற பயிர் கூத்தாகப் பாழாகிப் போயிருக்கிறது. கையிலே இருந்ததைச் செலவிட்டு, விளைந்ததை நாசப்படுத்தி விட்டு, நாசமாக்கிவிட்டு, விவசாயி வெறித்துப்போய் நிற்கின்ற நிலைமை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. அதோடு மட்டுமல்ல. இன்னொரு கொடுமை. விவசாயிகளின் துணைவனாக இருக்கின்ற கால்நடைகளுக்குக்கூட தீவனம் இல்லாத அளவிற்கு வைக்கோல் அத்தனையும் பாழாகிப் போய்விட்டது. இனிமேல் மாடு தின்ன முடியாத அளவிற்குப் பாழாகிப் போயிருக்கிறது. எனவே அந்தப் பகுதியில் இருக்கிற விவசாயிகளுக்கு, பெரிய அளவிலே துணையாக இருந்து இந்த அரசு உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, முன்பு ஒருமுறை இந்தப் பிரச்சினை வந்தபோது வெளி மாநிலங்களிலிருந்து அதிகப் பணம் கொடுத்து வாங்கி வைக்கோல் கொடுத்தோம். இப்போது இந்த நிலைமையிலேயும் அதுபோன்று செய்வதற்கு இந்த அரசு உத்தரவிட்டிருக்கிறது.

**திரு க. இராமமூர்த்தி:** மாண்புமிகு தலைவர்களே, சங்கடமாக இருந்தாலும், திருப்பி, திருப்பிச் சொல்ல வேண்டியிருக்கிறது. திரும்பத் திரும்ப நன்றி சொல்ல வேண்டியிருக்கிறது.

[1984 பிப்ரவரி 23

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பழகம் இல்லாத வேலையாக இருக்கிறது. (சிரிப்பு)

திரு க. இராமமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுடைய அந்த இன்னல்களைப் போக்குவதற்கு முதலமைச்சர் அவர்கள் எடுத்திருக்கின்ற நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுக்க வேண்டும். இதிலே இன்னொன்று, பல பகுதிகளிலே பாழ் அதிகமானதற்கு இன்னொரு காரணம், இந்தச் சேதம் அதிகமானதற்கு இன்னொரு காரணம், அச்சத்தின் விளைவாக அல்லது பாதுகாப்பு உணர்வின் காரணமாக பாதுகாத்துக்கொண்டால் போதும் என்ற சுயநல உணர்வு காரணமாக பல பகுதிகளிலே அவர்களே பாதையை வெட்டிவிட்டிருக்கின்றார்கள். சாலையை வெட்டிவிட்டிருக்கின்றார்கள். ஒரு ஓடையாகத் தங்கி வெள்ளம் பெருமளவிலே பாதைகளைச் சிதைத்திருக்கின்றது. வாய்க்கால்களாக மாறியிருக்கின்றன. அதுபோன்று பல ஏரிகளையும் வெட்டியிருக்கிறார்கள். இந்த நிலைமைகள் இனிமேல் திரும்பாத அளவிற்குச் செய்தாக வேண்டும் என்பது மட்டுமல்ல, இந்த நிலைமைகளை நாம் உணர்ந்தாக வேண்டும். இந்த உணர்வின் அடிப்படையில்தான் நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே சொல்ல விரும்புகிறேன்.

வெள்ள நிலைமையைப்பற்றிச் சொல்லும்போது, என்னுடைய மாவட்ட நிலைமையைச் சொல்வது என்னுடைய கடமை. வீராணம் ஏரியைப் பொறுத்த வரைக்கும், அந்த நீரை விவசாயத்திற்குப் பாய்ச்சிக்கொண்டிருப்பவர்கள் இன்றைக்குச் சந்தேகமாக இருந்துகொண்டிருக்கிறார்கள். நாற்று விட்டாக வேண்டும், முறைத் தண்ணீர் கிடைக்குமா என்ற சந்தேகம் அவர்களுக்கு இருந்துகொண்டிருக்கிறது. ஒரே அடியாக ஏரியை அடைக்காது வீராணம் தண்ணீரைத் திறந்துவிட்டால், அது கடலிலே போய்விழும். அல்லது சில முறைகளிலே பெருமாள் ஏரிக்குப் போய்விடுமோ என்ற அச்சம்கூட இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே அதைத் தெளிவுபடுத்தி, வீராணம் ஏரித் தண்ணீர் முறைப்படி கிடைக்கும் என்பதை உறுதிப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11.00)

வறட்சி நிவாரணப் பணிகளானாலும் சரி, குடிநீர்ப் பஞ்சத்தைத் தீர்ப்பதற்கான நடவடிக்கையானாலும் சரி, தொடர்ந்து ஏற்பட்ட வெள்ள நிவாரண நடவடிக்கைகளானாலும் சரி, அரசும் அதிகாரிகளும் எடுத்த நடவடிக்கைகளை நான் மனமார இந்தப் பகுதியிலிருந்து பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1984 பிப்ரவரி 23] [திரு. க. இராமமூர்த்தி]

அடுத்தபடியாக, நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், நாம் பெருமையாக நினைத்துக் கொண்டிருப்பது, பெருமையாக மற்றவர்கள் ஏற்பது, நம்முடைய பப்ளிக் டிஸ்டிரிபியூஷன் சிஸ்டம் Public distribution system) தான். பொதுப் பங்கீட்டு முறையைப் பொறுத்த வரையிலும் நாம்தான் விரிவான அளவுக்கு, தமிழகம் முழுமையும், கிராமங்கள் வரை அது சென்றடையத்தக்க முறையில் கடைகளை ஏற்படுத்தி, சிறப்பாக நடத்தி வருகிறோம். தொடர்ந்து அது நடைபெறுகிறது என்றாலும்கூட, ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். வெறும் அரிசி, கோதுமை போன்ற உணவுப் பொருள்களில் பங்கீட்டுக் கடையாக இருப்பதில் மட்டும் பயனில்லை. அதைத் தாண்டி அத்தியாவசியப் பொருள்களை கிராமப் புறங்களில் உள்ளவர்கள் நகரங்களுக்கு வராமல் அங்கேயே பெற முடியும் என்ற அளவில் அவை செயல்பட வேண்டும். முன்பு கூட்டுறவு அங்காடிகள் அந்த அளவிற்குச் செயல்பட்டுக் கொண்டிருந்தன. இப்போது அவைகள்கூட அப்படிச் செயல்படவில்லை என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நியாய விலைக் கடைகளில் அரிசி, கோதுமை, பாமாலின் என்று குறிப்பிட்ட பொருள்கள் கிடைக்கின்றனவே தவிர, மற்ற பொருள்கள் கிடைக்கவில்லை. இன்றையதினம் அங்கே ஆட்களை நியமித்தபோது, வரையறை இல்லாமல் நியமனங்கள் நடைபெற்றன. அதன் விளைவாக கொஞ்ச நாள் அங்கே இருந்து, கடையில் இருந்த பொருள்களை விற்றுவிட்டு, பணத்தை எடுத்துக் கொண்டு ஓடிப்போனவர்கள் பலர் என்ற நிலைமையில், இந்தக் கடைகள் செயல்படாமல் போய்விட்டன. இந்த விற்பனைக் கடைகளுக்கு நியமிக்கப்படுபவர்களுக்கு அதிக ஊதியம் தந்தாலும், அவர்கள் அந்தக் கடைகளுக்கு குவாரண்டியாக (G e) இருக்கும் நிலையில் தக்க ஏற்பாடுகளைச் செய்து, இந்தக் கடைகள் மூலம் அதிகமான பல்கள் கிராமங்களில் உள்ளவர்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும். அவர்கள் நகரங்களுக்கு வாராமல், தங்கள் தேவைகளை இந்தக் கடைகள் மூலமாகப் பெற முடியும் என்ற அளவிற்கு இந்தக் கடைகள் இருக்க வேண்டும். முன்பெல்லாம் கூட்டுறவு அங்காடிகள் மூலமாக குறைந்த விலையிலே மில் துணிகள் கிடைத்தன. இன்றைக்கு அவைகள் கிடையாது. மளிகைப் பொருள்கள் கிடைத்தன. இன்றைக்கு அவைகள் கிடையாது. வேறு பல பொருள்கள் கிடைத்தன. இன்றைக்கு அவைகள் கிடையாது. பொதுப் பங்கீட்டு முறையிலே நாம் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறோம் என்ற நிலையில், இந்தச் சிறப்பை மேலும் அதிகரிக்க நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டியது அவசியம் என்பதை வலியுறுத்திக் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.

[திரு. க. இராமமூர்த்தி] [1984 பிப்ரவரி 23

பெருந்தலைவர் காமராசர் அவர்கள் அடிக்கடி ஒன்றைச் சொல்வதுண்டு. "தமிழகத்தில் பஞ்சம் வருகிறபோதெல்லாம், வறட்சி வருகிறபோதெல்லாம், விளைவு பாழாகிறபோதெல்லாம் நாம் உடனடியாகப் பங்கீட்டு முறைக்குச் செல்கிறோம், அதனால் பல நேரங்களில் தவறு ஏற்படுகிறது என்பதோடு, ப்ரொக்யூர்மென்ட்டிலும் சங்கடம் ஏற்படுகிறது; விற்பனையில் கள்ள மார்க்கெட் வருகிறது; இந்தச் சங்கடம் தொடர்ந்து வருகிறது; ஒரு முறை இதைச் சீர்திருத்த முடியும்; அதைத் தவறவிட்டோம் என்று சொல்லி, அதற்குக் காரணமும் சொன்னார்கள். இராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது பங்கீட்டுக் கடைகளைக் கொண்டு வந்தார், முறையாக அவை நடந்தன, ஆனால் பஞ்சம் காரணமாக உணவுப் பங்கீட்டுக் கடைகள் மக்களின் அறுவறுப்புக்கு, வெறுப்புக்கு ஆளானதால், அந்த ஆட்சி மாறின பிறகு, பங்கீட்டுக் கடைகளை எடுத்து விட்டோம். அந்த நிலையில், மீண்டும் வந்த ஆட்சிகள் அதே முறையைக் கையாளத் தயங்கியதால், நிரந்தரமாக நல்ல அமைப்பு இல்லாமல் போய்விட்டது" என்று பெருந்தலைவர் அவர்கள் அவருடைய அனுபவத்தின் காரணமாகச் சொன்னதுண்டு.

இன்றைக்கு விளைவு நல்ல முறையில் இருந்தாலும், வேண்டிய அளவுக்கு விளைச்சல் இருந்தாலும், உணவுப் பொருள்கள் இருந்தாலும்கூட, உணவுப் பங்கீட்டுக் கடைகள் நிரந்தரமாக இருக்க வேண்டுமென்பது இப்போதைய சமுதாய அமைப்பில் ஏற்பட்டுவிட்டது. அதைப்போல கொள்முதலும் நிரந்தரமாக்கப்பட்டுவிட்டது. எனவே இரண்டையுமே முறைப்படுத்தி, நல்ல முறையிலே மக்களுக்கு நன்மை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் சொல்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். இன்னொன்று. இப்படிப்பட்ட நடவடிக்கைகளை எல்லாம் நாம் பார்க்கிறோம். வறட்சி, வெள்ளம், பற்றாக்குறை போன்ற நிலைமைகள் ஏற்படும்போதெல்லாம் உடனடியாக நடவடிக்கை எடுக்கிறோம். இதனை மத்திய அரசு மட்டுமல்ல, மற்ற எல்லா மாநிலங்களும் பாராட்டுகின்றன. நம்முடைய திறமை எல்லாம் இப்படி ஒரு வெள்ளம், வறட்சி அல்லது பற்றாக்குறை ஏற்படும்போது மட்டும், ஒரு அவசியம் ஏற்படும்போது மட்டும், வெளிப்படுவது சரிதானா? எப்போதுமே நாம் திறமையாக இருந்து செயல்பட்டுக்கொண்டிருக்கிறோம் என்கிற நிலைமையை ஏற்படுத்த வேண்டாமா? அந்த வகையில் நம்முடைய ஆட்சி இயந்திரத்தை முறைப்படுத்தி வைக்க வேண்டும்.

அடுத்து, நம்முடைய கிருஷ்ணா நதிநீர்த் திட்டத்தைப் பொறுத்தவரையில், அது ஒரு நல்ல முயற்சி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் அவசர காலத்தில் சென்னைக் கடற்கரையில் இதுகுறித்து கருத்து தெரிவித்தார்கள். அதற்கேற்ற வகையில், நம்முடைய



1984 பிப்ரவரி 23] [திரு. க. இராமமூர்த்தி]

தமிழக அரசு நடவடிக்கை எடுக்க அதற்கு ஒத்துழைப்பு தரும் வகையில், மற்ற மாநிலங்களும் நமக்கு ஒத்துழைப்பு தந்தன. இன்னும் சில ஆண்டுகளில் சென்னை நகரைப் பொறுத்தவரையில், அறவே குடிநீர்ப் பஞ்சம் நீங்கிவிடும் என்கிற நிலைமை இன்றைக்கு ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து தமிழக அரசு எடுத்த நடவடிக்கைகள் உண்மையிலேயே பாராட்டத்தக்கவை.

மீண்டும் ஒரு பிரச்சினையைப் பொறுத்தவரையில், இந்த அரசை நான் பாராட்டுகிறேன். ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினையைப் பொறுத்தவரையில், எனக்கு ஒரு மிகப் பெரிய பெருமை என்பதைவிட மிகப் பெரிய நிம்மதி ஏற்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், தமிழர்கள் அனைவருக்கும் இந்தியர்கள் அனைவருக்கும் இப்போது எந்த அளவுக்கு நிம்மதி ஏற்பட்டிருக்கிறது என்பதையும் நாம் காண முடிகிறது. மத்திய அரசும் மாநில அரசும் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு தமிழர்கள் நலன் கருதி எடுத்த முயற்சி எல்லாம் நமக்குத் தெரியும். மத்திய அரசும் மாநில அரசும் மிகப் பெரிய முயற்சி செய்து, தங்களைத் தாங்களே இணைத்துக் கொண்டு இந்தப் பிரச்சினையிலே மிகத் தீவிரமாகச் செயலாற்றினார்கள். இந்தப் பிரச்சினையிலே எப்படி பரிகாரம் காண முடியும், எப்படி முன்னேற்றம் காண முடியும் என்பது குறித்து துரிதமாக நடவடிக்கை எடுத்தார்கள். "வேகத்தை விட்டுவிடாதீர்கள்" என்று இங்கே மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் குறிப்பிட்டாலும்கூட, அவரேகூட மத்திய மாநில அரசுகள் எடுத்த நடவடிக்கைகள் குறித்து மனதுக்குள்ளே மகிழ்ந்திருக்கலாம். எந்த அளவிற்கு நிலைமைகள் வளர்ந்துகொண்டிருந்தன என்பதை நாம் பார்த்துக்கொண்டிருந்தோம். ஆனால் இன்றைக்கு நாமேகூட எதிர்பாராத அளவுக்கு பரிகாரம் காணப்பட்டுள்ளது. தமிழர்கள் அத்தனை பேரும் சிங்களவர்களுக்கு விரோதிகள் என்று அடையாளம் காட்டப்பட்டார்கள். அதுமட்டுமல்லாமல், சிங்களவர்களுக்கு இன்னார் இன்னார் விரோதிகள் என்று அடையாளம் காட்டப்பட்டவர்கள்கூட இன்றைக்கு வட்டமேஜை மாநாட்டிலே உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு வருகின்ற தகவல்களை நாம் பார்க்கும்போது, நிலைமைகள் நல்லமுறையில் மாறிக்கொண்டிருக்கின்றன என்பதை நாம் காண்கிறோம். அதற்காக மிகுந்த நிதானத்தோடு நடவடிக்கை எடுத்ததற்காக, தமிழக மக்களுடைய, தமிழகத்தினுடைய உணர்வுகளை வெளிப்படுத்தி வழி நடத்திச் செல்வதற்காக, அதற்கான பொறுப்பிலே தலைமை தாங்கி நடத்திச்செல்கின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை நான் தனிப்பட்ட முறையில் பாராட்டுகிறேன். தமிழகத்தின் உணர்வை மதித்து அதற்கேற்றவாறு இதனைத் தேசியப் பிரச்சினையாக எடுத்துக்கொண்டு நல்லமுறையில் செயல்பட்டதற்காக இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களையும் நான் பாராட்டுகிறேன். இந்த

இரண்டுக்கும் முத்தாய்ப்பாக உறுதுணையாக இருந்து செயல்பட்டவர் நம்முடைய மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள். பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நம்முடைய மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களை இப்பிரச்சினை குறித்துப் பேசுவதற்கு தந்ததற்காக என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஐக்கிய நாடுகள் அவையில் மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினை குறித்து எடுத்துரைத்தார்கள், உலக நாடுகள் மத்தியில் இதற்கு ஆதரவு தேடினார்கள் என்பதோடு மட்டுமல்லாமல், ஸ்ரீலங்கா தமிழர்களுக்காக உலக நாடுகளிடமிருந்து அனுதாபம் தேடித் தந்தார், ஆதரவு தேடித் தந்தார், அங்கே நடைபெறுகின்ற படுகொலைகளை, வன்முறைகளையெல்லாம் உலகத்திற்கு எடுத்துரைத்தார். அந்த வகையில் தமிழகத்திற்கும் தமிழ் இனத்திற்கும் அவர் பெருமை தேடித் தந்ததோடு மாத்திரமல்லாமல், அவர் சார்ந்திருக்கிற கட்சிக்கும், ஆட்சிக்கும் பெருமை தேடித் தந்திருக்கிறார். ஸ்ரீலங்கா தமிழர்கள் என்று தங்களை அர்ப்பணித்துக்கொண்டவர்கள் தங்கள் நடவடிக்கைகள் மூலம் செய்ததைவிட செயற்கரிய செயல்களைச் செய்வதற்கு உறுதுணையாக இருந்த இந்தியப் பேரரசுக்கும், மாநில அரசுக்கும், இம்மாநிலத்தின் சார்பாக ஐக்கிய நாடுகள் அவைக்குச் சென்று இப்பிரச்சினை உலகறியுமாறு செய்த எங்களுடைய மாவட்டத்தினுடைய மாண்புமிகு அமைச்சர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களுக்கும் நிச்சயமாக என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாவட்டத்திற்கு என்று ஒரு அமைச்சர் இருக்கிறாரா? (சிரிப்பு).

**திரு. க. இராமமூர்த்தி :** எங்கள் மாவட்டத்தைச் சார்ந்த அமைச்சர் என்று திருத்திக்கொள்கிறேன். இந்த நேரத்தில் மாண்புமிகு தலைவர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். பல கட்டங்களில் இந்த அவையிலே நாங்கள் கேட்டதுண்டு. இதையெல்லாம் ஐக்கிய நாடுகள் அவையிலே பேச வேண்டுமென்று சொல்லியதுண்டு. அப்போதெல்லாம் நமக்கு அத்தகைய வாய்ப்பு கிடைக்கவில்லை. ஆனால் நம்முடைய மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் ஐக்கிய நாடுகள் அவையில் பேசுவதற்கான வாய்ப்பினை இந்தியப் பிரதமர் அவர்களும் தமிழக முதலமைச்சர் அவர்களும் ஏற்படுத்தினார்கள். இறுதியாக வாய்ப்பு கிடைத்ததும் செம்மையாக, முறையாக, தமிழக அரசும், இந்திய அரசும் பாராட்டும் வகையில் நல்ல முறையில் செயலாற்றினார்கள்.





(முற்பகல் 11-10)

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சார்ந்திருக்கிற துறையின் மின் உற்பத்தியைப் பொறுத்தவரையில், அது தமிழகத்திற்கு மிகமிகத் தேவையான ஒன்று. மீண்டும் மின் உற்பத்தியைக் கூட்டி, எவ்வளவு தான் மழை பெய்தாலும், மின்சாரத் தட்டுப்பாடு என்பது தமிழகத்திற்கு நிரந்தரமானதாக இருக்கிறது என்ற அடிப்படையில், அதைத் தவிர்க்கும் அளவுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதில் இன்னும் வேகம் காட்ட வேண்டும். வேகம் காட்டுவது மட்டுமல்ல, அதற்கு முடிவுகள்தான் முக்கியம். மேட்டூர் திட்டம் குறித்தும், தொடர்ந்து நெய்வேலி திட்டம் குறித்தும் அவர்களே நேரடியாகச் செய்வதில்லையென்றாலும்கூட, அதற்காக வேகமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையில், ஒன்று சொல்ல விரும்புகிறேன். நான் அடிக்கடி கோள நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பார்ப்பது உண்டு. அவர்கள் எவ்வளவுதான் கட்சி வேறுபாடுகள், கொள்கை வேறுபாடுகள் கொண்டிருந்தாலும், அந்த மாநிலத்தின் தேவை என்ற அடிப்படையில், அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, மத்திய அமைச்சரைப் பார்ப்பது, அதிகாரிகளைப் பார்ப்பது, பிரதமரிடம் முறையிடுவது போன்ற காரியங்களைச் செய்வதில் கொஞ்சம்கூட தயங்குவது கிடையாது. ஆனால் நம்முடைய மாநில நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையில், அப்படிப்பட்ட ஒருங்கிணைந்த முயற்சி இதுவரையில் இல்லாமல் இருக்கிறது. இந்த நிலை மாறி, இங்கேயுள்ள எல்லாக் கட்சிகளும் சேர்ந்து, மத்திய அரசை வற்புறுத்த வேண்டுமென்று சொல்வது மட்டுமல்ல, நம்முடைய கட்சி எம்.பி.-க்கள் டெல்லியில் இணைந்து குரல் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள், அடிக்கடி "on-going schemes" என்று சொல்வதுண்டு. அதுபோல் பல திட்டங்கள் இங்கே குறிப்பிடப்பட்டிருக்கின்றன. தமிழ் நாட்டில் உள்ள அனைத்துக் குடியிருப்புக்களுக்கும், குடிநீர்த் திட்டம் அறிவித்து, அதை இந்த ஆண்டுக்குள் முடிக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆளுநர் உரையில் அந்தத் திட்டம் 1985-க்குள் முடியும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நாம் அதற்காக ஒரு காலவரையறை நிர்ணயித்துக்கொள்ள வேண்டும், அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால், தொடர்ந்து குடிசைகள் போட்டுக் கொண்டே இருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது, இந்தத் திட்டத்தை நாம் தொடர்ந்துகொண்டே இருக்க முடியாது. அப்படிப்பட்ட அடிப்படையில், ஒரு 'டார்கெட்' நிர்ணயித்து, அதற்குள் முடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, குடும்ப நலத் திட்டம். அரசு தன்னைத் தானே பாராட்டிக் கொள்ள உரிமை படைத்திருக்கிறது. சென்ற ஆண்டு போட்டிருந்த குறிக்கோளை இந்த ஆண்டு எட்டியிருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால் அந்தக் குறிக்கோளைத் தாண்டியிருக்கிறோம். இதற்காக நமது அரசுக்குப் பாராட்டு கிடைத்திருக்கிறது. இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலங்களோடு தமிழ் நாட்டை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அதிக எண்ணிக்கை இங்கே ஏற்பட்டிருக்கிறது. அதைக் காணும்போது மகிழ்ச்சி ஏற்படுகிறது.

இருபது அம்சத் திட்டம்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சென்ற ஆண்டு ஆளுநர் உரையில்கூட 20 அம்சத் திட்டம் நிறைவேற்றப்படுவதுபற்றிச் சொல்லப்பட்டிருந்தது. அதில் ஆர்வம் காட்டுகிறோம், மிகுந்த ஆர்வம் காட்டி, நிச்சயமாக 20 அம்சத் திட்டத்தைச் செயல்படுத்துவோம் என்று சொல்லப்பட்டிருந்தது. இந்த ஆண்டும் ஆளுநர் அறிக்கையில் அதைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. மத்திய அரசு அதிகாரிகள் இதுபற்றிச் சொல்கிறபோது, இந்தியாவிலேயே 20 அம்சத் திட்டத்தை நிறைவேற்றுவதில் தமிழகம் முதன்மையாக விளங்குகிறது என்று சொல்கிற வகையில் இருக்கிறது. அப்படி ஒரு நிலைமை இருப்பதற்காக உள்ளபடியே இந்த அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கிராம வீட்டுவசதித் திட்டத்தைப் பொறுத்தவரையில், ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். கிராமப்புற மக்களுக்கு வீட்டு வசதிக்காக இடம் தரப்படுகிறது. அதிலே வீடுகள் கட்டப்படுகின்றன. ஆனால் அந்த வீடுகள் நாம் எதிர்பார்த்தபடி தரமானதாக இல்லையென்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். குறிப்பாக, அரிசன மக்களுக்கு வீடுகள் கட்டும்போது, தரமான பொருள்களை வைத்துக் கட்டாததாலோ என்னவோ, கட்டிக்கொண்டிருக்கும்போதே வீடுகள் இடிந்து விழுந்து விடக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கின்றது. திண்டிவனம் டிராங்க் ரோட்டிலே, இதுபோன்ற நிலை ஏற்பட்டிருப்பதைப் பார்க்கும்போது, நமக்கே வேதனையாக இருக்கிறது. இந்த வீட்டைக் கட்டுபவர்களுடைய, சூபர்விஷன் செய்பவர்களுடைய அலட்சியப் போக்கு, காண்ட்ராக்டர்களுடைய அலட்சியப் போக்கு இவைகள்தான் காரணமாக இருக்க முடியும். அரசாங்கம் ஒதுக்கும் பணம் முறையாக, அரிசனங்களுக்கு சென்று அடையவில்லை என்பதை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, பாராட்டுக்கெல்லாம் பெரிய பாராட்டாக ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன். அந்த முறையில் எவ்வளவுதான் பாராட்டினாலும், அதற்கு வார்த்தைகளே கிடையாது என்ற அளவுக்கு, காங்கிரஸ் கட்சியின் நூற்றாண்டு விழா தொடங்க இருக்கிறது.



நூறு ஆண்டுகளுக்கு ஏறத்தாழ சில மாதங்கள் குறைவு என்கிற வகையில் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** தகவலுக்காகக் கேட்கிறேன். அது 1985 முடிவிலா அல்லது 1984 முடிவிலா ?

**திரு. க. இராமமூர்த்தி :** முதல் கூட்டம் சென்னையில் 1884-ல் சென்னையில் நடந்திருக்கிறது. . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ரொம்பவும் மகிழ்ச்சி . . .

**திரு. க. இராமமூர்த்தி :** காங்கிரஸ் மகா சபையின் முதல் கூட்டம் 1884 சென்னையில் திரு. ரங்கையா நாயுடு தலைமையில் 11 பேரோடு கூடியது. . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அந்தக் கூட்டம் தியசாபிகல் சொசைடியில் கூடியது. . .

**திரு. க. இராமமூர்த்தி :** இன்றையதினம் காங்கிரஸ் என்பது ஒரு அரசியல் கட்சியாக இருக்கலாம். ஆனால் காங்கிரஸ் மகாசபை ஒரு விடுதலை இயக்கமாக, இந்திய மக்கள் அத்தனை பேருடைய உணர்வுகளையும் எதிரொலிக்கிற ஒரு இயக்கமாக, அந்தச் சமயத்தில் விளங்கியது. அதனுடைய பாரம்பரியத்தை நினைவுபடுத்தும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தற்போது 3 மாவட்டங்களுக்கு—புதிதாக உருவாக இருக்கிற மாவட்டங்களுக்கு சில பெயர்களை வைத்திருக்கிறார்கள். அத்தனை மாவட்டங்களுக்கும் நல்ல பெயர்களை வைத்ததற்காகப் பெருமைப்படுகிறேன் என்றாலும், காங்கிரஸ் மகா சபையின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்ட காலத்தில் அந்த இயக்கத்தைச் சார்ந்த முன்னோடிகளின் பெயரை வைத்திருப்பதற்காக மகிழ்ச்சியடைகிறேன். அவர்கள் காங்கிரஸ் மாபெரும் தலைவர்கள் என்பது மட்டுமல்ல, விடுதலை வீரர்கள் என்பது மட்டுமல்ல, அதையெல்லாம் தாண்டி அவர்கள் சரித்திரம் படைத்தவர்கள் என்கிற வகையில், அந்தச் சரித்திரத்தை மீண்டும் நினைத்துப் பார்க்கிற வகையில், அவர்களின் பெயர்களை வைத்திருக்கிறார்கள்.

வள்ளியம்மையின் பெயரை ஒரு மாவட்டத்திற்கு வைத்ததன் மூலமாக அந்நிய நாட்டில் முதன் முதலாக, மகாத்மா, காந்தியடிகள் விடுதலை உணர்வை ஊட்டியபோது, ஏகாதிபத்தியத்தை எதிர்க்கிற உணர்வை ஊட்டியபோது, விடுதலை கோரி அகிம்சை உணர்வை ஏற்படுத்தியபோது, காந்தியடிகளோடு துணை நின்றவர்கள் என்பவர்கள் விரல்விட்டு எண்ணக் கூடியவர்கள். அந்த 4, 5 பேர்களில் ஒருவர்தான் இந்தத் தமிழ்த்தாய் வள்ளியம்மை. காந்தியடிகளோடு துணையாக நின்றதோடு மட்டுமின்றி, சோதனைக் காலத்

தில் அவதிப்பட்டார். பின்னாலே காந்தியடிகள் மகாத்மா காந்தியடிகளாக ஆனபோதும் வள்ளியம்மையை அவர் மறந்ததே இல்லை. எனவே அப்படிப் பட்ட தொடக்க காலத்து சரித்திரத்தையும் நினைவுபடுத்தும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வள்ளியம்மையின் பெயரை ஒரு மாவட்டத்திற்கு வைத்திருக்கிறார்கள் என்பதில் மிகுந்த மகிழ்ச்சி ஏற்படு கிறது.

அடுத்தது, காந்தியடிகளின் போராட்ட காலத்தில் வெள்ளை ஏகாதிபத்தி யத்தோடு மட்டுமல்ல, எந்த ஏகாதிபத்தியமாக இருந்தாலும் அதை எதிர்த் துப் போராட முடியும், என்ற உணர்வை வேகத்தோடு செயல்படுத்தியவர் மறைந்த வ. உ. சிதம்பரனார் அவர்கள். மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள், சிதம்பரனாரைப்பற்றி எழுதிய புத்தகத்தை நான் மாணவனாக இருந்தபோதே படித்திருக்கிறேன். . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அப்படியென்றால் அப்போதே காசு கொடுத்து வாங்கிப் படித்திருக்கிறார்கள். . .

**திரு. க. இராமமூர்த்தி :** காசு கொடுத்து வாங்கியவன் என்பது மட்டுமல்ல, அதைத் தங்களிடம் கொடுத்து, தங்கள் கையாலேயே வாங்கிப் படித்தவன் என்ற உரிமையும் எனக்கு உண்டு.

ஆக, வெள்ளை ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வுக்கு ஒரு எடுத்துக் காட்டாக அவர் அன்றைக்கு விளங்கினார்கள். விடுதலை இயக்கத்தில் அவர் தன்னை எவ்வாறு அர்ப்பணித்துக் கொண்டார் என்பதைப் பார்க்கும்போது, திரு. சிதம் பரனார் அவர்கள் எல்லோருக்கும் ஒரு உதாரணமாக நடந்து கொண்டிருக் கிறார். அவர் ஒரு பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்திருக்கலாம். எனவே அவருக்கு வசதி என்பது அவர் சார்ந்த குடும்பத்தின் காரணமாக அல்லது சூழ்நிலையின் காரணமாக ஏற்பட்டிருக்கலாம். ஆனால் அப்படிப் பட்ட ஒருவர் அதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல், மிகப் பெரிய மக்கள் செல்வாக்கோடு இருந்த ஒரு நேரத்தில், தன்னை மக்களுக்காகவே அர்ப் பணித்துக் கொண்டு, சொல்லொணாகக் கஷ்டங்களையும் வேதனைகளையும் அனுபவித்து, மரியாதையை மறந்து, தியாகத்தை மட்டுமே ஏற்றுக்கொண்டு சிறை சென்றார். சிறையிலிருந்து திரும்பும்போது, தன்னந்தனியனாக வெளியே வந்தார். அப்போது உலகம் அவரைக் கண்டு கொள்ளவில்லை என்பதைப் பார்க்கும்போது, அவருடைய வாழ்க்கை உலகில் விடுதலை வீரர்கள் எப்படிப்பட்ட மன உறுதியைப் பெற்றிருக்க வேண்டும் என்பதைத் தெரிவிப்பதோடு. தியாகத்திற்கான பலனை எல்லோரும் எதிர்பார்க்க முடியாது, பல நேரங்களில் தியாகம் நன்றி கெட்டவர்களால் மறக்கப்படுவதும் உண்டு என்பதையும் எடுத்துக்காட்டுவதாக அவருடைய வாழ்க்கை



அமைந்தது. அவருடைய பெயரை இந்த நூற்றாண்டு விழாக் காலத்திலே வைத்திருக்கிறார்கள் என்பதற்காக நிச்சயமாக காங்கிரசின் சார்பாக, தேசிய உணர்வின் சார்பாக, விடுதலை வீரர்களின் சார்பாக நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-20)

அடுத்ததாக, காந்தியடிகளைக் காணாதவர்கள், அவருடன் பழகாதவர் கள், அவரை நேரிடையாகத் தெரிந்துகொள்ளாதவர்கள் என்ற நிலையில் ஒரு சந்ததியினர் இருந்தார்கள். அவர்களுக்கு ஒரு பாலமாக விளங்கக் கூடிய வகையில் இருந்த அவருக்கு வேறு என்ன தெரியும், தக்ளியை நூற்றார்கள், நூலை நூற்றார்கள், கதரை அணிந்தார்கள். இதற்கு அதிக மாக என்ன தெரியும் அவருக்கு என்ற நிலைமையை உடைத்தெறிந்து, மிகச் சாதாரண மனிதன், காந்திய வழியில் வளர்ந்தவன் உலகத்திற்கு எடுத்துக் காட்டாக விளங்குகிற வகையில் நிர்வாகத்திற்கு வர முடியும், அரசியல் தலைவராக வர முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கிய பெருந் தலைவர் காமராஜ் அவர்களுடைய பெயரை வைத்திருக்கிறார்கள் என்பதை எண்ணுகிறபோது, விடுதலை சரித்திரத்தையே வைத்திருக்கிறார்கள் என்று தான் சொல்ல வேண்டும். இன்னும் யார் பெயரை வைக்கவில்லை, யார் பேரை வைக்கலாம் என்ற நிலைக்கு நான் வரவில்லை. ஆனால் காங்கிரஸ் அல்லாத ஆட்சி, தன்னுடைய மாநிலத்தில் அவசியம் வருகிறபோது, சந்தர்ப் பம் ஏற்படுகிறபோது, இந்த உணர்வுகளையெல்லாம் மதித்து செயல்பட்டிருக் கிறது என்று எண்ணும்போது, இதைவிட தேசியத்திற்கு வேறு பெருமை இருக்க முடியாது. அந்த அளவிலே தேசிய உணர்வு காங்கிரஸ் கட்சிக்குத் தான் சொந்தம், வேறு யாருக்கும் சொந்தம் இல்லை என்று காங்கிரஸ் நினைக்கத் தேவையில்லை. மற்ற கட்சிகளும் அப்படி ஒதுங்க வேண்டிய தில்லை என்ற வகையிலே இந்தியா முழுமைக்கும் இது எடுத்துக் காட்டாக அமைந்திருக்கிறது என்ற அளவிலே என்னுடைய பாராட்டுக்களைத் தெரி வித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால் இந்தச் சமயத்தில் ஒரே ஒரு வேண்டுகோள் வைக்க விரும்பு கிறேன். தென்னாற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில், தென்னாற் காடு மாவட்டம் என்றும், வள்ளலார் மாவட்டம் என்றும் பிரித்திருக்கிறார்கள். ஆற்காடு என்பது தென்னாற்காடு மாவட்டத்தினுடைய வட பகுதிக்குத் தொடர்புடையது. அதைப் பிரித்து வள்ளலார் மாவட்டம் என்று வைத் திருப்பதால், வள்ளலாருடைய உலகப் பெருமையைக் குறைத்து நான் மதிப் பிடவில்லை. வள்ளலார் வாழ்ந்த; புழங்கிய இடம், நீதிமன்றத்திற்குச் சென்றது எல்லாம் கடலூரில்தான். அவருக்குச் சோதனை ஏற்பட்டது சிதம்பரத்திலே. அவர் நிலையாக ஞான விளக்கு ஏற்றி வைத்தது வட

ஊரில். பிறந்து வளர்ந்தது மருதூரில். அந்தப் பகுதிகள் எல்லாம் தென்னாற்காடு மாவட்டப் பகுதியிலே வருகிறது. அவர் கால் பட்ட இடம் வாழ்க்கை வாழ்ந்த இடம் என்ற அந்தப் பகுதிக்கு வள்ளலார் மாவட்டம் என்றும் இன்னுமொரு பகுதிக்குத் தென்னாற்காடு மாவட்டம் என்றும் பெயரை மாற்றலாம். மாற்ற முடிந்தால் மாற்றலாம், இல்லையென்றால் அவசியம் இல்லை. அப்படி மாற்றுவதன் மூலமாக மற்ற மாவட்டங்களில் பிரச்சினைகள் வரும் என்றால் தேவையில்லை. அது குறித்து எங்களுக்குக் கருத்து வேறுபாடு கிடையாது. முடிந்தால் செய்யலாம் என்பதை மாத்திரம் இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன். இதிலே தென்னாற்காடு மாவட்டத்திலே பிரச்சினை கிடையாது.

இன்னுமொரு வேண்டுகோள். இந்த மாவட்டங்களைப் பிரிக்கிறபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து அறிவித்துவிடுவதே நல்லது. ஒரு கமிஷன் அறிவித்துவிடுங்கள். இந்தக் கமிஷனுக்கு முன்னால் அந்தந்த மாவட்ட மக்கள் எந்தப் பெயரை வைக்க வேண்டும் என்பதைப் பற்றித் தெரிவிக்க வேண்டும். பிறகு அந்தக் கமிஷன் அந்த முடிவை எடுக்க வேண்டும் என்ற அளவிலே வைத்தால், இதைப்பற்றிச் சிக்கல் நிரம்ப வராமல் இருக்கும். அப்போது தெளிவான முறை வந்துவிடும் என்ற அளவிலே அதற்கான வழிமுறைகளை வகுத்து இப்போதே அறிவித்துவிடுவது நல்லது என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்ததாக, பேரூர்துகளைத் தேசியமயமாக்குவதைப் பொறுத்த வரையில், ஒரு வார்த்தை சொல்லுவதை என்னுடைய கடமையாகக் கருதுகிறேன். இதிலே தனியார் உயர் நீதி மன்றம், உச்ச நீதிமன்றம் சென்றார்கள். அந்த வழக்கில் இந்தக் கொள்கைக்குச் சாதகமாக முடிவு வந்திருக்கிறது. ஒரே ஒரு வேண்டுகோள். இப்போது சட்டமுன்வடிவுகள் வந்துகொண்டிருக்கின்றன. ஐந்து பேருந்துகள் நடத்துபவர்களுக்கு விதிவிலக்குத் தரலாம் என்று யோசனை இருக்கிறது. தங்களுடைய அடிப்படை உரிமையிலே அரசு தலையிடக்கூடாது என்ற அடிப்படையிலே உயர்நீதி மன்றத்திற்குச் சென்றார்கள். இதிலே அரசு வென்றிருக்கிறது. ஆகவே அரசு தன்னுடைய நிலையை நிலைநாட்டியாக வேண்டும். பணம் இல்லை; நிதி ஆதாரம் இல்லை. கொஞ்சம் கால தாமதம் ஆகலாம். உடனடியாக அத்தனை பஸ்களையும் தேசியமயமாக்க வேண்டியதில்லை என்ற எண்ணம் இருந்தாலும் கூட, சில மாவட்டங்களையாவது தேசியமயமாக்க வேண்டும். முழுக்க முழுக்க இந்த மாவட்டத்திலே வேறு தனியார் பேருந்துகளே கிடையாது என்கின்ற அளவிலே சில மாவட்டங்களுக்கு வர வேண்டும். தனியாருக்கு விதி விலக்குத் தருவதை விட ஒவ்வொரு மாவட்டமாக முழுமையான தேசியமயத்தை. இந்தப் பேருந்துகளைப் பொறுத்தவரையிலும், கொண்டுவருவது



நடைமுறைக்கு நல்லதாக இருக்குமென்று நினைக்கிறேன். அந்த உணர்வினை உருவாக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் வேண்டுகோளாக விடுவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்தபடியாக, கல்விச் சீர்திருத்தத்தைப் பற்றியெல்லாம் ஆளுநர் உரையிலேயே சொல்லியிருக்கின்றார்கள். அதிலே ஒன்றை நாங்கள் சொல்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். இன்றைக்கு கல்வித் துறையில் ஏற்பட்டிருக்கின்ற பல சங்கடங்கள் குழப்பத்தினாலே ஏற்பட்டிருக்கின்ற ஒன்று என்பதை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஹையர் செகன்டரியைப் பொறுத்தவரையிலும். இன்றைக்கு 'ஏ' குரூப் என்பதாக ஒன்று இருக்கிறது. அந்தக் குரூப்பிலே படிப்பவர்கள் இன்ஜினியரிங் கல்லூரிக்கும் செல்ல முடியும்; மருத்துவக் கல்லூரிக்கும் செல்ல முடியும். ஆகவே அதிக மார்க் வாங்குகின்றவர்கள் அத்தனை பேரும் இந்த இரண்டுக்கும் மனுப் போடுகின்றார்கள். இந்த இரண்டிலே மனுப் போட்டு, தேர்வுகள் முடிந்த பிறகு, இன்ஜினியரிங் கல்லூரியிலே இருந்து வித்ட்ரா (Withdraw) செய்கிறார்கள் அல்லது மருத்துவக் கல்லூரியிலே இருந்து வித்ட்ரா (Withdraw) செய்கிறார்கள். இதன் விளைவாக இடங்கள் காலியாகின்ற நிலைமையும், காலியாக நிற்கின்ற நிலைமையும், தேர்வுகள் தொடர்ந்து பல மாதங்கள் செய்யப்படவேண்டிய கட்டாயமும் ஏற்படுகின்றது. ஆகவே. படிக்கும்போது என்ஜினியரிங் படிப்புக்கு 'பயாலஜி' (Biologv) என்ற ஒரு சப்ஜெக்ட்தான் இதற்கு இடம் கொடுக்கின்றது என்று கருதுகின்றேன். அதைப் பிரித்து வைத்து. மெடிக்கலுக்கு என்ற வகையிலே, என்ஜினியரிங்க்கு என்ற வகையிலே பிரிந்து போகின்ற ஒரு நிலைமையை ஏற்படுத்த வேண்டும். இன்னொன்றை முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். அண்ணா அவர்களுடைய பெயராலே அண்ணா பல்கலைக் கழகத்தை பொறியியல் கல்லூரி என்று கொண்டு வந்தோம். இன்றைக்கு என்ன நிலைமை என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். நாம் எதிர்பார்த்தது, நாம் விரும்பியது, நம்முடைய அரசினுடைய நோக்கம்—டெக்னிக்கல் கல்லூரி, பெரிய கல்லூரிகள் எல்லாவற்றையும் அண்ணா பல்கலைக் கழகத்தினுடைய தலைமையிலே இயங்கச் செய்ய வேண்டும் என்பதுதான். ஆனால் இன்றைக்கு என்ன ஆகி இருக்கிறது? கிண்டி இன்ஜினியரிங் கல்லூரி என்ற ஒரே ஒரு கல்லூரியைத் தவிர, இன்னொரு கல்லூரியைத் தவிர மற்ற எல்லா கல்லூரிகளும் தனித் தனியாக அந்த அந்தப் பல்கலைக் கழகங்களிலே இயங்கிக்கொண்டிருக்கின்றன. திருச்சியிலே இருப்பது அங்கே இருக்கிற பல்கலைக் கழகத்திலே, சென்னையிலே இருப்பது சென்னைப் பல்கலைக் கழகத்திலே, கோயம்புத்தூரிலே இருக்கின்ற பொறியியல் கல்லூரிகள் கோவைப் பல்கலைக் கழகத்திலே—இப்படி வைக்கப்பட்டதன் மூலமாக, இந்தப் பொறியியல் கல்லூரி

யினுடைய கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டும், கல்வியை ஸ்பெஷலைஸ்டு சப்ஜெக்ட் ஆகக் கொண்டுவர வேண்டுமென்ற நோக்கமே அடிபட்டுப் போகிறது. இப்போதைய கல்லூரிகள் கூட, உதாரணமாக திருச்சியிலே இருக்கின்ற ஆர்.ஈ.சி. இன்றைக்கு பாரதிதாசன் பல்கலைக் கழகத்தோடு இணைந்திருக்கிறது. அதோடு அண்ணா பல்கலைக் கழகத்தோடு வரவில்லை என்ற நிலைமை வருகின்றபோது ஒவ்வொரு கல்லூரிக்காக ஒவ்வொரு பல்கலைக் கழகம் நடத்துகிறோம் என்கின்ற நிலைமையையும், நம்முடைய நோக்கங்களையே நாம் விட்டுவிட்டோமோ, மறந்துவிட்டோமோ அல்லது மற்ற பல்கலைக் கழகங்கள் டெக்னிக்கல் யுனிவர்சிட்டியில் வராமல் தடுக்கின்றார்களா என்ற நிலைமையை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இது அத்தனையும் அண்ணா பல்கலைக் கழகத்தினுடைய தலைமையிலே இயங்குவதற்கான நடவடிக்கைகளை அரசு விரைவில் எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் சொல்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். அதிலே இன்னொரு சங்கடம் என்னவென்று தெரிகிறதென்றால், அண்ணா பல்கலைக் கழகத்திற்கு பல பேர் மனுப் போடுகிறார்கள். அதே நேரத்தில் வேறு கல்லூரிகளுக்கும், பொறியியல் கல்லூரிகளுக்கும் மனு போடுகிறார்கள். மனுப் போட்டு அண்ணா பல்கலைக் கழகத்திலே கிடைத்தவர்கள், அங்கே விட்டு விடுகிறார்கள்; அங்கே கிடைத்தவர்கள் பல பேர் இங்கே சேராமல் விட்டு விடுகிறார்கள். ஆக இதன் விளைவாக மார்க்கினுடைய ஸ்டாண்டர்டே குறைந்து போகிறது. 95 மார்க் வாங்கினால் கிடைக்கும் என்ற நிலைமை இருக்குமானால் அந்த 95-லே தான் நிற்கிறது. 94க்கும் கிடைக்கும் என்கின்ற நிலைமை இருந்தால், ஒரே நேரத்திலே சில பேருக்கு செலக்ஷன் கிடைக்காமல், சேரக்கூடிய வாய்ப்புள்ள மாணவர்கள் தவிர்த்துப் போகிற நிலைமை, காலம் தாழ்த்துகிற நிலைமை ஏற்படுகிறது. ஆகவே இதையெல்லாம் தவிர்ப்பதற்கு அரசு இதிலே கவனம் செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

அடுத்தபடியாக, என்னுடைய கருத்து ஒன்றைச் சொல்லாமல் இருக்க முடியாது. மும் மொழிக் கொள்கையைப் பொறுத்தவரையிலும், இந்த அரசு ஏற்கவில்லை என்றாலும்கூட, அதிலே நான் தெளிவாக இருக்கின்றேன். மும் மொழிக் கொள்கை தான் நமக்கு நல்வாழ்வு தர முடியும். தமிழகத்துக்கு நல்வாழ்வு தர முடியும் என்பதிலே தெளிவு இருக்கிறது. ஆனால் ஒன்றைச் சொல்ல விரும்புகின்றேன்—உங்களுக்கு இரு மொழிகளிலே தான் நம்பிக்கை என்றால், ஒன்றிலே தெளிவாக இருப்போம். பயிற்சி மொழியை எல்லோருக்கும் தமிழாக வையுங்கள். அல்லது எல்லோருக்கும் ஆங்கிலம் படிப்பதற்கான வாய்ப்பு வையுங்கள். இந்த இரண்டுமே இல்லாமல் வாய்ப்பு உள்ளவர்கள் தான் இதைப் படிக்க முடியும் என்ற நிலைமை உரு



(முற்பகல் 11-30)

வாகக் கூடாது. இன்னொன்று, குறைந்தபட்சம் இந்த இருமொழிக் கொள்கையிலே நம்பிக்கை உள்ளவர்களாவது திட்டவட்டமாக தங்கள் உறவினர்களை, தங்கள் சொந்தக் குழந்தைகளை இந்த மும்மொழித் திட்டம் இருக்கின்ற பள்ளிக்கூடங்களிலே சேர்ப்பதில்லை என்று தான் தெரிகிறது. இந்த இரண்டுமே இல்லாமல், வசதியுள்ளவர்கள் எந்தத் திட்டத்திலும் படிக்கலாம். மும்மொழித் திட்டமானாலும்கூட வைத்துக்கொள்ளலாம். 'ஊருக்கு உபதேசம் எனக்கு இல்லையடி.' என்கின்ற வகையிலே பல நிலைமைகள் நடந்துகொண்டிருக்கின்றன. இவைகளைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லை என்றால், 'கம்ப்ளீட் ரீ திங்கிங்' மீண்டும் இது பற்றிய சிந்தனை நமக்கு வந்தாக வேண்டும். கல்வியினுடைய நிலைமைபற்றி, மறு சிந்தனை இந்த நேரத்திலே நமக்குத் தேவை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடைசியாக, முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோளாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பத்திரிகைச் சட்டத்தைப் பொறுத்தவரையில். எல்லா மாநிலங்களும் விட்டுவிட்டன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன குறைகள் அல்லது தவறுகள் இப்போது மறைந்திருக்கலாம்.

**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் :** நாங்கள் கொண்டுவந்த சட்டத் திருத்தத்தைத் திரும்பப் பெறுவதாக இருக்கிறோம். அதற்குரிய 'அமெண்ட்மெண்ட்' கொண்டுவர இருக்கிறோம். ஆகவே மிக்க மகிழ்ச்சி அடைவார்கள் என்று கருதுகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** இந்த முறை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நடந்து சொல்வதற்கு இடம் கொடுக்காமல், குறுக்கிட்டுக்கொண்டிருக்கின்றார்கள். அதற்கு மீண்டும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தப் பத்திரிகைச் சட்டத்தைக் கைவிடுவதற்கு திருத்தம் கொண்டு வருகின்றதற்கு பாராட்டுகிறேன். கடைசியாக ஒன்று.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் 'கடைசியாக' என்று சொல்கின்றார்கள். நான் தடுக்கவில்லை. பேசலாம்.

**திரு. க. இராமமூர்த்தி :** அடுத்ததாக, நகரத்தைப் பொறுத்தவரையிலும் பல சங்கடங்கள். அதில் ஒரு சங்கடம் கொஞ்சம் மழை வந்தால், 10 நிமிடம் அல்லது ஒரு அரை மணி நேரம் மழை பெய்தால். காரே போக முடியாத அளவுக்குப் பள்ளங்கள், அதில் தண்ணீர் எல்லாம் தேங்கி இருக்கின்ற நிலைமைகள் இருக்கின்றன. இதிலே இப்போது ஏற்பட்டிருக்கின்ற கூடுதல் சங்கடம் என்னவென்றால், இப்போது பல அடுக்கு மாடிக் கட்டிடங்கள் வந்

திருக்கின்றன. அவர்கள் எல்லாம் அண்டர் கிரவுண்டில் வேறு வழிகள்
வைத்துக்கொண்டிருக்கின்றார்கள். தண்ணீரை வெளியேற்றுவதற்கு வழி
யில்லாமல் இருக்கின்ற அளவுக்கும் வீடுகள் கட்டியிருக்கின்றார்கள்.

அந்தக் கட்டிடங்களில் தேங்குகின்ற தண்ணீரை வெளியேற்ற வேறு வழி
காட்டிவிட்டு இந்தக் கட்டிடங்களைக் கட்டியிருக்கின்றார்கள். அதன் விளை
வாக மழை நின்று 2 நாட்களுக்குப் பிறகுதான் தண்ணீரை இறைத்துக்கொண்டு
இருக்கவேண்டிய நிலைமைகள் இருக்கின்றன. என்னுடைய வீட்டிலே
சாக்கடையிலே கொஞ்சம் தண்ணீர் நின்றால்கூட, முனிசிபாலிட்டி அடுத்த
நிமிடமே வருகிறது. இங்கே இதுபோன்ற தவறுகள் நடைபெறுமானால்
உடனே நடவடிக்கை எடுக்கிறது. ஆனால் இந்த பார்சன் கட்டிடத்திலே
நான் பார்த்தேன். அதுபோல பல கட்டிடங்களிலே பார்த்தேன். மழை
நின்று 2 நாட்களுக்குப் பிறகுகூட நடு ரோடிலேயே, அவ்வளவு போக்கு
வரத்து நிறைந்திருக்கின்ற வீதிகளிலே பெரிய தண்ணீர் பம்புகளை வைத்து
இறைத்துக்கொண்டிருக்கின்றார்கள். எது, எங்கே, எப்படிப் போனால்
என்ன என்று கவலைப்படாமல் செய்துகொண்டிருக்கின்றார்கள். பணம்
படைத்தவர்கள், வசதி படைத்தவர்கள் எந்தத் தவறையும் செய்யலாம் என்ற
நிலைமை இருக்கிறது. இது போன்று நடக்க நகரங்களிலே இடம் கொடுக்
கக்கூடாது. அதற்கு உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும்
என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, தொழிலாளர்கள் பிரச்சினையைப் பொறுத்த வரையிலே,
நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்த நடவடிக்கைகள்
பாராட்டிற்குரியவையாகும். அதிலே ஒன்று தொழிலாளர்களுடைய
உரிமைகளைக் காப்பதிலே, அவர்களைக் காத்து நிற்பதிலே எந்த அரசியல்
கட்சியும் ஒருவருக்கொருவர் பின் வாங்கியிருக்க முடியாது. அவர்கள்
பின் வாங்க முடியாது. அதே நேரத்திலே தொழில் துறையைக் காப்பதிலே
அத்தனை பேர்களுக்கும் உரிமை இருக்கின்றது. இந்த இரண்டையும்
சொந்த ஆதாயத்திற்காகவே அல்லது அரசியல் லாபங்களுக்காகவே இணைக்க
முயல்வது, தொழில் துறையில் சீரழிவு ஏற்படுத்தும். மாநிலத்தினுடைய
பொருளாதாரத்தில் சீர்கேட்டை உண்டாக்கிவிடும். அந்த நிலைமைகள்
உருவாகாமல் இருக்க வேண்டும்.

அப்படிப்பட்ட நிலைமைகள் உருவானால்கூட, அவைகளையெல்லாம்
தவிர்ப்பதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவருக்கே உரிய முறை
யில் நடவடிக்கைகள் எடுத்து நிலைமைகளை ஓரளவுக்குக் கட்டுப்பாட்டுக்
குள்ளே கொண்டு வந்திருப்பதற்கு நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.





கடைசியாக, ஒரு வார்த்தை. உண்மையாகவே கடைசியாகச் சொல்
கிறேன். இந்த முறை நான் ஒன்றிலே மகிழ்ச்சியடைகிறேன். மத்திய
அரசு அல்லது காங்கிரஸ் கட்சி காங்கிரஸ் அல்லாத கட்சிகளின் செயல் முறை
களைப் பாராட்டுவதில்லை, அதற்குரிய மரியாதையைக் கொடுப்பதில்லை
என்கின்ற பிரச்சாரத்தை இந்தியாவிலே உள்ள பல அரசியல் கட்சிகள்,
தமிழகம் உட்பட, செய்து வந்திருக்கின்றன. ஆனால் இந்த அரசு எடுத்
திருக்கின்ற சரியான நடவடிக்கைகளை காங்கிரஸ் பாராட்டத் தயங்கியதே
இல்லை என்பதை நான் தெளிவாக்குகிறேன். அதே நேரத்தில் என்ன
காரணத்தினாலோ காங்கிரஸ் கட்சிக்கு எதிராக அனைத்து எதிர்க் கட்சி
களும் ஒன்று திரளுகின்றன. மற்ற இடங்களிலே சென்று பேசுகின்றார்கள்.
"காங்கிரஸ் அல்லாத கட்சிகள் ஆட்சி செய்கின்ற காரணத்தினாலே பாராட்ட
முன்வரவில்லை. அவர்கள் செய்த நல்ல காரியங்களைக் கூட அங்கீகரிப்ப
தற்கு தயாராக இல்லை" என்று சொல்லித் தான் தங்கள் கட்சியை வளர்க்க
முனைகிறார்கள்.

அது ஜனநாயகத்திலே நம்பிக்கை உள்ளவர்கள் ஒவ்வொருவரும்
எச்சரித்துக்கொள்ளவேண்டிய ஒன்று என்பதைச் சொல்லி, இந்த அளவிலே
இந்த ஆண்டினுடைய ஆளுநர் அவர்கள் உரை பாராட்டுக்குரியதாக அமைந்
திருக்கிறது. கோடிட்டுக் காட்டியிருக்கின்ற விதத்திலே பாராட்டுக்கள் நிறைய
சொன்னாலும்கூட, இருக்கின்ற குறைகளை அரசு தவிர்ப்பதற்கு முன்வர
வேண்டும் என்று சொல்லி அமைகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு சிலம்புச்
செல்வர், மேலவைத் தலைவர், டாக்டர் ம. பொ. சி. அவர்களே,

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** பரஸ்பர பாராட்டுதான். (சிரிப்பு)

**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் :** இந்த மேலவையில்
ஆளுநர் உரையின்மீது நன்றி கூறும் தீர்மானத்தில் பல அறிவார்ந்த
நல்லவர்கள், தங்களுடைய மனிதாபிமானத்தோடு உள்ள உணர்வுகளையும்,
தங்களுடைய கட்சியின் கொள்கையை முன்வைத்துப் பேசவேண்டிய கருத்துக்
களையும் சொல்லியிருக்கின்றார்கள். அவர்கள் எல்லோருக்கும் என்னுடைய
பணிவான நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒவ்வொருவரும் தனித்தனியாக பல பிரச்சினைகளைக்குறித்துச் சொல்லி
யிருந்தாலும், அவைகளுக்கெல்லாம் பதில் சொல்லி, இது ஒரு கேள்வி-பதில்
என்கிற நிலைமைக்குப் போகாமல், குறிப்பாக ஒட்டுமொத்தமாக கொள்கை
ரீதியாகப் பதில்சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று நான் நினைக்
கிறேன். நான் பேசிய பிறகு ஒருவேளை என்னுடைய கேள்விக்கு என்னுடைய
குற்றச்சாட்டுக்கு அல்லது என்னுடைய குறைபாட்டுக்கு பதில் கூறவில்லையே

என்று யாராவது கருதினார்களானால், அந்த மாண்புமிகு உறுப்பினர் கேள்வி கேட்டால், அதற்கும் நான் பதிலைத் தயாராக வைத்திருக்கின்றேன் என்று சொல்ல நான் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன்.

பொதுவாக தொழிலாளர் பிரச்சினை. வறுமைக்கோடு என்று ஓர் எல்லையை வைத்து, அதற்குக் கீழுள்ள மக்களின் பிரச்சினை, நாட்டிலே உள்ள வேலைவாய்ப்பு வேண்டுமென்கிற பிரச்சினை, வெள்ள நிவாரணம், வறட்சி நிவாரணம் இவைகளை எல்லாம் வைத்து எப்படிச் சரியாக நடைபெறவில்லை என்பதையும், நடைபெற்றிருப்பதையும் குறித்து, அவர்களுக்குத் தெரிந்த அளவில் கிடைத்திருக்கின்ற ஆதாரத்தை வைத்துக்கொண்டு, நல்ல முறையில் கண்ணியமான வார்த்தைகளைப் பயன்படுத்தி, எங்களைக் குறை சொல்வதானாலும் அதிலே அழுத்தந்திருத்தமாகச் சொல்லும்போதுகூட, அவலச் சொற்கள் வராமல் மேன்மை, மேன்மை என்கிற அளவிற்கு அந்தப் பாரம்பரியத்தைக் காப்பாற்றுகின்ற வகையில், பேசியதற்காக, எடுத்துரைத்ததற்காக இந்த அரசின் சார்பாக முதலில் நான் நன்றிகூறிக்கொள்கின்றேன்.

எந்தவொரு நிறுவனம் அல்லது அமைப்பு அல்லது ஆட்சி முழுமையாக எல்லோரையும் திருப்திப்படுத்திவிட்டது என்ற வரலாறு எந்த நாட்டிலும் கிடையாது; இருக்க முடியாது. இது இயற்கை. வளர்ந்து வருகின்ற சமுதாயத்தில், வளர்கின்ற இளைஞர்கள் உள்ளத்தில் என்ன உணர்வுகள் ஏற்படுகின்றன, உணர்ச்சிகள் அந்த உணர்வுகளை நிரந்தரமாக்குகின்றன என்று பார்த்தால், அதற்குப் பதில்களை அப்போதே சொல்லிவிட முடியாது. அவர்களைத் திருப்திப்படுத்திவிட முடியாது. எதிர்காலத்தில் நாம் எடுக்கின்ற நடவடிக்கைகள்தான் அவர்களை, அவர்களுக்கேற்ப, அவர்கள் காலத்திற்கு, தகுதிக்கேற்ப திருப்தி செய்ய முடியும் என்பதையும் இங்கே நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன்.

சிக்கல்கள் எங்காவது இருக்கிறதென்றால், கோவில் நிலங்கள் என்றே வைத்துக்கொள்வோம். அப்படிப்பட்ட சிக்கல்கள் எல்லாம் இருக்கிறதென்றால், அவை நாங்கள் ஆட்சிக்கு வந்தபிறகு ஏற்பட்ட சிக்கல்கள் அல்ல. நீலாயதாட்சி என்ற ஒரு கோவிலைப்பற்றி, நாகப்பட்டினத்தில் 99 வருடத்திற்கு 'லீஸுக்கு' எடுத்ததைப்பற்றி இங்கே குறிப்பிட்டிருக்கின்றார்கள். மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்களும், உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். நான்

(முற்பகல் 11-40)

அதைச் சொல்லும்போது, அதற்கு விளக்கம் சொல்லி, புள்ளிவிவரங்களைக் கொடுப்பதற்கு முன்பாக, அதிலிருந்து வருமானம் வரவில்லையே என்று சொல்லும்போது, நமக்கு வேதனையாக இருக்கிறது. எவ்வளவோ செலவுகள்





இருக்கின்றன ஒரு கோவிலை நடத்தும்போது. அதற்கெல்லாம் பணம் வர வேண்டும்; வரவில்லையே என்று சொன்னால், அது உண்மையிலேயே வேதனைக்குரியதுதான். அந்த வேதனையை எப்படித் தீர்ப்பது என்ற நிலைமைக்கு நாம் முன்வரும்போது, முயற்சி எடுக்கும்போது, சட்டம் என்ற ஒன்று என்னென்ன வகையில் நமக்குத் தடையாக இருக்க முடியுமோ அந்தந்த வகையிலே எல்லாம் தடையாக இருக்கிறது என்பதை இங்கே பெருந்தன்மையாகக் குறிப்பிட விரும்புகிறேன். ஓரிடத்தில் பல அடி, லட்சக் கணக்கிலே, 2½ லட்சம் அடி உள்ள ஒரு நிலத்தில் கசாப்புக் கடை இருக்கிறது. கோவிலுக்குரிய சொத்தில், கோவிலுக்கு வருமானம் வர வேண்டிய சொத்தில் கசாப்புக் கடை இருக்கிறது, வேறு கடைகள் இருக்கின்றன, இவற்றில் வியாபாரம் நடைபெறுகிறது; இதில் வீடுகள் கட்டியிருக்கிறார்கள். இவர்களை எல்லாம் வெளியேற்றுவது என்பது, மாற்று இடங்களில் இவர்களுக்கு வாய்ப்பு கொடுப்பது என்பது சாதாரணப் பிரச்சினையல்ல. ஆட்சியிலே இருக்கிற எங்களுக்கும் தெரியும், உங்களுக்கும் தெரியும். ஒரு நகராட்சியை, அவர்கள் அரசோடு ஒத்துழைக்கவில்லை என்றால், எப்படியெல்லாம் சரி செய்யலா மென்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும், எங்களைவிட. அதைக்கூடச் செய்யாமல், நாங்கள் சட்டத்திற்கு உட்பட்டு இருக்கின்ற காரணத்தால், முனுசிபாலிட்டியுடன் தகராறு. அவர்களிடமிருந்து இதைப் பெறுவதற்கே, எடுத்துக் கொள்வதற்கே வழக்குமன்றம்வரை போவோமோ என்ற நிலைமை எல்லாம் ஏற்பட்டிருக்கிறது. இதை எதற்காக இங்கே சொல்கிறேன் என்றால், எடுத்ததற்கெல்லாம் 'ரிட்' போடுகிறார்களே அவர்களையும் இங்கே மனத்திலே வைத்துக்கொண்டு, இந்த அரசை அனுதாபத்தோடு கவனித்து, பரிதாபத்தோடு பார்த்து, நல்ல எண்ணத்தோடு வாழ்த்துக் கூறி, இவ்வளவு சங்கடங்களையும் தாங்கிக் கொண்டிருக்கிறீர்களே, 'நீங்கள் வாழ்க' என்று சொல்ல வேண்டு மென்று நான் விரும்புகிறேன். எத்தனை பேர்கள் சொல்லுவார்கள் என்பது எனக்குத் தெரியாது. அது அவர்களுடைய உரிமை. ஆனால் நிலைமை இப்படி இருக்கிறது. ஒரு கூலி வேலை செய்கின்ற நபருக்குக் கூலியை உயர்த்தினால் 'ரிட்'. கூலியைச் சரியாகக் கட்டு என்று நடவடிக்கை எடுத்தால் 'ரிட்'. ஒரு மில்லை எடுக்கிறோமென்று சொன்னால் 'ரிட்'. தொழிலாளர்களுக்கு இதைச் செய்ய வேண்டுமென்று சொன்னால் 'ரிட்'. 'ரிட்' என்ற வார்த்தையை எப்போது கண்டுபிடித்தார்கள் என்பது தெரியவில்லை. அது ரொம்ப 'இருட்டாக' இருக்கிறது. அந்த இருட்டை எப்படியாவது நாம் நீக்க வேண்டும். அதை மத்திய அரசுதான் செய்ய வேண்டுமென்பதை இங்கே நான் சொல்ல விரும்புகிறேன். ஒரு ஆட்சி தன்னிச்சையாக, எதேச்சாதிகாரமாக, சர்வாதிகார உணர்வோடு செய்வதென்றால், அதைத் தடுப்பதற்காகப் போகலாம். இங்கே மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். பரிசுச் சீட்டு பற்றிச் சொல்லாமல் சொல்லி,

சோம்பேறித் தனமாக்கும் நிலைமை என்று சொன்னார்கள். நான் மறுக்கவில்லை. அப்படிச் சிலருக்குப் பணம் கிடைத்தால் வந்துவிட்டுப் போகட்டுமே என்று நாமும் நினைக்க வேண்டியிருக்கிறது. வேறு வழியில்லை. நான் ஒரு யோசனை கூறினேன். சத்துணவுத் திட்டத்திற்காக பரிசுச் சீட்டு ஆரம்பிப்பது என்பதுதான் அது. பரிசு ஒரு கோடி ரூபாய் என்று வைத்துக்கொள்ளலாம். அந்த ஒரு கோடி ரூபாய் பரிசு விழுந்த நபர் 15 ஆண்டுகளுக்கு பரிசுச் சீட்டுகளுக்குத் தேவையான, மாதாமாதம் என்ன வாங்குவாரோ, அதை அந்தப் பணத்தில் கழித்துக்கொள்ள வேண்டும். அந்த 15 ஆண்டுகள் அவர் எந்தப் பரிசும் வாங்கக் கூடாது. டிக்கட் வாங்க வேண்டும். பரிசு வாங்கக் கூடாது. பதினைந்து ஆண்டுகள் வரையில், ஒரு கோடி ரூபாயில் அவருக்கு உடனடியாக எவ்வளவு தேவையோ அந்தப் பணத்தைப் பெற்றுக்கொண்டு, அதிக வட்டி வருகின்ற அரசினுடைய நிறுவனங்களில் அந்தப் பணத்தைப் போட்டு வைக்க வேண்டும். அது சத்துணவுத் திட்டத்திற்காகப் பயன்படும். அந்தப் பணம் அவருக்கு எப்போது தேவையோ, 15 ஆண்டுகள் கழிந்த பிறகு, பெண் குழந்தையாக இருந்தால் திருமணத்திற்காகவும்; ஆண் குழந்தையாக இருந்தால் எந்தெந்தப் படிப்புக்குப் போக வேண்டுமோ அதற்கும்; அவர்கள் வீட்டில் நல்ல காரியங்கள் எல்லாவற்றுக்கும், விகிதாச்சாரம் போட்டு சிலபேர் இன்ஷ்யூரன்ஸ் செய்கிறார்களே அதைப்போல, தர வேண்டுமென்று யோசனை சொன்னேன். அதை இன்னும் நாம் முடிவுக்குக் கொண்டு வரவில்லை. இன்னும் அது யோசனையில்தான் இருக்கிறது. மனிதனுக்கு பணப் பற்றாக்குறை இருக்கிறது. வேலை செய்தாலும் பணப் பற்றாக்குறை இருக்கிறது. எப்படியாவது சம்பாதிக்கலாம் என்ற உணர்வு இருக்கிறது. ஆனால் அதைத் திருடாமல், கொள்ளை அடிக்காமல், வழிப்பறி செய்யாமல், கொலை செய்யாமல் பெறுகிறார்கள் என்றால், நான் சொன்ன திட்டத்தின்படி கொடுப்பதன்மூலம் 15 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒருவருக்கு ஏதாவது ஒரு பரிசு கிடைத்தால், அதையொட்டி அவர் திருப்திப்பட வேண்டும். ஒரு கோடி ரூபாய்க்கு மேல் ஒருவருக்குப் பணம் தேவை இருக்காது. எல்லா வரியும் போக மீதி வருவதுகூட போதும். அந்தவகையில்தான் சத்துணவுத் திட்டத்திற்காக ஒரு கோடி ரூபாய் பரிசுச் சீட்டுத் திட்டம் கொண்டு வர வேண்டுமென்ற கொள்கையைச் சொன்னேன். இந்த அளவிற்கு மக்கள் இருக்கும்போது, ஏதாவது போராட்டம். வேலை நிறுத்தம், கதவடைப்பு என்று வந்தால், ஆட்சியில் இருக்கின்றவர்கள் யாராக இருந்தாலும், எந்த மாநிலத்தில் இருக்கிறவர்களாக இருந்தாலும், அந்த ஆட்சிக்கு எவ்வளவு தொல்லை ஏற்படும், கஷ்டம் ஏற்படும் என்பதை எல்லோரும் சிந்திக்க வேண்டும். இன்றைக்கு சிம்சன் கம்பெனி நிர்வாகமும், தொழிற் சங்கங்களும் ஒத்துழைப்பு கொடுத்து ஒரு சுமுகமான ஆரம்ப நிலைக்கு—தொடர் செலவு, தொடரா செலவு என்று சொல்லுவார்களே அதுபோல்—வந்திருக்கிறோம்.



எனக்கு இருக்கிற சங்கடம் எல்லாம் ஒன்று அல்லது இரண்டு மாதங்கள் முடிந்த பின் இடைக்கால நிவாரணம்பற்றி நான் சொல்ல வேண்டும். அதற்கான பொறுப்பு என் தலையில் சுமத்தப்பட்டிருக்கிறது. அதுபோல் மூன்று மாத காலத்திற்குள் 15 பேர்களுடைய நிலைமைபற்றி நான் சொல்ல வேண்டும். அதுவும் என் தலையில் சுமத்தப்பட்டிருக்கிறது. எங்களைப் பாராட்டி தீர்மானம் போட்டிருக்கும் அதே நேரத்தில் "தொடக்கத்திலேயே இதுபற்றிச் சொல்லியிருந்தால் நிலைமை வேறு விதமாக முடிந்திருக்கும்" என்று குத்தியும் சொல்லியிருக்கிறார்கள். "முதலிலேயே இதுகுறித்து முதலமைச்சர் முடிவைச் சொல்லியிருந்தால் மூன்று மாதங்கள் நாங்கள் கஷ்டப்பட வேண்டி இருந்திருக்குமா?" என்று சொல்லியிருக்கிறார்கள். முதலிலேயே என்னைப்பற்றிக் கவலைப்பட்டார்களா என்பது எனக்குத் தெரியாது. பேசினார்கள், பேட்டி கொடுத்தார்கள். தொழிலாளர் ஆணையாளர், தொழிலாளர் நல அமைச்சர் இவர்கள் எல்லாம் இதுகுறித்து பேசிக்கொண்டிருந்தார்களே தவிர, மத்தியஸ்தம் ஏற்படும் அளவுக்கு நிலைமையைக் கொண்டு செல்லவில்லை. அந்தவகையில் இப்போது ஒத்துழைத்த அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுதான் உண்மை நிலைமை. முதலிலேயே இதைச் சொன்னால் என்ன என்று கேட்பவர்களுக்குச் சொல்கிறேன். முதலிலேயே அங்கு போய் வேலை நிறுத்தத்தில் கலந்துகொள்ளாமல் வேலை செய்தவர்களுக்கு நன்றி சொல்ல வேண்டாமா? நாட்டின் நலத்தில் அக்கறை கொண்டவர்களுக்கு வேலை செய்தவர்களுக்குப் பாதுகாப்பு தர வேண்டாமா? ஒத்துழைப்பு தந்தவர்களுக்கும், ஒத்துழையாமல் இருந்தவர்களுக்கும் நாம் பாதுகாப்பு தந்தாக வேண்டும். இப்போது ஒத்துழைப்பு தந்த இரு தரப்பினரையும் நான் பாராட்டுகிறேன். அதுபோல் இரு தரப்பினருக்கும் நாம் பாதுகாப்பு கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். தொழிலாளர் தலைவர்களுக்கு நான் முன்பு சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்கிறேன். தயவுசெய்து எந்தப் போராட்டமானாலும் இறுதியாக வைத்துக்கொள்ளுங்கள். அதற்கு மேல் வேறு வழியே இல்லை என்று இருக்கிற நிலைமையைத் தவிர திரு. குசேலர் அவர்கள் சொன்னாலும்கூட, பொதுவாக இரு தரப்பினரும் ஒத்துழைப்பு தந்து பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்கு நல்லமாதிரி முடிவு காண வேண்டும். இப்போது தீர்ப்பு குறித்து முடிவு கூற வேண்டிய பொறுப்பு என் தலையில் சுமத்தப்பட்டிருக்கிறது. அதனை எந்த அளவிற்கு ஏற்றுக்கொள்ளப் போகிறோம் என்பதெல்லாம் இப்போது தெரியாது. ஒருவர் சொல்லியிருக்கிறார். எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்று இங்கே சொல்வது முறையில்லை. "சரியாக இல்லாவிட்டால், அதாவது ஒரு மாதத்திற்குள் அல்லது மூன்று மாதத்திற்குள் சரியாக வராவிட்டால்" .... ஏன் இந்த சந்தேகம்—" மீண்டும் போராடுவோம்". . . எதற்கு இந்த சந்தேகம்?

[டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்] [1984 பிப்ரவரி 23

(முற்பகல் 11-50)

இன்னொரு உறுப்பினர், டாக்டர் ஜனார்த்தனம் அவர்கள்கூட சில கொள்கைகளைச் சொல்லி, சில தேவைகளைச் சொல்லி, அதைச் செய்ய வேண்டுமென்று சொல்லிவிட்டு, ஆனால் தேர்தல் நேரத்தில் இதைச் சொல்லக்கூடாது என்று சொன்னார். நீங்களும் செய்யமாட்டீர்கள் என்று சொன்னார். இதுதான் சிக்கல். இதுதான் குழப்பம். இதுதான் சங்கடம். நம்முடைய நோக்கமெல்லாம் எதைச் செய்தால், எதைச் சொன்னால், தேர்தல் நேரத்தில் மக்களிடமிருந்து ஓட்டு கிடைக்கும் என்று நினைத்துச் செய்தால், அது நாட்டுக்கு நிரந்தர நன்மையைத் தராது. நீண்ட காலத்திற்கு தொடர்ந்து மக்கள் அமைதியாகவோ, நல்ல வாழ்வு பெறவோ அது உதவி செய்யாது என்பதை பஞ்சாபிலும் பார்க்கிறோம். அரியானாவில் பார்க்க ஆரம்பித்திருக்கிறோம். அஸ்ஸாமிலும் பார்த்துக்கொண்டே இருக்கிறோம். அந்த நிலைமை தமிழகத்திற்கு வரக்கூடாது, வரவேண்டாம், வர அனுமதிக்கக் கூடாது என்று நான் வேண்டுகோள் வைக்க ஆசைப்படுகிறேன்.

நாம் எல்லோரும் சேர்ந்து நடத்தவேண்டியதுதான் அரசு என்பதைத் தவிர, ஒரு கட்சி மெஜாரிட்டி பெற்று ஆட்சி நடத்துகிறது, அதை நாம் எதிர்க்கத் தான் வேண்டும், எதிர்த்தால்தான், அதைக் குறை சொன்னால்தான், மீண்டும் நாம் வாக்குகளைப் பெற முடியும். மீண்டும் ஆட்சிக்கு வர முடியும் என்று எண்ணினால், அது கொஞ்சம் சிக்கலானதுதான்.

தமிழ் நாட்டு மக்கள் ஒன்றும் விபரம் தெரியாதவர்கள் அல்ல. ஒருவர் போய் உங்கள் ஊரில் தண்ணீர் இல்லையே என்று சொன்னாராம். அதற்கு ஒரு அம்மையார் சொல்லியிருக்கிறார்கள், "மழை பெய்யவில்லையென்று சொன்னால் அதற்கு எம்.ஜி.ஆர். என்ன செய்வார்?" என்று கேட்டிருக்கிறார்கள். அந்த அளவுக்கு விபரம் தெரிந்த மக்களிடம் போய், தேர்தலுக்காக என்று சொன்னால், அதை அவர்கள் நம்புவார்களா? முன்பெல்லாம் சினிமாவைப்பற்றிப் பேசுவதில்லை. இப்போது சினிமாவைப்பற்றிப் பேசுவது கௌரவமாகியிருக்கிறது. அது ஒரு பெரிய விஷயம். அதற்காக அரை மணி நேரமாவது பேசவேண்டியிருக்கும். அதற்கு அவைத் தலைவர் அவர்கள் அனுமதிப்பார்கள் என்று கருதுகிறேன். பிறகு இலக்கியத்திற்குள் நுழைகிறேன். நீங்கள் கோபித்துக் கொள்ளக்கூடாது. தவறு இருந்தால் திருத்திவிடுங்கள்.

சத்துணவுத் திட்டம்பற்றிச் சொல்லும்போது, உண்மையிலேயே நான் மீண்டும் மீண்டும் சொல்கிறேன். என்னுடைய வாழ்க்கையில் நான் பட்ட கஷ்டங்களின் காரணமாக, உணவுக்கு அதாவது சோறில்லாமல் நான் அனுபவித்த பட்டினிக் காலங்களில் வேலை செய்து பிழைக்க வேண்டும்,



1984 பிப்ரவரி 23] [டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்]

ஆனால் வேறு வேலை தெரியாது என்ற நிலையில், நாடகக் கம்பெனிக்குள் நுழைந்தேன். இவைகளையெல்லாம் எண்ணித்தான் தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் சிறுவர்களைப்பற்றிச் சொல்லும்போது, "அவர்கள் சிறுவர்களாக இருக்கும்போது வேலை செய்யக்கூடாது, அப்படி வேலை செய்துதான் சாப்பிட வேண்டுமென்றால் 15 வயதிற்குள் இருக்கக் கூடாது" என்ற யோசனையை வைத்து, சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்குக் கொடுக்கக்கூடிய கூலி கொடுக்க வேண்டுமென்ற நிலையை வைத்து, அதற்காக ஆவன செய்து கொண்டிருக்கிறேன் என்பதை இந்த அவையில் சொல்வதில் நான் மன நிறைவு பெறுகிறேன்.

வாரத்திற்கு நாலணா—இதுதான் நாடகக் கம்பெனி எனக்குக் கொடுத்த சம்பளம். எனக்குத் தேவை சாப்பாடு. என்னுடைய தாயார் அந்த எனது சாப்பாட்டுக்காகக் கஷ்டப்படக்கூடாது என்பதற்காக நாடகக் கம்பெனிக்குப் போனேன். காலையில் காப்பி, டிபன், மத்தியானம் சாப்பாடு, மாலையில் காப்பி, இரவு சாப்பாடு போட்டு விடுவார்கள். இவ்வளவும் உண்டு. பிறகு எனக்கு என்ன கஷ்டம்? என்ன செலவு? அந்த நாலணாவுக்கு சோப்பு வாங்கி, வேட்டியைத் துவைக்கவேண்டியதுதான். இந்தக் கஷ்டங்களையெல்லாம் அனுபவித்தவன்தான், இந்த இராமச்சந்திரன். ஆனால் 'கூத்தாடி' என்று கேவலமாகப் பேசுகிறவர்கள் இந்த அனுபவம் இல்லாதவர்கள் என்று கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். கூத்தாடி என்பதற்குப் பதில் சொல்ல பின்னால் வருகிறேன். அந்த நிலையில் துன்பப்பட்டவன் என்பதற்காகச் சொல்கிறேன். ஆகவேதான், தொழிலாளர்கள் ஒரு மாதம் வேலையில்லாமல் இருந்தால், அந்தக் குடும்பம் எவ்வளவு கஷ்டப்படும், எவ்வளவு துன்பப்படும் என்பதை நான் மனமார, உளமார உணர்ந்தவன் என்ற அடிப்படையில், வேலை நிறுத்தம் வேண்டாம் என்பதை நான் வற்புறுத்துகிறேன். ஆகவே தான் வேலை நிறுத்தம் வேண்டாம் என்று சொல்கிறேன். நாங்கள் தொழிலாளர் பக்கத்தில் இருக்கிறோம். ஆனால் அதேசமயத்தில், தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கிற இனமும் அழிந்து விடக்கூடாது என்ற அக்கறையுடனும் இருக்கிறோம். இதை அன்று பேச்சுவார்த்தைக்கு வந்திருந்த தொழிலாளர் தலைவர்கள் உணர்ந்திருப்பார்கள் என்று நம்புகிறேன். பணம் கொடுக்க வேண்டும் என்று சொன்னபோது, "இப்போது கொடுக்க முடியாது, ஏறக்குறைய ரூ. 40 லட்சம் தேவைப்படும்" என்றார்கள். நான் உடனே சொன்னேன். அதைக்கூட தெரிவித்திருப்பார்கள் என்றுதான் கருதுகிறேன். "அரசே ரூ. 40 லட்சம் உங்களுக்குக் கடனாகக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறது. நீங்கள் அதை எப்போது திருப்பித் தருவீர்கள்?" என்று நிறுவனத்தின் நிர்வாகிகளிடம் கேட்டேன். பிறகு கேட்டுச் சொல்லுகிறேன் என்றார்கள். ரூ. 500, ரூ. 450 என்று கணக்குப் போட்டார்கள். எனவே அந்த

[டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்] [1984 பிப்ரவரி 23

அளவுக்கு நியாய உணர்வோடுதான் இந்த அரசு நடக்கிறது என்பதை
உறுப்பினர்கள் தயவுசெய்து நம்ப வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.
பேசும்போதே ஒரு தீர்மானத்திற்கு வந்து, சுமுகமான சூழ்நிலை உருவாகாது,
தொழிலாளர்கள் உள்ளே போகும்போதே தீர்ப்பு சரியாக இல்லாவிட்டால்,
நாங்கள் மறுபடியும் போராடுவோம் என்றெல்லாம் பேசினால் நல்லதல்ல.
போராட்ட உணர்வைக் குறைத்துக்கொள்ள வேண்டும். செடிகளை மரங்களாக
வளர அனுமதியுங்கள். அந்த மரம் வளர வேண்டும். போராட்டத்தின்
விளைவாக விழுதுகள் விட்டு எல்லோருக்கும் நன்மை பயக்கக்கூடியதாக
இருக்க வேண்டுமே தவிர, ஆரம்பத்திலேயே கருகி விட்டால், ஒருவேளை
எரிந்துவிட்டால் நல்லதல்ல. அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டுவிடக்கூடாது
என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, இங்கே பல பிரச்சினைகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.
அவைகளுக்கெல்லாம் கேள்வி பதில்களாகவேகூட சொல்லிவிட முடியும்.
சொல்ல வேண்டுமென்றால் பின்னாலே சொல்லத் தயாராக இருக்கிறேன்.
முக்கியமான ஒன்றை மட்டும் இப்போது குறிப்பிட விரும்புகிறேன்.
சுற்றுப்புற சூழ்நிலை சுகாதாரம் இருக்கிறதே அது மிகப் பெரிய ஆபத்தான
ஒன்று. நான் இங்கே இந்த நேரத்தில் தொலைக் காட்சி நிலையத்தைப்
பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அண்மையில் ஒரு நாள் எனக்கு நேரம்
கிடைத்த காரணத்தால் டி.வி.-யைப் பார்த்தேன். அதில் தோல் பதனிடும்
தொழிற்சாலைகளிலிருந்து வருகிற கழிவுநீர் எப்படி பாலாற்றைக் கடந்து,
யாருக்கும் பயன்படாமல், அங்கே இருப்பவர்கள்கூட குடிக்கக்கூட தண்ணீர்
இல்லாமல் கஷ்டப்பட செய்திருக்கிறது என்பதையெல்லாம் தெளிவாகக்
காட்டினார்கள். நல்ல காட்சிகளோடு காட்டியிருந்தார்கள். அதன் விளைவைப்
பற்றிக் குறிப்பிடும்போது, உண்மையாகவே தெளிவாக உச்சரித்துச்
சொன்னார்கள். அதாவது "சொற் குற்றம், பொருள் குற்றம்" என்பார்களே
அதெல்லாம் இல்லாமல் "ல ள", "ழ ள", "ர ற" என்ற இடையினம்,
மெல்லினம் என்ற குற்றங்கள் எதுமில்லாமல் சொன்னார்கள். சில சமயங்களில்
சண்டை போடுவதுபோல் உச்சரிப்பார்கள். இங்கே அமைச்சர்கள்கூட சில
நேரங்களில் தவறு செய்கிறார்கள். நான்கூட தவறு செய்கிறேன். திருத்திக்
கொள்கிறேன். அப்படிப்பட்ட தவறு இல்லாமல் அதில் உச்சரிக்கப்பட்டது.
எனவே அதைப்போன்ற படங்களை மக்கள் பார்த்தால் நல்லது என்று கருது
கிறேன். நான் இங்கே ஒன்றை வற்புறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.
நாங்கள் எவ்வளவு தூரம் பொறுத்துக்கொள்ள முடியுமோ அந்த அளவுக்கு
பொறுத்துக் கொண்டுவிட்டோம். எந்த அளவுக்கு விட்டுக் கொடுக்க முடியுமோ
அந்த அளவுக்கு விட்டுக் கொடுத்துவிட்டோம். இதெல்லாம் ஏனென்றால்
தொழிற்சாலையை மூடிவிடு என்று சொல்லுவதற்கு அதிக நேரம் ஆகாது;



1984 பிப்ரவரி 23] [டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்]

மக்கள் நலனைக் காக்க, ஆயிரக் கணக்கான, பத்தாயிரக் கணக்கான, லட்சக் கணக்கான மக்களுடைய சுகாதாரத்தைக் கெடுக்காதீர்கள், அவர்களையெல்லாம் வாழவிடுங்கள் என்று சொல்லி தடுத்துவிடலாம். ஆனால், அந்தத் தொழிற்சாலையை மூடிவிட்டால் அங்கே வேலை செய்யும் தொழிலாளர் நிலைமை என்ன? அவர்களுக்கு வேறு ஒரு பாதுகாப்பை உருவாக்கிக் கொடுக்கவேண்டியது எங்கள் கடமை. அதற்கான நடவடிக்கை எடுக்க முடியவில்லை. தற்போது அந்தத் தொழிற்சாலைகளின் சொந்தக்காரர்களுக்குள்ள பாதுகாப்பே, தொழிலாளர்களுக்கு வேலை போய்விடும், ஆகவே எந்த நடவடிக்கையும் எடுக்க மாட்டார்கள் என்ற துணிச்சல்தான். எனவே அவர்களும் நாளைத் தள்ளிக் கொண்டே போகிறார்கள். ஆனால் அதற்கும் ஒரு எல்லை உண்டு என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். அதை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவோம். அதையும் விரைவில் கொண்டு வருவோம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, விவசாயிகளைப்பற்றிப் பேசுகிறார்கள். "விவசாயிகளுக்கு என்ன செய்தீர்கள்? ஏன் செய்யவில்லை?", என்றெல்லாம் குற்றம் குறை சொல்ல வேண்டியதுதான். அது நமது கடமைதான். அதற்காகத்தான் நாம் இங்கே வந்திருக்கிறோம். ஆனால் குற்றம் சொல்லும்போது தயவுசெய்து நாம் மனதில் ஒன்றை வைத்துக் கொள்ள வேண்டும். நான் ஒன்றைச் சொல்வதற்காக யாரும் தவறாக நினைக்க வேண்டாம். எங்கள் ஆட்சி வருவதற்கு முன்னால் இருந்த ஆட்சியினர் எத்தனை கோடி ரூபாயை வஜா செய்தார்கள்? எத்தனை கோடி

(நண்பகல் 12-00)

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

ரூபாயை விட்டுக் கொடுத்தார்கள் கடனில்? மேலும் மேலும் ஐந்தாண்டு, மூன்றாண்டு, இரண்டாண்டு என்று தள்ளிக் கொண்டே வந்து வட்டிக்கு மேலே வட்டி என்று அதிகப்படுத்தச் செய்தார்கள். அவ்வப்போது மக்களைத் திருப்தி செய்து, நாங்கள் விவசாயிகளுக்கு உதவுகிறோம் என்று கடனைத் தள்ளிப் போட்டார்கள். ஆரம்பத்திலேயே அந்தக் கடனைத் தீர்த்திருந்தால், இன்றைக்கு இவ்வளவு பெரிய சுமை அவர்களுக்கு இருந்திருக்காது. அப்படியும் நாங்கள் செய்தோம். செய்த பிறகு அங்கே அனுமதி இல்லை. மாண்புமிகு துணைத் தலைவர் ஒரு கருத்தை இங்கே சொல்லியிருக்கிறார். இந்த வங்கியிலே உச்சவரம்பு வைக்காமல் எவ்வளவு வசூல் ஆகிறதோ அந்த அளவிற்குக் கடனை வாங்கி, கடனைக் கொடுங்கள் என்ற கருத்தைச் சொன்னார்கள். நாங்கள் 40 சதவிகிதம் என்று வைத்திருப்பதை 20 சதவிகிதம் ஆகக் குறைத்துக்கொள்ளுங்கள் என்று கேட்டதற்கு வங்கி ஒத்துக்கொள்ளவில்லை. இதைவிட ஓர் அரசு என்ன செய்ய முடியும்? நாம் தனி ஆள் அல்ல.

இது பிரிவினை கேட்கும் நாடு அல்ல. இந்த எண்ணமே இல்லாத மக்கள் நாம். அந்த எண்ணத்தைத் தூக்கியெறிந்துவிட்டு வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்த அளவில் நாம் அவர்களைத் திரும்பத் திரும்ப "அடி மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்" என்பதைப் போல பத்துக் கும்பிடு போட்டால் பணம் கொடுக்க மாட்டார்களா என்று எதிர்பார்த்துக் கேட்டோம். சச்சரவு களுக்குக் கொண்டு போகக் கூடாது, சச்சரவுகளால் பயன் இல்லை என்பதால் இப்படிச் செய்தோம். அவர்களையும் மக்கள் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள், நம்மையும் மக்கள் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அவர்களும் அரசை நம்ப வேண்டும். இது நியாயம்தான் என்று நம்பி இந்தச் சூழ்நிலையில் ஒத்துழைக்க வேண்டும். இங்கே ஒரு வம்பு இருக்கிறது. யாராவது ஒரு பிரிவினருக்கு நன்மை செய்கிறோம் என்று சொல்லிவிட்டால் "அவர்களுக்கு நன்மை செய்தீர்கள், எங்களுக்கு ஏன் செய்யவில்லை?" என்று கேட்க ஆரம்பித்து விடுகிறார்கள். இதற்கு முடிவு இருக்காது. ஓரளவிற்கு விலைவாசிகள் உயரும் போது, அவர்களுக்குப் பாதி விலையில் கொடுக்கலாம், அவர்களுக்குச் சம்பளம் குறைவு, அவர்கள் இலஞ்சம் வாங்குகிறார்கள் என்ற குற்றச்சாட்டு இருக்கிறது, அதைத் திருத்த வேண்டும், அவர்களுக்குக் கெட்ட பெயர் வராமல் இருக்க வேண்டுமென்றால், அவர்களுடைய தேவையைப் பூர்த்தி செய்தால், அந்தக் குற்றங்களிலிருந்து அவர்கள் விடுபடுவார்கள் என்ற நம்பிக்கையை முன்வைத்துச் செய்தோம். இப்போது என்ன நிலைமை இருக்கிறது? விவசாயி களுக்கும் பாதி விலையில் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். அவர்கள் 25 ஆயிரம் பேர், இவர்கள் ஒன்றரை கோடி. அப்ராக்சிமேட்டாகச் சொல்லு கிறேன், அவர்களுக்கே ஒரு கோடி என்றால் இவர்களுக்கு எத்தனை கோடி ஆகும்? அதற்கு நாம் எங்கே போவது? 25 ஆயிரம் பேருக்கு ஒரு கோடி ரூபாய் என்றால், ஒன்றரை கோடி பேருக்கு எத்தனை கோடி? இப்போதே நாம் என்ன செய்கிறோம்? நியாய விலைக் கடைகள் சரியாக நடைபெற வில்லை, அங்கே திருட்டு நடக்கிறது என்று சொன்னாலும்கூட, பல கோடி ரூபாய்களை இழந்து நாம் இந்த நியாய விலைக் கடைகளில் விற்றுக் கொண்டிருக்கிறோம். ரூபாய் 1.75 ரூபாய் 2.00, ரூபாய் 2.15 என்று அரிசியைக் கொடுக்கும்போது, சுமார் ரூபாய் ஒரு கோடியே பத்து இலட்சம் இழப்பு வருகிறது என்று நினைக்கிறேன். இருந்தாலும் அதைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் திரு. இராமமூர்த்தி அவர்கள் அங்கே தவறுகள் நடக்கின்றன என்று சொன்னார்கள். கடைக்காரர்கள் என்ன செய்கிறார்கள்? கார்டுகளை வாங்கிக்கொண்டு கடன் கொடுக்கிறார்கள். இந்தக் கார்டுகளை எப்படிப் பயன்படுத்துகிறார்கள்? அவர்களுக்கு என்ன லாபம் வருகிறது? பணம் கடன் கொடுக்கிறார்கள். நகையை வைத்துக்கொண்டு, சொத்துக்களை வைத்துக்கொண்டு கடன் கொடுக்கிறார்கள். உணவுக்குத் தேவையான குறைந்த அளவு வாங்கக்கூடிய



அதிகாரம் பெற்ற கார்டுகளை வாங்கி வைத்துக்கொண்டு அதற்குப் பணம் கொடுக்கிறார்கள். நியாய விலையில் வாங்கி அதிக விலையில் விற்கிறார்கள் என்று பொருள். இது அநியாயம், நடக்கக் கூடாது. நடவடிக்கை எடுத்தால் வியாபாரிகள் மேல் ஏதோ கோபம், அதற்காக இந்த அரசு பழிவாங்குகிறது என்று சொல்கிறார்கள். அதிலே குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்த கடைக்காரர்கள் சிக்கியிருந்தால், அந்த சாதியைப் பழிவாங்க நடவடிக்கை எடுக்கிறார்கள் என்று சொல்லி அதற்காக ஒரு போராட்டம் நடத்துகிறார்கள். ஒரு மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தால், அந்த மதத்தை அழிக்க இதைச் செய்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். உண்மையிலேயே சொல்லுகிறேன், இந்த ஆட்சி முஸ்லீம் மக்களுக்கு எதிராக இருக்கிறது என்று பிரச்சாரம் செய்கிறார்கள். எவ்வென்று கேட்டால், மத மாற்றத்திற்குப் போகிறவர்கள், மதம் மாறுகிறவர்கள், இந்து முன்னணி, ஆர்.எஸ்.எஸ். என்ற பெயரிலே மத உணர்வில் இருக்கிறார்களே, அது தவறு என்று சொல்லும்போது, பிரச்சினைகள் எழுந்தால் தடை செய்கிறோம். அதற்குரிய எண்ணங்களைச் சொல்லுகிறோம். எங்கேயாவது இந்த அரசு தவறிற்று, மதம் மாறியவர்கள் மீண்டும் பழைய மதத்திற்குப் போகவேண்டுமென்று சொன்னதாகவோ, வற்புறுத்தியதாகவோ ஒரு நிகழ்ச்சியையாவது யாராவது சுட்டிக்காட்ட முடியுமா என்றால், இதுவரையில் சொல்லவில்லை. அரசு பாரபட்சமாக இருக்கிறது என்று பொதுவாகச் சொல்லலாம். சாப்பாடு எப்படி இருந்தது? "நல்லா இல்லை; எது நல்லா இல்லை? சாம்பார் நல்லா இருந்தது, அந்தக் காய் கறி கூட்டு நல்லா இருந்தது, பாயசம் நல்லா இருந்தது. எது நல்லா இல்லை? எப்படியோ சாப்பாடு நல்லா இல்லை". இப்படிச் சொல்கிறவர்களை நாம் என்ன சொல்ல முடியும்? கிறிஸ்தவர்கள் பெயர்களை ஏதோ வைக்கக் கூடாது என்பதற்காக நாங்கள் மாற்றி விட்டோம் என்று ஒரு கேள்வி அவர்கள் கேட்டார்கள். எனக்குத் தெரியாது. உடனே ஒரு மதத் தலைவர் பெயரை மாற்றுவது மரியாதை அல்ல என்று சொன்னார்கள். நியாயமாக இருந்தது. திரும்ப அந்தப் பெயரை வைத்தோம். உடனே "கூடாது அதே பெயரை வை; நீ கிறிஸ்தவர்களுக்குச் சாதகமாக இருக்கிறாய்; ஏனென்றால் ஓட்டுக்காக அப்படிச் செய்கிறாய்" என்று சொன்னார்கள். இப்படிச் சொன்னால் எந்தக் காரியத்தையும் நான் செய்ய முடியாது. இங்கே இருக்கின்ற உறுப்பினர்கள் ஏதோ ஒன்றிரண்டு பேர் தனித் தனியாக வந்திருக்கலாம்; அரசியல் கட்சியின் பெயரால் தனியார்களுக்காக மற்ற எண்ணத்தோடு வந்திருக்கிறவர்கள் எல்லாம் கடைப்பிடிக்க இதைச் சொல்ல ஆரம்பித்தோ மானால், நாம் மக்களிடம் போக முடியாது. ஏன் தனியார் துறைக்கு முக்கியத்துவம் காட்டப் பார்க்கிறீர்கள் என்ற எண்ணம் சொல்லப்படுகிறது. இங்கே மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் திரு. இராமமூர்த்தி அவர்கள் கூடச் சொன்னார்கள். பஸ்களை தேசியமயமாக்குவதை, ஒரு மாவட்டத்

இல்லாவது முழுக்கச் செய்துவிடுங்கள் என்று சொன்னார்கள். ஆனால் நல்ல எண்ணத்தோடு சொல்லியிருக்கிறார்கள். இதை எவ்வளவோ பாராட்டுகிறேன் என்று சொன்னார்கள். நான் வரவேற்கிறேன். என் உள்ளத்தில் அது இல்லாமல் இல்லை. எங்களுடைய கொள்கை "தேசிய உடைமையாக்க வேண்டும். அதாவது பெரிய தொழிற்சாலைகளை எல்லாம்" என்பது. அதற்கு பணம் வேண்டும். வசதிகள் வேண்டும். அதோடு மாவட்டம் என்று சொல்லி விட்டால் அவ்வளவுதான்,—அந்த மாவட்டத்தில் பெரும் பான்மையாக எந்தப் பிரிவைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்களோ அவர் களுக்கு எதிராக இந்த அரசு நடவடிக்கை எடுக்கிறது என்று சொல்வார்கள். இல்லை அங்கே ஒரு கட்சிக்குச் சார்பாக, கட்சியிலே இருக்கின்றவர்கள் அந்தப் பேருந்துகளை நடத்துவதாக இருந்தால் உடனே அவர்களை ஒழிப்பதற்காக இந்த ஏற்பாடு நடக்கிறது என்று சொல்வார்கள். அதற்காகத்தான் 5 பஸ்களுக்கு மேல் இருப்பதை எடுப்பதென்ற எண்ணத்தை நாம் கொண்டு இருக்கின்றோம். கம்யூனிஸ்ட் நண்பர்கள் கூட அங்கேயும் சொன்னார்கள்; இங்கேயும் சொல்லியிருக்கிறார்கள்; நியாயம். ஆனால் தேசியவுடைமை என்பதைச் செய்ய வேண்டும் என்பது ஒரு கொள்கை. எந்தக் கொள்கைக்கும் சில விதி விலக்கு தேவைப்படுகிறது. எந்த எந்த நேரத்தில் எந்த எந்த வசதிகளை வைத்து அரசு எதை முன்னால் செய்ய வேண்டும்; எதைப் பிறகு செய்யலாம் என்கிற வகையில், சிந்தித்துப் பார்த்துச் செய்ய வேண்டியிருக்கிறது. நாளையதினமே உத்தரவுபோட்டு. உங்கள் எல்லோருடைய பாராட்டையும் பெற்று, "எல்லா இடங்களிலும் தேசியமயம் ஆக்கிவிட்டோம்; பேருந்துகளை எல்லாம் அரசுடைமை ஆக்கிவிட்டோம்" என்று சொல்லி விடலாம். நடத்த வேண்டாமா? பேருந்துகள் எப்படி இருக்கின்றன என்பது தெரியும். வசதிகள் எப்படி இருக்கின்றன என்பது தெரியும். எவ்வளவு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்பது தெரியும். இவைகளையெல்லாம் நினைத்துப் பார்க்கும்போது, நான் உங்களைப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்—எண்ணம் உண்டு; நேர்மை உண்டு; அதிலே நமக்கு எந்த விதமான ஆட்சேபணையும் இல்லை. ஆனால் காலம் கருதி நாம் அதைக் கொஞ்சம் தள்ளிப் போடவேண்டியவர்களாக இருக்கின்றோம். நிர்வாகச் சிக்கல் எல்லாம் வரும்; ஆனால் நிறைவேற்றுவது என்பது எளிதான காரியம் அல்ல. நமக்கு பணம் தேவைப்படுகிறது.

250 கோடி, 260 கோடி ரூபாய் எல்லாம் செலவு செய்து, தன்னிறைவுத் திட்டத்தை நிறைவேற்றி, நாம் 3 ஆண்டுக் காலம் உழைத்து, அந்த 3 ஆண்டுக் காலம் செலவிட்ட பணம் அவ்வளவும் பெருவாரியாக, இந்த வெள்ளத்திலே போய்விட்டது. இங்கே கூட திருவான்மியூர் பகுதி என்று நினைக்கிறேன், பாதையை வெட்டி விட்டார்கள். தங்களுக்கு ஆபத்து வந்துவிடும், தங்கள் வீடுகளுக்குள் வெள்ளம் வந்துவிடும் என்று அதை



வெட்டி விட்டு, சைக்கிள் போகக் கூட முடியாத அளவிற்கு அவ்வளவு அகலமான ஒரு குழியைத் தோண்டிவிட்டதைப் போல தெரிவித்தார்கள். இவைகளையெல்லாம் படங்களில் பார்க்கிறோம்; சில ஏடுகளில் விளம்பரப் படுத்துகின்றார்கள்; அது எங்களுக்கு உதவியாகவும் இருக்கிறது. அதிகாரி களுக்குக் கொஞ்சம் கஷ்டமாகவும் இருக்கிறது.

(பிற்பகல் 12-10)

முதன் முதலில் 3 ஆண்டுகளுக்கு முன், இந்த ஆட்சி 'டிஸ்மிஸ்' செய்யப் படுவதற்கு முன், 150 வார்டுகளுக்கு கவுன்சிலர்களைத் தேர்ந்தெடுக்க முடிய வில்லை. ஆகவே அவர்களுக்குப் பதிலாக 150 அதிகாரிகளைப் போட வேண்டும். அவர்களை வைத்து அந்தப் பணிகளை எல்லாம், சிந்தித்துப் பார்த்து செயல்படச் செய்து, அதைப்பற்றி அரசுக்குத் தகவல் கொடுக்க வேண்டும் என்கிறோம். இரண்டு மூன்று அதிகாரிகளை மாற்ற வேண்டி வந்துவிட்டது; ஸ்பெஷல் ஆபீசரையே மாற்ற வேண்டி வந்துவிட்டது. குற்றவாளிகள் குற்றம் செய்தால் கவனிக்கவில்லை என்பதால்தான். இன்னும் கொஞ்சம் சிறப்பாக நியமிக்கலாம் என்கிற எண்ணத்திலே நியமிக்க வேண்டு மென்று சொல்கிறார்கள். நாங்கள் போய் பார்த்த பிறகு, அதாவது அமைச்சர் போனார்கள். அவர்கள் போய்ப் பார்த்த பிறகு, என்ன நிலைமை என்று சொல்ல விரும்புகிறேன். எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை, எவ்வளவு தீவிரமாகச் செயலாற்ற வேண்டுமோ அதற்கு ஏற்பாடு செய்வதற்கு முன் வந்திருக்கின்றோம் முதல்படியாக நாங்கள் சொல்லி ஒரு கலை நிகழ்ச்சி நடத்தி, அந்தப் பணிக்கு வசூல் செய்வதாகச் சொல்லி வசூல் செய்யப்பட்டிருக்கிறது. 30 லட்சம் ரூபாய் சென்னை நகரத்திலே வசூல் செய்திருக்கிறார்கள். என்னென்னமோ குற்றம் சொன்னார்கள். முதல் அமைச்சர் மீது குற்றம் சாட்டியிருக்கிறார்கள். என்னென்ன அநியாயங்கள், அக்கிரமங்கள்—இதையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அந்த வார்த்தை களைத் தொகைப்படுத்தி வைத்துக்கொண்டு அதையே ஒரு 'மனு' மாதிரி படித்துவிட்டிருக்கிறார்கள். அதிலே ஊழல், இதிலே ஊழல் என்று எல்லாம் சொல்வார்கள். ஆனால் அந்த 30 லட்சம் ரூபாயை உடனடியாக எங்கெங்கே அவசரத் தேவையிருக்கிறதோ அங்கேயெல்லாம் பயன்படுத்த வேண்டிய நிலை யிலே இருக்கிறோம். அது பாதையானாலும் சரி, விளக்குக் கம்பமானாலும் சரி. அல்லது வீடுகளானாலும் சரி. இவைகளையெல்லாம் சீர்செய்வதற்கு முதல் அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. நிகழ்ச்சி இனிமேல்தான் நடைபெறப் போகிறது. தவறாக எண்ண மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். அரசு இப்படியெல்லாம் செய்யும்போது மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் மாட்டைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். மாடுகளை குடிசைப் பக்கத்திலே கட்டி வைக்கின்றார்கள். அவைகளையெல்லாம் தனி

யாக வைக்க வேண்டும். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அவைகளை ஊருக்கு வெளியே வைக்க வேண்டும். அதைப் பற்றி நான் இப்போது சொல்ல மாட்டேன் என்றும், தேர்தலைப் பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் தேர்தலை எண்ணி காரியங்களை ஆற்றுவது, குடிசைகளைப் பிரிக்காமல் வைப்பது என்பது முடியாது. குடிசைப்பகுதிகளைப் பிரித்து அங்கே கட்டிடங்கள் கட்டுகிறோம், அதிலே இடம் தருகிறோம் என்று சொல்லி வாக்குகளை, வோட்டுகளைக் கேட்டு வாங்கும் எண்ணத்தோடு, எதையும் சொன்னால் லாபம் கிடைக்கும் என்கிற எண்ணத்தோடு நாங்கள் செய்யவில்லை. மக்களுக்குத் தேவையிருந்தால், எங்களுக்கு வாக்களிக்க அவர்களுக்குத் தோன்றும். எங்கள் தொண்டு தேவையில்லை என்றால் வாக்கு அளிக்க வேண்டாம். அது அவர்களுடைய இஷ்டம் என்றுதான் நாங்கள் செய்வோம். சொன்ன வார்த்தையை நாங்கள் நினைத்து. நிலைமைகளைச் சிந்தித்துப் பார்த்துச் செய்வோம். எதைச் செய்தால் சரியாக இருக்கும் என்று கருதுகிறோமோ, அதைத்தான் நாங்கள் செய்கிறோம். ஆகவே தேர்தலை முன்வைத்து நாங்கள் திட்டமிடுவதில்லை. அப்படி எதிலும் அக்கறை காட்டுவதில்லை. நாங்கள் தேர்தலின்போது என்ன சொன்னோமோ அவைகளுக்கு, சொல்லாமல் விட்டிருந்தாலும் அவைகளுக்கு. நல்ல காரியங்களுக்கு, முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்ற அளவில், நாங்கள் காரியமாற்றக் கடமைப்பட்டிருக்கிறோமே தவிர வேறல்ல. தேர்தலைப்பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. தேர்தலைப்பற்றிக் கவலைப்பட்டாலும் மக்கள் யாருக்கு வாக்கு அளிக்க வேண்டுமென்று விரும்புகின்றார்களோ அவர்களுக்குத்தான் போடுவார்கள். இந்த ஒரு காரியத்திற்காக மட்டும் அவர்கள் எங்களுக்கு வாக்களித்து விடுவார்கள், இந்தக் காரியத்தைச் செய்யாவிடில் வாக்களிக்க மாட்டார்கள் என்ற அச்சமோ, நம்பிக்கையின்மையோ எங்களுக்கு இல்லை. எனக்கு விவரம் தெரிந்ததிலிருந்து சொல்கிறேன். எத்தனையோ வருடங்களாகத் தேர்தல் நடக்கிறதைப் பார்த்துப் பார்த்து பழக்கப்பட்டுப் போன எம்.ஜி.ஆர். வெற்றியைப் பற்றியோ, தோல்வியைப் பற்றியோ, அதிக எண்ணிக்கை, என்றோ கவலைப்படுவதற்கில்லை. 200-க்கு மேற்பட்ட இடங்களில் போட்டி போட்டு 126 பேர்கள் வந்தோம். 175க்கு மேல் போட்டியிட்டு 128 பேர்கள் வந்தோம். அதிகமாகவே வந்துவிட்டது. மக்கள் எங்கள் மேல் கொண்டிருக்கக்கூடிய நம்பிக்கையிலேதான் இருக்கிறோமே தவிர வேறல்ல. இவர்கள் இருந்தால், இன்றைக்கு முடியாவிட்டாலும் நாளைக்குச் செய்வார்கள் என்ற நம்பிக்கை அவர்களிடத்திலே இருந்தால், அதற்காகப் போடுவார்கள்.



மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் சத்துணவுத் திட்டம் பற்றிச் சொன்னார்கள். 'பாப்புலிஸ்ட் ஸ்கீம்' என்று சொல்லி, 'மக்களிடத்திலே ஏமாற்றுகின்ற மாதிரி' என்ற அளவில் சொல்லியிருக்கின்றார்கள். அவர்கள் 'பாப்புலிஸ்ட் ஸ்கீம்' என்று சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. ஆ. நல்லசிவன் :** கவர்னர் அவர்கள் உரையிலே, அடிப்படைப் பிரச்சினைகளைத் தொடாமல், அடிப்படைப் பிரச்சினைகள் பற்றி, விஷயங்களைப் பற்றி மாநில அரசுக்கும் மத்திய அரசுக்கும் இடையிலே உள்ள நிலைமைகளைப்பற்றிக் குறிப்பிடாமல், சத்துணவுத் திட்டம் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். நான் சத்துணவுத் திட்டத்தைப் பற்றிச் சொல்லும்போது, நான் கூட ஆதரிக்க விரும்புகிறேன் என்று சொன்னேன். இந்தக் குடை கொடுப்பது துணி கொடுப்பது என்பது, எதை மக்களுக்குக் கொடுப்பது, அதை நாங்கள் விரும்புகிறோம் என்று சொன்னேன். ஆனால் இந்தப் பிரச்சினைகள் மூலமாக மட்டும் மக்களுடைய அடிப்படைப் பிரச்சினைகள் தீர்ந்துவிடுமா என்றுதான் கேட்கிறேன். நான் 'பாப்புலிஸ்ட் ஸ்கீம்' என்று பேசும்போதுகூட அந்த அடிப்படைப் பிரச்சினைகள் விஷயமாக ஏன் பேசமாட்டேன் என்கின்றார்கள் என்றுதான் கேட்டேனே தவிர, வேறு ஒன்றுமில்லை. இந்த அடிப்படை விஷயத்தைப்பற்றிச் சேர்த்துச் சொன்னால் எங்களுக்குத் திருப்தியாக இருக்கும் என்பதற்குத்தான் நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அடிப்படைப் பிரச்சினை என்பது வயிற்றுப் பிரச்சினை என்னைப் பொறுத்தவரைக்கும். என்னைப் பொறுத்தவரையில் உணவுப் பிரச்சினை, உறையுள் பிரச்சினை, வேலை பிரச்சினை என்பவை அடிப்படைப் பிரச்சினைகளாகும். இவைகளை எப்படிப் பெறுகிறோம் என்பது குறித்து விவாதங்களாக வருகிறபோது பலவிதக் கருத்துக்கள் இருக்கலாம். மத்திய அரசிடம் எவ்வளவு கேட்டிருக்கிறாய்? எவ்வளவு பெற வேண்டுமோ அதைப் பெற்றாயா என்று கேட்பது வேறு. இதைச் செய்கிறாயே, இந்த நஷ்டத்தை ஈடுகட்ட என்ன செய்யப் போகிறாய் என்று கேட்பது வேறு. ஆனால் தமிழர்களுக்காகவே வாழ்கின்ற தமிழ்த் தலைவர்கள் சிலர் சத்துணவுத் திட்டத்தையே பிச்சைக்காரத் திட்டம் என்று சொன்னவர்கள் இருக்கிறார்கள். இந்த சத்துணவுத் திட்டமே கூடாது என்று சொன்னவர்கள் இருக்கின்றார்கள். சென்னையிலே நடந்த பொதுக்கூட்டத்திலே இதைப் பேசியிருக்கிறார்கள். சத்துணவுத் திட்டம் போல மக்களை சோம்பேறியாக்கும் திட்டம் வேறு இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி உறுப்பினர் அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். நான் நன்றி கூறுகிறேன். இப்படிப் பாராட்டுகின்ற உறுப்பினர் அவர்கள் சில சமயங்களில் அவர்களோடெல்லாம் சேர்ந்து செய்யும்போது. . .

[1984 பிப்ரவரி 23

(திரு. ஆ. நல்லசிவன் எழுந்தார்).

கமாதான் போட்டிருக்கிறேன். முற்றுப்புள்ளி வைத்ததும் சொல்லலாம்.
நல்லவேளையாக நேற்றையதினம் பத்திரிக்கையிலே பார்த்தேன். "இது
தேர்தல் கூட்டணி அல்ல, இந்தப் பிரச்சனைகளை அணுகும்போது எப்படி
அணுகவேண்டுமென்பதற்காக நாங்கள் ஒன்று சேர்ந்திருக்கிறோம்" என்று
சொல்லியிருக்கிறார்கள். அதற்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
ஆனாலும், மக்களிடம் போகும்போது அவர்கள் அப்படிப் பேசினார்களே
என்பதுதான் நிற்குமே தவிர, உறுப்பினர் அவர்கள் வரவேற்றிருக்கிறார்கள்
என்பது மக்களுக்குத் தெரியாமல் போய்விடும், அதில் கொஞ்சம் எச்சரிக்கை
யாக இருக்க வேண்டுமென்பதற்காக இதைச் சொல்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு தலைவரவர்களே, மத்திய அரசு செய்
திருக்கும் நல்ல காரியங்களைப் பாராட்டியிருக்கிறார்கள். மத்திய அரசு
மாநில அரசுகளுக்குத் தாராதிருப்பதைக் கேட்டிருக்கிறார்களா? ஆனால்
ஸ்ரீலங்கா பிரச்சினையிலும் மத்திய அரசுடன் சேர்ந்திருப்பதன் காரணமாக
மற்ற கொள்கை அடிபட்டுப் போய்விடுமா? போய் விடாது. மாநில அரசுக்குத்
உங்கள் தனிக்கொள்கை போகவில்லை என்பதை ஞாபகப்படுத்த விரும்பு
கிறேன். ஆகவே உறுப்பினர் அவர்களுடைய கட்சி போன்ற பெரிய கட்சிகள்
கூட மற்ற கட்சிகளுடன் சேரவேண்டிய அவசியம் இருக்கிறது. அதைப்போல
எங்களைப் போன்ற சிறிய கட்சிகளும் சில பொதுவான கோரிக்கைகளுக்காக
சேர வேண்டியிருக்கிறது. நான் கேட்ட ஒரு கேள்விக்கு மாண்புமிகு
முதல்வரவர்கள் பதில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நானும் அடிப்படைப் பிரச்சினை உணவுப் பிரச்சினை என்றுதான் சொல்
கிறேன். உணவுப் பிரச்சினையில் தமிழ் நாட்டில் ஒரு குடும்பத்திற்கு மாதத்
திற்கு 20 கிலோ அரிசி போடுவதற்கு அரிசி கொடுக்கவில்லையே. அதைப்பற்றி
ஆளுநர் உரையிலே ஒன்றும் கூறப்படவில்லையே. அரிசி தரவில்லை என்று
கண்டன வார்த்தை கூட வேண்டாம். தர மறுக்கிறார்களே. அதனால்தான்
ஆறு கிலோ அரிசிதான் போட முடிகிறது, நான்கு கிலோ அரிசிதான் போட
முடிகிறது என்ற உண்மையைச் சேர்த்துச் சொல்ல மாட்டேன் என்கிறார்களே
என்பதுதான் நான் கேட்ட விஷயம்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு மேலவைத்
தலைவரவர்களே, உண்மையை மறைத்துப் பேசி, பொய்மையை உண்மை
யாக்க விரும்புகிறவர்கள் நட்பை உறுப்பினர் அவர்கள் பெற்றிருப்பதால்தான்
எங்கள் உண்மையான நிலைமையை உறுப்பினர் அவர்கள் உணரவில்லை
என்று கருதுகிறேன். எத்தனை முறை சட்டசபையிலும், மேலவையிலும்





எந்தக் குறைகளை எடுத்துச் சொல்ல முடியுமோ சொல்லியிருக்கிறோம்.
நாங்கள் பொது அமைப்பிற்கு அரிசி கொடுப்பதில்லை என்று சொல்லிவிட்டார்
களே, அது உண்மை இல்லை என்பதற்காகத் தான் உண்ணாவிரதம் இருக்கப்
போகிறேன் என்று சொன்ன இடம் இந்த மேலவை. தயவுசெய்து அதை
மறந்து விட வேண்டாம். சொல்ல வேண்டிய இடங்களில் சொல்லியிருக்
கின்றோம். திரும்பத் திரும்ப அதைச் சொல்லுவதைவிட புதிதாக ஏதாவது
செய்வோமானால், அதைச் சொல்வோம் என்று தான் அதைப் பயன்படுத்தி
யிருக்கிறோமே தவிர, நாங்கள் சொல்லுகின்ற, எங்களுக்குத் தேவை என்று
வருகின்றவைகளை நாங்கள் மறைப்பதில்லை; மறைக்கப் போவதுமில்லை.
சட்ட சபையிலே என்னுடைய பதிலை உறுப்பினர் அவர்கள் படித்திருப்பார்
களேயானால், எவ்வளவு தீவிரமாக விஷயங்களை நான் சொல்லியிருக்கிறேன்
என்பதை அவர்கள் கவனிக்க முடிந்திருக்கும்.

இன்னொன்று நான் சொல்ல வேண்டும். கல்கத்தாவிலே நடந்த
மாநாட்டிலே ஏன் கலந்துகொள்ளவில்லை என்றும், காங்கிரஸ் கட்சிக்கு
எதிராக நடக்கும் மாநாட்டில் காங்கிரஸ் அமைச்சர்களைக் கூப்பிடுவது
என்ன நியாயம் என்றும் கேட்டிருக்கிறார்கள்.

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு தலைவரவர்களே, இந்தக் கேள்வியை
ஏற்கெனவே பேரவையிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள்
கேட்டார்கள். 'நீங்கள் ஏன் ஸ்ரீநகருக்குப் போகவில்லை? ஏன் கல்கத்தா
வுக்குப் போகவில்லை?' என்று கேட்டார்கள். "அங்கே காங்கிரஸ்
அல்லாத முதலமைச்சர்களை மட்டும் அழைக்கிறீர்கள், காங்கிரஸ் அமைச்சர்
களையும் அழைக்கவேண்டும்" என்று கேட்டதற்குச் சொன்னார்கள்.
"அப்படி காங்கிரஸின் கொள்கைகளை எதிர்த்துப் போராடும்போது,
காங்கிரஸ் முதலமைச்சர்களையே அழைத்து அங்கே அவர்களோடு சண்டை
போட்டுக்கொண்டிருக்க முடியாது என்பதால், காங்கிரஸ் முதலமைச்சர்களை
அழைக்கவில்லை. காங்கிரஸ் அல்லாத முதலமைச்சர்களையும், எதிர்க் கட்சித்
தலைவர்களையும் அழைப்பதன் மூலமாகத்தான் காங்கிரஸுக்கு மாற்றான
கொள்கையை உருவாக்க முடியும்" என்று மாண்புமிகு உறுப்பினர்
திரு. உமாநாத் அங்கு சொன்னார். நானும் அதையேதான் இங்கு
சொல்கிறேன்.

(பிற்பகல் 12-20)

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : மேலவைத் தலைவரவர்
களே. சில சமயம் எவ்வளவு நல்ல அனுபவமும், அறிவும். ஆற்றலும் பெற்றவர்
களானாலும். யானைக்கும் அடி சறுக்கும் என்பதுபோல, சில சறுக்கல்கள்
வந்துவிடுகின்றன. நண்பர் திரு. உமாநாத் கேட்டார், வேறு பதில் சொன்னேன்.

அதே கருத்துள்ள ஒரு பதிலை இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நாம் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம், நிதி வசதி இவைகளையெல்லாம் வைத்துப் பேச வேண்டுமென்று விரும்புகிறோம். இதிலே காங்கிரஸ் அல்லாத மாநிலங்கள், காங்கிரஸ் மாநிலங்கள் என்று நாம் ஏன் பிரிக்க வேண்டும்? காங்கிரஸ் மாநிலங்களில் உள்ள முதல்வர்களையும் அழைப்போம். அவர்கள் வரட்டும். . . .

மாண்புமிகு தலைவரவர்களே, பேசுவதற்கு நேரம் கொடுப்பீர்கள் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு முதல்வரவர்கள் தாராளமாகப் பேசலாம்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : அவர்கள் வந்து அல்லது வர மறுத்து, நாம் கூடிப் பேசினால் ஒரு முடிவிற்கு வரலாம். எடுக்கும்போதே ஒரு முத்திரை போட்டுக்கொண்டு நாங்கள் காங்கிரஸ் அல்லாத கட்சிகளைச் சேர்ந்தவர்கள், ஒரு பகுதியைச் சேர்ந்தவர்கள்; ஆகவே நாங்கள் ஒன்று சேருகிறோமென்றால், அது எப்படி மக்களிடம் போய்ச் சேரும்; மக்கள் என்ன என்னுவார்கள்? இவர்கள் வேண்டுமென்றே கூட்டு வைத்துக் கொண்டு அல்லது மத்திய அரசோடு போராட ஒரு எண்ணத்தைக் கொள்கிறார்கள். அதுவும் கட்சிவாரியாகப் போகிறார்களே ஒழிய கொள்கை ரீதியாக அல்ல" என்ற ஒரு சந்தேகத்தை எப்படி நாம் நீக்கப் போகிறோம்?

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு தலைவரவர்களே, "காங்கிரஸ் முதன் மந்திரிகள் இப்படி அதிக அதிகாரம் கேட்பதை, நிதி அதிகாரம் கேட்பதை அந்தக் கட்சி எதிர்க்கும் என்று கருதிக்கொண்டு நீங்கள் அவர்களைக் கூப்பிட மறுக்கிறீர்களா?" என்று கேட்கிறார்கள். அதாவது 5 முக்கிய பொருள்களுக்கு விற்பனை வரி கூடாது என்ற பிரச்சினை வரும்போது, அந்தப் பிரச்சினை நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சில் விவாதத்திற்கு வரும் காலத்தில், காங்கிரஸ் முதலமைச்சர்கள் அனைவரும் விற்பனை வரியை எடுத்தால் தங்களைப் பாதிக்கும் என்று தனித்தனியாக காங்கிரஸ் அல்லாத முதலமைச்சர்களிடம் பேசும்போது சொன்னார்கள். ஆனால் பம்பாயில் நடந்த ஏ.ஐ.சி.சி. கூட்டத்திற்கு அவர்கள் வந்தபோது, இந்தப் பிரச்சினையை டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டத்தில் கிளப்பக்கூடாது என்று கட்சிக் கட்டுப்பாட்டின் மூலம் தடுக்கிறார்கள் என்ற செய்தி பத்திரிகையில் வந்தது. விற்பனை வரியை எடுக்கக்கூடாதென்று எங்கே கோர வேண்டுமோ, அந்த நேஷனல் டெவலப்மென்ட் கவுன்சில் கட்சிக் கட்டுப்பாட்டால் அவர்கள் வாயை அடைக்க



முயல்வதால், மாநில முதலமைச்சர்கள் என்று வரும்போது, காங்கிரஸ் அல்லாத முதலமைச்சர்களைக் கூப்பிட்டால்தான் இந்தப் பிரச்சினை குறித்து மக்கள் அறியும்படியாகத் தீர்மானம் போட முடியும் என்று கருதுகிறோமே தவிர, வேறு ஒன்றுமில்லை.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு நல்லசிவன் அவர்கள் ஒரு உதாரணத்தை எனக்காகச் சொல்லியதற்காக நன்றி கூறிக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் பெரிய கருத்துதான் என்னுடையது. அவர்கள் இதை ஒத்துக்கொள்ள மாட்டார்கள் என்று கருதுவதைவிட, அங்கே வந்து அவர்கள் ஒத்துக்கொள்ள மறுத்தார்கள் என்ற செய்தியை ஏன் மக்களுக்குச் சொல்லக்கூடாது? ஏன் அந்தக் குழுவிலே இருந்து அவர்கள் வெளியேறட்டுமே. அவர்களுக்கு ஏன் அந்த வாய்ப்பு தரக்கூடாது? மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள், அவர்கள் அந்தக் கவுன்சிலுக்கு வந்து, தங்களுடைய கருத்தைச் சொல்லும் போது, விற்பனை வரியை எடுக்கக்கூடாது, இருக்க வேண்டுமென்று சொன்னார்கள் என்று. பிறகு, கட்சிக் கட்டுப்பாட்டால் அவர்கள் கலங்கிவிட்டார்கள்" என்று இதை மக்களுக்குச் சொல்வது எப்போது? நீங்கள் அழைக்கின்றவர்களை அழைத்து, அவர்கள் வர மறுத்தால், அவர்கள் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள் என்பது பொருள். அது மக்களுக்குத் தெரியட்டும். அதைப்போலவே தமிழகத்திலே நடந்தாலும், எங்கே நடந்தாலும், அந்த அமைச்சர்களோ, அவர்கள் பிரதிநிதிகளோ வந்து, கருத்துக்களை ஏற்றுக்கொள்ள மறுத்து, போவார்களேயானால், அவர்கள் ஏற்க மறுக்கிறார்கள், இது நியாயமல்ல என்று நாம் சொல்லலாமே.

திரு. ஆ. நல்லசிவன்: பெங்களூரில் தென்னக முதலமைச்சர்கள் கூட்டத்தைக் கூட்டினீர்கள். அந்தக் கூட்டத்திற்கு திரு. கருணாகரன் அவர்களை அழைத்தீர்கள். அந்தக் கூட்டத்திற்கு அவர் வராதது மட்டுமல்ல, அங்கே கூடிய நீங்கள் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் மட்டுமல்லாமல் வறட்சிக் காலத்தில், வெள்ளக் காலத்தில் எல்லாம் மாநிலங்களால் தாக்குப் பிடிக்க முடியாது; ஆகவே அந்தச் செலவை மத்திய அரசு தர வேண்டுமென்று கேட்ட போது, இப்படிக் கூடிப் பேசுவது மத்திய அரசைப் பலவீனப்படுத்தலாம் என்று அறிக்கை விட்டார்கள். மத்திய அமைச்சர் திரு. ஸ்டீபன் அவர்கள், இது தேசத் துரோகம் என்று கூறினார்கள். ஆகவே நீங்கள் எடுக்கும் முயற்சிகளை எல்லாம் காங்கிரஸ் கட்சியும், காங்கிரஸ் முதலமைச்சர்களும் பகிரங்கமாகப் பழிக்கும்போது, அதைப்பற்றி நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு தலைவரவர்களே, எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்பதுபற்றிக் நாம் கவலைப்படத் தேவையில்லை. நாம் என்ன செய்கிறோம் என்பதைப்பற்றித்தான் நாம் பரிசீலிக்க வேண்டும். இறுதிவரையில் நாம் ஒன்றாக இருந்து. இந்த முயற்சியில் நாம் முன்னேற்றம் அடைவதற்கு முயற்சி எடுக்க வேண்டுமென்ற முடிவில் நாம் செயல்பட்டால், அவர்கள் எத்தனை நாளைக்கு இதை மதிக்காமல் இருக்க முடியும்? . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** முதலமைச்சர் அந்த அவைக்குச் சென்று திரும்ப வேண்டியிருப்பதால், அவை நிகழ்ச்சிகளுக்கு 15 நிமிடங்கள் இடைவெளி விடப்படுகிறது.

(20 நிமிடங்களுக்குப் பிறகு)

(பிற்பகல் 12-45)

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** ஒத்திவைக்கப்பட்ட அவை மீண்டும் தொடரும். முதலமைச்சரின் உரை முடியும்வரை அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, ஒரு நெருக்கடியான நிலைமையில் நான் சட்டமன்றப் பேரவைக்குச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டதை முன்னிட்டு தாங்கள் அளித்த ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு ஒத்துழைத்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றியுணர்வையும், பணிவான வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நாட்டு நலன் உள்ளிட்ட பிரச்சினைகளில் வேலைவாய்ப்புப் பிரச்சினையும் ஒன்று. அதைத் தருவதற்குரிய சூழ்நிலை ஏற்படுத்தப்பட வேண்டும். அதற்குரிய வசதி வாய்ப்பைத் தர வேண்டும் என்பதோடு மட்டுமல்லாமல், அதற்குரிய கொள்கையையும் நாம் மாற்றியமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள் என்பது என்னுடைய நம்பிக்கை. அப்படி இருக்க வேண்டும் என்று எல்லோரும் எதிர்பார்க்க வேண்டும் என்பதுதான் என்னுடைய எண்ணமும் விருப்பமும் கூட. வேலையில்லாப் பிரச்சினை என்று எடுத்துக்கொண்டால், அதில் எவ்வளவோ பிரிவுகள் இருக்கின்றன. துப்புரவுத் தொழிலாளர்கள் என்ற நிலையிலிருந்து—அப்படிச் சொன்னவுடனே மற்ற பணிகள் எல்லாம் அதற்கு உயர்வானது என்ற அர்த்தத்தில் சொல்லவில்லை—அது எவ்வளவு உயர்வான பணி, ஆனால் அதை கீழான பணி என்று சொல்கிறோம்—அதிலிருந்து தொடங்குகிறோம். அதிலிருந்து நாட்டைக் காப்பாற்றுகின்ற இராணுவ வீரர்கள் வரை எடுத்துக்கொண்டால், இந்தப் பிரச்சினையை மேலும் மேலும் பெருகுகின்ற மக்கள் தொகைப் பெருக்கத்திற்கு ஏற்ப தீர்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். மேலும் மேலும் மக்கள் தொகை அதிகமாகுமே தவிர குறைய முடியாது. அந்த மக்கள் தொகை வளர்ச்சியைக் குறைக்க வேண்டிய மிகப் பெரிய கட்டுப்பாடு ஒவ்வொரு மாநிலத்திற்கும் இருக்கிறது, அவ்வப்போது மத்திய அரசும் வற்புறுத்துகிறது. நாமும் வற்புறுத்துகின்றோம். மக்களும் அதை ஏற்று ஒத்துழைக்கிறார்கள் என்ற வகையில், தமிழ் நாடு அதைச் சொல்வதற்குரிய தகுதியைப் பெற்றிருக்கிறது. இதை இங்குள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப் பார்த்து மகிழ்ச்சியடைவார்கள் என்று நினைக்கிறேன். அதுவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது மட்டும் போதுமா என்றால், அதுதான் இல்லை. நான் ரஷ்யாவுக்குச் சென்றிருந்தபோது அங்கேயே முஸ்லிம் சமுதாயத்திலுள்ளவர்களைச் சந்தித்தேன். அங்கேயும் சில கட்டுப்பாடுகளை அவர்கள் பொதுவாகக் கடைப்பிடிக்கிறார்கள். மதம் என்கிற பிரச்சினையில் நுழையாமல் அவர்கள் மக்கள் பிரச்சினை, சமுதாயப் பிரச்சினை என்ற அளவில் ஒத்துழைக்கிறார்கள். அதை நான் நேரில் கண்டேன். அதுபோல், தமிழகத்தைப் பொறுத்தவரையிலும்—இந்தியத் துணைக் கண்டத்தைப் பற்றிப் பேச வேண்டியதில்லை—மதம் என்று நுழையாமல் இதுபற்றிப் பேச வேண்டியவர்களாக இருக்கிறோம். இந்தியத் துணைக் கண்டத்தைப்பற்றி நாடாளுமன்றத்தில் பேசுவதற்கு என்று இருக்கிறவர்கள் பேசுவார்கள். அவர்கள் பேசுகிறார்களோ என்னவோ எனக்குத் தெரியாது. என்னைப் பொறுத்தவரையில் சொல்கிறேன். முஸ்லிம் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் நிச்சயமாக குடும்பக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிப்பதில் மதத்தைச் சேர்க்காமல் மனிதாபிமான உணர்வோடு, மக்கள் சமுதாயமாய் வாழ வேண்டுமென்ற நல்ல உணர்வோடு, நல்லெண்ணத்தோடு ஒத்துழைக்க வேண்டும். அறிவு முதிர்ச்சியடைந்திருக்கும் இன்றைய நிலையில் இதற்கு முழு ஒத்துழைப்பையும் அவர்கள் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதை நான் சொல்லும்போது, இப்படிச் சொல்வதன் மூலம் "உனக்கு ஓட்டு விழாது" என்று சொல்வதற்கு வெளியே சிலர் மகிழ்ச்சியோடு காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நான் சொல்லியாக வேண்டும். நாங்கள் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை.

**திரு. ஜே. எம். மியாகான்:** இதை முஸ்லிம் மக்கள் உணர்ந்திருக்கிறார்கள். அவர்கள் கண்டிப்பாக ஒத்துழைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்:** என் வாழ்நாளில் எவ்வளவோ மகிழ்ச்சிகரமான செய்திகளைக் கேள்விப்பட்டவன். ஆனால் இன்றைக்கு திரு. மியாகான் அவர்கள் சொன்ன வார்த்தை உள்ளபடியே

எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. முஸ்லிம் சமுதாயத்தின் பேரில் உள்ள பழியை இன்றைக்கு அவர்கள் துடைத்திருக்கிறார்கள். வீண் பழி சுமத்தப்படுகிறது. அதை இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் துடைத்திருக்கிறார். முஸ்லிம் மக்கள் இதைக் கேட்டு பெரிதும் மகிழ்ச்சியடைவார்கள். அதுபோல் நானும் மகிழ்ச்சியடைகிறேன். இந்தப் பொய்ப் பிரச்சாரம் இனிமேல் நடக்காது என்பதை நான் இங்கே சொல்வதில் இறும்பூதெய்துகிறேன்.

(பிற்பகல் 12-50)

இந்தச் சமுதாயக் கோட்பாட்டில், சமுதாய நம்பிக்கைகளில் எப்படிப்பட்ட நிலைமைகள் இருந்தாலும், பிறப்பை ஒரு அளவுக்குக் கட்டுப்படுத்தாவிட்டால், எவ்வளவு பெரிய திட்டங்கள் தீட்டினாலும், மக்கள் அமைதியோடு நல்ல வாழ்க்கையை அமைத்துக்கொள்ள முடியாது, நல்ல வாழ்வு வாழ முடியாது என்பதை இந்த ஏழாண்டுக் கால அனுபவத்தில் நான் பார்த்து வருகிறேன் என்று சொல்லிக்கொள்கிறேன். அதற்கு முன்பெல்லாம் கருத்துக்கள் சொல்லியிருக்கிறேன். ஆனால் அதற்கு முன்பு சொன்ன கருத்துக்களைச் சொல்லும்போது, சிக்கலானது என்பதோடு, அரசுப் பொறுப்பை ஏற்றிருப்பவர்கள் எதிர்காலத்திற்கு எந்தத் திட்டத்தைத் தந்து இந்த நாட்டை வாழ வைக்க வேண்டியிருக்கிறது என்பதை எண்ணும்போது, உண்மையிலேயே நான் கலங்கியிருந்தேன். அது இப்போது தீர்ந்து விட்டது என்பதை மன நிறைவோடு சொல்லிக்கொள்கிறேன்.

கல்வியில் மாற்றம் நிச்சயமாக வேண்டுமென்று பல முறை சொல்லியிருக்கிறேன். எனக்கு முன்பும் கல்வித்துறை முன்னேற்றத்திற்காக பாடுபட்டவர்கள், அனுபவம் பெற்றவர்கள் எவ்வளவோ பேர் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் பூனைக்கு யார் மணி கட்டுவது என்ற நிலையில், துணிந்து மக்களுக்கு நன்மை செய்ய வந்திருக்கிற காரணத்தால், இதையெல்லாம் நாங்கள் வெளிப்படையாகச் சொல்கிறோம் என்ற அடிப்படையில், திட்டங்கள் தீட்டியிருக்கிறோம். சில தொழில் நிபுணர்கள், தொழில் முனைவர்கள், தொழில் அதிபர்கள் இப்போது ஒத்துழைக்க முன் வந்திருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் 100 பேர், 200 பேர்களை எடுத்து பயிற்சியளிக்க முன் வந்திருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட்டு, பெருமைப்படுவதுடன், மன நிறைவும் கொள்கிறேன்.

ஆனால் இப்போது உருவாகியிருக்கிற இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று சொன்னால், பல கோடி ரூபாய் வேண்டும். இந்த ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இதை ஆரம்பித்தால், குழப்ப நிலை ஏற்படும் என்ற காரணத்



தால், மத்தியத் திட்டக் குழுவோடு பேசி, அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தின் தொடக்கத்தில் இதை அமுலுக்குக் கொண்டு வருவது என்ற அடிப்படையில், அதை நிறைவேற்றலாம் என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம். இருந்தாலும், அதற்கான துவக்க வேலைகள் ஆங்காங்கே துவக்கப்பட்டிருக்கின்றன என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, வேலை வாய்ப்பில் எப்படி இருக்க வேண்டும் என்பதில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு யோசனை சொன்னார்கள். மருத்துவக் கல்விக்கும், இன்ஜினியரிங் கல்விக்கும் மாணவர்கள் ஒரே சமயத்தில் விண்ணப்பிக்கிறார்கள். எது கிடைக்கிறதோ அதை ஏற்றுக் கொண்டு மற்றவற்றை விட்டுவிடுகிறார்கள், அதனால் விண்ணப்பிக்கும் குறிப்பிட்ட கல்வி சிலருக்குக் கிடைக்கவில்லை என்ற குறையைச் சொன்னார்கள். அது நியாயமான குறைதான். அதை எடுத்துச் சொல்லியதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். எனக்குத் தெரிந்த வரையில் அது சரியாக நிறைவேற்றப்படுகிறதா என்று பார்க்க வேண்டும். எம்.பி., பி.எஸ்.-க்கு விண்ணப்பிக்கிறவர்கள், பி.ஈ.-க்கும் போடுகிறார்கள். அப்படிப் போடக் கூடாது என்று சட்டமோ, அரசு ஆணையோ கொண்டுவந்து, சட்டத்திற்குப் புறம்பு இல்லாத வகையில், அதை நிறைவேற்றலாம் என்ற நிலை இருந்தால், அதைச் செய்ய வேண்டும். அல்லது மத்திய அரசிடம் கூறி, அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கக் கோர வேண்டும். அந்த வகையில் இந்த அரசு அந்த எண்ணத்திலிருந்து பின்வாங்கிவிடவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** ஹையர் செகண்டரி பாடத் திட்டத்தில் 'ஏ' குரூப் பாடத்தில் 'பயாலஜி' வருகிறது. அது இருப்பதால்தான் மருத்துவக் கல்லூரிக்கு மனுப் போடுகிற மாணவர்கள், இன்ஜினியரிங் கல்லூரிக்கும் மனு போடுகிறார்கள். "ஏ" குரூப்பில், கெமிஸ்டிரி, ஃபிசிக்ஸ், கணக்கு போன்றவைகளுடன், "பயாலஜி"-யும் இருக்கிறது. ஆகவே பயாலஜிக்குப் பதிலாக வேறு பாடம் போடுகிற அளவுக்கு மாணவர்களையும் மாற்றினால்தான் உதவியாக இருக்கும்.

**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் :** இந்த விளக்கத்திற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனாலும் எங்களுடைய புதிய திட்டம், தொழில் கல்வியோடு, கல்வி கற்கிற திட்டத்தில் இதற்கு விமோசனம் இருக்கிறது. ஆரம்பத்திலேயே, மாணவர்களுக்கு எதில் அக்கறை இருக்கிறதோ, அந்தக் கல்வியில் அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அதைக் கற்றுக்

கொள்ள வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் முதல் வகுப்பிலிருந்தே அதை ஆரம்பிக்கிறோம். ஆகவே அந்தக் கல்வி, வாழ்க்கைக்குத் தேவையான கல்வி, அந்தக் கல்வியை அறிமுகப்படுத்தி, செயல்படுத்தும்போது இந்தப் பிரச்சினைகள் இருக்காது என்று கருதுகிறேன்.

**திரு. பா. மாணிக்கம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அந்தப் புதிய திட்டம் நடைமுறைக்கு வருவதற்குச் சில ஆண்டுகள் ஆகலாம். ஆனால் வரக்கூடிய இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு இந்த அவஸ்தை இருக்கும். காரணம், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் இங்கே கிளப்பிய பிரச்சினை. "சிலபஸ்" பற்றியது—அதாவது பாடத் திட்டத் தொகுப்பைப் பற்றியது. எனவே இதுகுறித்த விதிகளைத் திருத்தினாலே போதும். அது சம்பந்தமாக ஒரு திருத்தம் கொண்டு வருவதன் மூலமாக இதைச் செய்யலாம். அதாவது கணிதம் மற்றும் பயாலஜி என்றிருப்பதற்குப் பதிலாக, எஞ்ஜினீயரிங் வகுப்புக்குப் போக வேண்டும் என்பவர்கள் கணிதத்தைப் பிரதான பாடமாக எடுத்திருக்க வேண்டும். அப்படி எடுத்திருப்பவர்களுக்கு மட்டும் 'பிரையாரிட்டி' என்று விதியில் ஒரு மாற்றம் கொண்டுவந்தால், ஒரு இடைக் கால நிவாரணம் கிடைக்கும். கோர்ட்டுக்குப் போகிறவர்கள் போகத்தான் செய்வார்கள். கோர்ட்டுக்குப் போவது என்பது மனித உரிமை. மிகவும் போராடிப் பெற்ற உரிமை அது. அதைப் பயன்படுத்தத்தான் செய்வார்கள். தற்போது தண்ணீரைக்கூட தப்பாகத்தான் பயன்படுத்துகிறார்கள். எந்த விஷயத்தில் ரிட்டுக்குப் போகாமல் இருக்கிறார்கள்? எனவே அதைப்பற்றிக் கவலைப்படாமல், விதியில் மாற்றம் கொண்டுவந்தால், இந்த டூப்ளிகேஷனுக் கான வாய்ப்பைத் தவிர்க்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். புதிய திட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னால் இதைச் செய்வதன் மூலம் ஓரளவுக்கு டூப்ளிகேஷனைத் தடுக்கலாம்.

**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் :** இந்த யோசனையை நாங்கள் பரிசீலிப்போம். இதை நான் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். கோர்ட்டுக்குப் போகிறவர்கள் போகட்டும். அங்கே நாமும் நமது வாதங்களை எடுத்து வைப்போம். பிறகு முடிவை நீதிபதிகளுக்கு விட்டுவிடுவோம். ஆனால் நாங்கள் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்றோ, நிறை வேற்ற முற்படவில்லை என்றோ சிலர் சொல்லும்போது, உண்மையிலேயே வேதனையாக இருக்கிறது.

சிலர் என்னைப் பார்த்து "கூத்தாடி" என்று சொல்வதில் மகிழ்ச்சி யடைகிறார்கள். தமிழில் "இயல், இசை, நாடகம் அல்லது கூத்து" என்று மூன்று பிரிவுகள் இருக்கின்றன. எனவே தமிழில் கூத்தையும் சேர்த்து வைத்திருக்கிறார்கள். கூத்தாடிகள் என்பவர்கள் அந்த நாடகத் தொழிலைச்



செய்பவர்கள். ஆனால் சிலர் கூத்தடிக்கிறார்கள். அப்படிக் கூத்தடிப்பவர் களுக்கு எங்களைப் பார்த்தால் கூத்தாடிகளாகத் தெரிகிறது. கூத்தடிப்பவர் களுக்கு இலக்கண வரம்பு கிடையாது. அவர்களுக்கு ஏதாவது இலக்கண வரம்பு உண்டா என்றால் இல்லை. எனவே எதையும் பேசுகிறார்கள்.

அண்மையில்கூட தமிழ் தெரிந்த ஒருவர் என்னை "முந்தானைக்கு" ஒப்பிட்டுப் பேசியிருக்கிறார். ஏன் அப்படிப் பேசுகிறார்? ஏனென்றால் என்னை விளம்பரம் செய்து, மக்களிடம் வாக்குக் கேட்டு 1971 ஆம் ஆண்டு 180 இடங்களைப் பெற்ற நண்பர்கள் அவர்கள். நான் அப்போது அங்கே இருந்தேன். அவர்கள் ஆட்சிக்கு வந்தபோது அவர்களுக்கு நான் கூத்தாடி யாகத் தெரியவில்லை. "நான் பகட்டாக இருந்தேன்; கவர்ச்சியாக இருந்தேன், ஏதோ கவர்ச்சி என்னிடம் இருக்கிறது, அந்தக் கவர்ச்சியில் மக்கள் எங்களுக்கு வாக்களித்தார்கள் என்று சொல்லவில்லை. அப்போது எம். ஜி. இராமச்சந்திரன் தேவைப்பட்டது. பொதுவாக "ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு லாபம்" என்று சொல்வார்கள். அப்படிச் சொல்வது பழக்கத்தில் இருக்கிறது. அதையும் சொல்லிக் காட்டியிருக்கிறார்கள். இப்போது நிலைமை என்ன? கூத்தாடி இரண்டுபட்டால் கூத்தடிப்பவர்களுக்கு லாபமாக இருக்கிறது. இது புதிதல்ல. நடந்தது. வரலாற்றில் நடந்தது. எம். ஆர். இராதாவும் கூத்தாடி, நானும் கூத்தாடி. அவரும் நாடகக்காரர், நானும் நாடகக்காரன். அவரும் சினிமாக்காரர், நானும் சினிமாக்காரன். நாங்கள், கூத்தாடிகள் இரண்டுபட்டதால் ஒருவருக்கு துப்பாக்கிச் சூடு, அவருக்கு ஜெயில். கூத்தடிப்பவர்கள் அங்கே சுகமாக இருந்தார்கள். இந்தப் பிழைப்பை வைத்துக்கொண்டு அவர்கள் பயன்பட்டார்கள். நான் அப்போது கூத்தாடியாகத் தெரியவில்லை. ஆனால் ஆட்சி செய்யும்போதுதான், என்னுடைய கவர்ச்சி மற்றவர்களை ஈர்க்கிறது என்கிறார்கள். அவர்களுக்குச் சொல்கிறேன். என்னை முந்தானைக்கு ஒப்பிடுகிறார்கள். மானத்தை மறைப்பதற்கு முந்தானை. எதற்கு என்று கேட்கிறார்கள். வருத்தத்தோடு சொல்கிறேன். இலக்கியம் தெரிந்தவர்களாக இருந்தால் புரியும். அல்லது அகராதியைப் புரட்டிப் பார்த்தால் புரியும். அப்போது இதைச் சொல்லி யிருக்கமாட்டார்கள் என்று கருதுகிறேன். நான் இந்த வார்த்தையை உபயோகிப்பதற்காக யாரும் தவறாகக் கருதக் கூடாது. தவறான பொருள் கொள்ளக் கூடாது. வழக்கில் இருக்கிறதைத்தான் சொல்கிறேன். பெண் களுக்குள் வாதம் வந்தால் "நான் தமிழச்சி, நான் ஒருத்தனுக்கு முந்தானை விரித்திருந்தால் இதை நிறைவேற்றியே தீருவேன்" என்றெல்லாம் சொல்வார்கள். ஆகவே முந்தானை என்பது சாதாரணமானது அல்ல. பகட்டானது அல்ல.

(பிற்பகல் 1-00)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** கற்புக்கு அடையாளம்.

**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் :** இதற்கு இன்னும் பல பொருள்கள் இருக்கின்றன. அதற்கு முந்தி என்ற பெயர் உண்டு. பாவாடை கட்டும் காலத்தில் தாவணி போட்டுக்கொள்ள வேண்டும். பெண்கள் எப்படி மார்பகத்தை மூடிக்கொள்ள வேண்டுமோ அதைப் போலவே பின் பக்கமும் மூட வேண்டும். பின் அழகையும், முன் அழகையும் கணவனைத் தவிர வேறு யாரும் பார்க்கக் கூடாது. தாய், தந்தை, குழந்தைகள் பார்க்கலாம். மானம் என்றால் என்னவென்று நான் கேட்கிறேன். வெறும் உடலை வெளியே காட்டி விட்டால் மானம் போய்விட்டது என்று பொருள் அல்ல. குளித்துவிட்டு ஒருவள் வெளியே வரும்போது அந்தப் பெண் மானத்தை இழந்துவிட்டாள் என்று யாரும் சொல்ல முடியாது. தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். இந்த முந்தானை என்பதற்கு முன்தானை என்று பொருள் உண்டு, முன்னே. முதல், முந்தி. முற்போகம், மேற்போகம் என்றெல்லாம் பெயர் உண்டு. டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்களுடைய அனுமதி பெற்று அவருடைய அறிக்கையோடு வெளியிடப்பட்டுள்ள தமிழ் அகராதியின்படி முந்தானை போடுதல், முந்தானை விரித்தல் என்றால் ஒருவனுக்குப் பெண்டாட்டியாக இருத்தல் என்று பொருள். நான் ஒருத்தனுக்கு முந்தானை விரித்தவள். அதாவது சிலர் கடவுளை கணவனாக வழங்கலாம், ஆசானாக வழங்கலாம். தந்தையாக வழங்கலாம், தாயாக, சேவகனாக வழங்கலாம். அப்படி நான் அண்ணாவை என் தாயாக. கணவனாக, ஆசானாக. சேவகனாகக் கூட போற்றியிருக்கிறேன். என்னுடைய ஆசையை நிறைவேற்றும்போது, அவர் என்னுடைய சேவகன். அந்த அளவிலே நான் அவரைப் போற்றியிருக்கிறேன். அந்த அண்ணாவோடு முந்தானை விரித்த எம்.ஜி.ஆர்., கலைஞர் நான் என்பதை தயவுசெய்து அவர்கள் எல்லாம் தெரிந்துகொள்ள வேண்டும். இன்றைக்கு என்னை வெளியேற்றிவிட்டார்கள். இன்னொருவருக்கு நான் முந்தானை போடவில்லை, நானே முந்தானை போட்டுக்கொண்டேன். இந்த முந்தானையை சாதாரணமாக எப்படி விரிப்பார்கள் என்று எனக்குத் தெரியாது. இதைப்பற்றிப் புரிந்திருந்தால், அவர்கள் அப்படிச் சொல்லியிருக்க மாட்டார்கள். அவர்களுக்காக நான் அனுதாபப்படுகிறேன். இப்படிப்பட்ட உவமானத்தை தங்களுடைய கட்சியினருக்குச் சொல்லுகிறார்கள். முந்தானை என்பது அலங்காரத்திற்காக அல்ல. தன்னுடைய பின் அழகை ஒருவர் பார்த்துவிடக்கூடாது என்று அதைத் தடுப்பதற்காக. அது நாகரீகத்திற்காக அல்ல. இதை இங்கே ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், பண்பை மறந்து, தங்களுடைய தகுதியை மறந்து, தனக்கு இருக்கின்ற பொறுப்பை மறந்து, இந்த நாட்டிற்குச் செய்ய வேண்டிய கடமையை மறந்து குற்றம் சாட்டு





வதற்காக ஏதாவது ஒன்றைத் தேடிப் பிடித்தால், இப்படிப்பட்ட அவமானத்திற்கு. தலை குனிவிற்கு ஆளாவார்கள் என்பதைச் சொல்லி, "இனியும் கவர்ச்சியைப்பற்றிப் பேசாதீர்கள், மக்களுக்கு எந்தக் கடமையைச் செய்ய வேண்டுமோ அந்தக் கடமையைப்பற்றிப் பேசுங்கள், அதைச் சொல்லி வெற்றி பெற வாய்ப்புத் தேடுங்கள்" என்று அவர்களுக்குச் சொல்லுகிறேன். இதை நம்பி நாங்கள் கட்சி வைத்திருக்கவில்லை. அதை நம்பி எங்கள் கொள்கையைக் கொண்டிருக்கவில்லை. அதை நம்பி எங்கள் கொள்கையைத் திட்டமாக வைக்கவில்லை. இங்கே நீங்கள் எல்லாம் பாராட்டியிருக்கிறீர்கள். உங்கள் உள்ளத்திலே பாராட்டுகிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். சுற்றுச் சூழ்நிலையில் நாம் அப்படி இருக்கிறோம். ஒரு தேர்தலில் கூட்டணியில் நிற்கிறோம். இன்னுமொரு தேர்தலில் பிரிந்துவிடுகிறோம். இருந்தாலும் ஒன்றை நான் சொல்லுவேன். ஒருவர் உள்ளத்திலே என்ன இருக்கிறது என்பதுதான் முக்கியம். வெளியே சொல்ல முடியாமல் இருக்கலாம். அதிகாரத்திலே இருப்பதால் சில உண்மைகளை வெளியே சொல்ல முடியாமல் இருக்கலாம். யார் என்ன தவறு செய்கிறார்கள் என்பதைச் சொல்ல முடியாமல் இருக்கலாம். எங்களுக்குத் தெரியாததல்ல. அவர்களுக்கும் தெரியாததல்ல. இந்த இராமச்சந்திரனுக்கும் மற்ற அமைச்சர்களுக்கும் தெரியும் என்பது அவர்களுக்குத் தெரியும்.

கட்டிடத் தொழிலாளர்களுக்குச் சங்கத்தை முதலில் யார் வைத்திருந்தாலும், அ.தி.மு.கழகம் என்ற ஒன்று ஆரம்பித்த பிறகுதான் கட்டிடத் தொழிலாளர் சங்கம் தோன்றியது என்பதை இங்கே நான் குறிப்பிட்டுச் சொல்லுகிறேன். பாரம் காக்கும் தொழிலாளர் சங்கம் பெருவாரியாக மக்களிடத்திலே நிலவுவதற்கு ஆவன செய்தது இந்தக் கட்சி என்பதை இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். அவர்களுக்கு உதவி செய்வோம் என்றால், முதலமைச்சர் நிதியிலிருந்து பத்தாயிரம் ரூபாய் கொடுக்கிறோம் என்றால், ஐந்து ரூபாய் கட்ட வேண்டுமா, அநியாயம் என்கிறார்கள். எப்படி அடையாளம் கண்டுபிடிப்பது? அவர் பரம்பரைத் தொழிலாளியா; இப்போது தொழிலை ஏற்றுக்கொண்டிருக்கின்றாரா; அந்தத் தொழிலிலே இருக்கிறார் என்பதை எப்படி அறிவது, எப்படி கணக்குப் போடுவது? அவர்களுக்கு ஒரு பொறுப்பு வேண்டாமா? பத்தாயிரம் ரூபாய் கொடு என்கிறார்கள். ஐந்து ரூபாய் பாதத்திற்குக் கொடுக்கமுடியாத நிலைமை இருக்க முடியுமா? அதைக் கொடுத்தால், அதற்காக அதை அரசியலாக்கி, 10 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறோம் என்று சொன்னோமே என்பதைப்பற்றி அவர்கள் மகிழ்ச்சிகொள்ளாமல், 5 ரூபாய் கேட்கிறார்கள், முடியாது என்கிறார்கள். யாருக்கு நஷ்டம்? அவர்களுக்குத்தான் நஷ்டம். எங்கே உங்களை இன்சூர் பண்ணச் சொன்னோம். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்

களுக்குக் கீழே உள்ள துறையில் நீங்கள் பதிவு செய்துகொள்ளுங்கள் என்று சொன்னோம். அதை நியாயமாகக் கொண்டுவரும்போது, இன்னமும் நான் தொழிலாளர் நல அமைச்சர் துறையைச் சேர்த்தாலும் சேர்க்கலாம்; யோசனையில் இருக்கின்றோம்; செய்தாக வேண்டும், அவர்கள் பதிவு செய்து கொள்ள வேண்டும்; பதிவு செய்துகொண்ட அவர்கள் "நாங்கள் கட்டிடத் தொழிலாளர்கள்" என்ற தகுதிக்கு உரியவர்கள் என்ற அந்த அத்தாட்சி பெற்று வைத்துக் கொள்வார்களானால், அவர்கள் குடிக்காமல் இருந்து, கீழே விழுந்தால் 10 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படும். இந்த நிலைமையை இங்கே சொல்லிக்கொள்கிறேன். பனை ஏறும் தொழிலாளர்கள் கீழே விழுந்து இறந்தால் 5 ஆயிரம் ரூபாய் கொடுக்கின்றோம். டாக்டர் சர்ட்டிபிகேட் வேண்டும். அதாவது அவர் அந்த நேரத்திலே குடித்திருக்கவில்லை; மது அருந்தவில்லை என்று சர்ட்டிபிகேட் வேண்டும். அப்போதுதான் கொடுக்கின்றோம். அவர்களுடைய ஊனத்திற்கு ஏற்ப, அவர்களுடைய குடும்பத்திற்கு ஏற்ப, அவருடைய குடும்பத்திற்கு உதவி செய்கின்றோம். அதுபோல கட்டிடத் தொழிலாளர்கள் குடிக்காமல் இருந்தால், அந்தச் சமயத்தில் கீழே விழுந்து இறந்தால் அல்லது வேறு வகையில் அங்கு வேலை செய்யும்போது இறந்தால், அதாவது அங்கே பெரிய கற்கள் விழுந்து மரணம் அடைந்தால், அப்போது 10 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படுமென்று சொன்னோம். ஆனால் குடித்து இருக்கக் கூடாது. இதுதான் முக்கிய நிபந்தனை. இதை நான் சொல்லும் போது, உங்களுக்கு இனிமேல் நல்ல எண்ணம் வரும்—மற்றவர்களுக்கு எல்லாம் இருக்கிறது போல என்று நான் கருதுகின்றேன்.

அதேபோல அரசு ஊழியர்களுக்குக் கொடுத்தால் 5 ஆயிரம் ரூபாய் தானே தருகிறோம் என்கிறார்கள். வாங்கிக்கொள்கிறவர்கள் ஒத்துக்கொண்ட பிறகு தான் இதைக் கொண்டு வந்தோம். வெளியே இருக்கிறவர்கள் அவர்களை விடமாட்டேன் என்கிறார்கள். இதிலே அரசியலைப் புகுத்துகிறார்கள். என்ன 5 ஆயிரம் ரூபாய் என்று கேட்கிறார்கள். அவர்கள் ஒத்துக்கொண்டு, அவர்களிடம் பேசி கொண்டுவந்தோம். இன்னும் பின்னாலே ஏதாவது பேசி, இதை அதிகப்படுத்தவோ அல்லது குறைக்கவோ முடிந்தால், நிதி நிலைமை பலமாக இருக்குமானால், நாங்கள் அதை மறுக்கப் போவதில்லை—நஷ்டப்படுகிறோம் என்று சொல்வதற்கு. அதையும் செய்யத் தயார் என்று அரசு இருந்தாலும். ஆனால், இப்போது அந்தப் பிரச்சினை இல்லை.

உடனே விவசாயத் தொழிலாளர்களுக்கு, விவசாயிகளுக்கு நாங்கள் ஒரு திட்டம் கொண்டுவர இருக்கின்றோம்; அதைச் சொல்ல இருக்கின்றோம். அவர்களை அரசாங்க அமைப்புகளில் ஆங்காங்கே உறுப்பினர்களாக ஏற்றுக் கொண்டு, அவர்கள் மாதம் இதேபோல ஏதோ ரூபாய் கட்டவேண்டும், அவர்களுக்குச் சுமையாக இல்லாத வரையில். அந்த ரூபாயைக் கட்டி, சந்தா கட்டி



அவர்கள் பதிவு செய்துகொண்டார்களானால், அந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு, ஏழை விவசாயிகளுக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் அளிக்கக் கூடிய—ஒன்றிரண்டல்ல, அவர்களுடைய வாழ்க்கைக்கு உதவக்கூடிய அவர்களுடைய நெல் அல்லது வேறு பயிர்களில் நஷ்டம் அடைந்துவிட்டால் அதற்குப் பாதுகாப்பு போன்ற அத்தனை பாதுகாப்பையும், விவசாயிகளுக்கு அளிக்கக்கூடிய ஒரு திட்டத்தை இந்த அரசு அறிமுகப்படுத்த இருக்கிறது. இது இந்தியாவிலே கொண்டுவரப்படாத ஒன்று. விவசாயிகளுக்காக நாங்கள் அக்கறை காட்டாமல் இருக்கிறோம் என்று சொல்கிறவர்கள், இதைப் பரிசீலித்த பிறகு யோசனை சொல்லட்டும், அரசு என்ன செய்யலாம் என்று சொல்லட்டும். இன்சூரன்ஸ் போல, குரூப் இன்சூரன்ஸ் போல, இது போன்றவைகளை நாம் ஏற்படுத்தி அவர்கள் யாருக்கும் எந்த நேரத்திலும் கவலைப்படாமல், பயப்படாமல், அச்சுறுத்தல்களுக்கு அடங்கி நடக்கவேண்டுமென்ற கட்டளை அல்லது கட்டுப்பாடு இல்லாது, சட்டத்திற்குக் கட்டுப்பட்டு, சமுதாயத்திலே இருக்கின்ற ஒழுங்குக்குக் கட்டுப்பட்டு அவர்கள் பணி செய்வதற்குரிய உரிமையைப் பெறுவதற்கு, இந்த அரசாங்கம் இந்த வகையில் விரைவில் நடவடிக்கை எடுக்கப்போகிறது என்பதை இங்கே கோடிட்டுக் காண்பிக்கின்றேன். விளக்கம் பின்னாலே சொல்லப்படும். இந்தத் திட்டத்தைப் பற்றி என்ன சொல்கிறேன் என்றால், நாங்கள் விவசாயிகளை மறந்து விட்டோம் என்றோ, விவசாயிகளைக் கவனிக்கவில்லை என்றோ சொல்லக் கூடாது. விவசாயிகளுக்கு நாங்கள் என்ன செய்தோம் என்பதை வேறு ஒரு அறிக்கையில் குறிப்பிட்டிருக்கின்றோம். அதைவிட அதிகமான பாதுகாப்பு, அதைவிட அதிகமான வசதி இந்தத் திட்டத்தில் இருக்குமென்றே நீங்கள் நம்ப வேண்டும்.

அடுத்தபடியாக, இந்தக் கல்வித் திட்டத்தைச் சொல்லலாம். மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் எத்தனை ஆண்டுக் காலம் ஆகும் என்றார்கள். இல்லை, 1984-85 என்று வைத்துக்கொள்ளுங்கள்—அது நடைமுறையில் அமுலுக்கு வரும். அதற்காகத்தான் ஓய்வு எடுக்க இருந்த திரு. ரயான் அவர்கள் பணியை ஓராண்டுக்கு நீட்டிக்க வைத்து, இதைச் சரி செய்ய வைத்திருக்கின்றோம். இன்னொன்றைச் சொன்னார்கள், பட்டதாரிகளைப்பற்றி. எங்களுக்கு யோசனை இருக்கிறது. வேலையற்றவர்களும் யோசனை சொல்லியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 1-10)

நாங்கள் அவசரமாக ஏதோ செய்துவிட்டோம் என்று வெளியிலேயே சொல்லப்படுகிறது. திட்டமே இல்லை. ஏதோ விளம்பரத்திற்காகவோ, தேர்தலுக்காகவோ ஏதோ சொல்லிவிட்டோம் என்று சொல்கின்றார்கள்,

இப்படி மாவட்டங்கள் பிரித்திருப்பதாகச் சொல்கிறார்கள். அவைகளின் எண்ணிக்கை என்ன, விஸ்திரணம் என்ன என்பதைப் பற்றி கேட்டார்கள். புள்ளிவிவரப்படி எத்தனை லட்சக்கணக்கான மக்கள் எல்லாம் மாவட்டத்திற்கும் இருக்கின்றார்கள் என்று போட்டிருக்கிறோம். ஒவ்வொரு விஸ்திரணம் என்பதை எல்லாம் கணக்கெடுத்துப் போட்டிருக்கிறோம். எவ்வளவு என்று சொன்னதற்கு அது கடலூராக வேண்டாம், கடலூர் என்று சொல்லியிருக்கின்றார்கள். நாங்கள் பரிசிலிக்கிறோம். என்னவாக வேண்டும் தேவையில்லை எங்களுக்கு, நல்லது நடக்க வேண்டும். பிடிவாதம் பேரிலே, காயிதே மில்லத் பேரிலே. வீரமாமுனிவர் பேரிலே இராஜாஜி வருவதற்கு எங்களுக்கு விருப்பம் அதிகம். அதற்கு மாவட்டம் கொண்டு அதைத் தேடிக்கொண்டிருக்கிறோம். அது கிடைத்தவுடன் நிச்சயமாக வேண்டும். பேர்களை வைப்போம். இது கருணாநிதி சொன்னார்களே என்று அந்தப் மாட்டோம். யார் சொன்னால் என்ன? எங்களுக்கு அந்த எண்ணம் பார்க்க யாருக்காகவும் அல்ல. பெரியவர்களுக்காக, நல்லவர்களுக்காகச் இல்லை. அப்படியானால் மகமது அலி, சௌகத் அலி எல்லாம் எங்கே செய்வோம். என்றுகூட கேட்கலாம். அவர்கள் எல்லாம் நாட்டின் போனார்கள் பாடுபட்டவர்கள் ஆயிற்றே. அதற்கு முன்னால் உள்ளவர்கள் சுதந்திரத்திற்காகப் கேட்பார்கள். நான் காங்கிரஸ்காரனாக இருந்த காரணத்தினாலே, எங்கே என்று பெயர்கள் எல்லாம் எனக்கு அடிக்கடி ஞாபகம் வருகின்றன. அந்தப்

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அது பழைய வாசனை.

**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் :** ஆகவே இந்த அரசு ஆளுநர் உரையிலே சொல்லவில்லை என்றால், இந்த உரையே பெரிய அளவிலே இருக்கிறது, இன்னமும் சொல்லிக்கொண்டு போனால், பட்ஜெட்டிலே சொல்வதற்கு ஒன்றும் இருக்காது. பட்ஜெட்டிலே சொல்வதற்கு அவைகளை விட்டு வைத்திருக்கிறோம். அது உங்களுக்கு நிறைவாக இருக்கும் என்று நம்புகிறேன். ஆகவே ஆளுநர் அவர்கள் உரையை ஏற்று நன்றி கூறும் தீர்மானத்தை ஆதரிக்க உறுப்பினர்கள் ஆதரவைக் காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் கேட்கலாம்.

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் இரண்டு விஷயங்களைப்பற்றி விளக்கம் கேட்க விரும்புகிறேன். இன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய ரப்பர் தோட்டத்திலே, அரசுக்குச் சொந்தமான ரப்பர் தோட்டத்திலே வேலை செய்யும் 3,000 பேர்களுக்கு இன்று சட்டப்படி





தரவேண்டிய பஞ்சப்படி தரவேண்டாம் என்று அங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கின்ற ஆலோசனையின் பேரில், கன்சர்வேட்டர் ஆஃப் பாரஸ்ட் உத்தரவு பிறப்பித்து அந்த பஞ்சப்படி தரப்படாமல் இருக்கின்றது. ஏற்கெனவே தொழிலாளர் நல இலாகா கேட்டும் கூட, இந்த வனத்துறையில் அதற்குச் சரியான பதில் கிடைக்காமல் இருக்கிறது. இதுபற்றி அரசு கவனத்திற்கு வந்திருக்கிறதா என்பதை கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இன்னொன்று கேட்கிறேன். அரசு ஊழியர்களுக்கு ரூ. 5 ஆயிரம் கொடுப்பதற்கு மாதம் ரூ. 20 பிடித்துக்கொண்டு, அதற்குப் பிறகு அரசின் பொறுப்பிலே ரூ. 5 ஆயிரம் கொடுப்பதாகக் கூறுகிறார்கள். அவர்கள் வேலைக்கு வந்த பிறகு, அவர்கள் 30 வருடம், 35 வருடம் வேலையில் இருப்பார்கள். பன்னிரண்டு வருடங்கள் ஆனதும் அவர்கள் செலுத்தும் தொகையே ரூ. 5 ஆயிரம் வந்துவிடும். அதற்குப் பிறகு அந்தப் பணத்திற்கு வட்டி கணக்கிடும்போது, ஓய்வு பெறும்போது ரூ. 30 ஆயிரம், ரூ. 35 ஆயிரம் என்று வரும் என்கின்றார்கள். அந்த 5 ஆயிரம் ரூபாயை பாங்கியில் போடுகின்றபோது, வட்டிக் கணக்குப் போடுகிறபோது, 30 ஆயிரம், 35 ஆயிரம் ரூபாய் வருகிறது என்று சொல்கின்றார்கள். அதிலே ரூ. 10 ஆயிரம் தானே தருகின்றார்கள். பாக்கி 25 ஆயிரம் ரூபாய் அரசுக்குத் தானே சேர்கிறது என்று என்.ஜி.ஓ.-க்கள் மத்தியிலே ஒரு கருத்து இருக்கிறதே. அப்படி அவர்களுடைய பணத்தை வைத்து பாங்கியிலே போட்டால் அதிக வட்டி வருகிறது என்ற கருத்து இருக்கிறபோது, அரசு அதை எடுத்துக்கொண்டு, அதிலே ரூ. 10 ஆயிரம் கொடுப்பதாகச் சொல்லியிருப்பதாகவும் தெரிகிறது. அதைப் பற்றி அரசு பரிசீலித்திருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கன்னியாகுமரி ரப்பர்த் தோட்டத் தொழிலாளர்பற்றி குறிப்பிட்டுக் கேட்டார்கள். கடந்த நான்கு மாதங்களாக தனியார் ரப்பர் தோட்டத் தொழிலாளர்கள் பஞ்சப்படி தருவதுபற்றி வேலை நிறுத்தம் செய்து வருகின்றார்கள். அரசு ரப்பர் தோட்டத் தொழிலாளர்கள் அகவிலைப்படி பெறுவது குறித்து வேலை நிறுத்தம் செய்யவில்லை. மற்ற ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கும், அரசு ரப்பர் தோட்ட நிறுவனங்களுக்குமிடையே தொழில் தகராறு சட்டப்படி 1—4—1979 அன்று ஏற்பட்ட ஒப்பந்தம் 30—11—1981 உடன் முடிவடைந்துவிட்டது. புதிதாக ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொள்வதற்கு பேச்சு வார்த்தை தொழிலாளர் நலத் துறையின் உதவியுடன் நடைபெற்று வருகிறது. ஆனால் புதிய ஒப்பந்தம் கையொப்பமிடும் வரை தொழிலாளர்களுக்கு பழைய ஒப்பந்தப்படியே இராக்கிப் படி

வழங்கப்பட்டு வருகிறது. தற்சமயம், தொழிலாளர்களுக்கு 1—12—1982, 1—4—1983, 1—8—1983 மற்றும் 1—12—1983 ஆகிய தேதிகளிலேயிருந்து கொடுக்கப்படவேண்டிய கிராக்கிப்படி சம்பந்தமாக அரசின் பரிசீலனையில் இருக்கிறது. சட்டப்படி தரவேண்டிய கிராக்கிப்படி வழங்க மறுக்க வேண்டுமென்று கன்சர்வேட்டர் ஆஃப் பாரஸ்ட்க்கு அரசு உத்தரவு போடவில்லை என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு தலைவரவர்களே, ஒரு விளக்கம். அதாவது, இப்போது குறிப்பிடுகிற . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** விவாதத்தில் திருப்பித் திருப்பி பதில் கொடுக்க . . .

**திரு. ஆ. நல்லசிவன் :** அரசு சட்டப்படி பஞ்சப்படி தருகிறது என்பது சரியல்ல. விவாதத்தில் எழுப்பி, கேட்ட கேள்வி. நான் கேட்ட கேள்விக்கு அவர் பதில் சொல்லவில்லை. உண்மையே மாறாக இருக்கிறது என்பதால்தான் கேட்கிறேன். சட்டப்படி பஞ்சப்படி தரப்படுகிறது என்பது சரியல்ல. தரப்படவில்லை என்பதால்தான் பிரச்சினை இங்கே வந்திருக்கிறது. மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் சொல்லியும்கூட அவர்கள் கேட்கவில்லை என்பது உண்மை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு . . .

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, முதலமைச்சரவர்கள் அரசுத் தோட்டத் தொழிலைப்பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் சொல்வது தனியார் தோட்டத் தொழிலாளர்கள் குறித்து. தனியார் தோட்டத் தொழிலாளர்கள் 17—10—1983 முதல் வேலை நிறுத்தம் செய்துவருகிறார்கள். அந்தப் பிரச்சினை குறித்து 'கன்சிலியேஷன்' முடிந்து கோப்பு இன்றையதினம் வந்துவிட்டது. நமது முதல்வர் அவர்களை இன்று ஆலோசனை கேட்டு அரசு ஆணையிட இருக்கிறது. இதைக்குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்களிடத்திலும், திரு. ஹேமச்சந்திரன் அவர்களிடத்திலும் பேசினேன். 20 ஆம் தேதி தொழிலாளர்களே போய் மரத்திலே பால் வெட்டுவதாக இருந்தார்கள். அந்தப் போராட்டத்தில் ஈடுபடவேண்டாம், அரசு இரண்டு மூன்று நாட்களில் முடிவெடுக்கும் என்று சொல்லியிருக்கிறேன். கோப்பு வந்துவிட்டது. இன்றையதினம் முதல்வர் அவர்களிடமும் கலந்து முடிவெடுத்து அரசு ஆணையிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. பா. ரா. தாமஸ் :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, முதல்வர் அவர்கள், ஆசிரியர்களுக்கும், அலுவலர்களுக்கும் அளித்துள்ள அனைத்து சலுகைகளுக்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் 1969-இலே கொடுத்த ஊக்க ஊதிய உயர்வு 5—9—1983 அன்று நிறுத்தப்பட்டிருக்கிறது. மாநிலத்திலுள்ள அனைத்து ஆசிரியப் பெருமக்களுடைய மனமும் இன்று முதல்வர் அவர்கள் அறிவிக்கிற அறிவிப்பிலே குளிரும்படி இருக்கும் என்று நினைக்கிறார்கள். அந்த வகையிலே ஊக்கத் தொகையைத் தொடர்ந்து வழங்குவதற்கு முதல்வர் அவர்கள் என்ன சொல்ல இருக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவரவர்களே, அதைப்பற்றிப் பரிசீலிப்போம் என்கிற ஒரு உறுதி சட்டமன்றப் பேரவையிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நல்லசிவன் அவர்கள் தம்முடைய திருத்தங்களை வலியுறுத்துகிறாரா அல்லது திரும்பப் பெறுகிறாரா?

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு தலைவரவர்களே, என்னுடைய திருத்தங்களை நான் வலியுறுத்துகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"கீழ்க்கண்டதை தீர்மானத்தின் கடைசியில் சேர்த்துக் கொள்ளவும்,—

1. மத்திய மாநில உறவுகளில் மேலும் அதிக அதிகாரங்கள் மாநிலங்களுக்கு கிடைப்பதற்கான எந்த நடவடிக்கைகளைக் குறித்தும் குறிப்பிடாதது பற்றியும்;

2. மக்களின் உரிமைகளை மதிக்காத போலீஸ் கொள்கைகளின் விளைவாக 3—2—1984 தேதியன்று மதுரை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் மீது போலீஸின் கொடுமையான தடியடி தாக்குதல் நடத்தினது போன்ற பல்வேறு போலீஸ் அடக்குமுறைகளைப் பற்றியும்;

3. அரசியல் கட்சிகள் தொண்டர் அணிகளை வைத்துக் கொள்வதையும், சுவர்களில் அரசியல் கோஷங்கள் எழுதுவதையும் அரசு நிர்வாகத்தில் நடைபெறும் ஊழல்களை பத்திரிகைகள் அம்பலப்படுத்துவதையும் தண்டிக்கும் வகையில் சட்ட நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதைப் பற்றியும்;

[1984 பிப்ரவரி 23

4. தங்களது அத்தியாவசியமான நலன்களை பாதுகாப்பதற்காக. சிம்சன், பின்னி, நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலை, கரூர் மில்ஸ், குமரி மாவட்டத் தோட்டத் தொழிலாளர்கள் ஆகியோர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தும், அரசு அதில் தலையிட்டு, அவர்களின் பிரச்னைகளுக்கு நியாயமான தீர்வு காண்பதற்குப் பதிலாக, அவர்களின் வேலை நிறுத்தங்களை உடைக்க கடுமையான போலீஸ் அடக்குமுறையையும் மற்றும் கையாண் வரும் நடவடிக்கைகளையும் பற்றியும்;

5. அரசின் அடக்குமுறையை எதிர்த்து 14—2—1984 அன்று சென்னை செங்கை மாவட்ட அனைத்து தொழிலாளர்களும் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது என்பதை பற்றியும்;

6. வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் பல பகுதியினருக்கு வெள்ள நிவாரண உதவி இன்னும் கிடைக்கவில்லை என்ற நிலை இருக்கும் போது, முன்பு வறட்சியினாலும், இப்பொழுது வெள்ளத்தினாலும் பாதிக்கப் பட்டுள்ள விவசாயிகளிடம் கடன் பாக்கிக்காக மோசமான அபராத வட்டியை விதித்தும், சொத்துக்களை ஜப்தி செய்வோம் என்றும் அரசு நடவடிக்கை எடுப்பது வெந்தப் புண்ணில் வேல்கொண்டு குத்துவதாக உள்ளது என்பதைப் பற்றியும்;

7. நியாயவிலைக் கடைகளில் குறைந்தபட்ச அளவில்கூட அரிசியும் மற்ற அத்தியாவசிய உணவு பண்டங்களும் கிடைக்கவில்லை என்பதுடன், குடும்பக் கார்டுகளை வழங்குவதில் பல முறைகேடுகள் நடைபெற்று வருகின்றது என்பதைப் பற்றியும்;

8. அரசு நிர்வாகத்தில் எல்லா மட்டங்களிலும் மேலும் மேலும் அதிகரித்து வரும் லஞ்ச ஊழல்களினால் ஏழை மக்களுக்கு எவ்வித நியாயமும் கிடைக்காது என்ற மோசமான நிலைமை வளர்ந்து வருகின்றது என்பதைப் பற்றியும்;

9. தமிழகத்திற்கு குறைந்தபட்சமாக தேவைப்படும் அளவு அரிசியைக் கூட கொடுப்பதற்கு மத்திய அரசு மறுத்து வருவது, நிலக்கரி விலையை உயர்த்தியதன் மூலம் மாநில மின் வாரியத்தின் நிதி நிலைமை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. நியாயவிலைக் கடைகளில் இம்மாதம் 1ஆம் தேதி முதல் சர்க்கரை விலையை கிலோ 1-க்கு 25 காசுகள் கூடுதலாக மத்திய அரசு உயர்த்தி உள்ளது, தமிழகத்தில் தொழில் வளர்ச்சிக்கு மிகவும் அவசியமான கரூர்-தூத்துக்குடி அகல ரயில்பாதை திட்டத்தை மத்திய அரசு திட்டப்பில் போட்டுவிட்டது ஆகியவை பற்றியும்;



1984 பிப்ரவரி 23] [மாண்புமிகு மேலவைத் தலைவர்]

10. மத்திய அரசின் தவறான பொருளாதார சமூக கொள்கைகளுக்கும், விஷம்போல் ஏறிவரும் விலைவாசி உயர்வுக்கு பிரதான காரணமாக இருக்கும் கொள்கைகளுக்கும் எதிராக முற்போக்கான மாற்று பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்கும் நோக்குடன், நம் நாட்டில் உள்ள 18 எதிர்க் கட்சிகள் 13—2—1984 அன்று நடத்திய கோரிக்கை தின இயக்கத்திற்கு காங்கிரஸ் அல்லாத மற்ற மாநில அரசுகள் அனைத்தும் ஆதரவு கொடுத்த நேரத்தில் தமிழக அரசு மட்டும் மத்திய அரசின் தவறான கொள்கைகளை விமர்சிப்பதற்குக்கூட அஞ்சுவது பற்றியும்;

11. தமிழகத்தின் கோரிக்கைகளை மத்திய அரசிடம் வற்புறுத்துவதற்கு மக்களைத் திரட்டுவதற்கு, தமிழக அரசு தயாராக இல்லை என்பது பற்றியும்;

ஆளுநர் அவர்களின் உரையில் ஏதும் குறிப்பிடாததற்கு இந்த அவை தன் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது."

திருத்தம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. சனார்த்தனம் அவர்கள் தம்முடைய திருத்தங்களை வலியுறுத்துகிறாரா, திரும்பப் பெறுகிறாரா?

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** மாண்புமிகு தலைவரவர்களே, திருத்தங் களைத் திரும்பப் பெறுகிறேன்.

திருத்தங்கள், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டன.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

"1984 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 13 ஆம் நாள் ஆளுநர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உரை நிகழ்த்தியதற்காக, தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை உறுப்பினர்கள் தங்களுடைய நன்றியை ஆளுநர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றனர்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்று, மீண்டும் 24—2—1984, வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-18)

### 5. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

#### அ. சட்டப்படியான விதிகள், ஆணைகள்.

78. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டி விதிகளில் திருத்தம் செய்தது தொடர்பாக, உள்துறையின் 9—11—1983 ஆம் நாளிட்ட 2347 ஆம் எண் அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச்சட்டம் 4/1939) 133 (3) ஆம் பிரிவின்கீழ் அவை முன் வைக்கப்பட்டது].

79. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டி விதிகளில் திருத்தம் செய்தது தொடர்பாக, உள்துறையின் 5—12—1983 ஆம் நாளிட்ட 2552 ஆம் எண் அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச்சட்டம் 4/1939) 133 (3) ஆம் பிரிவின்கீழ் அவை முன் வைக்கப்பட்டது].

80. குறிப்பிட்ட சில பொருட்களைப் பொறுத்தவரையில், சின்னதாராபுரம் அங்காடிப்பகுதியை அறிவிக்கப்பட்ட அங்காடிப்பகுதியாக அறிவித்தது தொடர்பாக, வேளாண்மைத்துறையின் 1—10—1983 ஆம் நாளிட்ட 1752 ஆம் எண் அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் உற்பத்திப் பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) ஆம் பிரிவின்கீழ் அவை முன் வைக்கப்பட்டது].

81. வருவாய்த்துறையின் 25—3—1959 ஆம் நாளிட்ட 976 ஆம் எண் அரசாணையில் செய்யப்பட்ட திருத்தங்களை ரத்து செய்வது தொடர்பாக, வணிகவரி, அறநிலையத்துறையின் 20—12—1983 ஆம் நாளிட்ட 1452 ஆம் எண் அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) ஆம் பிரிவின்கீழ் அவை முன் வைக்கப்பட்டது].

82. இந்திய அரசுக்குச் சொந்தமான மோட்டார் வண்டிகள் அனைத்திற்கும் அளிக்கப்பட்ட விலக்கினை ரத்து செய்வது தொடர்பாக, உள்துறையின் 27—12—1983 ஆம் நாளிட்ட 2725 ஆம் எண் அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டி வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) ஆம் பிரிவின்கீழ் அவை முன் வைக்கப்பட்டது].



83. தமிழ்நாடு பீங்கான் நிறுவனத்தின் 1981-82 ஆம் ஆண்டிற்கான எட்டாவது ஆண்டு அறிக்கை (தமிழ் மற்றும் ஆங்கிலம்). [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச்சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் அவை முன் வைக்கப்பட்டது].

84. தமிழ்நாடு சிறு தொழில்வளர்ச்சிக் கழகத்தின் 1982-83 ஆம் ஆண்டுக்கான 13-வது ஆண்டு அறிக்கை (தமிழ் மற்றும் ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச்சட்டம் 1/1956) 619 (ஏ) பிரிவின்கீழ் அவை முன் வைக்கப்பட்டது].

85. தமிழ்நாடு சிறு தொழில் கழகத்தின் 1981-82 ஆம் ஆண்டுக்கான 17-வது ஆண்டு அறிக்கை (தமிழ் மற்றும் ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச்சட்டம் 1/1956) 619 (ஏ) பிரிவின்கீழ் அவை முன் வைக்கப்பட்டது].

#### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

*16. மின்சார வெட்டு தளர்த்தல் சம்பந்தமாக மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களின் அறிக்கை.

@17. வறட்சி மற்றும் வெள்ள நிவாரணம் பற்றிய வெள்ளை அறிக்கை (தமிழ்).

18. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1971-72 ஆம் ஆண்டு அறிக்கையின் (சிவில்) மீது பொது நிறுவனங்கள் குழு (1977-78) அளித்த இரண்டாம் அறிக்கையில் உள்ள பரிந்துரைகள் குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் முப்பத்தொராவது அறிக்கை (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

19. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் 1971-72 முதல் 1976-77 வரையிலான ஆண்டுக் கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கை மீதான மேற்படி குழுவின் முப்பத்தி இரண்டாவது அறிக்கை (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

---

* 20—2—1984 அன்று மேலவை முன் வைக்கப்பட்டது.

@ 20—2—1984 அன்று மேலவை உறுப்பினர்கள் அனைவருக்கும் சுற்றோட்ட முறையில் அனுப்பப்பட்டது.

## இணைப்பு

**(115 ஆம் பக்கத்தில் இனம் 3-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)**

மேல்நிலை வகுப்புகளில் கல்வி கற்பிக்கும் "உட்படுத்தப்பட்ட" ஆசிரியர்களுக்குப் பத்துமாத பயிற்சி வகுப்பினை மாநில கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவனத்தின் மூலம் அளிப்பதற்கு 23—5—1983-ல் அரசு ஆணை பிறப்பித்தது. இப்பயிற்சி வகுப்பினை இரண்டு தவணைகளில் in two batches நடத்தும்படி ஆணையிடப்பட்டது. ஆனால் நிர்வாக நலன் கருதி இந்த பயிற்சி வகுப்பினை ஒரே முறையில் நடத்தி முடிக்குமாறு பள்ளி கல்வி இயக்குனர் கேட்டுக்கொண்டதற்கு ஏற்ப, இப்பயிற்சியை ஒரே தவணையில் நடத்த ஆணை வெளியிடப்பட்டது. இந்த பயிற்சி வகுப்பிற்கு பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. பயிற்சி அளிக்கப்பட உள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பாடத்திலும் பின்வருமாறு :—

கணக்கு—850.

இயற்பியல்—800

வேதியல்—830

தாவரவியல்—690

விலங்கியல்—780

மொத்தம்—3,950.

இந்த உட்படுத்தப்பட்ட ஆசிரியர்களுக்குப் பாடங்களை அச்சிட்டு வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. பாடங்கள் அச்சிடப்பட்ட உடன் பயிற்சி வகுப்புகள் தொடங்கப்படும்.

## பொருளடக்கம்.

21—2—1984

பக்கங்கள்.

1. இரங்கல் தீர்மானம் .. .. .. 199—200

2. அரசின் தீர்மானம்—
   கேள்வி நேரம் கைவிடப்படல் .. .. .. 200

3. அறிவிப்புகள்—
   (1) ஆளுநரிடமிருந்து செய்தி .. .. .. 200
   (2) பேரவையிலிருந்து செய்தி .. .. 201
   (3) ஆளுநர் அவர்களிடமிருந்து நிதிநிலை அறிக்கை குறித்து செய்தி .. .. 201
   (4) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு .. 201

4. கவன ஈர்ப்பு—
   (1) உணவுப் பொருட்களின் விலை உயர்ந்துள்ளது குறித்து .. .. .. .. 202—205
   (2) ஈரோடு, குமாரபாளையம், சுந்தரம் நூற்பாலையில் பெண் தொழிலாளர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டது குறித்து 205—207

5. அரசின் சட்ட முன்வடிவுகள்—
   (1) 1984 ஆம் ஆண்டு மதுரை சர்க்கரை நிறுவன (நிருவாகப் பணியை எடுத்துக் கொள்ளுதலும், மாற்றுதலும்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1884) .. .. 208—220
   (2) 1984 ஆம் ஆண்டு பச்சையப்பன் பொறுப்புக்கழகம் (நிருவாகத்தை எடுத்துக் கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1984) .. .. .. 220—236

5. அரசின் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி. பக்கங்கள்.

(3) தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு தொலைக் காட்சியில் வீடியோ கேசட் ரெக்கார்டு கள் மூலம் (காணொலிச் சுருள் பேழை) திரைப்படங்கள் காட்டுதல் (முறைப் படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1984) .. .. 237—260

6. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. 261



## தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

---

வெள்ளிக்கிழமை, 1984 பிப்ரவரி 24.

மாசி 12, ருத்ரோத்காரி—திருவள்ளுவராண்டு 2015.

சென்னை, செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. இரங்கல் தீர்மானம்.

### தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. சு. நடராசன் அவர்கள் இயற்கை எய்தியது குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : மாண்புமிகு உறுப்பினர்களே,

"1971 முதல் 1976 வரையும், 1976 முதல் 1980 வரையும், மீண்டும் 1980 முதல் தொடர்ந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினரான திரு. சு. நடராசன் அவர்கள் 23—2—1984 அன்று தஞ்சையில் இயற்கை எய்தியது குறித்து இந்த அவை தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது. அன்னாரது மறைவால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு இம்மேலவை தனது இரங்கலையும் பரிவுணர்ச்சியையும் தெரிவித்துக்கொள்கிறது."

அவர் 1964 முதல் 1969 வரை நகராட்சி மன்ற உறுப்பினராக இருந்தார். அவர் பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு பல முறை சிறை சென்றவர். அவரது மறைவால் பேரவை ஓர் அரிய நண்பரை இழந்து விட்டது.

அன்னாரது மறைவிற்கு அஞ்சலி செலுத்தும் வகையில் உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நின்றனர்.)

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மறைந்த பெரியாருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் இந்த அவை இத்துடன் ஒத்திவைக்கப்பட்டு, மீண்டும் 11 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

**மீண்டும் அவை 11-00 மணிக்குக் கூடியது.**

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை.)

2. அரசின் தீர்மானம்.

கேள்வி நேரம் கைவிடப்படல்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** தலைவர் அவர்களே,

"மேலவை விதி 22-ஐ நிறுத்தி வைத்து இன்று கேள்வி நேரம் கைவிடப் படலாம்"

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"மேலவை விதி 22-ஐ நிறுத்தி வைத்து இன்று கேள்வி நேரம் கைவிடப் படலாம்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

3. அறிவிப்புகள்.

(1) ஆளுநரிடமிருந்து செய்தி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஆளுநர் அவர்கள் 1984 ஆம் ஆண்டு மதுரை சர்க்கரை நிறுவன (நிருவாகப் பணியை எடுத்துக் கொள்ளுதலும், மாற்றுதலும்) சட்ட முன்வடிவை ஆய்விற்கு எடுத்துக்கொள்வதற்கு தனது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.



(2) பேரவையிலிருந்து செய்தி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளின் படிகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன் :—

(1) 1984 ஆம் ஆண்டு மதுரை சர்க்கரை நிறுவன (நிருவாகப் பணியை எடுத்துக் கொள்ளுதலும், மாற்றுதலும்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1984).

(2) 1984 ஆம் ஆண்டு பச்சையப்பன் பொறுப்புக் கழகம் (நிருவாகத்தை எடுத்துக் கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1984).

(3) தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு தொலைக் காட்சியிலே வீடியோ தொடர் செய்திகள் மூலம் (காணொலிச் சுருள் பேழை) திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1984).

(3) ஆளுநர் அவர்களிடமிருந்து நிதி நிலை அறிக்கை குறித்து செய்தி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அரசியலமைப்பின் 202 (1) வது பிரிவின்படியும் மேலவை விதி 151 (1)-ன்படியும் 1984-85 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை 3—3—1984 சனிக்கிழமை மாலை 4-00 மணிக்கு சட்டமன்ற மேலவைக்கு அளிக்க வேண்டும் என்று ஆளுநர் அவர்கள் குறித்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(4) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு செய்தபடி இன்று மேலவையில் அரசின் சட்ட முன்வடிவுகள் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும். 25—2—1984 அன்று மேலவைக் கூட்டம் இல்லை.

[1984 பிப்ரவரி 24

## 4. கவன ஈர்ப்பு.

### (1) உணவுப் பொருட்களின் விலை உயர்ந்துள்ளது குறித்து.

**திரு. பா. ரா. தாமஸ் :** தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியைக் குறித்து மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"உணவுப் பொருட்களின் விலை அதிக அளவுக்கு உயர்ந்துள்ளதன் காரணமாக மக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள் குறித்தும், விலைவாசியைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ".

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. பா. ரா. தாமஸ் :** தமிழகத்தின் உணவுக் களஞ்சியமாகக் கருதப்படுகிற தஞ்சாவூர் மாவட்டத்தில் 23 இலட்சம் டன் வரை நெல் விளைய வேண்டும். ஆனால் நடப்பு ஆண்டில் பாதி கூட விளையவில்லை. இந் நிலையில் அரசு வெளிச் சந்தையில் நெல்லின் விலையை எப்படி கட்டுப்படுத்த இருக்கிறது ? அதுபற்றி இதுவரை அரசு என்னென்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** நமக்குத் தேவைப்படுகின்ற பற்றாக்குறையை மத்திய இருப்பிலிருந்து நாம் பெறுவது தவிர வேறு வழியே இல்லை. மத்திய இருப்பிலிருந்து நமக்குத் தேவைப்படுகின்ற பற்றாக்குறையைத் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டு கூட எதிர்பாராத வகையில் ஏற்பட்ட வெள்ளச் சேதம் காரணமாக நம்முடைய கையிருப்பு இன்னும் குறையும். இந்த நிலைமைகளை யெல்லாம் மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறோம். மத்திய அரசு நமக்கு இன்றைக்கு 40 ஆயிரம் டன் அரிசியும் 35 ஆயிரம் டன் கோதுமையும் வழங்கி வருகிறது. சென்ற இரண்டு மாதங்களாக 40 ஆயிரம் டன்னுக்கு பதிலாக 35 ஆயிரம் டன் அரிசிதான் வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். ஒரு இலட்சம் டன் அளவுக்காவது வழங்கினால்தான், எல்லோருக்கும் பாரபட்சம் இல்லாமல் உணவுப் பங்கீடு செய்ய முடியும் என்று நாம் சொல்லிக்கொண்டு வருகிறோம். குறைந்த அளவு 80 ஆயிரம் டன் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஆனால் மத்திய அரசு 35 ஆயிரம் டன் அரிசி

---

@ 263-266 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.





தான் வழங்குகிறது. அதையும் மீறி வெளிச் சந்தையிலிருந்து வாங்க அனுமதி தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வருகிறோம். குறிப்பாக ஆந்திர மாநில வெளிச்சந்தையிலே வாங்க மத்திய அரசு அனுமதி தந்தால், நாம் அப்படி வெளிச்சந்தையிலே வாங்கி பற்றாக்குறையை ஈடுகட்ட முடியும். காரணம், மத்திய அரசு அனுமதியளித்தால்தான் ரிசர்வ் பாங்க் கிரெடிட் கிடைக்கும். ஆகவே அப்படிப்பட்ட முயற்சிகளை அவ்வப்போது மாநில அரசு எடுத்து வருகிறது. இப்படி செய்யப்படும் விளக்கங்களையும் மத்திய அரசுக்கும் மாநில அரசு தெரியப்படுத்தி வருகிறது.

**திரு. பா. ரா. தாமஸ் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நமது மாநிலத்தில் எண்ணெய் விலை அதிகமாக இருக்கிறது. ஆனால் தேங்காய் விலை ஐந்து ரூபாயாக விற்பதைப் பார்த்தால், நமக்கு வேதனையாக இருக்கிறது. தேங்காய் எண்ணெய் கிலோ ரூ. 40-க்கு விற்கிறது. நல்லெண்ணெய் ஒரு கிலோ ரூ. 28 ஆக விற்கிறது. கடலை எண்ணெய் ஒரு கிலோ ரூ. 24 ஆக விற்கிறது. ஆனால் பாமாலின் எண்ணெய் அதைவிட ரூ. 15 குறைவாக, அதாவது ரூ. 9-க்குக் கிடைக்கிறது. ஆனால் கடைகளில் போய் கடலை எண்ணெய் கேட்டால், கடலை எண்ணெய் கொடுக்காமல், இந்த பாமாலினை வைத்துக்கொண்டு ரூ. 15-க்கு விற்கிறார்கள். ஆகவே அரசு இதில் முயற்சி செய்து அதிகமான பாமாலின் எண்ணெயைய் மார்க்கெட்டுக்குக் கொண்டு வந்தால், சாதாரண மக்களின் எண்ணெய் தேவை பூர்த்தி செய்யப்படும். பருப்பு விலைகளும் அதிகமாக இருக்கின்றன. இவைகளைக் குறைக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, எண்ணெய் விலைகளைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போன்று, தேங்காய் எண்ணெய் விலை ஏறியிருப்பதற்குக் காரணம், தேங்காய் விலை ஏறியிருக்கிறது. அப்படி தேங்காய் விலை ஏறியிருப்பதற்குக் காரணம், தேங்காய் உற்பத்தி கடந்த இரண்டாண்டு காலமாகக் குறைந்திருக்கிறது. தேங்காய் உற்பத்தி கேரளா வில் குறைந்ததால், கேரளாவில் தேங்காய் விலை ஏறியதன் அடிப்படையில் அதன் விலை நாளுக்கு நாள் ஏறிக்கொண்டே போகிறது.

கடலை எண்ணெய் நமது மாநிலத்தில் கிடைக்கிற ஒன்று. மற்ற எண்ணெய்களைப் பொறுத்தவரையில், நாம் எப்போதும் பிற மாநிலங்களை எதிர்பார்த்துத்தான் இருக்க வேண்டியிருக்கிறது. பாமாலின் எண்ணெய் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது. அதன் விலையும்

கட்டுப்பாடாகிற நிலையில் இருக்கிறது. அது தமிழ் நாட்டிற்குப் பயன் படுகிறது. ஆகவே பாமாயில் எண்ணெயை அதிக அளவில் வழங்கிடத் தரவேண்டுமென்றும், அப்படித் தரப்படும் எண்ணெய் உணவுப் பங்கீட்டுக் கடைகள் மூலம் கொடுக்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டிருக் கிறோம். ஒரு கார்டுக்கு ஒரு மாதத்திற்கு ஒரு கிலோ பாமாயில் என்ற அடிப்படையில் பார்த்தாலும், மாதத்திற்கு நமக்கு 12,500 டன் பாமாயில் தேவைப்படுகிறது. ஆனால் மத்திய அரசு 1,500 அல்லது 5,000 டன் தான் ஒதுக்குகிறார்கள். ஆகவேதான் இரண்டு மாதத்திற்கு ஒரு முறை கார்டு களுக்குத் தருவது என்ற அடிப்படையில், மதுரை, சென்னை போன்ற நகரங்களில் ஒரு மாதத்திற்கு ஒரு கார்டுக்கு ஒரு கிலோ என்றும், மற்ற இடங்களில் இரண்டு மாதத்திற்கு ஒரு கிலோ என்றும் தர வேண்டியிருக் கிறது.

இப்படிக் கொடுக்கப்படுகிற எண்ணெயை 12,500 டன்னுக்காவது உயர்த்த வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். மத்திய அரசு, இப்போது எண்ணெய் இறக்குமதிக்காக ரூ. 800 கோடியை அந்நியச் செலவாணியாகச் செலவழித்து வருவதாகவும், ஆகவே, உள்நாட்டிலேயே எண்ணெய் உற்பத்தியைப் பெருக்கிட, அதிகப்படியான எண்ணெய் வித்துக் களை வழங்கவும், எண்ணெய் வித்துக்களைப் பயிரிடுகிற நிலையங்களைப் பெருக்கவும் மத்திய வேளாண்மைத் துறையும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. மாநில வேளாண்மைத் துறையும் அதற்கான முயற்சிகளை எடுத்து வருகிறது. ஆக இரண்டு மூன்று ஆண்டுகளில் எண்ணெய் வித்துக் களை முடிந்த அளவுக்கு அதிகமாக உற்பத்தி செய்கிற முயற்சியில் நாம் ஈடுபட்டு வருகிறோம்.

பாமாயில் எண்ணெய் உற்பத்தியைப் பொறுத்தவரையில், நாம் அதிக அளவில் பாம் மரங்களை உற்பத்தி செய்து அதைப் பெருக்குவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றனவா என்று மத்திய அரசு ஆராய்ந்து கொண்டிருக் கிறது. பாமாயிலும் எதிர்பார்த்த அளவில் இறக்குமதி செய்யப்படாமல் இருக்கிறது. மலேசியாவிலிருந்துதான் மத்திய அரசு பாமாயிலை இறக்கு மதி செய்கிறது. இப்போது மலேசியாவுக்கும் மத்திய அரசு [illegible]ிருக் கிறது. குறைந்த விலையில் எண்ணெய் கிடைக்க, சோயா பீன்ஸ் எண்ணெய் இறக்குமதி செய்து தரலாம் என்று மத்திய அரசு நமக்குச் சொல்கிறது. அத னால் உடலுக்குக் கெடுதல் இல்லையென்றும் சொல்கிறார்கள். உடலுக்கும் நல்லது என்ற அளவில் முக்கியமாக மிக மிகத் தேவை என்ற அடிப்படையில்,



குறிப்பாக தென்னக மக்களின் உணவுப் பழக்கங்களில் எண்ணெய் அதிகமாகச் செலவு செய்யப்படுகிறது, அதிலும் குறிப்பாக தமிழக மக்களின் உணவில் எண்ணெய் அதிகமாக உபயோகப்படுத்துகிற பழக்கம் இருக்கிறது என்பதன் காரணமாக இந்த மாநிலத்தைத் தனியாகக் கருதி, இந்த மாநிலத்தை விசேஷமாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

## (2) ஈரோடு, குமாரபாளையம், சுந்தரம் நூற்பாலையில் பெண் தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டது குறித்து.

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"ஈரோடு, குமாரபாளையம், சுந்தரம் நூற்பாலையில் பணிபுரிந்து வந்த 600 பெண் தொழிலாளர்களை ஒருதலைப் பட்சமாக வேலை நீக்கம் செய்ததைக் கண்டித்து நடந்துவரும் போராட்டத்தினால் மக்கள் மத்தியில் எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து."

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு விளக்கமான அறிக்கை @ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 11-10)

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமாரபாளையத்திலுள்ள சுந்தராம் ஸ்பின்னிங் மில்ஸ் கடந்த 25 ஆண்டு களுக்கு மேலாகச் செயல்பட்டு வந்தும், தமிழ் நாட்டிலுள்ள பஞ்சாலை களில் உள்ள பொதுவான வேலைப்பளுவைக் காட்டிலும் கூடுதலான வேலைப் பளுவைத் தொழிலாளர்கள் மீது சுமத்தி வருவதும், நிரந்தரத் தொழிலாளர் களை மிகக் குறைந்த அளவிலேயே வேலைக்கு வைத்திருப்பதும், மாநிலப் பஞ்சாலைகளில் அளிக்கப்படும் நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்தைவிட குறைவான சம்பளத்தைத் தொழிலாளர்களுக்கு வழங்கி வருவதும், அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? இக்குறைபாடுகளைத் திருத்துவதற்கு அரசு முன்வருமா?

@ 267- 268 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்** : மாண்புமிகு தலைவர் அவர்களே, அங்கே ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு அதன்படி ஆட்களை வேலைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எடுத்துக் கொள்ளப்படாத ஆட்களை மீண்டும் காலியிடங்கள் ஏற்படும்போது எடுத்துக்கொள்கிறோம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிற கவன ஈர்ப்புத் தீர்மானம், தொழிலாளர்களின் ஊதிய உயர்வைப்பற்றியதல்ல. எனவே அதைப் பற்றி தனியாகக் கேள்வி கேட்டால், நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறது இந்த அரசு. தனியாகக் கேள்வி போட வேண்டும் என்பது கூட அல்ல. ஒரு தொழில் தகராறு எழுப்பப்பட்டாலும் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம். ஒரு ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்க, அது சரியாகச் செயல்படுத்தப்படவில்லை என்று புகார் செய்யப்பட்டால், தொழில் தகராறுகள் சட்டத்தின் பிரிவு 29-ன் கீழ் அவர்களை பிராசிகியூஷன் செய்யவும் அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. ஒரு வார்னிங் கொடுத்து விட்டு பிராசிகியூஷன் செய்யவும் அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன்** : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மில்லில், ரீலிங், பேண்டிங், பேக்கிங் போன்ற நிரந்தரத் தன்மை வாய்ந்த வேலைகளுக்குக் கூட ஒப்பந்த முறையில் தொழிலாளர்களை வைத்துக் கொண்டு வேலை வாங்குவது ஒப்பந்தமுறை சம்பந்தமான சட்டத்தின் விதிகளுக்குப் புறம்பானது அல்லவா? இதைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா? மேலும் வின்ஸ், பெஸ்ட் பேக்கிங் போன்ற ஒப்பந்தக் கம்பெனிகள் இந்த சுந்தரம் மில் முதலாளியோ நேரில் சம்பந்தப்பட்ட அமைப்புகளாக இருக்கிற காரணத்தால் நியாயமான கூலியைக் கொடுக்காமல் தவிர்க்கக் கையாளுகிற தந்திரமாக இதை அரசு கருதி, இந்தப் போக்கைத் தடுத்திட அரசு நடவடிக்கை எடுக்கவும், தொழிலாளர்களுக்கு நியாயக் கூலியை வழங்கவும் முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்** : மாண்புமிகு தலைவர் அவர்களே எங்கேயும் ஒப்பந்தம் செய்யப்படுவதைத் தடை செய்ய வேண்டுமென்றால் அதற்காக ஒரு குழு இருக்கிறது. அந்தக் குழு அதற்கான பரிந்துரையை



வழங்கும், அந்தப் பரிந்துரையை அரசு பரிசீலனை செய்து அதற்குப் பிறகு தான் ஒப்பந்தத் தொழிலாளர்கள் அங்கே இருக்கலாம் அல்லது கூடாது என்று ஆணையிட முடியும். எனவேதான் அந்தச் சட்டத்தின் பெயரே

"Contract Labour (Regulation and Abolition) Act"

என்பதாகும். அதாவது முதலில் ரெகுலேட் செய்ய வேண்டும், பிறகுதான் அபாலிஷ் செய்ய வேண்டும். அரசே அதைத் தனியாகச் செய்வதில்லை. அதற்காக தனியாக ஒரு கமிட்டியைப் போடுகிறோம். அந்தக் கமிட்டியின் சிபாரிசின்பேரில் இறுதியான முடிவை எடுக்கிறோம். அந்தச் சட்டத்திலேயே ஒரு ஓட்டை இருக்கிறது, ஒரு லெக்குனா இருக்கிறது. அது என்னவென்றால், ஒரு தொழிற்சாலையில் ஒப்பந்தத் தொழிலாளர்கள் இருக்கக் கூடாது என்று சொல்லி ரத்து செய்துவிடுகிறோம்—அதாவது பரிந்துரையின் அடிப்படையில் அப்படி ஒரு முடிவு செய்துவிட்டால், அதற்குப் பிறகு நிலைமை என்ன? ஒரு 200 பேர் ஒப்பந்தத் தொழிலாளர்களாக இருந்து அதை ரத்து செய்துவிட்டால், அவர்களுக்குப் பதிலாக யாரை வைப்பது என்பதுபற்றி சட்டத்தில் ஒரு ஷரத்தும் இல்லை. செக்ஷன் 10 (3) என்று நினைக்கிறேன். அதற்காகத்தான் மத்திய அரசுக்கு நாம் எழுதியிருக்கிறோம். 200 பேரை நீக்கி விட்டு முதலாளி தன் இஷ்டத்திற்கு ஆட்களை வேலைக்கு வைக்க ஆரம்பித்துவிட்டால், இந்த 200 பேரும் நடுத்தெருவில் தான் இருக்க வேண்டும். அப்படித்தான் சட்டம் இருக்கிறது. சட்டம் திருத்தப்பட வேண்டும் என்கிறோம்.

"Whenever contract labour is abolished, the principal employer should employ those workers who were rendered surplus on account of the abolition of contract labour"

என்று நாங்கள் இப்போது மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம். ஆகவே, காண்ட்ராக்ட் லேபர் விஷயத்தில் இந்த அரசு மிகுந்த அக்கறையோடு இருக்கிறது. அதை 'ரெகுலேட்' செய்ய வேண்டும், 'அபாலிஷ்' செய்ய வேண்டும் என்பதில் அக்கறையோடு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏதாவது புகார் இருந்தால், அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால் அல்லது எழுத்து மூலமாகத் தொழில் தகராறாக எழுப்பினால், அரசு அக்கறையோடு அதைக் கவனிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## 5. அரசின் சட்ட முன்வடிவுகள்.

**(1) 1984 ஆம் ஆண்டு மதுரை சர்க்கரை நிறுவன (நிருவாகப் பணியை எடுத்துக் கொள்ளுதலும், மாற்றுதலும்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1984).**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1984 ஆம் ஆண்டு, மதுரை சர்க்கரை நிறுவன (நிருவாகப் பணியை எடுத்துக் கொள்ளுதலும், மாற்றுதலும்) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1984) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1984 ஆம் ஆண்டு, மதுரை சர்க்கரை நிறுவன (நிருவாகப் பணியை எடுத்துக் கொள்ளுதலும், மாற்றுதலும்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1984) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, "On a matter of clarification" ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையிலும், கரும்பு அரவைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை ; ஆகவே அங்கேயுள்ள விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிற சங்கடத்தைத் தீர்ப்பதற்காக அரசு இந்த ஆலையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற வகையில், சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது. எந்தச் சூழ்நிலையின் காரணமாக, எதனாலே அந்த நிலைமை ஏற்பட்டது என்ற விவரம் எதும் இங்கே தரப்படவில்லை. எனவே அதுபற்றி முழுமையான தகவல்களையும் அரசுத் தரப்பில் தந்தால், சட்ட முன்வடிவை முழுமையாக விவாதிப்பதற்கும் சுவையூட்டுவதற்கும் உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தக் குறிப்பிட்ட சர்க்கரை ஆலையைப் பொறுத்தவரையில், முறைகேடுகளும், குறைபாடுகளும், ஒழுங்கீனங்களும் நிறைந்ததாகச் செயல்பட்ட காரணத்தால், உழவர்களுக்கும், பணியாளர்களுக்கும் பாதிப்பு

269—291 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.





 (திரு. சி. பொன்னையன்)

ஏற்பட்டது. எனவே உழவர்கள் மற்றும் பணியாளர்களின் கோரிக்கைக்கு ஏற்பதான் இந்த சர்க்கரை நிறுவனம் அரசால் கையகப்படுத்தப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

குறிப்பாக இந்த சர்க்கரை ஆலையைப் பொறுத்த வரைக்கும் 1982-83 ஆம் ஆண்டுக்கு சட்டபூர்வமாக கரும்புக்கு அரசு ஒரு விலையை நிர்ண யித்தது. அரசு நிர்ணயித்த இந்த விலையில் ரூ. 18.30 இலட்சத்தை அந்த நிர்வாகம் உழவர்களுக்குத் தராத காரணத்தால் உழவர்களுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டது.

அது மட்டுமல்லாமல் 1982-83 ஆம் ஆண்டுக்கு உழவர்களுக்குத் தர வேண்டிய 46 இலட்சம் ரூபாயை இந்த நிர்வாகம் தரத் தவறிவிட்டது. மேலும் விவசாயிகளிடமிருந்து வாங்கிய கரும்புக்கான விலையில் கழிக்கப்பட்ட பயிர் கடன் தொகை ரூபாய் 93 இலட்சத்தை வங்கியில் செலுத்த இந்த நிர்வாகம் கடமைப்பட்டிருக்கிறது. அந்த 93 இலட்சம் ரூபாயை வங்கிக்குச் செலுத்த இந்த நிர்வாகம் தவறிவிட்டது. கரும்பு விவசாயிகளிடமிருந்து வசூலிக்கப்பட்ட ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபாயை போக்குவரத்துச் செலவினங்களுக்காக லாரி உரிமையாளர்களிடம் சேர்க்க வேண்டுமென்ற நிலை இருந்தும், அதைச் செய்ய இந்த நிர்வாகம் தவறிவிட்டது.

11, 12 மாதங்களில் கரும்பை அவ்வப்போது அரவை ஆலைக்கு அனுப்பினால்தான் ரெக்கவரி நல்ல நிலையில் இருக்கும். அதனால் உழவர்களுக்கு அதிகப்படியான இலாபம் கிட்டும். அதை விடுத்து பல மாதங்கள் அந்தக் கரும்பை வெட்டி ஆலைக்கு நிர்வாகம் அனுப்பாத காரணத்தால், உழவர்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுகிற முட்டுவழிச் செலவு அதிகமாகிவிட்டது அதற்கும் மேலாக கரும்பினுடைய ரெக்கவரி அளவும் குறைந்து கிட்டத்தட்ட 50 இலட்சம் ரூபாய் அளவிற்கு இழப்பு ஏற்பட்டுவிட்டது. மேலும் ஐந்தா விரம் டன் கரும்பு முற்றிய நிலையை அடைந்ததால், உழவர்களுக்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், கொள்முதல் வரி, கரும்பு மீதான வரி, தண்ணீர் வரி, மின்கட்டண பாக்கி, பிராவிடென்ட் பண்ட் ஆகிய இனங்களுக்காக 4 இலட்சத்து 79 ரூபாய் பாக்கி இருக்கிறது. இந்தப் பணத்தை அரசுக்கு இ

(திரு. சி. பொன்னையன்) [1984 பிப்ரவரி 24

நிர்வாகம் கட்டத் தவறிவிட்டது. பணியாளர்களுக்குரிய ஊதியத்தையும்
தரத் தவறிவிட்டது. இதுபோன்ற பல்வேறு காரணங்களுக்காகவும் உழவர்
களின் நலன் கருதியும், பணியாளர்களின் நலன் கருதியும் இதை அரசு
எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்
வடிவின் மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். உழவர்களின்
நலன் கருதியும், பணியாற்றுகிற தொழிலாளர்களின் நலன் கருதியும், அரசு
இதை ஏற்பது சிறப்பானது என்றாலும், இதிலே அரசின் கொள்கையை
மக்களுக்கும், தொழிலதிபர்களுக்கும் தெளிவாக்கவேண்டுமென்று நான்
கேட்டுக்கொள்கிறேன்.

கர்நாடக அரசு தன்னுடைய தொழில் கொள்கையை வெள்ளை அறிக்
கையாக விவரமாகவே வெளியிட்டிருக்கிறார்கள். அதைப்போல நாமும்
என்னென்ன நிலைகளில் இப்படி ஏற்போம் என்பதைத் தெரிவித்தால் நல்லது.
நிர்வாகங்கள் இப்படி இப்படி தவறு செய்தால் நிர்வாகத்தை அரசு ஏற்கும்
என்று அவர்களுக்கு அச்சம் ஏற்படுகிற வகையில் தெரிவித்து நாம்
நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததிலிருந்து, அவர்கள் பின்
கட்டணத்தை பல காலமாகக் கட்டாமல் இருந்திருக்கிறார்கள், தர வேண்டிய
வைகளைத் தராமல் இருந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது.
இப்படிப் பல இடர்பாடுகள் பல காலமாக நடந்திருக்கின்றன.
ஒருவேளை முன்கூட்டியே நடவடிக்கை எடுத்திருந்தால் இப்படிப்பட்ட
அதிகமான பளுவை அரசாங்கம் ஏற்க வேண்டிய கட்டாயம் வராது. குறிப்
பாக தமிழ்நாட்டில் தொழிலில் மிகுந்த எச்சரிக்கையாக இருக்க வேண்டு
மென்ற கால கட்டத்திலே இருக்கிறோம் என்று கருதுகிறேன். காரணம்,
இந்தியாவில் உள்ள தொழிலதிபர்களைக் கணக்கிட்டால், மொத்தம் 100
தொழிலதிபர்கள் என்றால், அவற்றுள் 80-க்கும் மேலேதான் தமிழ்நாட்டில்
அவர்கள் வரக்கூடும். இப்படி மேலே இருக்கக்கூடிய தொழிலதிபர்கள்
தங்கள் நலத்திற்காக நடக்கின்ற ஆலைகளை அரசு ஏற்க கட்டாயப்படுத்தக்
கூடிய அளவிற்குத் தூண்டுதலாக அமைந்து விடுவார்களோ என்ற அச்ச
உணர்வு இருக்கிறது. பொதுவாக 'சிக் இன்டஸ்ட்ரி' என்றால் வங்கியின்
துணையைக் கொண்டுதான் அதை ஏற்கிறார்கள். கல்கத்தாவில் உள்ள



1984 பிப்ரவரி 24] (டாக்டர் இரா. சனார்த்தனம்)

தொழில் வங்கியின் துணையைக் கொண்டுதான் அதைச் செய்கிறார்கள். ஆகவே தமிழ்நாட்டில் தொழில்களைத் துவக்க வேண்டுமென்று முழக்கம் போய் தொழில் வைத்திருப்பவர்கள் குரல் கொடுக்க வேண்டிய கட்டாயம் வரக்கூடாது என்பதால், இந்த நடவடிக்கையை நான் வரவேற்கக்கூடிய நிலையில், தமிழ் நாட்டுத் தொழிலதிபர்களுக்கு எச்சரிக்கையாக இருக்கக் கூடிய வகையில் இதில் அரசு செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காரணம் பல தொழில்கள் கைமாறுகிற நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம் அரசு என்று நான் சொல்ல

(முற்பகல் 11-20)

மாட்டேன். ஒருவேளை தொழிலதிபர்கள் அகலக் கால் வைக்கிறார்களோ, ஆழக்கால் வைக்கிறார்களோ, அல்லது நிர்வாகத்தை ஏமாற்றுவதைப்பற்றிக் கவலைப்படாமல் அவர்கள் இருக்கிறார்களோ? இப்படிப் போய்விடுமானால் அதனுடைய தொழில் நிலை மிகவும் பாதிக்கப்பட்டு நாம் வெறும் கூலிகளாகத்தான் இருப்போம் என்கின்ற நிலை வந்துவிடும் என்பதாலே, அரசு இதிலே மிகுந்த கண்டிப்போடு இருக்க வேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். தொழிலாளர் நலன் கருதி அரசு நிர்வாகத்தை ஏற்பதை நான் வரவேற்கிறேன். அதே போல மற்ற இடங்களிலே எப்படி நடக்கின்றன என்பது அவ்வப்போது கண்காணிக்கப்பட வேண்டும். இருக்கிற தொழிலாளர்கள் தொழில் நடத்தலாம். முழுப் பணமும் அவர்கள் போடப்போவது இல்லை. 90 சதவீதம் மத்திய அரசினுடைய பணம்; வங்கியினுடைய பணம். இதைத் தான் செய்கிறார்கள். இதிலே நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் எப்படி நடந்து கொண்டிருக்கின்றன என்பதை நினைத்துப் பார்க்கிறபோது, அதனுடைய முகவர்கள், ஏஜண்டுகள் யாருக்கு ஏஜண்டாக இருக்கிறார்களோ என்ற சந்தேகம் வருகிற கால கட்டத்தில், அரசு இந்த முயற்சியிலும் முடிவாக வந்திருக்கிறார்கள். அதே நேரத்தில் தொழிலதிபர்களிடம் மிகுந்த எச்சரிக்கையோடு இருக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ் :** தலைவர் அவர்களே, மதுரை சுகர்ஸ் லிமிடெட் என்ற நிறுவனத்தை மேற்கொள்வது குறித்து நமது மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகின்றேன்.

(திரு. பா. ரா. தாமஸ்) [1984 பிப்ரவரி 24

பல காலம் நல்ல முறையிலே செயல்பட்டு வந்த இந்த நிறுவனமானது, பல ஊழல்கள் செய்த காரணத்தினாலும், பொது நலன் குறித்தும், விவசாயிகளுடைய நலன் குறித்தும் நம்முடைய அரசு இந்த ஆலையை மேற்கொள்ள வேண்டி எடுக்கப்பட்ட நடவடிக்கையை நான் முழுமையாக வரவேற்கிறேன். ஆரம்பத்திலே இந்தத் தொழில் நிறுவனம் 300 டன் அளவு சர்க்கரையைத் தான் பிழிந்து வந்தது. அதன் பிறகு ஆயிரம் டன் வரையிலும் பிழியக்கூடிய அளவிலே மிகவும் பழமையான யந்திரங்களுடைய நிறுவனம் சற்று நவீனப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் அதுவும் திறமையாகச் செயல்படுவதாகச் சொல்ல முடியவில்லை. பொதுவாக இத்தகைய சர்க்கரை ஆலையினுடைய தகுதியைத் தீர்மானிக்கும் போது, அந்த மில்லுக்கு அருகாமையிலேயே காதலூர் கோவாப்பரேட்டிவ் சுகர் மில்ஸ் இருந்தாலும் கூட, பாடி, தேனி, பெரியகுளம் பகுதி வரையிலுள்ள கரும்பு விளைவிக்கக்கூடிய விவசாயப் பெருங்குடி மக்கள் இந்த ஆலையிலேதான் கரும்பைக் கொடுக்க வேண்டுமென்ற சட்டம், நியதி இருக்கிறது. அந்த அடிப்படையிலே கரும்பைப் பிழிய முடியாமல், தோட்டத்திலேயே பாழாகக் கூடிய நிலை ஏற்பட்டது. அது மட்டுமல்ல, இவர்கள் கரும்பை வாங்கி, சர்க்கரையைப் பிழிந்து எடுத்துவிட்டு, பணத்தை ஆறு மாதம், ஒன்பது மாதம் வரையிலும் அந்த விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வழங்காமல் காலம் கடத்தி இருக்கிறார்கள்; சிலர் ஏமாற்றிகூட இருக்கிறார்கள். இது பெருத்த இன்னலைப் பெருக்கக் கூடிய நிலையிலே நம்முடைய அரசு இவைகளையெல்லாம் பார்த்து, சீர் தூக்கி, இதை எப்படியாவது பயனுள்ளதாக ஆக்க வேண்டுமென்று எடுத்த முடிவை நான் முழுமையாக வரவேற்கிறேன். அதே நேரத்தில் மற்றொரு கருத்தைக் கூற விரும்புகிறேன். ஆனால் நல்லூர் சுகர்ஸ் நிறுவனமானது சிறந்த முறையிலே பணியாற்றுகிறது; அலங்கா சிறந்த முறையிலே செயலாற்றுகிறது. அங்குள்ள விவசாயப் பெருங்குடி மக்களுக்கு முன்னதாகப் பணம் கொடுத்து, நியாயமாக, நேர்மையாக அவர்களுடைய கரும்புகளை வாங்குகிறார்கள். இவர்கள் பாண்டியராஜபுரத்தில் கொடுப்பதைவிட அதிகமாக விலை கொடுத்து, அவர்களை ஊக்குவித்து, முன் பணம் கொடுத்து, முறையாகச் செயல்பட்டு வருகிறார்கள். அந்த முறையிலே இந்த நிறுவனம் செயல்பட முடியவில்லை. அதை முழுவதுமாகச் சீர்படுத்த வேண்டும்; செம்மைப்படுத்த வேண்டும்; மக்களுக்குப் பயன்படும் வகையில் செயலாற்ற வேண்டும். அதே நேரத்தில் பெரியகுளம், தேனி, போடி பகுதிகளிலே நம்முடைய அரசு இதை அடிப்படையாகக்



1984 பிப்ரவரி 24] (திரு. பா. ரா. தாமஸ்)

கொண்டு சர்க்கரை பிழியக்கூடிய ஒரு ஆலையை உருவாக்க வேண்டுமென்று வலியுறுத்த விரும்புகின்றேன், ஏனென்றால் அந்தப் பகுதியிலே கரும்பு விளைவிப்பவர்களுக்கு, 25 கிலோ மீட்டர் வரை தான் அந்த ஆலையானது போக்குவரத்துச் செலவை ஏற்றுக் கொள்கிறது. கரும்பைக் கொண்டு வருவதற்கு மட்டும். மற்றுமுள்ள தொகையை, நூறு கிலோ மீட்டர் என்றால், 25 கிலோ மீட்டருக்கு பாண்டியராஜபுர நிறுவனம் ஏற்று, 75 கிலோ மீட்டருக்கு இந்த விவசாயப் பெருங்குடி மக்களே போக்குவரத்துச் செலவினையும் கொடுக்கிறார்கள் என்றால், பெருத்த நஷ்டத்திற்கும், இழப்பிற்கும் ஆளாவதால், இதைத் தவிர்க்கும் வகையிலே இதை முன் மாதிரியாகக்கொண்டு அந்தப் பகுதியிலே இந்த நிறுவனத்தினுடைய ஒரு கிளையாகக்கூட நம்முடைய அரசு ஒரு சர்க்கரை ஆலையை உருவாக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கூறிக்கொள்கிறேன்.

இதே நேரத்திலே இந்த நிறுவனத்தின்கீழ் ஒரு மேல்நிலைப் பள்ளி செயல்பட்டு வருகிறது. அங்கு 23 ஆசிரியர்கள் பணியாற்றி வருகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இது சர்க்கரை விஷயம்.

**திரு. பா. ரா. தாமஸ்** : மாண்புமிகு தலைவர் அவர்களே, அந்த நிறுவனத்தினுடைய ஆட்சிக்கு உட்பட்டு அந்த மேல் நிலைப் பள்ளி அங்கு இயங்கி வருகிறது. அந்தப் பள்ளியினுடைய ஆசிரியப் பெருமக்களுடைய கோரிக்கைகளை இதோடு சிறப்பாகக் கொண்டு சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அதை விசேஷமாக எடுத்துக்கொண்டு அந்த சப்ஜெக்டுக்குப் போகிறார்கள் என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ்** : நன்றி. அந்தப் பள்ளியிலே 600 மாணவர்கள் படிக்கிறார்கள். அது தனியார் பள்ளியாகவே செயல்பட்டு வருகிறது. இப்படி ஆலையை எடுத்த பிறகு, நாம் என்ன செய்வது என்றால், முறையாக அரசின் கல்வித் துறையிடம் ஒப்படைத்துவிட வேண்டும். ஏனென்றால் அந்த நிறுவனத்தோடு சேர்த்துக்கொண்டுள்ள பிரச்சினையைத் தீர்க்கும் போது, கல்வித் துறையோடு இந்தப் பள்ளியை இணைத்துவிட்டால், இந்தப் பள்ளி சிறப்பாகச் செயல்பட முடியும். நம்முடைய அரசு விளையாட்டுத் துறைக்கு எவ்வளவோ பணத்தை ஒதுக்கியிருந்தும் கூட, இந்த நிறுவனத்துக்கு ஒரு விளையாட்டு மைதானம் கூட இல்லை. இது மிகவும் வேதனை

மான நிலை. இது 1980-ஆம் ஆண்டிலே மேல் நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டது. ஆய்வுக்கூட வசதியில்லை; வகுப்பறை சரியாக இல்லை. ஆகவே அந்தப் பள்ளி சீராக, சிறப்பாக நடப்பதற்கு நம்முடைய மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள், இதைப்பற்றி ஆய்வு செய்து, தேவை என்று முழுமையாக நம்பி, ஒரு முடிவுக்கு வந்தால் நான் கூட அதை ஒரு வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன். அதைக் கல்வித் துறைக்கு மாற்றி அதைச் சிறப்புறச் செய்ய வேண்டுமென்று கேட்டு நன்றி கூறி, விடை பெறுகிறேன். வணக்கம்.

**திரு. க. இராமமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மதுரா சுகர்ஸ் லிமிடெட் ஆலையை ஏற்றுக் கொள்வதற்கான இந்தச் சட்ட முன்வடிவை, அதனுடைய நோக்கம் குறித்து வரவேற்கிறேன். அதில் சிலவற்றை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருவதற்கு விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்திருக்கின்ற விவரப்படி, விவசாயிகளுக்குத் தர வேண்டிய, அரசாங்கம் கட்டளையிட்டு நிர்ணயித்த, இந்த சர்க்கரை ஆலைகளுடைய முதலாளிகளை அல்லது நிர்வாகிகளை அழைத்து வைத்துப் பேசி முடிவு செய்து, சட்டபூர்வமாகக் கொடுக்கக் கூடிய அந்தப் பணம், 1982-83-லே கொடுக்கவேண்டிய அந்தப் பணம் கொடுக்கப்படவில்லை. அப்படிக் கொடுக்க வேண்டிய பணம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தி, அதற்கு அரசாங்கம் ஒரு உத்தரவாதம் தந்திருக்கிறது. ஆனாலும் அதற்குப் பிறகும்கூட அந்தக் குறிப்பிட்ட ஆலை தரவில்லை என்கின்றபோது, அதன் அடிப்படையிலேயே ஏன் அவர்கள் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்கவில்லை? விவசாயிகளுக்குச் செய்த மோசடி அது. இரண்டாவது அதை ஒப்புக்கொண்டு அதற்கு என்று நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டிருக்கிறது. இதில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்னொன்றையும் பார்க்க வேண்டும். இடையிலே அரசாங்கத்திலிருந்து ஏதாவது மான்யம் பெற்றிருக்கின்றார்களா என்பதையும் பார்க்க வேண்டும்.

அடுத்ததாக, அவர்கள் பெற்ற பணத்திலே, விவசாயிகளுக்குத் தர வேண்டிய ரூ. 46 லட்சம், வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய ரூ. 93 லட்சம், போக்குவரத்துச் செலவு என்று ரூ. 1,25,000 ஆகிய அளவில், நிர்வாகச் சீர்கேடு காரணத்தினால் வெளியிலே பாக்கி நின்று போயிருக்கிறது என்பது வேறு, ஆனால் விவசாயிகளிடமிருந்து பெற்ற கரும்புக்குப் பணம் தர



வில்லை. இந்த ஆண்டிலே எந்த சர்க்கரை ஆலையும் நஷ்டத்திலே நடக்கவில்லை. சர்க்கரை விலை அந்த அளவுக்கு இந்தியா முழுவதும் அதிகமாகி இருக்கிறது. ஆகவே நஷ்டம் என்று வேறு முறையிலே சொல்லலாம். அதாவது அவர்களின் புத்தக அளவிலே கொண்டு வைப்பட்டிருக்கலாமே தவிர வேறல்ல. நேரடியாக விவசாயிகளிடமிருந்து இவ்வளவு கரும்பு வாங்கினோம், அதனால் சர்க்கரை வரவில்லை என்றும், ஆகவே நஷ்டம் ஏற்பட்டிருக்கின்றது என்றும் அந்த ஆலை சொல்ல முடியாது. ஆக அந்த அடிப்படையிலே நஷ்டத்திற்கு அவர்கள்தான் பொறுப்பு ஏற்றாக வேண்டும். இதுபற்றி இந்த நிர்வாகத்தை கிரிமினல் ஆக்ஷனுக்குக் கொண்டு வந்தாக வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்ததாக, அரசு ஏற்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கின்ற, இந்தச் சட்ட முன்வடிவிலே ஒன்றைத் தெரிவித்திருக்கிறார்கள். "that no direction referred to in theclause . . ." 10-வது பிரிவிலே . . . 'கஸ்டோடியன்' (Custodian) என்பதாகக் கொண்டு வந்திருக்கின்றார்கள். மேனேஜ்மெண்டைப் பொறுத்த வரையில், அரசு ஏற்றதற்குப் பிறகு, அதற்கு ஒரு 'கஸ்டோடியன்' வேண்டுமென்ற அளவிலே, Sub-clause (c) of clause (10)லே

"thereupon, the existing, or new, Government company or the Custodian or Custodians so appointed, as the case may be shall be entitled to exercise, to the exclusion of all other persons, all such powers and do all such things." என்று இருக்கிறது.

அரசு ஏற்கின்றபோது, இதிலே 'கஸ்டோடியன்'—ஐ நியமிக்க வேண்டிய அவசியம் அல்லது அதற்கான விதி விலக்கு அல்லது விதியிலே புராவிஷன் செய்யவேண்டிய அவசியம் என்ன என்று தெரியவில்லை. ஏனென்றால் அரசே ஏற்கிறது. 'கஸ்டோடியன்' என்று வருகின்றபோது, அரசு என்பதைத் தாண்டி, தனியாரை அந்தத் துறையிலே கொண்டு வந்து புகுத்துவதற்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது. நாம் செய்யவில்லை என்பது வேறு, ஆனால் செய்யக்கூடாது. இப்போது செய்வதற்கே வாய்ப்பு இல்லாமல், சட்டம் அமைய வேண்டுமென்ற வகையிலே, இந்த 'கஸ்டோடியன்' ஒரு தேவையற்ற ஒன்று. இது என்னவாகும் என்றால், படிப்படியாக இந்த ஆலையோடு தொடர்பு கொண்டவர்கள் அல்லது வேறு தொலைவான அளவிலே தொடர்பு கொண்டவர்கள், மெல்ல மெல்ல இதனுடைய மேனேஜ்மெண்டிலே நுழைவதற்கான வாய்ப்பு வந்துவிடும். அதைத் தவிர்க்க

வேண்டும். அந்த அளவிலே இந்த 'கஸ்டோடியன்'க்கு அதிகாரமில்லை என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னொன்று duty of management என்ற அளவிலே வருகின்ற போது, இந்த நிர்வாகத்தைச் சீர்படுத்துவது, இதைச் செம்மைப்படுத்துவது, லாபகரமாக நடத்துவது, விவசாயிகளுக்கு நன்மை பயக்கும்படி நடத்துவது என்றெல்லாம் சொல்லப்படுகிறது. இதற்குப் பிறகு அரசு என்ன செய்யப்

(முற்பகல் 11-30)

போகிறது? மீண்டும் இது நல்ல நிலைமைக்கு வந்ததற்குப் பிறகு அவர்களிடமே ஒப்படைக்கப்போகிறதா? அல்லது அரசே ஏற்று நடத்தப் போகிறதா? ஆகவே the Government must be very clear on that. இதுபோன்ற நட்டம் வருகிற அளவில் கொள்ளை அடித்துவிட்டு, ஊதாரித்தனமாக விவசாயிகளுடைய பணத்தைச் செலவழித்து விட்டு, கடைசியாக இரண்டு ஆண்டுகளுக்கு, மூன்று ஆண்டுகளுக்கு, நான்கு ஆண்டுகளுக்கு, ஐந்து ஆண்டுகளுக்கு, ஆறு ஆண்டுகளுக்கு அரசாங்கத்திடம் விட்டு, நல்ல நிலைமைக்கு வந்த பிறகு மீண்டும் என்னுடைய ஆலை என்ற முறையிலே ஒப்புக்கொள்வது என்ற நிலைமையை உருவாக்குவது நல்லதல்ல. ஆகவே, if the Government takes, it is the final thing. அரசே ஏற்றுக்கொள்கிறது. ஆனால் அரசாங்கம் அதை நடத்த விரும்பவில்லை என்றால், அதை கூட்டுறவுத் துறைக்குக் கொண்டு வரலாம். அதில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்குச் சொந்தமாக்கலாம், அல்லது தொழிலாளர், விவசாயிகள் இரண்டு பேரும் கூட்டுறவுத் துறை மூலமாக நடத்துவதற்கு அரசே ஏற்பேற்படுத்தி, அதற்கான வழி வகைகளைச் செய்து தரலாம். ஆகவே, the Government must be categorical, it must be clear.

இந்தச் சூழ்நிலையிலே, இந்த ஆலைகள் மூலமாக சமுதாயத்தை மோசடி செய்வதற்கு, செய்பவர்களுக்கு இது திரும்பப் போகாது என்பதற்கு உத்தரவாதத்தை இந்த அரசாங்கம் தர வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போலவே,

Clause 27. "Management to continue to vest in the Custodian until alternative arrangements have been made".

ஆகவே அந்த அடிப்படையில் அரசாங்கம் இந்த நிலைமையை அணுக வேண்டும்.



இன்றைக்கும் கூட பல சர்க்கரை ஆலைகளிலே இவ்வளவு லாபத்திற்கும் இடையிலே அரசாங்கம் நிர்ணயித்த பணத்தைக் கொடுப்பதிலே தாமதப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். பல பேர் கொடுக்கவில்லை என்றெல்லாம் இருக்கிறது. அதைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கான பணத்தைக் கொடுக்காமலே அந்த ஆலைகள் லாபம் பெற்றிருக்குமானால், எப்படி அந்த ஆலைகள் பணத்தைக் கொடுக்காமலே லாபம் பெற முடிந்தது? இனிமேல் லாபம் கொடுப்பார்களேயானால், விவசாயிகளுக்குத் தரவேண்டிய பணத்தைக் கொடுக்காத, ஆசிரியர்களுக்கு மானியம் கொடுக்க முடியாதென்ற நிலையை எல்லாம் அல்லது முன்கடன் கொடுக்க முடியாது என்ற நிலையை எல்லாம் தவிர்த்து அரசாங்கம் ஏற்க வேண்டும் என்ற அளவிலே பரிசீலனை செய்ய வேண்டும். அதற்கு வாய்ப்பாக இந்தச் சட்ட முன்வடிவை அமைச்சரவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய தொடக்க உரையிலேயே இந்தச் சர்க்கரை ஆலையை அரசு ஏன் கையகப்படுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது என்பதற்கான காரணங்களைத் தெளிவாக விளக்கிச் சொல்லி விட்டேன். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் பேசுகிறபோது, இத்தகைய குறைபாடுகள் உள்ள தொழில், தொழிற்சாலைகள் எதுவாக இருந்தாலும், அவற்றை அரசு தலையிட்டு குறைபாடுகளைக் களைந்து, அல்லது அரசே கையகப்படுத்தி மக்களின் நலன் பேண வேண்டுமென்பதைக் கோடிட்டுக் காட்டிச் சொன்னார்கள். அரசினுடைய கொள்கை அதுதான் என்பதனை கடந்த கால அரசினுடைய செயல்முறைகளே விளக்குகின்றன என்பதனை நான் சொல்ல விரும்புகிறேன்.

தமிழ் நாட்டிலே தொழில் துவக்க முன்வருகின்றவர்கள் தமிழர்களாக இருக்க வேண்டும், அவர்களுக்கு ஊக்கம் தர வேண்டுமென்பதையும் கோடிட்டுச் சொன்னார். அதிலே இந்த அரசு மிக அக்கறையாக இருக்கிறது. சில தொழிற்சாலைகள், தமிழர்களால் துவக்கப்பட்ட தொழிற்சாலைகள், அவ்வாறு துவக்கப்பட்டபின், மற்றவர்கள் கைகளுக்குச் சென்று விடுகின்றன என்பதைக்கூடச் சொன்னார். தமிழகத்திலே தொழில்

(திரு. சி. பொன்னையன்) [1984 பிப்ரவரி 24

இலங்கையிலே தமிழர்களுக்கு அந்த நிலை ஏற்படாது ஆனாலும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். கண்டிப்பாக அரசு அவர்களுக்கு உறுதுணையாக இருக்கும் என்பதனையும் இங்கு நான் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமஸ் அவர்கள் பேசும்போது, இந்த அரசினுடைய சட்டத்தை வரவேற்று, அவர் அந்தப் பள்ளியினுடைய தன்மை குறித்து சில கருத்துக்களைச் சொன்னார். ஏற்கெனவே தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்கள், உழவர்களுக்குப் பாதகமாகச் செயல்பட்ட இந்த அமைப்பினுடைய பொறுப்பாளிகள்மீது 'கிரிமினல் ஆக்ஷன்' எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். தக்க நடவடிக்கை எடுக்க ஏற்கனவே 'டைரக்டர் ஆஃப் ஷுகர்' தக்க நடவடிக்கை எடுத்துவருகிறார். அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது, இந்த அமைப்பைக் கையகப்படுத்தி, நஷ்ட நிலையில் இருக்கிற, இழப்பு நிலையில் இருக்கிற இதைச் சீரமைத்து, சீரான நிலைக்கு வந்த பிறகு, மீண்டும் தனியாரிடம் அரசு ஒப்படைக்குமா என்று கேட்டார்கள். இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரைக்கும்,

This is an enactment not for taking over the management alone. இந்த அமைப்பின் நிர்வாகத்தை மட்டும் எடுத்து, அதைச் சீரமைக்கும் வரையில் கண்காணித்து, செயல்படுத்தி, நடத்த மத்திய அரசாங்கத்துக்குத்தான் அதிகாரம் இருக்கிறது. ஐ.டி.ஆர். ஆக்டின்படி அவர்கள்தான் எடுக்க முடியும். நாம் செய்திருப்பது, அரசியல் அமைப்புச் சட்டத்திலுள்ள கன்கரன்ட் லிஸ்டில் 42வது பிரிவுப்படி, Acquisition and Requisitioning என்ற அடிப்படையில் அந்தத் தொழிற்சாலையை அரசே எடுத்துக் கொண்டுவிட்டது, அரசுக்கு அது முழுவதும் சொந்தமாகிவிட்டது. சட்டரீதியாக தனியாருக்கு மீண்டும் செல்லுவதற்கு இடமில்லை என்பதை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, 'கஸ்டோடியன்' என்ற பிரிவு ஏன் இருக்கிறது என்று கேட்டார்கள். அந்தப் பிரிவைப் பயன்படுத்தி, அவர்களுடைய பொறுப்புக்கு மீண்டும் அந்த அமைப்பு செல்லக்கூடிய நிலை உருவாகுமோ என்ற அச்சத்தை அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதுபற்றி பிரிவு 10, சப்-கிளாஸ் (2)ல் தெளிவாக்கப்பட்டிருக்கிறது.



1984 பிப்ரவரி 24] (திரு. சி. பொன்னையன்)

"The Government may appoint one or more individuals or a Government company as the Custodian or Custodians of the undertaking in relation to which no direction has been made ........ ".
என்று இருக்கிறது. இந்த அமைப்பைப் பொறுத்தவரையிலும், இது அரசினுடைய அமைப்பு; அங்கே அரசினுடைய பிரதிநிதிதான் இருப்பார். தனியாரிடம் இந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட மாட்டாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். காரணம், இந்தத் தொழிற்சாலை அரசுக்கு முழுவதும் சொந்தமாகிவிட்டது. This is a property 100 per cent belonging to the Government என்ற முறையில் இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம். எனவே அந்த அச்சத்திற்கு இடமில்லை என்று சொல்லி, மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, சட்டப் பேரவையில் நிறைவேற்றிய இந்தச் சட்டமுன்வடிவை மேலவையில் நிறைவேற்றித் தர வேண்டுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1984 ஆம் ஆண்டு, மதுரை சர்க்கரை நிறுவன (நிருவாகப் பணியை எடுத்துக் கொள்ளுதலும் மாற்றுதலும்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1984) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 35 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, அட்டவணைகள், சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு, ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1984 ஆம் ஆண்டு, மதுரை சர்க்கரை நிறுவன (நிருவாகப் பணியை எடுத்துக் கொள்ளுதலும் மாற்றுதலும்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1984) நிறைவேற்றப்பட வேண்டும்",

என்று முன்மொழிகிறேன்.

[1984 பிப்ரவரி 24

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1984 ஆம் ஆண்டு, மதுரை சர்க்கரை நிறுவன (நிருவாகப் பணியை எடுத்துக் கொள்ளுதலும் மாற்றுதலும்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1984) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(2) 1984 ஆம் ஆண்டு பச்சையப்பன் பொறுப்புக் கழகம் (நிருவாகத்தை எடுத்துக்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1984).**

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே,—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1984 ஆம் ஆண்டு, பச்சையப்பன் பொறுப்புக் கழகம் (நிருவாகத்தை எடுத்துக்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (@ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1984) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, பொது மக்களின் நலனை முன்னிட்டு அரசு பச்சையப்பன் பொறுப்புக் கழகத்தை பச்சையப்பன் பொறுப்புக் கழகம் (நிர்வாகத்தை எடுத்துக்கொள்ளுதல்) குறித்த 1981 ஆம் ஆண்டுச் சட்டத்தின் மூலமும் (தமிழ் நாடு சட்டம் 11/1981) மற்றும் திருத்தச் சட்டம் 1983-ன் மூலமும் மூன்றாண்டுகளுக்கு 22—12—1980 முதல் தன் பொறுப்பில் எடுத்துக்கொண்டது. இதற்கு நிர்வாகக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அரசு அலுவலர்கள் அடங்கிய குழு தற்போழுது நிர்வாகத்தை செவ்வனே நடத்தி வருகிறது. பொறுப்புக் கழகத்தை மேலும் நன்கு செம்மைப்படுத்த மேற்படி குழு பல திட்டங்களைச் செயல்படுத்த எண்ணியுள்ளது. ஆகவே மேற்சொன்ன கழகத்தின் நிருவாகம் அரசிடம் நிலை பெற்றிருக்கும் காலத்தை மேலும் ஓராண்டுக் காலத்திற்கு நீட்டிப்பது அவசியம் எனக் கருதப்பட்டது. அதற்கிணங்க மேலும்,

@ 292 ஆம் பக்கத்தில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1984 பிப்ரவரி 24] (திரு. செ. அரங்கநாயகம்)

ஓராண்டுக் காலத்திற்கு அரசிடம் நிர்வாகப் பொறுப்பு நிலைபெறச் செய்ய 1981 ஆம் ஆண்டு பச்சையப்பன் பொறுப்புக் கழக (நிருவாகத்தை எடுத்துக் கொள்ளுதல்) சட்டத்தின் 3, 8 ஆம் பிரிவுகளைத் திருத்த வேண்டுமெனக் கருதப்பட்டது. இந்த உத்தேசத் திருத்தச் சட்டத்தை அவசரச் சட்டமாகக் கொண்டு வரவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதால் 21—12—1983 அன்று அவசரச் சட்டமாகத் தமிழ் நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது. இது சட்டமுன்வடிவாக மாற்றப்பட்டு, சட்டப்பேரவையில் நிறைவேற்றப் பட்டுள்ளது. பேரவையில் நிறைவேற்றிய வண்ணம் இந்தச் சட்டமுன் வடிவை ஆய்விற்கு எடுத்துக்கொள்ளுமாறும், பின்பு நிறைவேற்றித் தருமாறும் அவைக்குப் பரிந்துரைக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1984 ஆம் ஆண்டு பச்சையப்பன் பொறுப்புக் கழகம் (நிருவாகத்தை எடுத்துக்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1984) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

(முற்பகல் 11-40)

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தலைவர் அவர்களே, பச்சையப்பன் பொறுப்புக் கழக நிருவாகத்தை எடுத்துக்கொள்ளுதல் சம்பந்தமாக கொண்டு வரப்பட்டிருக்கும் திருத்தச் சட்டமுன்வடிவின் மீது பேசுவதிலே நான மகிழ்ச்சியடைகிறேன். ஆண்டுக்காண்டு இதை நீட்டித்துக்கொண்டே போகிறார்கள் என்று சொல்கிறார்கள். பச்சையப்பன் கல்லூரியின் பழைய மாணவன் என்ற முறையில் எனக்கு இதுபற்றிப் பேச வாய்ப்பு கிடைத்த மைக்கு மகிழ்ச்சியடைகிறேன்.

முன்பு ஆளுநரால், நீதிபதியால் நிர்வகிக்கப்பட்டபோது தந்த தொகையை முறைப்படி செலவழிக்காத நிலையில் அறக்கட்டளை ஏற்படுத்தப் பட்டது. பிறகு அதன் நிர்வாகம் ஒரு குழுவினுடைய கையில் தரப் பட்டது. குழு நிலைமைகளையெல்லாம் ஆராய்ந்து இப்போது ஒரு முடிவுக்கு வந்திருப்பது குறித்து மகிழ்ச்சி. பச்சையப்பன் கல்லூரியைப் பொறுத்தவரையில், அதன் ஒவ்வொரு படிக்கட்டும் பைந்தமிழ் பேசும் என்று மு.வ. அவர்கள் சொன்னார்கள். அதுபோல் பச்சையப்பனின் உச்சி வரை தமிழ் இருக்கும் என்று தமிழ் அறிஞர் திரு.வி.க. கூறினார். பேரறிஞா

அண்ணா அவர்கள் பச்சையப்பன் கல்லூரியில்தான் படித்தார்கள். அவர்கள் அங்கே பொருளாதாரம் படித்தார்கள் என்பது மட்டுமல்ல, மாணவர் அமைப்பின் செயலாளராக இருந்தார்கள். பேராசிரியர் சி. ஏ. இராஜு சேகரித்தில், நான் வேலைக்குப் போகிறேன் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னவுடன் அவர்கள் அண்ணாவைப் பார்த்து "பொது வாழ்க்கைக்கு நீங்கள் போக வேண்டும்" என்று சொன்னதாக அண்மையில் தொலைக்காட்சியில் எடுத்துச் சொன்னார்கள். ஆண்டுதோறும் பேரறிஞர் அண்ணா அவர்கள் பச்சையப்பன் கல்லூரியில் உரையாற்றியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட கல்லூரியின் நிர்வாகம் நல்லமுறையில் சரியாக இருக்க வேண்டும். அதற்காகத்தான் பச்சையப்பர் அவர்கள் தன்னுடைய பெரும் சொத்துக்களைத் தந்தார்கள். அதற்குரிய சொத்துக்களை அல்லது வருமானத்தை இன்னமும் முழுமையாக நிர்வாகத்திடம் தராத நிலை இருந்தால், அவற்றையெல்லாம் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். இப்போது அதன் நிர்வாகத்தை அரசு ஏற்ற பிறகு, நல்ல பல காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. முன்பு கிடைத்து வந்த வாடகை கூட உயர்ந்திருக்கிறது. அரசின் பொறுப்பில் அது ஒரு வருடம் இருப்பதில் நியாயம் இருக்கிறது என்றாலும் கூட, ஓராண்டுக்குப் பிறகு நல்ல நிலைமை ஏற்பட்டதற்குப் பிறகு, முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடம் அதன் நிர்வாகத்தை ஒப்படைக்க வேண்டும். 'முன்பு இருந்த நிர்வாகத்தில் என்னென்ன நடைபெற்றிருக்கின்றன, அதுபோல் இப்போது அரசு எடுத்ததற்குப் பிறகு எந்த அளவுக்கு வாடகை எல்லாம் உயர்த்தப்பட்டு வருமானம் கூடியிருக்கிறது என்பதைப் பற்றியெல்லாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.. பிறகு அதை அச்சடித்து நூலாகக் கொடுக்க வேண்டும். அப்படிச் செய்தால் தான் உண்மை நிலையை அனைவரும் அறிய முடியும். அப்படியானால் தான ஊழல் நடந்ததாகச் சொல்லப்பட்ட நிர்வாகம் திருத்தப்பட்டிருக்கிறதா என்று தெரிய வரும். அந்த முறையில் ஓராண்டு அரசு எடுப்பது ஒன்றும் குற்றமில்லை. அதேநேரத்தில் ஓராண்டிலே அனைத்துக் குறைகளையும் களைய நடவடிக்கை எடுக்க வேண்டும். பச்சையப்பன் கல்லூரியில் அரசு என்ன செய்கிறது என்பதை எல்லோரும் அறியும் வண்ணம் வழிவகை செய்ய வேண்டும். இப்போது அதை அறியாவண்ணம் கல்லூரியின் முன்பு சுவர் கட்டப்பட்டிருக்கிறது. அந்தச் சுவர் நீக்கப்பட வேண்டும். இப்போது அங்கிருக்கும் வாசல் சிறைச்சாலையின் வாசல் போல் இருக்கிறது. சில மாணவர்கள் தவறு செய்ததால் தண்டனையாக அது கட்டப்பட்டிருக்கலாம். அதை இப்போதாவது நீக்க வேண்டும். ... ப்பர் சிலையின் பக்கத்



திலே பேரறிஞர் அண்ணாவின் சிலை இருக்க வேண்டுமென்று சொல்லி, என்னுடைய தலைமையில் கல்வி அமைச்சர் அவர்களால் அண்ணாவின் சிலை திறந்து வைக்கப்பட்டது. அந்தச் சிலையை வீதியிலே போவோர் வருவோர் பார்க்க முடியாதபடி சுவரால் மறைக்கப்பட்டிருக்கிறது. நான் அன்பு வணக்கத்தோடு கேட்டுக்கொள்கிறேன், தயவுசெய்து அந்தச் சுவரை நீக்கிவிட்டு பழையபடி அமையுங்கள். நகரத்தாரில் உள்ள கட்டபொம்மன் சிலையைப் பார்க்கப் போகிறவர்கள் எல்லாம் ஒரு கல்லைப் போட்டுவிட்டு வருகிற நிலை இருப்பதுபோல், இங்கேயும் ஆளும் கட்சியாக இருந்தாலும் சரி, எதிர்க் கட்சியாக இருந்தாலும் சரி, பேச வருகிறவர்கள் எல்லாம் ஒரு கல்லைப் போடுவது போல், முதலில் இந்தச் சுவர் நீக்கப்பட வேண்டுமென்று சொன்னால் தான், மாணவர்களிடமிருந்து கை தட்டலே விழுகிறது. அதைத் தான் அங்குள்ள மாணவர்களும் விரும்புகிறார்கள். அவர்களுடைய வேண்டுகோளை அவசியம் நிறைவேற்ற வேண்டும்.

பச்சையப்பன் அறக்கட்டளை சார்பில் தொழில் கல்வி ஆரம்பித்தார். அவை இன்றையதினம் காஞ்சிபுரத்திலும், சிதம்பரத்திலும் காணப்படுகின்றன. அதைப் போல இன்னும் பல இடங்களில் தொழில் கல்வி வளர, மாணவர்கள் பயில வாய்ப்பு ஏற்படுத்தப்பட வேண்டும். குறிப்பாக தமிழைச் சார்ந்த பல துறைகள் துவங்க வழிவகை காணப்பட வேண்டுமென்று சொல்லி, இச்சட்டமுன்வடிவை வரவேற்று, அமைகிறேன்.

**திரு. ப. மாணிக்கம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்த வரையில், ஒரே ஒரு கருத்தைத் தான் சொல்ல வேண்டியிருக்கிறது. இதிலே மூன்றாண்டுகள்தான் அரசாங்கம் இந்த நிர்வாகத்தை மேற்கொள்ளும் என்று முதன் முதலில் கூறப்பட்டது. இப்போது காலத்தை நீட்டித்துக் கொண்டு செல்வது சரியல்ல, நம்முடைய மாநில அரசு இப்படி இந்த ஒரு பிரச்சினையில் மட்டுமல்ல, பொதுவான ஒரு போக்காகவே இப்படிதான் எடுத்துக் கொண்டிருக்கக்கூடிய அதிகாரத்தை நீட்டித்துக் கொண்டு செல்வது, தேர்தல் நடத்துவதற்கான வாய்ப்புக்களைக் குறைப்பது போன்றவை நல்லதல்ல என்ற என் கருத்தை இங்கே சுட்டிக் காட்டி அமைகிறேன்.

[1984 பிப்ரவரி 24

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு தலைவர் அவர்களே, "பச்சையப்பன் பொறுப்புக் கழகம் திருத்தச் சட்ட முன்வடிவைப்" பொறுத்தவரையில், ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். பச்சையப்பன் கல்லூரியுடைய தரம் நிச்சயமாக, அரசு நிர்வாகப் பொறுப்பை ஏற்ற பிறகு, உயர்ந்திருக்கிறது என்பதில் எந்தக் கருத்து மாறுபாடும் இல்லை. நல்ல நிலைமைக்கு உயர்த்தி, ஏற்கெனவே இருந்த குழப்பங்களிலிருந்து கல்லூரியை மீட்டிருக்கிற பணியைச் செய்திருக்கிறது. ஆனால் அதைத் தாண்டி, இது ஒரு உணர்வு பூர்வமான ஒன்றாகவும் இருப்பதைப் பார்க்க முடிகிறது. இந்த நிர்வாகத்தைப் பொறுத்த வரையில், இது முதன் முதலில் அரசுத் தரப்பில் ஏற்கப்பட்ட ஒன்றாகும். இது ஒரு வெறும் அறக்கட்டளை மட்டுமல்ல, இந்துக்களுடைய உணர்வுகளோடு ஒன்றிய ஒன்றாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படி இரண்டும் இணைந்து, இந்த அறக்கட்டளை மிகப் பெரிய அளவில் இயங்கி வருகிற ஒன்றாகும். ஒருமுறை மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் சொன்னது எனக்குப் பசுமையான நினைவில் இருக்கிறது. பல அறநிலையங்களின் சொத்துக்களுக்குக் கணக்கே கூட வராமல் இருக்கிறது. ஆகவே எப்படி நிர்வாகம் செய்கிறோம் என்ற தகவலை இந்த அவையில் தர வேண்டுமென்று சொன்னபோது, இரண்டாண்டு காலத்திற்குள் அந்த விபரங்களைத் தர வேண்டுமென்று சொல்லப்பட்டது. இந்த நிர்வாகத்தைப் பொறுத்தவரையில், பச்சையப்பன் கல்லூரிக்கு மட்டுமல்ல, அது தொடர்பாக கல்லூரி நிறுவனங்கள், தொடர்பான மத நிலையங்கள் போன்ற மற்ற பணிகள் இருக்கின்றன. ஒட்டுமொத்தமாக அனைத்திற்கும் சேர்ந்து நிர்வாகம் எப்படி நடக்கிறது, எப்படி சொத்துக்கள் பராமரிக்கப்படுகின்றன என்ற விபரம் தந்தாக வேண்டும். எப்படி நிர்வகித்துக்கொண்டிருக்கிறோம் என்பது அல்ல, கடந்த கால நிர்வாகத்தில் எப்படி தவறுகள் விளைந்துவிட்டன என்ற அளவில் மதத்தின் அடிப்படையில், அரசாங்கமே முன்வந்து அந்த நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டது,



1984 பிப்ரவரி 24] [திரு. க. இராமமூர்த்தி]

இந்த நிர்வாகத்தை அரசே எடுத்துக்கொண்டதன் மூலம் அது மத உணர்வுகளைக் கையகப்படுத்த துணையாக நின்றது. அந்தக் கடமையைப் பரிபூரணமாக நிறைவேற்ற வேண்டும். அந்த நிர்வாகத்தைப் பற்றிய செய்திகளைப் பார்த்தால், சென்னை நகரில் பெருவாரியான சொத்துக்கள், வீடுகள் போன்றவை இருக்கின்றன. அதைப்போல் அதில் பல தவறுகளும் நடந்திருக்கின்றன. ஒருவரே 10-15 வீடுகள் பினாமியாக வைத்துக் கொண்டு, குறைந்த வாடகையில் தருவது, போன்ற நடவடிக்கையில் இருந்திருக்கிறார்கள். நிர்வாகத்தை அரசு மேற்கொண்டதால் மட்டும் உடனடியாக அந்த வீடுகளின் வாடகையை உயர்த்திவிட முடியாது.

அந்த நிறுவனத்தின் மொத்த சொத்துக்கள் எவ்வளவு, அவை எந்தெந்த இடங்களில் இருக்கின்றன, யார் யார் அவைகளை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற விபரம் வந்தாக வேண்டும். ஆலயங்களில் பச்சையப்பன் அறக்கட்டளை இருந்திருக்கிறது. அது எவ்வளவு நிலம், எவ்வளவு பணம் அதற்காகச் செலவாகிறது என்ற தகவல்கள் வந்தாக வேண்டும். இந்தத் தகவல்களை ஒன்று சேர்த்தபிறகுதான் முழுமையாக அரசிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகளை முடித்திருக்கிறோம் என்று சொல்ல முடியும். மூன்றாண்டுகளில் மத்திய அறக்கட்டளைத் தேர்தலை நடத்த முடியும் என்று இங்கே சொல்லியிருக்கிறார்கள். பரவாயில்லை. அதில் எந்த அளவுக்கு முன்னேறியிருக்கிறோம் என்று காட்டவேண்டும். This is a primary institution

(முற்பகல் 11-50)

எனவே அந்தக் கல்லூரியின் நிர்வாகம் மட்டுமே அறக்கட்டளை என்பதல்ல. அந்த அடிப்படையில் பார்க்கும்போது, மற்ற காரியங்கள் எப்படி நடக்கின்றன என்பதையும் பார்க்க வேண்டும். அங்கெல்லாம் எப்படி செலவினங்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதையும் பார்க்க வேண்டும். அந்தத் துறையில் நமது அரசு எவ்வளவு தூரம் தான் அமைத்துள்ள அதிகாரிகளைக் கொண்ட குழுவின் மூலம் நடவடிக்கை எடுத்து, வெற்றிகரமாகச் செயல்பட்டிருக்கிறது என்ற தகவல்கள் இங்கே அளிக்கப்பட வேண்டும். அந்த அடிப்படையில்தான் அரசு நடவடிக்கை எடுத்திருக்கும் என்று நான் கருதுகிறேன்.

அடுத்து, இவைகளையெல்லாம் சீரமைக்க இன்னும் எவ்வளவு ஆண்டுகள் தேவை என்பதையும் குறிப்பிட வேண்டும். காரணம் இதுவரை அரசே நிர்வாகத்தை நடத்தியிருப்பதால், அதன் அடிப்படையில் சொல்லலாம். இவ்வளவு நடந்திருக்கிறது. இவ்வளவு சொத்துக்கள் மீட்டுக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன, இவையெல்லாம் கணக்கில் கொண்டு வரப்பட்டிருக்கின்றன, ஆகவே இதை முழுமையாகச் சீரமைத்துத் தேர்தல் நடத்த மேலும் ஒரு 2 ஆண்டுக் காலம், அல்லது 5 ஆண்டுக் காலம் அல்லது 20 ஆண்டுக் காலம் தேவை என்று எதையாவது குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். இதைப்பற்றி எதையும் குறிப்பிடாமல் 6 மாதத்திற்கு ஒரு முறை அல்லது வருஷத்திற்கு ஒரு முறை அல்லது 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை கால நீட்டிப்புக்கு என்று வருகிறபோது, மற்றவர்களுக்கு அதில் பணியாற்றுகிறவர்கள் மீது சந்தேகம் ஏற்படுகிறது. அரசாங்கத்தின் மீதோ, கட்சியின் மீதோ அல்லது வேறு காரணத்திற்காகவோ அவர்கள் மீது சந்தேகம் ஏற்பட வழி ஏற்படுகிறது. எனவே அந்த அடிப்படையில் இதுபற்றிய விமர்சனம் செய்வதற்கும் வாய்ப்பு ஏற்படுகிறது. எனவே அரசால் அமைக்கப்பட்ட குழு இதையெல்லாம் தாண்டி செயல்பட வேண்டும். அப்படிச் செயல்படுவதற்கான வாய்ப்பினை உருவாக்கிக்கொள்ள வேண்டும் என்று கேட்டு, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இதிலே கவனம் செலுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த அறக்கட்டளையைப் பொறுத்த வரையில், வெறும் கல்விப் பணி மட்டும் இருக்கிறது என்று நினைக்க வேண்டாம். மற்ற பணிகளும் இந்த அறக்கட்டளையின் கீழ் இருக்கின்றன. அந்தப் பணிகள் எல்லாம் முறையாக நடக்கின்றனவா என்பதையும் பார்க்க வேண்டும். எனக்கு மத நம்பிக்கை இல்லாமல் இருக்கலாம். மத நம்பிக்கை இருக்கிறதா இல்லையா என்பதல்ல இங்கே பிரச்சினை. ஒரு அறக்கட்டளை எந்த நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்டதோ அந்த நோக்கங்களுக்காகச் செயல்படுகின்றதா என்று பார்க்க வேண்டும். அதன் நோக்கங்கள் எப்படி நிறைவேற்றப்படுகின்றன என்ற தகவல்கள் இங்கே அளிக்கப்பட வேண்டும். மறைந்த திரு. பச்சையப்ப முதலியார் அவர்கள் எப்படி அந்த அறக்கட்டளையை உருவாக்கினார் என்பது பிரச்சினையல்ல. நாம் ஏற்கெனவே அதையெல்லாம் பேசித் தீர்த்துவிட்டோம். எனவே அந்த நோக்கங்கள் நிறைவேறுகிற வகையில் தமிழக அரசு காரியமாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் அந்த அறக்கட்டளையால் பயன் பட்ட லட்சக் கணக்கான தமிழக மக்களில் நானும் ஒருவன். அந்த முறை



யில், அந்தக் கல்லூரியின் முன்னாள் மாணவன் என்ற முறையில், அந்தக் கல்லூரி விடுதியின் மாணவன் என்ற முறையில், அங்கே படித்து பட்டம் பெற்றவன் என்ற முறையில் அந்த அறக்கட்டளையை முறைப்படுத்த எடுத்த நடவடிக்கைகள் முழுமையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அந்த அறக்கட்டளை குறித்து அரசு எடுத்திருக்கிற நடவடிக்கைகளை மேலும் முறைப்படுத்த வேண்டும்., அதைச் சேர்ந்த சொத்துக்கள் எவ்வளவு இருக்கின்றன, எந்த அளவுக்கு அவைகளின் மூலம் அறக்கட்டளைக்கு வருவாய் வந்து கொண்டிருக்கிறது, இன்னும் எவ்வளவு வருவாய் வர முடியும் என்பதையெல்லாம் தெளிவாக்க வேண்டும். அதைப் போலவே செலவினங்களைத் தெளிவாக்க வேண்டும். அதற்கு ஏற்ற வகையில் எப்போது தேர்தலை நடத்துவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்பதைக் கோடிட்டுக் காட்ட வேண்டும். இந்த விவரங்களையெல்லாம் எப்போது தருவீர்கள் என்ற விவரத்தையாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தம் பதிலுரையில் உறுதியாகச் சொல்லுவார் என்று எதிர்பார்க்கிறேன். இந்தச் சட்டமுன்வடிவு இன்றைய நிலையில் தவிர்க்க இயலாத ஒன்று என்ற காரணத்திற்காக, இதை ஆதரிக்கிற அதே நேரத்தில், நான் மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளையெல்லாம் அரசு எடுக்க வேண்டும், எடுக்கும் என்று நம்பி முடிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, பச்சையப்பன் அறக்கட்டளையை அரசு தன்னுடைய நிர்வாகத்தின் கீழ் ஏற்றுக் கொண்டிருக்கிற காலத்தை நீட்டிப்பதற்கான இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்த வரையில், மாண்புமிகு உறுப்பினர்கள் சில கருத்துக்களை இங்கே வெளியிட்டிருக்கிறார்கள். குறிப்பாக, இந்தப் பொறுப்புக் கழகத்தை அரசு ஏற்றுக்கொண்ட பிறகு ஏதாவது முன்னேற்றம் இருக்கிறதா என்ற வினாவையும் இங்கே எழுப்பியிருக்கிறார்கள்.

கடந்த ஜனவரி 1984 வரை வட்டியும அசலுமாக இந்த நிறுவனம் பெற்றிருந்த கடன் தொகை ரூ. 11.39 லட்சமாக இருந்தது. இதில் அரசால் நியமிக்கப்பட்ட நிர்வாகக் குழு இதுவரை தீர்த்துள்ள கடன் சுமை அசலும் வட்டியுமாகச் சேர்ந்து ரூ. 7.85 லட்சமாகும். அதற்குப் பிறகு இன்னொரு முக்கியமான விஷயத்தையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். புதிய பாட வகுப்புகளைத் துவக்கும் வகையில் பல்கலைக் கழகத்திற்கு 'என்டோன் மெண்ட்' ஒரு பிணைத் தொகை கட்ட வேண்டும். அந்த வகையில் சுமார் ரூ. 14 லட்சம் கொடுக்கப்படாமல் வைத்திருக்கிறார்கள். இதைப் பல்கலைக் கழகம் அடிக்கடி சுட்டிக்காட்டி வந்தது. அதனால் கந்தசாமி நாயுடு

[திரு. செ. அரங்கநாயகம்] [1984 பிப்ரவரி 24

கல்லூரியில்கூட சில பிரச்சினைகள் உருவாயிற்று, போராட்டம் கூட வந்தது. அந்தச் சூழ்நிலையில்தான் நாம் அந்தப் பொறுப்புக் கழகத்தை எடுத்துக் கொண்டோம். இப்போது நிர்வாகக் குழு ரூ. 13.5 லட்சம் அளவுக்கு பல்கலைக் கழகத்திற்குப் பிணைத் தொகையாகச் செலுத்தியிருக்கிறது. அதைப் போலவே கடன்களும் குறைக்கப்பட்டிருக்கின்றன. இதற்கு முன்னாலே வந்த வருமானத்தை அதிகப்படுத்தியதன் காரணமாக, பெற்று வந்த வாடகையை அதிகப்படுத்தியதன் காரணமாக, அதிலிருந்து கிடைத்த அதிக வருமானத்தை வைத்துக்கொண்டுதான் இத்தகைய முன்னேற்றங்களை அரசு நிர்வாகத்தின் கீழ் உள்ள அந்தப் பொறுப்புக் குழு செய்து காட்டியிருக்கிறது.

இந்தப் பொறுப்புக் குழுவை அரசே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற எண்ணமில்லை. ஆனால் அரசே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பதுதான் எல்லோருடைய எண்ணமாகும் என்பதை முதலிலே நாம் புரிந்துகொள்ள வேண்டும். தேர்தலை நடத்தி, யார் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறார்களோ அவர்களிடத்திலே இதைத் தர வேண்டும் என்பது எப்படி தவறு இல்லையோ அதைப் போலவே இன்னுமொரு உண்மையான நிலையும் இருக்கிறது. ஆசிரியர் சங்கங்கள் இந்தப் பொறுப்புக் குழுவை அரசே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற கருத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்பது அதை விட மிகப் பெரிய உண்மை. இதையும் தீவிரமாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். தனிப்பட்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலும்கூட, அரசு நிர்வாகத்தின் கீழ் இருப்பது நல்லது என்ற கருத்து அதிக பலமாகப் பேசப்படுகிறது. அரசு நிர்வாகத்தின் கீழ் சில குறைபாடுகள் இருக்கலாம். அதைச் சுட்டிக்காட்டுவதில் தவறு இல்லை. ஆனால் அரசு நிர்வாகத்தின் கீழ் இருப்பது என்பது, தேர்ந்தெடுக்கப்பட்ட தனிப்பட்டவர்களிடம் இருக்கும் நிலையை விட மோசமானது என்ற கருத்தின் அடிப்படையிலே தயவு செய்து யாரும் பேச வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். எப்படிப் பார்த்தாலும் அவர்களை விட அரசு நிர்வாகம் செம்மையாக நடத்தப்படும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில்தான் தேசியமயம் போன்ற பல்வேறு கொள்கைகளை இது போன்ற மன்றங்களில் நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். அரசு இதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று பேசிய அத்தனை பேரும் பல்வேறு பிரச்சினைகளை உள்ளடக்கிப் பேசியிருக்கிறார்கள். ஆனால் இங்கே பேசியவர்கள் ஒரு பிரச்சினையைப் பற்றிப் பேசவில்லை என்பதை நான் குறிப்பிட்டாக வேண்டும்.



1984 பிப்ரவரி 24] (திரு. செ. அரங்கநாயகம்)

மாணவர்களைச் சேர்ப்பதைப் பொறுத்த வரையில், பச்சையப்பன் அறக்கட்டளையை ஏற்படுத்துகிறபோது, யார் யார் பொறுப்புக் குழு அதிகாரத்திற்கு வருகிறார்களோ அவரவர்கள் தங்கள் இஷ்டப்படி பணத்தை வாங்கிக் கொண்டு சேர்த்துக்கொள்ளலாம் என்ற எண்ணத்தோடு உருவாக்கவில்லை. இந்துக்களுக்குப் பயன்படட்டும் என்று அவர்கள் நினைத்திருக்கலாம், பின் தங்கிய சமுதாய மக்களுக்காக என்று அவர்கள் நினைத்திருக்கலாம். ஆனால் தாங்கள் ஏற்படுத்திய அறக்கட்டளை பல்வேறு நபர்களுடைய தவறான நடவடிக்கைக்குப் பயன்பட வேண்டுமென்று நிச்சயமாக விரும்பியிருக்க மாட்டார்கள். யாரும் அப்படி விரும்பமாட்டார்கள். அரசு எடுக்கும் வரையில் இதுதான் அங்கே இருந்த நிலைமை. அங்கே கிடைக்கின்ற பணத்தை விட, வருகின்ற வாடகையை விட முன்பு எவ்வளவு பெரிய அதிருப்தி சம்பந்தப்பட்ட இளைஞர்கள் மத்தியில், மாணவர்கள் மத்தியில், பின்தங்கிய வகுப்பினர் மத்தியில் இருந்தது என்பதை எண்ணிப்பார்த்து அரசு பொறுப்பேற்ற பிறகு அது வெகுவாகக் குறைக்கப்பட்டிருக்கிறது என்பதை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது மலைக்கும் மடுவிற்கும் உள்ள வித்தியாசம் தெரிகிறது. ஆகவே மிகப் பெரிய முன்னேற்றம், விரும்பத்தக்க முன்னேற்றம் பின்தங்கிய மாணவர்கள் மத்தியிலே ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்கு ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய வகையில் குறிப்பிட்ட மார்க் வாங்கியிருந்தால் அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள 50 சதவிகித இடம் கிடைக்கும் என்ற நம்பிக்கையை இன்றைக்கு ஏற்படுத்தியிருக்கிறோம். ஆகவே படிக்கின்ற ஆர்வமுள்ள மாணவர்களுக்குக் கிடைக்கும் என்ற நிலையில் ஒரு குவாலிடேட்டிவ் சேஞ்ஜை—தன்மையிலே வேறுபாட்டை, அரசு ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு ஏற்படுத்தியிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் கவனத்திலே கொள்ளவேண்டும்.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, பச்சையப்பன் கல்லூரியில் ஏற்பட்டிருக்கிற தரத்தின் வளர்ச்சியை நான் ஒப்புக் கொண்டிருக்கிறேன். அரசு ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு தரம் உயர்ந்திருக்கிறது என்பதிலே எனக்கு மாறுபாடில்லை. நேரம் இல்லாததால் அதைப்பற்றி விரிவாகப் பேச முடியவில்லை. அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற உணர்வு பல பேருக்கு இருந்தது உண்மை. ஆனால் அது ஒரு இந்து பொறுப்புக் கழகம். அதில் தவறுகள் நடந்தன. அந்தத் தவறுகளைக் களைய அரசாங்கம் அதில் நுழைந்தது. அரசாங்கம் அதை நிரந்தரமாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதில்லை. இது ஒரு திட்டம்தான். அந்த அடிப்படையிலே இந்த

பொறுப்புக் கழகத்தை அரசு ஏற்றிருக்கிறது. ஆனால் அரசு எவ்வளவு தூரம் மாற்றத்தைச் செய்திருக்கிறது என்பதைத்தான் நான் கேட்டேன். நிச்சயமாக பச்சையப்பன் கல்லூரியைப் பொறுத்த வரைக்கும், நாம் வளர்ந்திருக்கிறது என்பதில் மாறுபாடில்லை. மாறுபாடு இருந்திருந்தால், எதிர்ப்பாகச் சொல்லியிருப்போம். ஆனால் இதை வரவேற்றிருக்கிறோம். பெற்றுக் கொண்டு என்ன நடவடிக்கை என்பதுதான் என்னுடைய கேள்வி.

(நண்பகல் 12-00)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் இந்தக் குழுவுக்கு அதிகாரிகளைப் போடும் போது கூட, இந்துக்களாகப் பார்த்துத் தான் போட்டுக்கொண்டு வருகிறோம். நிலைமைகளை உணர்ந்திருக்கின்ற காரணத்தினால்.

அடுத்து, அரசு தன்னுடைய கட்டுப்பாட்டின் கீழ் எடுத்துக்கொண்டாலும், மறுபடியும் தேர்தல் நடத்தி அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களிடம் பொறுப்பைத் தர வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. நிரந்தரமாக அதை அரசு வைத்துக் கொள்ளவேண்டுமென்ற எண்ணம் இல்லை என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இதை நான் வேறு பல சந்தர்ப்பங்களில் வேறு விதத்திலே இந்தப் பிரச்சினையைப்பற்றிப் பதில் அளிக்கின்றபோது கூறியிருக்கின்றேன். ஆனால் நான் இங்கே சொல்ல விரும்புவதற்குக் காரணம், ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, அரசின் கீழ் இருப்பது நல்லது என்கிற கருத்து ஒரு பொதுவான கருத்து. தனிப்பட்டவர்கள் அல்லது தனிப்பட்ட குழுவின் கீழ் இருப்பதைவிட அரசின் கீழ் இருப்பது கொஞ்சம் பொதுவான தன்மையை ஏற்படுத்துகிறது. அல்லது உறுப்பினருக்குப் பதில் சொல்கின்ற அளவுக்காவது நிலைமை இருக்கிறது. அந்தப் பொறுப்புக் கழகமாக இருந்தால் இப்போது இந்தக் கேள்வி கேட்கக் கூட உறுப்பினருக்கு வாய்ப்பு இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே உறுப்பினர்களுடைய கண்காணிப்பிலே இருக்கக் கூடிய ஒரு வாய்ப்பையாவது அந்த அறக்கட்டளை இன்றைக்குப் பெற்றிருக்கிறது. அந்த அடிப்படையிலே பார்க்கிறபோது, பொதுவான முறையிலே இருப்பதிலே தவறில்லை; ஆனால் அரசிடமே வைத்துக்கொள்ள வேண்டுமென்ற எண்ணம் இல்லை. இப்போது தேர்ந்தெடுக்கின்ற நேரத்தில் ஓட்டுப் போடுவதற்கு என்று சில தொகுதிகளை வைத்திருக்கிறார்கள். அந்தத் தொகுதிகள் அப்படியே இருக்கலாமா அல்லது வேறு வகையில் திருத்தி அமைக்கலாமா, திருத்தி அமைப்பதற்கான உரிமைகள் இருக்கின்றனவா என்பதை நாம் பார்க்க



வேண்டும். காரணம், தவறானவர்கள் மறுபடியும் உள்ளே புகுந்து வாடகையைக் குறைத்து வாங்குவது, அல்லது மாணவர்களைச் சேர்ப்பதில் தவறாகச் செய்வது அல்லது வேறு வகையான முறையில் தங்களுக்கு இந்த அறக்கட்டளையைப் பயன்படுத்திக்கொள்வது ஆகிய நிலைமைகள் ஏற்படா வண்ணம் நல்லவர்கள் வருவதற்கும், கூடுமான வரைக்கும் எந்தத் தொகுதியிலாவது ஏதாவது மாற்றி அமைக்க முடியுமா என்பதைப் பார்த்து தேர்தலை நடத்தவும் நாம் விரும்புகிறோம். இன்னும் சொல்லப்போனால், எங்களைச் சார்ந்தவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட நேரத்திலே தான் அரசு இந்தப் பொறுப்புக் கழகத்தை எடுத்தது.

கேட்டைப் (gate) பற்றி ஒன்று சொன்னார்கள். மாணவர்கள் அதைப்பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இன்றைக்குக் கூட அது குறித்து கிளர்ச்சியிலே ஈடுபட்டிருப்பதாகச் சொன்னார்கள். அதற்குத் தனியாக அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்கண்ட கல்லூரி மாணவர்களின் கிளர்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில், 'லா அண்டு ஆர்டர்' பிரச்சினைக்குத் தீர்வு காண 1979—80-ல் காவல் துறை ஆணையாளர் அரசுக்குக் கடிதம் எழுதியிருந்தார். அதன் விளைவாக அரசு ஹை லெவல் கமிட்டி ஒன்றை நிறுவியது. 1981 ஆம் ஆண்டு இந்த ஹை லெவல் கமிட்டியில், "டைரக்டர் ஜெனரல் ஆப் போலீஸ், ஜாயிண்ட் செக்ரடரி, ஹோம் டிபார்ட்மெண்ட், பல்லவன் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் ரெப்ரசென்டேடிவ்ஸ், செக்ரடரி டு கவர்ன்மெண்ட், எஜுகேஷன் டிபார்ட்மெண்ட்' ஆகியோர் இருந்தனர். இதன் முடிவின்படி மேல் நடவடிக்கை எடுக்க அரசு குழுவைக் கேட்டுக்கொண்டது. அதன்படி மாணவர்களிடம் ஒழுங்கைக் கட்டுப்படுத்தவும், பூந்தமல்லி நெடுஞ்சாலையின் போக்குவரத்து கிளர்ச்சி சமயத்திலே பாதிக்கா வண்ணம் இருக்கும் பொருட்டும், கிளர்ச்சி சமயம் வெளியார் நுழைவதைத் தடுக்கும் பொருட்டும், சுவர் போடப்பட்டு 'கேட்' ஒன்று போடப்பட்டது. ஹாரிங்டன் சாலையிலுள்ள முன் கேட்டாக இது உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. இது ஒருவருடைய ஆசைக்காகச் செய்த காரியம் அல்ல. அடிக்கடி மாணவர் கிளர்ச்சி என்ற பெயரால் பஸ்களைத் தாக்குவது, அல்லது பஸ் தொழிலாளர்களுக்கும் மாணவர்களுக்கும் தகராறு வருவது, பஸ்ஸின் மீது கல் எறிவது ஆகியவை மிகவும் சகஜமாக நடைபெற்றுக்கொண்டிருந்தது. ஒரு சில சந்தர்ப்பங்களில் வெளியே இருக்கிற சமூக விரோதிகளே உள்ளே நுழைந்து மாணவர்களை அடிக்கின்ற ஒரு நிகழ்ச்சியும் கூட நடைபெற்றுவிட்டது. ஆகவே கூட்டமாக உள்ளே போகவும் வரவுமான வகையில் அந்தப் பெரிய கேட்

இருப்பதைத் தடுத்து, ஒரு சிறிய கேட் போடப்பட்டிருப்பது என்பது மாணவர்கள் கிளர்ச்சியினாலே பொது மக்கள் பாதிக்காத வண்ணம் அல்லது வெளியே உள்ள சமூக விரோதிகளின் காரணமாக மாணவர்கள் பாதிக்காத வண்ணம் தடுக்கவும், அந்த நேரத்திலே பொறுப்புள்ள அலுவலர்கள் அதிகாரிகள் சொன்ன யோசனையின் பேரில் இதைச் செய்திருக்கின்றோம். இன்றைக்கு மாணவர்கள் அதை எடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். எடுக்கவேண்டுமென்று கேட்டால் ஒரு ஆயிரம் மாணவர்கள் கேட்கிறபோது, சரி எடுக்கிறோம் என்று சொல்வதும், உடனே அவர்கள் கை தட்டி ஒரு மாலையைப் போடுவதை வாங்குவதும் அந்த நேரத்திலே சரியாக, மதிப்பிற்குரியதாக, சந்தோஷப்படக் கூடியதாக இருக்கலாமே தவிர, ஒரு 10 நாள் கழித்து அல்லது ஒரு மாதம் கழித்து, மறுபடியும் பஸ்ஸின் மீது கல் போடுகின்றபோது, இன்ன கேட் இருந்தால் தான் நல்லது என்று நாமே பேசுவோமேயானால், அது சரியாக இருக்காது. எடுக்கின்ற போது, நாம் இத்தனைக்கும் பிறகு செய்திருக்கிற காரியத்தை, அப்போது ஏன் யோசிக்கவில்லை? போடுகின்றபோது, இந்த அளவிற்கு யோசித்து, ஒரு அரசு யோசித்து அதிகாரப் பொறுப்பிலே உள்ளவர்கள் இதை எடுக்கின்றபோது “மாணவர்கள் கேட்டார்கள்” என்கிறார்கள். அன்றைக்கும் மாணவர்கள் வேண்டாம் என்று தான் சொன்னார்கள். அவர்கள் கேட்டார்கள் என்று எடுப்பது என்பது அவ்வளவு முறையாக இருக்காது, சரியாக இருக்காது, நிர்வாகத்திற்கு உகந்ததாகவும் இருக்காது. எடுப்பது என்பது சாதாரண காரியம். எடுத்தால் ஏற்படுகின்ற விளைவுகளுக்கு பதில் சொல்லவேண்டிய பொறுப்பு நமக்கிருக்கிறது. அதனாலே இந்த மாணவர்களும் பாதிக்கப்படுகின்றார்கள், பொது மக்களும் பாதிக்கப்படுகின்றார்கள். யாருக்கும் படிப்பதற்கு எந்த விதமான ஒரு தடையாகவும் அந்த ‘கேட்’ இருப்பதாக நான் கருதவில்லை. வேறு படிப்பதற்கும் அந்த கேட் தடையாக இல்லை, கணிதம் படிப்பதற்கும் அந்த கேட் தடையாக இல்லை, நம்முடைய தாய் மொழி தமிழைப் படிப்பதற்கும் அந்த கேட் தடையாக இல்லை. இப்போது சொன்னதுபோல், அண்ணா அவர்கள், பச்சையப்ப முதலியார் ஆகியோருடைய சிலையை வெளியிலே இருந்து பார்த்தால் தெரிய வேண்டாம், உள்ளே இருப்பவர்கள் நேரிலே பார்க்கட்டும். பச்சையப்ப முதலியார், தான் சம்பாதித்த சொத்துக்களை எப்படி மக்களுக்குப் பயன்படுத்தினார் என்பதைப் பார்க்கட்டும். பேரறிஞர் அண்ணா அவர்கள் தன் வாழ்நாள் முழுவதும் தாழ்ந்த சமுதாயத்தினருக்காக எப்படி பாடுபட்டார் என்பதையும் உணரட்டும். இந்த வழியிலே அந்த மாணவர்கள் அந்த உணர்வுகளைப் பெறுவதற்காக வைக்கப்பட்



டுள்ளதே தவிர வேறல்ல. பூந்தமல்லி நெடுஞ்சாலையில் போகின்றவர்கள் பார்ப்பதற்காக அல்ல. ஆகவே பூந்தமல்லி நெடுஞ்சாலையில் போகின்றவர்கள் பார்ப்பதற்கு வேறு இடங்களிலே சிலைகள் இருக்கின்றன. அவர்கள் அவற்றைப் பார்த்துக்கொள்ளலாம். அவர்களை விட மாணவர்கள் பார்க்க வேண்டும் என்பது மிகவும் முக்கியம். அவர்கள் கொஞ்சம் அடக்கமாக இருக்க வேண்டும். அதை எடுப்பது என்பது சாதாரண காரியம். எடுத்து விட்டால் இதற்கு முன்னால் இருந்த விளைவுகள் மறுபடியும் நடக்க முடியும். எடுத்தால், எடுத்தது எவ்வளவு பெரிய தவறு என்பதை நானே தலை குனிவோடு பொதுமக்கள் முன்னாலே ஒப்புக் கொள்ளும் நிலைமை ஏற்படும். ஆகவே இப்போது அதை ஒரு பிரச்சினையாக ஆக்கி நாம் பேசாமலிருக்க வேண்டும். மாணவர்கள் என்னிடத்திலே வந்து கேட்டார்கள். “இப்போது அது இருப்பதாலே உங்களுக்கு எந்தவிதமான குறையும் வந்துவிடாது. ஆகவே தயவு செய்து இதற்கு ஒத்துழைப்புத் தாருங்கள்” என்று நான் கேட்டுக்கொண்டேன். இந்தப் பிரச்சினை ஏற்படுகின்றபோதுதான் நாம் உணர முடிகிறதே தவிர, அதற்கு முன்னாலே எதையும் சொல்ல முடிவதில்லை. வந்து கேட்பவர்கள் நல்ல மாணவர்களாக இருக்கலாம். நாளைக்கு பிரச்சினையை உண்டாக்குகின்றவர்கள் வேறு மாணவர்களாக இருக்கலாம். இவர்கள் அந்த மாணவர்களுக்கு ஒரு உத்தரவாதம் தரமுடியாத நிலையிலே இருந்துகொண்டிருக்கிறார்கள்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** தலைவர் அவர்களே, இந்த நிர்வாகத்தை நிர்வாகம் தவறு செய்ததனால் எடுத்திருக்கிறார்கள். இன்றைக்கு அதே மாணவர்கள் பிரதிநிதிகளும் வரப்போகின்றார்கள். மாணவர்கள் தவறு செய்ததால் அப்படி மறைத்திருக்கின்றார்கள். இன்றைக்கு நிர்வாகத்தை எடுத்து பிறகு நிர்வாகத்திற்குத் தருவதுபோல, பழையபடியே வைத்தால் மாணவர்கள் ஒழுங்காக நடப்பார்கள் என்ற நம்பிக்கையில் தரலாம். அதோடு பெரிய வழியாக இருக்கின்றபோது, போக வர வசதியாக இருந்தது சிறிய வழியில் ‘ஜாலியன்வாலாபாக்’ போல நடந்துவிடக்கூடாது. இதில் போக்குவரத்துத் துறையினரும் என்ன கருதுகின்றார்கள் என்றால், அந்த பஸ் ஸ்டாண்ட்-ஐத் தள்ளி வைத்தால் அந்த நெரிசல் இருக்காது. அந்த முறையில் மாணவர்கள் மீது நம்பிக்கை வைத்து, எடுப்பதைப் பற்றி சிந்திக்கலாம். தேர்தலைப் பொறுத்த வரையில், மாணவர்களும் ஆசிரியர்களும் பிரதிநிதிகளாக வருகின்ற அளவுக்கு தேர்தல் முறைகளை வகுத்தால் சிறப்பாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாணவர்கள் பிரதிநிதிகள் மற்றவைகளைப் பற்றி நாம் யோசனை செய்கின்றபோது பார்த்துக் கொள்ளலாம். பழையபடி அந்த கேட்டை வைப்பது என்பதும், தேர்தல் மூலம் மாணவர்களுக்குப் பிரதிநிதித்துவம் தரவேண்டும் என்று நினைப்பதும் வேறு. ஆனால் அதை நிரந்தரமாக வைத்துக்கொள்வதில்லை என்ற காரணத்தினாலே நாம் திருப்பித்தருகிறோம். ஆனால் மாணவர்கள் பிரச்சினைகள் தொடர்ந்து எழுந்து வந்ததைப் பார்த்து, அதைத் தடுத்து நிறுத்த இதைப் போட்டிருக்கிறோம். இதனாலே கல்வி பெறுகின்ற தன்மையில், மாணவர்கள் என்ற நிலைமையிலே எந்த பாதிப்பும் ஒரு சிறிதும் இல்லை என்பதை நாம் கொஞ்ச நேரம் சிந்தித்துப் பார்ப்போமானால் தெரியும். அங்கே மாணவர்கள் கூட்டத்தில் பழைய மாணவர் தலைவர் ஒருவர், நாது அருமைக்குரிய நண்பர் ஒருவர் அங்கே போய், 'நான் இருக்கும்போது, இந்த பச்சையப்பன் கல்லூரியிலே எப்படி இருந்தார்கள்? இப்போது இந்த கேட் போடப்பட்டிருக்கிறது, நீங்கள் கொஞ்சம்கூட தைரியம் இல்லாமல் விட்டு வைத்திருக்கின்றீர்களே, கடப்பாறை எடுத்துக் கொண்டு போய் அதை இடிக்க வேண்டும்" என்றெல்லாம் சொல்லி தூண்டியதற்குப் பிறகும், அந்த மாணவர்கள் கொஞ்சம் ஒழுங்காகவே இருக்கின்றார்கள். ஒரு தடவை இடித்துப் பார்த்தார்கள். கடைசியிலே அவர்களே அதைச் சீரமைக்கும் செலவை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்த 'கேட்' மறுபடியும் சீரமைக்கப்பட்டிருக்கிறது. இதை மாணவர்களுடைய கட்டுப்பாட்டிற்கு அடையாளமாக நாம் கருதுவோமானால், அது மாணவர்களுக்கும் நல்லது, பொதுமக்களுக்கும் நல்லதாகும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாணவர்களை, பச்சையப்பன் கல்லூரி மாணவர்களை கட்டுப்பாடாக வைத்திருக்க வேண்டும் என்று கருதுவதை நான் மனமார வரவேற்கிறேன். அதே நேரத்திலே ஒரு வருத்தமான நிகழ்ச்சி என்னவென்றால், பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள்தான் இப்படி இருக்கின்றார்கள், மற்ற கல்லூரிகளிலேயெல்லாம் கதவடைக்கவில்லை, ஆக இந்தக் கல்லூரி மாணவர்கள் மோசமானவர்கள் என்று தப்பாக நினைக்கின்ற நிலைமை ஏற்படுகிறது. எதிர்காலத்திலே யாவது. . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இந்த மாதிரி செய்திகள் எல்லாம் சொல்லி, பத்திரிகையிலே வருவது நல்லதல்ல.



**திரு. ஜி. சுவாமிநாதன் :** மற்ற கல்லூரிகளிலும் இம்மாதிரி சுவர் எழுப்ப வேண்டும் என்பது மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்களின் விருப்பமா என்று அறிய விரும்புகிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** இல்லை, இல்லை. அது பச்சையப்பன் கல்லூரியில் மட்டும் இருக்கிறது.

(பிற்பகல் 12-10)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அதைத்தான் நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். மற்ற கல்லூரிகளிலே இதைப் போல நடக்கவில்லை. நடந்தால் அங்கேயும் இதுபோல வரும்.

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு தலைவரவர்களே, பல கல்லூரிகளுக்கு 'காம்பவுண்ட் வால்' (Compound wall) இருக்கிறது. கல்லூரிகள் இருக்குமிடத்திற்கும் சாலைக்கும் இடைவெளி இருக்கிறது. உள்ளேதான் கல்லூரி இருக்கிறது. ஆனால் இது பாதையிலே பாதையோரமாக இருக்கிறது. 'கம்பாரிசன்' (comparison) என்ற அளவிலே இல்லை. அவசியம் ஏற்பட்டதால் அது நடந்திருக்கிறது என்பதைத் தவிர பச்சையப்பன் கல்லூரியிலே அந்த மாணவர்களுக்காகத் தனியாக ஏற்பட்டது என்ற அளவிலே போக வேண்டியதில்லை.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, பெரிய கேட் வேறு பக்கம் போட்டிருக்கிறோம். ஹாரிங்டன் ரோடில் வேறு பெரிய கேட் போட்டிருக்கிறோம். பேருந்து போகிற வழியில் சிறிய கேட்டை மாத்திரம் அமைத்திருக்கிறோம். மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதால், பிறகு பார்த்து வேண்டியவற்றைச் செய்து கொள்ளலாம்.

அதற்கடுத்து, இந்தப் பொறுப்புகளுக்கான தேர்தலை விரைவாக நடத்த வேண்டுமென்ற ஆசை இருக்கிறது. ஆகவே இந்தத் தொகுதியைப் பற்றியும் அந்த முறைகளைப் பற்றியும் ஆய்ந்து தேவையான நடவடிக்கைகளை எடுப்போம். நம்முடைய ஆசை எல்லாம் நம்முடைய நிர்வாகத்திலே இருந்தாலும், மறுபடியும் அந்தப் பொறுப்புகளுக்கு, பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, அவர்களுடைய நிர்வாகத்தின்கீழ், இன்றைக்குப் பச்சையப்பன் அறக்கட்டளைக்கு இருக்கிற சொத்தின் அடிப்படையிலே பார்க்கிறபோது, வேறு பல காரியங்களைச் செய்ய வேண்டுமென்று இருந்தாலும், அவைகளைச் செய்ததற்குப் பிறகுகூட கல்விப் பணியைப் பொறுத்தமட்டில், பச்சையப்பன் கல்லூரி மிகுந்த பெருமைக்குரிய ஒரு சிறந்த கல்விநிறுவனமாக ஆக்கக்கூடிய

வாய்ப்பு நிறைய இருக்கிறது. அதனுடைய இடவசதியையும் சொத்து வசதியையும் பார்க்கிறபோது, இது இப்போதிருக்கின்றதைப்போன்று ஒரு சாதாரண கல்லூரியாக மட்டுமல்லாமல், ஒரு முதுகலைப்பட்டக் கல்லூரியாக, ஏன் பல்கலைக் கழகமாக விரிவடையுமளவிற்கு அதற்கு உயர்ந்த அந்தஸ்தைத் தரக் கூடிய வாய்ப்பும், இருக்கிறது. அரசினுடைய ஆசை அந்தப் பச்சையப்பன் கல்லூரிக்கு இப்போதிருப்பதைவிட மிகவும் உயர்ந்ததொரு அந்தஸ்தைத் தர வேண்டுமென்பதுதான். அதற்கான ஆக்கபூர்வமான காரியங்களை அரசு செய்யும் என்று சொல்லி, இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1984 ஆம் ஆண்டு, பச்சையப்பன் பொறுப்புக் கழகம் (நிருவாகத்தை எடுத்துக் கொள்ளுதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1984) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1984 ஆம் ஆண்டு, பச்சையப்பன் பொறுப்புக் கழகம் (நிருவாகத்தை எடுத்துக் கொள்ளுதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 9/1984) நிறைவேற்றப்பட வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1984 ஆம் ஆண்டு, பச்சையப்பன் பொறுப்புக் கழகம் (நிருவாகத்தை எடுத்துக் கொள்ளுதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1984) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.



(3) தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு தொலைக் காட்சியில் வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் (காணொலிச் சுருள் பேழை) திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/1984).

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1984 ஆம் ஆண்டு, தொலைக் காட்சியில் வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் (காணொலிச் சுருள் பேழை) திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1984) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1984 ஆம் ஆண்டு, தொலைக்காட்சியில் வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் (காணொலிச் சுருள் பேழை) திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1984) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு தலைவரவர்களே, இந்தச் சட்டமுன்வடிவிலே சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். வீடியோ கேசட் ரெக்கார்டர் என்பதற்கு காணொலிச் சுருள் பேழை என்று அழகிய தமிழ்ச்சொல்லை வைத்திருக்கிறார்கள். குறிப்பாக இந்தச் சட்டமுன்வடிவின் நோக்கம் ஒன்று வரி வாய்ப்பைத் தடுப்பது. திரைப்படங்கள் காட்டும் தியேட்டர்களிலிருந்து அரசுக்கு வரவேண்டிய வரிகளை, தனிப்பட்டவர்கள் ஏமாற்றுவதால் அவை கிடைக்காமல் போய்விடுகின்றன, அதைத் தடுக்க வேண்டும் என்பது ஒன்று. முக்கியமாக இப்படியான முயற்சிகளில் நீலப் படம் அதாவது பாலுணர்ச்சியைத் தூண்டுகிற படங்களைக் காட்டுவதைத் தடுப்பது என்பது இரண்டாவது நோக்கம். ஆனால் பாலுணர்ச்சியைத் தூண்டுகிற படங்களை சில கிராமங்களில் தியேட்டர்களிலும் கூட போட்டார்கள். அதையெல்லாம் குறித்து அரசு நடவடிக்கை எடுத்தது. இன்னொன்று, தியேட்டர்கள் சினிமாப் படங்களையெல்லாம் காட்டுகின்ற ஒரு நிலை நாளாவட்டத்திலே மாறும் என்பது என்னுடைய கருத்தாகும்.

---

@ 293-307 ஆம் பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[டாக்டர் இரா. சனார்த்தனம்] [1984 பிப்ரவரி 24

இங்கிலாந்து நாட்டிலே தியேட்டர்கள் பெருகியிருந்தன. அங்கே வீடியோ வருவதற்கு முன்னாலேயே கூட, டி.வி.யிலே படங்கள் அதிகமாகப் போடப்பட்டன. கனடா நாட்டிலே 12 சானல் இருக்கிறது. இங்கிலாந்திலே 56 சானல்களில் படம் பார்க்க முடியும். அதுவெல்லாம் பெருமளவுடன் தியேட்டர்களிலே படம் பார்ப்பது குறைந்துபோய் அதுவெல்லாம் இப்போது சூதாடுகிற இடங்களாக மாறியிருக்கின்றன. அதுவும் 'சோஷியல் வெல்பேர்' என்ற முறையில் வேலையில்லாத நேரத்தில் தரும் பணத்தைப் பெறுகின்ற முதியோர்கள் எல்லாம் அங்கே போய் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். அதனாலே இதிலே ஒரு மாற்றம் வந்து கொண்டிருக்கிறது என்பதோடு, வீடியோ மட்டுமல்ல, நாளை தொலைக்காட்சியிலே வேறு படங்களைக் காட்டும்போது, தியேட்டர்களுடைய நிலையெல்லாம் மாறும். அதனாலே வரி ஏய்ப்பு என்பதோடு, முக்கியமான ஒரு பிரச்சினை பால் உணர்ச்சியைத் தூண்டும் படங்களைப் போடுகிறார்கள் என்பதுதான். அது தடுக்கப்பட வேண்டுமென்பது முக்கியமானதாகும். அதுமட்டுமல்ல. பெருநகரங்களில், அதுவும் சட்டத்திற்கு விரோதமான ஆம்னி பஸ்களில், இப்படிப்பட்ட படங்கள் காட்டப்படுகின்றன. அதனாலே அரசின் பேருந்துகளில் செல்லும் மக்கள் எண்ணிக்கை குறைகிறது; அரசின் வருமானம் குறைகிறது. இதையெல்லாம் மனதிலே கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதிலுள்ள நியாயத்தை நான் உணர்கிறேன். ஆனால் வீடுகளில் போய் அதைப் பார்ப்பது என்ற நிலையில் எதிர்காலத்திலே அது என்ன சிக்கலை உருவாக்கும் என்பதைப்பற்றிச் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு வேளை, சென்சார் போர்ட் இருப்பதுபோல, எதாவது மக்கள் குழுவை ஏற்படுத்தி, எந்த வீடுகளில் நடக்கிறது என்று தெரிந்து, அந்தக் குழுவின் அனுமதியோடு சென்று பார்க்கலாம் என்பதை ஏற்றுக்கொள்ளலாம். வீடுகளில் போட்டுப் பார்க்கக்கூடிய படங்களுக்குக்கூட அவர்கள் சான்றிதழ்களை வைத்திருக்க வேண்டும்; சர்ட்டிபிகேட் காப்பி வைத்திருக்க வேண்டுமென்று சொன்னால், அதை நடைமுறையிலே எப்படிப் பார்க்க முடியும் என்பதையும், அந்த முறையில் தனி மனிதர்களுடைய வாழ்க்கையிலே இப்படி தலையிடுவது பொருந்துமா என்பதையும் சிந்திக்க வேண்டும்.

இன்றைய சமுதாயத்தினுடைய நிலைகளிலே பல மோசமான முறைகளுக்கு இது வழி வகுக்கிறது. அதுவும் சில இடங்களில், ஹோட்டல்களிலே கூட போட்டு, ஒரு குட்டி சினிமாத் தியேட்டராக நடந்து கொண்டிருப்பது



1984 பிப்ரவரி 24] [டாக்டர் இரா. சனார்த்தனம்]

நிச்சயம் தவறான செயலாகும் என்பதை ஒத்துக்கொள்ள வேண்டும். அதனாலே இதிலே நடவடிக்கை எடுப்பது நல்லது. குறிப்பாக ஆங்கிலச் சொல்லிலே வருகிற முதல் இரண்டு எழுத்துக்கள், மனிதனுக்கு வரக்கூடாத நோயைக் குறிப்பதாக இருக்கிறது. அப்படி சமுதாயத்திற்கு ஒரு நோயாகப் பரவிக் கொண்டிருக்கும் இந்த நிலையில், அரசு நடவடிக்கை எடுப்பது வரவேற்கத்தக்க ஒன்று. ஆனால் நடைமுறைப்படுத்தும்போது, மக்களுக்குத் துன்பம் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோளாகும். காரணம், இன்று பெரிய நகரங்களில் வீடியோ இல்லாத வீடுகள் இல்லை என்ற நிலையில், குழந்தைகள், சிறுவர்களுக்குப் பாட அறிவைப் போதிக்கும் அளவுக்கு அவைகள் இருக்கும் நிலையில், எந்த வீட்டில் வேண்டுமானாலும் எந்த நேரத்திலும் நுழையலாம் என்பதை நாம் அனுமதிக்கக்கூடாது. அதிகாரிகளும், காவல் துறையினரும் தவறானவர்கள் என்று நான் சொல்லமாட்டேன். இருந்தாலும் ஒரு நெருக்கடி, அச்சம், பீதி மக்களுக்கு வரக்கூடாது என்ற முறையில், அதைப்பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் கருத்திலே கொள்ள வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன்.

தமிழர்களுக்கு ஒரு பண்பாடு இருக்கிறது. தமிழர்களுக்கு ஒரு கலை இருக்கிறது. தமிழர்களுக்கு ஒரு நாகரிகம் இருக்கிறது. அந்தக் கலையும், நாகரிகமும் அழிந்து விடக்கூடாது என்பதற்காக அரசு எடுக்கும் எந்த நடவடிக்கையையும் யாரும் ஏற்றுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறார்கள். சிங்கப்பூர் வளர்ச்சி அடைந்த நாடு. அங்கே வராத பயணிகள் இல்லை. உலக நாடுகளிலிருந்து அங்கே கூடி, குவிகிறார்கள். ஆனால் அங்கே பாலுணர்வைத் தூண்டும் படங்களைக் காட்டக் கூடாது. அப்படிக் காட்டுகிறவர்கள் கூட ஒளிந்து, ரகசியமாகக் காட்டி, அவர்கள் பிடிபட்டால், பார்ப்பவர்கள் உட்பட அனைவரும் கடும் தண்டனைக்கு ஆளாகிறார்கள். ஒரு காலத்திலே கறுப்பு வெள்ளையிலே இருந்ததை, நீல நிறத்தில் காட்டினால் கவர்ச்சி என்ற வந்து, ப்ளு பிலிமாகப் பரவி, இன்றைக்குத் தமிழ் நாட்டிலே கிராமங்கள்வரை சென்றுள்ள நிலையிலே, இது இங்கே ஒரு வியாதியாகக்கூடாது என்ற முறையிலே அரசு எடுக்கும் நல்ல நடவடிக்கை என்ற முறையிலே, இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்று, அமைகிறேன்.

[1984 பிப்ரவரி 24

**திரு. ப. மாணிக்கம் :** தலைவரவர்களே, இந்தச் சட்டமுன்வடிவு அரசுக்குச் சில அதிகாரங்களைக் கேட்டிருக்கிறது என்றாலும்கூட, இதிலே செக்ஷன் 17-லே கூறியுள்ளபடி,

Power to enter, search and seize

என்ற அளவில் இரு கூர் முனையுள்ள வாளாக அமைந்திருக்கிறது. தவறைத் தடுக்க சில அதிகாரங்களைக் கேட்கும் அரசு தப்பிதத்தைத் தடுக்கப்போய், எளிய மக்கள் அவதிக்குள்ளாகும் ஆபத்து இருக்கிறது. அந்த ஆபத்து அம்சத்தை மட்டும் நான் இப்போது எடுத்துக்கொள்கிறேன். ஆதாரம் இல்லாமல் நான் ஒன்றும் கூறவில்லை. சில இடங்களிலே, ஓட்டலில் பேருந்திலேகூட ப்ளு பிலிம் காட்டுகிறார்கள். நடவடிக்கை எடுக்க வேண்டிய அதிகாரிகளோ அதற்கு, ஏதோ ஒரு காரணத்தால் மறைமுகமாக உடந்தையாக இருக்கிறார்கள். அவர்களே, அதைப் பார்க்கக்கூடிய ஆவலோடு செய்கி

(பிற்பகல் 12-20)

றார்கள். எல்லா மனிதர்களையும் திருத்த வேண்டும். அரசு உத்தியோகஸ்தர்களாக இருந்தாலும் மனிதர்கள்தான். வெளியிலே இருப்பவர்களும் மனிதர்கள்தான். ஆனால் யாரைத் திருத்துவது என்பதிலே தான் பிரச்சினை. ஒரு இடத்தில் தப்பு நடந்தால் அதைப் பிடித்தால் சரி. ஆனால் தப்பே நடக்காத இடத்தில், வேண்டுமென்றே தொல்லை கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தில் செயல்படுகிற போக்கு அதிகமாகிக் கொண்டே போகிறது. இதைப்பற்றி ஜனாதிபதி அவர்களே கூட சமீபத்தில் சொல்லியிருக்கிறார். இம்மாதிரி விஷயங்களில் விதிகளில் அரசு தெளிவாக இருந்தும் பல சொன்னாலும் கூட, அதிகாரிகள் தப்பிதமாக நடப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. சென்னையிலே, எனக்குக் கிடைத்த தகவல்படி, நிறைய விடுதியில் தப்பு நடக்கிறது. கண்ணியமான இடங்கள் என்று வெளித் தோற்றத்தில் சொல்லப்படுகிற இடங்களில் எல்லாம் புளு பிலிம் போடுகிறார்கள். அங்கே போய் நுழைவது கஷ்டம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ப்ளு பிலிம் என்றால் என்ன என்று திரு. ஜேப்பியார் கேட்கிறார். **(சிரிப்பு)**

**திரு. ப. மாணிக்கம் :** தெரியாதவர் கேட்கவில்லை. தெரிந்தவர்தான் கேட்கிறார். (சிரிப்பு) பொதுவாக இதனை நான் இரு கூறாகக் கூறுகிறேன். சட்டம் ஒரு முனையில் மட்டும் பாயக் கூடாது. இச்சட்டப் பிரிவை அரசு வெகு ஜாக்கிரதையாகப் பயன்படுத்த வேண்டும். இந்தச் சட்டப் பிரிவை





என்னால் ஆதரிக்க முடியவில்லை. ஆனால் அரசின் நோக்கத்தைப் பொறுத்தவரையில், ஆட்சேபணை இல்லை. நல்ல நோக்கம்தான். இது சம்பந்தமாக [illegible] காலத்திலிருந்தே பழமொழி இருந்துவருகிறது. நரகத்திற்குச் செல்வதற்கும் கூட நல்ல நோக்கத்தில் தான் வழி அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சட்டம் என்பது நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதுதான் பிரச்சினைக்குரியது. அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டியவர்கள் [illegible] சக்தி இல்லாதவர்களுக்குத் தான் பயம். சக்தியுள்ளவர்கள் தப்பித்து தவறு நடக்கின்ற நிலை வந்துவிடக் கூடாது. காரணம் கண்ணியமிக்கவர்களாக தோற்றத்தில் செயலில் செய்கிறார்கள். அம்மாதிரி இடங்களில் மட்டும் தான் இதைப் அவர்கள் காணப்படுவார்கள். அதற்கேற்றவாறு இதிலே திருத்தங்கள் அவசியம் பயன்படுத்த வேண்டும். சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றிய தேவை என்று இருந்தாலும், விதிகளை ஏற்படுத் பிறகு இங்கே திருத்தங்கள் செய்வது என்றாலும் கூட, சொல்லப்படுத்துவதிலே அப்போது நான் குறிப்பிட்ட விஷயங்களைக் குறித்து எல்லோருக்கும் பத்தாவதாக இருக்க வேண்டும். பொதுவாக இன்றைக்கு பயன்படுத்தப் தெரிந்த ஒரு விஷயம் என்னவென்றால், அதிகாரம் தவறாகப் குறித்து படுகிறது. 1984 ஆம் ஆண்டு [illegible] இருக்கும் என்பது செய் பத்திரிகையில் வந்திருக்கிறது. ஆகவே தான் நான் எச்சரிக்கை வேண்டும். கிறேன். அரசு இந்த விஷயத்தில் ஜாக்கிரதையாக இருக்க பேருந்துகள் காரைக்குடியிலிருந்து மதுரைக்கு வெகு வேகமாக தனியார் பேருந்தில் வீடியோ வைத்து ஓட்டுகிறார்கள். நான் ஒருமுறை அந்தப் வைக் இருக்க இடமில்லாமல் நின்று கொண்டு வந்தேன். மூன்று வீடியோ பேருந்து கள் தனியார் பேருந்துகள் வந்தன. இருந்தாலும் ஒரு அரசு பேருந்துகளில் கூட வரவில்லை. இளைஞர்கள் எல்லாம் விரும்பி வீடியோ பார்த் பயணம் செய்கிறார்கள். சிலர் வாந்தி எடுத்த காட்சியைக் கூடப் கருத்து. தேன். பஸ்களில் வீடியோ காண்பிப்பது சரியல்ல என்பது என் பழைய தலைமுறையினரின் நெறிமுறையின் அடிப்படையில் பார்த்தால் கூட, நினைக் அது சரியல்ல. அதற்கு யாரும் பெரியவன் [illegible] இல்லை என்று பார்த்துக் கிறேன். கவர்ன்மென்ட் பஸ்ஸில் யாரும் ஏறுவதில்லை. படம் ஏறுகிறார் கொண்டே போகலாம் என்கிற எண்ணத்தில் வீடியோ கோச்சில் சொல்லிக் கள். அதனால் வேறு விளைவுகள் ஏற்படுகின்றன என்பதைச் விரும்ப கொள்கிறேன். இருப்பினும் வீடியோ கோச்சுக்குள் நான் போக தவ வில்லை. எந்த விதத்திலும் அரசால் கொடுக்கப்படும் அதிகாரங்கள்

[திரு. ப. மாணிக்கம்] [1984 பிப்ரவரி 24

பிரயோகம் செய்யப்படக் கூடாது. அப்படிப்பட்ட ஒரு நிலை வந்தால், அரசு அதிலே நிச்சயமாக கவனம் செலுத்த வேண்டும். அப்படிப்பட்ட நிலை வந்ததற்குப் பிறகு, அரசு அதிலே கவனம் செலுத்தாவிட்டால், அது ஆபத்தில் கொண்டு போய்விடும் என்பதைச் சொல்லி அமைகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடியோ பற்றிய இந்தச் சட்டமுன்வடிவைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர்கள் டாக்டர் சனார்த்தனம் அவர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. மாணிக்கம் அவர்களும், சொல்லிய அதே கருத்துக் களை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்.

இந்தச் சட்ட முன்வடிவு ஒரு நிலையை உருவாக்கியிருக்கிறது. வீடு களுக்குள்ளே சென்று சோதனையிடலாம், வீடுகளுக்குள்ளே புகுந்து நட வடிக்கை எடுக்கலாம் என்று சொல்லியிருப்பது குறித்து, உண்மையிலேயே நாம் ஒன்றைத் தெளிவாக்கிக்கொள்ள வேண்டும். எவ்வளவுதான் கடுமை யாக சட்டங்களை நாம் கொண்டு வந்தாலும், சில பேருக்கு எதிராக அது பாய்வதே இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் சொல்லியதைப்போல, இது எங்கே நடக்கிறது என்றால், சென்னையில்தான் அதிகமாக நடக்கிறது. பங்களாக்களில்தான் நடக்கிறது. இப்போது என்றில்லை, ரொம்ப நாளாக நடக்கிறது. ஆனால் எவ்வளவு பேர் இதிலே வந்திருக்கிறார்கள், எவ்வளவு பேர் அபராதம் கட்டியிருக்கிறார்கள் என்று பார்த்தால், ஒன்றும் இல்லை.

சட்டம் எப்படிப் பயன்படுத்தப்படுகிறது, எப்படி உபயோகிக்கப்படுகிறது என்று சொன்னால், கொஞ்சம் தலை சாய்ந்தவனாக யார் இருக்கிறானோ அவனுக்கு எதிராகத்தான் பயன்பட்டிருக்கிறது என்பது தெரியும். அப் போது கூட இந்த பங்களா கேஸ் வராது. சட்டம் எப்படிப் பயன்படுத்தப் பட வேண்டுமென்று நாம் நிச்சயமாகப் பரிசீலனை செய்ய வேண்டும். இது ஒரு உணர்வு பூர்வமான காரியம். வீடுகளில் புகுவது என்பதால் பல பிரச் சினைகள் வரும். More sentimental, religious என்ற அளவில் பல உணர்வுகள் வர வாய்ப்பிருக்கிறது. வீடுகளில் நுழைந்து சோதனையிட அவர்களுக்கு சட்டபூர்வமான பாதுகாப்பு ஏற்பட்டுவிடுகிறது



1984 பிப்ரவரி 24] [திரு. க. இராமமூர்த்தி]

All searches under this section shall be in accordance with the provisions of the Code of Criminal Procedure என்ற அளவில் வழிவகை இருக்கிறது. ஆனால் இந்த அடிப்படையில்தான் இன்றைக்கு வீடுகளில் சோதனை பண்ணுகிற எல்லா நடவடிக்கையும் இருக்கிறது. அதிலே தவறு நடக்கிறதா? இல்லையா? அதுமாதிரி தவறுகள் நடக்கின்றன என்று சுட்டிக்காட்டுகிறோமா, இல்லையா? அந்த மாதிரி வாய்ப்புகள் இதிலே இருக்கக் கூடாது. வரப்போகிற காலங்களில், டி.வி. இல்லாத வீடுகள் இருக்காது. அதைப்போல வீடியோ கருவி இல்லாத வீடுகளும் குறைவாக இருக்கும். ஒரு கணக்கு எடுத்துக் கொண்டால் ஆயிரம் வீடுகளிலாவது டி.வி. செட் இருக்க வாய்ப்பு இருக்கிறது. இந்தச் சட்டத்தின் அடிப்படையில், எந்த வீட்டிலும் போலீசார் சந்தேகப்பட்டு, சந்தேகத்தின் அடிப்படையில் உள்ளே நுழைய முடியும். வீட்டுக்காரர்களிடத்தில் அனுமதி பெறாமலேயே போலீஸ் அதிகாரிகள் வீட்டுக்குள் நுழைய முடியும். ஆகவே, இந்தச் சட்டம் மிகுந்த எச்சரிக்கையோடு பயன்படுத்தப்படவேண்டும். இந்தச் சட்டத்தில் "வீடுகளை" என்று சேர்த்திருக்கவேண்டியதில்லை. ஆனால் வீடு என்று சொல்லிக்கொண்டு தப்பு பண்ணுகிறார்கள், அவர்களுக்கு ஒரு பயமுறுத்தல் வேண்டுமென்று சேர்த்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அரசாங்கத் தின் பல நடவடிக்கைகளைக் கவனிக்கும்போது நோக்கத்தில் தவறு இல்லை. ஆனால் செயல்படும்போதுதான், சில அதிகாரிகளால் களங்கம் ஏற்பட்டு விடுகிறது. அது அரசாங்கத்தின் தலையில் பழியாக வருகிறது. ஆகவே அந்த அடிப்படையில், நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

திரு. மாணிக்கம் அவர்கள் சொல்லியதைப் போல, இந்தப் பிரிவைக் கைவிட வேண்டும். அல்லது இந்தப் பிரிவைத் தவறான வழியில் உபயோகிக்கக் கூடாது என்று கட்டுப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே இதில் ஜாக்கிரதையாக விதிமுறைகளைக் கொண்டு வந்திருக்கிறோம். வீடுகளில் கூட இந்தத் தவறு நடக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறோம். But, what is the punishment? Penalty என்று எடுத்துக்கொண்டால், "three months or a fine which may extend to one thousand rupees or both and in the case of a continuing offence with a further fine which may extend to one thousand rupees for each day during which the offence continues . ."

ஆகவே உயர்ந்த பட்ச தண்டனை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் குறைந்த பட்ச அபராதம், தண்டனை என்று எதுவும் சொல்லவில்லை.

மாஜிஸ்ட்ரேட் நினைத்தால் 'அட்மானிஷ்' செய்துவிடுவார். 10 ரூபாய் அபராதம் போட்டு அனுப்பிவிடலாம். ஆக, தவறுகளைச் செய்பவர்கள் மிகச் சுலபமாகத் தப்பித்துக் கொள்ள இதில் வாய்ப்பிருக்கிறது. அபராதத்தைப் பொறுத்தவரையில். . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** விவாதம் முடியும்வரை அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(பிற்பகல் 12-30)

**திரு. க. இராமமூர்த்தி :** தவறுகள் நடக்கக்கூடாது என்று சர்வ ஜாக்கிரதையாக சட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்று விரும்புகிறோம்.

Clause 15:

"(1) Any person who contravenes or attempts to contravene or abets the contravention of the provisions of section 10 shall be punishable with imprisonment which may extend to three months or with fine which may extend to one thousand rupees or with both and in the case of a continuing offence with a further fine which may extend to one thousand rupees for each day during which the offence continues".

(2) "Any person who contravenes or attempts to contravene or abets the contravention of any of the provisions of the Act other than section 10 or any rule made thereunder or of the terms and conditions of and restrictions upon any licence granted under this Act shall be punishable with imprisonment which may extend to one year and shall be liable to a fine ............ "

So, even then, it mentions only the extent of the punishment that can be given. The minimum punishment has not been specified.

ஆகவே, குறைந்தபட்ச தண்டனையைப் பொறுத்தவரையில் யாரும் தப்பித்துக் கொண்டு போய்விடலாம். நான் வழக்கறிஞராகப் பணியாற்றியவன். அப்படிப் பணியாற்றியதன் காரணமாகச் சொல்கிறேன். பொதுவாக 2, 3 தடவை சொல்லிப் பார்ப்போம். வழக்கு வெற்றி பெறாது என்ற நிலை வரும்போது . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மேஜையை அழுத்திக் தட்ட வேண்டும்.



**திரு. க. இராமமூர்த்தி :** வழக்கு வெற்றி பெறும்போது அழுத்தந்திருத்தமாகப் பேசலாம். ஆனால் எல்லாவற்றையும் சொல்லிவிட்டு, வெற்றி பெறாது என்ற நிலை வரும்போது, "அப்படியே நீங்கள் குற்றவாளி என்று நினைந்தாலும், கொஞ்சம் மன்னித்து விட்டுவிடலாம்" என்போம். அவர்களும் ஆளுக்குத் தகுந்தபடி சில நேரங்களில் கோர்ட் கலைகிற வரை தண்டனை என்று கொடுத்து விடுவார்கள்.

அப்படி இது ஒரு சமுதாய விரோத நடவடிக்கை என்று கருதி, விட்டுக் பயங்கரமாக இருக்கிறது என்ற உணர்வு நமக்கு இருக்கிறபோது, தண்டனை பயங்கரமாக இருக்கிறது என்று உணர்வு நமக்கு இருக்கிறபோது, தண்டனை என்று வருகிறபோது. நாம் கொஞ்சம் எவேசிவ்வாக (evasive) அல்லது எலாஸ்டிக்காக (elastic) நடந்து கொள்கிறோம். அது திருத்தப்பட வேண்டும். அதற்கு முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இது எந்த அளவுக்கு வருவாயை பாதிக்கிறது என்பது மட்டுமல்ல, இது ஒரு சமுதாய விரோத நடவடிக்கை என்பது மட்டுமல்ல, வீடியோக்களில் புளு பிலிம்களைக் காட்டுகிறார்கள் என்ற செய்திகள் பல பத்திரிகைகளில் வர ஆரம்பித்துவிட்டன. இது எப்போது வந்தது? ஒரு கண்ட்ரோல் இல்லாது இருந்தவரை இப்படிப்பட்ட நடவடிக்கைகள் இருந்தன. அரசாங்கம் நடவடிக்கை எடுக்கிறது என்று வந்த உடனே அங்கே இருக்கிற சப் இன்ஸ்பெக்டர் உரியவர்களைக் கூப்பிட்டு 'வார்ன்' பண்ணிவிடுகிறார். இனி நடத்தினால் நாளைக்கு உன் பெட்டி கிட்டியெல்லாம் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்துவிடும் என்று சொல்கிறார். உடனே இது கொஞ்சம் நிற்கிறது. ஆகவே எங்கே கோளாறு என்று பார்த்தால், கிரீமட்டத்தில் நான் கோளாறு இருக்கிறது. அனுமதி இருந்தால் சட்டபூர்வமாகவோ டேசிட்டாகவோ இருந்தால் நடக்கும், இல்லையென்றால் நடக்காது. நம் அரசாங்கம் எலாஸ்டிக்காக இருக்கிறது என்றால் நடக்கும், கடுமையாக நடவடிக்கை எடுக்கிறது என்றால் எல்லாம் அடங்கிவிடும். காரணம் வீடியோ மிகவும் பாப்புலராகிவிட்டன. இதற்கு மூலதனம்கூட கிடையாது. வீடியோவைக் கொடுத்து, நீ சம்பாதித்து பிறகு பணம் கொடு என்று சொல்லுகிறார்கள். இன்ஸ்டால்மெண்டில் கூட கிடைக்கிறது. எனவே முதல் இல்லாத வியாபாரமாக இது நடக்கிறது. அதோடு இதில் வருகிற வருவாய் அதிகம். ரிட்டர்ன் அதிகம். அப்படிப்பட்ட உணர்வின் காரணமாகத்தான் இது ஏற்பட்டது

[திரு. க. இராமமூர்த்தி] [1984 பிப்ரவரி 24

இப்படி நடப்பதற்குக் காரணம் கீழே இருக்கிற மெஷினரி சரியாக இல்லாததுதான் என்பது என் அபிப்பிராயம். அடுத்து, அன்-சென்சார்டு பிலிம்களைக் காட்டுகிறார்கள் என்பது இங்கே குற்றச் சாட்டாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எவ்வளவோ பிலிம்களை வெளியேயிருந்து இங்கே 'ஸ்மகிள்' (Smuggle) பண்ணிக் கொண்டு வந்து காப்பி பண்ணுகிறார்கள். அது சரி. ஆனால் அன்-சென்சார்டு பிலிம்கள் காட்டப்படுகின்றன என்றால், அது எப்படி? படம் எடுப்பவர்கள்தானே அதைப் பாதுகாப்பாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். படம் எடுப்பவர்கள் அதை எங்கேயோ ஒரு இடத்தில் கொடுப்பதால்தானே கேசட் பண்ண முடிகிறது? எனவே எந்த இடத்திலிருந்து போகிறது என்பதைப் பார்க்க வேண்டாமா? சென்சார் பண்ணுவதற்கு முன்பு அந்தப் படம் எடுக்கிற முதலாளியிடம் அல்லது அவர் கொடுத்து வைக்கிறவர்களிடம்தானே இருக்க முடியும். அதை படம் எடுப்பவர்கள் மற்றவர்களுக்குக் கொடுக்காமல் எப்படி கேசட் செய்ய முடியும்? அப்படி அன்-சென்சார்டு படங்களைப் பார்ப்பவர்களுக்கு தண்டனை, காட்டுகிறவர்களுக்குத் தண்டனை என்றெல்லாம் சொல்கிறோம். ஆனால் அந்தப் படத்தைத் தெரிந்தோ, தெரியாமலோ லாபத்திற்காகவோ அல்லது வேறு காரணத்திற்காகவோ கொடுத்தவனுக்கு என்ன தண்டனை?

அவன்தானே அத்தனைக்கும் மூல காரணம். நாம் தயாரிப்பாளர் மீதும் கடுமையாக இருக்க வேண்டும். அவர்கள் மீது எனக்குத் தனிப்பட்ட கோபதாபம் இல்லை. இந்த நடவடிக்கையை அவர்களே ஊக்குவிக்கும் நிலைமை இருந்தது. இல்லாவிட்டால் சென்சார் செய்யப்படாத ஃபிலிம் எப்படி வெளியே வர முடியும்? ஆகவே தொழிலாளியாக இருந்தாலும், முதலாளியாக இருந்தாலும், யாராக இருந்தாலும் அவர்களையும் தண்டனைக்குள்ளாக்க வேண்டும். அதற்கு என்ன பிரிவு இருக்கிறது? அதற்கு என்ன நடவடிக்கை, என்ன தண்டனை என்பது இந்தச் சட்டமுன்வடிவிலே இல்லை. இதையெல்லாம் மாற்றி முழுமையாக ஆக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். பேரவையிலே நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவு என்பதாலே இந்தச் சட்டமுன்வடிவிலே அதெல்லாம் வர முடியாது. ஆனாலும் இதையெல்லாம் கருத்திற்கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.



1984 பிப்ரவரி 24]

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இங்கே விவாதத்திற்கு வைக்கப்பட்டிருக்கிற தொலைக்காட்சியில் வீடியோ கேசட் ரிக்கார்டர்கள் மூலம் திரைப்படங்கள் காட்டுவது தொடர்பாக முறைப்படுத்துகிற இந்தச் சட்டமுன்வடிவின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய சிறந்த கருத்துக்களை வழங்கி, பொதுவாக இந்தச் சட்ட முன்வடிவுகளை ஆதரித்ததற்காக நான் முதலில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டுவர இருந்த சூழ்நிலையைப் பற்றிக் கூற விரும்புகிறேன். ஒரு புதிய விஞ்ஞான கண்டுபிடிப்பின் மூலமாக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிற டி.வி., வீடியோ கேசட், வீடியோ கேசட் ரிக்கார்டர் என்கிற கருவிகள் இன்றைக்கு அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு, அந்த விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் மனித சமுதாயத்திற்கு நல்ல வழியிலே பயன்படுத்திக்கொள்வதற்குப் பதிலாக பணம் சம்பாதிப்பதையே நோக்கமாகக் கொண்டு சமுதாயத்தை அழிக்கின்ற முயற்சியில் இந்தக் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. அது ஒரு மிகப் பெரிய கடுமையான கொள்ளை நோய் போல நாடு முழுவதும் பரவி வருகிறது. அது இந்தியத் துணைக் கண்டத்திலே மாத்திரமல்லாமல், இன்றைக்கு உலகத்திலே வளர்ந்திருக்கின்ற நாடுகளிலேகூட முன்னேறியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ரளார்த்தனம் அவர்கள் எடுத்துக்காட்டியதைப் போல, பிரிட்டன் போன்ற நாடுகளிலேகூட இதனுடைய கொடுமையான ஆட்சி இருக்கிறது. நடைமுறைகளிலே சட்டங்கள் மீறப்படுவதும், சமுதாயம் சீரழிக்கப்படுவதும் போன்ற சூழ்நிலை வளர்ந்து வருகிறது என்பதால், இதை மிகப் பெரிய பிரச்சினையாகக் கருதி இதைத் தடுக்க உலகத்திலே பல சட்டங்கள் செய்யப்பட்டு வருகின்றன. ஆனால் வளர்ந்த நாடுகளில் பிரச்சினைகளைச் சந்திக்கின்ற முறை வேறு. ஆனால் இந்தியத் துணைக் கண்டம் போன்ற வளர்ந்து கொண்டிருக்கிற நாடுகளில் ஏழ்மையும், வறுமையும், படிப்பற்ற, அறிவற்ற தன்மைகளும் அதிகமாக இருக்கின்ற ஒரு நாட்டில் இத்தகைய விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் உள்ளே நுழைந்து நம்முடைய சமுதாய வாழ்க்கையைச் சீர்குலைத்து, பொருளாதார வாய்ப்பைச் சீர்குலைக்கிற அளவிற்கு, சட்டங்களை மீறத் துணிவு அளிக்கின்ற வகையிலே இது பயன்படுத்தப்படுகிறது என்பதை பொட்டி கடந்த ஓராண்டுக்கு மேலாக இந்தியா முழுவதும் இதை எப்படி கட்டுப்படுத்துவது என்பதிலே மத்திய அரசும், மாநில அரசாங்கங்களும் பல் வேறு வழிகளைத் தேடி அந்தந்த மாநிலங்கள் தங்களுக்குத் தோன்றிய வகை

யில் சில சட்டமுன்வடிவுகளை, அவசரச் சட்டங்களைப் போட்டு அமுல்படுத்
திக் கொண்டிருக்கின்றன. ஆனால் இந்தியாவிலேயே முதன் முறையாக இந்தப்
புதிய விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள், சாதனங்கள் மூலம் நடைபெற்றுக் கொண்
டிருக்கிற சமுதாய அநீதியை, அக்கிரமத்தை இப்படியொரு சட்டத்
தின் மூலம் முறைப்படுத்த முடியும் என்கிற முயற்சியை தமிழகம் இன்றைக்கு
முன்மாதிரியாக வழங்கியிருக்கிறது என்பதை நான் இங்கே மகிழ்ச்சியோடு
தெரிவித்துக்கொள்கிறேன். அதனாலேதான் இந்தச் சட்டமுன்வடிவிலே
இத்தனை பிரிவுகள் அடங்கியிருக்கின்றன. இதை ஒரு திரைப்படம் என்று
முதலிலே முடிவு எடுத்து, திரைப்படங்கள் காட்டுவது என்பது இதற்கு முன்பு
உள்ள சட்டங்களில் எந்தெந்த விதிகளுக்கு உட்பட்டிருக்கிறதோ அந்தச் சட்ட
விதிகளுக்குள்ளே இதை இப்போது நாம் கொண்டு வந்திருக்கிறோம். 1952 ஆம்

(பிற்பகல் 12-40)

ஆண்டு மத்திய அரசினாலே இயற்றப்பட்ட சினிமாட்டோகிராப் ஆக்ட்
அதைத் தொடர்ந்து 1955 ஆம் ஆண்டு தமிழகத்திலே இயற்றப் பெற்றிருக்கிற
தமிழ்நாடு சினிமா ரெகுலேஷன் ஆக்ட், இவைகளின் அடிப்படையில் ஒரு
திரைப் படத்தை புரொஜெக்டர் என்கிற கருவியின் மூலம் திரை அரங்குக
ளிலே காட்டுகிறார்கள். வீடியோ காசெட் ரிக்கார்டர் மூலம் திரைப்
படத்தை வீடியோ காசெட்டிலே பதிவு செய்து காட்டப்படுகிறது. ஆகவே
இது ஒரு திரைப் படமாகத்தான் கருதப்படும். ஆகவே திரைப் படம்
காட்டுவதற்கு எந்த எந்த சட்ட விதிகள், முன்னாலே இருக்கிற சட்டங்களின்
படி தேவைப்படுகிறதோ, நிறைவேற்றப்பட வேண்டுமோ, அவைகளை நிறை
வேற்றவேண்டும். அது கட்டாயம் என்கிற வகையில் தான் இந்தச்
சட்ட முன்வடிவு இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு
திரு. மாணிக்கம் அவர்களும், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும்
"இதற்கு முன்னால இதை எப்படி நடத்திக்கொண்டு வந்தார்கள், அதை
அங்கே இருக்கிற அதிகாரிகள் எல்லாம் எப்படி விட்டுவிட்டு பார்த்துக்கொண்
டிருந்தார்கள் அல்லது உடந்தையாக இருந்தார்கள்" என்று அந்தப் பொருள்
பட இங்கே கருத்துக்களை எடுத்து வைத்தார்கள். அவர்கள் தெரிந்து அனு
மதித்தும் இருக்கலாம். ஆனால் தெரிந்த நேரத்திலே போய் நடவடிக்கை
எடுக்க முடியாமல் அவர்களுடைய கைகள் கட்டப்பட்ட சூழ்நிலையும்
இருந்தது. இது மிகக் குறுகிய காலத்தில் 6 மாத காலத்திற்குள்ளே
பெருகியிருக்கிறது. இது முதலில் ஒன்றிரண்டு தான் தொடங்கியது.


ரெக்காடர்கள் மூலம் (காணொலிச் சுருள் பேழை) திரைப்
படங்கள் காட்டுதல் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு
(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1984)

1984 பிப்ரவரி 24] [திரு. இராம. வீரப்பன்]

அதுவும் நம்முடைய ஏசியன் கேம்ஸ் என்று அழைக்கப்படுகின்ற அந்த ஆசிய விளையாட்டுப் போட்டி நடத்தப்பட்டதையொட்டி இந்த சாதனம் இந்தியாவுக்குள்ளே வருவதற்கு கொஞ்சம் தாராளமாக அனுமதித்தார்கள். டி.வி. வந்தது. அதற்குப் பிறகு அதிலே கலர் டி.வி. வர அனுமதித்தார்கள். அதற்குப் பிறகு இந்த வீடியோ காசெட்டை அனுமதித்தார்கள். அந்த வீடியோ காசெட் வருவதோடு அந்த யந்திரத்திலே வீடியோ காசெட் ரிகார்டரும் இணைக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய நாட்டிலே ஒரு மிகப் பெரிய விஷயம் என்னவென்றால், நம்முடைய முன்னோர்கள் மிகச் சிறந்த அறிஞர்களாக, ஆய்வுத்திறன் பெற்றவர்களாக, விஞ்ஞானிகளாகத்தான் இருந்திருக்கிறார்கள்; விஞ்ஞான அறிவு இல்லாமல் நம்முடைய முன்னோர்கள் இல்லை. ஆனால் அதையெல்லாம் போட்டு அழித்து ஒழித்து விட்டு, இடைக்காலத்திலே ஏதேதோ சூழ்நிலைகள் ஏற்பட்ட காரணத்தாலே, அவைகளையெல்லாம் இழந்து விட்டு, நாம் துரதிருஷ்டசாலிகளாக, நிர்கதியற்றவர்களாக இருக்கிற இந்தக் காலத்தில் ஏதோ வெளிநாட்டுக்காரர்கள் கற்றுத் தந்த அடிப்படையின் மீது, அந்த அடிப்படையிலே கற்றுக்கொண்ட கல்வியை வைத்து நம்மாலே சில கண்டுபிடிப்புகள் உருவாக்கப்படுகின்றன என்றாலும்; அவைகளிடையே புதிய கண்டுபிடிப்புகள் ஏதாவது வந்தால் அவைகளை எப்படி தவறாகப் பயன்படுத்துவது என்பதிலே மாத்திரம் மிகுந்த திறமைசாலிகளாக நம்மிலே பலர் விளங்குகிறார்கள். இன்றைக்கு உலகினுடைய விஞ்ஞான வளர்ச்சி உலக சமுதாயத்தை அழிப்பதற்காக அல்ல, காப்பதற்காகத் தான் என்று வாதாடுகிற, அதற்காக மிகப் பெரிய ஒரு போராட்டத்தையே நடத்த வேண்டிய சூழ்நிலைக்கு உலகம் வந்துகொண்டிருக்கிற நேரத்தில் இப்படிப்பட்ட விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளை வைத்துக்கொண்டு சமுதாயத்தை தான் பாழ்படுத்துவேன் என்று சில பேர் பணம் சம்பாதிப்பதையே நோக்கமாகக் கொண்டு—மன்னிக்கவேண்டும் சண்டாளர்கள் இன்றைக்கு இந்த நாட்டிலேயே தோன்றிக்கொண்டிருக்கிறார்கள்; உலகத்திலே தோன்றிக் கொண்டிருக்கிறார்கள். எப்படி உலகத்தை அழிப்பதற்காக விஞ்ஞான ஆயுதங்களைப் பயன்படுத்தலாம் என்று கருதுகிறவர்கள் கொலைகாரர்கள் என்று அழைக்கப்படுகிறார்களோ அதைப் போலவே தான் இந்த விஞ்ஞான சாதனங்களை வைத்து எப்படியாவது தான் பணம் சம்பாதித்துக் கொண்டு, சமுதாயம் எப்படி அழிவுப் பாதையை நோக்கிப் போனாலும் கவலைப்படாமல் இருப்பவர்கள் சண்டாளர்கள் என்று அழைக்கப்படுவதற்குத் தகுதி உள்ளவர்கள். இவர்களை எப்படித் தடுத்து நிறுத்துவது? புற்றீசல்

[திரு. இராம. வீரப்பன்] [1984 பிப்ரவரி 24

போலக் கிளம்பிக் கொண்டு வந்தது. இந்த வேதனை [illegible] பகுதியிலேகூட இரண்டு இடங்களிலே, மூன்று இடங்களிலே, கொஞ்சம் வளர்ந்த நகரங்களில் 10 இடங்களிலே, 15 இடங்களிலே என்ற அளவில், இன்று நாடு முழுவதும் இப்படிப்பட்ட புற்று நோய் கொள்ளை நோயாகப் பரவுகின்ற ஒரு சூழ்நிலை வந்த நேரத்திலே, எந்தச் சட்டத்தின்படி இதிலே நடவடிக்கை எடுப்பது என்கிற பிரச்சினை வந்த காரணத்தாலே தான் இதற்குள்ளே நுழையாமல் திண்டாடினார்கள். ஆனால் பல்வேறு வழிகளை எல்லாம் கூட சொல்லிப் பார்த்து, ஒன்றிரண்டு நடவடிக்கைகள் எடுக்கிறோம். இந்த நாட்டிலே சட்டம் இயற்றுகிறோம்; சட்டம் இயற்றுவது நல்ல நோக்கத்திலேதான்; ஆனால் அந்தச் சட்டத்தை செயல்படுத்துகிறபோது அந்த நோக்கம் தவறி விடுகிறது என்று மாண்புமிகு திரு. மாணிக்கம் அவர்களும், எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் இங்கே எடுத்துச்சொன்னார்கள். அதைப்போலவே, சட்டம் படிக்க வைப்பது எல்லாம், சட்டத்தைக் கற்றுக்கொடுப்பது எல்லாம் நல்ல நோக்கத்திற்காகத்தான். வழக்கறிஞர்களை உருவாக்குவதும் நல்ல நோக்கத்திற்காகத் தான். நீதியைக் காப்பாற்றுவதற்காகத்தான், குற்றவாளிகளை தண்டனைக் குட்படுத்தி வைப்பதற்குத்தான், குற்றமற்றவர்களை விடுவிப்பதற்காகத்தான். ஆனால் துரதிருஷ்டவசமாக இந்த நாட்டில், அதுவும் குற்றம் செய்கின்றவர் களுக்கே சாதகமாக அமைந்துவிடுகிறதோ என்று எண்ணுகின்ற நிலையிலேதான் இன்றைக்கு அப்படிப்பட்ட சமுதாய விரோதிகளுக்கும் சில பேர்கள் உதவி செய்ய முன் வந்து, நீதி மன்றத்திற்குச் சென்று, 'நாங்கள் இன்றைக்கு இந்த வீடியோவிலே திரைப்படம் போட்டால் எங்களைக் கேட்க யாரும் வர முடியாது' என்று தடையெல்லாம் பெற்று விட்டார்கள். அதற்குப் பிறகுதான், சிந்தித்தோம். இந்தியா முழுவதும், சமுதாயத்தை, ஆட்சியை, அரசை நிர்வாகத்தை உலுக்கிக்கொண்டிருந்த, அவர்கள் சவால் விட்டுக்கொண்டிருந்த இந்தப் பிரச்சினையில் எப்படி சட்டம் இயற்றுவது? நம்முடைய மத்திய அமைச்சர், ஒலி பரப்புத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. பகத் அவர்கள் கூட ஒரு மிகப் பெரிய குழுவை அமைச்சரவைக்குள்ளேயே போட்டிருக்கின் றார்கள். ஒரு தீவிரமான சட்டத்தை இதில் எப்படி கொண்டுவருவது என்று பரிசீலிப்பதற்காக குழு போட்டிருக்கிறார்கள். அந்தச் சூழ்நிலையிலேதான், நம்முடைய தமிழக அரசினுடைய உள்துறையும், சட்டத்துறையும் இப்படி திரைப்பட விதிகளுக்குட்படுத்திய சட்டத்தைக்கொண்டு வந்தால், அவர்கள் ஒழுங்கு படுத்தப்படுவார்கள் என்று கருதினர். அதற்குப் பிறகு இவர்களை அனுமதிக்கிறோமா இல்லையா என்பது அடுத்த பிரச்சினை



1984 பிப்ரவரி 24] [திரு. இராம. வீரப்பன்]

இனிமேல் அப்படி நடத்தவேண்டுமென்றால், எங்கேயாவது ஒரு இடத்திலே வைத்து உரிமை பெற்றாக வேண்டும், விண்ணப்பம் தந்தாக வேண்டும், அனுமதி பெற்றாக வேண்டும் என்று வந்தால் அவர்கள் நம்முடைய கவனத்திற்கு வருவார்கள். கட்டுப்படுவார்கள். ஆகவேதான் இந்தச் சூழ்நிலை வந்தது. இப்படிப்பட்ட சட்டத்தை நாம் செய்கின்ற போது, ஏற்கனவே அந்த சினிமா ரெகுலேஷன் ஆக்ட்-லே இருக்கின்ற சிலவிதிகளை பிரிவுகளை எல்லாம் இதில் சேர்த்துக்கொண்டு வருகிறோம். அதன் விளைவு தான் உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற இந்தக் கடுமையான குற்றப் பிரிவை, கண்டிப்பாக குறைந்தபட்ச தண்டனை கொடுத்தாக வேண்டும் என்கின்ற பிரிவை நாங்கள் சேர்க்காமல் இருப்பது. இப்போது மூன்று மாதங்கள், அதற்கும் பிறகு ஒரு வருடம் தண்டனை வழங்கலாம் என்று இருப்பதற்கே கூட, சில பேர் 'இது என்ன, இவ்வளவு கடுமையான தண்டனை' என்று கேட் கின்ற சூழ்நிலை இருக்கின்றது. ஆனால் இந்தத் தவறு செய்கின்றவர்கள் சாமர்த்தியமாகச் செய்கிறார்கள். அவர்கள் வாதிட வருகிறபோது, அந்தக் குற்றவாளி முன்னால் வந்து நிற்பதில்லை. ஒரு சாதாரண, எந்தக் குற்றத் தையும் செய்யாமல் இருக்கின்ற சாதுவை முன்னாலே நிறுத்தி, "ஐயோ, பாவம், இந்த சாதுவின் மீது இப்படி பழி சொல்கின்றார்களே," என்று அந்த நடவடிக்கை எடுக்கின்றவர்கள் மீது கரைப்படுத்தவும், களங்கப்படுத் தவும் குற்றம் சுமத்தவும் முயற்சி எடுப்பதுதான் வழக்கமாக இருக்கிறது. அதுதான் வாடிக்கையாக இருக்கிறது. அதுபோல, நாம் இப்படி சட்டங்கள் கொண்டுவருகின்ற நேரத்தில், வீடுகளுக்குள்ளே நுழைந்து,வேறு எந்தப் பரிசோதனையையும் செய்வதற்கு அந்தச் சட்டத்திலே பிரிவுகள் இடம் கொடுக்கவில்லை. அந்தச் சட்டத்தினுடைய எல்லாப் பிரிவுகளும், முக்கிய மான பிரிவுகளும்தான் அதற்குத் தேவையற்றவை என்று முதலிலேயே சொல்லிவிட்டோம். ஆனால் ஒன்றை மாத்திரம் பார்க்கிறோம். அங்கே போய், அங்கே போட்டுப் பார்த்துக் கொண்டிருக்கின்ற அந்தப் படம், எங்கே யிருந்து வாங்கியது, அதற்கு 'ஆரிஜின்' என்ன, அது முறையாக வாங்கப் பட்டதா என்பதை விசாரிக்கின்ற அந்த உரிமை மாத்திரம் அந்த 9-வது பிரிவிலே தரப்பட்டிருக்கின்றது. நான் மிகத் தெளிவாக சட்டமன்றப் பேரவையிலேயும் தெரிவித்தேன், இந்த அவையிலேயும், உங்கள் மூலமாக நாட்டிற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சட்டமுன்வடிவை அமல் நடத்துகின்ற நேரத்தில், அந்த 9-வது பிரிவில் இருக்கின்ற. . . . .

டாக்டர் இரா. சனார்த்தனம்: சென்சார் சர்டிபிகேட் வைத்திருக்க வேண்டுமென்று அதிலே வற்புறுத்துகின்றார்களா?

[1984 பிப்ரவரி 24

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** சென்சார் செய்யப்பட்ட படம்
என்பதற்கு சென்சார் சர்டிபிகேட் சேர்த்து, அந்த வீடியோ கேசட்டிலேயே
வந்துவிடவேண்டும். அதிலே இருக்கிறது. இன்னும் அதை நாம் நடை
முறைப்படுத்துகிறபோது இந்த விதிகளையெல்லாம் உருவாக்குகிறபோது,
இப்போது விற்கப்படுகின்ற அந்த கேசட் உறையின் மேலேயே "இது எந்தத்
தேதியிலே சென்சார் செய்யப்பட்டது? அந்த சென்சாருடைய நம்பர் என்ன?
இதனுடைய உரிமையாளர் யார்? அவர்களிடத்திலே எந்தத் தேதியிலே
உரிமை பொறிக்கப்பட்டது?" என்கின்ற விவரங்கள் பொறிக்கப்படவேண்டும்
என்கின்ற விதிகளையெல்லாம் சேர்க்க இருக்கிறோம். ஆகவே வீட்டிற்குள்ளே
நுழைந்து இதைக் கேட்கலாம் என்ற விதியை வைத்திருப்பதற்குக் காரணம்
இருக்கிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டதைப் போல,
எந்தெந்த இடமெல்லாம் வீடாக மாறுமோ நமக்குத் தெரியாது. அந்த ஒரு
விதியை நீக்கிவிட்டால் என்ன என்று மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம்
கேட்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-50)

உறுப்பினர்கள் அருள்கூர்ந்து இந்த அரசாங்கத்தின்மீது நம்பிக்கை வைக்க
வேண்டும். அரசாங்கங்கள் தவறு செய்தால், கேட்கலாம், திருத்தலாம்.
நமக்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால் சமுதாய விரோதிகள் தவறு செய்வ
தற்கு நாம் இடம் அளித்துவிடக்கூடாது. இந்த ஒரு இருக்கிற காரணத்
தாலே வீடுதான் என்று சொல்லிக்கொண்டு, உள்ளே எல்லாத் தவறுகளையும்
செய்துகொண்டு இந்தச் சட்டத்தையே செல்லுபடியற்றதாக ஆக்கிவிட
முடியும். அந்த ஒரு பிரிவை நாம் அனுமதிப்பதால், இங்கே நாம் ஒக் கடை,
ட பார்லர், அல்லது வீடியோ பார்லர் என்று பெயர் வைத்துக்கொண்டு. அவன்
நடத்தக்கூடாது என்று தடுத்தால், நான் வீட்டிற்குள்ளே நடத்திக் கொண்
டிருக்கிறேன், என்னுடைய குடும்பத்தினர் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்
என்பார்கள். குடும்பத்தினர் எத்தனை பேர்? கணக்கு கிடையாது.
இன்றைக்கு ஆமனி பஸ் ஓடிக்கொண்டிருக்கிறது. அது என்ன பெயரில்
ஓடிக்கொண்டிருக்கிறது என்று நீங்கள் கருதுகிறீர்கள்? காண்ட்ராக்ட் கேரேஜ்
என்று ஓடிக்கொண்டிருக்கிறது. அவர்களுக்குத் தெளிவாகச் சொல்லி விடுகிறார்
கள். "யாராவது வழியிலே வந்து கேட்டால் நாங்கள் எல்லாம் சுற்றுலா
போய்க்கொண்டிருக்கிறோம் என்று சொல்லுங்கள், இந்த ஊருக்குப் போய்க்
கொண்டிருக்கிறோம் என்று சொல்லுங்கள்" என்றுதான் ஏற்றிக்கொண்டு



போகிறார்கள். ஆகவே சட்டத்தை, மிகுந்த கஷ்டப்பட்டு, சிரமப்பட்டுச் செய்
தாலும் அந்தச் சட்டத்தை மீறுவதற்குத் திறமையும் இருக்கிறது. அதற்குச்
சொல்லிக் கொடுக்கிற திறமையும் இருக்கிறது. கள்ளன் பெரிதா காப்பான்
பெரிதா என்ற பழமொழி நீண்டகாலமாக தமிழகத்திலே இருக்கிறது. அப்படிப்
பட்ட ஒரு சூழ்நிலையில் நாம் தவறுகள் நிகழாமல் பார்த்துக்கொள்வோம்.
நியாயமான குடும்பங்களில் வீடுகளில் மனைவி மக்களோடு, உற்றார், சுற்றத்
தோடு அவர்கள் உட்கார்ந்து முறையான ஒரு படத்தைப் பார்த்தால், நிச்சய
மாக அவர்களுக்கு எந்தவிதமான தொல்லையும், எந்த அதிகாரிகளாலும் இந்தச்
சட்டத்தின்படி கொடுக்கப்படமாட்டாது. அதற்கான விதிவிலக்குத் தரப்
படும். விதிகளிலே மிகத் தெளிவாகத் தெரிவிக்கப்படும் என்பதை நான் மீண்
டும் உங்கள் மூலம் இந்த அவைக்கும், நாட்டுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.
அந்த விதியை எடுத்துவிட்டால்தான் என்ன என்று கேட்கிறபோது நான்
சொல்ல வேண்டியிருக்கிறது. ஒரு வீட்டுக்கு காவலாளி இருக்க வேண்டும்,,
அந்தக் காவல்காரன் இருந்தால்தான் உள்ளே போகிறபோது உள்ளே போகிற
வனுக்குக் கொஞ்சம் கேட்டுக்கொண்டு போகலாம் என்கிற ஒரு அச்சம் வரும்,
ஒரு முன்னெச்சரிக்கை ஏற்படும். திறந்த வீடாகப் போய்விட்டால், கண்டவர்
கள் எல்லாம் நுழைந்து விடுவார்கள் என்பதைப் போல, இந்தச் சட்ட
முன்வடிவினுடைய நோக்கத்தையே முறியடித்து விடுவதற்கு நான் முன்னாலே
குறிப்பிட்ட அந்தச் சமுதாய விரோதிகள் துணிந்து விடுவார்கள். வீடுகளை
யெல்லாம் இந்த அரங்குகளாக மாற்றிக் கொண்டு, யாராவது வந்து கேட்டால்,
"நான் வீட்டிற்குள்ளே நடத்துகிறேன். உரிய வழக்கு மன்றத்திற்குப் போய்
ஒரு ஸ்டே வாங்குகிறேன்" என்று சொல்கிற சூழ்நிலை வந்துவிடும். அருள்
கூர்ந்து அரசினுடைய இந்த உயர்ந்த நோக்கத்தை உணரவேண்டும். சமுதாயத்
தினுடைய நன்மைக்காகத் தான் இந்த விதி இங்கே இருக்கிறது. ஆனால்
நிச்சயமாக, உறுதியாக குடும்பங்களுக்குள்ளே, வீடுகளுக்குள்ளே, மனைவி
மக்களோடு ஒரு முறையான படத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிற யாருக்கும்
இந்தச் சட்டத்தினாலே இந்த விதிகளினாலே பாதகங்கள் ஒரு நூலளவுகூட
ஏற்படாமல் அரசு பார்த்துக் கொள்ளும், அதற்கு விதிவிலக்கு அளிக்கும்
என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே இப்படிப்பட்ட நல்ல செய்திகள், நல்ல வளர்ச்சிகள் விஞ்ஞானக் கருவிகள் வளர்ந்து கொண்டு வருகிற நேரத்தில், இதை எப்படி நாம் கட்டுப் படுத்த முடியும் என்ற ஒரு சந்தேகத்தை நம்முடைய உறுப்பினர் டாக்டர் இரா. சனார்த்தனம் அவர்கள் இங்கே எழுப்பினார்கள். அதனால்தான் இந்தச் சட்டமே இந்த வடிவிலே வந்திருக்கிறது. எதிர்காலத்திலே இந்த வளர்ச்சி எங்கே கொண்டுபோய் நிறுத்தும் என்று நமக்குத் தெரியும். இன்றைக்குப் போய்க் கொண்டிருக்கிற வேகத்தில் அவரவர்கள் தன்னுடைய வீட்டிலேயே பார்க்க வேண்டுமென்று விரும்புவார்கள். அப்படி வசதி இல்லாதவர்கள், பக்கத்து வீட்டிலே போய்ப் பார்க்கலாம் என்று விரும்புவார்கள். அதற்காக ஒரு பத்து ரூபாய், 15 ரூபாய், 20 ரூபாய் என்று செலவு செய்துகொண்டு போகவேண்டிய அவசியம் இல்லாத ஒரு காலம் கூட வரலாம். ஆனால் அன்றைக்கு அப்படி வருகிறபோது இவைகள் ஒழுங்கு படுத்தப்பட வேண்டும். கட்டுப்படுத்தப்பட வேண்டும். இப்படி எங்காவது கேசட் ரெக்கார்டர்களை வைத்து டி.வி. யின் மூலம் நியாயமாக அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கின்ற தொலைக்காட்சி மூலம் ஒளிபரப்பப்படாத காட்சிகளை அவர்கள் அங்கே காட்டினால், அது ஒரு தனி இடமாக, அரங்காகக் கருதப் படும். அதற்கு எந்தப் பெயரை வேண்டுமானாலும் பின்னாலே நாம் வைத்து அழைத்துக்கொள்ளலாம். இன்றைக்கு ஆயிரம் பேர் பார்க்கிற அரங்குகளி லிருந்து, 300 பேர் பார்க்கிற அரங்குகள் வரைக்கும் நாம் வந்திருக்கிறோம். அது இப்போதுள்ள வளர்ச்சி. இனிமேல் நூறு பேர் உட்கார்ந்து சிறிய திரை யிலே பார்க்கிற அளவிற்கு அதுவும் அங்கே குறைந்த செலவிலே ஒரு திரைப் படத்தைப் பார்க்கிற ஒரு வசதியை வசதிகுறைந்த மக்களுக்கு வழங்க வேண்டிய அவசியம்கூட வரலாம். இன்றைக்கு நாடு முழுவதும் தொலைக் காட்சி நிலையங்களை நாம் அதிகரித்துக்கொண்டு வருகிறோம். இந்தியா முழுவதையும் அதனுடைய ஆட்சிக்கு உட்படுத்திக் கொண்டு வருகிறோம். அப்படி வரும்போது, இந்த வாய்ப்பு வசதிகளை நாம் கிராமப்புறத்து மக்களுக்கு, ஏழை எளிய மக்களுக்கு நாம் மறுக்க முடியாது. அப்படி மறுக்க முடியாத சூழ்நிலை இருக்கிற நேரத்தில் அது முறைப்படுத்தப்பட வேண்டும். ஒழுங்குபடுத்தப்பட வேண்டும், சட்டத்திற்கு உட்பட வேண்டுமென்பதுதான் இந்தச் சட்டத்தின் நோக்கமாகும். நான் ஒரு கணக்கை சட்டமன்றப் பேரவையிலே சொன்னேன். இங்கேயும் சொல்கிறேன். இது எந்த அளவுக்குக் கொள்ளையாக நடந்துகொண்டிருக்கிறது என்பதற்காகச் சொல்கிறேன். இப்படி படத்தைக் காட்டுவதற்கு ஒருவருக்கு 20 ரூபாய் வாங்குகிறார்கள்.



100 பேர்கள் பார்க்கக்கூடிய இடம் அல்லது 50 பேர்கள் பார்க்கக் கூடிய இடத்தில் 100 பேர்களை உட்கார வைத்து, காட்டுகிறார்கள். அப்படி நடந்த இடத்திலே, 70 பேர்கள் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு காட்சிக்கு 1,400 ரூபாய் வருமானம். ஒரு நாளைக்கு 5 காட்சிகள் நடத்துகிறார்கள். ஆக 7,000 ரூபாய் கிடைக்கிறது. ஒரு மாதத்திலே 2 லட்சத்து சொச்சம் ரூபாய் அவர்களுக்கு வருமானம் வருகிறது. அவர் என்ன முதல் போட்டார் என்றால், முதல் இல்லாத வியாபாரம்தான். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களே அதைச் சொன்னார்கள். இதை வாடகைக்குக்கூட தந்து விடுகிறார்கள். 2,000 ரூபாய் வாடகை கொடுத்தால் ஒரு டி.வி. கிடைக்கிறது. ஒரு வீடியோ கேசட் ரிக்கார்டர் கிடைக்கிறது; நாற்காலிகள் கிடைக் கின்றன. இவர்கள் இப்படிக் கொள்ளை அடிப்பது எந்தப் படத்தைக் காட்டி என்றால், ப்ளூ பிலிம் என்கிறார்களே, அதைத்தான், அதிலேதான் கொஞ்சம் மயக்கமான கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொண்டிருக் கிறார்கள். ப்ளூ பிலிம் என்பதோ, சென்சார் செய்யப்படாத பிலிம் என்பதோ வெளி நாடுகளிலிருந்து வருகிற பிலிம்களைத்தான் குறிப்பிடுகிறது. இங்கே எந்தப் படமும் சென்சார் செய்யப்படாமல் வெளியே போவதில்லை. திரை யிடப்படுவதற்கு முன்பு இப்படி கள்ளத்தனமாக கேசட்டிலே கொண்டு செல்லுகிறார்கள். அது நடக்கிறது. அது சென்சார் செய்யப்பட்ட பிறகுதான் அதற்குத்தான் இந்தத் தடை அந்த ஆரிஜனை நாம் கேட்பதற்குக் காரணமே, இப்போது பல திரைப்படங்களிலே ஒரு டைட்டில் கார்ட் (Titl Card) போடு கிறார்கள். நாங்கள் வீடியோ மூலம் இந்தத் திரைப்படத்தைக் காட்ட யாருக்கும் அனுமதி வழங்கவில்லை என்று போடுகிறார்கள். ஆனால் அந்தப் படத்தையே, அந்தப் படம் நடக்கும் அரங்குக்கு 100 அடி தொலைவிலே வீடியோவில் காட்டுகிறார்கள். ஆயிரக் கணக்கானவர்கள் திரை அரங்கிலே பார்க்கிறார்கள், 'நாங்கள் யாருக்கும் வீடியோ மூலம் காட்ட அனுமதி வழங்க வில்லை, என்பதை. ஆனால் அதே படத்தை, அனுமதி வாங்காமல், திருட்டுத் தனமாக கேசட்டில் ரிக்கார்ட் செய்து கொண்டு வந்து, போட்டுக் காட்டுகிறார் கள். விஞ்ஞான வளர்ச்சி என்பது மனிதனை எங்கே கொண்டுபோய் நிறுத்து கிறது. அழிவுக்கு மாத்திரம் கொண்டு போகவில்லை; மனிதனை அநாகரீகமானவனாக, பண்பற்றவனாக, சட்டத்தை மீறுகிறவனாக ஆக்கு வதற்கும் விஞ்ஞானம் பயன்படுகிறது. காரணம், வீடியோ கேசட் ரிக்கார் டரில் பதிவு செய்ய எங்கேயும், யாரிடமும் அனுமதி கேட்டுத்தான் பண்ண வேண்டுமென்ற அவசியமில்லை. ஒரு கருத்தை சட்டமன்றப் பேரவையில்

[திரு. இராம. வீரப்பன்] 1984 பிப்ரவரி 24

சொன்னேன். இந்தியாவிலுள்ள தலைசிறந்த இசைக் கலைஞர்கள் நம்மு
டைய மதிப்பிற்குரிய டாக்டர் எம். எஸ். சுப்புலட்சுமி அவர்களிலிருந்து லதா
மங்கேஷ்கர், ரவி சங்கர் அவர்களிலிருந்து இந்தியாவிலே உள்ள பெரிய இசைக்
கலைஞர்கள் எல்லாம், எங்களை இந்த வீடியோ பைரசியிலிருந்து காப்பாற்றுங்
கள். என்று மிகப் பெரிய வேண்டுகோளை நாட்டு மக்களுக்கு விடுத்திருக்
கிறார்கள். நேற்று அங்கே சொன்னேன், இங்கேயும் சொல்கிறேன். டாக்டர்
எம். எஸ். சுப்புலட்சுமி அவர்கள் கச்சேரியை நம்முடைய கல்யாணங்களிலே
ஏற்பாடு செய்கிறோம். அந்தக் கல்யாணத்திற்கு அவர்கள் வந்து பாடுகிறார்
கள். அந்தக் கல்யாண நிகழ்ச்சிகளை எல்லாம் வீடியோ டேப்பில் எடுப்பது
பேஷனாக இருக்கிறது. கல்யாணத்திற்கு பெண், மாப்பிள்ளை முறை பேசும்
போது, இது ஒரு நிபந்தனையாக வைக்கப்படுவதுபோலத் தோன்றுகிறது.
அந்த அளவுக்கு அது பரவியிருக்கிறது. அந்த வீடியோ கேசட் எடுக்கிறவன்
டாக்டர் எம். எஸ். சுப்புலட்சுமி அவர்கள் கச்சேரி முழுவதையும் அப்படியே
பதிவு செய்துகொண்டு, அதிலிருந்து 500 பிரதிகள், 1000 பிரதிகள் எடுத்து
வெளியிலே விற்க முடியும். இதற்கு யாருடைய அனுமதியும் பெறத் தேவை
யில்லை. டாக்டர் எம். எஸ். எஸ். அவர்கள் அனுமதியையே பெறத் தேவை
யில்லை. இப்படி எங்கோ, யாரோ கஷ்டப்பட்டு காரியங்கள் செய்தால், அத
னுடைய பலனை பாடுபடாமல் அறுக்கிற ஒரு சூழ்நிலை இன்றைக்கு வளர்ந்து
கொண்டு வருகின்றது. அது கொள்ளையாக வளர்ந்து கொண்டு வருகின்றது.
அது சமுதாய விரோதமாக வளர்ந்து கொண்டு வருகின்றது. ஆகவே சென்சார்
செய்யப்படாத படங்கள் என்று சொல்வதற்குக் காரணம், வெளி நாடுகளி
லிருந்து கடத்தப்படும் படங்கள் வெளி நாடுகளிலிருந்து அனுமதி பெறாமல்
கொண்டுவரப்படும் படங்கள் என்பதால்தான். அதைத்தான் நாம் சென்சார்

(பிற்பகல் 1-00)

செய்யப்படாத படங்கள் என்று குறிப்பிடுகிறோம். இங்கேயிருந்து வருகின்ற
படங்கள் அப்படி வர முடியாது. சென்சார் செய்யப்பட்டதற்குப் பிறகுதான்
வர முடியும். அப்படியே வந்தால் கூட சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்கு
இப்போதே சட்ட விதிகளில் இடம் இருக்கிறது. வெளிநாடுகளிலிருந்து
கடத்தல் பொருட்களைக் கடத்தி வருவது எப்படி குற்றமோ அது போல
வீடியோ கொண்டு வருவதையும் நாம் குற்றமாக எடுத்துக்கொள்ள வேண்டும்.
ஆகவே தான் இந்த அளவிற்கு கடுமையாகக் கண்காணிக்க வேண்டுமென்று
சொல்லுகிறோம். அதனால்தான் வீடியோ லைப்ரரிகளுக்கும் இதைக்
கொண்டு வந்திருக்கின்றோம். அவர்கள் அறையிலேதான் இருக்கிறார்கள்.



1984 பிப்ரவரி 24] [திரு. இராம. வீரப்பன்]

அங்கே ஏன் நுழைகிறார்கள் என்று இங்கே மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்
திரு. க. இராமமூர்த்தி அவர்கள் கேட்டார்கள். அங்கேதான் வீடியோ பைரசி
ஆரம்பிக்கிறது. வீடியோ லைப்ரரியிலிருந்து தான் சென்சார் செய்யப்படா
மல் வருகிறது. அங்கே போய் கிளறினால் தான் என்ன இருக்கிறது, எவ்வளவு
இருக்கிறது என்பது போன்ற விஷயங்கள் எல்லாம் தெரிய வரும். ஆகவே அது
தான் புற்று. அங்குதான் எவ்வளவு விஷமுள்ள பாம்புகள் உள்ளன என்பது
தெரியவரும். ஆகவேதான் வீடியோ லைப்ரவரிகாரர்கள் இதிலே
ரொம்ப அக்கறையாக இருக்கிறார்கள். துரதிருஷ்டவசமாக நாட்டு
மக்களுக்காக பாடுபட்டுக்கொண்டிருக்கிறதாகச் சொல்கிற சில பத்திரிகைகள்,
ஏழைகளின் வறுமையைப் போக்குவதற்காகவே பிறந்திருப்பதாகச்
சொல்லிக்கொள்கிற சில பத்திரிகைகள் இன்றைக்கு வீடியோ
லைப்ரரிகளுக்கு ஆதரவு காட்டுகிற வகையில் கட்டுரை எல்லாம்
எழுதிக்கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு அவர்கள் எவ்வளவு முதலீடு
செய்கிறார்கள், எவ்வளவு பேர் அனுமதி பெறாமல் நடத்திக் கொண்டிருக்கி
றார்கள், யார் யாரை எல்லாம் கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை
எல்லாம் எண்ணிப்பார்க்க வேண்டும். இன்றைக்கு வீடியோ லைப்ரரிகளில்
நுழையலாமா என்று கேட்கிறார்களே, நான் சொல்கிறேன், தவறான திரைப்
படங்களை திரைக் கொட்டகைகளில் பார்த்துத்தான் கெடுகிற நிலை இருந்தது.
ஆனால் இப்போது அந்தத் தவறுகள் எல்லாம் வீடியோ லைப்ரரிகளிலிருந்து
வீடுகளுக்கே வர ஆரம்பித்து விட்டன. வீட்டிலுள்ள பெரியவர்களுக்குத்
தெரியாமலேயே பிள்ளைகள் வீடியோவைப் போட்டுப் பார்க்க ஆரம்பித்து
விட்டார்கள். வீடியோ இருக்கிற வீடுகளிலுள்ள பிள்ளைகள் காலையிலிருந்து
இரவுவரை எந்த எந்தப் படத்தையோ போட்டு பார்த்துக்கொண்டிருக்கிறார்
கள் அதுபற்றி வீட்டிலுள்ள பெரியவர்களுக்கு ஒன்றும் தெரிவதில்லை.
வசதியுடையவர்கள் வாங்கிப்போட்டுப் பார்க்கிறார்கள். வசதியுடையவர்களில்
கூட அவ்வளவு படிப்பறிவு இல்லாத பெரியவர்கள் இருக்கிற வீடுகள் இருக்
கின்றன. அவர்களுடைய பிள்ளைகள் வீடியோவில் என்ன போட்டுப் பார்க்கி
றார்கள் என்பது பற்றி இவர்களுக்குத் தெரியாது. வீடுகளுக்கு உள்ளேயே
ஒழுக்கக்கேட்டை, குழந்தைகளைக் கெடுக்கிற நிலைமைகளை நாமே
வரவழைத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவேதான் எல்லா இடங்களிலும்
கண்காணிப்பு தேவைப்படுகிறது. இந்தத் தவறுகளுக்கெல்லாம் காரணமாக,
ஊற்றுக்கோலாக இருப்பது வீடியோ லைப்ரரிதான். அப்படிச் சொன்ன

உடனே நான் எல்லா லைப்ரரிகளையும் சொல்லவில்லை. முறை தவறி, சட்டத்தை மீறுகிற லைப்பாரிகளைதான் நான் குறிப்பிடுகிறேன். அங்கே அனுமதி பெற்றுத்தான் படங்களை வைத்திருக்கிறார்கள் என்று சொல்லப் படுமானால், நான் சொல்கிறேன், அனுமதி பெற்றவை 50 படங்கள், அனுமதி பெறாமலேயே வைத்திருக்கும் படங்கள் 500. இது தான் நிலைமை, சமுதாயத்தை வாட்டி, வதைத்து, கேடான ஒரு சூழ்நிலைக்கு, அழிவுக்குக் கொண்டு போய்க்கொண்டிருக்கிற வீடியோ வைரஸ் என்கிற கொள்ளை நோயை நாம் ஒழித்தாக வேண்டும். இந்தக் கொள்ளை நோயை சமுதாய விரோத சக்திகளிடமிருந்து ஒழித்தாக வேண்டும். அந்தவகையில் சமுதாய விரோத சக்திகளை ஒழிப்பதற்காக என்று கொண்டுவரப்பட்ட இந்தச் சட்டமுன்வடிவின் மீது அனைவரும் தங்களுக்கு எழுந்த சந்தேகங்களை இங்கே எடுத்துச் சொன்னதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்ன காரணத்தைக் கொண்டும் அதிகாரிகள் தவறாக வீடுகளிலே யாரையும் தொல்லைப்படுத்த மாட்டார்கள், முறைகேடான செயல்களில் ஈடுபட மாட்டார்கள் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்து அமைகிறேன்

திரு. ப. மாணிக்கம்: இதிலே விதி 17-ல் (சி) என்ற ஒரு பிரிவு இருக்கிறது. அதிலே ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள்.

all such persons against whom a reasonable complaint has been made, or credible information has been received or a reasonable suspicion exists ... ...

என்று அதிலே சொல்லியிருக்கிறார்கள். இதிலே தான் அதிகாரிகள் துன்புறுத்துகின்ற நிலை வரும். இதிலே உஷாராக இருந்து அதிகாரிகள் கட்டுப்படுத்தப்படுவார்களா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: 17 மற்றும் 18 விதிகள் எல்லாம் பொது இடங்களிலே இப்போது வீடியோ பார்லர் என்கிற பெயரில் நடத்தப் படுகிற அல்லது நடத்த முனைபவர்களைக் கட்டுப்படுத்துவதற்காக உருவாக்கப் பட்டிருக்கிற கடுமையான விதிகள். அதுபோல் வீடியோ லைப்ரரி என்கிற பெயரால் லைப்ரரி நடத்திக்கொண்டு கடத்தப்பட்டு வருகிற படங்களை சட்ட விரோதமாக விற்பனை செய்துகொண்டிருக்கிறார்களே, அவர்களுக்காகக் கொண்டு வரப்பட்டவை. இது எந்தக் காரணத்தைக் கொண்டும் வீடுகளுக்கு அனுமதிக்கப்பட மாட்டாது. அதிகாரிகள் வீடுகளுக்கு உள்ளே நுழைந்து இதைக் காரணமாக வைத்து மக்களைத் துன்புறுத்தவோ, குடும்பத்திலுள்ளவர்களைத் துன்புறுத்தவோ அனுமதிக்கப்பட மாட்டார்கள். அதைத்தான் நான் 9-வது விதியிலும் சொல்லியிருக்கிறோம். அதன் தொடர் பாக 17-18 வது விதிகளிலும் சொல்லியிருக்கிறோம். குடும்பத்தினர்களுக்கு எந்தக் காரணத்தினாலும் தொல்லை ஏற்படுத்தாதவாறு அரசு அதற்கான விதிகளை உருவாக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இந்த விளக்கங்களை ஏற்றுக் கொண்டு, இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.



டாக்டர் இரா. சனார்த்தனம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இங்கே தயாராகிற வீடியோக்களில் வேண்டுமானால் அது சென்சார் ஆகி இருக்கிறதா இல்லையா என்று சொல்ல முடியும். வெளிநாடுகளிலிருந்து வருகிறபோது, கார்ட்டூன் படங்களோ, கதைப்படங்களோ நாம் வீடியோ மூலம் கொண்டுவர முடியும். அதைத் திரையிட்டுப் பார்க்க அரசிடம் அனுமதி பெற வழி இருக்கிறதா ? இங்குள்ள படங்கள் வீடியோவுக்கு அனுமதியளிக்க வில்லையென்று விளம்பரப்படுத்தலாம். அதே நேரத்தில், டெலிவிஷனில் ஒரு படம் காட்டப் படும்போது, நம்மிடம் வீடியோ கேசட் இருந்தால், நாமே அதைப் பதிவு செய்து கொண்டு படத்தை எடுக்கலாம். அதற்கு என்ன வழிவகை இருக்கிறது ? அதுமட்டுமல்ல, லேபரட்டிரியிலோ அல்லது தியேட்டரிலோ அதை யெடுத்து வெளிநாட்டுக்கு அனுப்பி அதை எப்.எம்.ல் பதிவு செய்து வியாபாம் செய்ய முடியும் என்று சொல்கிறார்கள். அதை எப்படி அரசு தடுக்கப் போகிறது ?

